[illegible]

T.D.R.C. No. 5

RR No. 1—2—1961.

S:851
N07
17881

OFFICE ... MADRAS

உ

கடவுள் துணை.

பிரபஞ்சமிரட்டென்னும்

பீதாம்பர ஐயர்

ஜாலத் திரட்டு-1500.

விநாயகர் காப்பு.

விருத்தம்.

சீரோங்கும் சென்னைமுதல் பலதேயத்தும்
சித்தியா யாடிவரும் ஜாலந்தன்னை
ஏரோங்குங் கலியுகத்தோ ரெவருங்கண்டு
இன்புறவே செய்வதற்குத் தேடியின்று
பேரோங்கும் பீதாம்பர ஐயர்ஜாலம்
பெருமையுடன் புவியிலிது விளங்கவேண்டி
காரோங்கும் செந்தமிழால் கழறுதற்கு
கந்தரொடு கணபதிபொற் பாதங்காப்பே.

அந்தரமாக விநாயகர் நிற்க காட்டும் ஜாலம்.

வசனம்.

மரத்தினால் நாலு அடி அல்லது ஐந்து அடி உயரமுள்ளதாக நாலு கால்கள் நிறுத்தி அதற்குக் கீழ்மேலும் ஓரடி அகலமும் ஒன்னரை அடி நீளமுமுள்ள பலகையைக் கோர்த்து அந்த மேல்பலகையின் உள்புறத்தில் காந்தத்தைப் பதித்து கழட்டவும் பூட்டவுமாக செய்து வைத்துக்

மகாளகவும் வெவ்வொரு மரத்தினால் விநாயகனைப்போல் அவயவங்கள் பின்னப்படாமல் பக்குவமாகச்செய்து வர்னம் முதலானதும் பூசி வைத்துக்கொள்ளவும், ஜாலமாடுங்காலத்தில் அச்சபையில் மேற்சொன்ன சப்பாத்தை சோதித்து பின்பு விநாயகருக்கு புஷ்பத்தினால் சாத்துபடி செய்து நகைகள் முதலானதுங்கொண்டு அலங்கரித்து சப்பிரத்திற்கு மேலிருக்கும் காந்தத்திற்கு நேர்கீழாக காந்தம் இழுக்கும்படியான கனமுள்ள இரும்பு பலகைப்போட்டு உடனே கணேசரை அதின்மேல் வைத்து சபையோருக்குக் காட்டிவிட்டு கற்பூரத்தைக் கொளுத்தி வலது கையில் மணியெடுத்து இடது கையிலும் பிடித்து நின்று விநாயகரை தோத்திரஞ்செய்ய விநாயகர் அந்திரமாய் கிளம்புவார். சபையிலுள்ளோர்கள் பார்த்து ஆச்சரியப்படுவார்கள். இதுவும் உன்னதமான வேடிக்கையாக விருக்கும். சபையோர்கள் பார்த்து களித்தவுடனே விநாயகர் கயிலாயத்திற்குப் போகப்போகிறு ரென்று கருப்பு துணியை மேலேபோட்டு மூடி உடனே விநாயகரை மறைத்துவிடவேண்டும்.

சபையோர்க்கு பந்திசெண்டு தாம்பூலம் முதலானதும் கொடுக்கும் ஜாலம்.

கருப்பு துணியில் அறைமுழம் நீளத்தில் குட்டிச்சாத்தானைப்போல் ஒரே மாதிரியாக நாலைந்து பொம்மையாகத் தைத்து வைத்துக்கொள்ளவும் ஜாலமாடச் சபைக்கு வருகுமுன்னே அப்பொம்மையின் தலைமுதற்கொண்டு முழங்கால்வரையிலும் ஒரு பொம்மையில் புஷ்பச்செண்டும், ஒரு பொம்மையில் பாக்கும், ஒரு பொம்மையில் வெத்திலையும், ஒரு பொம்மையில் ஜாதிக்காயும், ஒரு பொம்மையில் ஜாபத்திரியும், ஒரு பொம்மையில் எலக்காயும், ஒரு பொம்மையில் லவங்கமும் போட்டுத் தருத்து ஒவ்வொன்றுக்கும் அடையாளம் வைத்துக்கொண்டு இவைகளை ஜோல்னா பையில் வைத்துக்கொள்ளவேண்டும். முதலாவது புஷ்பசெண்டு தருத்து வைத்திருக்கும் பொம்மையை யெடுத்து அதன் காலை யிரண்டையும் பிடித்துக்கொண்டு சபையோர்களுக்குக் காட்டி சல் குட்டிச்சாத்தான் சீக்கிரம் ஓடிபோய் பூந்தோட்டத்திற் புகுந்து தோட்டக்காரன் கண்களை மறைத்து நன்றாய் மலர்ந்த புஷ்பமாய் பரித்து பந்திசெண்டெளாகக் கட்டிக்கொண்டு வா வா என்றுசொல்லி மேஜைமேல்வைத்து மேலே ஒரு வஸ்திரம்போட்டு மூடிவிட்டு மாத்திரைக்கோலை கையிலெடுத்து (ஏக்-தோ-தீன்) (ஒன்-டூ-த்ரீ) (ஒகடி-ரெண்டு-மூடு) (ஒன்னு-ரெண்டு-மூனு) என்று காலுந்தலையுமாக யெண்ணி அதின் தலைபுறமாக வாயைவைத்து ஓ குட்டிச்சாத்தான் பூசெண்டுகொண்டு வந்தையா வென்று கேட்கவும், அப்படி கேட்கும்போது அருகிலிருப்பவர் சபையோருக்குத் தெரியாமல் வந்தேனென்றுச் சொல்லவேண்டும். பின்பு வஸ்திரத்தின் கீழாகக் கையைவிட்டு பொம்மையின் காலின்வழியாக இருந்து ஒவ்வொரு செண்டாகயெடுத்து வெளியில் போடவும் மற்றொருவன் எடுத்து வரிசையாய் கொடுக்க பிரமித்து ஆச்சரியப்படுவார்கள். இவ்வாறே அந்த ஒரே பொம்மையைக் காட்டி மற்ற பொம்மைகள் சபையோருக்குத்தெரியாமல் சாமர்த்தியமாக ஒவ்வொரு பொம்மையாக வரிசையாகயெடுத்து மேற்கூறியவாறு சொல்லி தாம்பூலம் முதலானதுங் கொடுக்கவேண்டும்.

சபையோர்க்கு பன்னீர் தெளிக்குஞ் ஜாலம்.

ஒரு சொம்பில் கிணற்று ஜலம் அல்லது குளத்து ஜலம் அல்லது ஆற்றுஜலம் அல்லது குழாஜலம் இவைகளில் எந்த ஜலத்தை யேனும் கொண்டுவந்து ஜாலம் ஆடும் சபையில்வைத்து பன்னீர் சொம்பை திறந்து கொஞ்சம் ஜலம்விட்டு சபையோர்களின்மேல் தெளித்துக் கேட்டால் வெரும் தண்ணீரென்பார்கள் அப்போது சபையைப்பார்த்து யாரோ கட்டி விட்டார்களென்று சொல்லி விபூதியை யெடுத்து சல் மலையாள பகவதி கட்டைவிலக்கு ஏரியைத்தாக்கு பகையாளியைக் கொல்லு திக்குக்கட்டு திசைக்கட்டு பூமிக்கட்டு ஆகாயக்கட்டு உடலைக்கட்டு இடைவிடாமல் இக்கையேயிரு சல் இந்த நல்லதண்ணியை பன்னீராக்குயென்று விபூதியை யெடுத்து அந்தத் தண்ணியில் போட்டுக் கலந்துவிட்டு சொம்பில் ஊதித் தெளித்துவிட்டால் குபீரென்று வாசனைவீசும் ஆனால் தண்ணீரில்போடப்போகும் விபூதியில் முன்னதாகவே அத்தர்பில்லையை பொடிபண்ணி மிச்சமாகக் கலந்திருக்க வேணும்.

ரோஜா அத்தர் செய்யும்வித்தை.

ஓர் மட்பாத்திரத்தில் அரிசியில்லாத ரோஜா இதழ்களை பரப்பி அவைகள்மேல் இதழ்கள் மறையும்படியான ஊற்று ஜலத்தை விடவும் பாத்திரத்தை எப்போதும் சூரிய கிரணத்தில் வைத்து வைக்கவும் 4-அல்லது 5-நாட்களில் தைலபிந்துகள் பன்னீர் மட்டத்தின்மீது மிதக்கும் இதுதான் அத்தரென்பது இத்துளிகளை பஞ்சியினால் சேகரித்து சிறிய புட்டியில் அடைத்து வைத்துக்கொள்ளவும் அத்தர் தென்படுகிற வரையில் இதை யுபயோகித்து பிறகு புதிய இதழ்களை உபயோகித்துக் கொள்ளவேண்டியது. ஒரு தோலா அத்தர் செய்யும் பட்சத்தில் குறைந்தது 60-ரூபாய் லாபங்கிடைக்கும்.

கண்களில் மணைத் கொட்டிக்கொள்ளும் ஜாலம்.

எத்தைச் சொன்னாலுங் கேட்கும் நத்தைச்சூரி என்கிற வேரைக் கொண்டுவந்து கொஞ்சம் சிறியதுண்டாய் வாயில்போட்டு அடக்கிக்கொண்டு. சபையில்நின்று ஆத்துமணலை அள்ளி இரண்டு கண்களிலும் போட்டுக்கொண்டால் கண் அருகாது சபையோர்களுக்குக் காட்டிஆச்சரியப்

படுவார்கள். உடனே சல் மலையாளபகவதி இறேபோவென்று தலையைக்
குணிந்தால் பலபுல வென்று மணல் கீழே விழுந்துவிடும் சபையோர்கள்
மகா மந்திரமென்று மயங்குவார்கள்.

இந்தியா ரப்பரை கரைக்கும் வித்தை.

ரப்பர் ஸ்டாம்பு செய்வதிலும் தண்ணீர் ஒட்டா துணி செய்வதிலும்
ரப்ப ரென்று வழங்கும் இந்தியா ரப்பர் கரைக்கப்பட்டு உபயோகப்படுத்
தப்படுகிறது ரப்பரின்மீது மீதிலே டெட்ஸ் ரிபிட்டுபிட்ரோலியம் ஸ்பி
ரிட் இவைகளை ஊற்ற கரைந்துவிடும்.

அச்சுப் பிரதிகளை முட்டை வடிவாகவே அல்லது எப்படி யிஷ்ட
மோ அவ்விதம் அடுக்கிக்கொண்டு அதின்மேல் அதை செவ்வையாய் மூடிக்
கொள்ளும்படியான அரக்கை கனமாக தட்டையாய் காய்த்துக்கொண்டு
செவ்வையாய் கழுவப்பட்டு தேங்காயெண்ணெய் தடவப்பட்ட அச்செழுத்
துப் பட்டரையின்மேல் அழுத்தி எழுத்துகள் அரக்குப்பட்டரையில் பள்
ளமாகத் தெரியும் அரக்குப்பட்டரைக்கு கரைகட்டி ரப்பர் குழம்பை
ஊற்ற, பள்ளங்களில் ரப்பர் பாய்ந்து முத்திரை செவ்வையாய்த் தெரியும்
பிறகு இந்த முத்திரையை மரப்பிடிகளிலாவது பித்தளைப்பிடிகளிலாவது
அமைத்துக்கொள்ளவும் ஹஸ்தலிகிதம்போல் செய்வதற்கு ஈயத் தகடில்
எழுத்துகளை செதுக்கி அதில் ரப்பரை ஊற்றி செய்துக்கொள்ளலாம்.

ஒரு பசுவில் இரண்டுவிதம் பால்கறக்கும் ஜாலம்.

பசுவை சபைக்குக் கொண்டுவருமு முன்னம் சித்திரைமூல மென்ற
வேறை பச்சையாகக் கொண்டுவந்து அரைத்து ஒரு கொம்பில் பூசிவிட்டு
சபையில் கொண்டுவந்து நிருத்தி கரக்க பூசினபக்கம் இரத்தமாகக் கரக்
கும் மற்ற ஒரு பக்கம் எப்பொழுதும்போல் வெளுப்பாக விருக்கும் மறுபடி
யும் இரண்டையும் வெளுமையாக்க வேணுமென்றால் வேர்பூசின கொம்
பை ஜலம்விட்டுக் கழுவிவிட்டு கரக்க நாலுமுலையும் வெளுமையாகக் கரக்
கும் கண்டவர்கள் கண்கட்டு வித்தை என்று ஆச்சரியப்படுவார்கள்.

மரத்தை உளுக்காமலும் செத்துப்போகாமலும் செய்யும் வித்தை.

பந்தக் கால்கள் முதலியவை மண்ணுக்குள் செல்லடிக்கப்பட்டும் செத்
துப்போய் விடுகின்றன. காய்ச்சின அல்லிவிதையின் எண்ணெய்யுடன்
பொடித்தக் கரியைக் கலந்து கம்பங்களுக்குப் பூச எத்தனை வருடம் மண்
ணிற் கிடந்தாலும் இரும்புபோல் வலிவா யிருக்கும்.

தேங்கா யுடைத்து உள்ளே முட்டைகாட்டும் ஜாலம்.

முத்தினதாக ஒரு தேங்காயைக் கொண்டுவந்து மூன்று கண்ணில்
ஒரு கண்ணை துவாரஞ் செய்து குடிமை பிக்காமல் வைத்துக்கொண்டு

ஒரு கோழிமுட்டையை சீமை காடியில் ஒரு நாள் முழுமைக்கும் ஊற
வைத்து கையிலெடுத்தால் ஜவ்வைப்போல் நிகளும் அதை தேங்காயுள்ளே
விட்டுவிட்டால் எப்போதும்போல் முட்டையாகிவிடும். ஆனால் துவா
ரஞ் செய்த தேங்காயிலுள்ள ஜலத்தை முன்னதாகவே கொட்டிவிட்டு
முட்டையை விட்டவுடன் நல்லஜலம் விடவேண்டியது. துவாரத்தை
மெழுக்கால்மூடி சபையோர்க்கு நன்றாய் காட்டி பின்பு சல் மலையாள
பகவதி இந்த தேங்காயிற் குள்ளே முட்டை உண்டாக்கடி யென்று
உடைத்து முட்டையைக் காட்ட சபையோர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

தீப மில்லாமல் கற்பூரங் கொளுத்தும் ஜாலம.

திமிர் பாஷாணத்தை ஒரு சிரிய சீஷாவில் போட்டு ஜலம்விட்டு
வைத்துக்கொண்டிருக்கவேண்டும் ஜாலக்காரன் சபைக்கு வருகுமுன்னமே
அந்த பாஷாணத்தின் சிறு பயறளவு வாயில்போட்டு அடக்கி வைத்தி
ருந்து ஒரு கெச்சக்காய்ப் பிரமாணம் கற்பூரத்தை சபையோர்க்கு முன்
பாகவைத்து சல் சாமளாதேவி இந்த கற்பூரத்தை கொளுத்திவிட்டுப்
போடி யென்று விபூதியையெடுத்து கற்பூரம் மறையும்படியாகப் போட்டு
சுபத்திரக்காளி யென்று வா யருகில் வந்து கையைக் கொண்டுபோய்
பாஷாணத்தை கையில் உமிழ்ந்துக்கொண்டு மறுபடியும் கொஞ்சம் விபூதி
யெடுத்து விபூதி போடுவதுபோல் பாஷாணத்தை கற்பூரத்தின் மேல்
வைக்க பாஷாணத்தின் ஈரம் வாங்கினவுடன் கற்பூரம் குபீலென்று
யெறியும் சபையோர் இது அக்கினிதேவன் செய்த மென்பார்கள். ஆனால்
பாஷாணத்தை தண்ணீரிலேயேபோட்டு வைக்கவேண்டும்.

கோழிமுட்டை பரக்கும் ஜாலம்.

கோழி முட்டையை கொண்டுவந்து சிரிய துவாரஞ்செய்து அதி
லுள்ள பாதி அம்பிலியை ஊத்திவிட்டு பாதரசம் அரைபலமும் பனித்
தண்ணீர் கொஞ்சமும்விட்டு துவாரத்தை காயிதத்தால் மூடிவிட்டு வெய்
யலில் வைக்க கூடு ஏரியோ அந்தரமாகப் பறக்கும் கண்ட ஜெனங்கள்
இது அந்தரதேவதை செயலென்று ஆச்சரியப் படுவார்கள்.

வயலெட் இங்கி செய்யும் வித்தை.

கால் அவுன்சு சாயக்கட்டியை ஒன்னரை பையின்டு தண்ணீ
யில் போட்டு முக்கால் பையின்டு ஆகிறவரையும் காச்சவும் பிறகு வடிக்
கட்டி யெடுத்துக்கொண்டு அதில் முக்கால் அவுன்ஸ் கோந்தும் ஒன்னே
கால் அவுன்ஸ் படிகாரமும் சேர்த்துக் கொள்கவேண்டும்.

முறத்தில் நெல்லு பொரி பொரிக்கும் ஜாலம்.

பச்சைநெல்லை கொண்டுபோய் சுண்ணாம்புக் கால்வாயருகில் சுண்ணாம்பு ஜல்லிகொட்டி தாளிக்கிறவிடத்தில் கொஞ்சம் மண்ணைத்தோண்டி கொண்டுபோன நெல்லைக் கொட்டிப்பரப்பி மேலே மண்ணைப்போட்டு மூடிவிட்டு பின்பு அதின்மேல் சுண்ணாம்புஜல்லி தாளித்த உடனே இதை வாரிக்கொண்டுவந்து பத்திரப்படுத்தி ஜாலம் ஆடும் சபையத்தில் இந்த நெல்லில் கொஞ்சமெடுத்து முறத்திலாவது துணிசவுக்கத்திலாவது போட்டு சபையோர்களுக்குக் காட்டி சல் மலையாளபகவதி ஓடிவா ஓடிவா இந்த நெல்லை பொரி பொரியடி யென்றுசொல்லி கொஞ்சம் தண்ணீரை நெல்லின்மேல் தெளித்து கையினால் வரக்க பளபளவென்று பொரியும் சபையோர் கண்டு இது எட்சணி வித்தையென்று நிட்சயிப்பார்கள்.

மணலை அலுவா செய்யும் ஜாலம்.

சீனி கற்கண்டு பலம் 1-பாதம் பிசினிபலம் ஒன்னரை குங்குமப்பூ விராகனிடை அபிக்கால் இம்மூன்றையும் பூணல்போல் தூளாகச்செய்து வைத்துக்கொண்டு ஜாலமாடும் சபையில் ஒரு பீங்கானில் மணலைப்போட்டு அனைவருக்குங் காட்டி இந்தமணலை அலுவாசெய்கின்றேன் பாருங்களென்று துணியை மேலேபோட்டு மூடிவிட்டு சபையோர்களுக்குக் காண்பித்த மணலை கீழே மறைத்துவிட்டு இந்த அலுவாதினுசை சோல்னாவில் வைத்திருந்து மகாதந்திரமாக யெடுத்துப் பீங்கானில் போட்டு மறுபடியும் துணியைத்திறந்து காண்பிக்க மணல்போலவே யிருக்கும் உடனேகொஞ்சம் ஜலம் வார்த்து சல் மலையாளபகவதி அலுவா செய்யடியென்று மறுபடியும் துணியைப் போட்டு மூடிவிட்டு சற்றுநேரம் பொருத்து மேல்மூடி யத்துணியை வாங்கிப்பார்த்தால் அல்வாபோல் பந்தனையாக விருக்கும். அதை மேஜை கத்தியால் அறுத்து சபையோர்களுக்குக் கொடுக்கலாம் இதை மகா தந்திரமாக செய்ய வேண்டியது. மந்திரமென்றே நம்புவார்கள்.

இரகசிய இராயச இங்கிவித்தை.

கடிதத்தில் எழுதும் சங்கதி இரகசியமாக யிருக்க வேணுமாகில் எழுத்துகள் தெரியாமலும் நமக்கு வேண்டியவர்களுக்கு தெரியும்படியாயும் இருக்கவேண்டும் இதற்கு முக்[illegible]ாய் பொடிசெய்தபடி காரத்தை ஜலத்தில்போட்டு யெழுதினால் தெரியாமலிருக்கும் வெய்யலில் வைக்க எழுத்துகள் கருத்து கண்களுக்குப் புலப்படும் ஆச்சரியமாக விருக்கும்.

சுட்ட போளியைப்புடச் சுட்டுகுறிவி பரக்கும்ஜாலம்.

ஒரு சுட்டு குறிவியைப் பிடித்துவந்து அதின் கண்களில் படாமல் கண்ணை கையினால் மூடிக்கொண்டு உயர்ந்த ஒயின் சாராயத்தை கால் முதல் தலைவரைக்கும் ஊத்தி நனைத்து கோதுமைமாவில் கணக்க போளி

போல்செய்து அதனுள் சுட்டுக்குறிவியைவைத்து சுத்திவாயைமூடி தயார்செய்து வைத்துக்கொண்டு அடுப்புமூட்டி கடாயியைவைத்து நல்லெண்ணெய் ஊத்தி எண்ணெய் காய்ந்தவுடன் போளியை கையிலெடுத்து சபையோர்களுக்குக்காட்டி இந்த போளியை சுட்டு இதனுள்ளிருக்கும் குறிவி சாகாமற் பறக்கும்படி செய்குறேன் பாருங்களென்று உடனே அந்தபோளியை காய்கின்ற யெண்ணையில் போட்டு ஒரு பிரட்டுபிரட்டி சல்லிக்கரண்டியில் கடுக்கென்று யெடுத்துக்கொண்டு உடனே போளியை கையிலெடுத்துப்புட்ட விரிக்க குறிவியானது பறக்கும் ஆச்சர்யப் படுவார்கள்.

பலவித பழத்தின்சாரம் கட்டும்வித்தை.

பழங்கள் எப்போதும் அகப்படுவதில்லை அவைகளின் சாரத்தையும் வாசனையையும் இரக்ஷித்துக் கொள்வது மிக அவசியமான விஷயம். எலுமிச்சம்பழம் இலந்தம்பழம் விளாம்பழம் முதலியவைகளின் சாரத்தை பிழிந்து வருமாறு எடுக்கலாம் தோல் அல்லது ஓடைநீக்கி ஆல்கஹால் என்னும் திராவகத்தை விட்டு கலக்கி பிறகு வடிகட்டி வைத்துக் கொள்கவேண்டும்.

பந்தங்கொளுத்தி வாயினுள் வைக்குஞ் ஜாலம்.

சபைக்கு வருகுமுன்னே கால்பலம் கற்பூரத்தை வாயில் போட்டுமென்று வாயெல்லாம் நன்றாய்ப் படும்படியாய் குழப்பி துப்பிவிட்டு பந்தம் கொளுத்தி வாயில் போட்டுக் கொண்டால் பார்ப்பவர் ஆச்சரியப் படுவார்கள் வாய் சுடாது.

லவங்கப்பட்டை தைலம் முதலியவை யிறக்கும்வித்தை.

லவங்கப்பட்டை அல்லது லவங்கத்தை செவ்வையாய் பொடிசெய்து அத்துடன் கொஞ்சம் ஜல சம்பந்தமான [illegible]க ஹாலைவிட்டு. இரண்டு வாரம் கலக்கி வடிகட்டி இவ்விடப்படி வர்ணம்போட்டு வைத்துக் கொள்ளலாம்.

தேள்கொட்டினால் விஷமேறாதிருக்கும் ஜாலம்.

ஞாயிற்றுக் கிழமைதினம் சூரியன் உதயமாகுமுன் சென்று கருங்கருமை செடிக்கு தூபங்கொடுத்து கற்பூரங்கொளுத்தி வைத்து நூலில் மஞ்சள் தடவி அச்செடிக்குக் காப்பு கட்டிவிட்டு அன்று சாயந்திரம் சென்று அந்தச் செடியை பிடுங்கி அடிவேரை அ[illegible] மோதிரம்போல் சுற்றியாவது விரலில் போட்டுக்கொண்டு தேளைக்கொட்டவிட்டு வேடிக்கைக் காட்டலாம் விஷமேறாது.

வயற்றைக்கீறி நூலுருவும் ஜாலம்.

ஜாலமாடும் சபைக்கு வருகுமுன்னமே மானினுடைய ஜவ்வைக் கொண்டுவந்து சதரத்திற்குச் சதரமாய் நாலு அங்கலம் அளவு யிருக்கும்படி

யாய் ஒரு துண்டை எடுத்து அதின் மத்தியில் பாதிஉண்டை நூலை அந்த ஜவ்வின் நடுவில் வைத்து நூல்படாமல் சுத்திலும் விளாம்பிசினி பூசி இடதுபக்க மாயாவது வலதுபக்க மாயாவது வயற்றின் தொப்புளுக்குப் பக்கத்தில் நூலை உள்ளேவைத்து ஒட்டிவிட்டால் உடம்போடு ஜவ்வும் ஒன்ருய்க் கலந்து விடும் பார்ப்பவர் கண்ணுக்குத் தெரியாது கொஞ்சம் நூலையெடுத்து கொளித்தி அந்த சாம்பலை யெடுத்து சபையோர்க்குக் காண்பித்து அந்த சாம்பலை வாயில்போட்டு முழிங்கிவிட்டு இப்போது முழிங்கியச் சாம்பலை நூலாக்கி யெடுக்கிறேன் பாரென்று ஒட்டின யிடத்தில் நூல்முனையை கத்தியால் கீறி சல் மலையாள பகவதி நூல் ஓடிவா யென்று நூல்முனையைப் பிடித்து யிழுத்தால் நூல்வரும் பார்க்கும் சபையோர்க ளெல்லாம் வயற்றிலிருந்துதான் நூல்வருகுதென்று ஆச்சர்யப்படுவார்கள் நூல் ஒட்டும்போது முனையை அடையாளமாகப்பார்த்து வைக்க வேண்டியது.

மஹெளஷ தீதிபிகை வித்தை.

பாஸ்வோரிக் லைட்ஸ் என்று ஆங்கிலேய பாஷையில் வழங்கும் ஒஷதிதீபிகை ரகுவம்சம் ஒன்பதாவது அத்தியாயம் எழுவதாவது சுலோகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது உலர்ந்த பாஸ்பரஸ் ஒரு பங்கும் ஈதர் திராவகம் 6-பங்கும் கலந்து ஒரு புட்டியில்போட்டு சடையால் (கார்க்) மூடி வெந்நீரில் 3-மணிநேரம் வைக்கவும் வெளிச்சம் வேணும் சமையத்தில் மூடியைத்திறக்க வெளிச்சம் தெரியும் உடனே மூடிவிடவேண்டும். இது ஒரு வருஷத்திற்கு வரும்.

துணியை கொளுத்த வேகாதிருக்கும் ஜாலம்.

ஒரு சவுக்கத்தை சாராயத்தில் தோய்த்து சபையில் வைத்துக் கொளுத்திவிட்டால் குபுமென்று யெறியும் எறிந்து அணைந்தபின் சவுக்கத்தை எடுத்து சபையோர்கள் முன்னே உதரி காண்பிக்க ஆச்சரியப்படுவார்கள் அக்கினி பகவான் வசிய மென்பார்கள்.

நெருப்பு பிடிக்காத் துணிசெய்யும் வித்தை.

முட்டையிலிருக்கும் வெள்ளைக் கருவையும் சீகரையும் படிகாரத்தையும் கலந்து குட்டைக்குப் பூசி உப்புக்கலந்த ஜலத்தில் தோய்த்து உலர்த்திவைக்க நெருப்பு அண்டாது.

கோழிமுட்டையை மந்திரித்துவிடும் ஜாலம்.

வெள்ளை குண்டுமணி செடியைக் கண்டுப்பிடித்து அதன் வடக்கோடியிருக்கும் வேறும் வெள்ளைமாடப் புறா பிச்சும் பொன்னறிதாரமும் பாவட்டை யிலையும் சமனிடையாய் சேர்த்து அறைத்து முட்டைமீதில்

தடவி முன்னதாக வைத்துக்கொண்டிருந்து ஜாலமாடும் சபையில் முட்டையை எடுத்துக் காண்பித்து இந்த முட்டையை புரளும்படி செய்கிறேன் பாரென்று வாசலில் விட்டால் வாசல் முழுதும் புரண்டுக்கொண்டேயிருக்கும், பார்ப்பவர் பிரமிப்பார்கள்.

26 தண்ணீர் ஒட்டா துணி செய்யும் வித்தை.

மெழுகுடன் குங்கிலியத்தைக் கலந்து காய்ச்சி அதில் துணியை நனைத்து உலர்த்தி யெடுக்க மெழுகு சீலையாகும்.

27 மரக்கிளி பறக்கும் ஜாலம்.

மரத்தினால் கிளிபோல் செய்து வர்னம் முதலானதும் உன்னதமாகப்பூசி இரக்கை மாத்திரம் மெல்லிய இரும்புத் தகட்டினாலே கத்தரித்து அதற்குக் கீலுகள் வைத்து இரக்கை யாடும்படியான தந்திரத்தோடு தொடுக்கவும் ஒவ்வொரு பக்கமும் பாதி இரக்கைக்கு மாத்திரம் பலவித வர்னம் பூசியிருக்கவும் ஆடிக்கும்போது காந்தமிருக்கிற வீட்டில் சென்று இதோ மந்திரத்தினால் செய்தகிளி அந்தரமாக பறக்குமாவென்றுசொல்லி ஆகினும் ஒரு மந்திரம் போடுகிறேன் பாருங்களென்று சொல்லி விபூதி யெடுத்து மேலுங் கீழுமாக முழித்து முழித்துப் பார்த்து சல் மலையாள பகவதி ஓடிவா சபையிலே வந்து சற்று நேரம் நில்லுயென்று விபூதியை நாலு திக்கும் போட்டு இந்தக் கிளியை உள்ளங்கையில் வைத்து ஏந்தினால் மேலுக்குக் கிளம்பும்; கைக்கு எட்டினவரையில் போகும்போது மறுபடியும் பிடித்து இரக்கையை மடித்து முன்போல் ஏந்தவும். மறுபடியு மப்படியே கிளம்பும் பார்ப்பவர்களெல்லாம் மந்திரம் செய்தாவென மயங்குவார்கள்.

28 பனிக்கட்டி செய்யும் வித்தை.

பனிக்கட்டியை வெகு சுளுவாய் செய்யலாம். ஒரு மெல்லிய கண்ணாடி கோளத்தில் (பால்) கொஞ்சம் ஜலத்தை யூற்றி அந்த குண்டையை சல்பியூரிக் ஈதர் என்னும் திராவகத்தால் நனைத்துக்கொண்டு வர ஜலம்கட்டி பனிக்கட்டியாகி விடும்.

29 கசகசாவில் மீன் உண்டாக்கும் ஜாலம்.

கடலோரம் சென்று சூரியன் உதயமாகுமுன் பிடிக்கும்படியான சினையுடைய மீனைப் பார்த்து வாங்கிக்கொண்டுவந்து அந்த மீனைக் கீறி சினையையெடுத்து இரவில் பனியில் வைத்து பகலில் சூரியன் கிரணம் படாத நிழலில் வைத்து உலர்த்தி பதினைந்தாம் நாள் சென்ற பிறகு சினையுதிர்த்து கசகசாவில் கலந்து வைத்துக்கொண்டிருந்து ஜாலமாடும் சபையில் ஒரு போவணியில் ஜலம் கொண்டுவரும்படி சொல்லி இந்த கசகசாவை கையிலெடுத்து சபையோர்களுக்குக் காட்டி இதை மீனுக்குகிறேன் பாரென்று ஜலத்தில் போட உடனே உயிருடன் மீன் உண்டாகும்.

30 அறுத்த ஆட்டுத்தலை கத்தும் ஜாலம்.

கொம்பில்லாத ஆட்டுத்தலையை வாங்கிவந்து பக்குவமாய் மேல் மண்டை ஓட்டைக் கிளப்பி மூளையெல்லாம் எடுத்துவிட்டு வெத்திலை தோட்டத்திலிருக்கும் தவளையைக் கொண்டுவந்து தலையுள்ளே வைத்து மண்டையோட்டுக்கு வஜ்ஜிரம் தடவி ஒட்டிவிட்டு காய்ந்த பிறகு கழுவி மஞ்சள் குங்குமமிட்டு வாயில் ஒரு எலுமிச்சம்பழம் வைத்து சாம்பிராணி தூபம் போட்டு அந்த தலை நாசியில் புகையேறும்படியாகக் காட்டினால் ஆட்டைப்போலவே கத்தும், நாசி துவாரத்திற்குச் சரியாய் தவளையின் முகத்தை வைக்கவும்.

31 இங்கிப்பொடி செய்யும் வித்தை.

மாசிக்காய் 5-அவுன்சு காசிக்கட்டி 1-அவுன்சு அன்னபேதி 2-அவுன்சு கோந்து அரை அவுன்சு இவைகளைப் பொடி செய்து வைத்துக் கொள்ளவும். தேவையானபோது கொஞ்சம் எடுத்து புட்டியில்போட்டு ஜலம் விட்டு எழுதலாம்.

32 தீபமேற்றிவைத்து வீடு முழுதும் பச்சைபாம்புக்காட்டும் ஜாலம்.

நொண்டிச் சிந்து.

ஆச்சரியமான வித்தை— யாவரும்
அறியவே சொல்லுகிறேன் தெரியவின்றே
பேச்சென்று நினையாதீர்— இந்தப்
புவியினி லனுபோக மாகப்புகல்வேன்
பாங்காகத் தானுமல்லோ— பிரமித்து
பலபேர்கள் கண்டிடவும் பதாவேதான்
தேங்காயொன்று கொண்டுவந்து— அதன்
தேடியே யொருகண்ணை தான்துளைத்து
கூடியப் புகர்வாரம்— கேளாய்நீ
கொப்பெனவே பச்சைபாம்பை கொண்டுவந்து
தேங்காயி னுள்ளேவிட்டு— துவாரமதை
திட்டமுடன் தான்மூடி கெட்டியுடனே
துங்கார சப்தமுடனே— அதற்கு
உற்றதோர் தீபதூ பங்கள்கொடுத்து
நேராகக் குழிதோண்டி— தேங்காயை
நிலைமை யுடன்புதைத்து திகழ்ந்திடக்கேள்
சீராக யெழுநாளும்— சென்றபின்பு
சித்தமுடன் தானெடுத்து உத்தமனேகேள்
காணமே லோட்டை நீக்கி— அதனை
கல்வத்தி விட்டுமதை தாருட்டி

பூணவே யதையெடுத்து— புதுப்
பாண்டத்தில் போட்டுவதை யடுப்பேற்றி
எரித்துத் தைலம் வாங்கி— எங்கள்
ஏகஜாலக்காரனைத் தான்போற்றி
கருத்துடன் தைலமதை— பதனம்பண்ணி
கண்மணியே வைத்துக்கொண்டு காட்டுவாய்வித்தை
திரியது தான்செய்து— தைலமதில்
தோய்த்து விளக்கேற்றிப் பார்க்கவேதான்
பரவிய யில்முழுதும்— பார்க்க
பச்சை பாம்பாகத்தோற்றும் நிச்சயமிதே
தந்தினந் தனதனனம்.

வசனம்.

தேங்காய் ஒன்று கொண்டுவந்து ஒரு கண்ணை துவாரஞ் செய்து வெள்ளிக்கிழமை தினம் தேடிப் பச்சைப் பாம்பைப் பிடித்துக்கொண்டு வந்து தேங்காயினுள் விட்டு கெட்டியாய் துவாரத்தை மூடி பிறகு தூபதீபங் கொடுத்துப் பூமியைத் தோண்டி புதைத்துவிடவேண்டும் எழு நாள் சென்ற பிறகு அதை தோண்டியெடுத்து தேங்காயின் மேல் ஓட்டை போக்கி மற்றவைகளை கல்வத்திலிட்டு, அரைத்து வழித்து புது பாண்டத்தில் போட்டு சோவில் பதனப்படுத்தி வைத்துக்கொள்ளவேண்டியது. ஜாலம் ஆடும் சமயத்தில் ஒரு திரியில் அந்த தைலத்தை தோய்த்து அகலில் வைத்துக் கொளுத்தி பார்க்க வீடெங்கும் பச்சைப்பாம்பாக இருக்கும். பார்ப்பவர். மகா மந்திர மென்று ஆச்சரியப் படுவார்கள்.

33 கோழிமுட்டை தண்ணீரில் மேயும் ஜாலம்.

நொண்டிச் சிந்து.

பார்த்துமே சபையோர்கள்— பிரமிக்க
பகருவே னின்னமொரு ஜாலமேகேள்
பூர்த்திய தாகவேதான்— கோழிமுட்டை
புண்ணியனே கொண்டுவந்து புகலக்கேளாய்
வண்ணமுடன் துவாரஞ்செய்து— அதிலிருக்கும்
அம்பிலியைப் போக்கிநீ யின்பமுடனே
நன்றாக அட்டைதனை— அதனுள் விட்டு
கவிலும் மெழுகுதீலே தன்னால்மூடி
தண்ணீரில் விட்டுவிட— முட்டையது
தக்கபடி யேசுழன்று சுற்றிவருகும்
கண்ணாலே கண்டவர்கள்— இதைக்
கண்கட்டு வித்தையென்று கலங்குவார்கள்
தந்தினந் தனதனனம்.

வசனம்.

ஒரு கோழிமுட்டையைக் கொண்டுவந்து சிறிய துவாரஞ் செய்து அதனுள்ளிருக்கும் அம்பிலி முதலானதும் போக்கிவிட்டு அட்டையை அதனுள் விட்டு துவாரத்தை தண்ணீர் ஒட்டாத மெல்லிய மெழுகு சீலையால் மூடி ஜலத்தில் விட்டுவிட்டால் கோழிமுட்டை இருகிருவென்று சுற்றுஜலத்தில் நாலு பக்கமும் ஓடும். கண்டவர்கள் கண்கட்டு வித்தையென்று ஆச்சரியப்படுவார்கள்.

34 பூமியில் புதைத்த முட்டை மாயமாய் போகும் ஜாலம்.

நொண்டிச் சிந்து.

எட்சணி பாதம்வேண்டி— இப்போ
இயம்புரேன் ஜாலமொன்று யெங்கும்புகழ
பட்சமுடன் நீ கேளாய்— படிகாரம்
பலமொரு கட்டியாக நிறுத்தெடுத்து
நெருப்பினி-லதைப்போட— கட்டியது
சோரகத் தானதுவும் பொருந்தவுடன்
குறிப்பா யதையெடுத்து— சத்தியினுல்
கோழிமுட்டைபோலதனைத் தான்சீவி
பத்திரமாய் வைத்துக்கொண்டு— பின்பு
பரிவாக ஜாலமாடும் சபைதனிலே
சித்தமுடன் வேறுமுட்டை— எடுத்து
சபையோர்க்கு காண்பித்து சாற்றிடுவாய்
புகழாக முட்டைதனை— இதோ
பூமியில் புதைத்திடுவேன் எடுத்திடுவீர்
தகைமை யுள்ளோரேயென்று— அப்போ
தந்திரமாய் முட்டைதனை மாற்றியெடுத்து
பவிஷமது தோண்டி— தந்திரமாய்
படிகார முட்டைதனை காட்டிபுதைத்து
தன்னியே மண்ணையதின்மேல்— கொஞ்சம்
தண்ணீர் தெளித்துசற்று நேரம்பொருத்து
தோண்டியே தான்பார்க்க— முட்டையது
தோற்றுது மாயமாகப் போய்விடுமே
கண்டவர்க ளதிசயிப்பார்— இதுக்
காளியுட லேலையென்று பிரமைகொள்வார்

தந்தினம் தனதனனம்.

வசனம்.

ஒரே கட்டியாக ஒரு பலம் படிகாரத்தை நிறுத்தெடுத்து நெருப்பில் போட அது பொர பொரவென்று பொங்கி பூர்த்தவுடன் அதை யெடுத்

துப் பேனு கத்தியினுல் பக்குவமாக முட்டையைப்போல் நைசாகச் சீவி வைத்துக்கொண்டு ஜாலம் ஆடும் சபையில் வேறு முட்டையைக் கையி லெடுத்து சபையோர்களுக்குக் காட்டி இந்த முட்டையை பூமியில் புதைத்துவிடுகிறேன் மறுபடியும் இந்த முட்டையை யெடுத்துக் கொடுப்பீர் களாவென்று பந்தயங் கூறி சல் மலையாள பகவதி யென்று தந்திரமாக படிகார முட்டையை யெடுத்து அனைவருக்கும் காண்பித்து பூமியில் கொஞ்சம் தண்ணீர் தெளித்து சற்று நேரம் பொருத்து தோண்டிப் பார்க்க முட்டை மாயமாகப் போகும். கண்டோரெல்லாம் ஆச்சரியப்படு வார்கள்.

35 பாத்துமுட்டை குதிக்கும் ஜாலம்.

நொண்டிச் சிந்து.

பார்க்கவே ஜாலமொன்று— இப்போ
பகருவேன் கேட்டுமன மகிழவேதான்
ஏர்க்கவே பாத்துமுட்டை— ஒன்று
இன்பமுடன் கொண்டுவந்து சாணம்பூசி
வைத்துக்கொண் டதன்பிறகு— கூளியிரகு
வாகாகக் கொண்டுவந்து அடிபுறத்தில்
சுத்தமா யிரண்டங்குலம்— நீளம்
துணித்து யதில்நிறைய ரசத்தைவிட்டு
மெழுகால் வாயைமூடி— அதை
மெத்த தந்திரமாக வைத்திருந்து
வழுவாமல் மேற்சொன்ன— முட்டைதனை
யடுப்பினில் தான்போட்டு அவித்தெடுத்து
சாண மதைநீக்கி— அதில்
சடுக்கென்று கூளியிறகை சொருகிவிட
காணவேகு டுள்ளமட்டும்— குதித்திடும்
கண்டவர்க ளாச்சரியங் கொண்டிடுவார்

தந்தினந் தனதனனம்.

வசனம்.

ஒரு வாத்துமுட்டை நல்லதாகக் கொண்டுவந்து அதின்மேல் சாணம் பூசி வைத்துக்கொண்டு பிறகு கூளியிறகு கொண்டுவந்து அந்த இறகின் அடிபுறத்தில் இரண்டங்குலம் துண்டு துணித்தெடுத்து அதின் நிறைய பாதரசத்தை விட்டு அதின் வாயை மெழுகால் மூடி தயார் செய் துவைத்துக்கொண்டு மேற்படி முட்டையை நல்ல தீயுள்ள அடுப்பில் போட்டு நன்ருய் வெந்து சூடு எழும்பியவுடன் சடுக்கென்று முட்டை யை யெடுத்து மேலுள்ள சாணத்தை நீக்கி உடனே ரசம் விட்டு வைத்

யிருக்கும் கூளியின் இறகை முட்டையின் உள்ளே சொருகிவிட குஞ்சுகள் மட்டும் குதிக்கும். கண்டவர்கள் ஆச்சரியப்படுவார்கள். ஆனால் அதிக சூடு இருக்கவேண்டும்.

36 காகிதத்தில் பலகாரம் சுடும் ஜாலம்.

நொண்டிச் சிந்து.

ஆதிபகவதிபாதம்— நாளும்
அன்பாகவேதொழுது யின்பமுடனே
சோதியாய் ஜாலமொன்று— இப்போ
சொல்லுகிறேன் மதிகொண்டு வல்லவர்கேளு
திடத்தகடு தாளியதனை— எடுத்து
தொன்னைபோ லொட்டிக்கொண்டு தொந்தமுடனே
நடத்தவே நீகேளாய்— தேரினா
நல்ல பிரண்டைதனை அரைத்தெடுத்து
தொன்னையின்பின்புரமாக— நான்குபூசு
துலங்கவே பூசியதை புலரவைத்து
கன்னியமாய் வைத்துக்கொண்டு— பிறகு
காணவே ஜாலமாடும் சபைதனிலே
மூன்றுசிறு கல்லையெடுத்து— அடுப்பாய்
முசியாமல் வைத்ததில் தீமூட்டி
யூன்றிதோர் தொன்னையதின்மேல்— வைத்து
அப்பனே நெல்லெண்ணெய் யதனில்விட்டு
இஷ்டம்போல் பலகாரம்— நொடிக்குள்ளே
இன்பமுடன் சுட்டிடுதற்க யெவரும்புகழ்வார்
தந்தினந் தினதனனம்.

வசனம்.

நல்ல திடத்த கடுதாசியை யெடுத்து தொன்னைபோல் ஒட்டி பிறகு தேரினா பிரண்டையைக் கொண்டுவந்து மைபோலரைத்து தொன்னையின் பின்புறத்தில் நான்கு பூசு நன்றாய் பூசி காயவைத்துக்கொண்டு ஜாலமாடும் சபையில் மூன்று சிறு கல்லை அடுப்பாக வைத்து தீமூட்டி மேற்படி தொன்னையை அடுப்பின்மேல் வைத்து நல்லெண்ணெய் விட்டு எண்ணெய் காய்ந்தவுடன் அப்பளம் பணியாரம் இன்னும் பலவிதமான பலகாரமும் சுடலாம். ஆனால் சுடிய சீக்கிரத்தில் சுட்டுக் காட்டவேண்டும். பெருண்டை அரைக்கும்போது கைவிரல்களுக்கு விளக்கெண்ணெய் தடவிக்கொள்ளவேண்டும்.

37 ஒருமணி நேரத்துக்குள் கேழ்விரகு பயிரிட்டு கதிரருக்கும் ஜாலம்.

நொண்டிச் சிந்து.

வித்தையென்றாலும் வித்தை— ஒன்று
விளம்பிடக் கேட்டிடுவீர் விநோதமதை
அத்தனடி நித்தந்தொழுது— எங்கள்
ஆத்தாள் மகேஸ்வரியை போற்றிசெய்து
புவியி லெவரும்புகழ— ஜாலமொன்று
புகலுகிறேன்மன மகிழ்வின்று
அவயத்தின் கோழிமுட்டையை— கொண்டுவந்து
அரிசி புகரும்படியாய்— துவாரம்செய்து
அதிலுள்ள வம்பிலியை வெளியாக்கி
அப்பனே கேழ்வரகை— அதினுள்ளே
அடைவாகத் தானிறப்பி துவாரத்தைமூடி
கொப்பெனவே கோழியுடைய— அவயத்தில்
கூசாமல் வைத்துவிடு வாசமுடனே
குஞ்சி பொரிக்குந்தருணம்— பார்த்திருந்து
கூடிய முட்டைதனை தேடியெடுத்து
பத்திரமாகவேதான்— கேழ்வரகை
பக்குவப்படுத்தியதை வைத்திருந்து
ஜாலங்க ளாடுஞ்சபையில்— எருகுடண்ணை
சதுராகக் கொண்டுவந்து பாத்திகட்டி
மிக்கவே ஜலத்தைவிட்டு— பின்பு
மேற்படி கேழ்வரகைக் கையிலெடுத்து
அனைவர்க்குந் தான்காட்டி— அப்போ
ஆயிபகவதி யென்றுசொல்லி
பாத்தி தனில்விதைத்து— அதின்மேல்
பண்பாகத் துணிதனை போட்டுமூடி
ஒருமணி நேரம்பொறுத்து— திறந்து பார்க்க
ஓங்கியே வளர்ந்துகதிர் விட்டுயிருக்கும்
கண்டவ ராச்சரிப்பார்— இதுவென்ன
காரணமோ வென்றுசிலர் பிரமைகொள்ளுவார்
தந்தினந்தன தனனம்.

வசனம்.

அவயத்திலிருக்கும் நல்ல கோழிமுட்டையைக் கொண்டுவந்து அரிசி புகும்படியான துவாரம் செய்து அதனுள்ளிருக்கும் அம்பிலி முதலானதும் போக்கிவிட்டு அதின் நிறைய கேழ்வரகை நிறப்பி துவாரத்தை

காயிதத்தால் மூடி முன்போல் கோழியின் அவையத்தில் வைத்துவிடவும், அது குஞ்சி பொரிக்கும் தருணத்தில் மேற்படி முட்டையை கண்டு பிடித்து யெடுத்துவந்து பத்திரப்படுத்தி வைத்துக்கொள்ளவும். ஜாலம் ஆடும் சபையில் எருகு சேர்த்த மண்ணைக் கொட்டி பாத்திகட்டி ஜாலம் விட்டு பிறகு மேற்படி கேழ்வரகை கையிலெடுத்து அனைவருக்குங்காட்டி அந்த பாத்தியில் விதைத்து மேலே துணியைப் போட்டு மூடிவிடவும். ஒரு மணி நேரம் பொருத்துத் திறந்துபார்க்க பயிர் வளர்ந்து கதிர்விட்டிருக்கும், கண்டவர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

38 தீபத்தை பார்த்தவுடன் கூத்தாடும் ஜாலம்.

நொண்டிச் சிந்து.

வேடிக்கையானவித்தை— எவருமெச்ச
விளம்புறேன் கேட்டு மனமகிழ்வீர்
வாடிக்கை யாகவே— கதிர்வாரம்
வண்மையுடன் ரெட்டைவால் பல்லியைக்கண்டு
ஆடைமுத லருணையரும்— களைந்துவிட்டு
அப்பனே பல்லியின் வாலைதுணிக்க
படியினி லதுவிழுந்து— பார்க்க
படபடவென் றுயது ஆடிக்குமட்டும்
நசிமசி யென் றநீயும்— உரைத்து
நாணம தில்லாமல்நீ கூத்துகளாடி
இசையவே வால்துடிப்பு— அடங்கியபின்
இஷ்டமுட னவ்வாலை யெடுத்துநீதான்
பத்திரப் படுத்திக்கொண்டு— ஜாலமாடும்
பாரசபைதனிலே நேராகவேதான்
சுத்தமுடன் வாலதனை— சீலையில்வைத்து
சுருட்டித் திரிபோலே திரித்தெடுத்து
வேப்பெண்ணை தனில்தோய்த்து— அகலிவிட்டு
விளக்கது யேற்றிவைக்க பார்த்தவர்கள்
அப்போ தவர்களுமே— மனம்போல்
ஆடுகின்ற வேடிக்கையை யானென் சொல்வேன்
தந்தினந் தனதனனம்.

வசனம்.

ஞாயிற்றுக்கிழமைதினம் இரட்டைவால் பல்லியை தேடிக் கண்டவுடன் அருணைக்கயர் முதலானதும் அருத்துவிட்டு நிர்மாணமாக நின்று கத்தியால் அந்த பல்லியின் வாலை துண்டிக்க அது கீழே விழுந்து ஆடிக்கும். அப்போது நீ நசி மசி யென்று சொல்லிக்கொண்டே உன் இஷ்டம் போல் கூத்தாடி வால் துடிப்பு அடங்கினவுடன் அருணைக்யர் ஆடை முத

லானதும் உடுத்திக்கொண்டு வாலையெடுத்து பத்திரப்படுத்தி வைத்துக் கொண்டு ஜாலமாடும் சபையில் வெள்ளை மெல்லிய சீலையில் வாலை வைத்து திரிபோல் செய்து வேப்பெண்ணையில் தோய்த்து அகலிவிட்டு தீபமேற்றிட அதை பார்த்தவர்களெல்லாம் தங்கள் தங்கள் மனம்போல் கூத்தாடுவார்கள். தீபத்தை அமைத்துவிட்டால் ஆட்டம் நின்றுவிடும். ஆனால் வாலில் தீபடாமல் ஒரு அங்குலம் உள்ளே வைத்து சுற்றவேண்டும்.

39 தேவர்களை காட்டும் ஜாலம்.

நொண்டி சிந்து.

அம்பிகை பாதம்பணிந்து— இந்த
அகிலத்தோ ராச்சரிக்க ஜாலமொன்று
இன்பமுடன் சொல்லுகிறேன்— கவனமாய்
இருந்து ஒருமனதாய்க் கேட்டிடுவீர்
இல்லைபால் கொண்டுவந்து— அத்துடன்
திமிரிபாஷாணமதை தான்கலந்து
வல்லமை யோடுநீயும்— ஓரறைக்குள்
வாகாக முச்சிதனை கொண்டுமேதான்
அந்திர தேவர்களை— செவிற்றினில்
அப்பாலே கொண்டுநீ தானெழுதி
சுந்திர மாகவேதான்— நீயதை
சுத்திபடுத்திவைத்து சொல்லிடக்கேள்
இரவினில் தானுமல்லோ— உனக்கு
இஷ்டமுள்ள பேர்களையு மழைத்துச்சென்று
அறைதனை திறந்துகாட்ட— ஆச்சரிக்க
அந்திரதேவர்களையுங் கண்டுமகிழ்வார்
கண்டவர் மகிழ்ந்தவுடன்— உடனே நீ
கற்பூரங் கொஞ்சமது கொளுத்திவைக்க
அண்டர்கள் மறைந்துவிடுவார்— அப்போ
அனைவரையும் வெளியில்நீ போகச்சொல்லி
கதவையும் சாற்றிக்கொள்ள— பார்த்தோர்கள்
கண்கட்டு வித்தையென்று பிரமைகொண்டு
இதமொன்றும் பேசாமல்— மனதினில்
எண்ணாத எண்ணமெல்லா மெண்ணிடுவார்
தந்தினந் தனதனனம்.

வசனம்.

இல்லைப்பால் கொண்டுவந்து அத்துடன் திமிரிபாஷாணம் சேர்த்து குழப்பி வைத்துக்கொண்டு இருட்டாக இருக்கும் ஓர் வீட்டில் முச்சினைக்

கொண்டாவது அல்லது தானுவது சிறிய புருஷனை மேற்படி பாலைக் கொண்டு அந்த அறைக்குள் செவிற்றில் மும்மூர்த்திகள் போலும் தேவர்கள் போலும் யெழுதிவிட்டு பார்க்க பளபளவென்று பிரகாசமோடு தோற்றும் கதவை மூடிக்கொண்டு வெளியில் வந்துவிடவும் பிறகு தனக்கு இஷ்டமான பெயர்களை அழைத்து இதோ இந்த வீட்டில் தேவர்கள் முதலானவர்களைக் காண்பிக்கின்றேன் பாருங்களென்று அனைவரையும் அழைத்துக்கொண்டுபோய் அறையைத் திறந்துகாண்பிக்க தேவர்களெல்லாம் சூரிய பிரகாசம்போல் தோற்றப்படுவார்கள் அப்போது பார்த்தவர்கள் யாவரும் பிர்மித்து மதிமயங்கி நிற்குந்தருணத்தில் கொஞ்சம் கற்பூரத்தை கொளுத்திவைத்து தேவர்களே தங்கள் தங்கள் யிருப்பிடம்போவீர்களென்று சொல்லவேண்டும் வெளிச்சங் கண்டவுடன் யெழுதியது தோற்றப்படமாட்டாது வெளிச்ச மிருக்கும்போதே யனைவரையும் வெளியே போகச்சொல்லி கதவை சாற்றிக்கொள்ளவேண்டும்.

40 சகலமும் வசியமாகும் ஜாலம்.

நொண்டிச் சிந்து.

சகலமும் வசியமாக— இப்புவியில்
சாற்றுகிறேன் ஜாலமொன்று நேர்த்தியதாக
உகமையுடனே கேளும்— இந்த
உற்றதோர் இலர்தமுறை ஓதிடக்கேள்
பன்னியக் கஸ்தூரிமஞ்சள்— நல்லப்
பரிவான வூசிக் காந்தமுடனே
உன்னியக் கோரோசனையும்— கூட
உத்தமனே கிராம்பும் உவாய்க்கூட்டி
பச்சையென்ற பூரத்தோடு— ஜாதிக்காய்
பண்பாய்வகைக்குகால் விராகன் தாக்கி
இச்சையுட னிவையெல்லாம்— பொடிசெய்து
இதமாகவெண்டுகிலில் நீபரப்பி
குருபாதந்தனை நினைந்து— அம்மருந்தை
கொப்பென திரியாக்கிக் கருசிலைசுற்றி
தரும்தாமரைநூலை— அதின்மேல்
தப்பாமல் சுற்றியே செப்பிடக்கேளீர்
காராவின்நெய் யதனை— மண்டையோட்டில்
காணவேவிட்டுச்சிவ கடிதொழுது
சீராகமேற்படி திரியை— யதிலிட்டு
சித்தமுடன் விளக்கேற்றி மையைவாங்கி
வாங்கியே புனுகுடனே— ஜவ்வாதும்
விளமாகக்கூட்டியே மத்தித்துவதை

ஒத்திடச் சிமிழில்வைத்து— மோகினிக்கு
உத்தமனே பூசைசெய்யும் மந்திரங்கேளாய்
தூங்கிய பூசையது— வாலைபூசை
தயவாகப்பூசித்துத் தியானமோது
ஆங்கியே ஸ்ரீம் இரீம்— கிலியுமென்று
அக்ருஷணி மோகினி யென்றேதி
என்னவே யுருதானும்— லட்சமது
இஷ்டமுடனேதி நீ முடித்தாயானால்
நன்னவே யென்னசொல்வேன்— இந்த
நானிலமெலாம்வசியந் தானாகுமே
பக்தியுடன் தங்கத்தாலும்— வெள்ளியாலும்
பக்குவமாய் நல்லசிமிழ் குச்சுசெய்து
சுத்தமுடன் திலர்தமதை— நெற்றியினில்
சொகுசுடனிட்டு வெளி வந்தாயானால்
பன்னவே தேவதைகள்முதல்— ராட்சதர்கள்
பாரமுனிபூதமொடு பேய்களுடன்
வண்ணமுள்ள ஸ்திரீபுருஷாள்— இவர்களெலாம்
வசியங்களாவதுடன் வழுத்திடக்கேள்
பட்சமுடன் கேட்டதெல்லாம்— கொண்டுவந்து
பண்பாகவே கொடுப்பார் பகைவிலகும்
இச்சையுள்ள யிந்தமையால்— ஜாலங்கள்
இன்பமுடனடி கீர்த்திப் பெறலாமே.
தந்தினத் தனதனனம்.

வசனம்.

கஸ்தூரிமஞ்சள் ஊசிகாந்தம் கோரோசனை கிராம்பு பச்சை பூரம் ஜாதிக்காய் இவைகள் வகைக்கு விராகனிடை காலாக யெடுத்து கல்வத்திலிட்டு பொடிசெய்து வெள்ளையாக விருக்கும் மெல்லிய துணியில் அதை பரப்பி திரிபோல் செய்து வைத்துக்கொண்டு அதின்மேல் கருசிலைசுற்றி அதின்மேல் தாமரை நூல் சுற்றி குருவை தியானித்து பிறகு பசுவின் நெய்யை தலைமண்டையோட்டில் விட்டு சிவ சிவா யென்று சிவபெருமானை தியானித்து மேற்படி திரியை மண்டையோட்டிலிட்டு விளக்கேற்றி அதில்வரும் மையை வாங்கி அத்துடன் புனுகும் ஜவ்வாதும் சமனிடையாகக் கூட்டி மத்தித்து சிமிழில் பத்திரப்படுத்தி வைத்துக்கொள்ளவேண்டும். அதன் பிறகு மோகினி தேவதை வசியமாகும்படிக்கு மோகினி பூசையும் வாலைபூசையும் செய்ய மந்திரம் ஸ்ரீம் இரீம் கிலியும் அக்ருஷணி மோகினி என்று லட்சம் உருவு கொடுத்துவர சித்தியாகும். அதன் பிறகு மேற்படி மையில் கொஞ்ச மெடுத்து நெற்றியில் திலர்தம் வைத்துக்கொண்டு வெளி

மில் வர சகலரும் வசியமாகும் அன்றியும் தங்கத்திலாவது வெள்ளியாலும் சிமிழ் குச்சு செய்து திலர்தம் இட்டுக்கொண்டுபோக தேவதை முதலானவும் ராட்சதர்களும் முனி பூதம் பேய் முதலானதும் ஸ்திரி புருஷாள்களும் வசியமாவதுடன் கேட்டதெல்லாம் தருவார்கள், பகை விலகும். இந்த மையினால் வீர்த்தியாகிய ஜாலங்கள் செய்யலாம்.

41 மறைவு மை ஜாலம்.

நொண்டிச் சிந்து.

மறைவரும் மையதனை— வெளியாய்
மானிலத்தில் சொல்லுகிறேன் மெய்யனமாய்கேளீர்
நிறையானைக் கோலப்பிண்டம்— வாங்கி
நேராக குராணித்து யெடுத்தாயகி
சீலையிலே வைத்துசுருட்டி— கோளாய்
சித்தமுடன் சிரசோட்டில் செப்பிடக்கேளு
கோலமுடன் காராவின்— நெய்யைவிட்டு
கொப்பனதிரியதனை யதனில்விட்டு
சித்தமுடன் விளக்கேற்றி— மைதயிலமதை
சீராகத் தான்வாங்கி சிமிளில்வைத்து
சுத்தமுடன் திலர்மதை— யிட்டுகொண்டு
சூழ்ந்தசபைதனிலே போயிருக்க
உருவே தெரியாது— காண
உற்றதோர் ஜாலமெல்லா மெத்தசெய்யலாம்
அரியவே திலர்தமதை— துடைத்துவிட்டால்
ஆச்சரியமாகவே தோற்றிடுவாய்

தந்தினந் தனதனனம்.

வசனம்.

ஐங்கோலப்பிண்டம் வாங்கி அதை குராணித்து எடுத்து மாதர்கள் விட்டு ஜாரமான சீலையில் வைத்து சுருட்டி வைத்துக்கொண்டு பிறகு தலை மண்டையோட்டில் பசுவின் நெய் விட்டு மேற்படி திரியை அதில் விட்டு தீபமேற்றி யெரித்து அதில் வரும் மையை வாங்கி சிமிளில் பத்திரப்படுத்தி வைத்துக்கொண்டு ஜாலமாடும் சபையில் போய் நின்று மேற்படி மையைக் கொஞ்சமெடுத்து நெற்றியில் இட்டுக்கொள்ள ஒருவர் கண்ணுக்கும் தோற்றாமல் நிற்பாய். மையை துடைத்துவிட்டால் தோற்றப்படுவாய். அப்போது சபையோர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

42 தேங்காய் மந்திரித்து விடும் ஜாலம்.

நொண்டிச் சிந்து.

மந்திர மில்லையென்று— சொல்லவில்லை
மந்திரங்கால் மதிமுக்கா லிருக்கவேணும்
தந்திர மாகவேதான்— ஒரு
தக்கதோர் தேங்காயை கொண்டுவந்து
குடுமைமுதலான துவை— போக்காமல்
கொப்பென புன்னைக்காய் புரும்படியாய்
வடிவா யொருகண்ணை— துளைத்து
வாகாயுள்ளிருந்ததெல்லாம் சுரண்டியபின்
அடைவாக சுண்டெலியை— யதனுள்விட்டு
அப்பனே வஜ்ஜிரமுந் தான்தடவி
கொப்பென துவாரமதை— யடைத்துபின்பு
கூசாமல் மஞ்சள்பூசி குங்குமமிட்டு
அதனைமுன் வைத்துக்கொண்டு— சபையோரை
இன்பமுடன் தான்பார்த்து யேதுவுரைப்பாய்
சபைதனி லுள்ளபேரே— யாராகிலும்
சார்பாக வொருதேங்காய் கொண்டுவந்தால்
உபையமே மந்திரித்து— இச்சபையில்
உருளும்படிச்செய்வே னென்றுவுரைத்து
கேட்கையிலே யெவரேனும்— கொண்டுவந்து
கைதனில் கொடுத்திடவே யதைவாங்கி
வாட்கையா யதற்குமேதான்— மஞ்சள் குங்குமம்
வகையுடன் பூசிதூப தீபங்கொடுத்து
தந்திர மாகவேதான்— அதைதமைறத்து
தட்சணமே முன்தேங்காய் தன்னையெடுத்து
விந்தையுடன் சபையில்விட— அது
வேடிக்கை யாயுருண்டு கொண்டிருக்கும்
கண்டவர்கள் தான்மிரள்வார்— இது
காளியுட வசியமென் றேயுரைப்பார்

தந்தினந் தனதனனும்.

வசனம்.

ஒரு தேங்காயைக் கொண்டுவந்து குடுமை முதலானதுகளையும் போக்காமல் ஒரு கண்ணை புன்னைக்காய் புரும்படியான துவாரம் செய்து உள்ளிருப்பதையெல்லாம் சுரண்டிவிட்டு வீட்டிலுள்ள சுண்டெலியை அதிலுள்ளே விட்டு தேங்காய் மேல்லையில் வச்சிரம் தடவி துவாரத்தை

மூடிவிட்டு தேங்காய் குடுமையையும் வசிசிர்த்தட்டி தெரியாமல் ஒட்டி விட்டு மஞ்சள் பூசி குங்கும பொட்டு வைத்து முன்னதாக வைத்துக் கொண்டு பிறகு ஜாலமாடும் சபையில் சபையோரைப்பார்த்து ஓ சபையோர்களே யாராகிலும் ஒரு தேங்காய் கொண்டுவந்து கொடுத்தால் அதை மந்திரத்தால் உருளும்படி செய்கிறேன் பாருங்களென்றுசொல்லி அவர்கள் கொண்டுவந்து கொடுக்கும் தேங்காயை வாங்கி அதற்கு மஞ்சள் பூசி குங்குமமிட்டு தூபதீபங் கொடுத்து சல் மலையாள பகவதி ஓடி வா என்று தந்திரமாக அவர்கள் கொடுத்த தேங்காயை மறைத்துவிட்டு முன் தேங்காயை சபையில்விட அது ஒரு யிடத்தில் நிற்காமல் உருண்டுக்கொண்டே யிருக்கும், சபையோர் பிரளுவார்கள்.

43 நெருப்பில்லாமல் வெண்ணெ உருக்கும் ஜாலம்.

நொண்டிச் சிந்து.

நெருப்பில்லா வெண்ணெயுருக்க— ஜாலம்
நேராகச் சொல்லுகிறேன் சீராகக் கேள்
குறிப்பாக வந்ததொரு— கற்சுண்ணாம்பை
கூசாமற் கொண்டுவந்து வாசமுடனே
பூமியிற் பள்ளந்தோண்டி— சுண்ணாம்புகல்லை
போட்டுயதின்மீது மண்ணைமூடி
தாமதமில்லாமல்— வெண்ணெய்தனை
தக்கபடி கிண்ணமதில் தான்போட்டு
சுண்ணாம்பு புதைத்தயிடத்தில்— மேல்வைத்து
சுற்றிலுஞ் தண்ணீர் விட்டிடுக
வெண்ணெய்யுந் தானுருகும்— கண்டவர்கள்
வேடிக்கை யிதுவென்று விளம்பிடுவார்
தந்தினத் தன தனனம்.

வசனம்.

ஆலையில் வெந்த கற்சுண்ணாம்பைக் கொண்டுவந்து ஒருவருக்குந் தெரியாமல் ஜாலமாடும் சபையில் ஒரு யிடத்தில் கொஞ்சம் மண்ணைத் தோண்டி இந்த கல்லைக் கொட்டி மண்ணை மூடி வைத்திருக்கவேண்டும். ஜாலமாடும்போது ஒரு கிண்ணத்தில் கொஞ்சம் வெண்ணெயைப்போட்டு சபையோர்களுக்குக் காண்பித்து இந்த வெண்ணெயை நெருப்பில்லாமல் உருக்குகிறேன் பாரென்று சொல்லி சுண்ணாம்பை புதைத்த விடத்தில் கிண்ணத்தை வைத்து சுற்றிலும் ஜலம் விட்டுக்கொண்டு வர வெண்ணெய் காகவென்று உருகும். பார்ப்பவர்களெல்லாம் மகா ஆச்சரியமான ஜாலமென்று நினைப்பார்கள்,

44 ஒரு கிணற்றில் ஊத்திய பசும்பாலை மறு கிணற்றில் எடுக்கும் ஜாலம்.

நொண்டிச் சிந்து

பிரியமா யெவருமெச்ச— ஜாலமொன்று
பேசுகிறேன் வாசமுடன் நேசரேகேளீர்
அரியவே தல்லிதமான— சீலைதனில்
அப்பனே யாவின்பா லாழாக்குகறந்து
சீராக பாலையெல்லாம்— சீலைதனில்
சிற்றமுடன் தானேற்றி புலர்த்தியபின்
நேராகச் சீலைதனை— கோமணமாய்
நீயுமே கட்டிக்கொண்டு சிந்தையிலா
தக்கசபை யோர்க்குமுன்னே— பசும்பால்
தானுமாழாக்குமே கறந்தெடுத்து
ஒக்கவே சபையோர்க்குக்— காட்டிநீ
ஓதுவா யவர்களும் பிரமிக்கவே
இந்த ஆழாக்குபாலை— இக்கிணற்றில்
இப்பவே ஊத்திவிட்டு இந்த க்ஷணமே
வித்தையுடன் மறுகிணற்றில்— இப்பாலை
விளங்கவே கொண்டுவாரே னென்றுரைத்து
இரண்டுக் கிணற்றருகே— ஒருவரையும்
எதிவரவொட்டாமல் பயமுறுத்தி
இறங்கொண்டு நீயிறங்கி— கபிலமது
இடமுடன் கட்டியிருக்கும் சீலையவிழ்த்து
ஜலத்தினி லதைநனைத்து— சார்பாக
சரியாகப் பாலதனை பிழிந்துகொண்டு
கவமுடன் கிணற்றைவிட்டு— வெளியில்வந்து
நன்றாகப் பாலதனைத் தான்காட்ட
அனைவரு [illegible]— இது
அருமையான வித்தை யென்றுபுகழ்வார்
தந்தினத் தன தனனம்.

வசனம்.

நல்லியமான மெல்லிய சீலையில் பசும்பால் ஆழாக்கு கறந்து கொண்டுவந்து அந்த சீலையில் கொஞ்சங் கொஞ்சமாக தோய்த்து உலர்த்தி அந்த ஆழாக்குப் பாலையும் சீலையில் ஏற்றி நன்றாய் உலர்த்தி முன்னதாக வைத்துக்கொண்டு ஜாலமாடும் சபையில் பசும்பால் ஆழாக்கு கறந்து கொண்டுவந்து சபையோர்க்குக் காட்டி இந்த பாலை ஒரு கிணற்றில்

ஊதிவிட்டு இன்னொரு கிணற்றில் இறங்கிக்கொண்டு வருகிறேன் என்று சொல்லி அனைவருக்கும் முன்பாக சடுக்கென்று ஒரு கிணற்றில் ஊற்றிவிட்டு இதோ பார் வேறு கிணற்றில் கொண்டு வருகிறேனென்று மேற்படி சீலையை கோமணமாகக் கட்டிக்கொண்டு கிணற்றிலிறங்கி இந்த சீலையை ஜலத்தில் நனைத்து சொம்பில் பிழிய பாலெல்லாங் கக்கிவிடும். ஆழாக்குப் பால் அளவாகப் பிழிந்துகொண்டு கிணற்றைவிட்டு மேலே யேறிவந்து சபையோருக்குக் காட்ட ஆச்சரியப்படுவார்கள். ஆனால் கிணற்றில் இறங்கும்போது ஒருவரையும் அக்கிணற்றருகில் வாரமற்படிக்கு பயமுறுத்தவேண்டும்.

45 சீட்டெழுதி ஜலத்திற்போட சுழலுஞ் ஜாலம்.

நொண்டிச் சிந்து.

ஜாலக்காள் பாதம்பணிந்து— இப்போ
சாற்றுகிறேன் ஜாலமொன்று நேற்றியதாக
கோலமுடன் பனம்வோலை— கொண்டுவந்து
கொப்பெனவே துண்டித்து யதனிலேகேள்
நசிமசியென்று யெழுதி— அதனில்
சலமாக வசியமை கொஞ்சந்தடவி
வசமாக யதனுடனே— காதிலுள்ள
வசியக்குறும்பிதனை சீட்டில்தடவி
ஜலத்தினில் தான்போட— கிருகிறென்று
சதுராகவே சுழலும்— சக்கரம்போல்
உலகத்தோ ராச்சரிப்பார்— இது
உற்றதோர் குட்டிசாத்தான் வித்தை யென்பார்
தக்கினந் தனதனனம்.

வசனம்.

ஒரு பனம் வோலை யெடுத்துவந்து அதை வாரி ஒரு அங்கலம் அண்டு துண்டித்து அதில் நசி மசி யென்று யெழுதி இப்புத்தகத்தில் கூறியிருக்கும் வசிய மையில் கொஞ்சம் அந்த சீட்டில் தடவி அத்துடன் காதினிலிருக்கும் குரும்பியை யெடுத்து நன்றாய் தடவி ஜலத்திற் போட கிருகிருவென்று சுழலும் கண்டவர்கள் பிரமிப்பார்கள்.

46 வெளாம்பழம் உருளும் ஜாலம்.

நொண்டிச் சிந்து.

கண்மணியே யொருஜாலம்— இப்போ
காட்சியா சொல்லுகிறேன் சூட்சமுடன்
வண்ணமுடனீ கேளாய்— விளாம்பழம்
வீரமாய்கொண்டுவந்து வாள்கொண்டருத்து

அதனுள்ளிருப்பதெல்லாம்— எடுத்துவிட்டு
இதமாக சுண்டெலியை யதனுள்விட்டு
போதவே வச்சிரத்தால்— ஒட்டியபின்
பொருந்தவே மஞ்சள்பூசி குங்குமமிட்டு
முன்னதாய் வைத்துக்கொண்டு— சபைதனில்
முக்கியமா யொருமொழி யேதுவுரைப்பாய்
இன்னுமிச்சபைதனிலே— எவரேனும்
இலங்கவே விளாம்பழங் கொண்டுவந்தால்
நடக்கும்படிக்குச் செய்வேன்— என்று
நவில யெவரேனுங் கொண்டுவந்தால்
சடக்கென யதைவாங்கி— மஞ்சள்பூசி
சபையோர்கள் பிரமிக்க குங்குமமிட்டு
தந்திரமாகவேதான்— அதைமறைத்து
தடக்கென்று முன்காயை கையிலெடுத்து
விந்தையாய் சபையில்விட— அது
வேடிக்கை யாகவே தானுருளும்
மந்திரமென்பார் சிலர்— இது
மயானருத்திரி யேவலென்பார்
சிந்தையில் பிரமைகொள்வர்— குட்டி
சாத்தான் வேலையோ யென்றுமுழிப்பார் த—

வசனம்.

ஒரு பழுத்த விளாம்பழத்தை கொண்டுவந்து அதை வாளினால் இரண்டாக அருத்து அதனுள்ளிருப்பதை யெல்லாம் யெடுத்துவிட்டு வீட்டினிலிருக்கும் சுண்டெலியை அதினுள் விட்டு வச்சிரந்தடவி கெட்டியாக ஒட்டி காய்ந்தவுடன் மஞ்சள் பூசி குங்குமமிட்டு முன்னதாக தயார் செய்து வைத்துக்கொண்டு ஜாலமாடும் சபையில் சபையோர்களைப் பார்த்து யாராகிலும் ஒரு விளாம்பழம் கொண்டுவந்தால் இந்த சபையில் நடக்கவைக்கிறே னென்று சொல்ல கொண்டுவந்து கொடுத்தால் அந்த பழத்தை வாங்கி அதற்கு மஞ்சள் பூசி குங்குமமிட்டு தூபதீபங் கொடுத்து பிறகு தந்திரமாக அந்த பழத்தை மறைத்து முன் பழத்தை கையிலெடுத்து சபையோர்களுக்குக் காட்டி என் மலையாள பகவதி நடவென்று வாசலில் விட்டுவிட கடகட வென்று உருளும் கண்டவர்கள் மதிமயங்கி நின்று ஆச்சரியப்படுவார்கள்.

47 எலுமிச்சம் பழத்தையறுத்தால் இரத்தம் காணும் ஜாலம்.

நொண்டிச் சிந்து.

கண்டோர் திகைத்திடவே— ஜாலமொன்று
கூறுவேன் கேட்டுமனம் மகிழவே நான்
பண்டாக நீகேளாய்— குரிதனில்
பரிவாக செம்பருத்தி பூவின்சாற்றை
வாகாகப்பிழிந்து— கத்திதனில்
வகையாக யேற்றியதை புலரவைத்து
பாகமாய் வைத்துக்கொண்டு— நிம்பழத்தை
பாரசபை யோர்க்குத் தான்காட்டி
பழத்தையுங் கையிலெடுத்து— காண
கூராக கத்திகொண்டு நீயறுக்க
குபுகுபுவென்று ரத்தம்— பார்க்க
கோழியை யறுத்ததுபோல் தானொழுகும்
ஆச்சரியப் படுவோர்கள்— அப்பாயிது
அடவிகாட்டேறி யேவலென்பார்கள் தந்தினம்

வசனம்.

நல்ல கூருள்ள ஒரு மேஜைகத்தியில் செம்பருத்திப்பூவின் ரசத்தைப்பிழிந்து கத்தியில் தளும்பத்தடவி உலரவைத்து இம்மாதிரியாக ஆறுயேழுவிசைதடவி உலர்த்தி முன்னதாகத்தயார்செய்து வைத்துக்கொண்டு பிறகு ஜாலமாடும் சபையில் ஒரு எலுமிச்சம்பழத்தை கையிலெடுத்து சபையோர்களுக்குக் காட்டி இந்தபழத்தை அறுத்து ரத்தங்காட்டுகிறேன் பாருங்களென்று சொல்லி பழத்தை இடதுகையில்பிடித்து வலதுகையில் மேற்படி கத்தியை யெடுத்து கரகரவென்று அருக்க சொரசொர வென்று ரத்தம் ஒழுகும் கண்டவர்கள் பிர்மித்து இது காட்டேறி வசியமென்றுக் கலங்குவார்கள்.

48 எலுமிச்சம்பழம் குதிக்கும் ஜாலம்.

நொண்டிச் சிந்து.

பகவதிபாதம் பணிந்து— ஜாலமொன்று
பகருவேன் கேட்டுமனம் மகிழ்ந்திடுவீர்
உகமையுடன் கேளாய்— ஒரு
உற்றயெலுமிச்சம்பழங் கொண்டுவந்து
எழுத்தாணியால் குத்தி— அதில்
ஈந்தெடு ஒன்னரை விராகனிடை—
பாதரசத்தை விட்டு— வாயு

பக்குவமாய் மெழுகினால் தான்மூடி
வெய்யிலில்வைத்தாயானால்— குடெழும்ப
வேடிக்கை யாகவே மேலெழும்பும்
அல்லது பூமியிலுருளும்— கண்டோர்கள்
ஆச்சரியப்படுவோர்கள் பேசிபலவாய் தந்தினம்

வசனம்.

ஒரு எலுமிச்சம்பழத்தைக் கொண்டுவந்து அதை எழுத்தாணியால் குத்தி அதில் ஒன்னரை விராகனிடை பாதரசத்தைவிட்டு மெழுக்கினால் துவாரத்தை அடைத்து அந்த பழத்தை வெய்யலில் வைக்க சூடு யேறின மாத்திரத்தில் தரையில் நிற்காது சென்டுபோல் எகுரும் அல்லது பூமியில் உருளும் பார்ப்பவர்களுக்கு ஆச்சரியமாக விருக்கும்.

49 கண்கட்டு மைவித்தை ஜாலம்.

நொண்டிச் சிந்து.

ஆரணாதினந்தினமும்— பூசித்து
அகிலத்தோர்பிர்மிக்கக் கூறுவேன்கேள்
கிரமுடனூக்குருவிப்— பிடித்துவந்து
கிட்டமுடன்பாளத்தை தைத்துநீகேளாய்
சூதமுறக் கால்களஞ்சி— வெண்ணெய்
சுத்தமுடனதினுள்ளே விட்டுமேதான்
போதமுறும் வாயைத்தைத்து— அதனை
புகழாக சிறுபானைக் குள்ளேவைத்து
தென்னங்கள் தானூத்தி— வாயைமூடி
தேடியே யடுப்பேற்றி யொருவிரகால்
உன்னிதமாக யெரித்து— எட்டெட்டுநாளாய்
உத்தமனேகருக்கிப் பதமபார்த்து
அஸ்திமுதல் ரோமங்கள்ளி— அதை
அப்பனே தானெடுத்துக் கல்வத்திட்டு
அஸ்தியது யில்லாமல்— பேய்கருப்பன்
கருதுநற் சார்விட்டு சேர்த்தரைத்து
மைபோலான பின்பு— அதனை
மகிழ்வாய் வழித்துயதை சீலையில்பூசி
பையவே தானுலர்த்தி— எடுத்து
பண்பாகத் திரியது சுற்றியேதான்
ஐந்கோல தைலமதை— சிரசோட்டில்
அப்பனே யூற்றியிந்தத் திரியைப்போட்டு
யோகமுடன் தான்கொளுத்தி— [illegible]மைவாங்கி

புகழார்கதைலத்தி — விற்றுத்தான்றுய
சிமிளினில் வைத்துகொண்டே — ஜாலக்காள்
சீர்பாதந் தன்னையுமே — பூசைசெய்து
தவமுடன் வித்தையாட — மையது
தானது கினைத்தவண்ண — மாகும்பாரே தந்தினத்

வசனம்.

ஒரு ஊக்குருவியைப் பிடித்துவந்து பாளத்தைத்தது கால் களஞ்ச வெண்ணெயும் சேர்த்து குருவியின் வாய்புரமாக உள்ளுக்குச் செலுத்தி வாயை தைத்துவிட்டு சிறு பானைக்குள் வைத்து ஒருபடி தென்னங்கள் அதிலூத்தி அடுப்பேற்றி சிருவிதவிரகால் எறித்து எட்டொன்றுய்க் கருக் கிப் பதம்பார்த்து அஸ்திையும் ரோமத்தையும் நீக்கி மற்றவைகளையெல் லாம் கல்வத்திலிட்டு பேய்கருப்பன் சார்விட்டு சேர்த்தரைத்து மைபோ லானபின்பு மெல்லியசீலையில்தடவி யுலர்த்தி திரியாய்சுற்றி தலைமண்டை யோட்டில் ஐங்கோலத்தைலம் விட்டு மேற்படி திரியை அதில் போட்டு கொளுத்தி அதில் வரும் மையைவாங்கி தைலத்தோடு சேர்த்து இழைத்து ஜாலக்காளை பூசைசெய்து மையை பத்திரமாய் சிமிளில் வைத்துக்கொ ண்டு இஷ்டம்போல் வித்தை யாடலாம்.

50 பாம்பு வுண்டாக்கும் ஜாலம்.

ஜாலமாடும் சபையில் பச்சை வைக்கோல் தூர்ஒன்று யெடுத்து சபை யோர்களுக்குக் காட்டி இந்த வைக்கோலை பாம்பாக்குகிறேன் பாரென்று தந்திரமாக கண்கட்டு மையைத்தடவி கீழேபோட பாம்பாகும் பார்ப்போ ரெல்லாம் ஆச்சரியப் படுவார்கள்.

51 புளியனிலையை குளவியாக்கும் ஜாலம்.

புளியனிலை ஒரு கொத்துக் கொண்டுவந்து சபையோருக்குக் காட்டி இந்த புளியனிலையை குளவியாக்குகிறேன்பாரென்று கண்கட்டு மையைத் தடவி உருவி யிலையைக் கீழேபோட குளவியாகும்.

52 வேப்பிலையில் தேளாக்கும் ஜாலம்.

கண்கட்டு மையைத்தடவி வேப்பிலையை உருவி கீழேபோட தேளா கும்.

53 செத்த குருவியை உயிருண்டாக்கும் ஜாலம்.

எந்தஜாதிகுருவி யாயிருந்தபோதிலும் செத்துபோனதைக் கொண்டு வந்து மேற்படி கண்கட்டு மையை அதின் சிறகில் தடவ உயிருண்டாகும் கண்டவர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

54 பானை ஓட்டை விராகன் ஆக்கும் ஜாலம்.

பானை ஓட்டை வட்டமாகசெய்து வைத்துக் கொண்டிருந்து சபை யோர்க்குக்காட்டி இந்த ஓட்டை விராகனாக்குகிறேன் பாரென்றுசெல்லி மேற்படி கண்கட்டு மையையெடுத்து ஓட்டில் தடவிக் கீழேபோட விராக னாகும் கண்டவர்கள் பிரமிப்பார்கள்.

55 சந்தனம் பூசுஞ் ஜாலம்.

மேற்படி கண்கட்டு மையை கையில் தடவிக்கொண்டு மண்ணைக் கிள்ளி ஒருவர்மேல் பூச செந்தபொடி வாசனைவீசும்.

56 அம்மியை நடக்கவைக்கும் ஜாலம்.

அம்மியைக் கொண்டுவந்து சபையில் வைத்து இந்த அம்மி நகர வைக்கிறேன் பாரென்று சொல்லி மேற்படி கண்கட்டுமையை கொஞ்ச மெடுத்து தந்திரமாக அம்மியில்தடவ அம்மிநகரும் ஆச்சரியப்படுவார்கள்.

57 கெச்சக்காய் ஒன்றோடொன்று மோதிக்கொள்ளும் ஜாலம்.

பத்துபதினைந்து கெச்சக்காயை யெடுத்து மேற்படி கண்கட்டுமை யைத்தடவி பூமியில்போட ஒன்றோடொன்று மோதிக்கொள்ளும்.

58 தென்ன மரத்தைக் குத்த தேங்காய் விழும் ஜாலம்.

தென்ன மரத்தடியில் போய்நின்று மேற்படி கண்கட்டுமையை மரத் தில் தடவிவிட்டு ஜாலக்காள் பூசைசெய்து சல்மலையான பகவதி யென்று மரத்தை ஓங்கிக்குத்த தேங்காய் பலபலவென்று விழும்.

59 பாலுசர்க்கரையாகும் ஜாலம்.

நொண்டிச் சிந்து.

பாலுசர்க்கரை யாகும் — ஜாலமதை
பகருவேன் கேட்டோர்கள் — மகிழுமிவ
கோலமுடன் பசும்பாலை — கொண்டுவந்து
கொப்பனவே பாண்டமதி — விட்டுகோணாய்
வன்னியெனு மடுப்பில்வைத்து — எறிக்க
வாகாகப் பாலதுக் — காயும்போது
பெருந்தத்தி வேரதனை — துடுப்புசெய்து
பேணியே கிளறிக்கொண்டு — தானிருந்து
பால்நன்றுய்க் காய்ந்தபின்பு — ஆறவைத்து
பக்குவமாய் புட்டியினி — லதைஊத்தி
நாலுநாள் பொருத்துப்பார்க்க — உன்னிதமாய்
நலமாக சீனிசக்கரைப் — போலிருக்கும்
சீலமுடனிதனையுமே — செய்துவுண்ண
சித்தமுடன் தானுவிரத்தி — மெத்தவுண்டாகும் தந்தினத்

வசனம்.

தேவையான மட்டும் பசும்பால் கொண்டுவந்து ஒரு பாண்டத்தி லூற்றி யெறிக்க பால் காயும்போது பெருந்துத்தி வேரை துடுப்பு போல் செய்து கிளறிக் கொண்டுவந்து பால் நன்றாகக் காய்ந்தவுடன் அடுப்பைவிட்டு யிறக்கி ஆறவைத்து புட்டியிலூற்றி நாலுநாள் பொறுத்துப் பார்க்க சிறு சர்க்கரைப்போல் வெள்ளை ஆற்று மணல் போலிருக்கும் அதை முன்னதாகத் தயார்செய்து வைத்துக் கொண்டு ஜாலமாடும் சபையில் வெள்ளை ஆற்றுமணலை கொஞ்சம் கையிலெடுத்து இந்த மண்ணை சர்க்கரை யாக்குகிறேன் பாரென்று காட்டி தந்திரமாக ஆற்று மணலை மறைத்து விட்டு மேற்படி பால் சர்க்கரையை யெடுத்து அனைவருக்கும் கொடுத்து சாப்பிடச்சொல்ல சபையோர்கள் சாப்பிட்டு ஆச்சரியப்படுவார்கள் அன்றியும் இதைசெய்து வைத்துக் கொண்டு காலைமாலை இரு வேளையும் உச்சிக்கரண்டி பிரமாணம் சாப்பிட்டுக்கொண்டுவர தாது விருத்தியாகும் இந்திரியங்கட்டும்.

60 வசிய மூலிகை ஜாலம்.

நொண்டிச் சிந்து.

வசியம தாகவேதான்— ஜாலமொன்று
வாகாகச் சொல்லுகிறேன் வையும்புகழு
சசியவே பொங்குமுடனே— மிளகு
சாரணையின் மூலம் தனைத்தேடி
வெள்ளியின் வாரமதிலே— காப்புகட்டி
விளங்கவே பொங்கலிட்டு பலிகொடுத்து
கள்ளமில்லாமல் நீயும்— தியானித்து
காணவே தீபமிட்டு தூபங்கொடுத்து
பக்ஷமுடனதின்வேரை— கொண்டுவந்து
பகவானைத் தியானித்துப் பகரக்கேளாய்
செம்பொன்னால் குளிசஞ்செய்து— இதனை
சீராக யதனுள்ளே யடைத்துக்கொண்டு
தென்பாக யணைத்துக்கொள்ள— பலனை
திரமுடன் சொல்லுகிறேன் நீகேளாய்
வாமடா மனிதரெல்லாம்— நேசமாவர்
வஞ்சியருங் கொஞ்சிவிளை யாடிவருவார் தந்தினந்

வசனம்.

மிளகு சாரணையின் செடியைக்கண்டு வெள்ளிக்கிழமையில் காப்புக் கட்டி பொங்கலிட்டு பலிகொடுத்து தீபதூபங்கொடுத்து அதின்வேரைக்

கொண்டுவந்து பொன்னினால் குளிசம் செய்து வேரையதனுள் அடக்கம் செய்து வலதுகையில் கட்டிக்கொள்ள சகலரும் வசியமாவார்கள் மாதர்களும் மயங்கித் தியங்குவார்கள்.

61 ஜெகவசிய மாகும் ஜாலம்.

நொண்டிச் சிந்து.

ஜெகமே வசியஜாலம்— இதனை
செப்புகிறேன் செவிகொடுத் தொப்புடன்கேளீர்
ஊமத்தைப் பொன்னாங்கண்ணி— நல்ல
உகந்த செம்முள்ளியுடன் சிவந்தகெஞ்சா
நேசித்த செங்குவளை— பொன்னாவாரை
நீடியப் புழுகோடு பாதரசமும்
கரியகோரோசனையும்— புல்லாமணக்கு
காணும் மூலியுடன் சாறுவாங்கு
அறியவே வகைவகைக்கு— விராகனிடை
அடைவாகத் தானெடுத்து யதன்பின்கேளாம்
சென்று யுருவிமூலம்— அதின்கூட
சேர்த்துக் கலந்துநீ சீராகவே
கன்னிய மாகவேதான்— ஆழமுள்ளக்
கல்வத்தி லிட்டுமைபோ லாட்டும்போது
கொம்புத்தேன்காப்பு— வெண்ணெய்
கூடவே சிற்றண்ட மூடைத்துவிட்டு
தெம்பாக வதையரைத்து— வழித்து
தேடியே நாயகியாள் தியானஞ்செய்து
சுத்தமுடன் சிமிழில்வைத்து— திலகமிட
சொல்லுகிறேன் வசிய மாவதைகேள்
சுத்தமுடன் புருஷரெல்லாம்— மயங்குவர்
சேரவே கேட்டதெல்லா மீவார்கள்
சேர்ந்தோர் பிரியர்கள்— உன்வாசல்
சிரப்புடனின்றுமே காப்பார்கள்
கூர்ந்தோர் மாதர்கண்டால்— வலிய
கூசாமல் நேசமது யாவரோ தந்தினந்

வசனம்.

ஊமத்தை பொன்னாங்கண்ணி செம்முள்ளி கெஞ்சா செங்குவளை பொன்னாவாரை புழுகு பாதரசம் கோரோசனை புல்லாமணக்கு சென்று யுருவிமூலம் இவைகளை வெவ்வேறாகச் சாரபிழிந்து வகைக்கு விராகனிடை யெடுத்து ஒன்றாகச்சேர்த்து ஆழமுள்ளக் கல்வத்திலிட்டு மைபோ

லறைக்கும்போது சிற்றண்ட முடைத்துவிட்டு நன்றாக அறைத்து வழித்து பகவதியை தியானித்துப் பூசித்து சிமிழில் அடக்கம் செய்து வைத்துக்கொண்டு திலர்தமிட புருஷர்கள் வசியமாவார்கள் கேட்டதைத் தருவார்கள் சிநேகிதமானவர்கள் பிரியமாட்டார்கள் நம்மைத்தேடிவந்து தலைவாசலில் காத்துக் கொண்டிருப்பார்கள் புத்தர்கள் வலியவந்து உறவாடுவார்கள்.

62 குருடனாகச்செய்யும் ஜாலம்.

நொண்டிச் சிந்து.

எதிரியைகுருடனாக்க—	ஜாலமொன்று
இயம்புவேன் கேட்டிடுவீர்	நயம்பெறவே
விதமுறும் நீரட்டையு—	மரசன்பாலும்
விளங்கவே கொண்டுவந்து	சிலையில்வைத்து
திரிபோல்தனை சுற்றி—	வஞ்சகமாய்
சத்துருவின் விளக்கினி	விதைப்போட்டு
அறியவே திரியெறிய—	எதிரிகண்ணும்
ஊனதிருஷ்டியது	மறைந்துவிடும்
நியமாக நாலெட்டு—	நாளும்
நேராக அந்திகாலம்	தானெறிக்க
வினையதா மிரண்டுகண்ணும்—	குருடாய்
வீணாகப் போகுமென்று	தானறிவாய் தந்தினர்

வசனம்.

நீரட்டையும் அரசன் பாலும் கொண்டுவந்துச் சிலையில் வைத்து திரிபோல் சுற்றி எதிரியினுடைய விளக்கிற்போட்டு எறிக்க எதிரினுடையக் கண்ணு திருஷ்டி குறையும் இவ்வாறு நாலுயெட்டு நாளும் அந்தியில் மறவாமல் யெறித்துக் கொண்டுவர இரண்டுகண்ணும் குருடாகப் போகும்.

66 பூமியிலிருந்து அக்கினிப் புறப்படும் ஜாலம்.

நொண்டிச் சிந்து.

கூடிய ஜாலமொன்று—	எவருமெச்சக்
கூறுவேன் செவிதந்து	சிருடன்கேளீர்
கெந்தகமும் அயப்பொடியும்—	ஒன்றாய்
கலந்து ஜலம்விட்டு	யிளவலாக
உருண்டை யாகசெய்து—	பூமியில்
ஓரடிப் பள்ளந்தோண்டித்	தான்புதைத்து
முன்னதாய் வைத்துவிட்டு—	சபையோரை
முகமியர நீபார்த்துப்	பக்குவமாக

இப்போது இந்தவிடத்தில்—	பூமிக்குள்ளே
இருந்து அக்கினிவரச்	செய்வேனென்று
மந்திரம் செய்பவன்போல்—	ஏதோரு
மருமமாய் சக்கரத்தைத்	தானெழுதி
நேராக சபையோர்க்கு—	நாலுமணி
நேரமட்டும் ஜாலமது	செய்துமேவந்து
நிரமுட நீயிருப்பாய்—	புதைத்தவஸ்து
திகைத்திடப் படீலென்றுத்	தான்வெடித்து
அக்கினி பிரவேசமாகும்—	கண்டவர்கள்
ஆச்சரியங் கொண்டுமதி	மயங்கிடுவார்
வெகுபேர் திகைத்திடுவார்—	ஆறுவிதை
வெய்யலில் புதைக்கவேணும்	கண்டுகொள்வாய் தந்தினர்

வசனம்.

கெந்தகத்தையும் அரப்பொடியையும் ஒன்றாய்க்கலந்து ஜலம்விட்டு கொஞ்சம் இளவலாகவே உருண்டை செய்து வெய்யல் உரைக்கும்படி யான இடத்தில் பூமியில் ஓரடிப்பள்ளம் தோண்டி புதைத்துவிட்டு சபையோரைப் பார்த்து இந்த யிடத்தில் பூமிக்குள்ளிருந்து அக்கினி வரும்படி செய்குறேன் பாருங்களென்று சொல்லி புதைத்த யிடத்தின்மேல் மனம்போல் ஒரு சக்கரமெழுதி மந்திரம் சபிப்பவன்போல் நாலுமணிநேரம் ஜாலம் செய்துக் கொண்டுவர அதற்குள் பூமி படீலென்றதாக வெடித்து அக்கினிப் பிரவேசமாகும் கண்டவர்கள் பிரமித்து ஆச்சரியங் கொள்வார்கள்.

64 புட்டியில் தீபங்காட்டும் ஜாலம்.

நொண்டிச் சிந்து.

நானிலமெங்கும் புகழ—	உன்னிதமாய்
நவிலுவேன் ஜாலமொன்று	நாட்டாரேகேள்
ஊனமில்லாத நல்ல—	நுல்லியமான
உற்றதோர் புட்டியினி	லுறைக்கக்கேளாய்
திமிரிபாஷாண மதனை—	குன்றியளவு
தேடியெடுத்து புட்டியில்	தான்போட்டு
ஆளிவாயி லெண்ணைதனை—	தான்காச்சி
ஆறினபின் மெதுவாக	புட்டியிலூத்தி
பத்திரமாய் வைத்துகொண்டு—	ஜாலமாடும்
பாரசபைதனிலே	மேஜைமேல்வைத்து

கார்க்குதுப் போட்டுமூட— தீபம்போல
காணவே யெங்கும் பிரகாசமுறும்
கார்க்கைத் திறந்துவிட்டால்— தீபவொளி
காணும விருண்டது மறைந்துவிடும் தந்தினக்

வசனம்.

துல்லியமான வெள்ளைபுட்டி என்றுகொண்டுவந்து அதில் குண்டு மணி அளவு இப்பிரி பாஷாணத்தை புட்டியில் போட்டு ஆளிவாயிலெண் ணெயை காச்சி நன்றாக ஆற்றி ஆறினபின் மெதுவாய் புட்டியில் ஊத்தி முன்னதாக வைத்துக்கொண்டு ஜாலயாடும் சபையில் இந்த புட்டியை மேஜைமேல் வைத்து கார்க்குப் போட்டுமூட குபீல் குபீலென்றுபிரகா சிக்கும் கார்க்கைத்திறந்து விட்டால் இருண்டுபோகும் ஆச்சரியப்படுவார் கள் ஆனல் இராத்திரியில் காட்ட வேண்டும்.

65 புட்டியில் புஷ்பங்காட்டும் ஜாலம்.

நொண்டிச் சிந்து.

புட்டியில் புஷ்பமதை— காட்ட
புகலுவேன் சூட்சமதை புத்திநாட்டு
திட்டமுடன் நீதேடி— வெள்ளை
திரமான புட்டியொன்று கொண்டுவந்து
அறைபுட்டி தண்ணீரூற்றி— அதில்
அறியவே யீயபஸ்பங் கொஞ்சம்போட்டு
நத்திநாகத்தைக் கேளாய்— கயற்றிலேனும்
நலங்கவே சம்பிதனி லேனுங்கட்டி
தண்ணியில் தாங்கும்படியாய்— தொங்கவிட்டு
தக்கபடி கார்க்கதனை தான்மூடி
நாலுநாள் வைத்திருந்து— எடுத்துபார்க்க
நவிலொணு விநோதமாய்த் தானிருக்கும் தந்தினக்

வசனம்.

ஒரு துல்லியமாகிய வெள்ளைபுட்டி கொண்டுவந்து அறை புட்டிஜலம் ஊத்தி ஈயபஸ்பம் கொஞ்சம்போட்டு நத்தி நாகத்தை கயற்றிலாவது சம்பியிலாவது கட்டி தண்ணியில் தாங்கும்படியாய் தொங்கவிட்டு கார்க்குமூடி நாலுநாள் வைத்திருந்து எடுத்துப்பார்க்க மகாவிநோதமாக யிருக்கும் பார்ப்போர்கள் ஆச்சரியப்படுவார்கள் ஈயபஸ்பமென்பது சுகர் வெட்டு,

66 மோகினி வசியமாகும் ஜாலம்.

நொண்டிச் சிந்து.

ஆதிபகவதியின்— பதமலர்
அன்பாக வேதுதித்து யனுதினமும்
ஓதுவேன் மோகினிஜாலம்— அதை
உண்மையாய்க் கேட்டிடுவீர் குலகோரே
சூரியக் காந்திபூவும்— கூட
சுத்தமுள்ள செங்கழனீர் பூவினோடு
கூறிய முல்லை பூவும்— அதனுடன்
கோழியாவரை பூவுங் குணமாக
வெள்ளைக் காளையின்பூவும்— விளம்ப
வேண்டிய செவ்வலரிப் பூவுங்கூட்டி
கள்ளமில்லாமலேகேள்— கூடக்
கரிப்பான் சாறும் தான்சேர்த்து
பூவையெல்லாகம் சார்பிழிந்து— புகழாக
பொருந்தவோ ரிடையாக ஒன்றுசேர்த்து
தேவையான கொம்புதேனு— மதில்விட்டு
தேடியே கல்வத்திலிட்டு அறைக்கும்போது
பெண்ணுடைய மதுவுங்கூட்டு— கூட
பெட்பான கொடுஞ்சினையுங் கூட்டியாட்டு
வண்ணமுறும் பழகுடனே— பச்சைபூரம்
வகைக்கு கால்வீராக னுஞ்சேர்த்து
நேராக யிவையெல்லாம்— மைபோல்
நேர்த்திய தாகவே தானரைத்து
சீராக சிமிழில்வைத்து— அதனை
சித்தமுடன் மயானத்தில் தான்புதைத்து
மோகினியை மனதினிலே— தியானித்து
மொழிகுவாய் ஸ்ரீம்ஹ்ரீம் கிலியுமென்று
ஏகமன தாகநீயும்— லட்சமுரு
எண்ணியே மூன்றுநாள் தான்கொடுத்து
மைதனை யெடுத்துவந்து— மோகினியை
மறவாமல் பூசைசெய்து திலர்தமிட
வையக மீதினிலே— நினைத்தவை
வசியம் தாகுமென வழுத்திடுநீ தந்தினக்

வசனம்.

சூரியக் காந்திப்பூ செங்கழநீர்பூ முல்லைப்பூ கோழி யவரைப்பூ வெள்ளை காவளையின்பூ செவ்வலரிப்பூ கரிப்பான்சார் இந்தப் பூவையெல்

லாம் சார்பிழிந்து ஓரிடையாக நிறுத்தெடுத்து ஒன்றாகச்சேர்த்து அதனு டன் கொம்புத்தேன் விட்டு கல்வத்திலிட்டு அரைக்கும்போது ஸ்திரீயினு டைய மதுவும் கொடுஞ்சினையும் கூட்டியாட்டு புழுகு பச்சைபூரம் இவை வகைக்கு கால்விராகனுகச் சேர்த்து மைபோலரைத்து சிமிளில் அடைத்து மயானத்திற் கொண்டுபோய் புதைத்து மோகினியை தியானித்து ஸ்ரீம் இரீம் கிலியும் என்று மூன்றுநாளும் தவறாமல் லட்சம் உருவு கொடுத்து மையை யெடுத்துவந்து மோகினியை தியானித்து திலர்தமிட்டுக்கொண்டு வெளியே போக சகலமும் வசியமாகும் நினைத்தகாரியம் தடையில்லாமல் முடியும் வசிய சினேகங்கூடும்.

67 ஜாலக்காள் பூசை ஜாலம்.

நொண்டிச் சிந்து.

சகலரு மறியவேதான்—	ஜாலக்காள்
சார்பானப் பூசைதனை	சாற்றுவேன்கேளீர்
புகலவே மஞ்சள்கிழங்கை—	அறைத்து
புண்மையுடன் பெண்போலே	ரூபஞ்செய்து
சுகமது யாகவேதான்—	கொடிமூலம்
சுத்தமுடன் மேலேசுத்தி	சித்தமுடனே
சத்தியின் பூசைசெய்து—	பின்பு
சாகினி டாகினி	ஜாலக்காள்
தேவினி ருருவென்று—	மந்திரம்
திட்டமுடன் லட்சமதுத்	தானேத
சித்தியதுத் தானுகி—	உன்னிடத்தில்
சிறப்புடன் வீணை பாடித்	தானிருப்பாள்
காணவே வையகத்தோர்—	உன்னை
கண்டுமேயஞ்சிபயந்	தோடப்பார்
பூணவே நீசெய்தஜாலம்—	இந்தப்
புவியெங்கும் கீர்த்தியதுத்	தானாகும்
சொன்னபடி ஜாலவித்தை	உன்னிடத்தில்
சுத்தமுடன் தானாகும்	வெற்றியுமுண்டாம் தந்தினை.

வசனம்.

மஞ்சள் கிழங்கு கொண்டுவந்து பெண்பாவைபோல் ரூபஞ்செய்து கொடிமூலம் மேலேசுற்றி சத்திபூசைசெய்து பின்பு சாகினி டாகினி ஜால க்காள் தேவிருருவென்று லட்சம் உருகொடுத்து தியானிக்க ஜாலக்காள் சித்தியாவாள் நீ செய்யும் ஜாலம் எங்கும் கீர்த்தியோங்கும் நீ சொன்ன படிக்கெல்லாம் உன்னிடமிருந்து ஆடுவாள்.

68 செத்துப்போன கிரிப்பிள்ளை தோலுக்கு உயிருண்டாக்கும் கைப்பிரட்டு ஜாலம்.

வசனம்.

ஈச்சன் கசங்கினால் இரண்டு கூடை ஒரே மாதிரியாகச் செய்து ஒரு கூடையில் உள்ளே கள்ள அறை வைத்து பார்ப்பவர்களுக்குத் தோற்றாம லிருக்கும்படி செய்து அந்த கள்ள அரைக்குள் உயிருள்ள கிரிப்பிள்ளை யைப் பிடித்து அடைத்து அந்த கூடையினுள்ளிருக்கும் அறைக்கு கயிற் றினால் சுருக்கு வைத்து திறக்கவும் மூடவும் சுளுவாக யிருக்கும்படி முன் னதாக தயார் செய்து வைத்துக்கொண்டு பிறகு ஜாலமாடும் சபையில் கிரிப்பிள்ளைத் தோலைக் கையிலெடுத்து அங்குள்ள அனைவர்களுக்குங் காட்டி இந்த தோலுக்கு உயிர் கொடுத்து நடக்கும்படி செய்கிறேன் பா ரென்று சொல்லி அந்த தோலைப் பூமியில் வைத்து சாதா கூடையை யெடுத்து சபையோர்களுக்கு நன்றாய்க் காட்டி அந்த தோலின்மேல் மூடி மேற்படி கிரிப்பிள்ளையை அடக்கம் செய்திருக்கும் கூடையை அருகே வைத்திருக்கவேண்டும். சதுரத்திற்கு சதுரம் ஆறு முழம் நீளமுள்ள துண்டை கிரிப்பிள்ளை தோலிருக்கும் கூடையின்மேல் மூடி ஜனங்க ளுக்கு தமாஷ் காட்டிக்கொண்டே தந்திரமாக துணியை அகல விரித்து முழங்கால் மேல்போட்டு கூடையைத் தந்திரமாகப் பிரட்டி கிரிப்பிள் ளையை பக்குவமாக அவிழ்த்துவிட்டு மற்றவைகளையெல்லாம் துணியில் மறைத்து அப்புறம் வைத்துவிட்டு மாத்திரைக்கோலால் அந்தக்கூடையை மூன்று தரம் ஏற்றியிறக்கி பின்பு சில் மலையாள பகவதி இந்தக் கிரிப்பிள் ளைத் தோலுக்கு உயிர் கொடு கொடு என்று மூன்று தரம் சொல்லிகூடை யைத் திறந்து காட்ட உயிருடன் கிரிப்பிள்ளை இருக்கும் கண்டவர்கள் ஆச்சரியப்படுவார்கள். ஆனால் மகா தந்திரமாய் செய்யவேண்டும். கிரிப் பிள்ளையை கூடைக்குள் அடக்கம் செய்துயிருப்பது கூடையைக் காட்டி னால் சாதா கூடைபோ லிருக்கவேணும். கூடையவ்வளவு பக்குவமாக முடையவேணும்.

69 செத்துபோன பாம்பு தோலுக்கு உயிருண்டாக்கும் கைப்பிரட்டு ஜாலம்.

ஈச்சன் கசங்கினால் இரண்டு பாம்பை அடக்கம் செய்யும் பெட்டி ஒரே மாதிரியாகச் செய்து ஒரு பெட்டியில் எந்த ஜாதிப் பாம்பையேனும் பிடித்து அதின் வாயிலுள்ள விஷப்பல்லைப் பிடுங்கிவிட்டு பெட்டியில் அடக்கஞ் செய்து ஜோல்னாவுக்குள் முன்னதாகத் தயார் செய்துவைத்துக் கொண்டு பிறகு ஜாலமாடும் சபையில் பாம்புத்தோலை கையிலெடுத்து அனைவர்களுக்குங் காட்டி இந்த பாம்பு தோலுக்கு உயிர் கொடுக்கிறேன் பாரென்று சொல்லி பாம்பு பெட்டியைத் திறந்து அனைவருக்குங் காட்டி

அதில் பாம்பு தோலைப் போட்டு மூடி அதின்மேல் கருப்பு துணியை மூடி ஜனங்களுக்கு வேறு தமாஷ்களை காட்டிக்கொண்டு தந்திரமாக ஜோல்ஞையை அருகில் இழுத்து ஒருவருக்கும் தெரியாமல் துணியை மூடிக்கொண்டு மகா ஜாக்கிரதையாக பாம்பு பெட்டியை மாற்றி ஜோல்ஞ துணி முதலானதையும் அப்புறம் நீக்கி பாம்பு பெட்டியை மாத்திரைக் கோலால் மூன்று தரம் எற்றியிறக்கி சல் மலையாள பகவதி பாம்புதோல் பாம்பாகவேணும் சல்தி சல்தியென்று சொல்லி மோடிக்காயை வாயில் வைத்து ஊதி பாம்பு பெட்டியை ஒன்பது சுற்று சுற்றிவந்து பின்பு பாம்புப் பெட்டியை திறந்து காட்ட பெட்டியிலிருந்து பாம்பு படம் விரித்தாடக் கண்டவர்கள் பிரமித்து ஆச்சரியப்படுவார்கள்.

70 அளந்த அரிசி உயிரியாகும் தந்திரஜாலம்.

கால் படி அரிசி பிடிக்கும்படியாகிய கிண்ணம் ஒன்று செய்து அது போலவே இன்னம் ஒன்று செய்யவேணும். இரண்டாவது கிண்ணத்தில் உள்ளே ஆழம் வைக்காமல் இரண்டு பிடி அரிசி மீதியாகும்படியாய் மரம் கனமாக வைத்து செய்துக்கொண்டு அந்த இரண்டுக்கும் வர்ணம் ஒரே மாதிரியாய்ப் பூசி இருக்கவேணும். அரிசியைக் கொண்டுவரச் சொல்லி ஆழமானக் கிண்ணத்தில் தலைவழிக்க அளந்துக்கொண்டு மற்றொரு கிண்ணத்தை மேலே மூடி சபையோர்க்குக் காட்டிக்கொண்டே தந்திரமாகக் கீழ்மேலாகக் கவிழ்த்துவிட்டு மெதுவாய் மேலிருக்கும் கிண்ணத்தை யெடுத்தால் அரிசி குபுகுபுவென்று பொங்கி வந்துவிடும். இது ஆச்சரியமாக யிருக்கும். இதுபோலவே உளுந்து பயறு கடலை பட்டாணி, நெல்லு முதலானதும் அளந்து காட்டலாம்.

71 தண்ணீர் பொங்கும் ஜாலம்.

குசவனிடம் குடுவை ஒன்றுசெய்து அந்தக் கழுத்தடியில் பொருந்தினாற்போல் புனல் மாதிரியாய் உள்ளுக்குப் பொருந்தவைத்து அந்த புனல் அடியில் ஒரு துவாரம் குடுவை தொப்பை மையத்தில் ஒரு துவாரமும் வைத்து செய்துக்கொண்டு மேல்புரம் சிகப்புவர்ணம் பூசி கண்ணைப் போல் துவாரம் செய்திருக்கிறோமாகையால் உடம்பெல்லாம் கண்களைப் போல் கருப்புவர்ணத்தில் எழுதியும் கருப்புவர்ணம் வைக்கவேணும் ஜாலமாகும் சபையில்வந்து துவாரத்தின்மேல் பெரிய விரலைவைத்து மூடி அழுத்திப் பிடித்துக்கொண்டு சொம்பில் ஜலம் கொண்டுவாச்சொல்லி இந்தக் குடுவையில் வார்த்து சல் மலையாள பகவதியென்று மேலேவைத்து இதோ குடுவையை கவிழ்த்து வைக்கிறேன் தண்ணீர் இருக்குமா போகுமா வென்று சொல்லி கவிழ்த்து வைக்கவும் வைத்தால் பாதிஜலம் கீழே போய்விடும் துவாரம் மையமாகையால் பாதி ஜலம் இருக்கும் மறுபடியும் துவாரத்தின்மேல் விரலைவைத்து மூடி எடுத்து அந்த துவாரத்

தில் வாயைவைத்து மூச்சுப்பிடித்து ஊதினால் புனலிலிருக்கும் தோண்டிவழியாய் தண்ணிமேலுக்குப் பொங்கும் மறுபடியும் தோண்டியை பிடித்துக்கொண்டே கவிழ்த்தால் ஜலமிருக்காது அப்படியே தூக்கி யூதினால் பொங்கி வழியும் இதுபோல் ஜெலமிருக்கின்றவரையிலும் செய்யலாம் பார்ப்பவர்கள் சந்தோஷப்படுவார்கள்.

72 புட்டியில் மாம்பழம் காட்டும் புதுமையான ஜாலம்.

ஒரு கருப்பு புட்டியை அடியில் புனல்போல் இருப்பதைக் கின் கருவியால் அருத்தெடுத்துவிட்டு நல்ல இனிப்பாகிய மாம்பழங்களை உள்ளே போட்டு தகரத்தினால் புனலைப்போல்செய்து பிருவாய் சொருகி ஒட்டுத் தெரியாமல் தாரைக் காச்சி பூசிவைத்துக்கொள்ளவும் புட்டியில் போட்ட பழம் எத்தனை எவ்வளவு பெரிதோ எந்த நிறமோ அதுபோல் கையிலெடுத்துக்கொண்டு சபையில்வந்து இது பஞ்சாபுதேசத்திலிருந்து குட்டிச்சாத்தான் கொண்டுவந்த மாம்பழம் பாருங்களென்று பில்லை பில்லையாயறுத்து அனைவருக்கும் கொடுக்கவும் முன்பழமிருக்கும் புட்டியில் பிடித்தவரையில் நல்ல ஜெலம்விட்டு இருக்கவேணும் அப்பா பரமானந்த சிஷ்யா தாகமெடுக்கிறது தண்ணீர் கொண்டுவாவென்று கேட்டு அந்த புட்டியை வாங்கி சாப்பிடுவதுபோல் உதட்டில் வைத்து தண்ணீர் கீழ்மேலும் சிந்தும்படியாய் செய்து மேஜைமேல் வைத்து சல் குட்டிச்சாத்தான் முன்னே அருத்துக்கொடுத்த மாம்பழத்தை இந்த புட்டியில்வரச் செய்வாயா ஏதோ உன் சாமார்த்தியங் காட்டு என்று சொல்லி மாத்திரைக்கோலை எடுத்து ஒன் டூ திரீ எக் தோ தீன் ஒகடி ரெண்டு மூடு ஒன்று இரண்டு மூணு என்று புட்டியைச் சுற்றி எண்ணி ஒரு ரூல் கட்டையை எடுத்து புட்டியைப் பிடித்துக்கொண்டு கோக்கை யடித்துவிட்டால் பழங்கள் குபீலென்று வெளியில் விழும். பார்ப்போர்களுக்கு மகா அதிசயமாகவேயிருக்கும் இம்மாதிரியாக எவ்விதப் பழவர்க்கங்களையும் புட்டியில் காட்டலாம். ஆனால் ஜாக்கிறதையாகச் செய்யவேண்டும்.

73 கோழி முட்டையின்மேல் விசித்திரமான யெழுத்துகள் யெழுதும் ஜாலம்.

ஒரு கோழி முட்டையைக் கொண்டுவந்து உள்ளிருக்கும் அம்பிலியைப்போக்கி தேன்மெழுக்கைக் காச்சி முட்டையின்மேல் முழுதும் பூசிவிட்டு சித்திரங்கள் எழுதலாம் எழுதிவிட்டு எழுத்துக் குள்ளிருக்கும் மெழுக்கை யெல்லாம் சுத்தமாக யெடுத்துவிட்டு வயினில் மூன்றறை மணி நேரமாகிலும் நாலுமணி நேரமாகிலும் ஊரவைத்து எடுத்து ஜலத்தில் கழுவி சபையோர்களுக்குக் காட்ட ஆச்சரியப் படுவார்கள். ஆனால் அல்பகாத்தியிலாவது ஊசியிலாவது எழுதவேண்டியது.

74 சபையில் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தால் விகாரமாகக்காட்டும் ஜாலம்.

ஒரு போகணியிலாவது இன்னம் எந்த பாண்டத்திலாவது (ஸ்பிறிட்டு) ஒயின் அரைபயிண்டு வாங்கிக் கொண்டுவந்து கொதிக்க வைத்து இறக்கிச் சபையில்வைத்து ஒருபிடி உப்பை அள்ளிப்போட்டால் புகையும் ஜொலிப்பும் யெழும்பும் அத்தருணத்தில் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தால் அகோரமாகத்தோணும் அதை அப்புறம் எடுத்து மறைத்து விட்டால் அந்த அகோர ரூபம்மாறி சாதாரண ரூபமாய்த் தோற்றும்.

75 தண்ணீரின்மேல் விளக்குளரியும் ஜாலம்.

ஒரு சிறிய கிளாசிலாவது இன்னம் வேறே எந்த பாண்டத்திலாவது ஜலம்விட்டு சபையோர்களுக்கு நன்றாய்க்காட்டி இந்த ஜலத்தில் தீபம் காட்டுகிறேன் பாருங்களென்று சொல்லி (பொடாசியம்) என்றதை கொஞ்சம்போட்டால் குப்பென்றதாக தீபம்போல் பிரகாசித்து எரியும் பொடாசியம் வாங்க வேணுமென்றால் ஷாப்பில் கிடைக்கும் மருந்தை வைத்திருக்கும்படியான பத்திரம் கிருஷ்ணாயில் எண்ணெயில் போட்டு வைத்திருக்க வேண்டும்.

76 புட்டியில் முட்டைவிடும் ஜாலம்.

கோழி முட்டையைக் கொண்டுவந்து சீமை காடியில் மூன்று நாள் ஊறவைத்து எடுக்க ஜவ்வைப்போல், மெதுவாய் நிகரும் அதை ஒரு துல்லியமான புட்டியில் முட்டையை லேஸ்பாய்ப்போல் யிழுத்து புட்டிக்குள் விட்டுவிட்டு கொஞ்சம் நல்லஜலம்விட எப்போதும்போல் முட்டையாகிவிடும். ஜாலமாகுஞ் சபையில் வைக்க பார்ப்போர்களெல்லாம் ஆச்சரியப்படுவார்கள்.

77 நல்லத்தண்ணீரை பன்னீராக்கும் ஜாலம்.

ஒரு தாம்பாளத்தை சபையோர்களுக்குக் காட்டி மேஜையின்மேல் வைத்து ஒருசொம்பில் நல்லஜலம் கொண்டு வரும்படியாகச்செய்து தாம்பாளத்தில் ஊற்றி அனைவருக்கும் காட்டி இதோயிந்த ஜலத்தை பன்னீராகச் செய்கிறேன் பாரென்று சொல்லி சற்றுநேரம் பொருத்து அந்த ஜலத்தை எடுத்து அனைவர்மீதும் தெளிக்க வெறும் ஜலமென்பார் உடனே சல்மலையாள பகவதி என்னை யிந்தசபையில் அவமானப் படுத்தாமல் இந்த தண்ணீரை பன்னீராக்க வேண்டும் என்றுசொல்லி ஒருவருக்குந் தெரியாமல் தந்திரமாக (எசன்ஸ் ஆப்ரோஸ்). என்கிற தைலத்தில் நாலு துளிவிட அத்தர்வாசனை கமகமவென்றதாகப் பரிமளிக்கும் அதையெடுத்து சபையோர்கள் மீது தெளிக்க ஆச்சரியப் படுவார்கள் ஆனால் அந்த (எசன்ஸ் ஆப்ரோஸ்) என்றவஸ்துவை சிறிய செப்புக்கொழிசெய்து அதில்

விட்டு வைத்திருந்து அந்த குழாவைகைவிரலில் பக்குவமாய் அடக்கிச் சலத்தில் விடவேண்டியது மருந்துஷாப்பில் கிடைக்கும் எசன்ஸ் ஆப்ரோஸ் என்பது தமிழில் ரோஜாவின் சத்து.

78 சம்பங்கிஅத்தர் வாசனைகாட்டும் ஜாலம்.

ஒரு துல்லியமான புட்டியை நன்றாய் ஜலம்விட்டுக்கழுவி சபையோர்களுக்குக் காண்பித்து மேஜையின்மேல் வைத்து ஒரு சொம்பில் நல்ல ஜலம் கொண்டு வரும்படி யாகச்சொல்லி கொஞ்சம் ஜலத்தை புட்டியில் ஊற்றி சபையோரைப்பார்த்து இந்த புட்டியிலிருக்கும் நல்லத்தண்ணீரை சம்பங்கி அத்தர் செய்கிறேன் பாரென்று தந்திரமாக சம்பங்கிசத்தை நாலுஐந்து துளிவிட சம்பங்கி அத்தர் வாசனை கமகமவென்று பரிமளிக்கும் ஆச்சரியப் படுவார்கள்.

79 மல்லிகைப்பூ வாசனை காட்டும் ஜாலம்.

ஒரு வெள்ளை அகலப் பீங்கானில் நல்ல ஜலத்தை விட்டு சபையோர்களுக்குக் காட்டி இந்த ஜலத்தை மல்லிகைப்பூ அத்தர் செய்கிறேன் பாருங்களென்று சொல்லி அடே குட்டிச்சாத்தான் சீக்கிரமாகச் சென்று அத்தர் ஷாப்பில் போய் நல்ல ஒஸ்தி மல்லிகைப்பூ அத்தர் கொண்டுவந்து இந்தத் தண்ணீரில் ஊற்றுவாயென்று மாத்திரைக்கோலால் மூன்று தரம் அந்த பீங்கானைச் சுற்றி ஜனங்களுக்குத் தமாஷ் காட்டிக் கொண்டே ஒருவருக்கும் தெரியாமல் மல்லிகைப்பூ அத்தரில் நாலு ஐந்துத் துளி விட குபீலென்று மல்லிகைப்பூ அத்தர் வாசனைகமகமவென்று பரிமளிக்கும். ஆச்சரியப்படுவார்கள்.

80 ஜலத்தை அலுவா செய்யும் வித்தை.

ஒரு புதிய பாண்டத்தைக் கொண்டுவந்து நன்றாய் சலம் விட்டுக் கழுவி சபையில் வைத்து ஒரு சொம்பில் நல்ல ஜலம் கொண்டுவரச்சொல்லி அந்த ஜலத்தை மேற்படி பாண்டத்திலூற்றி சபையோரைப்பார்த்து இந்த ஜலத்தை அலுவா செய்கிறேன் பாருங்களென்று சொல்லி மேலே துணியைப் போட்டு மூடி ஒருவருக்கும் தெரியாமல் தந்திரமாக ஜலத்தில் முன்னதாக கொஞ்சம் நாட்டு சர்க்கரை போட்டு பிறகு சிறு கட்டுக்கொடியிலையை ஒருவருக்கும் தெரியாமல் சார்பிழிந்து கொஞ்சம் சார் விட்டு பிறகு சல் மலையாள பகவதி தண்ணீரை அல்வா செய்யென்று சற்று நேரம் பொருத்து துணியைத் திறந்து பார்க்க பந்தனையாகிவிடும் அதை மேஜை கத்தியால் சிலேஸ் சிலேசாக அறுத்து சபையோர்களுக்குச் சாப்பிடும்படியாகக் கொடுக்க ஆச்சரியப்படுவார்கள். இதை சாதாரணமாய்ச் செய்து தின்றாலும் தாது விருத்தியாகும்.

81 நினைத்த மிருகம் முதலானவைகளை உண்டாக்கும் மகாமாய மை.

குப்பைமேனி	பொன்னாங்கண்ணி
அவிரி	காட்டாமணக்கு
செம்பருத்தி	கருநொச்சி
நத்தைச்சூரி	ஆடுதின்னாம் பாளை
தொட்டாசிணுங்கி	சிற்றறத்தை
தின்னுசிணுங்கி	பேரறத்தை
நாயுருவி	சின்னி
எட்டி	சிறுகாஞ்சொறி
பேய்கருப்பன்	பேய்பிட்டி
அலரி	கீழ்காநெல்லி
ஆகாயத்தாமரை	நீர்முள்ளி
கோபுரந்தாங்கி	திருவேலன்
ஊமத்தை	காளான்
கல்லுருவி	கொல்லைக்கு பல்லி

இவைகளின் இலையைக் கொண்டுவந்துத் தனித்தனியாகச் சார்பிழிந்து ஒவ்வொன்றிலும் உச்சிக்கரண்டி சார்விகிதம் அளவாக யெடுத்து ஆழமுள்ளக் கல்வத்தில்விட்டு அரைக்கும்போது கள்ளிக் காக்கையின் முட்டை வெள்ளை அம்பிலியையும் கோழி முட்டையின் வெள்ளை அம்பிலியையும் விட்டு அரைத்து குதம் கால்களஞ்சியும் வெண்ணெய் கால்களஞ்சியும் அதில்சேர்த்து கோரோசனை கால்களஞ்சியும் பச்சைபூரம் கால்களஞ்சியும் அத்துடன் கூட்டி மோதர்வீட்டு ஈரமான சீலையைக்கொளுத்தி அந்த சாம்பலுங் கொஞ்சம் சேர்த்து பச்சை ஒணானைக் கொண்டுவந்து குடல் எலும்பு முதலானவைகளையும் போக்கி அதையும் சேர்த்து யாவையும் மைபோலரைத்து வழித்து துல்லியமான சீலையில் நன்றாய்த் தடவி உலரவைத்து பிறகு தலைமண்டை வோட்டில் ஐங்கோலத்தயிலம் வார்த்து மேற்படித் திரியை அதில்போட்டு எரித்து தைலம் வாங்கி மையினில் அடக்கம்செய்து வைத்துக்கொண்டு அதை கொண்டுபோய் மயானத்தில் புதைத்து காலை மாலை இருவேளையும் மயானருத்திரியை தியானிக்கும் மந்திரம் ஓம் ஸ்ரீம் இரீம் கிலீயும் அக்குருஷணி ஓ மயானருத்திரி என்வசமாக ஓடிவருவாயென்று வேளைக்கு லட்சம்உருசெபிக்கவேண்டும் கையில் சாம்பிராணிவத்தி கொளுத்தி வைத்துக் கொள்ளவேண்டும் இப்படி இருபத்தோருநாள் ஜெபித்து இருபத்திரெண்டாம் நாள் இரவில் தோண்டி மைசிமிழை எடுத்து வேகுகின்ற சபத்தின் கால்மாட்டில் மைசிமிழைவைத்து தூபதீபங்கொடுத்து தேங்காயுடைத்து ஒரு கோழிகுஞ்சு காவுகொடுத்து அந்த சபத்தை ஒன்பது சுத்துவந்து பிறகு மைசிமிழைக்

கொண்டுவந்து பத்திரப் படுத்திவைத்துக் கொள்ளவேண்டும். செபம் செய்யும்போது நிர்வாணமாயிருந்து செய்யவேண்டும். இது ஆரம்பம் கிரகணத்தில் செய்தால் ரொம்ப சீக்கிரம் சித்தியாகும் மயானருத்திரி தனக்கு சித்தியாயிருந்தால் செபம்முடிந்த கடைசிதினம் தன்னுடைய சொரூபத்துடன் சொற்பனத்தில்வந்து பிரசன்னமாகி மறைந்துபோவாள். அப்போதுதான் சித்தியாச்சு தென்றறிந்து மையையெடுத்து மனம்போல் ஜாலமாடலாம் அப்படிக் கில்லாவிட்டால் இன்னொருமுறை முன்போல் பூசைசெய்யவேண்டும் ஆயினும் இதுகலியுகக் காலமானதால் அனைவருக்கும் சித்தியாகுமென்றும் எண்ணப்படாது அந்த வழிக்கு வந்தவர்களுக்கு தடையன்றி சித்திரானே யாவான் அதை யோசிக்கவேண்டும்.

82 பச்சை பாம்பு உண்டாக்கும் ஜாலம்.

வாகு வைக்கோலைக் கையிலெடுத்து சபையோர்களுக்குக் காட்டி இந்த வைக்கோலை பச்சைப்பாம்பாகச் செய்கிறேன் பாருங்க ளென்று சொல்லி மயானருத்திரியை மனதில் தியானித்து ஜாலக்காளைப் பூசித்து சல்மலையாளபகவதி பச்சைப்பாம்பாகவேணுமென்று மகாமாய மையைத் தடவி பூமியில்போட பச்சைப்பாம்பாகும் பார்ப்பவர்கள் ஆச்சரியப்படுவார்கள். ஆனால் அதுரொம்ப நாழியிராது ஒரு நாழிகைக்குள் மறைந்துபோகும் அதை உஷாராக நாம் அறிந்து மறைவதற்குள் சல் ஓடிப்போ பாம்பே யென்று துணியை மேலேபோட்டு மூடவேண்டும் மூடி உடனே திறந்து பார்க்க வாகு வைக்கோலாக யிருக்கும்.

83 கோழியுண்டாக்கும் ஜாலம்.

கோழியிறகு ஒன்றை கையிலெடுத்து சபையோர்களுக்குக் காட்டி பாருங்கள் சபையோர்களே இந்த கோழியிறகை கோழி யாக்குகிறேன் பாரென்று சொல்லி மயானருத்திரி மந்திரத்தை தியானித்து ஜாலக்காளை பூசித்து மகாமாயமையில் கொஞ்சம் அந்தயிறகில் தடவி கீழேபோட அழகுடைய சாவல்போல் யாவருக்கும் தோற்றும் ஆச்சரியப் படுவார்கள் உடனே கோழியின்மேல் ஒரு துணியைப்போட்டு மூடி கோழியே மாயமாகப் போவென்று சொல்லி சற்றுநேரம் பொருத்துத் திறந்துபார்க்க கோழியிறகாக யிருக்கும்.

84 அஸ்வ முண்டாக்கும் ஜாலம்.

ஒருசிகப்பு தோம்புத்துணியை யெடுத்து சபையோர்களுக்குக்காட்டி இந்த சீலையை அஸ்வமாக்குகிறேன் பாருங்களென்று மகாமாய மையைக் கையிலெடுத்து மயானருத்திரி மந்திரத்தை ஆயிரத்தெட்டுருகொடுத்து ஜாலக்காளை தியானித்து மையை துணியில்தடவி கீழேபோட பார்ப்பவர்களுக்கு அஸ்வம்போல்தோற்றும் பார்ப்பவர்கள் ஆச்சரியப்படுவார்கள் உடனே மேற்சொல்லியவாறு செய்யவும்.

85 ஆடு உண்டாக்கும் ஜாலம்.

ஒரு கருப்பு சீலையைக்கையிலெடுத்து சபையோர்களுக்கு காண்பித்து இந்த கருப்புசீலையை ஆட்டுக்கடாவாகச் செய்கிறேன் பாரென்று சொல்லி அந்த சீலையை சுற்றி முன்னதாகவைத்து மாத்திரைக்கோலைக் கையிலெடுத்து அந்த சீலையை சுற்றிக் கோடுகிழித்து மாத்திரைக்கோலால் மூன்று தரம் சுற்றி யெற்றியிறக்கி மயானருத்திரியை மனதில்தியானித்து ஜாலக்காரனைபூசித்து சல் மலையாளபகவதி இந்த கருப்புச்சீலை ஆட்டுக்கடாவாக வேணுமென்று மகாமாய மையில் ஒருதுளி அந்த சீலையின்மேல் தெளிக்க ஆட்டுக் கடாவைப்போல் தோற்றப்படும் சபையோர்கள் பிரமிப்பார்கள். உடனே மேற்சொல்லியவாறு செய்து மறைத்து விடவும்.

86 எருமைக்கிடா உண்டாக்கும் ஜாலம்.

கருப்புக் கம்பிளியை கையிலெடுத்து சபையோர்களுக்குக் காட்டி இந்தக் கம்பிளியை எருமைக்கிடாவாகச் செய்கிறேன் பாருங்களென்று அதைச்சுருட்டி முன்னதாக வைத்து மயானருத்திரியைத் தியானித்து ஜாலக்காரனை பூசித்து சல் மலையாளபகவதி இந்தக்கம்பிளியை எருமைக் கிடாவாகச் செய்வாய் சீக்கிரம் சீக்கிரம் என்று தந்திரமாக மகாமாய மையை கொஞ்சம் கம்பிளியின்மீது தெளிக்க உடனே எருமைக் கிடாவைப் போல் தோற்றப்படும் காண்போர்கள் கண்கட்டுவித்தை யென்றுக் கலங்குவார்கள். உடனே ஒரு துணியை எருமைக்[illegible]து மூடி சற்றுநேரம் பொறுத்துப்பார்க்க கம்பிளியா யிருக்கும்.

87 யானை உண்டாக்கும் ஜாலம்.

ஒரு சலவைமல் [illegible]டையெடுத்து சபையோர்களுக்குக் காட்டி இந்த மல்குட்டையை யானையாகச் செய்கிறேன் பாரென்று அதை சுருட்டி முன்னதாகவைத்து கற்பூரங்கொளுத்தி விநாயகரை பூசைசெய்[illegible] பிறகு மயானருத்திரி மந்திரத்தை ஆயிரத்தெட்டுதரம் ஓதி ஜால[illegible] மந்திரத்தை நூத்தியெட்டுதரம் ஓதி சல்மலையாளபகவதி இந்த மல்துண்டை யானையாக கொடிக்குள் செய்யவேணுமென்று சொல்லி தந்திரமாக மகாமாயமையில் கொஞ்சமெடுத்து குட்டையில்தடவ பார்ப்பவர்களுக்கு ஆனைவுருவுபோல்தோற்றும் பார்த்தவர்கள் பதரிப்பயந்து பிரமிப்பார்கள்.

88 கரடி உண்டாக்கும் ஜாலம்.

கருப்பு ஆட்டு வரித்தோலை சபையில் கொண்டுவந்து வைத்து இந்த தோலை கரடியாகச் செய்கிறேன் பாரென்றுச்சொல்லி மயானருத்திரியை தியானித்து ஜாலக்காரனைப் பூசித்து மகாமாய மையை எடுத்துத் தோலில் தடவ கரடி[illegible]யாகத் தோற்றும் அனைவரும் பார்த்தவுடன் உடனே மேற் சொல்லியவாறு செய்யவும்.

89 புலி உண்டாக்கும் ஜாலம்.

புலித்தோலைக் கொண்டுவந்து சபையோர்களுக்குக் காட்டி இந்தப் புலித்தோலைப் புலியாக்குகிறேன் பாரென்றுசொல்லி மயான ருத்திரியை தியானித்து ஜாலக்காரனை பூசித்து மகாமாய மையில் கொஞ்சமெடுத்து புலித்தோலின்மேல் பூச புலியுருவாகத் தோற்றும் கண்டவர்கள் பயந்து ஓடித் தலைப்படுவர்கள் இது யென்ன மந்திரஜாலமோவென்று மயங்குவார்கள். உடனே துணியால்மூடி மேற்சொல்லியவாறு செய்யவேண்டும்.

90 பொரு வுண்டாக்கும் ஜாலம்.

பொருவின் இறகு பத்துபதினைந்து எடுத்து ஒன்றாய்சேர்த்துக்கட்டி சபையோர்களுக்குக் காண்பித்து இந்த புராவின் இரகை பொருவாக்குகிறேன் பாரென்று சொல்லி அந்தயிரகை முன்னேவைத்து ஒரு கூடையையெடுத்து அனைவருக்குங் காட்டி அதை மூடி அதின்மேல் ஒரு துணி மூடி மயானருத்திரியை தியானித்து ஜாலக்காரனைப் பூசித்து சல்மலையாள பகவதி சக்தி பொருவாகச்செய் யென்று மூன்றுதரம்சொல்லி தந்திரமாக மகாமாயமையை கொஞ்சம் தடவி கூடையைத் திறந்துக்காட்ட பொரு தோற்றும் பார்ப்பவர்கள் பலேஜோக்கான வித்தையென்று ஆச்சரியப் படுவார்கள்.

91 மரப்பொம்மை சண்டைசெய்யும் ஜாலம்.

செம்மரம் அல்லது இலவம் ஏதாவது மாத்திலாவது ஒரு ஆண்பொம்மையும் ஒரு பெண்பொம்மையும் செய்து அதற்கு நகை ஆடை ஆபரணம் முதலானதும் தரித்து ஜா[illegible] சபையில் மேஜையின்மேல் வைத்து மயானருத்திரியை தியானம்செய்து ஜாலக்காரனை பூசித்து சபையோர்களைப் பார்த்து இந்தபொம்மை இரண்டையும் சண்டைவிடுகிறேன் பாருங்களென்று சொல்லி மகாமாயமையை எடுத்து இரண்டு பொம்மைக்கும் கொஞ்சம் கொஞ்சம்தடவ இரண்டும் ஒன்றோடொன்றுதாக்கும் விழுந்து விழுந்து யெழுந்திருக்கும் பார்ப்பவர்கள் மதிமயங்குவார்கள்.

92 செம்பை பொன்னாக்கும் ஜாலம்.

ஒரு செம்புத்துண்டை யெடுத்து சபையோர்களுக்குக் காண்பித்து இதை தங்கமாக்குகிறேன் பாருங்களென்று சொல்லி மயான ருத்திரியை தியானித்து அம்மணி இந்த செம்பை தங்கமாக்கவேணுமென்று ஜாலக்காரனைப்பூசித்து மகாமாயமையை அதின்மேல்தடவ பத்தரைமாத்துத் தங்கம் போல் இருக்கும் சபையோர்கள் கையில் கொடுத்துப் பார்க்கசொல்லி உடனேவாங்கி சல் எப்போதும்போல் செம்பாகிவிடு என்று பூதியில் போட செம்பாகிவிடும் பார்ப்பவர்கள் இது கண்கட்டு வித்தை யென்பார்கள்.

93 பலகரை குதிக்கும் ஜாலம்.

பத்து பதினைந்துப் பலகரையை கையிலெடுத்து மயானருத்திரியை தியானித்து ஜாலக்காளைப்பூசித்து மகாமாயமையை பலகரையில் தடவிப் போட பூமியில் நிற்காமல் குதிக்கும் பார்ப்பவர்கள் பிரமிப்பார்கள் ஆனால் ஒருவிகைம் இரண்டு விமிஷந்தான் குதிக்கும். அதன் பின்பு பலகரை பூமியில்தான் கிடக்கும்.

94 ஈயத்தை சொக்கவெள்ளி யாக்கும் ஜாலம்.

வெள்ளீயம் அல்லது காரீயம் கொண்டுவந்து ஒரு கட்டியாகச் சபையோர்களுக் காண்பித்து இந்த ஈயத்தைச் சொக்கவெள்ளியாகச் செய்கிறேன் பாரென்று சொல்லி மயானருத்திரியை தியானித்து அம்மணி இந்த யீயம் சொக்க வெள்ளியாக வேணுமென்று ஜாலக்காளைப் பூசித்து மகாமாய மையை எடுத்து தந்திரமாகக் கொஞ்சம் தடவ பால்போல் சொக்கவெள்ளியாகும் பார்ப்பவர்கள் பிரமிப்பார்கள்.

95 மண்குடம் போன்குடம் ஆகும் ஜாலம்.

ஒரு மண்குடத்தை ஜாலமாடும் சபையில் கொண்டுவந்து அனைவருக்கும்காட்டி இந்த மண்குடத்தை பொன்குட மாக்குகிறேன் பாருங்களென்று சொல்லி மயானருத்திரியை தியானித்து அம்மணி இந்த குடத்தை பொன்னுக்க வேண்டுமென்று ஜாலக்காளைப் பூசித்து மகாமாய மையைத்தடவ மஞ்சள் பிசைந்தாற்போல் பொற்குடம்போல் தோற்றப்படும் ஆச்சரியப் படுவார்கள்.

96 ஆற்றுமணலை அரிசியாக்கும் ஜாலம்.

ஒரு முறத்தில் ஆற்றுமணலைக் கொண்டுவந்து ஜாலமாடும் சபையில் வைத்து சபையோரைப் பார்த்து இந்த ஆற்றுமணலை அரிசியாகச் செய்கிறேன் பாரென்றுசொல்லி மயானருத்திரியை தியானித்து அம்மணி இந்த மணல் அரிசியாகவேணுமென்று ஜாலக்காளை பூசித்து மகா மாயமையை கொஞ்சமெடுத்து தந்திரமாக மணலின்பேரில் தெளிக்க அரிசியைப்போல் தோற்றும் யாவரும் ஆச்சரியப்படுவார்கள்.

97 எலுமிச்சம்பழம் நடக்கும் ஜாலம்.

பத்து பதினைந்து எலுமிச்சம்பழத்தை சபையில் வைத்து இந்த பழங்களை நடக்கும்படி செய்கிறேன் பாரென்று மயானருத்திரியை தியானித்து அம்மணி இந்தப் பழங்களை நடக்கச் செய்வாயென்று ஜாலக்காளைப் பூசித்து மகாமாய மையை யெடுத்து தந்திரமாக ஒவ்வொரு பழத்திலும் படும்படியாகத் தடவிக் கீழேபோட அப்பழங்கள் பூமியில் நிற்காமல் மூலைக்கு மூலை கடகடவென்று உருளும் பார்ப்பவர்கள் பிரமிப்பார்கள்.

ஆனால் இந்த மையினாலும் மயான ருத்திரி ஏவலினாலும், ஜாலக்காரன் இஷ்டப்படியாகவும் இப்படி அனேக வித்தைகள் ஆடலாம். ஆடினாலும் ஒவ்வொரு வித்தையாடும்போதும் மயான ருத்திரியை தியானிக்கையில் நாம் எவ்விதம் வேடிக்கைக்காட்ட உத்தேசித்தோமோ அவ்விதம்செய்யவேண்டுமென்று அப்போதைக்கப்போ அம்மனை நடத்தவேண்டுமென்று பிரார்த்தித்து பின்பு மையை தடவ மனம்போல் சித்தியாகும் அதாவது அம்மனை பாம்பாகவேணும் கோழியாகவேணும் குதிரையாகவேணும் புலியாகவேணும் என்று நாம் யெவ்விதம்சொல்லி மையை தடவுகின்றோமோ அவ்விதமே யாகும். அந்தந்த ரூபம்போல் தோற்றமாகி உடனே மறைந்துவிடுமேதவிர ரொம்பநேரம் நிற்கமாட்டாது.

98 பானையின்மீது தேங்காயை வைத்து தடியாலடித்து பானை உடையாமல் தேங்காயை உடைக்கும் ஜாலம்.

கீழ்காய் நெல்லி செடியைத் தேடிக்கண்டுபிடித்து ஆதிவாரம் காலையில் சூரியன் உதையமாகு முன்னமே அச்செடியருகிற்சென்று அச்செடிக்கு மஞ்சள் நூல் காப்புக்கட்டி தூபதீபம் காட்டி ஒரு ஊறுனை பலிகொடுத்துவிட்டு வீட்டிற்கு வந்துவிடவேண்டும். அன்று சாயங்காலம் சென்று அந்த செடியைப் பிடுங்கிவந்து அந்தவேரை நாலு ஐந்தாக சேர்த்து மூறுக்கி சிம்மாடுபோல் சுற்றி கொண்டு தோண்டியைக் கவிழ்த்து இந்த வேர் சிம்மாட்டை அதின்மேல் வைத்து அதற்குமேல் தேங்காயை வைத்து தந்திரமாக அடிக்க தேங்காய் உடைந்துவிடும் தோண்டி உடையாது. பார்த்தவர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

99 குளத்தில் முழுகி கடுதாசி யெழுதிவரும் ஜாலம்.

முன்னதாக ஒரு காயிதத்தில் எலுமிச்சம்பழச் சாற்றில் படிகாரத்தைப் பொடி செய்துப்போட்டு நன்றாய்க் குழைத்து மேற்படி காயிதத்தில் தன்னுடைய மனம்போல் யெழுதிவிட்டு வெய்யலில் காயவைத்து நன்றாய் உலர்ந்தபின் எடுத்துப்பார்த்தால் எழுத்து ஒன்றும் தெரியாமல் இருக்கும் அந்த காயிதத்தை சபையோர்களுக்குக் காட்டி இந்த காயிதத்தை குளத்தில் மூழுகி குளத்திற்குள் இருந்து கடிதம் எழுதிவருகிறேன் பாரென்று சொல்லி ஆணியையகளைந்து குளக்கரையின்மேல் வைத்துவிட்டு காயிதத்தை கையில் பிடித்துக்கொண்டு குளத்தில் மூழ்கி கால் மணிநேரம் மூச்சுப்பிடித்து தண்ணீரைவிட்டு மேலே கிளம்பி கரையேறி வந்து காயிதத்தைப் பார்க்க குப்பென்று எழுத்துகள் தெரியும். அதை வாசித்துக்காட்ட சபையோர்கள் ஆச்சரியப்படுவார்கள் ஆனால் காயிதத்தில் முன்னாடியாக எழுதிவைத்துக் கொண்டிருக்கவேண்டும்.

100 ஒருவர் கழுத்தில் கத்தி குத்தும் ஜாலம்.

ஒரு கூறுள்ளக் கத்தியை மையமாய் இரண்டு துண்டு செய்து பின் கழுத்தில் பதியும்படியாக தகடு செய்து அந்தக் கத்தியில் பத்தவைத்து ஜாலமாடும் இடங்களில் முன்னுதாய் சபையோருக்கு ஒரு கத்தியைக் காண்பித்து குத்துவேன் என்று ஒரு சிறுவனைப் படுக்கவைத்து துணி மேலே போட்டு மூடி தந்திரமாக அந்த கத்தியை மறைத்து விக்கத்தியை மாட்டிவிடவேண்டும். ஆட்டு ரத்தத்தை துணியில் தோய்த்து உடன் வைத்திருந்து ஜாலமாடும் இடத்தில் அந்த துணியைக் கொண்டுவந்து ஜாலத்தில் நனைத்துக் கழுத்தில் பிழிய ரத்தமாகவே யிருக்கும். பார்ப்பவர்கள் அலறி ஆச்சரியப்படுவார்கள்.

101 ஒரு ஸ்திரீயை சிக்கத்திற்கட்டி பெட்டியிற்போடும் பீதாம்பர ஜாலம்.

மயிரினால் திரித்தக் கயிறினாலாவது அல்லது சாதாரணமான கயற்றினாலாவது வலைபோல் சிக்கமொன்றுப் பின்னி முடியில் சுருக்கு வைத்து அந்த சுருக்கில் கயிர்கோர்த்து சுருக்கி முடிபோட்டு வைத்திருக்கவேண்டும். அந்த சிக்க வலையை அனைவருக்குங் காட்டி இந்த சிக்கத்தில் இந்த ஸ்திரீயைக்கட்டி இந்த மூங்கிற் பெட்டியில் போடுகிறேன் பாரென்று சொல்லி அந்த சிக்கத்தைமேல் புறமாக விரித்துக் கீழேபோட்டு அந்த ஸ்திரீயை அழைத்து அந்த சிக்கத்திற் குந்தவைத்து அவள் கையின் பெரிய விரல் இரண்டையும் ஒன்றாகச்சேர்த்து கழுத்துடன் பிடித்துக் கட்டி சிக்க மத்தியில் குந்தவைத்து நன்றாய் தலைமுதல் தேகமெல்லாம் வளைத்து சிக்கத்தை இறுக்கிக்கட்டி பெட்டி மூடிகளாக பத்து பதினைந்துப் போட்டு மூனு அடி நிகளமும் இரண்டடி உயரமுமாக வாட்ட சாட்டமாய் செய்து வாய் சின்னதாகவைத்திருக்கும் மூங்கிற் பெட்டியில் சிக்கத்தில் கட்டியிருக்கும் ஸ்திரீயை மெதுவாகத் தூக்கி ஒன்னேகாலடி அகலமுள்ள பெட்டியின் வாயில் மெள்ள மெள்ள உள்ளே போகும்படிச் செய்து பெட்டியின்மேல் மூடியை ஒருவரைப் பிடிக்கச்செய்து துணியை மேலேபோட்டுமூடி மறைவு செய்துவிடவும். பெட்டியில் இருப்பவளுக்கு சொல்லி வைக்கவேண்டியது என்னவெனில் விரலை மடக்கி யிழுத்துக் கொண்டு மேற்படி சிக்கத்தின் அடி சுருக்கை முடியை அவிழ்த்து யிழுத்தால் சிக்கம் அலாக்காய்விடும். அதைக் கயட்டி முறுபடியும் சுருக்கைக் கோர்த்து சிக்கத்தை வெளியில் போட்டுவிடு யென்று சொல்லிவைக்க வேண்டும். உள்ளிருப்பவள் அப்படியே அவிழ்த்துப்போட்டவுடன் அந்த சிக்கத்தை எடுத்து சபையோர்களுக்குக்காட்ட கட்டினப் பிரகாரம் சிக்கமிருக்க, ஆளைக்காணோமென்று ஆச்சரியப்படுவார்கள். உள்ளிருப்பவள் பெட்டியில் ஒரு பக்கமாய் அசையாமல் பதுங்கிக்கொண்டிருக்கவேண்டும் கத்தியை வெளியிலிருப்பவன் எடுத்துக் குத்தும்போது பெட்டியில் கை

கையேடுப் பிழைவேண்டும் குருக்கில் குத்தும்போது சப்பாத்துமுன் பழத்தை கத்தியில் உள்ளிருக்கப்படியாகப் பிசரத்தம் கத்திவழியாக சரசரவென்று வெளியே வரும். பார்ப்பவர்கள் ஐயையோ பெட்டிக்குள்ளிருந்தவளை குத்திவிட்டானென்று ஐய்யோ முறையோ வென்றுக் கூவுவார்கள் அப்போது பெட்டியின்மேல் மூடிய மூடி அதின்மேல் துணியைமூடி மூன்றுகுறள் கூப்பிட்டு மந்திரம் செய்பவன்போல் பெட்டியை மூன்சுற்று வந்து ஒரு சிரியக்கல்லை யெடுத்து பெட்டியின்மேல் போட அந்த சைகை கண்டு பெட்டிக்குள் ளிருப்பவள் ஒரு ஓசையாக சப்தம் கொடுக்க உடனே துணியையும் பெட்டியின்மேல் மூடியையும் யெடுத்துவிட பெட்டிக்குள்ளிருப்பவள் வெளியேவர கண்டவர்கள் யாவரும் பிர்மித்து ஆச்சரியப்படுவார்கள். ஆண் பெண் யாரா யிருந்தாலும் கட்டிப் போடலாம் ஸ்திரீயே வேண்டுமென்று அவசியமில்லை. ஆனால் சிக்கம் பின்னுவதும் பெட்டி செய்வதும் வேலைத்திறமாக யிருக்கவேணும்.

102 குடத்தின்மேல் தோண்டியை வைத்து அந்திரமாக தூக்கும் ஜாலம்.

ஒரு மண்குடத்தில் நிறைய தண்ணீர் ரொப்பி ஒரு சிரிய தோண்டியிலும் தண்ணீர் நிறைய ரொப்பி சிறிய் தோண்டியைக் குடத்தின்மேல் வைத்து அதின் வாய்ப்புறம் சுற்றிலும் பசுஞ்சாணத்தை அடர்த்தியாகப் பூசி காத்து புகாதபடிக்கு செய்து மேலிருக்கும் சிறிய குடத்தின் கழுத்தில் உக்கம்போல் நல்ல ஓரம்புள்ள கயற்றினால் போட்டு மேலே தூக்கிக்கட்டிவிட குடம் அந்தரமாக நிற்கும் பார்ப்பவர்கள் ஆச்சரியப் படுவார்கள்.

103 உரலை அந்தரமாகத் தொங்கவிடும் ஜாலம்.

ஒரு உரலைக் கொண்டுவந்து அதின் நிறைய ஜலம்விட்டு அந்த உரலின் வாய்க்குப் பதிந்தாற் போலிருக்கும் ஒரு சொம்பில் நிறைய ஜலம் விட்டு அந்த உரலின்மேல் வைத்து உரலின்வாய் புறத்திற்கும் சொம்பிற்கும் பிடிப்பாகச் சுற்றிலும் களிமண்பூசி அதின்மேல் சீலைசுற்றி மறுபடியு மதின்மேல் களிமண்ணை பூசி காற்றுபுக சந்தில்லாமல் பசுஞ்சாணம் பூசி உரலை தூக்கினால் தாங்கும்படியானக் கயற்றையெடுத்து சொம்பின் வயிற்றில் உக்கம்போல் போட்டு தூக்கி உயரத்தில் கட்டிவிட அந்திரமாக நிற்கும் ஆச்சரியப் படுவார்கள்.

104 குடத்தில் தண்ணீரை ரொப்பிப் பட்டாவைக் குத்தி தூக்கும் ஜாலம்.

ஒரு மண்குடத்தில் ஜலத்தை ரொப்பி மேல்மூடும் ஜானகியில் கத்திப்பூரும்படியான துவாரம்செய்து குடத்தின்மேலே மூடி பட்டாகத்தியின் முனையில் சிறிய துவாரம்செய்து ஜானகித் துவாரத்திற்குச் சரியாய்

எலுமிச்சம்பழம் வைத்து கத்தியில் அறைத்து கத்தியின் கம்பியைச் சேர்த்து குடத்தினால் தட்டில் தாங்கும்படியாய் சொம்பைக் கட்டிவிட்டு மேவே தூக்கிக் கட்டிவிடவேண்டும் கத்தி அடியில் துவரப்பாவது வியமாவது வைத்திருக்க வேண்டும்.

105 ஒருவன் தலையின்மீது அடுப்புவைத்து எண்ணெய்க் காய்ச்சும் ஜாலம்.

வெத்திலை ஜூன்லத்தை சீமை சுண்ணாம்பு இந்தமூனும் சேர்த்து பாக்கு உரல்போல் செய்து மேல்பக்கம் மூன்றுவாய் வைக்கவும் ஆனால் இந்த அடுப்பை முன்னதாகச் செய்து வைத்துக்கொண்டு பின்பு ஜாலமாடும் சபையில் ஒருவனைக் குந்தவைத்து அவன் தலையின்மீது யிந்த அடுப்பைவைத்துக் காத்தப்போகாமல் துணியினால் தலைமுதல் சரீரமெல்லாம் மூடிவிட்டு ஒரு கம்பியினால் வளையம்செய்து துணிசுற்றி கொளுத்தி அடுப்பின் உள்ளேபோட்டு சுத்தி சத்தான் கொளுத்திவைத்து தகத்தினால் தட்டுசெய்து அதில் எண்ணெய் ஊத்திவைத்து காய்ந்தபிறகு கொஞ்சம் ஜலம் தெளித்தால் குபீலென்றதாக வெடிக்கும் கண்டவர்கள் ஆச்சரியப் படுவார்கள் ஆனால் அடுப்பு உயரம் ...த்து வைக்கவேண்டும் வளையம்செய்து அடுப்பில் போட்டால் இரண்டு அங்குலம் உள்ளே இறங்கவேண்டியது கொளுத்தும்போது சுத்தாமுசோற்றை பில்லையாக அருத்து அடுப்பின் கிழ்ப்புறம் அடியில் வைத்தாலும் வைக்கலாம்.

106 பூனையை எலி வெல்லும் ஜாலம்.

ஒரு எலியைப் பிடித்துவந்து அதின் இருகுமாதியந்தமும் எருக்கன் பாலும் குப்பமேனிச்சாறும் பூசிவிட்டு பூனையெதிரில் விட்டுவிட்டால் பூனைவந்து எலியை முகர்ந்தும் பார்த்தவுடன் அதைக்கடிக்காமல் தலை வெறி கொண்டதுபோல் சுத்திக்கொண்டே யிருக்கும் கண்டவர்கள் என்னமோ வசியம்செய்துவைத்தாரென்று ஆச்சரியப்படுவார்கள்.

107 எலுமிச்சம்பழத்தை தூக்கிப்போட அந்திரமாக நிற்கும் ஜாலம்.

கத்தாம் புணரும்போது அதினுடைய வால் மயிரை வெவ்வேறாகப் பிடுங்கிக் கொண்டுவந்து மோதிரம்போல் ...சுற்றி அதின் மேல் அங்காயத்தைப்பூசி அதின்மேல் தங்கத்தைச்சுற்றி மோதிரம்போல் விரலுக்கு சரியாகச்செய்து வலது கைவிரலில் ஆண்மயிர் மோதிரமும் இடதுகைவிரலில் பெண்மோதிரமும் போட்டுக்கொண்டு ஜாலமாடும் சபையில் வந்து ஒரு எலுமிச்சம்பழத்தை கையிலெடுத்து இந்தப்பழத்தை தூக்கிப்போட்டு அந்திரமாக நிற்கும்படி செய்கிறேன் பாரென்று சொல்லி கனியையெடுத்து ஆகாயத்தில் விட்டெறிந்து இடதுகையை கீழேதாழ்த்தி

முடிக்கொண்டிருக்க கனி அந்திரமாக நிற்கும் கீழேவிழாது இடதுகை நிமிர்த்தி வலதுகையை யேந்த கனி கையில் வந்துவிழும் பார்ப்போர்கள் ஆச்சரியப்படுவார்கள் இது இந்திரதேவதை வசியமென்பார்.

108 நினைத்த ரூபமாகும் மூலிகை ஜாலம்.

கையாந்தகரைச் செடியைக் கண்டுபிடித்து செவ்வாய்க்கிழமை காலையில்சென்று மஞ்சள்நூல்காப்புகட்டி தீபதூபங்கொடுத்து அதின்வேரைப் பிடுங்கிவந்து வைத்துக்கொள்ளவும் ஜாலமாடும்போது அந்தவேரையெடுத்து வாயில்வைத்து எவ்வண்ண ரூபமாக வேணுமென்று மனதில் நினைக்கின்றாயோ அவ்வண்ண ரூபமாகுவாய் அது யெவ்வாறெனில் புலியாக வேணுமென்றால் புலியாகுவாய் கரடியாக வேணுமென்றால் கரடியாகுவாய் குறங்காக வேணுமென்றால் குறங்காகுவாய் எருமையாக வேணுமென்றால் எருமையாகுவாய் ஆனையாக வேணுமென்றால் ஆனையாகுவாய் நாயாக வேணுமென்றால் நாயாகுவாய் பூனையாக வேணுமென்றால் பூனையாகுவாய் கோழியாக வேணுமென்றால் கோழியாகுவாய் குதிரையாக வேணுமென்றால் குதிரையாகுவாய் கழுதையாக வேணுமென்றால் கழுதையாகுவாய் பன்றியாக வேணுமென்றால் பன்றியாகுவாய் மானாக வேணுமென்றால் மானாகுவாய் ஆடாகவேணுமென்றால் ஆடாகுவாய் மரமாவாய் கல்லாவாய் ஆணுருவமாக வேணுமென்றால் ஆணுருவாகுவாய் பெண்ணாக வேணுமென்றால் பெண்ணாகுவாய் ராஜனாக வேணுமென்றால் ராஜனாவாய் குருவாக வேணுமென்றால் குருவாவாய் சித்தராவாய் முத்தராவாய் தபசியாக வேணுமென்றால் தபசியாவாய் ஜோராவாய் குளமாவாய் பாம்பாவாய் பலவித பட்சி ஜாதிகளுமாவாய் இன்னம் எவ்விதம் நினைக்கின்றாயோ அவ்விதமெல்லாம் ஆகுவாய் ஆனால் மூலிகையின் மகிமையால் தோற்றப்படும் பார்ப்பவர்களுக்கும் ஆச்சரியமாக விருக்கும் கண்டுவிட்டு கண்டுபோயும் வித்தை கற்றவனென்று யாவரும் புகழ்ந்துக் கொண்டாடுவார்கள்.

109 தேவர்களெல்லாந் தோற்றமாகும் ஜாலம்.

ஒருமுனை யென்றச் செடியைக் கண்டுபிடித்து ஞாயிற்றுக்கிழமை காலையில் செடியருகிற்சென்று அச்செடிக்கு மஞ்சள்நூல் காப்புகட்டி பொங்கலிட்டு தூபதீபங்காட்டி பலிகொடுத்து அந்தவேரைப் பிடுங்கிவந்து உலர்த்திப் பொடியாக்கி மாதர்கள் வீட்டுக்கு ஆரமானச் சீலையில் வேரை வைத்து திரிபோல்சுற்றி தலைமண்டையோட்டில் ஐங்கோலத்தைலத்தை வார்த்து அதிலிந்தத் திரியைப்போட்டு பசுநெய் கூடவிட்டு விளக்கேற்றி கோவிலுக் குள்ளாவது தனியாகவிருக்கும் மாளிகைக் குள்ளாவது அல்லது தானிருக்கும் வீட்டிலாவது அந்தவிளக்கை யேற்றிவைத்து இஷ்டமானபேர்கள் யாவரையும் அழைத்துக்கொண்டுபோய் இந்த விளக்கைப் பாருங்களென்று சொல்லி வாயைமூடுதற்குள்ளாக தேவர்கள் ... யாவரும்

அவர்கள் கண்ணிற்குத் தோற்றப்படுவார்கள் அப்பொழுது பார்த்த மனுக்கள் யாவரும் மயங்கித் திகைப்பார்கள் விளக்கை அமைத்து விட்டால் யாவும் மறைந்துபோகும்.

110 கல் தானய் எகிரிவிழும் ஜாலம்.

குன்று குடைதாங்கி யென்ற செடியைக் கண்டுபிடித்து செவ்வாய்க்கிழமையில் காலையிற்சென்று அச்செடிக்கு மஞ்சள் நூல் காப்புகட்டி பொங்கலிட்டு தூபதீபங்கொடுத்து வேரைப்பிடுங்கிவந்து அதைப் பிரபுணைப் போல்சுற்றி முன்னதாகவைத்துக் கொண்டிருந்து ஜாலமாடும் சபைக்கு வந்து ஒரு ஆள்பாரமுள்ள கருங்கல்லை முன்னேவைத்து சபையோரைப் பார்த்து இந்தக்கல்லை அலாக்காய்க் கிளம்பி அப்புறம்போய் விழும்படிச் செய்கிறேன் பாரென்றுச்சொல்லி தந்திரமாக மேற்படிவேர் சிம்மாட்டை தாழ ஒருவருக்கும் தெரியாமல் வைத்து அதின்மேல் கல்லை [illegible] கல்லானது பூமியில் நில்லாமல் கிளம்பி அப்புறம்போய் விழுந்துவிடும். பார்த்தோர்கள் பிரமித்து இது குட்டிச்சாத்தனின் யேவலென்று திகைப்பார்கள்.

111 தலைமேல் பாரம் சுமக்கும் ஜாலம்.

மேற்சொன்ன குன்றுகுடைதாங்கிச் செடிக்கு சூரிய கிராணத்திலேனும் சந்திர கிராணத்திலேனும் அச்செடிக்கு மஞ்சள் நூல் காப்புகட்டி தீவளர்த்தி பொங்கலிட்டு பலிகொடுத்து தூபதீபங்கொடுத்து வேரைப் பிடுங்கிவந்து அதைக் குளிசமாடி முன்னதாக வைத்துக்கொண்டு ஜாலமாடுமிடத்தில் சபையோர்களைப் பார்த்து நாலுபேர் தூக்கும்படியான இந்தப்பாராங்கல்லை என் சிரசின்மேல் தூக்கி வையுங்கள் யான் சுமக்கிறேன் என்றுசொல்லி ஒருவருக்கும் தெரியாமல் இந்த குளிசத்தை சிரசில்வைத்துக்கொண்டு தூக்கிவைக்கச்சொல்ல பாரம்தோற்றாது ஒருமணிநேரம் இரண்டுமணிநேரம் வைத்திருக்கலாம் பார்ப்பவர்கள் மனங்கலங்கிப் பிரமிப்பார்கள்.

112 பாராங்கல்லை உதைக்கக் கல்லு பின்னுக்கு நகரும் ஜாலம்.

கோபுரந்தாங்கி என்ற செடியைக் கண்டுபிடித்து ஞாயற்றுக்கிழமை காலையில் சென்று அச்செடிக்கு மஞ்சள் நூல் காப்புகட்டி பொங்கலிட்டு பலிகொடுத்து தூபதீபங்காட்டி வேரைப் பிடுங்கிவந்து குளிசமாடி வைத்துக்கொண்டிருந்து ஜாலமாடும் சபையில் [illegible]யப் பாராங்கல்லை கொண்டு வரும்படிச்செய்து சபையோரைப் பார்த்து இந்தப்பாராங்கல்லை காலினால் உதைத்து நாலடிதூரம் போகும்படி செய்கிறேன் பாருங்களென்றுசொல்லி மேற்படி குளிசத்தை வலதுகாலில் கட்டிக்கொண்டு கல்லை எட்டி உதைக்க தெங்குத்தாய் கிளம்பி நாலடிதூரம் போய் விழும் பார்ப்பவர்கள் ஆச்சரியப் படுவதுடன் இது ஆஞ்சநேயருடைய வசியமென்பார்கள்.

113 பாம்பை புத்திலிருந்து அழைக்கவும் மறுபடியும் போகும் படிச்செய்யும் ஜாலம்.

மயானத்தில் சபம்எரியும்போது அதினருகிற் சென்று அதின் வாயினுள்ளே இரும்பாணியைச் சொருகி மார்பில் வெள்ளியாணிக் கடாவி தொப்புளில் செம்பாணிச் சொருகிவிட்டு வந்துவிடவேண்டும் மறுநாள் காலையில் எழுந்துபோய் அவைகளை எடுத்துக்கொண்டு வரவேண்டும் ஆனால் காடாற்று முன்னே யெடுத்துக் கொள்ளவேண்டும் அதை பிறம்பில் கைபிடிக்கு மிடத்தில் வெள்ளி கட்டுபோட்டு பூமியில் ஊனும் பக்கம் இரும்பைச் சொருகி செம்மை பிரம்புக்கு நடுசெட்டாகக் கட்டி பிறகு அதின்மேல் தூபதீபலக்கருவு பூசி பூசையில் வைத்து ஸ்ரீம் இரீம் கிலியும் என்று நாளொன்றுக்கு லட்சம் உருவு [illegible] ஜாலக்காளைப் பூசைசெய்து தேதிமுடிவுடன் பிறம்பை யெடுத்துப் [illegible]ரப்படுத்தி வைக்கவேண்டும் வித்தைகாட்ட இஷ்டமுள்ளபோது இஷ்டமான பேர்களை பாம்பிருக்கும் புத்தருகில் அழைத்துக் கொண்டேகி, அவர்களைப்பார்த்து இந்தபுத்திலிருக்கும் பாம்புகளை வெளிவரும்படிச் செய்கிறேன் பாருங்களென்று சொல்லி பிரம்பை வலதுகையிற்பிடித்து புத்தின்மேல் மூன்றுதட்டுதட்ட புத்திலிருக்கும் பாம்புகளெல்லாம் வெளியே புறப்பட்டுவந்து விளையாடும் பார்ப்பவர்கள் ஆச்சரியப்படுவார்கள். உடனே அந்தப்பிரம்பை திருப்பி புற்றின்மேல் மூன்று தட்டுதட்ட பாம்புகளெல்லாம் புத்தினுள் போய் புகுந்துவிடும் அப்படிக்கு [illegible] காட்டலாம் அல்லது பாம்பை பெட்டியிலடக்கம் செய்து ஜாலமாடும் சபையில் வைத்து முன்போல் பிறம்பினால் மூன்று தட்டுதட்ட பாம்புகள் பெட்டியை விட்டு வெளியே வந்து படமெடுத்தாடும் பிறம்பை திருப்பித்தட்ட பாம்புகளெல்லாம் பெட்டிக்குள் போய் பேசாமலடங்கும் ஆனால் 21-நாள் உருகொடுக்க வேண்டும்.

114 பாறாங்கல்லை தானய்நடக்கச் செய்யும் ஜாலம்.

கருங்காலிச் செடியைக் கண்டுபிடித்து வியாழக்கிழமை தினம் காலையிற் சென்று வோமம் வளர்த்தி பஞ்சநூல் காப்புகட்டி பொங்கலிட்டு பலிகொடுத்து தூபதீபங்காட்டி அந்தச் செடியை மூன்றுசுத்து சுத்திவந்து அதின் வடக்குபோகும் வேரைப் பிடுங்கிவந்து பொடிசெய்து சீலையில் வைத்து திரிபோல் செய்து [illegible] மண்டை ஓட்டில் வேப்பெண்ணெய் விளக்கெண்ணெய் நல்லெண்ணெய் இவை மூன்றும் விட்டு மேற்படி திரிக்கு ஐங்காய மை தடவி நாய்மண்டையோட்டிற் போட்டு விளக்கேற்றி தைலம் வாங்கி அத்துடன் புனுகும் சவ்வாதும் கலந்து ஜாலக்காளைப் பூஜை செய்து சிமிளில் வைத்துக்கொண்டு ஜாலமாடும் சபையில் ஒரு பெரியப் பாராங்கல்லை கொண்டுவரும்படிச் சொல்லி சபையோரைப் பார்த்து இந்தக் கல்லை நடக்கச்செய்கிறேன் பாரென்று மேற்படி மையை யெடுத்து

அந்தக் கல்லின்மேல் ஒருவருக்கும் தெரியாமல் கொஞ்சம்தட்டவ உடனே பாரையானது கடகடவென்று புரளும் சபையோர்கள் ஆச்சரியப்படு வார்கள்.

115 ஒரு மனிதன் பத்து மனிதனைத் தோற்றும் ஜாலம்.

சித்திரரேகை என்னும் மரத்தைகண்டு அம்மரத்தை காலை மாலை நாற்பதுநாள்போய் சுத்திக்கொண்டுவந்து நாற்பத்தோராம்நாள் அம்மரத் திற்கு மஞ்சள்பூசி குங்குமமிட்டு பொங்கலிட்டு பால்பழம் சர்க்கரை அவல் கடலை முதலானதும் படைத்து தேங்காயுடைத்து தூபதீபங் கொடுத்து அம்மரத்தின் வடக்கு வேரை தோண்டிக்கொண்டுவந்து பொன் [illegible] மாடி பின்பு ஜாலக்காரன் பூசித்து அதை கையில் கட்டிக்கொண்டு ஜால மாடும் சபையில் ஒருவனை நிறுத்தி குலிசங்கட்டிய கையில் விபூதியை யெ டுத்து தேவர்களையும் ஜாலக்காரனையும் தியானித்து அவன் மேலேபோட அவன் பார்ப்பவர்களுக்கு பத்து மனிதனைப்போல் தோற்றப்படுவான் சபையோர்கள் ஆச்சரியப்படுவார்கள் இடது கையில் கொஞ்சம் விபூதி யை யெடுத்து முன்போல் தேவர்களையும் ஜாலக்காரனையும் தியானித்து அவன்மேல்போட ஒரு மனிதனைப் போல் தோற்றப்படுவான். (சித்திரரேகை யின்பத்து அரச.)

116 ஒருவனை உட்காரவும் எழுந்திருக்கவும்செய்யும் ஜாலம்.

[illegible] செடியைக் கண்டுபிடித்து செவ்வாய்க்கிழமை காலையில் செடியருகில் சென்று மஞ்சள்நூல் காப்புகட்டி ஏக்கியம் வளர்த்தி பொங்கலிட்டு பலிகொடுத்து தூபதீபங்காட்டி இவ்விதமாக ஒன் பதுநாள் செய்து ஒன்பதாம்நாள் சூரியாட்சை அதின் வேரைப் பிடுங்கிக் கொண்டு வந்து பஞ்சலோகத்தினால் ஒரு போல் வளையம் செய்து அத னுள் இந்த வேரைவைத்து வாயை மூடி பக்குவம் செய்து பூஜையில் வை த்து சுப்பிரமண்ணியரை தியானித்துச் சொல்லும் மந்திரம் ஓம் சரவ ணபவா ஐயும் கிலியும் சவ்வும் என்று நாளொன்றுக்கு ஆயிரத்தெட்டு உரு கொடுத்துவரவேண்டும் இப்படி இருபத்தோர்நாள் கொடுத்து இரு பத்திரண்டாம்நாள் பூஜைபோட்டு வளையத்தை யெடுத்து வலது கையில் மாட்டிக்கொள்ளவேண்டும். ஜாலமாடும் சபையில் ஒருவனை நிற்கவைத் து சபையோரைப்பார்த்து இந்த மனிதனை உட்காரவும் எழுந்திருக்கவும் செய்கிறேன் பாரென்று சொல்லி வலதுகையிலுள்ள கடகத்தை புஜத்தி லிருந்து மணிக்கட்டளவும் இறக்கி நின்றுக்கொண்டிருக்கும் மனிதன் சிரசில் கையை வைத்து பாதம்வரைக்கும் இறக்கிக்கொண்டுவர உட்கார ந்துக் கொள்ளுவான் எழுந்திருக்கச் சொன்னால் எழுந்திருக்கமாட்டான் பத்துபேர் பிடித்து தூக்கினாலும் குந்தினவண்ணமாகத்தான் இருப்பா ன் கடகத்தைப் புஜத்துவரைக்கும் தூக்கி அவன் பாதத்திலிருந்து சிரசு

வரைக்கும் ஏற்றிட சடக்கென்று எழுந்து நிற்பான். பார்ப்பவர்கள் ஆச்ச ரியப்படுவார்கள். ஆனால் கடகம் தெரியாமல் சொக்காய் போட்டுக்கொ ள்ளவேண்டும்.

117 கிணற்றிலிறங்கிச் சோறுக்கும் ஜாலம்.

கால்படி அரிசியை அளந்தெடுத்து மூன்றுப்புறையாகத் துணியைச் செய்து அதில் அரிசியைப் போட்டு மூட்டைகட்டி எடுத்துக்கொண்டு போய் சுண்ணாம்பு கால்வாயின் மேல்வைத்து விடவேண்டும் கால்வாய் வெந்த பிறகு அரிசிமூட்டையை யெடுத்துக்கொண்டுவந்துபத்திரப்படுத்தி பின்பு ஜாலமாடும் சபையில் ஒரு குடுவையை வைத்து அதில் பாதிகுடு வை அரிசிபோட்டு சபையோரைப் பார்த்து இந்த குடுவையில் போட்ட அரிசியை கிணற்றிலிறங்கிச் சமைத்துவருகிறேன் பாருங்களென்று சொ ல்லி அனைவருக்கும் முன்பாகவே கிணற்றிலிறங்கி அரிசிக்குத் தகுந்த ஜலம்விட்டு குடுவையை தண்ணீர்க்குமேலே தூக்கிப் பிடித்துக்கொண்டு இருக்கவேண்டும். ஏனென்றால் குடுவையை அமுத்தினால் அரிசியெல்லாம் போய்விடும் கிணற்றிற்குள் சற்றுநேரமிருந்து வெளியே யேறிவரும்போ து தலைமுதலானதும் [illegible] சபையோர்கள் பார்த் து ஜலத்துக்குள் இறங்கி சமைத்[illegible]னென்று ஆச்சரியப்படுவார்கள் ஆனால் சாதத்தை ஒரு ஏனத்தில் கொட்டி யாவருக்கும் காட்டலாம்.

118 நெருப்பில்லாமல் சாதம் சமைக்கும் ஜாலம்.

ஜாலமாடும் சபையில் ஒரு சிறிய குடுவை [illegible] ல்லி அந்தக் குடுவையில் கொஞ்சம் அரிசிபோட்டு [illegible]னை வைத்து சபையோர்களைப் பார்த்து இந்த குடுவையில் போட்ட அரிசியை நெருப் பில்லாமல் சமைக்கிறேன் பாருங்களென்று சொல்லி தந்திரமாக ஜல[illegible] விடுவதுபோல் சதுரக்கள்ளிப்பாலை விட்டு சற்றுநேரம் பொருத்துப்பார்க் கச் சாதம் வெந்திருக்கும் அதை எடுத்து அனைவருக்கும் காட்ட ஆச்சரி யப்படுவார்கள் ஆனால் ஜாலமாடும் சபைக்குவருமுன்னே சதுரக்கள்ளிப் பாலைக் கறந்து கொண்டுவந்து தயாராய் வைத்திருக்கவேண்டும்.

119 வேறுமுறைப் பச்சைப் பாம்பு காட்டும் ஜாலம்.

பச்சைப்பாம்பைக் கொண்டுவந்து அதைக்கொன்று கெச்சக்காயும் பருத்திக்கொட்டை[illegible]பின் வயற்றில் கொள்ளுமட்டும் செலுத்தி மண்ணுக்குள் புதைத்து அதின்மேல் ஜலம்விட்டு நாளுநாள் பொருத்து தோண்டி யெடுத்து வித்தை இரண்டுபாகமாக மூன்றுதரம் போட்டு [illegible] துக்கொண்டு கெச்சக்காயின்மேல் ஓடு போக்கி இரண்டுவித் வித்தின் வெண்ணெயை மூன்றுதிரமாக வடித்துக்கொண்டு மூன்றுதிரம் வடித்த பஞ்சை யெடுத்து திரிசெய்து அத்திரியை அகலிலிட்டு ஜக்கோலத் தை லம் பூசி மேற்படி வெண்ணெயை அதில்விட்டு தீயமேற்றி இரவுகாலத்

கிற் பார்க்கிலெங்கும் பச்சைப்பாம்பாகத் தோற்றும் அப்பாம்பைக் கணக்கிட முடியாது வெகுபேர்கள் மிரளுவார்கள் வத்தியை அமைத்துவிட பாம்புகள் மறைந்துபோகும்.

120 வைப்பு யேவல் சூனியம் முதலான துடன்களெல்லாவற்றைப் பிடிக்கும் மை.

நிலவாகையின் விரையை பத்துபலம் திருத்தெடுத்து நிலப்பனங்கிழங்கும் அதின் கொடியும் மூப்புவும் வகைக்கு விராகனிடை ஒன்றுசேர்த்து கல்வத்திலிட்டு அரைத்து பில்லைதட்டி உலரப்போட்டு உலர்ந்த பின்பு அதை யெறித்துத் தைலம் வாங்கி அத்துடன் ஆள்காட்டிக் குருவியின் முட்டையைக் கொண்டுவந்து அதை உடைத்து இருமணக்கெண்ணெயில் வாத்தி மேற்படி தைலத்தையும் ஒன்றாகச் சேர்த்து எரித்துக் காய்ச்சி தைலம் வாங்கி சிமிழில் பதனமாக வைத்துக்கொண்டி யிருக்க வேண்டும். தனக்காவது இதரமெவர்களுக்காவது ஆபத்துக்காலங்களில் கொஞ்சம் மையை யெடுத்து வெத்திலையில் தடவி தீரவது இன்னும் வேறே புரத்தியாரை வரவழைத்து பார்க்கச்சொல்ல வைப்பு யேவல் சூனியம் வைத்தவர் இன்னவரென்றும் இருப்பிடம் நிறம் குறி சொந்தக்காரர் அயலாரென்றும் தெரியவரும் கட்டுவெட்டிகள். இன்னாரென்று காட்டும் அஞ்சனத்தால் அழிந்துபோமென்றும் அழிவில்லையென்றும் தோற்றப்படும்.

121 வாத்திய ஜாலம்.

ஸ்திரியொன்றுக்கு பன்னிரண்டு சொன்னது அவர்கள் கையில் இரும்பு வளையல்போட்டுக் கொண்டிருப்பார்கள் அவர்கள் மரணமானால் அந்த வளையலுடன் மயானத்திற்குக் கொண்டு போய் தகனம் பண்ணுவார்கள் அதைப்பார்த்துக் கொண்டிருந்து அவர்கள் மறுநாள்சென்று காடாற்று முன்னமே சென்று அந்த இரும்பு வளையலையெடுத்துக் கொண்டுவந்து அதைக் கருமானிடத்திற் கொடுத்துப் பாக்குவெட்டி செய்து பதனமாக வைத்துக் கொள்ளவேண்டும்.

122 பேரிகை வாத்திய ஜாலம்.

சங்கம் செடியைக் கண்டுபிடித்து சூரியக் கிராணமேனும் சந்திரக் கிராணமேனும் பிடிக்கும்போது மேற்படி செடியருகிற்சென்று மஞ்சள் நூல் காப்புகட்டி பொங்கலிட்டு பலிகொடுத்து தூபதீபங்காட்டி பூசைப்போட்டு அச்செடியின் வடக்குபோகும் வேரை பிடுங்கிக் கொண்டுவந்து பத்திரமாக வைத்திருந்து ஜாலமாடுமிடத்தில் சபையோர்களைப் பார்த்து இப்போது பேரிகைவாத்தியம் முழங்கச் செய்கிறேன் பாரென்று சொல்லி மேற்படி சங்கன்வேரை கையிற்பிடித்து செய்துவைத்திருக்கும் பாக்குவெட்டியால் அந்தவேரில் கொஞ்சம் வெட்ட பேரிகை வாத்தியம் முழங்கும் ஆச்சரியப்படுவார்கள்.

123 நகபத்து வாத்திய ஜாலம்.

குடான் செடியைக் கண்டுபிடித்து ஆதிவாரம் காலையில் செடியருகிற் சென்று மஞ்சள் நூல் காப்புகட்டி பலிபூசைபோட்டு தூபதீபங்காட்டி அச் செடியின் கிழக்கு போகிறவேரைப்பிடுங்கிவந்து பத்திரமாக வைத்திருந்து ஜாலமாடு மிடத்தில் சபையோரைப்பார்த்து இப்போது நகபத்து வாத்தியம் முழங்கச் செய்கிறேன் பாரென்றுச்சொல்லி தந்திரமாக இந்த வேரை சங்கன்வேருடன் சேர்த்துப்பிடித்து மேற்படிப்பாக்குவெட்டியால் ஒரு துண்டுவெட்ட நகபத்துவாத்தியம் முழங்கும் சபையோர்கள் பிரமித்து ஆச்சரியப்படுவார்கள் குடான் என்பது செம்முள்ளி.

124 நகாறு வாத்திய ஜாலம்.

ஓரிடம் என்னும் செடிக்கு வியாழக்கிழமை தினம் காலையில் சென்று எருக்கன் நாலால் காப்புகட்டி அச்செடியை ஒன்பது சுத்துவந்து தூபதீபங்கொடுத்து அச்செடியின் மேற்குப்போகும் வேரைப்பிடுங்கிவந்து பத்திரமாக வைத்திருந்து. ஜாலமாடுமிடத்தில் சபையோர்களைப் பார்த்து இப்போது நீங்கள் யாவரும் சந்தோஷிக்கும்படியாய் நகாறு வாத்தியம் முழங்கச்செய்கிறேன் பாரென்று தந்திரமாக இந்தவேரைச் சங்கன்வேருடன்சேர்த்து இடதுகையில் பிடித்து வலதுகையில்மேற்படி பாக்குவெட்டியைப்பிடித்து அவ்வேரைவெட்ட நகாருவாத்தியம் முழங்கும் ஆச்சரியப் படுவார்கள். ஓரிடம்என்பது வேலிப்பருத்தி.

125 தம்பட்ட வாத்திய ஜாலம்.

ஓரிட்டி என்னும் செடியைக் கண்டுபிடித்து சூரியகிராணத்தில் மஞ்சள்நூல் காப்புகட்டி பலிபூசைப்போட்டு தூபதீபங்காட்டி வேரைப்பிடுங்கிவந்து பத்திரமாகவைத்திருந்து ஜாலமாடுமிடத்தில் சபையோர்களைப் பார்த்து இப்போது அனைவரும் ஆச்சரிக்கும்படியாய் தம்பட்டவாத்தியம் முழங்கச்செய்கிறேன் பாருங்களென்று சொல்லி இந்தவேரை சங்கன் வேருடன் சேர்த்து மேற்படி பாக்குவெட்டியால் வெட்ட தம்பட்ட வாத்தியம் முழங்கும் அனைவரும் சந்தோஷப் படுவார்கள். ஓரிட்டி என்பது பிரண்டை.

126 துத்தி வாத்திய ஜாலம்.

புல்லுருவிச்செடிக்கு பூரணபருவத்தில் இரவு பதினிரண்டு மணிக்குச் செடியருகிற்சென்று மஞ்சள் நூல்காப்புகட்டி பூசைபோட்டு பலிகொடுத்து அதின் வடக்குப்போகும் வேரைப்பிடுங்கிவந்து பத்திரமாக வைத்திருந்து ஜாலமாடுமிடத்தில் சபையோர்களைப்பார்த்து இப்போதுயாவரும் பிரமிக்கும்படியாக துத்திவாத்தியம் முழங்கச் செய்கிறேன் பாரென்று சொல்லி இந்தவேரை சங்கன்வேருடன் சேர்த்து மேற்படி பாக்குவெட்டியால் வெட்ட துத்திவாத்தியம் முழங்கும் ஆச்சரிப்படுவார்கள்.

8

127 தவண்டை வாத்திய ஜாலம்.

அருவியென்னும் செடிக்கு அமாவாசைதினம் காலையில் மஞ்சள் நூல் காப்புகட்டி தூபதீபங்கொடுத்து அச்செடியின் தெற்குபோகும் வேரைப் பிடுங்கிவந்து பத்திரமாக வைத்திருந்து ஜாலமாடுமிடத்தில் அங்குள்ளப் பேர்களைப்பார்த்து தவண்டை வாத்தியம் வாசிக்கும்படிச் செய்கிறேன் பாரென்று சொல்லி இந்த வேரைச் சங்கன் வேருடன் சேர்த்து மேற்படிப்பாக்குவெட்டியால் வெட்ட தவண்டைவாத்தியம் வாசிக்கும் அதைக் கேட்டு சபையோர்கள் ஆனந்திப்பார்கள் அருவியென்பது கருவிலி.

128 தவில் வாத்திய ஜாலம்.

இருப்புக்கொல்லிச் செடியைக் கண்டுபிடித்து சந்திரகிரகணத்தில் அச்செடிக்கு மஞ்சள் நூல் காப்புகட்டி பலிபூசைப்போட்டு அச்செடியின் வடக்குபோகும் வேரைப் பிடுங்கிவந்து பத்திரமாக வைத்திருந்து ஜாலமாடுமிடத்தில் சபையோர்களைப் பார்த்து இப்போது தஞ்சாவூர் தவில் வாத்தியம் முழங்கும்படிச் செய்கிறேன் பாருங்களென்று சொல்லி இந்த வேரைச் சங்கன்வேருடன் சேர்த்து மேற்படி பாக்குவெட்டியால் வெட்டத் தவில்வாத்தியம் தமாஷாய் முழங்கும். அனைவரும் ஆச்சரியப்படுவார்கள் இருப்புக்கொல்லி என்பது சிவனார் வேம்பு.

129 மல்லாரி வாத்திய ஜாலம்.

குண்டலியென்னும் செடிக்கு செவ்வாய்க்கிழமை காலையில்சென்று சூரியன் உதையமாகுதற்குமுன் மஞ்சள் நூல் காப்புகட்டி பலிபூசைபோட்டு வேரைப் பிடுங்கிவந்து பத்திரமாக வைத்திருந்து ஜாலமாடுமிடத்தில் அங்குள்ள சபையோர்களைப் பார்த்து இப்போது அனைவரும் சந்தோஷப் படும்படியாக மல்லாரிவாத்தியம் முழங்கும்படிச் செய்கிறேன் பாருங்களென்று சொல்லி அந்தவேரைச் சங்கன் வேருடன் சேர்த்து மேற்படிப் பாக்குவெட்டியால் வெட்ட மல்லாரிவாத்தியம் முழங்கும் அதைக்கேட்டு மனமகிழ்ச்சிக் கொள்வார்கள் குண்டலி என்பது சீந்தில்.

130 தாரை ஊதும் ஜாலம்.

முல்லைக்கொடியை சூரியகிரகணத்தில் மஞ்சள் நூல் காப்புகட்டி பலி கொடுத்துப் பூசைபோட்டு அச்செடியின் கிழக்கு வேரைக்கொண்டு வந்து பத்திரப்படுத்தி வைத்திருந்து ஜாலமாடுமிடத்தில் சபையோர்களைப் பார்த்து எங்கேனும் கேட்டிராத தாரைவாத்தியம் ஊதும்படிச் செய்கிறேன் பாரென்று சொல்லி இந்தவேரைச் சங்கன்வேருடன் சேர்த்து மேற்படிப் பாக்குவெட்டியால் வெட்ட தாரைவாத்தியம்வாசிக்கும் கேட்டு ஆனந்திப்பார்கள்.

131 பம்பை வாத்திய ஜாலம்.

சிறுபிம்பம் செடிக்கு சந்திரகிரகணத்தில் மஞ்சள் நூல் காப்புகட்டி பலிகொடுத்துப் பூசைபோட்டு வேரைப்பிடுங்கிவந்து பத்திரப்படுத்திவைத் திருந்து ஜாலமாடுமிடத்தில் சபையோர்களைப்பார்த்து இப்போது விநோத மாகப் பம்பைவாத்தியம் முழங்கும்படி செய்கிறேன் பாரென்று சொல்லி இந்தவேரைச் சங்கன் வேருடன் சேர்த்துமேற்படி பாக்கு வெட்டியால் வெட்ட மகாவிநோதமாகப்பம்பைவாத்தியம் முழங்கும்கேட்டு ஆனந்த சந்தோஷமடைவார்கள் சிறு பிம்பம் என்பது மலைவேம்பு.

132 பூரி யூதும் ஜாலம்.

சிறுகுறிஞ்சா செடியைக் கண்டுபிடித்து அமாவாசைதினம் காலையிற்சென்று மஞ்சள் நூல் காப்புகட்டி பூசைபோட்டு வேரைப்பிடுங்கிவந்து பத்திரமாக வைத்திருந்து ஜாலமாடுமிடத்தில் அங்குள்ளப் பேர்களைப் பார்த்து பூரியூதும்படிச் செய்கிறேன் பாரென்று சொல்லி இந்தவேரை சங்கன் வேருடன் சேர்த்து மேற்படி பாக்கு வெட்டியால் வெட்ட பூரி வாத்தியம் முழங்கும். புதுமையாயிருக்குதென்று சபையோர்கள் புகழ் வார்கள்.

133 சூரிய வாத்திய ஜாலம்.

சுந்திவாருணிச் செடியைக் கண்டுபிடித்து சந்திரகிரகணத்தில் அச் செடிக்கு மஞ்சள் நூல் காப்புகட்டி பொங்கலிட்டு பலிகொடுத்து தூபதீபங் காட்டி அதின் வடக்குவேரைப் பிடுங்கிவந்து பத்திரமாய் வைத்திருந்து ஜாலமாடுமிடத்தில் சபையோர்களைப்பார்த்து இப்போது யாவரும் புகழும் படியாக சூரியவாத்தியம் வாசிக்கும்படிச்செய்கிறேன் பாரென்று சொல்லி இந்தவேரை சங்கன் வேருடன் சேர்த்து மேற்படி பாக்கு வெட்டியால் வெட்ட சூரியவாத்தியம் வாசிக்கும் சபையோர்கள் ஆச்சரியப்படுவார்கள் சுந்திவாருணி என்பது பேய்த்தும்மட்டி.

134 சந்திர வாத்திய ஜாலம்.

சுமாதமென்னும் செடியைக் கண்டுபிடித்து சூரியகிரகணத்தில் அச் செடிக்கு மஞ்சள் நூல் காப்புகட்டி பொங்கலிட்டு பலிகொடுத்து பூசை போட்டு அதின் தெற்குபோகும் வேரைப்பிடுங்கிவந்து பத்திரப்படுத்தி வைத்திருந்து ஜாலமாடும் சபையில் அங்குள்ளவர்களைப் பார்த்து முந்தி சூரியவாத்தியம் வாசிக்கும்படிச் செய்தேன் இப்போது சந்திரவாத்தியம் வாசிக்கும்படிச் செய்கிறேன் பாரென்று சொல்லி இந்தவேரைச் சங்கன் வேருடன் சேர்த்து மேற்படிப் பாக்குவெட்டியால் வெட்ட சகலரும் மகிழும்படியாக சந்திரவாத்தியம் வாசிக்கும், சுமாதம் என்பது மணத் தக்காளி.

135 உடுக்கை வாத்திய ஜாலம்.

கரிக்கோலம் என்னும் செடியைக்கண்டு பிடித்து அமாவாசைதினம் அச்செடிக்கு மஞ்சள் நூல் காப்புகட்டி பலிபூசைபோட்டு அதின்வேரைப் பிடுங்கிவந்து பத்திரப்படுத்திவைத்திருந்து ஜாலமாடுமிடத்தில் சபையோர்களைப்பார்த்து இப்போது உடுக்கைவாத்தியம் முழங்கும்படிச்செய்கிறேன் பாரென்று சொல்லி இந்தவேரைச் சங்கன்[illegible]சேர்த்து மேற்படிப் பாக்குவெட்டியால் வெட்ட உடுக்கைவாத்தியம் முழங்கும் உலகோர் ஆச்சரியப்படுவார்கள் கரிக்கோலம் என்பது அழிஞ்சில்.

136 மேற்கூறிய சகல வாத்தியமும் ஒன்றாய் முழங்கும் ஜாலம்.

ஆதியாகச்சொன்ன சங்கன் வேருடன் மற்ற வேர்களையும் ஒருங்கு சேர்த்து பத்திரப்படுத்தி வைத்துக்கொண்டு ஜாலமாடுமிடத்தில் சபையோர்களைப்பார்த்து இப்போது தனித்தனியாக வாத்தியங்களைக் கேட்டு ஆனந்தமடைந்தீர்கள் சகலவாத்தியமும் ஏககாலத்தில் வாசிக்கும்படியாகச் செய்கிறேன் பாரென்று சொல்லி வேர்கள் யாவையும் ஒன்றாக வைத்துமேற்படி பாக்குவெட்டியால் துண்டுதுண்டாக வரிசையாய் வெட்டிக்கொண்டேவர வாத்தியங்களெல்லாம் ஏகோபித்து ஏககாலத்தில் வாத்தியம் முழங்கும் சபையோர்கள் யாவரும் கேட்டு ஆனந்திப்பார்கள்

137 சாதத்தை வேகாமற்படிக்குச் செய்யும் ஜாலம்.

அத்திமரத்தில் சிறுதுண்டு வெட்டிக்கொண்டுவந்து அதை நன்றாய் வெறியவைத்து அதைக் கழுதை மூத்திரத்தால் அவித்து எடுத்துக்கொண்டு ஞாயற்றுக்கிழமை மீனலக்கினம் பார்த்து நத்தைச்சூரிச் செடிக்கு மஞ்சள் நூலினால் காப்புக்கட்டி விட்டுவந்து விடவேண்டும். மறுஞாயற்றுக்கிழமையில் துலாலக்கினம்பார்த்து நிர்வாணமாய்ப்போய் அச்செடிக்குசாயம்படாமல் உச்சிவேர் அறாமல் பிடுங்கிவந்து மேற்படி அத்திமரம் சுட்டக்கரி அடுப்பிலும் இந்தவேரைப் பாண்டத் தடியிலும் போட்டால் எவ்வளவு தீபோட்டு எரிக்கினும் சாதம்வேகாது மறுபடியும்அடுப்பை பசஞ்சாணியால் மெழுகி சுத்திசெய்தாலொழிய வேகாது.

138 சுண்ணாம்பு வேகாதிருக்கும் ஜாலம்.

எட்டிமரத்தில் சிறுதுண்டு வெட்டிக்கொண்டு வந்து அதை நன்றாக வெறித்து எருமை மூத்திரத்தால் அவித்து அந்தக்கரியை யெடுத்து பத்திரப்படுத்தி பின்பு செவ்வாய்க்கிழமை கேட்டை நட்சத்திரமும் கடகலக்கினமும்பார்த்து முன்சொன்னதுபோலுங் கேட்கும் நத்தைச்சூரிச் செடிக்கு மஞ்சள் நூலினால் காப்புகட்டி பொங்கலிட்டு பலிகொடுத்து தூபதீபங்காட்டி அதின் உச்சிப்போகும் வேரைப் பிடுங்கிக் கொண்டுவந்து பத்திரப்படுத்திவைத்திருந்து மேற்படிக்கரியை சுண்ணாம்புக் காளவாயிலுள்

ளேபோட்டு வேரை ஈசான்னிய மூலைபக்கம் சொருகிவிட சுண்ணாம்பு கல்லாயினும் கிளிஞ்சலாயினும் யெவ்வளவு கரிகட்டை போட்ட போதிலும் வேகாது அந்தவேரை யெடுத்துவிட்டு பசுங்கோமியந் தெளிக்க எப்போதும்போல் வேகும்.

139 ஜலத்தில்மேல் விளக்கெரியும் ஜாலம்.

அத்தி மரத்தில் [illegible] நூலை துல்லிதமான சல்லாத்துணியில் தடவிட்டு திரியாகத்திரித்து கொஞ்சம் ஆழமானக் கலசத்தில் காற்பங்கு ஜலத்தைவிட்டு ஆனால் ஜலத்துக்குமேல் ஒரு யிழையுயரமான சிறுகல்லுகளாவது போட்டு வைத்து நனையாதப் பக்குவமாய் வைத்துக் கொளுத்திக்காட்டினால் நம்புவார்கள் அதில் தடையுள்ள கலசமாகவே செய்து வைத்துக் கொண்டால் முன்னே வத்தியை [illegible] எல்லாருக்கும் நடுவில் நின்று ஜலத்தைவிடலாம் வத்தி நனையாமல் விடவேணும்.

140 தீபங்காட்டும் ஜாலம்.

குங்கிலியத்தையும் கர்ப்பூரத்தையும் பொடியாகச்செய்து நசுக்கி ஒரு கந்தையில் பரப்பி திரியாகத்திரித்து விளக்கெண்ணெயில் தோய்த்து வைத்துக்கொண்டு முன்போல் தடையுள்ளக் கலசத்தில் வத்திபோட்டு தடைக்கு ஒருயிழை குறைவாகவே ஜலத்தைவிட்டுக் கொளுத்தி சபையில் வைத்தால் இரண்டு நாழிகையெரியும் நிஜமாகவே நம்புவார்கள். சிலர்தேவதைவசியமென் றெண்ணுவார்கள்.

141 ஜலம்விட்டு விளக்கெரியச் செய்யும் ஜாலம்.

ஜாலமாடும் சபைக்கு வருமுன்னமே திருகுகள்ளிப்பாலைக் கரண்டியளவெடுத்து கற்பூரமும் அதே அளவெடுத்து இரண்டையும் சேர்த்து அரைத்து துல்லியமான சீலையில் தடவி உலர்த்தி வத்தியாய்த் திரித்து தயார்செய்து வைத்திருந்து ஜாலமாடும் சபையில் தடையிருக்கும் கலசத்தில் மேற்படி வத்தியைப் போட்டு யாவரும் பார்க்க கலசத்தில் ஜலத்தை வார்த்து விளக்கேத்திக் காட்டினால் அனைவரும் ஆச்சரியப்படுவார்கள்.

142 சூனை வேகாதிருக்கும் ஜாலம்.

ஆச்சாமரத்தில் சிறுதுண்டு வெட்டிக்கொண்டுவந்து எரித்துகழுதை மூத்திரம் எருமை மூத்திரம் நாய்மூத்திரம் இம்மூன்றும் விட்டு அவித்து அந்தக் கரியையெடுத்து பத்திரப்படுத்தி வைத்துக்கொண்டு பின்பு அமாவாசை மூல நட்சத்திரம் விருச்சிக லக்கினம் இவை கூடிய [illegible]தில் நத்தைச்சூரிச் செடிக்கு மஞ்சள் நூலினால் காப்பு கட்டிவிட்டு வந்துவிடவேண்டும். பூரணபருவத்திற் சென்று பொங்கலிட்டு பலிகொடுத்து தூபதீபங்காட்டி அதின்வேரைப் பிடுங்கிவந்து வைத்துக்கொண்டு எந்த சூளையாவதுப் போடும்போது மேற்படிச் சுட்டக்கரியை சூளை மூடுமுன் உள்

னேபோட்டுவிட்டு இந்தவேரை காத்து யெந்தபக்க மடிக்கின்றதோ அந்த வாட்டம்பார்த்து வேரைச்சொருகிவிட எவ்வளவுவாட்டி நட்டைப்போட்டாலும் அச்சுவே வேகாது அந்தவேரை யெடுத்துவிட்டு சந்தனக்கட்டையும் மஞ்சள்கொம்பும் சூளையில் போடவேண்டும் ஆனால் சூளை அடுக்கும் போதே சரியைப்போட்டு விடவேண்டும்.

143 பொதை யெடுக்கும் ஆஞ்சனம்.

ஆடாதொடைச் செடியைக் கண்டுபிடித்து ஆதிவாரத்தில் மஞ்சள் நூலால் காப்புகட்டி பொங்கலிட்டுப் பலிகொடுத்துப் பூசைபோட்டு அச்செடியைப்பிடுங்கி அதனுடையக் கிழங்கை விராகன் ஒன்று நிறுத்து கல்வத்திற்போட்டு அதினுடையப் பழமும் அதே நிறையாகச் சேர்த்து கோரோசனை அரைவிராகனிடை விட்டு சாறைசெய்விட்டு அரைத்து வெட்டுண்ட மனிதன் தலைமண்டை யோட்டைத் தேடிக்கொண்டுவந்து அரைத்தமையை சீலையில்தடவி உலர்த்தி திரிசெய்து மண்டையோட்டில் போட்டு முத்தெண்ணெய்விட்டு விளக்கேற்றித் தைலம்வாங்கி சிமிழில் வைத்துக்கொண்டு ஒரு மிளகு பிரமாணம் மையையெடுத்து வெத்திலையில்வைத்து கண்ணை சிமிட்டாமல் உற்றுப்பார்க்க பார்க்கப் பாதாளமெல்லாம் பட்டணமாகத் தோற்றும் திசையெல்லாந் தெரியும் பூமியிலுள்ள பொருள் எவ்வகைப் பட்டதும் கண்ணிற்கு நேராகத்தோற்றும் உடனே யதற்குச் செய்யவேண்டிய சாந்திசெய்து பூமியைக் கிண்டி யெடுத்துக் கொள்ளலாம் ஆனால் மைகூட்டி அரைத்து சிமிழில் அடக்கம் செய்தவுடன் குருவை தியானித்து கணபதி பூசைசெய்து அஞ்சனாதேவியையும் அனுமாரையும் தோத்திரம்செய்து பின்புமையை யெடுத்து ஆடசித்தியாகும்.

144 நினைத்தகுறி சொல்லும் ஜாலம்.

பச்சைப்புழுகு கோஷ்டம் பச்சைக்கற்பூரம் சந்தனம் இவைகளைச் சமனிடையாகச் சேர்த்து கல்வத்திலிட்டு ஜலம்விட்டு மைபோல் அரைத்து செப்புத்தகட்டில் பூசி அதின்மேல் திரிகோண சக்கரமிட்டு அதினுள் ஸ்ரீங்காரத்தை அடைத்து சொல்லும் மந்திரம் ஓம் நமோ பகவதே ஓம் உக்கிரமாகாளி சாமுண்டியாயி வயிரவி சாம்பவி யோகாரி சிவி மகா சத்தி நமாநமா சுவாவென்று மூன்று காலமும் தவறாமல் ஆயிரத்தெட்டு உருகொடுத்துவர சித்தியாகும்.

145 பூசை செய்யும் விதி.

மூன்று காலமும் தலைமுழுகவேண்டும். ஒருப்பொழுது போலிருந்து ஒருவேளை அமுதுக் கொள்ளவேண்டும் அதில் முன்னெடும் கவளத்தை காகத்திற்கு வைக்கவேணும் வேஷ்டிப்போட்டுப் படுக்கவேணும் இவ்வாறாகயிருந்து சத்தியைவைத்துப் பூசைசெய்ய ஒரு மண்டலத்தில் சித்தி

யாகும் சித்தியானவுடன் செய்யும் தொழில் யின்னதென்றும் சொல்லலாம் ஒருவர் நினைத்து வந்துக் கேழ்ப்பதையும் சொல்லலாம் ஓடிப்போனவரையும் பிடித்துக்கொடுக்கலாம் ஆனால் குறிசொல்லுபவன் புகைச்சாப்பிடக்கூடாது வெத்திலைப் பாக்குத் தின்னலாம் குறிசொல்லும்போது இடதுகையை கானத்தில் வைத்துக்கொண்டு வலதுகையை நீட்டிக்குறி சொல்லவேண்டும்.

146 சொக்குத் தூள் ஜாலம்.

சொக்குப்பாக்கு அப்பைக்கிழங்கு நிலைப்பனங்கிழங்கு தாளிவேர் பேயத்திவேர் பேயலாவேர் குப்பமேனிவேர் வேளைவேர் கழற்சிவேர் ஊமத்தன் வித்து தலைமஞ்சக்கொடி மாதர்வீட்டுக்குத் தூரமானச் சீலை மயானத்தின் சாம்பல் மண்டையோடு ஊமை மண்டைப்பொடி இவையெல்லாம் சமனிடையாகக் கூட்டி பொடிசெய்து வைத்துக்கொண்டு பேயத்தியின்பாலும் பேயாலின்பாலும் கூடசேர்த்து பொடிசெய்யவேண்டும். இப்படிச்செய்து வைத்துக்கொண்டு கொஞ்சம் பொடியை யெடுத்துச் சபையில் தூற்றிவிட்டால் சகலபேரும் பொறிகலங்கி மதிமயங்கிக் கிடப்பார்கள். அவர்களை மடியைப் பிடித்திழுத்து புரட்டிப்புரட்டி அவர்கள் வசமுள்ளப் பொருளைப் பறித்துக் கொண்டாலும் தெரியாது தடியெடுத்தடித்தாலுந் தெரியாது. உடனே நல்லஜலம் கொண்டுவரும்படிச்சொல்லி அந்த ஜலத்தை அவர்கள் மீதுத்தெளிக்க மயக்கம்தெளிந்து நினைவுபிறக்கும் அறிவுண்டாகும் ஆனால் ஜலம்தெளித்த சற்றுநேரம் வரைக்கும் திகைப்பூண்டு மிதித்தாப்போலிருக்கும் உடனே தெளிந்துவிடும்.

147 பேயோட்டும் ஜாலம்.

காட்டின் பசுவின் எருவைக்கொண்டுவந்து கொளுத்தி சாம்பலாக்கி சீலையில் வடிகட்டி திருநீறு செய்துவைத்துக்கொண்டு அப்பைக்கிழங்கு தாளிவேறு பேயத்திவேர் பேயலாவேர் ஊமத்தன் வித்து இவைகள் வகைக்கு விராகனிடை யெடுத்து பொடித்து சீலையில் வடிகட்டி மேற்படி விபூதியுடன் கலந்து வைத்துக் கொள்ளவேண்டும் ஜாலமாடுமிடத்தில் ஒரு மனிதனைக் குந்தவைத்து சபையோரைப் பார்த்து இந்த மனிதனை பேய்பிடித்தவன்போல் ஆடும்படிசெய்கிறேன் பாரென்றுசொல்லிமேற்படி திருநீறை கொஞ்சம் கையிலெடுத்து மந்திரம் சொல்பவன்போல் வாயில் வந்தபடி எதையோசொல்லி அவன் சிரசில்போட உடனே தலையைச் சுற்றியாடுவான். வாயில் வந்தபடிக் கெல்லாம் பினத்துவான் சபையோர்கள் பிரமைகொண்டு திகைத்து நிற்பார்கள் அன்றியும் சாதாரணமாய் பேய்பிடித்த ஸ்திரீபுருஷர்களாயிருந்தபோதினும் ஆடாமல்வாய்திறவாமலிருந்தால் அவர்களை குந்தவைத்து மேற்படி திருநீறைப்போட ஓங்கார சத்தமிட்டு ஆடி உடனே ஊரும்பேரும் சொல்லிவிடும். அப்புறந்தேமுத்

யறுத்துவிட்டால் அத்துடன் ஒழிந்துவிடும் ஆடும்பேயை ஆடாமல் உட னே நிறுத்த வேறுமென்றால் ஜலத்தை தெளிக்க பயக்கம் தெளிந்து நின்றுவிடும்.

148 ஆடாத முனிகளை ஆட்டும் ஜாலம் வேறுவிதம்.

எவ்விதமான முனிகள் பேய்கள் பிசாசுகள் பிடித்து வாய் திறவாம லும் ஆடாமலுமிருந்த போதினும் அதற்கு [illegible] அபினியை எடு த்து வெத்திலையில் வைத்து மடித்து உள்ளுக்குச் செலுத்திவிட உடனே கரகரவென்று ஆடி ஊரும்பேரும் தான் ஒண்டியிருந்து பிடித்தவிடமும். பாபரவென்று சொல்லிவிடும் அப்போதே முடியை அறுத்துவிட்டு முழு க்குவைக்க அத்துடன் யாவும் ஒழிந்துவிடும்.

149 வேறுவித முறை பால் உதிரமாகும் ஜாலம்.

தம்பலப்பூச்சியைக் கொண்டுவந்து புல்லில் கலந்துப் பசுவுக்குக் கொ டுத்தால் அதை தின்றவுடன் பாலைக்கரந்தால் இரத்தநிறமாக யிருக்கும் யாவரும் ஆச்சரியப் படுவார்கள். அப்போது நீ சபையோரைப் பார்த்து இரத்தமயாகக் கரக்கும் பாலை வெள்ளை நிறமாகக் கரக்கும்படிச் செய் கிறேன் பாரென்று சொல்லி ஒரு தொட்டியில் நல்ல ஜலம்விட்டு சக்குத் தூள் பண்ணிப்போட்டு கலக்கிப் பசுவைக் குடிப்பாட்டினப் பிறகு கரந் தால் பால் எப்போதும்போல் வெள்ளையா யிருக்கும் சந்தோஷப்படு வார்கள்.

150 நெருப்பில்லாமல் கர்ப்பூரங் கொளுந்தும் ஜாலம்.

கற்பூரக்கட்டியைச் சபையோர்களுக்கு முன்னேவைத்து அவர்களுக் குத்தெரியாமல் தந்திரமாகச் சிறுபயறளவு [illegible] பாஷாணத்தை கற்பூரக் கட்டிமீதுவைத்து கையிலேந்தி சபையோர்களுக்கு நன்றாய்க்காட்டி குரு [illegible] வாயினால் [illegible]தினால் குபீலென்று எறியும் சபையோரெல்லாம் ஆச்சரியப் படுவார்கள்.

151 வேறுவிதம் முறத்தில் பொரிபொரிக்கும் ஜாலம்.

ஒரு ஜாண்சிகளத்தில் அதற்குத்தக்கின அகலத்தில் ஒரு முச்சல் செய்து அடியில் கள்ள அறையோடே முடையவேண்டியது அந்தக்கள்ள அறையில் பிடித்தமட்டும் பொரியைப்போட்டு வைத்துக்கொண்டு ஜால மாடும் [illegible]வில்வந்து உட்கார்ந்து ஒரு சவுக்கத்தைக் கழுத்தில்கட்டி இர ண்டு முந்தாணியையும் இரண்டுக்கால் பெருவிரலில் சுத்திப்பிடித்து மேற் படிமுச்சலில் கொஞ்சம் நெல்லைப்போட்டு கொஞ்சம் தண்ணித்தெளித் துப் பொரிபொரிப்பதுபோல் கலகலவென்றுக் குலிக்கிக் கொண்டேயிருக் தால் அடியிலிருக்கும் பொரியெல்லாம் கீழுமேலுமாய் துள்ளி மேலுக்கு வந்து[illegible] பார்ப்பவர்க்கு ஆச்சரியமாயிருக்கும்.

152 துணியில் சோளம் பொரிக்கும் ஜாலம்.

சோளத்தை [illegible] துணியில் மூட்டைகட்டி சுண்ணாம்பு தாளிக்குமிடத்தில் கொஞ்சம் பள்ளந்தோண்டி இந்த சோளமூட்டையை வைத்து மேலேமண்ணை மூடிவிடவேண்டும். சுண்ணாம்புத் தாளித்தபிறகு அதை தோண்டியெடுத்துக்கொண்டுவந்து ஜாலமாடுமிடத்தில் துணியைச் சவுக்கமாகப் பிடிக்கச்சொல்லி நடுவில் சோளத்தைப்போட்டு கொஞ்சம் ஜலத்தைத் தெளித்தால் முந்துபோல் பொரியும். சபையோர்கண்டு ஆச் சரியப்படுவார்கள்.

153 வேறுவிதம் குடத்தின்மேல் தேங்காயுடைக்கும் ஜாலம்.

[illegible]ப்பமேனிச்செடியைக் [illegible]பிடித்து ஞாயிற்றுக் கிழமைப்பார்த்து மஞ்சள் நூலினால் காப்புகட்டி தூபதீபங்கொடுத்து அச்செடியின் வேர் அறுமல் பிடுங்கிவந்து புதுக்குடத்தினுள்ளே வைத்து கவிழ்த்துவிட்டு தேங்காயைக் குடத்தின்மேல் வைத்து துணிவாய் மோதி தடியால் சேராக அடிக்க குறைவிட்டாற்போல் சிதறிப்போகும். பார்த்திருந்தபேர்கள் ஆச் சரியப்படுவார்கள். ஆனால் தன்பேருக்கு உள்ளபட்சி அரசாயிருக்கும் போது செடிக்குக் காப்பு கட்டவேண்டும். பட்சிபார்க்கத் தனக்குத்தெரி யாவிட்டால் தேர்ந்தஜோசியரிடத்திலாவதுக்கேட்டுக்கொள்ளவேண்டும்.

154 துணியை விசிறி ஆகாயத்திற்போட குடைபோல் வரும் ஜாலம்.

கருவீழியென்னும் செடிக்குக் காப்புகட்டிப் பொங்கலிட்டு பலிகொ டுத்து தூபதீபங்காட்டி [illegible]னம் செய்து பின்பு அதைவெட்டி அத னுடையக் கிழங்கைவாங்கி அக்கிழங்கில் விரற்னிலட ஒன்று நிருத் தெடுத்து ஒரு சவுக்கமானத் துணியில்கட்டி குருவை தியானித்து [illegible] [illegible]ரைப்பூசித்து ஜாலக்காரனை [illegible] நினைத்து அந்திரதேவதையை அழை [illegible]லையை கையிலெடுத்து ஆகாயமார்க்கமாக விட்டெறிய அது கீழே யிறங்கும்போது குடைபோல் யிரங்கும் சபையோர்கள் ஆச்சரியப்படுவார் கள் சிலர் பிரமித்து அந்திரதேவதை வந்ததுமென்பார்கள்.

155 நெருப்பில்லும் வித்தை.

பச்சை [illegible] கொண்டுவந்து தவைத்து ஒரு பாண்டத்திற்போட்டு ஜலம்விட்டு. அடுப்பேற்றி யெறித்து அதில்வரும் நெய்யையெடுத்து வே றொருபாண்டத்தில் வைத்துக் கொள்ளவேண்டும்.

156 மண்வெட்டியைக் காச்சிக் கையாலெடுக்கும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் கருமான் உலைபோற்செய்து அதற்கு இரண்டு துருத்திவைத்து சீமைகரியேனும் நாட்டுகரியேனும் போட்டுக் [illegible] துருத்தியால் ஊதநெருப்பு கனகனவென்று எறிய [illegible] மண்

வெட்டியை உலைக்கூடத்தில் வைத்துப் பழுக்கக்காச்சி கொறட்டால் தூக்கி கல்லின் மேல்வைத்து சபையோர்களைப் பார்த்து இதோ பழுக்கக்காய்ந் திருக்கும் மண்வெட்டியைக் கையால் தூக்குகிறேனென்று சொல்லி மேற்படி பச்சைத்தவளை நெய்யை கையில் தளும்பப் பூசிக்கொண்டு மண் வெட்டியைத் தூக்க ஆச்சரியப்படுவோர்கள் சிலர் அக்கினிபகவான் வசிய மென்பார்கள்.

157 நெருப்பில் காச்சிய யிரும்பு குண்டை பல்லால் கடித்தெடுக்கும் ஜாலம்.

விளாங்காய் பருமனுள்ள ஒரு இரும்பு குண்டை கருமான் உலையி லிட்டு சிவக்கக்காச்சி கொறடினால் தூக்கி ஒரு கல்லின்மேல் வைத்து சபையோரைப் பார்த்து இந்த குண்டை பல்லினால்கடித்து தூக்குகிறேன் பாரென்றுசொல்லி மேற்படி தவளை நெய்யை வாய்நிறைய அடக்கிக்கொ ண்டு குண்டை பல்லினால் கடித்து தூக்கலாம். வாய்ச்சுடாது. பார்ப்போ ரெல்லாம் பிரமித்து நிற்பார்கள் சிலர் அக்கினியைக் கட்டிவிட்டானென் பார் சிலர் கண்கட்டுவித்தை யென்பார்கள் சிலர் மகாமந்திரவாதியென்று மயங்குவார்கள் நெய்யை குழப்பியிழிந்து விடவேண்டும்.

158 இரும்பு கம்பியைக்காச்சி வைங்கோல் மேல்போட வைக்கல் வேகாதிருக்கும் ஜாலம்.

ஒருஅடி நீளமுள்ள ஒரு இரும்பு கம்பியை சிவக்கக்காச்சி கொறடி னால் தூக்கி சபையோர்களைப் பார்த்து இந்த கம்பியின்மேல் வைக்கப் பிரிசுற்றி வைக்கோல் வேகாதிருக்கும்படி செய்கிறேன் பாரென்று சொ ல்லிவைக்கப் பிரியை முன்னதாக தவளை நெய்யில் தோய்த்து வைத்திரு ந்து அதை யெடுத்துச்சுற்ற வைக்கோல் கொஞ்சமேனும் வேகாது ஆச் சரியப்படுவோர்கள் உடனே அந்த வைக்கோலை யெடுத்துவிட்டு சாதா [illegible] கம்பியைப்போட [illegible] யெரியும் பிரமிப் பார்கள்.

159 சங்கிலியைக் காச்சிக் கையாலெடுத்து உருவும் ஜாலம்.

இரும்பு சங்கிலியை கருமான் உலையில் போட்டுப் பழுக்கக்காச்சி கொறடாலெடுத்து ஒரு இரும்புதட்டில் வைத்துச் சபையோர்களைப் பார் த்து இந்த சங்கிலியைக் கையாலெடுத்து உருவுகின்றேன் பாரென்று சொல்லி [illegible] தவளைநெய்யைக் கையில் தளும்பத் தடவிக்கொண்டு சங்கிலியையெடுத்து உருவ ஆச்சரியப்படுவோர்கள்.

160 நெருப்பின்மேல் நடக்கும் ஜாலம்.

ஜாலதூரமிடத்தில் தேவையான மட்டும் கட்டைகளைப் போட்டுக் கொளுத்தி யெரித்து தீயமர்ந்தபின் நெருப்பை பரப்பி சபையோரைப்

பார்த்து இந்த நெருப்பை மெறிக்கிறேன் பாரென்று சொல்லி மேற்படி தவளைநெய்யை காலின் பாதங்களில் தளும்பப் பூசிக்கொண்டு நெருப்பில் குதிக்க கால்சுடாது [illegible] பார்ப்போர்கள் மிரண்டு பிரமித்து நிற் பார்கள்.

161 ஆகாயத்தில் [illegible] அன்னம் பறந்துவரும் ஜாலம்.

[illegible] அன்னம்போல் ஒன்றுசெய்து அதற்கு வர்ணமுதலான துலக்கியெடுத்து தயார்செய்துவைத்துக் கொள்ளவேண்டும் பின்பு [illegible] தைச் சூரிச்செடியைக் கண்டுபிடித்து சூரியகிராணத்தில் மீனலக்கினமும் அவி ட்டநட்சத்திரமும் கூடியதினத்தில் அச்செடிக்கு மஞ்சள் நூலினால் காப்பு கட்டி [illegible] விடவேண்டும் பிறகு கன்னியா லக்கினத்திற் சென்று அச்செடிக்குக் காயம்படாமலும் வேர் அறாமலும் பிடுங்கிக் கொண்டுவந்து வேரை பத்திரப்படுத்தி வைத்துக்கொண்டு ஜாலம்பிடும்டத்தில் மேற்படி மாஅன்னத்தை சபையோர்களுக்குக் காட்டி இந்த ஆகாயத்தி லெறிந்து பார்த்து இறங்கி வரும்படியாகச் செய்கிறேன் பாரென்று சொல்லி அன் னத்தை கையிலெடுத்து தந்திரமாக மேற்படி வேரை மோதிரம்போல் அன்னத்தின் காலில்கட்டி ஆகாயத்தில் விட்டெறிய அது உயரம்போய் திரும்பி கீழேவரும்போது பார்க்கையில் உயிருள்ள அன்னம்பறந்து வருவதுபோலிருக்கும் பார்ப்பவர்களெல்லாம் பிரமித்து ஆனந்திப்பார்கள் கீழே விழும்போது மாஅன்னம்போல் தானிருக்கும்.

162 ஜலத்தின்மேல் நடக்கும் ஜாலம்.

ஜலந்திரட்டுக் [illegible] யைக் கொண்டுவந்து வெய்யலில் போட்டு உலர்த்தி [illegible] செய்து ஐங்கோலத் தைலம்விட்டு மைபோல் அரை த்து பரணியில் வைத்துக்கொண்டு அந்த மையை பாதக்குறட்டில் கீழ்ப் புறந்தடவிகாலில் போட்டுக்கொண்டு ஜலத்தின்மேல் பயமில்லாமல் நடக் கலாம் அப்படிக் கலங்காமல் இத்தமையை வாகனங்களுக்குப்பூசி அதின் மேல் ஏறிக்கொண்டு ஜலத்தின்மேல் போகலாம் ஆனால்கிணர் குளந்தவிர ஆற்றில் போகக்கூடாது.

163 வேறுவிதம் தண்ணீர்மேல் மிதக்கும் ஜாலம்.

குடோசரி யென்கிற மூலிகைவேறும் பச்சைத்தவளை [illegible] ணமும் இவை இரண்டும் போதுமானமட்டும் சேர்த்து அரைத்து [illegible] றத் தடுக்கில் ஒருபுறம் தளும்பப்பூசி உலர்த்தி குளத்தில் அல்லது கிணத்தில் போட்டு தான்விபூதி ருத்திராட்சம் முதலானதும் பலமாகப்பூசி கையில் ஜெபமாலை யெடுத்துக்கொண்டு அந்தத் தடுக்கின்மேல் மல்லாக்கப் படுத் துக்கொண்டு ஈஸ்பரனை நோக்கி யோகம்செய்பவன்போலிருக்கவும் ஆனால் மூக்கில் நெட்டிக்கொண்டேயிருந்தால் இக்கரையும் [illegible] போய்ச்

கொண்டும் வந்துக்கொண்டு யிருக்கும். தடுக்குந் தண்ணீரில் மூழ்காது கண்டவர்பிரமிப்பார்கள் கடவுளைப்போலவந்தனைவழிபாடுகளும்செய்வார்.

164 ஆகாயத்தில் விட்டப்புறுவை புட்டியில்வரும் ஜாலம்.

ஒரு கருப்பு புட்டியைக் கொண்டுவந்து அடியில் அறுத்து இரண்டு வெள்ளைப்புறு கொண்டுவந்து ஒன்றை புட்டியில் தகரத்தினால் புனல் போல்செய்து அடியில்சொருகி தாழ்பூசி யிருக்கவும். ஜாலமாடும் சபையில்வந்து மற்றொரு வெள்ளைப்புறுவை சபையில் காட்டி வாசலில்வந்து ஆகாயத்தில் விட்டுவிடவும். பின்பு இத்தபுட்டியை மேஜையின்மேல் வைத்து குட்டிச் சாத்தானுகிய பொம்மையை அருகில் வைத்து மாத்திரக் கோலை கையிற்பிடித்து பொம்மையைப்பார்த்து ஓ குட்டிச்சாத்தான் இப்போது நான் விட்டப்புறு இந்த புட்டியில் வருமா வராதல்லவா (சொல்) நீ எனக்கு அடிமையா இருப்பது நிஜமானுல் சீக்கிரம் இந்தபுட்டியில் வரும்படியாய்ச்சொல் பார்ப்பாமென்று சற்றுநேரம் மந்திரம்செய்பவன்போல் கண்ணை மூடிக்கொண்டிருந்து இந்த புட்டியை எடுத்துக் கீழே பளீலென் றுதட்டினுல் புறுபறந்து போகும். பார்ப்பவர்க ளெல்லாம் பிரமித்து இது இந்திரஜாலமா யிருக்குதென்பார்கள்.

165 களவு காணும் ஜாலம்.

ஒரு வீட்டில் களவுபோகுமாகில் வாசலில்மெழுகி கோலம்போட்டு பசுஞ்சாணத்தினுல் பிள்ளையார்வைத்து அதின்சிரசில் அருகன்பில் சொருகி பின்பு அந்தவீட்டில் இருப்பவர்கள் பேரையெல்லாங் கேட்டு பனம் ஓலை குருத்துகளில்வெவ்வேறாக எழுதிக்கொண்டு வரும்சீட்டென்றுகூட வைத்துக்கொண்டு இரகசியமாய்ச் சந்தேகமிருக்கும் ஆளைத்தீரவிசாரித்து ஒரு சட்டியில் சாம்பலைவாரி வாசலில்வைத்து சந்தேகப்பேர்வழிச்சீட்டை தந்திரமாய்ச் சாம்பலில் சொருகி பின்பு நெருப்பைவாரி அச்சட்டியிலே போட்டு வீட்டிலிருந்துத் தூதைபோல் சீட்டுகளை எண்ணி அந்தநெருப்பு சட்டியில் போட்டுவிட்டு மந்திரம் செய்வதுபோல் விபூதி எடுத்து வழிவரையில் ஊதி அக்கினியில் கொஞ்சம்போட்டு அனைவருக்கும் விபூதி கொடுத்து பிறகு சொல்லவேண்டியது இப்போதுச் சீட்டையெல்லாம் நெருப்பில் போட்டுவிட்டேன் களவு செய்யாதவர் சீட்டெல்லாம் சாம்பலாகப்போய்விடும் களவுசெய்தவர் சீட்டு வேகாமற்படிக்கு பசசென்று யிருக்கும் இதுதான் திவ்யசாஸ்திரமென்று ஒரு குடத்தில் தண்ணீர் கொண்டுவரும்படி சொல்லி அத்தண்ணீரில் சாம்பலுடன் போட்டுக்கரைத்தால் சந்தேகச்சீட்டு மிதந்துவிடும்.

166 வேறுவிதம் களவுபிடிக்கும் ஜாலம்.

ஒரு வீட்டில் திருடுபோவமாகில் ஒரு அறையைக் காலிசெய்து மெழுகி கோலமிட்டு பசுஞ் சாணத்தால் பிள்ளையார் பிடித்து வைத்து கற்

பூரம் சாம்பிராணி வெத்திலைப்பாக்கு பழம் அவல்கடலை எலுமிச்சம்பழம் விபூதிகட்டி இவை முதலானதும் கொண்டு வரும்படியாகச் செய்து அந்த அறைக்குள் சென்று கதவை மூடிக்கொண்டு தன்மனம்போல் ஒரு சக்கரமெழுதி பழமுதலானதையும் வைத்து கற்பூரம் கொளுத்தி பின்பு நீ செய்யவேண்டியத் தந்திரமாவது ஒருஅடி நீளமுள்ள ஒருஇரும்பாணி சம்பாதித்து அதின்மேல் நல்ல வாசனையுள்ளப் பெருங்காயத்தை தளும்பப்பூசி சக்கரத்தின் மத்தியில் நட்டுவைத்து விடவேண்டும் ஆனால் ஆணியும் பெருங்காயமும் முன்னதாகவே தயார்செய்து வைத்திருக்கவேண்டும் அறைக்குள் வேலை முடிந்தவுடன் கதவை திறந்துக்கொண்டு வெளியில்வந்து அவ்வீட்டிலிருப்பவர்கள் அனைவரையுமழைத்துச் சொல்லவேண்டியது. இதோ இந்த அறைக்குள் நட்டுயிருக்கும் இரும்பாணியை ஐந்து விரலினாலும் கெட்டியாக அழுந்தப்பிடித்து விட்டு வரவேண்டும். ஆனால் களவு செய்தவர்கள் கையை ஆணி கெட்டியாகப் பிடித்துக் கொள்ளுமென்று பயமுறுத்தி பின்பு ஒவ்வொருவராக அறைக்குள்விட்டு கதவைமூடிக்கொள்ளவேண்டும் அனைவரும் அறைக்குள்சென்று வந்தபின்பு ஒவ்வொருவர்கையையும் முகர்ந்துப்பார்க்க பெருங்காயம் வாசனை அடித்தால் அவர்கள் களவுசெய்திருக்க மாட்டாரென்று நம்பவேண்டும் களவுசெய்தவர் பயந்து ஆணியைத் தொடமாட்டார் அவர்கள்கையில் பெருங்காய வாசனையிராது கண்டுகொள்ளவும்.

167 எட்சணி வசியமை.

பச்சை ஓணான் பிடித்துவந்து அதினுடையப் பிச்சியை எடுத்துக் கொண்டு அத்துடன் இசைமயக்கிப் பொடியும் மதிமயக்கித்தூளும் ஊமத்தன்வேர்த்தூளும் சமனாகச்சேர்த்துக் கல்வத்திலிட்டு ஐங்கோலத்தைலம் விட்டு மைபோல் அரைத்துச் சிமிழில் வைத்துக்கொண்டு மோகினியையும் ஜாலக்காரனையும் தியானிக்க வேண்டிய முறைமை எவ்விதமெனில் ஸ்ரீம் இரீம் கிலியும் மாயாமோகினி நமாவென்று இருபத்தோர் நாளைக்கு மூன்றுகாலமும் தவராமல் லட்சம் உருகொடுத்துவரச் சித்தியாகும்.

163 பெண்ணுருவாகும் ஜாலம்.

ஜாலமாடும் சபையில் வந்து சிறிது ஜாலமாடிக் கொண்டேயிருந்து மேற்படி ஜாலக்கார் வசியமையில் கொஞ்சமெடுத்து நெற்றியில் திலர்தமிட்டுக்கொள்ள உடனே பார்க்கும் சபையோர்முதல் யாவர்களும் அதிக ரூபவதியானப் பெண்ணைப்போல் தோன்றும் அவர்களுக்கண்டு வாய்வாரூ ண்டு மதிமயங்கி மோகித்து நிற்பார். சிலர் ரம்பை ஊர்வசி மேனகை திலோர்த்தமையோ அல்லது தெய்வப்பெண்ணோ என்று திகைப்பார்கள் உடனே நெற்றியிலிட்ட மையைத் துடைத்துவிடப் பெண்ரூபமாறி ஆண் ரூபமாகிவிடும் சபையோர்கள் பார்த்துப் பிரமித்து பெண்ணின் அழகை ஒருவரோடொருவர் சொல்லி வர்ணித்துக் கொண்டேயிருப்பார்கள்.

169 எட்சணி வசியமாக வேறுவித ஜெபம்.

நேமநிஷ்டையோடேயிருந்து தியானிக்கும் விதமெவ்விதமெனில் ஸ்ரீம் இரீம்கிலியும் அவ்வும்மவ்வும் சவ்வும் நமசிவயுவென்று மூன்றுகாலமும் ஒரு மண்டலம் வேளையொன்றுக்கு லட்சம் உருகொடுத்து எட்சணியைத் தியானித்துக் கேட்கவேண்டியது யாதெனில் பரிமளவஸ்துக்கள் ஜாதிக்காய் கிராம்பு ஜாபத்திரி வால்மிளகு பாக்குவெத்திலை சர்க்கரைகற்கண்டு கனிவர்க்கங்கள் பலகாரவகைகள் அன்னம் இவையெல்லாம் நான் நினைக்கும்போது கொண்டுவந்துத் தரவேணுமென்று கேட்டுக்கொள்ளவேண்டும் நாற்பதுநாளும் உருகொடுத்துச் சித்தியானவுடன் தெப்பக்கால் மூலிகையென்னும் செடிக்கு வெள்ளிக் கம்பியினுற் காப்புகட்டி அந்தச்செடியருகில் அக்கிசக்தி எட்டுநாளும் தவராமல் சென்று மேற்படி எட்சணி மந்திரத்தை ஓதிதியானித்து எட்டாநாள் பொங்கலிட்டு பலிகொடுத்து தூபதீபங்காட்டி வேரைப்பிடுங்கிக் கொண்டுவந்து அதின்மேல் ஐங்கோலக்கருவைப்பூசி ஸ்திரீகள் வீட்டுக்கேத் தூரமானச் சீலையை மேலேசுற்றி தங்கத்தால் குளிசம்செய்து அதில் அடைத்து வாயைமூடி பூசையில் வைத்து மேற்படி எட்சணி மந்திரத்தை லட்சம் ஓதி கடைசிதினத்தில் பூசைப் புலமாகப்போட்டு குளிசத்தை யெடுத்தும் பட்டுக்கயர் சேர்த்து வலதுகையில் கட்டிக்கொண்டு மேற்சொன்ன வஸ்துக்கள் ஒவ்வொன்றையும் அழைப்பிக்க சித்தியாகவரும்.

170 சந்தனம், பன்னீர், புஷ்பம், ஜாதிக்காய், ஜாபத்திரி, வால்மிளகு, பாக்கு, வெத்திலை, சர்க்கரை, கற்கண்டு, கனிவர்க்கங்கள், பலகாரம், முதலானவைகளையும் அழைப்பிக்கும் ஜாலம்.

வெங்கலத்தினுல் ஒன்பது சிறுகிண்ணம் செய்து அந்த அளவாகவே தேங்காய் கொட்டாங்கச்சியும் சம்பாதித்து வைத்துக்கொண்டு மாந்திரைக்கோலொன்று தயார்செய்து வைத்துக் கொள்ளவேண்டும். ஜாலமாடுமிடத்தில் ஜக்கு ஒரு பெரியத்தாம்பாளம் கொண்டு வரும்படிசொல்லிச் சபையோர்களைப்பார்த்து சபையோர்களே உங்கள் அனைவருக்கும் மரியாதை செய்யும்படியாக சில வஸ்துக்களை அழைப்பிக்கின்றேன் பாருங்களென்றுசொல்லி மேற்படி ஒன்பது கிண்ணத்தையும் ஒன்பது தேங்காயின் கொட்டாங்கச்சியையும் சபையோர்களுக்குக் காட்டி பூமியின்மேல் கவிழ்த்து விடவேண்டும். ஒரு கிண்ணத்தையும் ஒரு கொட்டாங்கச்சியையும் கையிலெடுத்து அதின் இரண்டு வாயையும் ஒன்றாகமூடி கிண்ணமும் கையும் மறையும்படியாக மேலே ஒருசிலை சவுக்கத்தை மூடி எட்சணியை தியானித்து அம்மணி நல்லவாசனையுள்ள அரைத்த சந்தனம் இக்கிண்ணத்தில் தரவேணுமென்று மனதில்நினைத்து மந்திரத்தை தியானிக்க உடனே சந்தனம் கிண்ணம் நிறைய உண்டாகும் உடனே மேல்

மூடியதுணியை யெடுத்துவிட்டு சந்தனத்தை தட்டில்வைக்க சபையோர்கள் ஆச்சரியப்படுவார்கள். ஆனால் மேற்சொன்ன தினுசுகள் ஒவ்வொன்றையும் இவ்வாறாகவே ஒவ்வொரு கிண்ணத்தை யெடுத்து எட்சணி மந்திரத்தை தியானித்து அழைக்கவேண்டும் தடையில்லாமல் சகலமும்வரும் சபையோர்களும் பிரமிப்பார்கள்.

171 மாஞ்செடி முளைக்கும் ஜாலம்.

ஏழிஞ்சில் விதையைக்கொண்டுவந்து அதைப் பூர்தயிலமாகச்செய்து மாங்கனியைக் கொண்டுவந்து ஒரு சொம்பில் அதின் சாரைப் பிழிந்துக் கொண்டு தோலை நீக்கிவிட்டு அந்தப் பழஞ்சாற்றுடன். ஐங்கோலக் கருவைக் கூட்டி மேற்படி பூந்தயிலத்துடன் சேர்த்து அந்த மாங்கொட்டையைத் தயிலத்தில் ஊறப்போட்டு ஒருநாள் முழுதும் ஊறியபின் மாங்கொட்டையை எடுத்துச் சூரியன் ஒளிபடாமல் நிழலிலுலர்த்தி வைத்துக் கொள்ளவேண்டும். ஜாலமாடுமிடத்தில் இந்தமாங்கொட்டையைக் கையிலெடுத்து சபையோர்களுக்குக்காட்டி பூமியில்நட்டு மாஞ்செடி முளைக்கச் செய்கிறேன் பாரென்று சொல்லி பூமியில் கொஞ்சம் பள்ளம் தோண்டி இந்த மாங்கொட்டையைப் புதைத்து மேலேமண்ணை மூடிவிட்டு ஜலம்வார் [illegible] மேலே மூடிவிடவேண்டும். இவ்வாறாக நாலுதரம்திறந்து தண்ணீர் வார்க்கவேண்டும் இவ்வகைச்செய்ய மூன்றேமுக்கா நாழிகைக்குள் இலைவிட்டுக் கொழுந்தாகி முதிர்ந்த இலையாகி, பூவாகி, பிஞ்சாகி, காயாகிக் கனியாகி மரம் தழைத்திருக்கும் பார்ப்போர்கள் பிரமித்து ஆச்சரியப்படுவார்கள். கனியை அறுத்து சபையோர்களுக்கும் காட்டலாம். ஆனால் மூன்றேமுக்கா நாழியிலுண்டாகி மூன்றேமுக்கா நாழியில் மறைந்துபோகும் பழம் அந்தப்பழமாக யிருக்கவேணும்.

172 தீபத்தைப் பார்த்தால் வீடெங்கும் [illegible] பாம்பாய்த் தோற்றும் ஜாலம்.

நல்லப்பாம்பின் கொழுப்பை வாங்கிக் கொண்டுவந்து துல்லிதமான வஸ்திரத்தில் தடவி நிழலில்உலர்த்தி திரியாகச்செய்து வைத்துக்கொள்ளவும் இரவில் ஒரு கலசத்தில் இந்தத்திரியைப்போட்டு முத்தெண்ணெய் விட்டுக் கொளுத்திவிட்டு தீபத்தைப்பார்க்க வீடெல்லாம் நல்லப்பாம்பாகத்தோற்றும் பார்ப்பவர்களெல்லாம் மிரண்டு ஓடுவார்கள். அந்தத்திரியையெடுத்துவிட்டு வேறெதிரிபோட பாம்பெல்லாம் மறைந்துவிடும்.

173 பாம்பு உண்டாக்கும் ஜாலம்.

பேரோஸ் சர்ப்பபிண்டு என்னும் மருந்தைக் கொண்டுவந்து சபைமுன்வைத்து கொளுத்தினுல் சர்ப்பம்போல் படம்விரித்து ஆடும். பார்க்கும் சபையோர்கள் சர்ப்பமென்றே நம்புவார்கள். இந்தமருந்து சவுகார் பஜார் கடையில் அகப்படும்.

174 நுடப்பம் சுழலும் ஜாலம்.

ஒரு தேரினைத் நுடப்பத்தை யெடுத்து ஒருவருக்கும் தெரியாமல் தந்திரமாக முறிக்கி அதின்முனையில் கொஞ்சம் மிளகு, சிறிய துண்டு நுடப்பத்தை அதில்சொருகி, பூமியில் மணலைக் குவித்து அதில் சொருகியாவது, அல்லது ஒருவர் கையில் குடுத்து சபையோர்களைப் பார்த்து இந்நுடப்பத்தைக் கிருகிருவென்றுச் சுழலும்படிச்செய்கிறேன் பாரென்று ஒரு சொம்பில் ஜலம் கொண்டுவரச்சொல்லி சல்மலையாரா பகவதி இந்த நுடப்பத்தைகிருகிருவென்றுசுழலச்செய்வாயென்று கொஞ்சம்ஜலத்தைக் கையில் அள்ளி நுடப்பத்தின்மேல்விட கிருகிருவென்றுச் சுழலும்பார்ப்பவர்கள் ஆச்சரியப்படுவார்கள். கையில் பிடித்திருப்பவனும் மிரளுவான்.

175 நுடப்பம் தண்ணீரில் நிற்கும் ஜாலம்.

ஒரு நுடப்பத்தையெடுத்து ஒருவருக்குந்தெரியாமல்தந்திரமாக அதின் அடியில் கனத்த அங்குலத்தியாவது ஊசியை யாவது குத்தி ஒருவர்கண்ணுக்கும் தெரியாமற்செய்து இரண்டடி உயரமுள்ள மரத்தொட்டியிலாவது பித்தளை செம்புதலையிலாவது மேற்படி நுடப்பத்தைப் போடநிற்கும் ஆச்சரியப் படுவார்கள் ... தில் தண்ணீர் நிறைய விட்டிருக்க வேணும்.

176 சாணிபுருண்டை தண்ணீரில் மிதக்கும் ஜாலம்.

பெருமருக்கு உள்ளத் தக்கையையெடுத்து அதைப் பந்துபோல் செய்து அதின்மீது சாணத்தை நன்றாகப்பூசி வைத்துக் கொண்டிருந்து வேறொரு சாணி உருண்டையை அனைவருக்கும் காட்டி அதைத்தந்திரமாக மறைத்துப் போட்டு மேற்படி உருண்டையைத் தண்ணீரில் போட மிதக்கும் ஆச்சரியப்படுவார்கள்.

177 தீபமேற்றிப் பார்த்தால் வீடெல்லாம் தவளையாகக் காணும் ஜாலம்.

தவளையைப்பார்த்து ஆதிவாரத்தில் கொண்டுவந்து அதின் கொழுப்பையெடுத்து ஒரு துல்லி தமாஷ்சலவைமல்லில் துவட்டி நிழலில் உலர்த்திக் காய்ந்தபிறகு அந்தவஸ்திரத்தை திரிசெய்து வைத்திருந்து இரவில் இந்த வத்தியைப் போட்டுத் தீபமேற்றித் தீபத்தைப்பார்க்க வீடெங்கும் நிற்கும் மனிதர்மேலெங்கும் தவளையாகத் தோற்றும் பார்ப்போர்கள் ஆச்சரியப் படுவார்கள்.

178 வேருவிருமம் சாதம் வேகாதிருக்கும் ஜாலம்.

நிலவேம்புவேர் கொண்டும் வந்து சிறியதுண்டாய் அரிசி அரிக்கும் போதாவது உலைப்பானையிலாவது போட்டு விட்டால் சாதம் வேகாது வேரை யெடுத்துவிட்டு மருஉலை வார்த்துவைத்து அரிசியை நன்றாய்க் கழுவிப்போடச் சாதம்வேகும்.

179 இரும்பு குண்டை ஆகாயத்திலேரிய அந்திரமாக நிற்கும் ஜாலம்.

நத்தைச் சூரிச்செடியைக் கண்டுபிடித்து சுவாதிநட்சத்திரம் கும்பலக்கினம் ஆதிவாரமும் கூடியதினத்தில் அச்செடிக்கு மஞ்சள் நூல் காப்பு கட்டிவிட்டு வந்து விடவேண்டும், மரு ஆதிவாரத்தில் சிம்பலக்கினத்திற் சென்று பொங்கலிட்டுப் பலிகொடுத்து பூசைப்போட்டு செடிக்குக்காயம் படாமலும் வேர் அராமலும் தோண்டி யெடுத்துக் கொண்டுவந்து பொன்தகட்டினால் கடையம்செய்து அதில்அந்தவேரை அடைத்து விநாயகரைப் பூசித்து வலதுகையில் மாட்டிக்கொள்ளவும் ஜாலமாடுமிடத்தில் வந்து இரும்புகுண்டை கையிலெடுத்து சபையோர்களுக்குக் காட்டி இந்த குண்டை ஆகாயமார்க்கமாக விட்டெறிந்து. அந்திரமாக நிற்கச்செய்கிறேன் பாரென்றுசொல்லி குண்டையெடுத்து ஆகாயமார்க்கமாக விட்டெறிந்து வலது கையிலுள்ளக் கடகத்தைக்கழட்டி இடதுகையில் பிடித்து பூமியில் தாழ்த்திப் பிடிக்க குண்டு அந்திரமாக நிற்கும் சபையோர்கள் ஆச்சரியப் படுவார்கள். உடனே அந்த கடகத்தை வலதுகையில் பிடித்து குண்டுக்கு நேராகத் தூக்கிக்காட்ட கீழே விழுந்துவிடும்.

180 சிரசில்லா மனிதர்களாகத் தோற்றும் ஜாலம்.

வெட்டுண்ட மனிதனுடையத் தலையைப் புதைத்திருக்கு மிடத்தைத் தேடிக் கண்டுபிடித்து அதைத்தோண்டி எடுத்துக்கொண்டு வந்து அதின் எலும்பை எடுத்துப் பொடித்து அதினுடன் ஐங்கோலத் தயிலத்தைச் சேர்த்து வைத்துக்கொள்ளவும் இரவில் ஜாலமாடுமிடத்தில் இந்த எலும்பை தீவட்டியில் வைத்துத்தி விளக்கெண்ணெ வார்த்து தீவட்டியைக் கொளுத்தி பிடிக்க சபையிலுள்ளவர் ஒருவரை ஒருவர் பார்க்கத் தலையில் லாமுண்டமாகத் தோற்றும். சபையோர்கள் பயந்துபிரண்டு ... மூலை ஓடுவார்கள். சிலர் தலைகளை தடவிப் பார்த்துக்கொண்டே திகைத்து நிற்பார்கள்.

181 இந்திரஜாலமை.

பூனை ஒன்று கிரிப்பிள்ளை ஒன்று இரட்டைவால் அரணை ஒன்று இசைப்பூடு பூசி பத்து பேய்பீர்க்கன் விரை பலம்இரண்டு புல்லாமணக்கு விரைப்பலம் இரண்டுசேர்த்து இவைகளை யெல்லாம் நருக்கி பேய்கருப்பன் சாற்றில்போட்டு ஒரு ஜாமம்பொருத்து யெடுத்து பூமியின்மீது உலரப்போட்டு பின்பு ஆதளையின்பாலில் ஒரு ஜாமம் ஊரப்போட்டு இவைகளையெல்லாம் ஒரு பாண்டத்திற் போட்டு பூந்தயிலமாகக் காச்சிவாங்கி ஐங்கோலத்தயிலம் கூடச்சேர்த்து கல்வத்திலிட்டு அரைத்து வருகையில் ரசமும் வெண்ணெயும் வகைக்கு கழஞ்சு கால்சேர்த்து முப்பூவும் கழஞ்சியும்சேர்த்து மைபோல் அரைத்து எடுத்து சிமிழில் பத்திரமாக வைத்துக்

கொள்ளவும் ஜாலக்காளையும் நீலகண்டியையும் பூசைசெய்யும் விதம் ஸ்ரீம் ஹிரீம் கிலியும் சவ்வும் ஐயும் அவ்வும் மவ்வும் யவ்வும் கூடகூட நீலகண்டி அம்மா என்று இருபத்தோர் நாள் மூன்றுவேளையும் தவறாமல் வேளை ஒன்றுக்கு லட்சம் உரு செபிக்க மைக்கு உயிருண்டாகும் பின்பு நினைத்த ஜாலங்கள் நிரமாக ஆடலாம்.

182 நூலேணி ஜாலம்.

திரித்தநூற் கயரையெடுத்து மெத்தை மீதேனும் மரங்கள் மேலும் இன்னம் எதின்பேரிலேனும் மேற்படி கயற்றில் இந்த மையைத் தடவிப் போட நூலேணிபோல் படிபடியாகநிற்கும் பார்ப்பவர்கள் பிரமித்து ஆச்சரியப் படுவார்கள்.

183 படைகள் உண்டாக்கும் ஜாலம்.

ஜாலமாடு மிடத்தில் சபையோர்களைப்பார்த்து இப்போது முப்பத்திரண்டு ஆயுதங்களுடன் படைகளை வரவழைக்கின்றேன் பாருங்களென்று சொல்லி நீலகண்டியைய தியானித்து ஜாலக்காளைபூசித்து மேற்படிமையை கொஞ்சம் கையிலெடுத்து பூமியிலுள்ள மண்ணை அள்ளி நாலுதிசையிலும் போட உடனே நாலுதிசையிலுமிருந்து முப்பத்திரண்டு ஆயுதங்களுடன் திரளாகப் படைகள்வரும். கண்டோர்களெல்லாம் கலங்கிமிரண்டு கதி கெட்டு ஓடுவார்கள்.

184 வாழைத் தண்டை வெட்ட மனிதர் தலைபோல் உருளும் ஜாலம்.

ஜாலமாடு மிடத்தில் நாலடி நீளமுள்ள ஒரு வாழைத்தண்டைக் கொண்டுவரும்படிச்சொல்லி அந்தத் தண்டைக்கையில் பிடித்துசபையோரைப்பார்த்து இந்த வாழைத்தண்டை வெட்டி மனிதன்தலையாக விழச்செய்கிறேன் பாரென்றுசொல்லி நீலகண்டியம்மனைத் தியானித்து அம்மணி இந்தவாழைத்தண்டை வெட்டுகிறேன் மனிதன்தலைபோல் தோற்றவேணுமென்று தியானமோதி தந்திரமாக மேற்படி மையையெடுத்து வாழைத்தண்டு முழுதும்பூசி இடதுகையில் தண்டைப்பிடித்து வலதுகையில் கத்திகொண்டு தண்டைவெட்ட துண்டுக்கு ஒரு தலையாக உருளும் ஆச்சரியப்படுவார்கள். ஆனால் தலைகளை எல்லாம் உடனே எடுத்து மறைத்து போவென்று சொல்லி விடவேண்டும்.

185 கலியாண பூசினிக்காயை வெட்ட யானைத்தலையாகும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் ஒருகலியாணப் பூசினிக்காயைக் கையிலெடுத்து சபையோர்களுக்குக் காட்டி இந்தப் பூசினிக்காயை வெட்டுகின்றேன் ஆனைத்தலையாகுது பாருங்களென்று சொல்லி நீலகண்டியை தியானித்து அம்மணி இந்தப் பூசினிக்காயை வெட்டுகின்றேன் ஆனைத் தலையாகத்

தோற்றச்செய்ய வேணுமென்று சொல்லித் தந்திரமாக மேற்படி மையை பூசினிக்காயின் மீதுத்தடவி கத்தியால் ஓங்கிவெட்ட உடனேயானைத்தலைபோல் தோற்றும் சபையோர்கள் மனங்கலங்கி மதிமயங்கிப் பிரமித்து மகா மந்திரவாதியென்றுக் கொண்டாடுவார்கள். ஆனால் அத்தலையை உடனே மறைந்துப் போவென்று சொல்லவும்.

186 பூசினிக்காயை வெட்டக் குதிரைத் தலையாகும் ஜாலம்.

ஜாலமாடு மிடத்தில் ஒரு பூசினிக்காயைக் கையிலெடுத்துச சபையோர்களுக்குக் காட்டி இந்தப் பூசினிக்காயை வெட்டி குதிரைத் தலையாகும்படிச் செய்கிறேன் பாருங்களென்றுசொல்லி நீலகண்டியைதியானித்து அம்மணி இந்தப் பூசினிக்காயை வெட்டுகின்றேன். குதிரைத் தலைபோல் தோற்றச்செய்வாயென்று சொல்லி தந்திரமாக மேற்படி மையைப் பூசினிக்காயின்மேல் தடவி காயைநிலத்தில் வைத்து கத்தியால் ஓங்கிவெட்ட உடனே குதிரை தலையாகத் தோற்றும். சபையோர்கள் ஆச்சரியப்படுவார்கள் உடனே தலையை மறைந்துச் சல்[illegible]போவென்று சொல்லவும்.

187 கெச்சக்காயை வெட்ட ஆட்டுத்தலையாகும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் கெச்சக்காயைக்கையிலெடுத்து சபையோர்களுக்குக்காட்டி இந்த கெச்சக்காயை வெட்டுகிறேன் ஆட்டுத் தலையாகுது பாருங்களென்று சொல்லி நீலகண்டியை தியானித்து அம்மணி ஆட்டுத் தலையாக வேணுமென்று சொல்லி மேற்படி மையைத்தடவி வெட்ட ஆட்டுத்தலைபோல் தோற்றும். ஆனால்எத்தனை கெச்சக்காயை வெட்டுகின்றோமோ அத்தனை தலைகளாகத் தோற்றும். ஆச்சரியப் படுவார்கள்; உடனே தலையை மறைத்து சல்போவென்று சொல்லவும்.

188 பச்சை வைக்கக்காரை வெட்ட நல்லப்பாம்பு தலையாகும் ஜாலம்.

ஜாலமாடு மிடத்தில் பச்சை வைக்கக்காரைக் கொண்டு வரும்படி சொல்லி அதை வாங்கிச் சபையோர்களுக்குக் காண்பித்து இந்தவைக்கக் காரைவெட்டி பாம்புத் தலையாகும்படி செய்கிறேன் பாரென்றுசொல்லி மேற்படி மையைத் தந்திரமாக வைக்கக்காரிற் றடவி ஒரு மணைமேல்வைத்துகத்தியால் துண்டுதுண்டாக வெட்டிக்கொண்டேவர எத்தனைத்துண்டாகிறதோ அத்தனைப்பாம்புத் தலையாகத்தோற்றும். படத்தை விரித்துக் கொண்டிருக்கும் பார்ப்போர்கள் பயங்கொள்வார்கள். உடனே தலைகளை மறைத்து விடவேண்டும்.

189 பனங்காயை வெட்டி பன்றித் தலையாகும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் பனங்காயொன்றைக் கையிலெடுத்து சபையோர்களுக்குக்காட்டி இந்தப் பனங்காயை வெட்டி பன்றியாகச் செய்கிறேன்

பாரென்றுசொல்லி நீலகண்டியை தியானித்து அம்மணி இந்தப் பனங்கா யை வெட்டுகிறேன் பன்றிதலையாகத் தோற்றச் செய்வாயென்று சொல்லி மேற்படி மையை யெடுத்துத் தந்திரமாக பனங்காயிற்றடவி காயை பூமி யின்மேல் வைத்து கத்தியால் நோக்கிவெட்ட உடனே பன்றி தலையாகும் பார்ப்பவர்கள் ஆச்சரிப்பார்கள் உடனே தலையை மறைத்து சல் ஓடிப்போ யென்று சொல்லவும்.

190 பேய் பீர்க்கங்காயை வெட்ட புலித் தலையாகும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் ஒரு பேய்பீர்க்கங்காயை கையிலெடுத்துச் சபை யோர்களுக்குக் காட்டி இந்தப்பீர்க்கன் காயைவெட்டிப் புலித்தலையாகச் செய்கிறேன் பாரென்றுசொல்லி நீலகண்டியை தியானித்து ஓ அம்மணி இந்த பேய்பீர்க்கன்காயை வெட்டுகிறேன் புலித்தலையாகத்தோற்றச்செய்ய வேண்டுமென்று சொல்லி மேற்படி மையைத் தந்திரமாகக் காயிற்றடவி பூமியின்மேல் வைத்து கத்திகொண்டு மோதிவெட்ட உடனே புலித்தலை யாகத்தோற்றும் பார்ப்பவர்கள் பயந்துப் பதறிபோவார்கள். ஆனால் உடனே தலையை மறைத்து சல் காட்டிற்கு டிப்போவென்று சொல்லவும்.

191 சோரக்காயை வெட்டப் பசுத்தலையாகும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் ஒரு சொரக்காயைக் கொண்டுவரும்படியாகச் சொல்லி அதை வாங்கிச் சபையோர்களுக்குக்காட்டி இந்த சொரக்காயை வெட்டிப் பசுத்தலையாகும்படிச் செய்கிறேன் பாரென்றுசொல்லி நீலகண் டியை தியானித்து அம்மணி இந்த சொரக்காயை வெட்டுகிறேன் பசுத் தலையாகத் தோற்றச் செய்யவேணுமென்று சொல்லி மேற்படி மையை யெடுத்துத் தந்திரமாக சொரக்காயிற்றடவி பூமியின்மேல் வைத்து கத்தி கொண்டு ஓங்கிவெட்ட உடனே பசுத்தலையாகத் தோற்றும். பார்ப்போர் கள் ஆச்சரியப்படுவார்கள். ஆனால் தலையை உடனே மறைத்து சல் பசுக் கூட்டத்திற்போய் சேரென்று சொல்லவும்.

192 துமிட்டிக்காயை வெட்ட யெருமை தலையாகும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் ஒரு ஆத்துத்துமிட்டிக்காயை கையிலெடுத்து சபை யோர்களுக்குக்காட்டி இந்த ஆத்துத்துமிட்டிக்காயை வெட்டி எருமைத் தலையாகச்செய்கிறேன் பாரென்றுசொல்லி நீலகண்டியைத் தியானித்து அம்மணி இந்த துமிட்டிக்காயை வெட்டுகிறேன் எருமைத்தலை யுருவாகச் செய்யவேண்டுமென்று சொல்லி மேற்படிமையை தந்திரமாக காயிற்றடவி பூமியில்வைத்துக் கத்தியால் நோக்கிவெட்ட உடனே எருமைத்தலை யுரு விகித்தோற்றும். சபையோர்கள் ஆச்சரியப்படுவார்கள். ஆனால் தலையை உடனே மறைத்து சல் ஓடிப்போவென்று சொல்லி சற்றுநேரம் பொறு த்து மூடியதலையைத் திறந்துபார்க்க மாயமாகப் போகும் ஆத்துத்துமிட் டிக்காய் இரண்டு துண்டாகக் கிடக்கும்.

193 வாய்வு ஸ்தம்பன ஜாலம்.

எழுரிபிடிக்கும் காந்தமாக எட்டுபலம் கொண்டுவந்து கொஞ்சம் மறைவாக இருக்கும்படியான வீட்டிற்குள் வலசல்மேல் மையம்பார்த்து ஒருகெஜம்நீளம் சவுக்கமாக நாலுமூலையும் இரண்டுபலம் காந்தமெடுத்து நிற்கும்படியாக வலுவாகப் பொருந்தவைத்து அதற்குநேர்க்கீழாக இரும்பு பலகை சன்னமாகவும் ஒரு ஆள் குந்தத் தக்கதாகவும் போட்டு விட்டு விடாமல் உடனே குந்திக்கொள்ளவும் ஆனால்குந்து கிறவன் விபூதிருத்தி ராட்சம் காஷாயம் பூண்டு யோகியைப்போல் இருக்கவேணும் குந்தின வுடன் வாயைக்கெட்டியாக மூடிக்கொண்டு தம்பிடிக்கிறவன்போல் பூட கமாயிருந்தால் தான் பார்க்கிறவர்கள் வாய்வுஸ்தம்பனம் செய்கிறான்யென் பார்கள் மிகவும் மகிமையாக எண்ணுவார்கள் ஆனால் காந்தம் யாருக்கும் தெரியாமல் வைத்திருக்கவேணும்.

194 நினைத்த யிடத்திற்குப் போகும் சுய ஜாலம்.

ஆலமரத்தின்கீழ் ஆலங்கண்ணு அகப்பட்டால் ஞாயிற்றுக்கிழமை தினம் அதற்கு மஞ்சள்நூல் காப்புகட்டி விட்டுவந்து விடவேண்டும். அடு த்த வெள்ளிக் கிழமைதினம் சென்று சிறியக் குடிசையில் பொங்கலிட்டு பலிகொடுத்து தூபங்கொடுத்து வேர் அறாமல் பிடுங்கிவந்து தீட்டுப்படா மல் ஒரு யிடத்தில் வைத்திருந்து அடுத்த செவ்வாய்க் கிழமையில் தலை முழுகி வாசலெல்லாம் மெழுகி பிள்ளையார் பிடித்துவைத்து அதின் சிர சில் அருகன்பில் சூட்டி தாம்பூலம் வெல்லம் பழம்வைத்து இந்தசெடியும் வேரையும் எதிரில்வைத்து தூபதீபங்கொடுத்து தேங்காயுடைத்து வேரை யெடுத்துப் பத்திரமாகத் தீட்டுப்படாமல் வைத்திருக்கவும் தினகாலம் ஸ்தானம்செய்து [illegible]த்துக் கொண்டேயிருந்து நட்சத்திரம் விழும்போது வேரை எடுத்துக் கீழேபோட்டு வலதுகாலால் மிதித்துக் கொள்ளவும் செருப்புக்குள்ளே வைத்து தீட்டில்லாதிடத் திருக்கவும் ஊர்ப்பிரயாணம் போகும்போது போட்டு நடந்தால் பதின்காத மானா லும் அலுப்பில்லாமல் நடக்கலாம் எப்போதும் பத்திரமாய்க் காப்பாற்ற வேணும் மந்திரமில்லை தந்திரந்தான். செய்து பார்த்தால்தெரியும் மனத் திருப்தியாகும்.

195 ஒரு மணிக்குள் ஒருகாதம் நடக்கும் உச்சாக ஜாலம்.

நத்தைச்சூரி செடியைக் கண்டுபிடித்து செவ்வாய்க் கிழமையில் மஞ் சள்நூல் காப்புகட்டி தூபதீபங்கொடுத்து விட்டுவந்து விடவேண்டும் அடு த்த ஆதிவாரத்திற் சென்று பொங்கலிட்டு பலிகொடுத்து தூபதீபங்கொடு த்து அச்செடிக்கு காயம்படாமலும் வேர் அறாமலும் பிடுங்கிக்கொண்டு வந்து சுத்தமானயிடத்தில் வைத்திருந்து அடுத்த வெள்ளிக் கிழமைதினம் ஸ்தானம் செய்து வாசலைமெழுகி. பிள்ளையார் பிடித்துவைத்து அதின் சிரசில் அருகன்பில்சூடி வெத்திலைப்பாக்கு வெல்லம் பழம் முதலானதுங்

தேங்காயுடைத்து தூபதீபங்காட்டிகுடக்கொளுத்தி செடியையும் வேரையும் பிள்ளையார் முன்வைத்து மேற்சொன்னபடி ஒன்பது வெள்ளிக்கிழமை தூபங்காட்டி வேரையெடுத்துப் பத்திரமாக வைத்திருந்து சந்திரக்கிரணத்தில் நட்சத்திரம் கீழேவிழும்போது உஷாராய்ப் பார்த்துக்கொண்டேயிருந்து இந்த வேரை காலில்போட்டுக் கொள்ளும்படியானப் போல் காப்புசெய்து அதில்வேரை அடைத்துப் பத்திரமாக வைத்துக்கொள்ளவும் நடந்துப் பரீட்சிக்கவேண்டில் மேற்படிக்காப்பை இடது காலில் போட்டுக்கொண்டு செருப்பு மாட்டிக்கொண்டாவது சாதாரணமாகவாவது ஒருமணி நேரத்திற்குள் ஒருகாதம். நடக்கலாம் போகிற விசையும் கால்நோயும் இளைப்பாயாசமும் தெரியாது ஆனால்பயமில்லாமல் பத்தயங்கட்டியும் நடக்கலாம்.

196 கோழி முட்டையை ஜலத்திற்போட வெடிகிளம்பும் ஜாலம்.

ஒருகோழி முட்டையை கொண்டுவந்து அதிலுள்ளிருக்கும் வெள்ளை அம்பியியாவையும் எடுத்துவிட்டு அதில்கிளாய தாளிக்காய் தூர்சுண்ணாம்பு கெந்தகம் இவைகளை வெவ்வேறாக சமமாய் நிறுத்து அரைத்து ஒருமிக்கச்சேர்த்து முட்டைக்குள் செலுத்தி மெழுகால் அதின் சிறியவாயை மூடி தவலையிலாவது மண் குடத்திலாவது நிறைய ஜலம்விட்டு அதில் இந்த முட்டையைப் போட்டுவைக்க வெடிசப்தம் கிளம்பும் ஆச்சரியப் படுவார்கள். ஆனால் குளமுதலிய தண்ணீருள்ள இடத்திற் போடலாம்.

197 சகல விஷமும்நீக்க உபயோக ஜாலம்.

எட்டிமரத்தில் விளாங்காய்ப் பூரும்படியானத் துவாரம்செய்து அவ்வளவுப் பழம்புளியைக் கொட்டை நீக்கி முதலானதையும் போக்கி, மனம்போல் உள்ளேவைத்து அந்த எட்டிமரத்திலேயே அப்படித்து கார்ப்பதுநாள் சென்று எடுத்து எட்டிமரத்தினால் சிமிள்செய்து அதில்போட்டுவைத்துக் கொள்ளவும். தேள், நன்றுகிதருக்காய், பூனை, எலி, பெருச்சாளி வண்டு ஓணான்பச்சோந்தி முதலானதுடன் இன்னம் எதுவானாலும் சாரை சர்ப்பம் தவிர மற்ற எல்லாவிஷத்திற்கும் மிளகுப் பிரமாணமெடுத்து வெத்திலையில் மடித்து சொல்லாமற் கொடுக்கவும் பத்தியம் பச்சரிசியும் பிடி முருங்கயிலையும் போட்டு கஞ்சிக்காச்சிக் கொடுக்கவும் உப்பு ஆகாது கடும்பத்தியம் காலைமாலை இரண்டுவேளையும் மூன்று நாளைக்கு இருக்கவேண்டும். விஷம் அற்றுப்போகும்.

198 பாம்பு கடித்த பேருக்கும் விஷம் இறக்கும் ஜாலம்.

பாம்புகடித்தவருக்கு உடனே சன்னமாகியப் பானை தட்டால் அவர்கள் உச்சியில் மூன்றுகீரல்கீறி அதிலே தக்காளிச்சார்பிழிந்து உள்ளங்கையினால் அறைக்கித் தேய்க்கத் தேய்க்க விஷங்கக்கி எழுந்திருப்பார்கள் ஜாவாக சாச்சிக்கொடுக்கவும் இந்தமூலிகை இருளருக்கும் ஜோகைகருக்கும்

உயிருக்கு உயிரான மூலிகை இன்னஞ் கீழாநெல்லி குப்பமேனியிலும் விஷம்நீக்கும் அவசியமாய் சிறியாநங்கை செடிமூலமும் உலர்த்திப்பொடி பண்ணி வைத்துக்கொண்டால் மூனுவிராகனிடை பிரமாணம் எடுத்து ஒரு வெத்திலையில் வைத்துக் கொடுத்தாலும் தண்ணியில் கலக்கி உள்ளுக்கு விடுத்தாலும் சீக்கிரம் விஷமிறங்கும் இதுவும் கைமுறைதான்.

199 உலர்ந்துபோன இறாவை ஜலத்தில் ஓடவிடும் ஜாலம்.

உலர்ந்த இறாவைக் கொண்டுவந்து பின்பு கிளுவையிலையைப் பறித்து வந்து உரலில்போட்டு இடித்துச் சாறுபிழிந்து கொஞ்சம் இறாவை அதில் அள்ளிப்போட்டுப் பிசைந்துக் கிணறு அல்லது குளவில் அவிவிட்டு நின்றுப்பார்த்தால் உயிரோடிருக்கும்போது எப்படி வளைந்து வளைந்து ஓடுமோ அப்படியே குருக்கும் நெடுக்குமாய் ஓடும் சிலது கிருகிருவென்று சுழலும் பார்த்தவர் வியப்பார்கள்.

200 கேச்சக்காய் சொன்னபடிக் கேட்கும் ஜாலம்.

எழிஞ்சி இரங்கழிஞ்சி என்னும் விதையைக் கொண்டுவந்து வெவ்வேறுகப்பொடித்து துல்லிதமானச் சீலையில் வைத்து வெவ்வேறாகத் திரிசெய்து வைத்துக்கொள்ளவும். தலைமண்டை ஓட்டில் புங்கம் எண்ணெய் விட்டு மேற்படித்திரி ரெண்டிற்கும் ஐக்கோலத்தயிலம் பூசி ஒவ்வொருத்திரியாகப் போட்டுக் கொளுத்தி தயிலம் வாங்கி சிமிளில் வெவ்வேறாக வைத்துக் கொள்ளவேண்டும். ஜாலமாடுமிடத்தில் ஆரடிக்கம்பம் நட்டு விட்டு இரண்டு கெச்சக்காய் கையிலெடுத்துச் சபையோர்களுக்குக் காட்டி இந்தக்கெச்சக்காயை இந்த கம்பத்தின்மேல் ஒன்றையேறவும் ஒன்று யிறங்கவும் செய்கிறேன் பாரென்று செந்நூலி மேற்படி மையைத் தந்திரமாக ஒருவொருக் காயிற்குத்தடவி விடவேண்டும். ஆனால் எழிஞ்சி தயிலம் தடவினக்காயும் இரங்கழிஞ்சித்தயிலம் தடவினக்காய்க்கும் அடையாளமிவ்க்கவேணும் இரங்கழிஞ்சிமை தடவினக் காயைக் கம்பத்தின் உச்சியில் வைத்து எழிஞ்சி மைதடவினக்காயை கம்பத்தின் அடியில்வைத்து ஜாலக்காளைப் பூசித்து சல் ஏறென்று சொன்னால். கீழே யிருக்குங்காய் கடகடவென்றுயேறிப்போய் கம்பத்தின்மேல்குந்தும் சல்இறங்கென்றுசொன்னால் கம்பத்தின் உச்சியிலுள்ளக் காய் கடகடவென்றுக் கீழே யிறங்கும். பார்ப்பவர்கள் ஆச்சரியப் படுவார்கள். அது யெப்படி இறங்குமென்றால் கம்பத்தைச் சுற்றிக்கொண்டே இறங்கும் சுத்திக்கொண்டே யேறும். அது தான் ஆச்சரியம் ஆனால் தலைமண்டை ஓடு இரண்டு இருக்கவேண்டும்.

201 மண்ணைக் கிள்ளிப்போட மலைகளாகத் தோற்றும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் சபையோர்களைப் பார்த்து கொஞ்சம் மண்ணை அள்ளி அனைவருக்குக் காட்டி இந்தமண்ணை நாலுதிசையிலும் போடுகிறேன். பர்வதங்களாகத் தோற்றும் பாருங்களென்று சொல்லி நிலகண்

டியை தியானித்து ஜாலக்காளைப் பூசித்து கையிலுள்ள மணலை நாலு திசையிலும் விட்டெறியவேண்டும். ஆனால் மண்ணைக் கையிலெடுக்கும் முன்னதாகவே இந்திரஜால மையை தந்திரமாகக் கையிற் பூசிக்கொள்ள வேண்டும். மணலை எறிந்த உடன் நாலு திசைகளிலும் மலையாகத் தோற்றும். அஷ்டகுலப் பர்வதங்கள். மகம்மேரு கைலை அகஸ்தியர் வாழும் பொதிகைமலை இவைகளைப்போல் தோற்றும். அம்மலைகளில் தேவர் சித்தர் முத்தர் முனிவர் முதலானவர் வாழ்வதும் தோற்றும் விருட்சங்கள் எந்தவனங்கள் ஆசிரமங்களும் தோற்றும் ஆச்சரியப் படுவார்கள்.

202 மண்ணை அள்ளி நாலுதிசையிலும்போட சத்த சமுத்திரமும் தோற்றும் ஜாலம்.

ஜாலமாடும் சபையில்நின்று நீலகண்டியைதியானித்து ஜாலக்காளைப் பூசித்துமேற்படி யிந்திரஜாலமையைத் தந்திரமாகக்கையிற்பூசிக்கொண்டு பூமியிலுள்ள மண்ணை அள்ளி நாலுதிசையிலும்போட உடனே எழுசமுத்திரமுந்தோற்றும் [illegible]ந்திரங்களும் திருமாலும் லட்சுமியும் தோற்றுவார்கள். அன்றியும் கப்பல் படவு தோணிகளில் வாழும் பலவகையான மச்சங்களுந்தோற்றும். அந்த ஜெகத்தோர்கள் பார்த்து ஆச்சரியப் படுவதுடன் தேவனென்றும் சித்தனென்றும் கொண்டாடுவார்கள்.

203 நூல்கயிறை துண்டுதுண்டாக வெட்டி முழுங்கும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் கைபெருவிரல் பெருமனுள்ள நாலுமுழம் நூல் கயிறை எடுத்துச் சபையோர்களுக்குக் காட்டி இதைத்துண்டு துண்டாக வெட்டி முழுங்கி விடுகிறேன் பாரென்றுசொல்லி கூறுள்ளக் கத்தியை வலதுகையிற்பிடித்து நூல் கயிற்றை ஒருமரத்துண்டின்மேல் வைத்து துண்டுதுண்டாக வெட்டிக் கும்பலாகவைத்து நீலகண்டியைத்தியானித்து ஜாலக்காளைப்பூசித்து மேற்படி இந்திரஜாலமையைத் தந்திரமாகக்கையிற் பூசிக்கொண்டு ஒவ்வொருத் துண்டாக யெடுத்து வாயில் போடுவதுபோல் பின்னுக்கு யிழுத்துக் கீழே போட்டுக் கொண்டே யிருக்கப் பார்ப்பவர்களுக்கு உள்ளுக்கு முழுங்குவதுபோல் இருக்கும் ஆச்சரியப்படுவாகள்.

204 புதுபட்டணம் உண்டாக்கும் புதுமையான ஜாலம்.

தனக்கு இஷ்டமானப் பேர்களை இரவில் அழைத்துக்கொண்டு ஒரு வெட்டவெளியான மைதானத்திற்சென்று கூட அழைத்துப் போனவர்களைப்பார்த்து இந்தவெட்ட வெளியான மைதானத்தை ஒரு பட்டணமாகச் செய்கிறேன் பாரென்று சொல்லி நீலகண்டியைத் தியானித்து ஜாலக்காளைப்பூசித்து மேற்படி இந்திரஜால மையைத் தந்திரமாகக் கையிற் பூசிக்கொண்டு மண்ணை அள்ளி பட்டண முண்டாக வேணுமென்று நாலுதிசையிலும்போட பட்டணமுண்டாகும். அப்பட்டணத்தில் தெருக்கள் கடைவீதி ஜெனக்கூட்டம் நீண்டகோபுரம் கோயில் திருக்குளம் வேதியர் வீதி

ராஜன் வாழும் அரண்மனை சதுரங்கசேனை பலவித தானியம் விளையும் நிலம் தோப்பு முதலானதும் தோற்றும். பார்ப்பவர்கள் பிரமித்து ஆச்சரியப்படுவார்கள், ஆனால் மூன்றுமுக்கால் நாழிகைவரைக்கும் தோற்றும் அதையறிந்து அதற்குள் சல் பட்டணமே மறைந்துப்போகக் கடவது யென்று சொல்ல வேண்டும்.

205 மடியில் கட்டிய தேங்காயை உடைக்கும் ஜாலம்.

தேங்காயைச் சவுக்கத்தில் சுத்தி மடியில் கட்டிவிட்டு இரண்டுகைகளையும் பின்புறமாய் மடித்து இரண்டு பெருவிரலையும் ஒன்றின்மேல் ஒன்று வைத்துக் கட்டிவிடச்சொல்லி ஒரு வீட்டிற்குள்சென்று கதவைச் சாற்றித் தாள்போடச் சொல்லினபிறகு நீ உட்கார்ந்து பின்னாலிருக்குங் கைகளை புட்டத்தின் கீழாகக்கொடுத்து மெதுவாய்க் காலைமடித்து உள்ளேவிட்டு கையை வாங்கினால் கட்டுபிரகாரமே கைபின்புறம் வந்துவிடும் தேங்காயை யுடைத்து கட்டிக்கொண்டு முன்போல் காலின் கீழாகக் கையைக்கொடுத்து பின்னுக்கு வாங்கிக்கொண்டு கதவைத் தட்டித் திறக்கச்சொல்லி வெளியில் வந்தால் தேங்காயைப் பார்த்து [illegible] மந்திரஞ் செய்தானென்றே நம்புவார்கள். ஆனால் [illegible]ளே யிருக்கும் போது மலையாளதேவி வாடி மசான[illegible] [illegible] முன்னேவாடி சாமுண்டி ஓடிவா என்று சொல்லிக் கொண்டே மேற்படி தேங்காயை யுடைத்து வரவேணும்.

206 குளத்தில் மூழ்கி விபூதியிட்டுக்கொண்டு வரும் ஜாலம்.

கொடிக்கள்ளிப்பாலை விபூதிபோல் குழைத்து சிவயோகிபோல் தேகம் முழுவதும் கட்டுகட்டாயிட்டு வெய்யலில் நின்றால் உலர்ந்தபிறகு ஒன்றும் தெரியாது அனைவருக்குங்காட்டி பிறகு ஒருகுடம் ஜலத்தை சிரசில் ஊத்தினால் உடனே பளிச்சென்று யோகியைப்போலிருக்கும் பார்த்தவர்க ளெல்லாரும் ஆச்சரியமாய் பிரமிப்பார்கள். அன்றியும் குளத்தில் மூழ்கி வெளியில் வரலாம்.

207 வேறுவிதம் குளத்தில் முழுகி விபூதியிடும் ஜாலம்.

காட்டாமணிப் பாலைக்கரைத்து விபூதியை போல்குழைத்து முன்போல் திரேகமுழுது மிட்டுக்கொண்டு வெய்யலில் காய்ந்தபிறகு பார்த்தால் ஒருவருக்கும் தெரியாமலிருக்கும். குளத்திலாவது கிணற்றிலாவது தாவிலாவது முழுகிவெளியில்வந்தால் சிவயோகிபோலிருக்கும். பார்ப்பவர்கள் மதிமயங்கி ஆச்சரியப்படுவார்கள் ஆனால் இந்த ஜாலம் அனேகர் செய்திருப்பார்கள்.

203 தீயில் குதிக்கும் ஜாலம்.

சங்கன் செடிபுதரில் பூத்திருக்கும் காளைக்கொண்டுவந்து புதுபாண்டத்திற்போட்டு வெய்யலில் வைத்தால் தயிலம்போல் உருகிவிடும் அதை

யெடுத்து ஒரு யெந்த்தில் பத்திரமாக வைத்துக்கொள்ளவும். ஜாலமாடு மிடத்தில் கட்டைகளைப் போட்டுக் கொளுத்தி அது திகுதிகுவென்று எரியும்போது சபையோர்களைப்பார்த்து இந்தத்தீயில் குதிக்கிறேன்பாரென் றுசொல்லி ஆடையாபரணங்களைக் களைந்துவிட்டு எவ்வளவு தீயாயிருந்தபோதிலுங் குதிக்கலாம். ஆனால் மேற்படித் தயிலத்தை திரேகமாதியந்தமும் பாதத்திலும் முன்னதாகவே பூசிக்கொண்டிருக்கவேண்டும் பார்ப்பவர்கள் அக்கினியைக்கட்டிவிட்டானென்று ஆச்சரியப்படுவார்கள்.

209 மோடிவித்தை காட்டும் ஜாலம்.

ஜாலமாடும் சபைக்கு வருமுன்னே படிகாரத்தை சதுரமானக்கல்மத்தியில்வைத்து அனல்காட்டி ரூபா, சவரன் அல்லது செம்புகாசியை அந்தப் படிகாரம் உருகும்போது நன்றாய்அழுத்தி ஒட்டிவைத்துக் கொள்ளவேண்டும் ஆனால்சுற்றிலுமிருக்கும் படிகாரத்தை பேனாகத்தியினால் சுத்தமாகச் சுரண்டி எடுத்து விடவேண்டும் அதைக்கொண்[illegible]ந்து மேஜையின்மேல் வைத்து சபையோர்களைப் பார்த்து இந்தக்கல்லின்மேல் வைத்து இருப்பதை யாரு[illegible]ம் யெடுத்துவிட்டால் அவர்களுக்குப் பத்துரூபா கொடுக்கிறேனென்று [illegible]லவும் அ[illegible]வந்து எடுத்துப்பார்த்து எடுக்க முடியாமல் திகைப்பார்கள். அப்போது அவர்களைப் பார்த்து நான் எடுக்கிறேன் பாருங்களென்று தந்திரமாக ஜலத்தில் கையைத்தோய்த்து எடுக்க கையோடுவந்துவிடும். கண்டோர்களெல்லாங் கலகலத்து ஆச்சரியப் படுவார்கள்.

210 கைகெடியாரம் சொன்னபடிக் கேட்கும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் நன்றாக டயம்போகும்படியான ஒரு கைகெடியாரத்தைக் கையிலெடுத்து சபையோர்களுக்குக்காட்டி இதோ நன்றாகஓடும் கெடியாரத்தை ஓடவொட்டாமல் செய்கிறேன் பாரென்றுசொல்லி காந்தத்தையாவது காந்தக் கல்லையாவது தந்திரமாக கையில் வைத்திருந்து கெடியாரத்தின் பின்புரத்தில் அணைத்துக் காட்டிப் போகுதாவென்று கேட்டால் போகவில்லையென்று சொல்வார்கள், உடனே காந்தத்தை யெடுத்து விட்டுக்கேட்டால் டயம்போகுதென்று சொல்வார்கள். இது மகா மந்திரமென்று ஆச்சரியப் படுவார்கள்.

211 நெருப்பை கையில் வாரும் ஜாலம்.

ஜாலமாடும் சபைக்கு வருமுன்னே உத்தாமணிச்செடியின் வேரும் அதின் கொழுந்தையும் அம்மியில் வைத்துமைபோல் அறைத்துக் கையில் பூசிக்கொண்டு சபையில் வந்து கட்டையைக் கொளுத்தி நெருப்பாக்கியாவது கட்டை நெருப்பையாவதுக் கொண்டு வரும்படிசொல்லி இரண்டு கையிலும் சேர்த்து வாரலாம். கைசுடாது. கண்டவர்கள் ஆச்சரியப்பட்டு ஜாலியுடைய வலியமென்று கலங்குவார்கள்.

212 செக்கில் யெண்ணெய் வாராமல் செய்யும் ஜாலம்.

நாயுருவி வேரைத் தூளாகச்செய்து செக்கு ஆடுகிறபோது அதில் போட்டுவிட்டால் என்னேரம் ஆடினபோதிலும் எண்ணெய் வாராது. அவ்வியாவையு மெடுத்துவிட்டு செக்கைச் சுத்தப்படுத்தி வேறே எள்ளாவது இன்னம் யேதாவதுப் போட்டு ஆடினால் எப்போதும்போல் யெண்ணெய் வருகும்.

213 சொம்பில் நிரைய ஜலத்தை ஊத்தி மெல்லிய சீலையை வா[illegible]புரத்தில் கட்டி கவித்தால் ஜலம் போகா திருக்கும் ஜாலம்.

ஒருசிரிய சொம்பிலாகிலும் அல்லது பெரிய சொம்பிலாகிலும் ஜலத்தை நிறையவிட்டு மெல்லீசித் துணியை வாய்புறத்தில் கட்டி வலது உள்ளங்கையை அதின்மேல் வைத்து கெட்டியாக அழுத்திமூடி சல்மலேய்யான பகவதி தண்ணியை நிருத்தடி என்றுசொல்லி தந்திரமாகக்கவிழ்க்க ஜலம் அப்படியே நின்றுவிடும் ஆச்சரியப் படுவார்கள்.

214 ஒருவர்மேல் விஷமேற்[illegible]த ஜாலம்.

முருக்க மரத்தின் மீதிலிருக்கும் கம்பிளிப்பூச்சி மயிரும் தல்மலிவிரையும் வீட்டில் சமைக்கும்சட்டியின் அடியிலிருக்குங் கரியும்நல்லெண்ணெயும் சேர்த்து இவைகளை மைபோல் அறைத்து வைத்துக் கொள்ளவும் ஜாலமாடுமிடத்தில் ஒருவனை அழைத்து அவன்கையில் ஒரு கல்லையெடுத்துக்கொடுத்து மேற்படி மையை விரலில்தொட்டு தந்திரமாக அவன்கையில் பூசிவிட்டால் அவன் பதரித்துடித்து யிரைச்சலிடுவான் பார்ப்போர்கள் கல்லிலிருந்து விஷம் ஏறுதென்று நம்புவார்கள் ஆனால் அவனை உடனே நல்லஜலத்திற்குளித்து விட்டுவரச்சொல்ல விஷம் இரங்கிவிடும்.

215 மணலைத் தின்னும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் ஒரு சிறியக் கூடை நிறைய ஆத்துமணலைக் கொண்டு வரும்படிச் சொல்லி சபையோர்களைப் பார்த்து இந்த கூடை மணலையுமென்றுதின்று விடுகிறேன் பாரென்றுசொல்லி நீலகண்டியையியாணித்து ஜாலக்காளைப் பூசித்து மேற்படி இந்திரஜால மையைத் தந்திரமாகக் கையிற் பூசிக்கொண்டு மண்ணை கையில் வாரி வாயில் போடுபவன்போல் பின்புரமாகக் கீழே போட்டுவிடவும். பார்ப்பவர் மண்ணைமென்றுத் தின்கிறானென்று நம்பி ஆச்சரியப்பட்டு அசைந்து நிற்பார்கள்.

216 பட்டாக் கத்தியை முழுங்கும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் நல்ல பளபளப்பாயும் நன்றாய்க் கூறாகச் சாணைபிடித்துமாக விருக்கும். ஒரு பட்டாக்கத்தியைக் கையில் பிடித்து சபையோர்களைப் பார்த்து இந்தப் பட்டாக்கத்தியை முழுங்கி விடுகிறேன்

பாரென்றுசொல்லி நீலகண்டியை தியானித்து ஜாலக்காளைப் பூசித்து, மேற்படி இந்திரஜால மையை தந்திரமாகக்கையிற் பூசிக்கொண்டு பட்டாகத்தியை யெடுத்து முழுங்குபவன்போல் வாயின்மேல் கையை வைத்து கத்தியைப் பின்புரமாகப் போட்டுவிடவும் பார்ப்பவர்கள் பட்டாக்கத்தியை முழுங்கி விட்டானென்று பதரி ஆச்சரியப் படுவார்கள்.

217 கெட்டப்பாறையை முழுங்கும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் நாலடி நீளமுள்ள ஒரு கெட்டப் பாறையைக் கையில் எடுத்துச் சபையோர்களுக்குக் காண்பித்து இந்த கட்டப்பாறையை முழுங்கி விடுகிறேன் பாரென்றுசொல்லி நீலகண்டியை தியானித்து ஜாலக்காளைப்பூசித்து மேற்படி இந்திர ஜாலமையை தந்திரமாகக் கையிற் பூசிக்கொண்டு கட்டபாறையை வாய்க்குச் சரியாகவைத்து கையை வாய்மேல் வைத்து கட்டப்பாறையைப் பின்புறக்கு வாங்கிக் கீழே போடப் பார்ப்பவர்கள் கெட்டப் பாறையை முழுங்கி விட்டானென்று ஆச்சரியப் படுவார்கள். ஆனால் மையை உடனே துடைத்து விட்டு கக்குவதுபோல் கையை கெட்டப்பாறையை முன்னே யெடுத்துப்போட பார்ப்பவர்கள் முழுங்கின கெட்டப்பாறையை கக்கிவிட்டானென்று பிரமித்து நிற்பார்கள்.

218 இரும்பு குண்டை முழுங்கும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் விளாங்காயின்பெருமனுள்ள ஒருஇரும்புகுண்டையெடுத்துச் சபையோர்களுக் காட்டி இந்த குண்டை முழுங்கி விடுகிறேன் பாருங்களென்றுசொல்லி நீலகண்டியைதியானித்து ஜாலக்காளைப்பூசித்து மேற்படிமையைத் தந்திரமாகக்கையிற் பூசிக்கொண்டு குண்டை யெடுத்து வாய்மேல் கையைவைத்து பின்புரமாகப்போட்டு விடவேண்டும், பார்ப்பவர்களுக்கு குண்டை முழுங்கி விட்டாற் போலிருக்கும். உடனே மையைத் துடைத்துவிட்டு குண்டை யெடுத்து முன்னேபோட முழுங்கின குண்டை கக்கிவிட்டானென்று ஆச்சரியப்பட்டு ஆனந்திப்பார்கள்.

219 சீலைத் திறைய வித்தை.

கழுதைப் புணரும்போது பார்த்திருந்து அதினுடைய வால்மயிரைப் பிடுங்கிவந்து வைத்துக்கொண்டு ஆண்விடாதப் புற்றின்மேல் படர்ந்திருக்கும் செடியின் கொடியைப்பார்த்து, அந்தச்செடிக்கு கிராணத்தில் காப்பு கட்டி பொங்கலிட்டுப் பலிகொடுத்து தூபம்காட்டிக் கொடியைப் பிடுங்கி வந்து அக்கொடியுடன் ரோமத்தையும் சேர்த்து வளையம்போல் சுத்தி அதின்மேல் தங்கக்கம்பி வெள்ளிக்கம்பி சுத்திவிடவும் ஆனால் சுத்துமுன்னே கருவை யதின்மேல் பூசவேண்டும். ஜாலக்காளைப் பூசைசெய்து வளயத்தைப் பத்திரமாக வைத்துக் கொள்ளவும். அதை வலதுகையில் மாட்டி மேலுக்கு யேற்றச் சீலைத்திரையும் கீழுக்குயிறக்க எப்போதும்போல் அமர்ந்துவிடும், ஆச்சரியப் படுவார்கள்.

220 எட்டி முளை வித்தை

செச்சக்காய் சீலை சுடலையில் வேகும் சவத்தினுடத் தயிலம் ஐங்கோலத்தயிலம் இவைகளை நருக்கிக்கொண்டு அம்மியில்வைத்து மைபோல் அரைத்தெடுத்து சிமிளில் வைத்துக் கொள்ளவும். இது சித்தியாக மந்திரம் ஓம்-நம-யங்-வங்-சிங்-சுவாகா-என்று மையைப் பூசையில் வைத்து மூன்றுகாலமும் காலமொன்றுக்கு லட்சம் உருகொடுத்துவர சித்தியாகும் பிறகு எட்டிகொம்பில் எட்டு முளைச்சீவி. அதின்மேல் மேற்படி மையைத் தடவி மேற்சொன்ன மந்திரம் ஆயிரத்தெட்டோதி பெருத்தப்பூசையாகப் போட்டு பலி முதலானதுங் கொடுத்து முளையை யெடுத்து பத்திரமாக வைத்துக் கொள்ளவும்.

மேற்படி முளையைக் கொண்டுபோய் வர்த்தகஞ்செய்யும் கடைமுன்னே கடாவக்கடைவிற்காது செக்காடுமிடத்திற் கடாவ என்னேரம் ஆடினாலும் எண்ணை வாராது குளை முன்கிடாவ, குளை வேகாது கருமான் கொலைமுன்கிடாவ இரும்புக்காயாது சுண்ணாம்புச்சூளை முன்கிடாவ சுண்ணாம்புக்கல் வேகாது கல்சூளை முன்கிடாவ கல்வேகாது மயானத்தில் வேகும் சவத்தின்முன் கிடாவப்பிணம்வேகாது வண்ணான்போடும் வெள்ளாவிற்கு முன்கிடாவ வெள்ளாவேகாது நெற்களத்திலும் உப்புக்களத்திலுங்கடாவ இராசிக்குரையும் மீனுள்ள குளம்-கிணறு-தொரவு-ஆறு-மடுவு இவ்விடங்களில் கிடாவ. எவ்விதத் தந்திரமாக வலைப்போட்டாலும் மீன் அகப்படாது கொட்டணம் போடுமிடத்திற் கிடாவ. நெல் மசியாது. முளையைப் பிடுங்கிவிட மசியும்.

221 வீட்டிற் போட்டுக் கதவைச் சாற்றிட வெளிவரும் ஜாலம்.

இரண்டுக்கால் பெருவிரல்களையும் இரண்டுக் கைப்பெருவிரல்களையும்கட்டி மல்லார்ந்து படுத்துத் தன் மனதை பூரணத்தில் நிறுத்தி நாட்டத்திலிருக்க மனம்சொக்கி மவுனத்திலூன்றிச் சுழித்தி லடங்கிவிடும். பின்பு தெளிந்தவுடன் இவ்விரண்டு கட்டுகளையும் அவிழ்த்துவிட்டு மருவேலைப் பார்க்கவும். இப்படி சதாகட்டத்துவதில் பனிரண்டு வருஷத்திற்குள் சித்தியாகிவிடும் அதின்பிறகு எந்த வீட்டிலாகிலும் கருங்கல் கட்டடத்திற்குள்ளாகிலும் வீட்டு பந்தோபஸ்து செய்தாலும் இவன் வெளிவரச் செவுருகள் இடங்கொடுக்கும். அவை யொருவருக்குந்தெரியாது. இதைப் பாகாயப் பிரவேச மென்பார்கள் இப்படிச் செய்வோரைச்சித்த புருஷரென்றே சொல்வார்கள்.

222 ஓட்ட மோடும் வித்தை.

விழிதியிலையை வாயில்போட்டுக் கொஞ்சம்தின்று கொஞ்சம்வாயிற் றுடையில் அடக்கி வைத்துக்கொண்டு எந்தமட்டில் ஓடினாலும் ஓட்டம் இளைப்புக்களைப்பில்லை. நிற்கவேண்டுமானால் ஒரு மரத்தைப்பிடித்து நிற்க வேண்டியது. ஒரு காதத்திற்குமேலும் ஓடலாம்.

223 பாலை தயிராக்கும் வித்தை.

ஒரு படிப்பாலில் வாழைக்கிழங்கை உலர்த்தி இடித்து வஸ்திரகாயஞ் செய்ததனில் அரை ஆழாக்கு அதிற்போட்டுக் கலக்கத் தயிராகும். இன்னும் நாணற்புல்லும் போட்டாலும் தயிராகும்.

224 பேயாட்டும் வித்தை.

பேயாடு வோரையாவது அல்லது எவ்வித மனிதரையாவது தலைமுழுகிவரச்சொல்லி அவ்வீரத்தலையோடு உச்சியில் மருதோன்றிக் காய்த்தூளை ஆர்க்கப்பொடித்து அதிற்கொஞ்சம் போட்டு அமரக்கித் தேய்த்து விட நின்றாடும் பின்பு செய்வதைச் செய்யவும்.

225 நெருப்பு வித்தை ஜாலம்.

மணத்தக்காளிச்சாறு தக்காளிச்சாறு வசலைச்சாறு இம்மூன்றும் ஒன்றாய்க்கலக்கக் கைகளில்பூசி நெருப்பை யெடுக்கவும் அல்லது கால்களிற் பூசி நெருப்பின்மிதிக்கவும் கைகால் சுடாது கொப்பளிக்காது என்னேரம் விளையாடினாலும் விளையாடலாம்.

226 மீன்படும் வித்தை.

இருகு கள்ளியை முழும்முழும் துண்டுகளாகத் தரித்து ஏரி குளம் மடுக்களில் நாலுபக்கத்திலும் முடர்த்தியாய்ப் போட்டு வைத்திருக்கச் சற்றுநேரத்திற்குள் அதிலிருக்கும் மீன்களெல்லாம் மிதந்துபோய்விடும் அதிலொன்றேனுந் தப்பிப் பிழைக்காது.

227 வேறுவிதம் சோறு வேகாச்செய்யும் வித்தை.

வெள்ளாக்கிவேர் செஞ்சாவிதை அங்கோலம் இவை மூன்றையும் சேர்த்து உலையரிசியிற்போட சோறு வேகாது இதற்கு மாற்றுமில்லை.

228 மகா விநோத மோடிவித்தை.

சிதம்பரச் சக்கரத்தைக்கீறி அட்சரமும் பீஜம் முதலானதும் அதில் அடைத்துப் பூசையில் வைத்து அருளாகும்படி ஓதும் மந்திரமாவது ஓம் ஸ்ரீரீங் கிலியும் அவ்வும் மவ்வும் மவ்வும் சிவ்வும் நமசிவயம சுவாகா என்று மூன்று காலமும் நாலொன்றுக்கு லட்சமுருகொடுக்கவும். இப்படிக்குத் தவறாமல் நாற்பத்தோரு நாள் ஓதி சக்கரத்தை யெடுத்து வைத்துக்கொள்ளவும். மோடி வித்தை செய்யவேண்டில் கோவில் முன்பாலும் குளத்தின்முன்பாகிலும் அம்பலமாக யிருக்கும் தெருவிலேனும் ஆடவேண்டும். ஆடுவதற்கு குருவினுடையப் பாதத்தை முன்வணங்கி பின்பெரியோர் களின் பாதம்வணங்கி சித்தர்-முத்தர்-முனிவர்-முதலானவரை துதித்து நிற்க ராட்சதர் ஏவல்-வைப்பு-எதிரிகள் மிருகம் முதலான ஜாதிகள் கொ

டியவிஷங்கள் இவை முதலானவும் எதிர்நில்லாது ஏவல் செய்யும்படியான சித்தியாகும். சித்தியானவுடன் வாளும் செக்குலக்கையும் நாட்டி உலக்கைமுன்பு தேங்காய் ஒன்றுவைத்து தேங்காய்க்குமுன் கொரடா ஒன்று வைத்து அதின் முன்பு பாதரட்சைவைத்து அதற்கு முன்பு தேய்ந்த வார் வைத்து அதற்குமுன்பு வாழமரத்தை நாட்டிப் பந்தற்போட்டுப் பூமாலைக் கட்டி மாவிலை தோரணங்கட்டி பெருந்தப்பூசைப்போட்டு பலிகொடுத்து கட்டிமுளைமை பூசி அஷ்டசித்தியில் அடைத்து கோழியெழுகிரீ காளியுட தியானம் ஓதி மூடியத்திரையை எடுக்கச்சொல்லி பின்பு மோடியெடுக்கும்படிச் செய்யவும்.

எதிரியானவன் மோடியெடுக்க வரும்போது ஐங்கு கங்கு காளி தார்க்கி அரி அம் உம் ஓம் என்றுச் சொல்லி கண்கட்டு மையைக் கையிற் றடவிக்கொண்டு வெற்றிலையை முறத்திற் போட்டு அள்ளி யெதிரியின் மேல்போட அது தேளாகிக் கொட்டும் அவன் புதைபதைத்து மயங்குவான் அப்போது நீ. ரங் ரங் சூலி என்று சொல்ல அவனுடைய தேகமாதியந்தமும் யெறிந்து ஓடி விழுந்து அழுவான் மறுபடியு மவன் வருவானுகில் அப்போது நீ சூலி வலி சூலி சண்டாளி அம் அம் என்று சொல்லி விபூதியைக் கையிலெடுத்து தியானமோதி எதிரிமேல் போட உருண்டு விழுகுவான் பின்பு ஓம் படு சுவாகா என்று விபூதியை அள்ளி எதிரிமேல்போட அவன் கீழேவிழுந்துக் கோபிப்பான் அம் மம் சிம் ஓம் என்று சொல்லி வேப்பிலையும் மண்ணும் விபூதியு மெடுத்து தியானித்து அவன்மேல் போட்டப் போட்டவுடன் பூமியில் விழுந்துக் கையுங் காலும் உதைத்துக்கொள்வான் வாயில் உதிரங் கக்குவான் அப்போது குறட்டாவும் தேங்காயும் உலக்கையும் இதுகளெல்லாம் கூட்டமாக யெழுந்து அவனை அடிக்கும் வாளாது எழும்பி வெட்டும் ஆனல் காளியை தியானஞ் செய்ய மேற்சொன்ன ஆயுதங்களெல்லாம் எழுந்து அடிக்கும் உன்னை எதிரிவெல்ல மாட்டான் நீ வைத்த மோடியு மெடுக்கமாட்டான்.

229 மஞ்சளை தண்ணீரில் கரைத்து மறுபடியும் எடுக்கும் ஜாலம்.

நீர் முள்ளி விதையைக் கொண்டுவந்து பொடித்து வஸ்திரகாயஞ் செய்து விபூதியில் கலந்து வைத்துக்கொள்ளவும் பின்பு ஜாலமாடுமிடத்தில் ஒரு போகணியில் ஜலம் வார்த்து முன்னே வைத்து அரைத்த மஞ்சளுருண்டையைக் கையில் எடுத்து சபையோர்களுக்குங் காட்டி இந்த மஞ்சள் உருண்டையை நீரில் கலக்கி மறுபடியும் எடுக்கிறேன் பாருங்களென்று சொல்லி சல் மலையாளப் பகவதி ஓடிவா ஓடிவா கரைத்த மஞ்சளைக் கொண்டுவா என்று சொல்லிக்கொண்டே மேற்படி விபூதியைப் போட்டுக் கலக்கி வழித்தால் உருண்டையாய் வந்துவிடும் பார்த்தபேர்களெல்லாம் பிரமித்து ஆச்சரியப்படுவார்கள்.

230 தண்ணீரில் மணலைக் கலக்கி உதிரிமண் எடுக்கும் ஜாலம்.

வேளாம்பிசினியைக் கொண்டுவந்து தண்ணீரில் கரைத்து ஆற்று மணலில் பிசிரி உலரவைத்து உதிரிப்படுத்தி வைத்துக்கொள்ளவும் ஜாலமாடுமிடத்தில் ஒரு போகணியில் ஜலங் கொண்டுவரும்படியாகச் செய்து மேற்படி மண்ணை சபையோர்களுக்குக் காட்டி இந்த மண்ணை இந்த ஜலத்திற் போட்டுக் கலக்கி மறுபடியும் உதிரி மண்ணாகவே யெடுக்கிறேன் பாரென்றுச் சொல்லி அந்த மணலைத் தண்ணீரில்போட்டுக் கைபோட்டு வாரினால் காய்ந்த மணலாகவே யிருக்கும் அதை எடுத்து அனைவருக்குங் காட்ட ஆச்சரியப்படுவார்கள்.

231 தண்ணீரில் பாணவேடிக்கைக் காட்டும் ஜாலம்.

ஒரு கோப்பையில் ஜலம் வார்த்து அனைவருக்குங் காட்டி பாஸ்பறயிட்டு ஆப்லயின் என்று சொல்லும்படியான மருந்தைக் கொஞ்சம் தண்ணீரில் போட்டால் ஒத்தைப்பாணம்போல் கிளம்பும் இது சில சனவான்கள் கைமுறையாகச் செய்த ஜாலம் ஆனால் இந்த மருந்துஷாப்பில் கிடைக்கும்.

232 ஒருவர்மீது விஷத்தையேற்றும் விநோத ஜாலம்.

பூனைக்காஞ்சி யிலையின் மேலிருக்கும் சொனையும் அதின் காயின்மேலிருக்கும் சொனையும் பூனை புடுக்கு காயின்மேலிருக்கும் சொனையும் வெண்டைக்காய்மேலிருக்கும் சொனையும் இந்த நான்கு தினுசும் சேர்த்து ஒரு டப்பியில் வைத்துக்கொண்டு யாதாமொருவர்மேல் விஷம் ஏற்றும்போது தந்திரமாக விரலில் அந்த சொனையைத் தொட்டுக்கொண்டு மண்ணைக் கிள்ளிப்பூசினால் விஷம்போல் ஏறும்.

233 காய்தத்தின்மீது விசித்திரம் எழுதி இரவு இருட்டில் காட்டும் ஜாலம்.

திமிரிபாஷாணத்தை ஸ்டீலில் குத்திக்கொண்டு வெள்ளை கடிதாசியின்மேல் தன் மனதிற் கிசைந்ததை யெழுதி இரவில் இருட்டில் காட்டினால் பிரகாசமாக எழுத்துகள் தோனும் பார்ப்பவர்கள் ஆச்சரியப்படுவார்கள் ஆனால் அந்தப் பாஷாணத்தைச் சலத்திற் போட்டுவைக்கவேண்டும்.

234 ஆத்துமணலை அரிசிபோல் மெல்லும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்திற்கு வருமுன்னமே குண்டு மணி இலையை மென்று தவடையில் அடக்கிக் கொள்ளவும் ஒரு மூச்சலில் ஆத்துமணலைக் கொண்டுவரும்படிச் செய்து சபையோர்களைப் பார்த்து இந்த மூச்சலிலிருக்கும் ஆத்துமணலை யெல்லாம் மெல்லுகிறேன் பாரென்றுச் சொல்லி மணலை யெடுத்து வாயில்போட்டு மெல்ல ஆச்சரியப்படுவார்கள் எவ்வளவானாலும் சலிப்பில்லாமல் மெல்லலாம்.

235 இரும்பு சங்கிலியைப் பழுக்கக் காச்சி கையாலுருவும் ஜாலம்.

ஜாலமாடும் சபைக்குவரு முன்னமே கத்தாழைமடல் கொண்டுவந்து அதின் சோத்தை யெடுத்து பில்லை பில்லையாக அறுத்து விளக்கெண்ணெயில் போட்டு வைத்துக்கொள்ளவும் சபையில் சங்கிலியை நன்றாய்க் காய வைத்துக் கம்பிமாட்டி யிடதுகையில் தூக்கிச் சபையோரைப் பார்த்து இந்த சங்கிலியை உருவுகிறேன் பாரென்றுச் சொல்லி இடது கையைத் தூக்கி வலதுகையில் கத்தாழைமடலோடு யெண்ணெயைவாரி உருவினால் சங்கிலி குப்பென் றெரியும் கைசுடாது ஆனால் தந்திரமாக உருவவேண்டும்.

236 ஜலத்தைக் கட்டும் ஜாலம்.

குயவனிடத்திற் சென்று ஒரு பச்சைத்தோண்டியை வாங்கிக்கொண்டுவந்து அத்தோண்டியின் உள்ளுக்கெல்லாம் குருவிப்பழத்தைப் பிசைந்து மூன்றுதரம் பூசிக் காய்ந்தபிறகு தண்ணீரை நிறையவிட்டு உக்கம் போட்டு மேலே தூக்கிக்கட்டினால் பிறகு ஓட்டையெல்லாந் தட்டிவிட்டால் ஜலம் அந்திரமாகநிற்கும் பார்ப்போர் ஆச்சரியப்படுவார்கள்.

237 ஜலத்தை அல்வாசெய்யும் அற்புத ஜாலம்.

ஜாலமாடும் சபைக்கு வருமுன்னே கட்டுக்கொடியென்ற மூலிகையைக்கொண்டுவந்து துண்டு துண்டாக துண்டித்து வைத்துக்கொள்ளவும் சபைக்குவந்து ஒரு குடத்தில் நல்லஜலம் கொண்டு வரும்படிச் சொல்லி சபையோர்களுக்குக் காட்டி இந்த ஜலத்தை அல்வாசெய்கிறேன் பாரென்றுச்சொல்லி மேற்படி மூலிகையைத் தந்திரமாக அதிற்போட்டு, கொஞ்சம் சக்கரையுங்கூடப் போட்டுக்கலக்கி மூடிவைத்து சல் மலையாளபகவதி இந்த தண்ணீரை அல்வசெய்யடி என்றுசொல்லி சற்றுநேரம் பொருத்து திறந்துபார்க்க அல்வாபோல் பந்தனையாகக் கட்டிவிடும். பார்ப்போர்கள் ஆச்சரியப் படுவகார்கள். அதைக் கத்தியினால் அறுத்து அனைவருக்குங் கொடுக்கலாம் இதை சாதாரணமாய்ச் செய்து தின்றாலும் தாதுவிர்த்தியாகும். அன்றியும் சிறு கட்டுக்கொடி இலைச்சாற்றையும் கசக்கிப் பிழியலாம்.

238 சில்லி குடத்தில் தண்ணீர் நிற்கும் ஜாலம்.

ஒரு குடத்தை எழுத்தாணியால் சில்லிகள் செய்து துத்தியிலையையும் குருவிவியிலையையும் அதின் பழத்தையுஞ்சேர்த்து ஒன்றும் இரண்டுமாக அரைத்து குடத்தினுள்ளே பூசி சற்றுநேரம் பொருத்துக் குடத்தில் ஜலம் வார்த்துத் தூக்கினால் ஒரு துளியுஞ் சிந்தாது ஆச்சரியப் படுவார்கள்.

239 நெருப்பில்லாமல் வஸ்திரங் கொளுத்தும் ஜாலம்.

திமிர் பாஷாண மென்பதைப் பயறளவு எடுத்துக்கொண்டுக் கையை எல்லாருக்குங் காட்டிவிட்டுப் பஞ்சியாவது வஸ்திரமாவது தேங்காய்நாருவது இவைகளைப் பந்துபோல் சுருட்டிக் காத்துவாட்டமாக நின்று மேற்படிபாஷாணத்தை அதில் நுழைத்து ஊதினால் குபீலென்றெரியும் ஆச்சரியப்படுவார்கள்.

240 வாயில் நெருப்பு கக்கும் ஜாலம்.

ஒரு சிறு பயறளவு திமிர் பாஷாணத்தை உதட்டில் வைத்துக்கொண்டு பஞ்சைப் பந்துபோல் சுருட்டி வாயில் கவ்விக்கொண்டு காத்துபோகும் வாடையாக நின்று ஊதினால் குபீலென்றுப் பத்தியெரியும் அனைவருக்கும் அது மகா ஆச்சரியமாக இருக்கும்.

241 கோழி முட்டை பாக்கும் ஜாலம்.

ஒரு கோழி முட்டையை வாங்கி அதில் சிறிய துவாரஞ் செய்து பாதி அம்புலியை ஊத்திவிட்டு அதற்கு பதில் சிறுமைகாடியை ஊற்றி ஊசி காந்தம் கொஞ்சம் சேர்த்து அதின் துவாரத்தை காயிதத்தால் ஒட்டி வெய்யிலில் வைத்தால் சூடேறினபிறகு கீழே நிற்காது ஆச்சரியப்படுவார்கள்.

242 சாம்பிராணிப் புகைப்போடச் சகலரும் ஆடும் ஜாலம்.

செச்சக்காயுடன் ஐங்கோலம் சேர்த்து சாம்பிராணித் தயிலம் அதனுடன்கூட்டிப் பூசையில் வைத்து ஜெபிக்கும் மந்திரம் ந-ம-சி-வ-ய ஓம் கிலியும் சவ்வும் ஐயும் சர்வபாதா சாக்குருஷிணி என்று நாளொன்றுக்கு மூன்றுவேளையும் தவறாமல் லட்சம் உருவு கொடுத்துவர வேண்டியது. ஆனால் இருபத்தோர் நாள் கொடுக்கவேண்டும் பின்பு அதை யெடுத்து வைத்துக்கொண்டு ஜாலமாடும் சபையில் சாம்பிராணி தூபம் போடுவது போல் போட இந்தப் புகைபட்டப் பேர்களெல்லாம் வெறிகொண்டவர் போல் ஆடுவார்கள் ஆச்சரியமாக இருக்கும்.

243 ஒரு மனிதனைத் தொட்டால் தொட்ட விடமெல்லாம் பத்தல் பத்தலாக பிளக்கும் ஜாலம்.

குறளி வசியமாகும்படியாக தியானம் செய்யும்விதம் எவ்விதமெனில் ஓம் அவ்வும்-உவ்வும்-மவ்வும்-ஸ்ரீம் ஹ்ரீம் கிலியும் வயநமசி குறளிவாவா நீ நான் சொன்னதெல்லாம் செய்வாய் என்று இந்திரஜாலமையை யெடுத்துப் பூசையில் வைத்து இருபத்தொருநாளும் இரண்டு வேளையுந் தவறாமல் லட்சம் உருவுஜெபி பலிபூசைநடத்தி மையை எடுத்து வைத்துக்கொள்ளவும். பின்பு அந்தமையைக் கொஞ்சம் விரலில்தொட்டு குறளியைத் தியானித்து ஒருவர்மேல் தடவியவிடமெல்லாம் பத்தல்பத்தலாகப் பிளக்

தாற்போல் தோற்றும் அனைவரும் பிரமிப்பார்கள். ஆனால் மூனேமுக்கால் நாழிகைக்குள் மறைந்துப்போகும்.

244 வயற்றைக்கீறி குடலையெடுத்துக் காட்டும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் ஒரு சூரிகத்தியைக் கையிலெடுத்துச் சபையோரைப்பார்த்து இதோ என் வயற்றைக் கீறிக் குடலை யெடுத்துக் காட்டுகிறேன் பாரென்றுசொல்லி குறளியைத் தியானித்து அம்மணி இப்போது பார்ப்பவர்களுக்கு வயற்றைக் கீறினப்போலும் குடல்வெளியே வந்தாற்போல் தோற்றும்படிச் செய்குவாயென்று சொல்லி மேற்படி இந்திரஜாலமையை விரல்தொட்டு தந்திரமாக கத்தியோடு வயற்றில் நேராகத்தடவிக்கொள்ள அப்போது பார்ப்பவர்களுக்கு வயர்கிழிந்தாற்போலும் குடல் வெளியில் வந்தாற்போலும் தோற்றும் ஆச்சரியப்படுவார்கள். சிலர் இதைப் பார்த்து பிரமித்துக் கண்ணை மூடிக்கொள்வார்கள் சிலர் பார்க்கப்போகாதென்று அப்பாலோடிப் போவார்கள்.

245 மல்லிகை மொக்கு அழைப்பிக்கும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் ஒரு பூக்குடலையை யெடுத்து சபையோர்களுக்காட்டி இந்தப் பூக்குடலைநிறைய மல்லிகைமொக்கு அழைப்பிக்கின்றேன் பாருங்களென்று சொல்லி குறளியைத் தியானித்து அம்மணி இந்தப் பூக்குடலை நிறைய மல்லிகை மொக்குக்கொண்டு வரவேணுமென்று சொல்லி அந்தப் பூக்குடலையின்மீது துணியைப்போட்டு மூடி இந்திரஜால மையைத்தொட்டு தந்திரமாக பூக்குடலையில் தடவிவிட்டு சற்றுநேரம் பொறுத்து துணியைத்திறந்துகாட்ட பூக்குடலைநிறைய பூவிருக்கும் அனைவரும் ஆச்சரியப் படுவார்கள் உடனே துணியைப் போட்டு மறைத்து விட வேண்டும்.

246 ஒன்பது வகை கனிவர்க்கங்கள் அழைப்பிக்கும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் எவ்வகைக் கூடையாயினும் ஒன்பது கூடையெடுத்து அனைவருக்கும் காட்டி ஒவ்வொரு கூடையில்ஒவ்வொரு கனிவர்க்கங்கள் அழைப்பிக்கின்றேன் பாரென்று சொல்லிகுறளியை தியானித்து அம்மணி மாங்கனி தேங்கனிபிலாக்கனி வாழைக்கனி அத்திக்கனி மாதுளங்கனி கிச்சிலிக்கனி அன்னாசிக்கனி கொய்யாக்கனி இந்த ஒன்பது வகைக்கனிகளும் ஒன்பதுகூடையில் கொண்டுவரவேணுமென்றுசொல்லி கூடைகள்மீது வெள்ளை துகில்போட்டுமூடி இந்திர ஜாலமையை தந்திரமாக விரலில்தொட்டு ஒன்பதுகூடைக்குந் தடவி குறளிமந்திரம் ஆயிரத்தெட்டோதி பிறகு துணியைத் திறந்துக்காட்ட மேற்கூறியக் கனிகளெல்லாம் புஷ்களமாகக் கூடைநிறையவிருக்கும். பார்ப்போரனைவரும் ஆச்சரியப் படுவார்கள். உடனே, துணியைப்போட்டு மறைத்துவிட க்ஷணமாக மறைந்துப் போய்விடும்.

247 மனிதனுடையக் காது யானைக்காதைப்போ லாடும் ஜாலம்.

ஜாலமாடும் சபையில் வந்துநின்று சபையோர்களைப்பார்த்து இதோ என்று இரண்டு காதையும் யானைக்காதைப் போலாகச்செய்து ஆடும்படிச்செய்கிறேன் பாரென்று சொல்லி குறளிமந்திரத்தை ஆயிரத்தெட்டோதி தியானித்து இந்திரஜாலமையை விரலில்தொட்டு தந்திரமாக இரண்டுகாதிலுந் தடவிக்கொள்ள யானைக் காதைப்போல் ஆகிஆடும் ஆச்சரியப்படுவார்கள் உடனே துணிப்போட்டு மூடித்திறக்க எப்பேர்தும்போலாகிவிடும்.

248 மீன் பிடிக்கும் வித்தை.

இருகுகள்ளித் தண்டைத் துண்டுதுண்டாக வெட்டி குளங்கிணறு தூரவு மடுவுமுதலான யிடங்களில் நெ[illegible]ட்டு சற்றுநேரம் நின்றாலும் சரி அல்லது பேன் கொட்டையை எடுத்து அதற்குச் சரியிடையாய் பச்சையாக வுரித்த இராவைவைத்து அரைத்து மேற்படி யிடங்களில் தூவினாலும் வேண்டிய வரையில் மீனைப் பிடித்துக் கொள்ளலாம்.

249 கையில் பந்தமேற்றும் ஜாலம்.

கத்தாழை மடல்சோற்றை பில்லை பில்லையாக அருத்து உள்ளங்கையில்வைத்து மேலே சல்லாதுணியைமூடி எண்ணெபந்தம் கொளுத்திவைத்து வத்தினால் பந்தம் பிரகாசமாய் யெறியும் சுடாது சல்லாத்துணியும் வேகாது. அனைவரும் ஆச்சரியப் படுவார்கள்.

250 ஒருகுடம் நீரைக் குடிக்கும் ஜாலம்.

சிறு பூனையென்றவேரும் குப்பமேனிவேரும் வாயில்போட்டுமென்று அடக்கிக்கொண்டால் ஒருகுடம் தண்ணீரையுங் குடிக்கலாம் அந்தகுடத்தையும் தின்றுவிட வேண்டுமென்றாலுந் தின்றுவிடலாம.

251 வேறுமுறை சங்கிலியுருவும் ஜாலம்.

பச்சைத்தவளை நெய்யும் வெங்காயச்சாறும் கத்தாழைச்சாறும் வெந்தியமும் உப்பும் விளக்கெண்ணெயில் கரைத்து வைத்துக் கொள்ளவும். பிறகு நெருப்பில் காய்ந்த சங்கிலியை கம்பிமாட்டி இடதுகையில் தூக்கி வலதுகையில் மேற்படி யெண்ணெயை வாரி உருவினால் குப்பென்று எரியும் கைவேகாது.

252 முள்ளின்மேல் நடக்கும் ஜாலம்.

ஓரிலை தாமரையின் வேரும். செப்பு நெருஞ்சிவேரும் கொண்டுவந்து அதைத் தலைமாற்றிச் செம்புக்குளாவிற்போட்டு குளிசமாடி வாயில்போட்டுக்கொண்டு எவ்வித முள்ளின் பேரிலாகிலும் ஐயமின்றி நடக்கலாம் அனைவரும் ஆச்சரியப் படுவார்கள்.

253 கோழி சண்டை ஜாலம்.

எத்தைச்சொன்னாலுங் கேட்குமென்கிற நத்தைச்சூரிவேருடன் சமூலமுங்கொண்டுவந்து நீரில்போட்டு ஒருமாதம்சென்று யெடுத்து சண்டைசாவலுக்கு கொடுத்து கத்திகட்டி விட்டாலுந் தோற்காது எதிரிசாவலுடையகத்திபட்டாலும் அருபடாது ஆனால் நத்தைச்சூரியைத் தனியாகவாவது ஆகாரங்களோடாவது உள்ளுக்குச செலுத்தவும்.

254 ஆடுகளைக் கைதட்டி அழைக்க பின்னால் வரும் ஜாலம்.

கோரைச்செடியின் வடக்கேபோகும் வேர்கொஞ்சமும் அதின்யிலை கொஞ்சமுங் கொண்டுவந்து சிறு நீர்விட்டு நன்றாய் அரைத்து இரண்டு கைகளிலும் மின்னும் பின்னும் தடவிக்கொண்டு ஆடிருக்கும் இடத்திற்போய் கைதட்டினால் ஆடெல்லாம் பின்னால் தொடர்ந்துவரும்.

255 படுத்த ஆடு யெழுந்திராத ஜாலம்.

தேவாங்கைக் கொண்டுவந்து உயிரைப்போக்கி தோலையுரித்து ஆடிருக்குமிடத்தில் கொண்டுபோய் புதைத்தால் படுத்திருக்கும் ஆடுகள் எழுந்திராது அந்ததோலை தோண்டி யெடுத்தால்தான் யெழுந்திருக்கும்.

256 மீதியடி ஜாலம்.

விளாம்பிசினை தூளாய்ச்செய்து விபூதியில் மிச்சமாய்ப் போட்டுக் கலந்து வைத்துக்கொண்டு குழியில்லாத வெறும் பலகையாயுள்ள மிதியடியை கழுவிவைத்து இரண்டு காலும் அலம்பி இந்த விபூதியைப் பலகைமேல் தூவி நடக்கலாம் இது சிலர் செய்தேயிருப்பார்கள்.

257 பசியில்லாமல் இருக்கும் ஜாலம்.

நாயுருவி விரையைக் கொண்டுவந்து அறைத்துப் பசும்பாலை விட்டுக் கூழாக்கிச்சாப்பிட அன்ன ஆகாரமில்லாமல் இருக்கலாம். ஆனாலிது சிவயோகிகளுக்குத்தகும் மற்றவர்களுக்கு தேகம் [illegible]மாம்.

258 இரும்பை ஒடிக்கும் ஜாலம்.

ஒரு சிறிய இரும்பு கம்பியை வாழைமரத்தடியில் நடுவாகச் சொருகி வைத்து மூன்றுநாள் சென்று எடுத்துவந்து ஒடித்தால் பளபளவென்று ஒடிந்துவிடும்.

259 சுண்ணாம்பு தின்னும் ஜாலம்.

சங்கங்விரையைக் கொஞ்சம் வாயில்போட்டு கசகசவென்று மென்று பின்பு சுண்ணாம்பைத் தின்னலாம். உள்ளுக்கு முழுங்கக்கூடாது அதிகமாய் மென்றுவிட்டால் மாத்துண்டு அதாவது வாய்வெந்தால் உடனே மஞ்சளை வாயிலிட்டுக் கசகசவென்று மென்றால் காரந்தலையும் தேங்காய்ப்பில்லை தின்பதும் வழக்கம்.

260 வாட்டிலோட்டை கடிக்கும் ஜாலம்.

வேளை வேறை வாயிலிட்டு மென்று அடக்கி வாட்டிலோடு பீங்கானோடு இவைகளில் யேதேனும் ஒன்றைப் போட்டுக்கடிக்கலாம் மெல்லலாம் அரிசிபோல் மாவாகிவிடும் வாயை அறுக்காது.

261 வேறுமுறை வாட்டிலோடு மெல்லும் ஜாலம்.

காரமென்பது அக்கராகாரத்தை ஒரு சிறிய துண்டு வாயில்போட்டு நன்றாய்க் கசகசவென்று மென்று தாடையில் அடக்கிக்கொண்டு வாட்டிலோட்டை மென்றால் அரிசிபோல் மசிந்து நீராகிவிடும் வாயை அருக்காது ஆனால் உள்ளுக்கு முழுங்கக்கூடாது உஷாராய் மெல்லவேண்டும்.

262 தண்ணி நிற்கும் ஜாலம்.

மயிற்றேசனையும் காற்கறைந்தை வேரும் [illegible]றைக்கிழங்கும் அரசன் மரத்து வேரும் சமனிடையாக யெடுத்து அரைத்து குடத்திற்குள் பூசி ஜலத்தை கொண்டு சபையில்வந்து கீழ்மேலாய்க் கவிழ்த்துக் காட்டினால் துளி ஜலங்கூடக் கீழேவிழாது அனைவரும் ஆச்சரியப் படுவார்கள்.

263 ஆடு மேயாத ஜாலம்.

மூக்குரைப் பிடித்துவந்து ஓடுகிறத் தண்ணியில் விட்டால் எதிர்நோக்கியோடும் அப்போது கத்தியினால் ஒரேவெட்டாக வெட்டி தலைப்புறத்தை மாத்திரம் எடுத்துவந்து ஆடிருக்கு மிடத்தில் புதைத்து விட்டால் மறுபடியும் எழுந்துத் தழைமேயப் போகாது. புதைத்ததை யெடுத்தால் மாத்திரம் மேயப்போகும்.

264 விளக்குப் பார்க்கும் ஒருவித ஜாலம்.

மயிலிறகு நீட்டமாயுள்ளதை ஒன்று கொண்டுவந்து அதின் கீழ் துவாரமாக ஒருகளிஞ்சிரதும் விட்டு களிமண்ணினால் மூடிப்பிறகு தெரியாமல் சல்லாகத்தை [illegible] முழுதிலும் சத்தி விளக்கெண்ணெயில் தோய்த்து ஒரு பக்கமாக கொளுத்திப் பார்க்க ஏதேதோ புதுமைக ளெல்லாந் தோற்றும் ஆச்சரியமாக விருக்கும்.

265 வாயினில் அக்கினி உண்டாக்கும் ஜாலம்.

நொண்டிச் சிந்து.

வாயிலக்கினி பறக்கும்—வித்தைதனை
வரைகிறேன் கேளிதோ புவியிதே
தம்பலமெனும் பூச்சை—ரவிமுகம்
தாக்கியே காயவைத்துச் சமபாரம்
வெள்ளைகள் தனைபொடித்து—இரண்டும்

வேரிடையாக நீக்கலந்துக் கொண்டு
தாடையில் திருகடிகைத்தான்—தனியே
தந்திரமா யடைக்கிச் சபையில்வந்து
வேடிக்கைப் பாருமென்று—மெதுவாய்
ஊதிட அக்கினிதான் மேலிடுமே தந்தினக்

266 வழக்கு வெல்லும் வித்தை.

தொண்டிச் சிந்து.

மேலிடும் வழக்கை வெல்ல—உபயோகம்
[illegible]ளம்புகிறேன் நீர்கலம் பெறவே
[illegible]விடும் நெருஞ்சியின்வேர்—அதற்கு
நேரிடை மயில் றேசனையாகும்
இரண்டையுஞ் சேகரித்து—வாசலில்
பிடித்த கணேசனைப் பூசைசெய்து
நினைந்துள்க் குலதெய்வம்—அதையும்
நினைத்துட னெடுத்ததை வாயிலடக்கி
வழக்குமுன் முகம்நோக்கி—எதிரி
வாருவான் பிதருவான் சிதறுவான்
கிழக்குமேற் காயுறைப்பான்—அவன்மொழி
இழிந்திடும் மொழிவழி யாகும் தந்தினக்

267 வலையில் மீன்படாத ஜாலம்.

செருப்படைச்சாறு அத்தோடகூட பெருங்காயம் கரைத்து செம்படவர் காயவைத்திருக்கும் வலைகளின்மீது வீசிரி ஊத்திவிட்டால் அந்த வலையில் மீன்படாது. மருபடியும் உழமண்ணு போட்டு ஊரவைத்து வெக்காடுக் கொடுத்து தோய்த்து காயவைத்தால் தான் மீன்கள் படும் இந்த வேலைசெய்தால் பிழைக்கு இடையூராகையால் தோஷமென்பது.

268 வேறுமுறை வாட்டிலோடு மெல்லும் ஜாலம்.

கோபுரந்தாங்கி யென்றச்செடியின் வேரைக் கொண்டுவந்து அதில் சிறிய துண்டாய் வாயில்போட்டு சசகசவென்று மென்று தாடையில் அடக்கிக்கொண்டு வாட்டி லோட்டை போட்டுக்கடித்தால் முருக்கைப் போல் மென்றுவிடலாம் வாயை அருக்காது.

269 கையில் வெத்திலை சுண்ணாம்புச் சிவக்கும் ஜாலம்.

கரிவேலன் கொழுந்தைக் கொண்டுவந்துக் கையில் வைத்துக் கசக்கிச் சார் கையில் தங்கும்படியாக ஊரவைத்து உலர்ந்தபின் கைதட்டிச் சபையோருக்கு நன்றாகக் காண்பித்துவிட்டு சுண்ணாம்பு வெத்திலையுங் கொண்டு வரும்படியாகச் சொல்லி கசக்கினால் குப்பென்றதாகக் கைசிவக்கும் ஆச்சரியப்படுவார்கள்.

270 கிணத்தில் தோண்டி போட்டால் தண்ணி மொள்ளா திருக்கும் ஜாலம்.

புது தோண்டியைக் கொண்டுவந்து அதின் கீழ்புறத்தில் பச்சோந்தியை அறைத்துத் தடவிவிட்டு தாம்புக் கயற்றைக்கட்டிக் கணத்திற்போட்டால் தண்ணீர் மொள்ளாது பார்ப்போர்கள் என்னமோ பிரளயமென்று முழிப்பார்கள். பச்சோந்தி யென்பதுப் பச்சை ஓணான்.

271 ஒருவரை தும்பலும் குசுவும் விடும்படி செய்யும் ஜாலம்.

சுண்டக்காய் வேரும் ஆனைத்திப்பிலி இவை இரண்டையும் சமனாகச்சேர்த்து வஸ்திரகாயஞ் செய்துக்கொண்டு சபையில் தூவிவிட்டால் அந்த நெடியிலிசியில் யேரினவர்களெல்லாம். குசுவு விடுவார்கள் தும்பல் தும்புவார்கள்.

272 பேன் மரண வித்தை.

கெந்தகமும் ரசமும் விராகன் ஒன்றுச நிறுத்தெடுத்து அவையிரண்டையும் ஒன்றாகச்சேர்த்து அரைத்து நூலில்பூசி உலரவைத்து காய்ந்த பிறகு ஸ்திரீகளாவது புருஷர்களாவது பேன் மிச்சமாகப் பிடித்திருந்தால் இந்தக்கயற்றைக் கட்டினால் அத்துடன் பேன்களெல்லாம் மரணமாகி விடும்.

273 எலுமிச்சம் பழத்தைத் துணியில் கட்டி துணியாமல் வெட்டும் ஜாலம்.

ஒரு எலுமிச்சம் பழத்தைக் கொண்டுவந்து நாலுமூலை சவுக்கமுள்ள கைகுட்டையில் நடுவேவைத்து தளர்த்தியாய்ப் பக்குவமாய்க்கட்டி பூமியின்மேல் மண்குவித்து மேற்படி கட்டினப் பழத்தை வைத்து மந்திரம் சொல்பவர்போல் ஓங்காளி ஆங்காளி ரீங்காளி மகாகாளியென்று சொல்லிக் கனத்தக் கத்திக்கொண்டு வெட்டினால் பழம் இரண்டு துண்டாகி விடும், துணியறாது மகாதந்திரமாக வெட்டவேண்டியது ஆனால் மணல் அடியிலிருக்கவேணும்.

274 தண்ணீரில் கறைத்த சாம்பலை மருபடியும் எடுக்கும் ஜாலம்.

சாம்பலை கொஞ்சம் தண்ணீரில் கரைத்துவிட்டு இந்த கரைத்தசாம்பலை யெடுக்கிறேனென்று சொல்லி கொஞ்சம் நெருஞ்சி விறையை விபூதிபோல் தூளாய்ச்செய்து கொஞ்சம் போட்டுக்கலக்கி வழித்தால் வந்து விடும் மருபடியும் கரைத்து விட்டாலும் கரைந்துவிடும் பார்ப்போர்கள் மகா அற்புதமான வித்தை செய்தானென்று ஆச்சரியப் படுவார்கள்.

275 வேறுமுறை நெருப்புமிதிக்கும் ஜாலம்.

தாளிச்செடியின் சமூலம் கொத்தான் சமூலம் மருக்காரை உப்பு இவைகளை சமனிடையாக எடுத்துப் பசும்பால் விட்டு அரைத்து உள்ளங் காலிரண்டிலும் பூசிக்கொண்டு கட்டையைப் போட்டுக் கொளுத்தி தீ அடங்கினபின்பு நெருப்பை அகலப்பரப்பி பயமில்லாமல் மிதிக்கலாம் பார்ப்பவர்கள் அக்கினி ஸ்தம்பனம் செய்தானென்று ஆச்சரியப்படுவார்கள்.

276 தீபத்தையேற்றிப்பார்த்தால் வீடெங்கும் மஞ்சள் நிரமாகத் தெரியும் ஜாலம்.

சாராயத்தைக் கொதிக்கவைத்து கைபொருக்க கால் சூடாக ஆறவைத்து உப்புப்பவுடர் கொஞ்சம் போட்டுக் கொளுத்தினால் வீடெங்கும் மஞ்சள் நிறமாகத் தோத்தரிக்கும் ஆனால் அக்காலத்தில் ஒருவரை ஒருவர் பார்த்தால் வேறு ரூபமாகத் தோற்றும்.

277 வேறுமுறை வெள்ளாய்வேகாதிருக்கும் ஜாலம்.

ஆவாரன் விரகைவெட்டி கொளுத்தி எருமை மூத்திரத்தால் அவித்து அந்தக் கரியை வெள்ளா அடுப்பில் போட்டுவிட்டால் எவ்வளவு கட்டைபோட்டுக் கொளுத்தினும் வெள்ளா வேகாது அதை அவித்து அதிலுள்ளிருக்கும் சாம்பலெல்லாம் எடுத்துவிட்டு மறுபடியும் கொளுத்தினால் வேகும்.

278 நாய்கடிக்காதிருக்கும் ஜாலம்.

நாயுருவியிலையும் எருக்கன் மொக்கும் அதின் இலையும் இம்மூன்றையுங்கசக்கி கடிக்கவரும் நாய்முகத்தில் எறிந்தால் அதை முகர்ந்தால் உடனே மயக்கங்கொண்டு திகைத்து நிற்கும் கண்டவர்கள் எவனோ வாய் கட்டி விட்டானென்று பலவாறாகச் சொல்லி பரிதாபப் படுவார்கள்.

279 குளத்தில் மூழ்கி நாமமிடும் ஜாலம்.

கொடிக்கள்ளிப் பாலைக் கொண்டுவந்து திரேகம் ஆதியந்தமும் நாமமிட்டுக்கொண்டு திருச்சூரணத்திற்குப்பதில் பிரமதண்டிப்பாலை இட்டுக்கொண்டு காய்ந்தபிறகு ஒருவருக்குந் தெரியாமலிருக்கும் சபையோரைப் பார்த்து கிணத்திலாவது குளத்திலாவது மூழ்கி நாமமிட்டுக்கொண்டு வருகிறேன் பாரென்று சொல்லி ஆடை முதலானதுங் களைந்துவிட்டு சோதனைக்காட்டி அனைவருக்கும் முன்பாக கிணத்திலாவது குளத்திலாவது மூழ்கி கொஞ்சநேரம் பொருத்து வெளியேவந்தால் தேகமுழுமையும் நாமமயமாகப் பிரகாசிக்கும் அன்றியும் சபையில் ஒரு சொம்புஜலம் வாத்திக்கொண்டாலும் கொள்ளலாம் ஆச்சரியப்படுவார்கள்.

280 நூலைகொளுத்திச் சேதமில்லாமல் எடுக்கும் ஜாலம்.

கஞ்சித்தண்ணியும் உப்புங்கரைத்து வெண்டைநூலில் பூசி உலரவைத்து காய்ந்தபிறகு அதின்மேல் விளக்கெண்ணெய் பூசிக்கொளுத்தினால் எறியும் நூல் சேதமாகாது அவிந்தபிறகு நூலையெடுத்து அனைவருக்குங் காட்டலாம் ஆச்சரியப்படுவார்கள்.

281 நல்லப் பாம்பைக் கட்டும் ஜாலம்.

சாதாரணமாக சோஜிகளாவது இன்னம் எவர்களாவது நல்ல பாம்பை ஆட்டிக் கொண்டிருக்கையில் வெள்ளைப் பூண்டை அரைத்து வெளாங்காய் பிரமாணம் பாம்பின் முன்போட உடனே படம் விரித்தாடிக்கொண்டிருந்த பாம்பு மயக்கங்கொண்டு பூமியோடு பூமியாகப் படுத்துக்கொள்ளும் பார்ப்பவர்கள் ஆரோ கட்டி விட்டாரென்று பிரமிப்பார்கள்.

282 அக்கினிசட்டியேந்தும் ஜாலம்.

ஒரு புதிய சட்டியைக் கொண்டுவந்து அந்த சட்டியில் நெருப்பைக் கொட்டி கட்டைப் போட்டுக்கொளுத்தி சட்டியில் சாம்பல் நிறைகிறவரையிலுங் கொளுத்தி இரண்டொருநாள் சென்றபின்பு ஆறவைத்து அதிலிருக்கும் சாம்பலை அந்த சட்டியில் முக்கால் சட்டியிருக்கும்படி அழுத்தி வைத்துக் கொள்ளவும் அக்கினிசட்டித் தூக்கிக்கொண்டு வெளியே புறப்படவேண்டுமானால் அந்த சட்டியிலுள்ள சாம்பலின்மேல் கொஞ்சம் கட்டை போட்டுக்கொளுத்தி அச்சமில்லாமல் வெளியில் தூக்கிக்கொண்டு வரலாம் பார்ப்பவர்கள் அக்கினிக் கட்டுக்கட்டினானென்று ஆச்சரியப் படுவார்கள்.

283 துட்டு நடக்கும் ஜாலம்.

மனிதர்மயிரில் ஒண்ணரைமுழமுள்ள ஒரு மயிரையெடுத்து அதின்முனையில் கொஞ்சம் மொழுக்கு ஒட்டவைத்திருந்து ஜாலமாடும்போது ஒருவரிடத்தில் தம்பிடியாகிலும் காலணாவாகிலும் வாங்கி மந்திரம் செய்பவர்போல் மேற்படி மயிர் மொழுக்கில் இந்த துட்டை ஒட்டி எதிரில்வைத்து இன்னொரு முனையைக் கால் பெருவிரலில் கட்டியிருந்து இந்த துட்டை நடக்க வைக்கிறேன் பாரென்றுசொல்லி கொஞ்சம் விபூதியைப்போட்டு சல் முலையாளபகவதி காளிவாவா இந்த துட்டை நடக்கச் செய்யென்று தந்திரமாகக் காலை சட்டென்று தட்டினால் துட்டு துள்ளி வந்துவிழும் கண்டவர்களெல்லாம் வசியமென்று ஆச்சரியப் படுவார்கள். மகாப்பிரட்டாய்ச் செய்யவேண்டியது.

284 மர அன்னம் அண்ணியில் மேயும் ஜாலம்.

மரத்தினால் அன்னமொன்று செய்து அதின் நெற்றில் இரும்புஆணி அடித்து வைத்திருந்து ஒரு மூங்கிற்கொம்பின் முனையில் காந்தத்தைப்

பதியவைத்திருந் துசாலமாடும்போது அச்சபையில் ஒரு மரத்தொட்டியில் ஜலம்விட்டு மேற்படி அன்னத்தை அதில்விட்டு மேற்படி மூங்கிற்கோலைக் கையிலெடுத்து காந்தம் இருக்கும் பக்கத்தை அன்னத்தின் முகத்துக்கு நேர்காட்ட மனம்போல் வரும் பார்ப்பவர்கள் மந்திரமென்றே நம்புவார்கள். ஆனால் லேசானமாத்தில் அன்னம் செய்யவேண்டும்.

285 ஒருவிதஜலத்தை இரண்டுவித நிறம் ஆக்கும் ஜாலம்.

சபையில் ஒரு பொகணியில் ஜலங்கொண்டு வரும்படிச்செய்து இந்த ஜலத்தை இரண்டுவிதநிறம் ஆக்குகின்றேன் பாரென்றுசொல்லி ஒருவருக்குந்தெரியாமல் லிட்மஸ் என்னும் மருந்தைக் கொஞ்சம்போட்டு குப்பென்று நீலவர்ணமானதை அனைவருக்குங் காட்டிப் பார்த்தபின்பு இந்த நீலநிறத்தை [illegible]மாகச் செய்கிறேன் பாரென்று சொல்லி கொஞ்சம் கெந்தகத் திராவகத்தை தெரியாமல் அதில்விட செகப்பு நிறமாகிவிடும். கண்டவர்கள் பிரமித்து ஆச்சரியப் படுவார்கள்.

286 பீனாத்தங் காட்டும் ஜாலம்.

பீனாரிப்பட்டையைக் கொண்டுவந்து இடித்து வஸ்திரகாயஞ்செய்து வைத்து ஜலம்விட்டுக் கட்டியாகப் பிசைந்து கடலைப்பருப்புப் பிரமாணம் உருண்டையாகச் செய்து வைத்துக்கொள்ளவும் ஜாலமாடுமிடத்தில் நாற்றங்காட்டவேண்டில் ஒருவருக்குந்தெரியாமல் ஒரு உருண்டையைக் கீழே போட்டுவிட்டு அடையாளமாக பார்த்துகொண்டேயிருந்து ஒருசிறுவனை அழைத்து மேற்படி உருண்டையுடன் மண்ணையும் சேர்த்து வாரி ஜலம் விட்டு கையிற் பூசினால் பீனாற்றம் நாறும் பார்ப்போர்கள் குட்டிச்சாத்தான்வேலையென்றுத் திகைப்பார்கள்,

287 காய்ந்தகருவாடு தண்ணியில் மேயும் ஜாலம்.

வயற்றைப்பிளக்காத உலர்ந்த கருவாட்டை நாலு ஐந்து கொண்டுவந்து புலிதொடக்கி யிலையும் இஞ்சையிலையும் சமமாகச்சேர்த்து சாரிபிழிந்து அந்தச்சாற்றில் கருவாட்டை ஊறவைத்து சற்றுநேரம் பொறுத்தெடுத்து கிணர் தாவு இவைகளில் போட உயிருள்ள மீன்போல் அலையலைய ஓடும் பார்ப்பவர்களுக்கு ஆச்சரியமாக விருக்கும்.

288 ஐங்காயத்தயிலவித்தை.

சகலவித வித்தைஜாலங்களும் ஆட ஐங்கோலத்தயிலம் கட்டும்வகை எவ்விதமெனில் கன்னியாஸ்திரீயானவள் மரணமானபின் கொண்டுபோய்ப் புதைக்குமிடத்தை அடையாளமாகப் பார்த்து வைத்திருந்து இரண்டு மண்டலம் சென்றபின் இராக்காலம் நடுஜாமவேளையிற் சென்று சுடலையிலுள்ள சமாதியை வெட்டி அவளுடைய எலும்புகள் யாவையும் பெயர்த்துக்கொண்டுவந்து அதைப்பொடியாகச் செய்து அத்துடன் வழலை

உப்பு கல்லுப்பு வைங்கோல் உப்பு அழிஞ்சிமரக் கொட்டை பேய்பீர்க்கன் விதை புங்கங்கொட்டை நாக்குப்பூசி இவைகளை வகைக்குப் பலம் பணிரண்டாக இருத்தெடுத்து உலர்த்தி ஒருபாண்டத்தில் ஐந்துபடி சுத்தஜலம் விட்டு அதிலிந்தச்சரக்கை எல்லாம் ஊரப்போட்டு நாலுஜாமம் சென்ற பின் அவைகளையெல்லாம் எடுத்து ரவியில் உலரச்செய்து உலர்ந்தபின் கல்லுரலில் போட்டு நன்றாகயிடித்து வேறொருப்பாண்டத்தில் இவையெல்லாம் போட்டு அதின்மேல் ஒருசட்டிமூடி வாய்புறத்திற்கு சீலைமண் செய்து பூமியில் நாலுமுழங் குழிதோண்டி சமாதியின் எழுவைக்கொண்டுவந்து அக்குழியில் இரண்டுமுழம் அடையும்படியாகப்போட்டு இரண்டுஜாண் அதிற்பள்ளமாக்கி ஒருசிறிய கலசத்தை அதில் வைத்து மேல்மூடியஜானைக்கு நடுவில் துவாரம் செய்து கலசத்தின்மேல் வைத்து அதின்மேல் மேற்படிபாண்டத்தை மையமாகவைத்து இதையெருவு மாட்டெருவு ஆட்டெருவு மலைப்புழுக்கை சுடுகாட்டுசாம்பல் கரி இவைகளைக் கலந்து அக்குழியை மூடிவிட்டு அத்திவிறகினால் அக்குழிமேல் மூன்று ஜாமமும் ஒரேதியாக யெரிக்கவேண்டும் ஆனால் காலாக்கினிபோல் எரித்து நன்றாய் நெருப்பெல்லாம் பூத்துச்சாம்பலாகி ஆறியபின் குழியைத் தோண்டிப் பாண்டத்தையெடுத்து அப்பால் வைத்துவிட்டு அடியில்வைத்தக்கலசத்தை எடுத்து அதிலுள்ள தயிலத்தையெடுத்து பத்திரப்படுத்தி வைத்துக்கொள்ளவும் இதுதான் ஐங்கோலத் தயிலமென்பதாம்.

289 இத்தயிலத்தைமருத்தயிலமாக்கும் வித்தை.

ஐங்கோலத்தயிலத்தில் இரண்டு சேர்வாங்கி பீங்கானில்விட்டு வழலை சுன்னம் அரைபலம்போட்டு காலாக்கினித்தயிலத்தில் ஒருபலம் சேர்த்து வைத்துக்கொள்ளவும் பூரம் பச்சைகெளித்தி பச்சை ஜாதிக்காய் ஏலம் லவங்கப்பூ மிளகு கிராம்பு சுக்கு கோரோசனை திப்பிலி இவைகள் வகைக்கு அரை விராகனிடை திருத்து யெடுத்துக் கல்வத்திலிட்டுப் பொடித்து அத்தூளை ஐங்கோலத்தயிலத்துடன் சேர்த்து மேற்படிப் பீங்கானுக்கு மேல்மூடிமூடி பூமியிற் பள்ளந்தோண்டிப் புதைத்து ஒரு மண்டலம் பொருத்தெடுத்து வைத்துக்கொள்ளவும் மேற்படித்தயிலத்தை வேளையொன்றுக்கு விராகனிடையீதம் ஒருமண்டலம் உட்கொள்ள எமனை வெல்லும்படியான வயதுண்டாகும் பாலபருவம் பதினாறுமாகி மன்மதனைப்போல் வடிவுதோன்றும்.

290 அஷ்டமாசித்து விளையாடத்தயிலம்.

கழுவிலேறி யிறந்தவனைக்கொண்டுபோய் புதைக்குமிடத்தைப் பார்த்திருந்து அதற்குச் சுற்றிலும் சுவர்யெழுப்பி பந்தோபஸ்தாகச்செய்யவேண்டும் ஆனால் மனுஷாள் நடமாட்டமில்லாத யிடத்திற்புதைக்க வேண்டும் ஒருமண்டலம் பொருந்தும் அதை தோண்டியெடுத்து நாற்றமாறும் படியாகச்சுத்திசெய்து ரவியில் சருகுபோல்உலர்த்தி அதையெடுத்துப் பத்

திரமாகவைத்துக் கொள்ளவும் கருங்காக்கையின் பிச்சும் சரூலமும் ஆந்தை, மயில், கருங்கோழி செம்பருந்து இவை ஐந்து பட்சியையுங்கொண்டுவந்து அதின் ரோமங்களைப்போக்கி மனுஷர்சஞ்சாரமில்லாத யிடத்திற்கொண்டுபோய் சருகுபோல் உலர்த்தி பத்திரமாகவைத்துக் கொள்ளவும் தேவாங்கின் பிச்சு கருநாயின் பிச்சு கரும்பூனைப்பிச்சு நரிகரியின் பிச்சு குறங்கின்பிச்சு இவை ஐந்துப்பிச்சையுமெடுத்து முன்போல் உலர்த்தி பத்திரமாகவைத்துக் கொள்ளவும் மேற்சொன்ன வகையெல்லாம் ஒன்றாகச்சேர்த்துக் கல்லுரலில்போட்டு சதைத்து ஒருபாண்டத்திற் போட்டு அதின்மேல் ஒரு சட்டியைக் கவிழ்த்து சீலைமண்செய்து இரண்டு முழங் குழிவெட்டி அக்குழி மத்தியில் இரண்டுசாண் குழிவெட்டி அந்தச்சிறு குழியில் சிறியக்கலசம் ஒன்றுவைத்து சானையில் நடுவே துவாரஞ்செய்துக் கலசத்தின்மேல் வைத்து அதின்மேல் மேற்படிப்பாண்டத்தை வைத்து பின்பு சமாதியெரு ஆட்டெருவு மாட்டெருவு சுடுகாட்டுச் சாம்பல் இவைகளைக்கொட்டிக் குழியைமூடி ஒருமண்டலம் குமுங்கவைக்கவும்.

சரியாய் நாற்பதுநாளாகும் சென்றபின்பு அக்குழியின் மீது ஒருமரத்தின் விறகினால் மூன்றுஜாமம் எரிக்கத்தயிலமானது இறங்கும். சௌனித்தியதீ ஆறின பின்பு அக்குழியைத் தோண்டி மேல்வைத்த பாண்டத்தை எடுத்து அப்புறம்வைத்து அடியில் வைத்த கலசத்தை எடுத்துப் பார்க்க அஷ்டமாசித்தித் தயிலம் அதில் இறங்கி யிருக்கும் அதை எடுத்து அத்துடன் வழலைசுன்னம் அரைபலம்போட்டு அதை மந்தித்தால் நாகப்பழம் வர்ணம்போல் காணும் அதை வைத்து பயிரவருடைய பூசை செய்து வாலை பூசையும் செய்து பின்பு மையைச் சோவிலிட்டு பத்திரமாகவைத்துக்கொண்டு பலவிதமானச் சித்தும்விளையாடலாம்.

291 தாமரைதடாக முண்டாக்கும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் ஒரு கூழாங்கல்லை கையிலெடுத்து சபையோர்களுக்குக்காட்டி இதை மந்திரித்து ஈசான்னிய மூலையில் போடுகிறேன் நீங்களனைவரும் ஸ்நானபானஞ்செய்ய தாமரைதடாகம் உண்டாக்குகின்றேனென்று சொல்லி வைராவைராகியானித்து தடாகமுண்டாக வேணுமென்று மனதில் எண்ணி ஒருவருக்குந் தெரியாமல் ஐங்கோல் மையை விரலில் தொட்டுக்கூழாங்கல்லில் தடவி ஈசான்னிய மூலைபக்கம் வீசியெறிய உடனே தாமரைத்தடாகம் உண்டாகும் அதில் இலைகளும் புஷ்பங்களும் தழைத்து நிறைந்திருக்கும். பார்ப்போர்கள் ஆச்சரியப்படுவார்கள் ஆனால் அத்தடாகம் மூன்றுமுக்கால் நாழிகைக்குள் மாயமாய் மறைந்துவிடும் அந்த மூன்று முக்கால் நாழிகையும் வைராக்கியத்தோடு தியானித்துக் கொண்டேயிருக்க வேண்டும்.

292 தேவாலயமும் திருக்குளமுமுண்டாக்கும் ஜாலம்.

தனக்கு யிஷ்டமானப் பேர்களை அழைத்துக்கொண்டு ஒரு மைதானத்திற்சென்று இந்த மைதானத்தில் தேவாலயமும் திருக்குளமும் உண்டாகச்செய்கிறேன் பாரென்றுசொல்லி வைரவரைத் தியானித்து தேவாலயம் திருக்குளம் உண்டாக வேணுமென்று மனதில் எண்ணி ஐங்கோலமையை தந்திரமாக ஒரு கெச்சக்காயிற்றடவி வீசி முன்னே யெறிய உடனே தேவாலயமும் திருக்குளமும் உண்டாகும். அதில் நால்வகை ஜாதியோரும் தடாகத்தில் ஸ்நானஞ்செய்து ஆலயதரிசனம் செய்வதாகத் தோற்றும். பார்ப்போர்கள் பிரமித்து மதிமயங்கி ஆச்சரியப்படுவார்கள்.

293 நந்தவனமுண்டாக்கும் ஜாலம்.

ஒரு மைதானமிடத்திற் சென்று தன்னுடன்கூட இருப்போர்களைப் பார்த்து நீங்கள் கண்ணைமூடித் திறப்பதற்குள்ளாக இங்கு நந்தவனம் உண்டாக்கிறேன் பாரென்றுசொல்லி வைரவரைத் தியானித்து நந்தவனமுண்டாக வேணுமென்று மனதில் எண்ணி ஐங்கோலக்கலிவை கொஞ்சம் விரலில்தொட்டு மண்ணைவாரி தனக்கு எந்த திக்கிலிஷ்டமோ அந்த திக்கில் யெறிய உடனே நந்தவனமும் பூந்தோட்டமாகத் தோற்றும். ஆச்சரியப் படுவார்கள். ஆனால் மண்ணை யெறிக்கும்போது அங்குள்ளவர் அனைவரையும் கண்ணை மூடிக்கொள்ளச் சொல்லவேண்டும்.

294 அந்திரத்தில் தேவர்களைக்காட்டும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் சபையோர்களைப்பார்த்து நீங்கள் கண்ணைமூடித் திறப்பதற்குள்ளாக அந்திரத்தில் முப்பத்து முக்கோடி தேவர்களையும் வந்து நிற்கும்படிச் செய்கிறேன் பாரென்றுசொல்லி வைரவர்மந்திரத்தை ஆயிரத்தெட்டுஜெபித்து தேவர்கள்யாவரையும் அந்திரமார்க்கமாக தோற்றச்செய்ய வேணுமென்று மனதில்யெண்ணி, ஒருபலகரை எடுத்து அதில் ஐங்கோலமையைக் கொஞ்சம் தடவி ஆகாயமார்க்கமாக விட்டெறிந்து சபையோர்களை கண்ணைமூடி திறந்து ஆகாயத்தைப் பார்க்கச்சொல்ல அவரவர்கள் வாகனங்களுடன் ஆகாயத்திற் தோற்றப்படுவார்கள். அனைவரும்பார்த்து அண்டதேவர்களைத் துதித்து ஆச்சரியப் படுவார்கள்.

295 ரிஷிகூட்டங்களைக் காட்டும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்திற் சபையோர்களைப் பார்த்து இப்போதுத் தபம் செய்துக் கொண்டிருக்கும் ரிஷிகூட்டங்களை அழைப்பிக்கின்றேன் பாரென்றுசொல்லி வயிரவர் மந்திரத்தை தியானித்து ரிஷி கூட்டங்கள் தோற்ற வேணுமென்று மனதில்எண்ணி ஐங்கோல மையை ஐந்துவிரலிலும் தொட்டுக் கொண்டு புளியன் இலையை புருவி நாலு திக்கிலும்போட உடனே அந்த ரிஷிகள் சிஷியர்களோடு நாலுதிக்கும் நிரளாகத்திரண்டு வருவார்கள் அதுகண்டு அனைவரும் பிரமித்து ஆச்சரியப்படுவார்கள்.

296 புளியமரம் உண்டாக்கும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் ஒரு புளியன் கொட்டையை கையிலெடுத்து அனைவருக்குங்காட்டி இந்த கொட்டை பூமியில் நட்டு இப்போதே மரமாக்கி பூபூத்து காய்காய்த்துப் பழம்பழுக்கும்படி செய்கிறேன் பாருங்களென்றுசொல்லி வைரவர் மந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து புளியமரமாக வேணுமென்று மனதில் ஐங்கோலமையை புளியங்கொட்டையில் தடவி பூமியில் கொஞ்சம் பள்ளந்தோண்டிக் கொட்டையைப் புதைத்து மண்ணைமூடி பார்ப்பவர்கள் நம்பும்படியாக கொஞ்சம்ஜலம்விட்டு கூடையைப்போட்டு மூடிவிடவும் வைரவர் மந்திரத்தை ஜெபித்துக் கொண்டே எழுதரம் திறந்து எழுதரமும் ஜலத்தை விட்டுமூடி பின்பு அனைவரையுங் கண்ணை மூடிக்கொள்ளச்சொல்லி சட்டென்றுக் கூடையைத்திறக்க புளியமரம் ஓங்கித்தோற்றும் அதில் பூபிஞ்சு காய்பழம் நிறைந்துகாணும். பார்ப்போர்கள் மதிமயங்கிப் பிரமித்து திகைத்து நின்று ஆச்சரியப்படுவார்கள்.

297 தென்னந்தோப்பு உண்டாக்கும் ஜாலம்.

ஒரு வெட்டவெளியான மைதானத்திற் சென்று தன்னுடன் வந்தவர்களைப்பார்த்து இந்த மைதானத்தில் ஒருக்ஷண நேரத்திற்குள் தென்னந்தோப்பு உண்டாக்கச்செய்கிறேன் பாரென்றுசொல்லி வைரவரை தியானித்து தென்னந் தோப்புண்டாக வேணுமென்று மனதில் எண்ணி மேல்தோல் போக்காத ஒரு தேங்காய் வித்தையெடுத்து ஐங்கோலமையை அதற்குப்பூசி அந்த மைதானத்தில் ஒருபுறம் புதைத்துவிட்டு நீ வயிரவர் மந்திரத்தை ஜெபித்துக்கொண்டு, கூட யிருப்போர்களைக் கண்ணை மூடித்திறந்துப் பார்க்கச்சொல்ல பெருந்தோப்பாகத் தோற்றும் மரங்களில் காய்களுங் காய்த்துத் தொங்கும் ஆச்சரியப் படுவோர்கள்.

298 பனந்தோப்பு உண்டாக்கும் ஜாலம்.

மேற்கூறிய வண்ணம் ஒரு மைதானத்திற் சென்று ஒரு பனங்கொட்டையை கையிலெடுத்து தன்னுடன் யெத்தனைபேர் வந்தவர்களோ அத்தனைப்பேருக்காட்டி இந்த ஒரு கொட்டையை நட்டு தோப்பாக்கிறேன் பாரென்றுசொல்லி வைரவர் மந்திரத்தை மறவாமல் ஜெபித்துக் கொண்டே பனந்தோப்பாக வேணுமென்று மனதிலெண்ணி ஐங்கோலமையை யெடுத்துப் பனங்கொட்டையில் பூசி அந்த மைதானத்தில் ஒரு பக்கமாக புதைத்துவிட்டு கூட வந்தவர்களைக் கண்ணைமூடி திறந்துபார்க்க சொல்ல நாலுகாணி விஸ்தாரத்திற்குப் பனந்தோப்பாகத் தோற்றும் ஆண்மரமும் பெண்மரமாகக் கலந்து காய்களுங் காய்த்துத் தொங்கும் கண்டவர்கள் கண்மயங்கி ஆச்சரியப் படுவார்கள்.

299 வாழைத்தோப்பு உண்டாக்கும் ஜாலம்.

காலியாகவிருக்கும் ஒரு தோட்டத்திற்சென்று ஒரு வாழைமரத்தண்டைக் கையிலெடுத்து தன்னுடன் வந்திருப்பவர் யாவருக்குங் காட்டி இந்த வாழைத்தண்டை நட்டு வாழைத்தோப்பு உண்டாக்குகிறேனென்று சொல்லி வைரவர் மந்திரத்தை இடைவிடாமல் ஜெபித்துக்கொண்டே வாழைத்தோப்பு உண்டாகவேணுமென்று மனதிலெண்ணி ஐங்கோலமையை யெடுத்து வாழைகன்றுக்குப்பூசி அத்தோட்டத்தின் நடுமத்தியில் நட்டுவிட்டு அங்குள்ளவர்களை கண்ணைமூடி திறந்துபார்க்கச்சொல்ல தோட்டம்நிறைய வாழைத்தோப்பாகத் தோற்றும் ஆச்சரியப்படுவார்கள்.

300 கமுகமரத்தோப்புண்டாகும் ஜாலம்.

மேல்தோல் நீக்காத ஒரு கொட்டைப்பாக்கை கையில் யெடுத்து அனைவருக்குங்காட்டி இந்த கொட்டைப்பாக்கை நட்டு பாக்குமரத்தோப்புண்டாக்குகிறேன் பாரென்றுசொல்லி வைரவர் மந்திரத்தை ஜெபித்துக்கொண்டே கமுகமரத்தோப்பாக வேணுமென்று மனதிலெண்ணி ஐங்கோலமையை அந்த பாக்கிற்குப்பூசி ஒரு மைதானத்திற் கொண்டுபோய் பூமியிற் புதைத்துவிட்டு கூடவந்தவர்களை கண்ணை மூடித்திறந்து பார்க்கச்சொல்ல எங்கும் தோப்பாகத்தோற்றும் பார்ப்போர்கள் மதிமயங்குவார்கள் ஆனால் மந்திரத்தை மறவாமல் ஜெபித்துக் கொண்டேயிருக்க வேண்டும் மந்திரத்தை சொல்வது நிறுத்தினால் உடனே மாயமாகப் போய்விடும்.

301 பலவிதமானவிருட்சங்களும் நிறைந்ததோப்பு உண்டாக்கும் ஜாலம்.

தனக்கு இஷ்டமான மரத்தின் விதைகளையெல்லாம் ஒன்றாகச் சேர்த்து வைத்துக்கொள்ளவும் ஒரு மைதானத்திற்குச் சென்று தன்னுடன் வந்திருப்பவர்களுக்கு மேற்படி விதைகள் யாவையுங் காட்டி இதையிந்த மைதானத்திற் புதைத்து விடுகிறேன் பலவித விருட்சங்களும் உண்டாவதைப் பாருங்களென்று சொல்லி வைரவர் மந்திரத்தை தியானித்து பலவித விருட்சங்களுள்ள தோப்பாக வேணுமென்று மனதிலெண்ணி ஐங்கோலமையை அந்த விதைகளுக்கெல்லாம் படும்படியாகப்பூசி நாலுதிக்கிலும் பள்ளந்தோண்டிப் புதைத்து விட்டு அங்குள்ளவர்களைக் கண்ணைமூடித் திறந்துப்பார்க்கச் சொல்ல பலவித விருட்சமுள்ள தோப்புகளாகத் தோற்றும் அந்தந்த விருட்சங்களில் கனிவர்க்கங்கள் நிறையக்காய்த்திருக்கும் பார்ப்போர்கள் இது கண்கட்டு வித்தையென்றும் கருவின் வேலையென்றும் [illegible]யின் உதவியென்று கருப்பண்ணன் வசியமென்றும் பலவாறாகப் பேசிபரவசித்து ஆச்சரியப்படுவார்கள்.

302 வேலன்முள்ளின் மேல்படுக்கும் ஜாலம்.

நத்தைச்சூரி செடியைக்கண்டுபிடித்து ஆதிவாரத்தில் மஞ்சள் நூலால் காப்புகட்டி வைரவர்மந்திரம் ஆயிரத்தெட்டோதிவிட்டு வந்துவிடவும் மறு ஆதிவாரம் சென்று சிறியருடுவையில் பொங்கலிட்டு பலிகொடுத்து தூபதீபங்காட்டி வைரவர்மந்திரத்தை முன்போல் ஆயிரத்தெட்டு ஜெபித்து செடிக்குகாயம்படாமலும் வேர் அறுமலும் பிடுங்கிக்கொண்டு வந்து அந்த செடியை பூசையில்வைத்து இருபத்தொருநாள் தவறாமல் காலைமாலையும் வைரவர்மந்திரத்தை தவறாமல் வேளை ஒன்றுக்கு ஆயிரத்தெட்டு உருகொடுத்து வந்து இருபத்திரண்டாம் நாள் வேரையெடுத்து அதின்மேல் ஐங்கோலக்கருவைப்பூசி செம்பினாலாவது வெள்ளியினாலாவது கடையம் செய்து அதனுள் இந்தவேரை செலுத்தி வாய்ப்புறத்தை மூடி பிடித்து வைத்துக்கொள்ளவும் சாதாரணமாக வேலன் முள்ளை கிளைகிளையாக வெட்டிப்போடச்சொல்லி தந்திரமாக ஒருவருக்கும் தெரியாமல் கடையத்தை முள்ளின்மேல்போட்டு கூச்சமில்லாமல் படுத்துக் கொள்ளலாம் தேகத்தில் முள்ளுதைக்காது பார்ப்போர்கள் இது யெட்சணிவசியமென்று ஏமாந்து திகைப்பார்கள்.

303 சப்பாத்து முள்ளின்மேல் படுக்கும் ஜாலம்.

தாயைக்கொன்றான் செடிக்கு கிரணத்தில் மஞ்சள் நூல் காப்புகட்டி அதின் வடக்குபோகும் வேரைப்பிடுங்கி வந்து ஐங்கோலக்கருவை அவ்வேரின் மேல் பூசி வாசலைமெழுகி பிள்ளையார் பிடித்துவைத்து அதின் சிரசில் அருகன்பில்சூட்டி பழம்வெல்லம் வெத்திலைப்பாக்கு முதலானதும் வைத்து மேற்படிவேரைப் பூசையில் வைத்து வைரவர் மந்திரம் லட்சம் உருகொடுத்து வேரையெடுத்து குளிசமாடி வைத்துக் கொள்ளவும் ஜாலமாடுமிடத்தில் நாகதாளிமுள்ளை கொண்டுவந்துப் போடும்படிச்செய்து அந்த முள்ளின்மேல் தந்திரமாகக் குளிசத்தைப்போட்டு பயமில்லாமல் படுத்துக்கொள்ளலாம் தேகத்தில் முள்ளுதைக்காது அனைவரும் ஆச்சரியப்படுவார்கள்.

304 வேறுமுறை எலுமிச்சம்பழம் குதிக்கும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் பத்து பதினைந்து எலுமிச்சம் பழம் கையிலெடுத்து அனைவருக்குங்காட்டி இந்தப்பழங்களைப் பூமியில் போட்டவுடன் ஒன்றோடொன்று தாக்கிக்குதிக்கும்படி செய்கிறேனென்றுசொல்லி வைரவர் தியானம் செய்து இந்த எலுமிச்சம் பழங்கள் ஒன்றோடொன்று தாக்கி குதிக்கவேணுமென்று மனதிலெண்ணி தந்திரமாக ஐங்கோலக்கருவைப்பழங்களுக்குப் படும்படியாக பூசி பூமியின்மேற் போட பூமியில் நில்லாமல் குதிக்கும் அனைவரும் பிரமித்து இது மையாளபகவதி வேலையென்று மயங்குவார்கள்.

305 வேறுமுறை தேங்காய் நடக்கும் ஜாலம்.

தேங்காயைக்கொண்டுவந்து சபையோர்களுக்கு காட்டி இந்த தேங்காயை நடக்கச்செய்கிறேனென்றுசொல்லி வைரவர்மந்திரத்தை தியானித்து தேங்காய் நடக்கவேணுமென்று மனதில் யெண்ணி அந்த தேங்காயிற்கு மஞ்சள்பூசி குங்குமமிட்டு தந்திரமாக ஐங்கோலமையை விரலில்தொட்டு தடவி தேங்காயை பூமியின் மேல்விட அது ஒருவிடத்திலும் நில்லாமல் கடகடவென்று புரண்டுக்கொண்டே யிருக்கும் பார்ப்போர்கள் காளி வசியமென்றுக் கலங்குவார்கள் உடனே தேங்காயை மறைத்துவிடவும்.

306 தேங்காய் வெடிக்கும் ஜாலம்.

நீர்முள்ளி விரையைக் கொண்டுவந்து பொடித்து வஸ்திரகாயம் செய்து விபூதியுடன் கலந்து வைத்துக்கொள்ளவும் ஜாலமாடுமிடத்தில் ஒரு தேங்காயை யெடுத்து அனைவருக்குங்காட்டி இதை சூறை விட்டாபோல் வெடிக்கும்படி செய்கிறேன் பாரென்றுசொல்லி வைரவரை தியானித்து தேங்காய் வெடிக்கவேணுமென்று மனதிலெண்ணி ஐங்கோலக் கருவைத் தொட்டு தேங்காயிற்குத்தடவி மந்திரம் செய்பவர்போல் மேற்படி விபூதியை தேங்காயின்மேல்பூசி சபையில் வைத்தவுடன் சூறைவிட்டது போல் வெடிக்கும் பார்ப்போர்கள் இது பத்திரகாளிவசியமென்று பதருவார்கள்.

307 ஆகாயத்தில் எறிந்த முட்டை அந்திரமாகநிற்கும் ஜாலம்.

ஒரு கோழிமுட்டையைக் கையிலெடுத்து சபையோர்களுக்குக் காட்டி இதை ஆகாயத்தில் எறிகிறேன் அந்திரமாக நிற்கும் வேடிக்கைப்பாருங்களென்று சொல்லி வைரவர் மந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து அந்திரமாக நிற்கவேணுமென்று மனதில் எண்ணி ஐங்கோலக்கருவை விரலில் தொட்டு முட்டைக்குத்தடவி ஆகாயமார்க்கமாக விட்டெறிய அது அந்திரமாகநிற்கும் அனைவரும் ஆச்சரியப்பட்டு இது அந்திர தேவதைவசியமென்பார்கள்.

308 வேறுமுறை பாரம் தூக்கும் ஜாலம்.

ஓம்காய்செல்லிச் செடிக்கு மங்களவாரம் சூரியன் உதையமாகுமுன்னே மஞ்சள் நூல் காப்புகட்டி பொங்கலிட்டு பலிகொடுத்து பூசைப்போட்டு வேரைப்பிடுங்கி கொண்டுவந்து அந்தவேரை சிம்மாடு போல் சுற்றி அதின்மேல் ஐங்கோலத்தைலத்தைப் பூசி வைரவரை தியானித்து அந்த வேர் சிம்மாட்டை சிரசின்மேல் வைத்து யெவ்வளவு பாரம் தூக்கினால் பளுவுதெரியாது பார்ப்போர்கள் இது குட்டிச்சாத்தான் வேலையென்றுக் கூடிப்பேசிக்கொள்வார்கள் ஆனால் சிம்மாட்டை ஒருவருக்குந்தெரியாமல் தந்திரமாகவைத்துக் கொள்ளவேண்டும்.

309 கருங்கல்லை கையால்குத்தி உடைக்கும் ஜாலம்.

எவ்வளவுபெரிய பாறையாயிருந்தபோதிலும் கொண்டுவந்து சபையில் வைக்கச்சொல்லி அங்குள்ள அனைவரையும்பார்த்து இந்தக்கருங்கல் பாறையைக் கையினால் ஒரு குத்து குத்தி இரண்டாகப் பிளக்கச் செய்கிறேன் பாரென்றுசொல்லி வைரவர் மந்திரத்தை ஜெபித்துக் கொண்டே பார்ப்பவர்களுக்கு இந்த கல் இரண்டுபிளவாகத் தோற்றவேணுமென்று மனதில் எண்ணி கண்கட்டு மையை கொஞ்சம் விரலில் தொட்டு பாறையிற்றடவி பின்பு ஐங்கோலக் கருவைப்பூசி கையைநோக்கிக் குத்துவது போல் குத்த கல் இரண்டாக உடைந்தாற்போல் அனைவருக்கும் தோற்றும் இது அனுமார்வசியமென்று ஆச்சரியப்படுவார்கள்.

310 நினைத்தவிடத்தில் மாறிமாறி நிற்கும் ஜாலம்.

அருளாதியென்னும் செடிக்கு ஆதிவாரம் காலையிற்சென்று மஞ்சள் நூல் காப்புகட்டி பலிகொடுத்துப் பூசைபோட்டு அதின் வேரைப்பிடுங்கிக்கொண்டுவந்து அதின்மேல் ஐங்கோலக்கருவைப்பூசி வைரவர் மந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து செம்புதகட்டில் குளிசம் செய்து அதில் தவேரை அடக்கி வாய்புரத்தைமூடி பிகிந்து வலதுகையில் கட்டிக்கொள்ளவும் ஜாலமாடுமிடத்தில் சபையோர்களைப் பார்த்து இதோ உங்கள் எதிரில் நிற்கும் யான் மாயமாக உங்கள்பக்கத்தில் வந்து உட்காருகின்றேன் பாருங்களென்று சொல்லி தந்திரமாக கொஞ்சம் மரப்புமையை எடுத்து திலர்தமிட்டுக்கொள்ள ஆள் மறைந்து விடுவாய் உடனேபோய் அவர்கள் பக்கத்திற் குந்திக்கொண்டு நீ பேசாமலிருக்க அப்போது சபையோர்கள் எதிரில் நின்றமனிதனைக் காணோமென்று திகைத்து சுத்துமுற்றும் பார்ப்பார்கள் அது அறிந்து நீ மையைத்துடைத்துவிட அவர்கள் பக்கத்தில் தோற்றுவாய் பார்த்து ஆச்சரியப்படுவார்கள் இப்படி எத்தனைதரமாகிலும் மையை இட்டுக்கொண்டு ஏமாற்றிக் காட்டலாம் ஆனால் மையை யிடுவதும் கலைப்பதும் ஒருவருக்கு தெரியக்கூடாது அருளாதியென்பது குடசப்பாலை என்னும் மூலிகை.

311 வேறுமுறை தீயில் குதிக்கும் ஜாலம்.

கண்டசங்கமென்னும் செடியைக் கண்டுபிடித்து கிரானத்தில் மஞ்சள் நூல் காப்புகட்டிவிட்டு வந்துவிடவும் கன்னியாலக்கினத்திற் சென்று பொங்கலிட்டுப் பலிகொடுத்து தூபதீபங்காட்டி அதின்வடக்குபோகும் வேரைப் பிடுங்கிக்கொண்டுவந்து அதின்மேல் ஐங்கோலக்கருவைப்பூசி பூசையில்வைத்து வைரவர் மந்திரத்தை இருபத்தோர்நாள் தவறாமல் காலைமாலை இருவேளையும் வேளையொன்றுக்கு லட்சம் உருகொடுத்து வந்து இருபத்திரண்டாம் நாள் பெருத்தபூசைபோட்டு வேரையெடுத்து குளிசமாடி வலதுகையில் கட்டிக்கொள்ளவும் ஜாலமாடுமிடத்தில் கட்டை

களைப்போட்டுக் கொளுத்தச்சொல்லி அதுகாலாக்கினிபோல்பத்திஎரியும் போது அதை நீ சுத்திசுத்தி வருகவேண்டும். பார்ப்போர்களுக்கு எரிகின்ற தீ நடுவில் குதித்து வருவது போற்றோற்றும். அப்போது அங்குள்ளவர்கள் பிர்மித்து அக்கினியைக்கட்டிவிட்டானென்று ஆச்சரியப்படுவார்கள்.

312 குளவிகள் உண்டாக்கும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் புளியன்இலையை இலையோடு ஒடித்துக்கையிற் பிடித்து சபையோர்களைப்பார்த்து இந்தப்புளியன்இலையை உருவிப்போடுகிறேன். அவைகுளவியாகப் பறக்கும்வேடிக்கைப் பாருங்களென்றுசொல்லி வைரவர் மந்திரத்தை தியானித்து குளவிகள் ஆகவேணுமென்று மனதில்யெண்ணி கோலக்கருவை விரலில்தொட்டுக்கொண்டு புளியன் இலையை உருவிப்பூமியில்போட உடனே குளவிக்கூட்டங்கள் உண்டாகும் பார்ப்போர்கள் இது கண்கட்டு வித்தையென்று கண்டபடிப்பேசிக்கொள்வார்கள்.

313 வேறுமுறை தேள் உண்டாக்கும் திவ்விய ஜாலம்.

வேப்பிலைகொத்தை கையிலெடுத்து அனைவருக்குங்காட்டி தேள் உண்டாக்குகின்றேன் பாருங்களென்று சொல்லி வைரவர்மந்திரத்தை தியானித்து தேளாகவேணுமென்று மனதில்நினைத்து ஐங்கோலக்கருவை விரலில் தொட்டுக்கொண்டு வேப்பிலையை உருவிக்கீழேபோட புத்திலிருந்து ஈசல் புறப்பட்டாப்போல் தேள்கூட்டம் புறப்பட்டு ஓடும். அனைவரும் ஆச்சரியப்படுவார்கள்.

314 வேறுமுறை பாம்புஉண்டாக்கும் ஜாலம்.

தென்னம் ஓலையொன்றை கையில் எடுத்துசபையோர்களுக்குக்காட்டி இந்த ஓலையை பாம்பாக்குகின்றேன் பாரென்றுசொல்லி வைரவர் மந்திரத்தை ஆயிரத்தெட்டு ஓதி பாம்பாகவேணுமென்று மனதில் நினைத்து ஐங்கோலக்கருவைத்தொட்டு தந்திரமாக ஓலையிற்றடவி பூமியின்மேல் போட்டவுடன் நல்லபாம்பைப்போல் படம்விரித்தாடும் பார்ப்போர்கள் பிர்மித்துமுழிப்பார்கள்.

315 பாம்பிற்கு சீட்டெழுதி அழைப்பிக்கும் அற்புதஜாலம்.

ஒருபனம் ஓலைத்துண்டையெடுத்து அதில் எழுத்தாணியினால் பாம்புகூட்டங்களே இந்தச் சீட்டைப் பார்த்தவுடன் உங்கள் கூட்டமெல்லாம் ஒன்றாகச்சேர்ந்து ஓடிவரவேணுமென்று எழுதி அந்தச்சீட்டைஅனைவருக்குங்காட்டிப் படிக்கச்சொல்லி பின்பு அச்சீட்டைவாங்கி வைரவர் மந்திரத்தை தியானித்துக்கொண்டே பாம்புகூட்டங்களாகத் தோற்றவேணுமென்று தந்திரமாக அச்சீட்டை ஐங்கோலக்கரு ஒருமூலையிலும் மகாபனை ஒருமூலையிலும்மரப்புனை ஒருமூலையிலும் கட்டுமை ஒருமூலையிலும்

தடவிமந்திரத்தை ஜெபித்துக்கொண்டே அச்சீட்டோடு மண்ணைவாரி நாலுதிக்கிலும் இறைக்க பலவிதமானப் பாம்புக்கூட்டங்கள் நாலுதிக்கிலுமிருந்து திரளாகத்திரண்டு சின்னதும் பெரியதுமாக வருவதுபோற்றோன்றும். அப்போது அங்குள்ளப்பாம்புக் கூட்டங்களைபார்த்து பதறி சிலர் ஓடுவார்கள். சிலர் இது மலையாள பகவதிவித்தையென்று மதிமயங்கியிருப்பார்கள்.

316 மரபொம்மை நடக்கும் ஜாலம்.

எந்த மரத்திலாவது பொம்மைசெய்து அதற்கு வர்ணமுதலானதும் பூசி நகைகள் பூட்டி ஆடையுடுத்தி ஆண் பெண்ணாக இரண்டுசெய்து வைத்துக்கொள்ளவும். பின்பு புலிதொடக்கி யென்னும் செடிக்கு பூணைவைத்துக்கொள்ளவும் ஒன்பது நாளும் அம்மாவாசையில் சென்று மஞ்சள் நூலால் காப்புகட்டி ஒன்பது நாளும் தவறாமல் வைரவர் மந்திரத்தை ஓதி பத்தாம்நாள் பொங்கலிட்டு பலி கொடுத்து தூபதீபங்காட்டி அதின்வேரை அறுமல் பிடுங்கிக்கொண்டு வந்து அந்தவேரை பொம்மைக்காலுக்கு அளவாக வளையமாகச் சுற்றி அதின்மேல் ஐங்கோலக்கருவைப்பூசி அதின்மேல்வெள்ளிக்கம்பி பொன் கம்பிசுற்றி பூசையில்வைத்து வைரவர் மந்திரத்தைலட்சம் உருகொடுத்து மரபொம்மை நடக்கவேணுமென்று மனதிலெண்ணி தந்திரமாக அந்த வளையத்தை பொம்மை காலில் மாட்டி மேஜையின்மேல் நிற்கவைக்க பார்ப்போர்களுக்கு அந்த மேஜையை சுற்றிசுற்றி நடப்பது போல்வேடிக்கையாகத்தோற்றும் அனைவரும் இதென்னவசியமோ என்று ஏக்கம்பிடித்துப்பிர்மிப்பார்கள் வளையத்தைக் கழட்டிவிட நடப்பது நின்றுவிடும்.

317 மரத்தைக்குத்தினால் பழங்களுதிரும் ஜாலம்.

இரங்கழிஞ்சி விதையைக் கொண்டுவந்து கல்வத்திலிட்டு முத்தெண்ணெய்விட்டு மைபோல் அரைத்து ஒரு ஸ்திதமானச் சீலையில் தடவி உலர்த்தி திரிசெய்து வைத்துக்கொள்ளவும் திருமண்டையோட்டில் முத்தெண்ணெய் நல்லெண்ணெய் நெய் இம்மூன்றும் அதில்விட்டு மேற்படித்திரியைப்போட்டு கொளுத்தி தயிலம்வாங்கி அத்தைலத்துடன் ஐங்கோலத்தைலம் கொஞ்சம் விட்டுக்கலந்து சிமிளில் வைத்துக்கொண்டு எந்த மரத்தினடியிலாவது நின்றுக்கொண்டு வைரவர் மந்திரத்தை ஜெபித்துக்கொண்டே இந்த மையைத்தொட்டு மரத்திற்றடவி மரத்தைக் கையினாற்குத்த அம்மரத்திலுள்ளப் பழங்காய் முதலானதும் பலபலவென்று பூமியின்மேல் விழுந்துவிடும் அனைவரும் பிர்மித்து ஆச்சரியப் படுவார்கள்.

318 ஆகாசமோடி வித்தை.

ஆகாச மொடிவித்தை ஆடவேண்டுமெனில் தன்னுடன் சேர்ந்தவர்களை அழைத்துக்கொண்டு கீழ்சொல்லி வரும்படியான சாமான்களையும் சேகரித்து யெடுத்துக்கொண்டு தகத்தாக ஒங்கும் கடைபஜார் தன்னிற்

சென்று பந்தல்போட்டு அங்கணம் மேடையொன்று யேற்படுத்தி மனதை ஓர் துறையாக நிறுத்தி மான்தோல் ஆசனம் போட்டுக்குந்தி உனக்கெதிரில் பஞ்சாணத்திருள் மெழுகி மஞ்சளை அரைத்து பிள்ளையார் பிடித்து வைத்து அருகன்புற்கூடி சாம்பிராணி வத்திக்கொளுத்திவைத்து கணபதியைச்சுற்றி கனிவகை முதலான வஸ்துக்களும் வைத்து தாம்பூலமுங்கூட வைத்து தேங்காயுடைத்து சித்தியாகும்படியாக காளபைரவர் மந்திரத்தை தியானம்செய்து மூலமந்திரத்தை நூற்றியெட்டு உருகொடுத்து அண்டாண்டமும் பதினாறுதிக்கும் பந்தனமென்று சொல்லி ஒருதட்டில் சேஷரிசியைவைத்து ஒருதட்டில் புளியன்யிலையைவைத்து சேஷரிசிவைத்திருக்குந்தட்டில் தேங்காய் ஒன்றுவைத்து பிள்ளையாற்கு எதிரில் அருகோண சக்கரமெழுதி அந்தசக்கரத்தின் நடுவில் எலுமிச்சம் பழம் வைத்து அதற்கு நடுவில் விராகன் ஒன்றுவைத்து அதற்கெதிரில் கத்தியொன்றுநட்டு அதற்கெதிரில் உலக்கையொன்று நட்டுவிடவேண்டும்.

மேற்சொன்னபடி செய்து அதற்கப்பால் நாலுமார் ஆரத்தில் முன்போல் அருகோணமிட்டு அந்த அருகோண சக்கரத்தின் நடுவில் ஒருசிறு மையினிடத்தில் சேஷரிசிகொடுத்து உட்காரவைத்து அஷ்டமாந்தைலத்தை விரலில் தொட்டு அங்குள்ளவைகளுக்கெல்லாந் தடவி நீ எதிரியை மோடியெடுக்கும்படியாக அழைப்பாயாகில் எட்டுதிக்கும்பந்தனம்செய்து காளபைரவர் வந்து உனக்குத் துணையாகயிருப்பார் அன்றியும் நீ தியானிக்கவேண்டியது என்னவெனில் அம்மணி இந்த ஓங்காரக்கும்ஏகமாயி என்பங்கில் வாவா ஓம் ஸ்ரீயும் சவ்வும் வாவா அஷ்டவீரசக்தி வாவா அவ்வும் எவ்வும் அஷ்டதிக்கும் உன்பதனம் அம்மணி வாலையும் வாரியும்வந்து எனக்கருள்புரிந்து என்முன்வரும் எதிரியை என் வசமாக்குவாய் புவனகிரியும் பூமாதேவியும் புகழாகயிருந்து போனவன் வாயில் மண்ணைத் தெள்ளிப் போடுவாயென்று சொல்ல நீ நினைத்தபடி ஆகாச மோடியானது ஆகும்.

அன்றியும் ஓம் கவ் உக் கிலியும் குட்டிச்சாத்தி நீயென் எதிரிவாயில் மண்ணைப் போடுஎன்றுசொல்லி நீ குந்திக்கொண்டிருக்கவேண்டும். அப்போது எதிரியானவன் மகா வலுமைகளைப்பேசி துள்ளி குதித்து இந்த மோடியை இதோ க்ஷணத்தில் எடுத்து விடுகிறேனென்று மோடிக்குழல் ஊதி வருகுவான் இந்த மந்திரம் உச்சாடனம் இவையெல்லாம் தெருமன்னுச்சமானமென்று வரும். எதிரியின்மேல் சிறுமையினை சேஷரிசியை யெடுத்து வீசி அவன் மேல்போட அவன் தேகமெல்லாம் அக்கினிபோல் எரியும் தேளும் நண்டுவக்காளியுந் தோன்றி கொட்டும் மறுபடியும் சேஷரிசியை எடுத்து ஓம் என்று அவன்மேல்போட ஒரு காததூரங்கொண்டுபோய் விட்டுவிடும்.

அப்படி ஒரு காததூரம் போனவன் மறுபடியும் மகாகோபத்துடன் படபடென்று மோடிக்குழல் ஊதிக்கொண்டு வருவான். வந்து அருகோண சக்கரத்தின் அருகில் வந்து நிற்பான். அப்போது மறுபடியும் சேஷரிசியை அவன்மேல்போட அவன் ஊதிவந்த மகுடிக்குழல் தூள் தூளாகப்போகும். போவதுடன் அவன்பாதம் பூமியில் பதியாமல் தேள் கொட்டின விஷம்போலேறிட திகைத்து அழுதோடுவான்.

அவன் ஓடினவுடனே இன்னொருவன் உச்சாடனம் முதலானதும் செய்து கொண்டு இந்த மோடியை நான் எடுக்கிறேனென்று மகுடக் குழலூதி இடபாகமாக அவன் வருவானாகில் அதுகண்டு சேஷரிசியை எடுத்து அவன் மேல்போட அவனை குட்டிச்சாத்தான் தெட்டித்தள்ளிக் கொண்டுபோய் இரண்டு காததூரத்திற் கப்பால் விட்டுவிடும். அவன் மறுபடியும் திரும்பி மகுடக்குழல் ஊதிக்கொண்டு அருகோணத்தை தாண்டிவந்து சொல்லுவான். இந்த மோடிவைத்த தலைவனையும் மோடியையும் இதோ க்ஷணத்திற்கொண்டு போகிறேனென்று உச்சாடன மந்திரத்தை உச்சரித்து மோடிக்குழை ஊதிவருவான்.

அது நீகண்டு அஷ்டசித்தி மையை விரலில்தொட்டு அவன் முகத்தில் தெரிக்கும் படியாகச்செய்து கடுகளவாகினும் அவன்முகத்தில் பட்ட உடனே வேதாளம் அவனைக் கொண்டுபோய் வனாந்திரத்திற் போட்டுவிடும். மறுபடியும் அவன் குழை ஊதிக்கொண்டு உலக்கை யருகில் வருவான் அப்போது உலக்கையானது கிளம்பி மாறிமாறி அடிப்பதுடன் சாரைப்பாம்புப் பிடுங்கும். செய்யான் கருந்தேள் செந்தேள் செங்குளவி இவைகளெல்லாங் கொட்டி மரணமாகி விடுவான்.

அவன் மரணமானவுடன் இன்னொருவன் எழுந்து இந்த மோடியை க்ஷணப்போதில் எடுத்துப் போடுகிறேன் பாரென்று மகுடக் குழலூதி உச்சாடனம் செய்து பேதனத்தோடு திக்குக்கட்டு கட்டிக்கொண்டு வருவான். அது நீ கண்டு அஷ்டதிக்கு தைலத்தை கைவிரலில் தொட்டுக் கொண்டு சேஷரிசியை எடுத்து யெதிரிமேல் விட்டு எரிய வேதாளம் ஓடி வந்து அவனைத் தூக்கி கொண்டுபோய் காலகாததூரத்தில் போட்டுவிடும் குழையானது உடைத்துப் பொடிபொடியாகப் போய்விடும். அப்படிப் போயினும் மறுபடியும் அவன் குழையை ஊதிக்கொண்டு உலக்கையைத் தாண்டிவருவான். அதுகண்டு அஷ்டசித்தி தைலத்தை விரலிற்தொட்டு அவன்மீதிலெறிந்துகூட சேஷரிசிபோட உடனே கத்தியானது கிளம்பி ஐங்காததூரம் போகுமட்டும் துரத்திவிட்டும். ஆகாசமோடியானது எழும்பி அருக்கடையாக வெட்டும் சபையோர்களெல்லாம் அதிசயமாகப் பார்ப்பார்கள் தேவனே தேசிகனே குருவேயென்றுகூறி ஜனங்களெல்லாம் கும்பிடுவார்கள்.

அவர்கள்போக பின்னும் சிலபேர்கள் மோடிக்குழை யூதிவந்து இந்த மோடியை வேரோட்ட பிடிக்கிப்போடுகிறோம் பாரென்று வித்வேஷண மும் உச்சாடனமும்செய்து மகுடிகுழையூதி வருவோரைப் பார்த்தவுடன் அஷ்டசித்திமையை விரலில்தொட்டு சேஷரிசியை ஒருபிடிஅள்ளி அவர் கள்மேல்யெறிய சரிவண்டும் செய்யானும் குளவியுமாகத்தோன்றி அவர் களைப்பிடுக்கும். அத்துடன் தேகமெல்லாம் அக்கினிபோல் பத்தும். ஆடையானது பத்தியெறிந்துபோகும். ஊதிவந்த மகுடிக்குழை உடைந்து போகும். வாயிலும், மூக்கிலும், காதிலும் உதிரம்பெருகும். குட்டிச் சாத்தான் தூக்கிக்கொண்டுபோய் ஆறுகாதத்திற்கப்பால் போட்டுவிட்டு வருவான். ஆகாயமோடியையாரும் வெல்லார்கள். குருமகிமையிதுவாகும்.

அப்படிக்கிருந்தும் சிலர் சத்திரட்டிருப்பதையுந் தாண்டி நீ குந்தி கொண்டிருக்குமிடத்திற்கு பின்வருவார். மந்திர உச்சாடனங்கள் செய்து எலுமிச்சம் பழத்தையெடுக்க வருவார். அப்போது நீ அஷ்டமாசித் தைலத்தைத்தொட்டு ஓம்-ஐயும்-பதிரதியென்று பழத்தைத்தொட்டு ஆகா யமார்க்கமாக யெழும்புவாயென்று சொல்ல உடனே ஜில்லென்று ஆகாய மார்க்கம் யெழும்பிவிடும். அப்போது மகுடிக்குழை யூதிவந்த மந்திரக் காரரில் சிலர் பழத்தை பிடிக்கும்படி உடனே அனைவரும் பார்க்க ஆகாய மெழும்புவார்கள். அப்போது பழமானது மேகத்தில் மறையும். அப் போது மந்திரக்காரர்கள் மதிமயங்கி திகைத்துநிற்பார்கள்.

அதுகண்டு அஷ்டமாசித்தைலத்தை விரலில்தொட்டு கத்திக்குத் தடவி உச்சாடனம் செய்தனுப்ப அந்தகத்தியானது ஆகாயமார்க்கமாக யெழும்பி அருக்கடையாக மந்திரக்காரர்களையெல்லாம் வெட்டும். அப் போது அவர்கள் சிரசு சரக்கோர்த்தாற்போல் பூமியின்மேல் விழுகும்வே டிக்கைப்பார்க்கும் ஜெனங்களெல்லாம் வெருண்டு மெச்சிமகிழ்வார்கள். மகுடிகுழையூதும் மந்திரக்காரர்களெல்லாம் மனதுவாடி இவன் நமக்கு எமனென்றுயெண்ணி யேங்கி அழுவார்கள்.

இப்படி அநேகர் அழுக அதிற்சிலர் அசாத்தியமாகப் பேசிக்கொண்டு மகுடிக்குழையூதி காலிருது வெண்டையமுமிட்டு பற்பல விருதுகள் பூண்டு பட்சியிறகு கொக்கு, காடை இவைகளின் இறகைசூடி தனித்தனி யாக வெருமகுடிகள் ஊதி ஸ்தம்பனம் உச்சாடனம்செய்து சபையில்வந்து நின்று இந்தமோடிவைத்த எதிரியைகட்டி இச்சணமே வெல்கிறோமென் றுசொல்லிவருவார்கள். வந்தவுடன் நீ ஆகாயம்போனபழத்தை அழைப் பிக்கும்படி ஓம்-கிலியும்-சிராம்-கிறியும்-கிலியும் எக்ஷணதேவிகொண்டு வாயென்றழைக்க எழுபழமும் இருப்பிடம்வந்துசேரும் சேர்ந்தவுடன் மேற்சொன்ன மந்திரத்தை நூறுதரம் சபித்து அஷ்டசித்திமையை விர லில்தொட்டு புளியன் இலையை உருவி மகுடியூதிவந்த மந்திரக்காரன்மேல் போட அதுகருந்தேள் செய்யானுகத்தோன்றி அவனைப்பிடுக்கும் அதுவு

மன்றி செங்குளவி கருங்குளவி கொட்டும். செந்நாய் கருநாய்பிடுங் கும் வாயால் உதிரங்கக்குவார்கள் மகுடியது உடைந்துப் பொடிபொடியா கப்போகும் அத்துடன் அவர்கள் அசைந்துப்போய் விடுவார்கள்.

அவர்கள்போக இன்னும் சிலர்கள் மந்திர உச்சாடனம் செய்துக்கொ ண்டு மோடியில் வைத்திருக்கும் விராகனையெடுக்க வருவார்கள். அது அறிந்து நீ இறீம் ஓம் ஸ்ரீயும் அங்கிறியும் சக்கம்மா விராகனை ஆகாயங் கொண்டு போவாய் தாயே என்று அஷ்டமசித்தி தைலத்தை விரலில் தொட்டு விராகனைத்தொட அது ஆகாயம் யெழும்பி மேகத்திற்போய் மறையும் அதுகண்டு மந்திரக்காரர் அத்துடன் மகுடியூதி ஆகாயம் எழு ம்புவார்கள் அதையறிந்து நீ அஷ்டமாசித்தி தைலத்தைத் தொட்டு வேதா ளமந்திரத்தை ஜெபிக்கும் விதம் எப்படியெனில் ஓம் கிறியும் வங் யம் கிலி யும் வேதாளமே யெங்கபங்கில் வாவா என்று உரு நூறு ஜெபித்து தைல த்தை கத்தியிற்றடவி பிரயோகஞ் செய்ய அந்தக்கத்தியானது ஆகாய மார்க்கமாக எழும்பி அனேகம் பேர்களை அருக்கடையாக வெட்டும் அதி ல்மாண்டுப்போவார் மந்திரக்காரும் மோடிக்காரரும்.

இப்படியாக நாற்றிசையிலுள்ளவரும் மோடியை வந்துபார்த்து மகிழ மகுடியூதும் மந்திரக்காரர்கள் உன்னை வந்துவணங்கி நாங்கள் கடைத் தேரும்படி கிருபைசெய்யவேண்டும் கருவுள்ள தேவனே யென்றும் எங் கள் பெண்பிள்ளைகள் பிழைக்கும்படியாக போகவிடை தருவீரென்றும் இந்தமோடி யெடுக்க எங்களால் முடியாது எங்கள்மீது இரக்கம்வைத்து நீர் காப்பாற்ற வேணுமென்று காலில்விழுந்தும் அவர்கள் பூண்டுவந்த விருதெல்லாங் கழட்டிவந்து வைப்பாராகில் அப்போது நீ யாது சொல் வாயெனில் இப்போது மாணமடைந்தவர்களை எழுப்பித் தருகிறேனென் ன்றுசொல்லி சிவமூர்த்தியை தியானம் செய்வதெப்படியெனில் ந-ம-ய வ-சி-ஓம்-மறியும் மய்யும் மருளுவும் ஸ்ரீயும் சல்வும் என்றும் உருநூறு ஜெபித்து செத்தபிணம் யெழுந்திருக்க வேண்டும் சிவாய நமாவென்று ஐங்கோலத்தைலத்தைதொட்டு வெகுஜனம்பார்க்க தெரிக்க சஞ்சீவியான ஐங்கோலமை பட்டவுடன் செத்த பிணமெல்லாம் யெழுந்திருக்கும் எழு ந்தவுடன் உன்காலில் விழுந்துப்பணிவார்கள் அப்போது நீ அவர்களை வா ழ்த்தி அவர்கள் விருதுகள் யாவையுங்கொடுத்து அவரவர்கள் இருப்பிடம் அனுப்பிவைக்க அனைவரும் உன்னைவாழ்த்தி கொண்டாடுவார்கள்.

319 நரியாகும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் நரி எலும்பைக் கையிலெடுத்து அனைவருக்குங் காட்டி இந்த எலும்புக்கு ஒருமந்திரம்போட்டு நரியாகும்படி செய்கிறேன் பாரென்று அஷ்டமாசித்தி மையையும் ஐங்கோலக்கருவையுந் தடவி பூமி யின்மேல்போட நரியுருவாயோடும் பார்ப்போர்கள் பிரமித்து ஆச்சரியப் படுவார்கள் ஆனல் அந்த நரியைப் பிடித்து உடனே மறைத்து விட வேண்டும்.

320 நாயாகும் ஜாலம்.

நாயெலும்பைக் கையிலெடுத்து சபையோர்க்குக் காட்டி இந்த நாயெலும்பை நாருட்டியாகச் செய்கிறேன் பாரென்று அஷ்டமாசித்தி மையும் ஐங்கோலக்கருவையும் பூசி பூமியில் வைத்து ஒரு கூடையைப் போட்டு மூடி மந்திரம் செய்பவன்போல் சற்றுநேரமிருந்து சல்மலையாளபகவதி நாகுட்டியாகச் செய்யடி என்று மூன்றுதரம் சொல்லி கூடையைதிறக்க நாய்குட்டி குலைத்துக்கொண்டு சபையிலோடும் பார்த்து ஆச்சரியப்படுவார்கள் உடனே முன்போல் மறைத்து விடவும்.

321 பூனையாகும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் பூனையின் அஸ்தியை எடுத்து அனைவருக்குங் காட்டி இந்த அஸ்தியைப் பூனையாக்குகிறேனென்று அஷ்டமாசித்தி மையும் ஐங்கோலக்கருவையும் அஸ்தியிற் பூசி தாழவைத்து ஒரு கூடையை மேலே மூடிவிட்டு பின்பு மூன்று சிறியக்கல்லை கையிலெடுத்து இருபதடி தொலைவாகப்போய் நின்றுக்கொண்டு அந்த மூன்று கல்லையும் மந்திரமோதி போடுவதுபோல் ஒவ்வொன்றாகக் கூடையின்மேல் விட்டெறிந்து கூடையருகில் வந்து பகவதிகாளி பூனைக்குட்டியாகச் செய்யடி யென்று மூன்றுதரம் சொல்லி கூடையைத் திறந்துக்காட்ட பூனைகுட்டியாகத்தோற்றப்படும் பார்ப்போர் இது காளிவசியமென்று களிப்படைவார்கள்.

322 முசலாகும் ஜாலம்.

முசல்அஸ்தியொன்றை கையிலெடுத்து அனைவர்களுக்குக் காட்டி இந்த அஸ்தியை முசலாக்குகிறேனென்று அஷ்டமாசித்தி மையையும் ஐங்கோலக்கருவையும் அந்த எலும்பிற்குப்பூசி பூமியில் வைத்து முன்போல் கூடைபோட்டுமூடி அடா குட்டிச்சாத்தான் இந்த கூடையிலிருக்கிற எலும்பைக்கொண்டுபோய் காட்டி லெறிந்துவிட்டு காட்டிலிருக்கும் ஒரு முசல் குட்டியை பிடித்துவந்து இந்தக்கூடைக்குள் வையடாவென்று சற்றுநேரம்பொருத்து கூடையைத்திறந்து காட்ட முசல் துள்ளியோடும் சபையோர்களும் நம்பி ஆச்சரியப்படுவார்கள்.

323 முள்ளம் பன்றியாகும் ஜாலம்.

முள்ளம் பன்றியின் முள்ளாகிலும் அஸ்தியாகிலும் எடுத்து சபையோர்களுக்குக்காட்டி இந்தஅஸ்தியை முள்ளம்பன்றியாக செய்கிறேனென்று அஷ்டமாசித்தி மையைத்தொட்டு தடவி ஐங்கோலக் கருவைப்பூசி பூமியின்மேல்வைத்து பெரியக்கூடையை போட்டுமூடி சபையோர்களெல்லாம் விரும்பும்படியாகக் குட்டிச்சாத்தான் பொம்மையை கையிலெடுத்து அடேகுட்டிச்சாத்தான் நீ சீக்கிரமாகச் சென்று இந்த அஸ்தியைக்கொண்டுபோய் அடவியில்எறிந்துவிட்டு அடவியிலிருக்கும் முள்ளம்பன்றியொன்

றை பிடித்துக்கொண்டுவந்து இந்த கூடைக்குள் வையடாவென்று அந்த பொம்மையை அப்பாலெறிந்துவிட்டு சற்றுநேரம்பொருத்து கூடையைத் திறந்துக்காட்ட முள்ளம் பன்றியைப்போல் தோற்றவாகி முள்ளுகளைச் சிலிர்ப்பிக்கொண்டு நிற்கும் கண்டோர்கள் கண்மயங்கிப் பிரமிப்பார்கள் ஆனால் முன்போல் பன்றியைமறைத்து விடவும்.

324 மானாகும் ஜாலம்.

பின்னமில்லாமல் உரித்த மான்தோலை எடுத்து சபையோர்களுக்குக்காட்டி இந்ததோலுக்கு உயிர்கொடுக்கின்றேன் பாரென்று அஷ்டமாசித்தி மையைவிரலில் தொட்டு தோலின்மேல் தெளித்து ஐங்கோலக்கருவையும் பூசி தோலின் கழுத்தில் ஒருகயர்கட்டி தோலின்மேல் வெள்ளைதுப்பட்டியைப்போட்டுமூடி மயானருத்திரி மான்தோலுக்கு உயிர்கொட்டியென்று மூன்றுதரம் சொல்லி துணியையெடுக்க மானுவாகி யெகுரும் அதைக்கண்டவர்கள் யாவரும் மயானருத்திரி வசியமென்று மயங்குவார்கள் உடனே மறைத்துவிடவும்

325 மாடாகும் ஜாலம்.

பசுவின்தோலையாயினும் எருதின் தோலையாயினும் எடுத்து அனைவருக்குங்காட்டி இதோ ஒருமந்திரம் சொல்லி க்ஷணநேரத்திற்குள் உயிர் உண்டாகச் செய்கிறேன் பாரென்று வாலையை தியானித்து அஷ்டமாசித்திமையை விரலில் தொட்டு தோலின்மேல் தெளித்து ஐங்கோலக் கருவையும் பூசி பூமியின்மேல் வைத்து பெரிய துப்பட்டியைப் போட்டுமூடி துர்க்கி சாமுண்டி சாமளாதேவி இந்த தோலுக்கு உயிர்கொடுப்பாயென்று மூன்றுதரம் சொல்லி மேல்மூடிய துணியை வாங்க மாடுருவாகத்தோற்றும் பார்ப்போர்கள் இது சாமளாதேவி வசியமென்று சகலரும் நம்பி ஆச்சரியப்படுவார்கள்.

326 எருமாடு ஆகும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் எருமைதோலாயினும் எருமைக்கடா தோலாயினும் எடுத்து அனைவருக்குங்காட்டி இந்த தோலுக்கு உயிர் கொடுக்கிறேன் பாரென்று பைரவரைத் தியானித்து அஷ்டமாசித்தி மையை விரலில்தொட்டு தோலின்மேல் தெளித்து ஐங்கோலக் கருவையும் பூசி. பூமியில்வைத்து ஒரு கருப்பு கம்பளியை யதின்மேல மூடி ஓ சங்கிலிக் கருப்பா சீக்கிரம் இந்த தோலுக்கு உயிர் கொடுப்பாயென்று சொல்லி சற்றுநேரம் பொருத்து மூடிய கம்பளியைத் திறக்க தோல் எருமாடுருவாகத்தோற்றும் சபையோர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

327 ஆடாகும் ஜாலம்.

ஆட்டுத்தோலைக் கையிலெடுத்து அனைவருக்குங்காட்டி இதோ இந்த தோலை கண்மூடி கண்திறக்குமுன் ஆடாகும்படி செய்கிறேன் பாருங்களென்று வாலையை தியானித்து பைரவர் மந்திரத்தை நூத்தியெட்டு ஜெபித்து அஷ்டமாசித்தி மையை விரலில் தொட்டு தோலின்மேல் தெளித்து ஐங்கோலமையும் பூசி பூமியின்மேல்வைத்து துப்பட்டியை மேலே போட்டுமூடி சற்றுநேரம் பொருத்து திறந்துக்காட்ட ஆடுருவாகத் தோற்றமாகி எழுந்து நிற்கும் சபையோர்கள் ஆச்சரியப் படுவார்கள்.

328 யானையாகும் ஜாலம்.

ஒரு வெட்ட வெளியான மைதானத்திற்சென்று யானையின் அஸ்தியை ஒன்று கையில்பிடித்து அனைவருக்குங்காட்டி இந்த யானையின் அஸ்தியை விட்டெறிந்து யானையாக ஓடிவரும்படி செய்கிறேனென்று பைரவர் மந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து வாலையை தியானித்து ஒருவருக்குந் தெரியாமல் அஷ்டமாசித்தி மையை விரலில் தொட்டு ஆனை அஸ்திக்குத்தடவி ஐங்கோலக்கருவிற் கொஞ்சம் பூசி அனைவரும் பார்க்க அதைஓங்கி விட்டெறிய உடனே யானை யுருவாகத் தோற்றமாகி எதிரில் வீரிட்டு ஓடிவரும். அப்போது வேடிக்கைப் பார்ப்போர்களெல்லாம் மிரண்டுமிரண்டு ஓடுவார்கள் உடனே மறைத்துவிடவும்.

329 புலியாகும் ஜாலம்.

புலியடங்கும்படியாக போன் ஒன்றுசெய்து அந்த போனை ஜாலமாடுமிடத்திற் கொண்டுவந்து சிறுத்தி பழுதில்லாமல் உரித்த புலித்தோலொன்றைக் கையிலெடுத்து சபையிலுள்ள யாவருக்குங்காட்டி இந்த தோலை போனுக்குள் போடுகிறேன் புலியாகுது பாரென்று பைரவர் மந்திரத்தை ஆயிரத்தெட்டோதி வாலையை தியானித்து அஷ்டமாசித்தி மையை விரலில் தொட்டு தோலின்மேல் தடவி ஐங்கோலக்கருவும் பூசி போனுக்குள் போட்டு மேலே போன்மரையும்படியாகத் துணியைப்போட்டுமூடி சல். மலையாள்பகவதி புலித்தோலை புலியாகச் செய்வாயென்று மூன்றுதரம் சொல்லி துணியைவாங்க புலிவுருவமாகத் தோற்றமாகி கர்ச்சிக்கும். கண்டவர்கள் மனங்கலங்கி ஆச்சரியப் படுவார்கள்.

330 கரடியாகும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்திலாவது இன்னம் எந்தவிடத்திலாவது ஒரு சொம்பை நட்டு பின்பு கரடிதோலை எடுத்து வேடிக்கைப் பார்ப்போர்கள் அனைவருக்குங்காட்டி அதின்கழுத்தில் கயர்கட்டி நட்டிருக்குங் கொம்பிற்கட்டிவிட்டு இந்த தோலுக்கு உயிர்கொடுத்து கரடி யாக்குகிறேனென்று பைரவர்மந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து அஷ்டமாசித்தி மையை விரலில்தொட்டு தோலின்மேல் தெளித்து ஐங்கோலக்கருவைப்பூசி தோ

லின் மேல்துப்பட்டிபோட்டு மூடிவிட்டுஅம்மணி காளிகாதேவி கடுக கரடி தோலுக்குயிர் கொடுப்பாய் என்று மூன்றுதரம் சொல்லி துணியை வாங்க கரடியுருவாகிக் கர்ச்சிக்கும் பார்ப்போர்கள் பிரமித்து இது காளியுடைய வசியமென்று நம்புவார்கள்.

331 மந்தியாகும் ஜாலம்.

குரங்கின் தோலையெடுத்து அனைவருக்குங் காட்டி இந்த தோலுக்கு உயிர் கொடுக்கிறேன் பாரென்று வாலை மந்திரத்தை நூத்தியெட்டுதரம் ஓதி பைரவரை தியானித்து அஷ்டமாசித்தி மையை விரலில் தொட்டு தோலின்மேல் தெளித்து ஐங்கோலக் கருவையும் பூசி பெரியக் கூடையைப்போட்டுக் கவிழ்த்துவிட்டு அம்மணி வாலைபரமேஸ்வரிகுரங்குதோலுக்கு கூடியசீக்கிரத்தில் உயிர்கொடுப்பாய் என்று மூன்றுதரம் சொல்லி கூடையைத் திறந்துக்காட்ட குரங்குருவாகிக் குதித்தோடி யெகுரும். அதனைப் பார்ப்போர்கள் யாவரும் பிரமித்து நிற்பார்கள்.

332 அஸ்வமாகும் ஜாலம்.

குதிரையின் முதுகெலும்பை எடுத்து அனைவருக்கும் காட்டி இந்த எலும்பை விட்டெறிகிறேன் அஸ்வமாவோடிவருங் அற்புதத்தைப் பாருங்களென்று பைரவர்மந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து அஷ்டமாசித்தியை விரலில்தொட்டு எலும்பிற்குத்தடவி ஐங்கோலக்கருவையும் பூசி அனைவரும்பார்க்க விட்டெறிய அஸ்வமாக ஓடிவரும் அங்குள்ள பேர்கள் யாவரும் ஆச்சரியப்படுவார்கள்.

333 கழுதையாகும் ஜாலம்.

ஆண்கழுதைவாலாயினும் பெண்கழுதைவாலையாயினும் எடுத்து ஜாலமாடுமிடத்தில் அனைவருக்குங்காட்டி இந்த வாலுக்கு உயிர்கொடுத்து கழுதையாக்குறேனென்று பைரவர்மந்திரத்தை முன்போல் ஓதி அஷ்டமாசித்தியையும் ஐங்கோலக்கருவையுந்தடவி வடக்குதிக்காக விட்டெறிய கழுதையுருகொண்டோடிவரும் பார்ப்போர்களெல்லாம் இது பைரவருடைய வசியமென்று நம்பி ஆச்சரியப்படுவார்கள்.

334 கீரிப்பிள்ளையாகும் ஜாலம்.

கீரிப்பிள்ளை தோலை பழுதில்லாமல் உரித்துவைத்திருந்து ஜாலமாடுமிடத்தில் அந்தத்தோலைஅனைவருக்குங்காட்டி இந்ததோலுக்கு உயிர்கொடுத்து க்ஷணநேரத்திற்குள் எழுப்புகிறேன் பாரென்று வாலை மந்திரத்தை நூத்தியெட்டுதரம் ஓதி பைரவரைத்தியானித்து அஷ்டமாசித்தி மையையும் ஐங்கோலக் கருவையும் தோலின்மேல் தெளித்து தாழவைத்து கூடையைப் போட்டுமூடி அடா குட்டிச்சாத்தான் சீக்கிரம்சீக்கிரம் ஜல்தி ஜல்தி கீரிதோலுக்கு உயிர்கொடடா என்று மூன்றுதரம்சொல்லி கூடையைத்திறக்க உயிருள்ளக் கீரிப்பிள்ளையாகத் தோன்றும் பார்ப்போர்கள் பிரமித்து இது குட்டிச்சாத்தான் வேலையென்று நம்பி ஆச்சரியப்படுவார்.

335 எலியாகும் ஜாலம்.

எலித்தோலை பழுதில்லாமல் உரித்து மேற்கூறியபடி ஒன்றுங் குறைவில்லாமற்செய்து அந்ததோலை யெலிபோனில்போட்டு அதின்மேலொரு துணிபோட்டுமூடி சற்றுநேரம் பொருத்து துணியையவாங்க போனுக்குள் எலியுலாவும் ஆச்சரியப் படுவார்கள்.

336 பெருச்சாளியாகும் ஜாலம்.

பெருச்சாளி தோலை பழுதில்லாமல் உரித்து மேற்சொன்னபடி ஒன்றுந்தவறாமல் முடித்து தோலைக் கிழவைத்து ஒரு கூடையைப் போட்டுமூடி சற்றுநேரம்பொருத்து திறந்துக்காட்ட உயிருள்ளப் பெருச்சாளியாகத்தோற்றும். அனைவரும் சந்தோஷப் படுவார்கள்.

337 அணிப்பிள்ளை யாகும் ஜாலம்.

அணிப்பிள்ளைத் தோலை பழுதில்லாமல் உரித்து மேற்கூறியபடி யாவையுமதற்குச் செய்து பூமியில்வைத்து கூடையைப்போட்டுமூடி சற்றுநேரம்பொருத்து திறந்துக்காட்ட உயிருள்ள அணிப்பிள்ளை யாகவிருக்கும் யாவரும்பார்த்து அதிக சந்தோஷப் படுவார்கள்.

338 எறும்பாகும் ஜாலம்.

ஐங்கோலக்கருவை கொஞ்சம் தொட்டு கையிற் பூசிக்கொண்டு அஷ்டமாசித்திமையை விரலில் தொட்டு மண்ணை அள்ளி எறும்பாகவேணுமென்றுபோட எறும்பு புத்திசல்போல் புறப்படும் சபையோர்கள் மதிமயங்கி மனங்களிப்பார்கள்.

339 கோழியாகும் ஜாலம்

கோழிமுட்டையில் ஒன்றையெடுத்து சபையோர் களுக்குக் காட்டி இந்த முட்டைக்கு உயிர்கொடுத்து கோழியாக்குகிறேன் பாரென்றுவாலை மந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து பைரவரை தியானித்து அஷ்டமாசித்திமையை விரலில்தொட்டு முட்டையின்மேல் தடவி பிறகு ஐங்கோலக்கருவை தொட்டு பூசி பூமியின்மேல் வைத்து கூடையைப் போட்டுமூடி ஓம் பகவதிகாளி கோழிமுட்டைக்கு உயிர்கொடுத்து கோழியாகச் செய்வாய் அம்மணி என்று மூன்றுதரம் சொல்லி கூடையைத் திறந்துக் காட்ட உயிருள்ளக்கோழியைப்போல் தோற்றமாகி கொக்கரகோவென்றுக் கூவும் அங்குள்ள அனைவர்களும் ஆச்சரியப்படுவார்கள் ஆனால் சாவல்பொட்டை எதாகவேணுமென்று நினைத்து மையை தடவுகின்றமோ அது போலாகும்.

340 வான்கோழி யாகும் ஜாலம்.

வான்கோழியின் முட்டைக்கு மேற்கூறியவாறுசெய்து பெரியகூடைபோட்டு கவிழ்த்துவிட்டு சல் மலையாளபகவதி உயிர்கொடுயென்று மாத்திரைக்கோலால் கூடையை மூன்றுதரம்தட்டி திறந்துப்பார்க்க உயிருள்ளவான்கோழிபோல்தோற்றும் பார்ப்பவர்கள் கண்டுகளிப்படைவார்கள்.

341 கோக்காகும் ஜாலம்.

கொக்கெலும்பைஎடுத்து மேற்சொல்லியபடி செய்து பூமியில்வைத்து கூடையைப்போட்டுமூடி மாத்திரக்கோலால் மூன்றுதரம் தட்டிதிறந்துப்பார்க்க உயிருள்ள கொக்கைபோல் தோற்றும் ஆச்சரியப்படுவார்கள்.

342 வாத்தாகும் ஜாலம்.

ஒருவாத்து முட்டையை எடுத்து மேற்கூறிய வாறு செய்து பூமியின்மேல் வைத்து கூடையைப்போட்டு மூடி பைரவர் மந்திரத்தை நூத்தியெட்டுதரம் ஜெபித்து மாத்திரைக்கோலால் கூடையை மூன்றுதரம் தட்டி பிறகு திறந்துப்பார்க்க உயிருள்ள வாத்துபோல் தோற்றும் பார்த்தபேர்களெல்லாம் பிரமிப்பார்கள்.

343 காடையாகும் ஜாலம்.

காடைமுட்டை ஒன்றை எடுத்து மேற்கூறிய வாறுசெய்து பூமியின்மேல்வைத்து கூடையைப்போட்டு மூடி சல்மலையாளபகவதி காடைமுட்டையை காடையாக்குவாயென்று மூன்றுதரம் சொல்லி மூன்றுதரம் மாத்திரக்கோலால் கூடையைத்தட்டி திறந்துப்பார்க்க காடை வுயிருடன் உலாவும் ஆச்சரியப்படுவார்கள்.

344 கௌதாரியாகும் ஜாலம்.

கௌதாரிமுட்டை ஒன்றையெடுத்து மேற்சொல்லியவாறு செய்து பூமியின் மேல்வைத்து கூடையைப் போட்டுமூடி பைரவரை தியானித்து மாத்திரைக் கோலால் மூன்றுதரம்தட்டி கூடையைத்திறக்க உயிருள்ள காடை உலாவும் பார்ப்போர்கள் பிரமிப்பார்கள்.

345 மைனாவாகும் ஜாலம்.

மைனாவின் முட்டையொன்றை எடுத்து மேற்கூறிய வாறுசெய்து பூமியின்மேல் வைத்து கூடையைப் போட்டுமூடி அம்மணி மயானருத்திரி மைனாமுட்டையை மைனாவாகச்செய் என்று மூன்றுதரம் கூடையை மாத்திரைக்கோலால் தட்டி கூடையைத்திறந்துக் காட்ட உயிருள்ள மைனாவுலாவும் பார்த்து திகைப்பார்கள்.

346 கிளிப்பிள்ளையாகும் ஜாலம்.

கிளிமுட்டை யொன்றை யெடுத்து மேற்கூறியவார்செய்து பூமியின்மேல் வைத்து கூடையைப்போட்டு மூடி வாலையை தியானித்து கூடையைத்திறந்துகாட்ட கிளிப்பிள்ளையானது கொஞ்சும் அனைவரும் ஆச்சரியப்படுவார்கள்.

எவ்விதப்பட்சி ஜாதிகளையும் மேற்கூறிய வாறுசெய்து காட்டலாம் ஆனால் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு தேவதைகளை தியானிக்க வேண்டும்.

மேற்கூறிய மையின் மகிமை யாதெனில் எந்த வித்தை செய்தபோதிலும் பார்ப்போர் கண்களுக்கு அவ்வவ் உருவம்போல் தோற்றுமேயன்றி நிஜமானதாக ஒன்றுமேயாகாது தோற்றுவதும் உடனே மாயமாய் மறைந்துவிடும் பெரியோர்கள்கூறியவண்ணம் கருவில்லாதவித்தையில்லை குருவில்லாத சிஷியரில்லை யென்றனர் ஆதலால் கருவை முடித்துக்கொண்டால் சகலசித்தும் விளையாடலாம்.

347 நெல்லுப்பயிர் உண்டாக்கும் ஜாலம்.

ஜாலஞ்செய்யுமிடத்தில் நாலடிசதுரத்திற்குச் சதுரம்மபிட்டியால்கோத்தி சுற்றிலும் வரப்புபோட்டு பிறகு ஆழாக்குப் பச்சைநெல்லை எடுத்து அனைவருக்குங்காட்டி இந்தநெல்லை விரைத்து இந்த க்ஷணமே பயிராக்கி கதிர் விடும்படியாகச் செய்கிறேனென்று வாலைமந்திரத்தை ஆயிரத்தெட்டோதி பைரவரை தியானித்து அஷ்டமாசித்தி மையை கையில்தொட்டு நெல்லின்மேல் தெளித்து ஐங்கோலக்கருவையுந் தெளித்து அந்த நெல்லை மேற்படிபாத்தியில் விரைத்து ஜலம்விட்டு அதின்மேல் அகலதுப்பட்டியைப் போட்டு மூடிவிடவும் இப்படி எழுதிரம்திரந்து எழுதிரமும் ஜலம்விட்டு சல்மலையாளபகவதி என்று துப்பட்டியைத்திறக்க பயிருண்டாகி கதிர்விட்டிருப்பதுபோல் யாவருக்கும் தோற்றப்படும் பிர்மித்து ஆச்சரியப்படுவார்கள் ஆனால் முதல் திறக்கும்போது முளைவிட்டிருக்கும், இரண்டாவது திறக்கும்போது இரண்டிலை வெடித்திருக்கும், மூன்றாவது திறக்கும்போது நாலைந்து யிலைவிட்டிருக்கும் நாலாவது திறக்கும்போது இரண்டுவிரக்கடை உயரம் தோற்றும் ஐந்தாவது திறந்து பார்க்கையில் ஜாண் உயரமாகத்தோற்றும் ஆறுவது திறந்துப் பார்க்கையில் குருத்தோடியிருக்கும் ஏழாவது திறந்துபார்க்கையில் கதிர் விட்டிருக்கும் கண்டோர்கள் யாவரும் கண்பூரித்துக் களிப்படைவார்கள்.

348. கேழ்வரகு பயிருண்டாக்கும் ஜாலம்.

கேழ்வரகை எடுத்து அனைவருக்குங்காட்டி மேற்சொன்ன படியாக செய்து பாத்தியில் விரைத்து ஜலம்விட்டு துப்பட்டியால் மூடித்திறக்க கேழ்வரகுப்பயிராகி கதிர்விட்டிருக்கும் ஆச்சரியப்படுவார்கள்.

349 வரகுபயிருண்டாக்கும் ஜாலம்.

ஆடைபோக்காதவரகை எடுத்து அனைவருக்குங்காட்டி அதற்குமேற்சொன்னபடியாகச்செய்து விரைத்து துப்பட்டியை மூடித்திறந்துகாட்ட வரகுபயிராகி கதிர்விட்டிருக்கும் ஆச்சரியப்படுவார்கள்.

350 கம்பு பயிருண்டாக்கும் ஜாலம்.

கம்பை எடுத்து அனைவருக்குங்காட்டி மேற்சொன்னபடி அதற்கு செய்து விரைத்து ஜலம்விட்டு அந்த பாத்திக்கு நாலுமூலையிலும் கொம்புநட்டு சுற்றி துணியினால் மரப்புகட்டி சற்றுநேரம் பொருத்து திரையைவாங்க கம்புபயிராகிக் கதிர்விட்டிருக்கும் கண்டவர்கள் பிர்மித்து வாலைவசியமென்று வாய்மூடிக்கொள்வார்கள்.

351 சோளப்பயிர் உண்டாக்கும் ஜாலம்.

சோளத்தை யெடுத்து அனைவருக்குங்காட்டி மேற்சொன்னபடி அதற்குசெய்து விறைத்து முன்போல் சுற்றிலும் திரைமறவாகக்கட்டி சற்று நேரம் பொருத்து சல்மலையாளபகவதி சோளப்பயிர் உண்டாக்கடி என்று திரையை வாங்கசோளப்பயிராகி கதிர்விட்டிருக்கும் அனைவரும் கண்குளிரப்பார்த்து களிப்புடைவார்கள்.

352 நவதான்னியங்களின் பயிர்முதலானதும் உண்டாக்கும் ஜாலம்.

கடலை, மொச்சை, உளுந்து, துவரை, கொள்ளு, எள்ளு, பச்சைப்பயர், காராமணி, பட்டாணி, இன்னமுள்ள பயிர்வகைகள் யாவும் உண்டாக்கும் வித்தை யாடவேண்டில் அந்தந்தப் பயிர்களை யெடுத்து மேற்படி தவராமல் செய்து நடவேண்டியதை நட்டும் விதைக்க வேண்டியதை விதைத்தும் உடனே செடியாகி காய்கள் காய்த்து தொங்கும்படியாக சபையோர்களுக்குக் காட்டவும் ஆச்சரியப்படுவார்கள்.

353 ஆகாயத்தில் கத்திசுழலுஞ் ஜாலம்.

பட்டாகத்தி ஒன்று அல்லது இரண்டு எடுத்து ஜாலமாடுமிடத்தில் அனைவர்களுக்குங் காட்டி இந்த கத்தியை ஆகாயமார்க்கமாக விட்டெறிந்து அந்திரமாகச் சுழலும்படி செய்கிறேனென்று வாலை மந்திரத்தை ஆயிரத்தெட்டோதி பைரவர்மந்திரத்தை நூத்தியெட்டுதரம் சொல்லி ஆகாயவாணியை தியானித்து அஷ்டமாசித்திமையை விரலில்தொட்டு இரண்டு கத்திக்கும் தடவி ஆகாயமார்க்கமாக விட்டெறிய அது அந்திரமாகநின்று காகரவென்று சுழலும் பார்ப்போர்கள் அந்திர தேவதை வசியமென்று சிந்தைமயங்கி ஆச்சரியப்படுவார்கள். ஆனால் நீ சற்றுநேரத்திற்கெல்லாம் சல்கத்தியே ஆடினதுபோதும் கீழேயிறங்கி வாவென்றழைக்க கத்தி பூமியின்மேல் விழுந்துவிடும்.

354 ஆகாயத்தில் பாணதடி சுழலும் ஜாலம்.

ஒரு பாணதடியை யெடுத்து சபையோர் களுக்குக்காட்டி மேற்சொன்னபடிதியானித்து மையைத்தடவி ஆகாயமார்க்கமாக விட்டெறிய அது

அந்திரமார்க்கத்தில் நின்று மனிதர் எடுத்து சுழட்டுவதுபோல் சுழலும் ஆச்சரியப் படுவார்கள் ஆனால்முன்போல் அழைத்துக்கொள்ளவேண்டும்.

355 பந்து அந்திரமாக எகுறும் ஜாலம்.

தனக்கு எத்தனை பந்துகள் இஷ்டமோ அத்தனை பந்துகளெடுத்து ருத்திராதேவி மந்திரத்தை தியானித்து அஷ்டமாசித்தி மையைதொட்டு ஒவ்வொரு பந்திற்குந்தடவி பூமியின்மேல்போட ஒன்றும் கீழே நிற்காது ஆகாயமார்க்கமாகக் கிளம்பும் ஆச்சரியப்படுவார்கள்.

356 தேவகன்னிகளை காட்டும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் நாலு யெலுமிச்சம் பழமெடுத்து சபையோர்களுக்குக்காட்டி இந்த நாலுபழத்தை நாலுதிக்கிலெறிந்து நாலுதேவ கன்னிகளை அழைப்பிக்கிறேனென்று வாலைமந்திரத்தை ஆயிரத்தெட்டோதி அஷ்டமாசித்தி மையைதொட்டு நாலு பழத்திற்குந்தடவி நாலுதிக்கிலும் விட்டெறிய நாலுதேவ கன்னியர்கள் தோற்றமாவார்கள் அனைவரும் பார்த்து அதிசயமிதுவென்று அகமகிழ்வார்கள்.

357 இரவில் வேதாளத்தை காட்டும் ஜாலம்.

நாலு ஊமத்தன்காயை யெடுத்து அனைவருக்குங்காட்டி இந்தகாயை நாலுதிக்கிலும் எரிகிறேன் நாலுவேதாளம் வரும் வேடிக்கையை பாருங்களென்று பத்திரகாளியை தியானித்து பைரவர் மந்திரத்தைநூற்றியெட்டுதரம்ஜெபித்து ஆஞ்சநேயரை பூசித்து அஷ்டமாசித்தி மையை விரலில் தொட்டு நாலு காயிற்குந்தடவி நாலுதிக்கும் விட்டெரிய உடனே ஓவென்று சத்தத்துடன் நாலுதிக்கிலுமிருந்து வேதாளம் இரைந்துகொண்டு வரும். பார்த்தோர்கள் பயந்தோடுவார்கள் ஆகையால் இந்த வேடிக்கையை வெட்ட வெளியான மைதானத்தில் காட்டவேணும்.

358 இரவில் பூதத்தை காட்டும் ஜாலம்.

ஒரு மைதானத்திற் சென்று நாலு யெட்டிகொட்டையைக் கையிலெடுத்து அங்குள்ள அனைவர்களுக்குங்காட்டி இந்த கொட்டையை மந்திரம் சொல்லி நாலுதிக்கிலு மெறிகிறேன் நாலுபூதமாகத் தோற்றும் பாருங்களென்று ஆஞ்சநேயர் மந்திரத்தை நூற்றியெட்டுதரம் ஓதி. பைரவரை தியானித்து அஷ்டமாசித்தி மையை விரலில்தொட்டு நாலுகொட்டைக்குந்தடவி பூதமாகத் தோற்றவேணுமென்று நாலுதிக்கிலும் விட்டெறிய நாலுதிக்கும் நாலுபூதமாகத் தோற்றும் பார்ப்போர்கள் மிரண்டு ஆச்சரியப்படுவார்கள்.

359 பாராங்கல் பரக்கும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் ஒருபெரியப் பாராங்கல்லை ஒன்று கொண்டு வரும்படிச்சொல்லி சபையோர்களைப்பார்த்து இந்தப்பாராங்கல்லை அந்திர

மாக நிற்கச்செய்கிறேனென்று ஆஞ்சநேயர் மந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து வாலையைதியானித்து அஷ்டமாசித்தி மையை விரலில்தொட்டு பாறையின்மேல் தடவி கல்பாறையே அந்திரமாக நில்லென்று மூன்றுதரம்சொல்ல பாறை பூமியில் நின்று யெழும்பி அந்திரமாக நிற்கும் ஆச்சரியப்படுவார்கள். சிலர் அனுமார்வசியமென்பார்கள் நீ சற்று நேரத்திற் கெல்லாம் பாறையே கீழயிறங்கிவிடென்று சொல்லவேண்டும்.

360 இரவில் பத்திரகாளியை காட்டும் ஜாலம்.

வெட்டவெளியான மைதானத்திற்சென்று ஒரு எலுமிச்சம்பழத்தை எடுத்து அனைவருக்குங்காட்டி இந்தபழத்தை ஆகாயத்தில் எறிந்து பத்திரகாளியை அழைப்பிக்கிறேனென்று பத்திரகாளியைத்தியானித்து பைரவர்மந்திரத்தை நூற்றியெட்டு ஓதி அஷ்டமாசித்தி மையை விரலில் தொட்டு பழத்தின்மேல்தடவி ஆகாயமார்க்கமாக விட்டெறிய உடனேபத்திரகாளி சிம்பவாகனருடமாய் தோற்றப்படுவாள் பார்த்துப் பணிந்து ஆச்சரியப்படுவார்கள்.

361 இரவில் மும்மூர்த்திகளை காட்டும் ஜாலம்.

முன்போல் ஒருவெட்டவெளியான மைதானத்தில் சென்று மூன்று எலுமிச்சம்பழத்தை எடுத்து அங்குவந்தவர்களுக்குக் காட்டி இந்த மூன்றுபழத்தையும் ஆகாயம் விட்டெறிகிறேன். மும்மூர்த்திகளையும் அழைப்பிக்கின்றேனென்று மும்மூர்த்திகளையுந் தியானித்து பைரவர்மந்திரத்தை நூற்றியெட்டோதி வாலையை பூசித்து அஷ்டமாசித்தி மையை விரலில் தொட்டு மூன்றுபழத்திற்குந் தடவி ஆகாயமார்க்கமாக விட்டெறிய உடனே ஈஸ்பரன்பார்வதி சமேதராய் ரிஷபவாகனத்தின்.மீதேரியும் மகாவிஷ்ணு லட்சுமிசமேதராய் கெருடவாகன மீதேறியும் பிரமதேவன் சரஸ்வதிசமேதராய் அன்னவாகன மீதேறியும் அந்திரமார்க்கமாகத் தோற்றப்படுவார்கள் யாவரும்பார்த்து தேவர்க்களை தோத்தரித்து கொண்டாடிக் கூத்தாடிமகிழ்வார்கள்.

362 இரவில் விசித்திரமான சபாமண்டபம் காட்டும் ஜாலம்,

இரவில் வெட்டவெளியான மைதானத்திற் சென்று சதாமாகக்கோடுகிழித்து அங்குள்ளவர்களைப் பார்த்து இந்த மைதானத்தில் விசித்திர சபாமண்டபம் உண்டாகும்படி செய்கிறேன் பாருங்களென்று நாலுகெச்சக்காயை எடுத்து தந்திரமாக அஷ்டமாசித்திமையை விரலில்தொட்டு நாலு காய்களுக்குந்தடவி ஒட்டின் நாலுமூலையிலும் வைத்து வாலைமந்திரத்தை நூற்றியெட்டு ஜெபித்து பைரவர்மந்திரத்தை ஆயிரத்தெட்டோதி ஒரு எலுமிச்சம் பழத்தை எடுத்து நாலுபத்தையாக அறுத்து நாலுதிக்கிலும் வீசியெறிந்து விசித்திர மண்டபம் உண்டாக வேணுமென்று மனதில் எண்ணமாத்திரத்தில் சோதிப்பிரகாசமாக விசித்திர சபாமண்டபந்தோ

றும் சகலரும் பார்த்து இது சாமுண்டிஷேசியமென்று ஆச்சரியப்படுவார்கள் ஆனால் தோற்றமாகி உடனே மறைந்து விடும்.

363 அந்திரத்தில் இந்திரன் சபையைக்காட்டும் ஜாலம்.

இரவில் நந்தவனத்தினிடமாகச் சென்று அங்குள்ளவர்களைப் பார்த்து தெய்வலோகத்தில் வாழும்படியான இந்திரனுடைய சபையை ஆகாமார்க்கத்திற் காட்டுகிறேன் பாரென்று வாலைமந்திரத்தை ஆயிரத்தெட்டோதி பைரவர்மந்திரம் நூற்றெட்டு ஜெபித்து ஆகாயவாணியை நினைத்து தேவேந்திரன் சபைதோற்ற வேணுமென்று மனதில் எண்ணி ஒன்பது எலுமிச்சம் பழம் கையிலெடுத்து அஷ்டமாசித்தி மையையும் ஐங்கோலக்கருவையும் ஒன்பதுபழத்திற்குந் தந்திரமாகத்தடவி எட்டுதிக்கிலும் எட்டுபழத்தைவிட்டெறிய உடனே முப்பத்து மூக்கோடி தேவர்களும் நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளும் கின்னரர் கிம்புருடர் அஷ்டதிக்குப்பாலகர் காந்தர்வர்முதலானப்பேர்களும் புடைசூழ இந்திரன்கொலுவீற்றிருக்க அரம்பை மேனகை ஊர்வசி திலோர்த்தமை முதலான நடனமாதர்கள் நடனம் புரிய மகா உன்னதமாகத் தோற்றும் பார்ப்போரெல்லாம் பிரமித்து இது யென்ன ஆச்சரியமாக விருக்கின்றதே இதுஎந்த தேவதைவசியமோ என்ன மந்திரமகிமையோ வென்று மதிமயங்கி யிரண்டு ஆகாயத்தையே பார்ப்பார்கள்.

364 விஜயமோடி வித்தை.

வீட்டிற் குள்ளாயினும் அல்லது இன்னமெந்த விடங்களிலாயினும் பச்சைபந்தல் போட்டு மேடையேற்படுத்தி அந்த மேடையை பசுஞ்சாணத்தினால் மெழுகி மஞ்சளை அரைத்து பிள்ளையார் பிடித்துவைத்து அருகன்புல்சூடி பந்தலில் வாழைமரங்கட்டி சுற்றிலும் மாவிலை தோரணமுங்கட்டி பிள்ளையார்க்குமுன் ஒரு தட்டில் மூன்று எலுமிச்சம் பழமும் ஒரு விராகனும் வைத்து அதற்கெதிரில் குறுக்கே ஒரு கோடுகீறி கோட்டிற்கு நடுவில் பட்டாகத்தியொன்று நாட்டி அதற்கு நாலடி தூரத்திற் கப்பால் ஒரு கோடுகீறி அதற்கு நடுவில் ஒரு யீட்டியை நாட்டி, அதற்கு யெட்டடி தூரத்தில் ஒரு கோடுகீறி அதற்குநடுவில் கட்டாரியை நாட்டி அதற்குப் பனிரண்டடி தூரத்தில் உலக்கை ஒன்று நாட்டி அதற்குப் பதினாறடிதூரத்தில் தாம்புக்கயரை வைத்து அதற்கு இருபதடி தூரத்தில் பாதரட்சையைவைத்து அதற்கு இருபத்து நாலடிதூரத்தில் முறம் ஒன்றுவைத்து அதற்குமுன் துடப்பக் கட்டையை வைத்து அதற்கு முன் குட்டிச்சாத்தான் பொம்மையை நிற்கவைக்கவும் பிறகு ஒரு முறத்தில் பச்சரிசிபோட்டு மஞ்சள் தண்ணீர் தெளித்துப் பிசறிவைத்துக் கொள்ளவும்.

இவ்வித மோடியை யெடுக்கும்படியாக விருதுபூண்ட மகாமந்திரக்காரர்கள் மகுடக்குழையூதி எடுக்க வருவாராகில் அப்போது குட்டிச்

சாத்தான் பொம்மைக்குப் பின்னால் ஒரு சிறுவனைக் குந்தவைத்து அஷ்டமாசித்திமையை சேஷரிசியில் தெளித்து அந்த முறத்தை சிறுவனிடத்திற் கொடுத்து எதிரியின்மேல் கொஞ்சம் எடுத்துப் போடச்சொல்ல அந்த அரிசியவன்மேல் பட்டவுடன் தேகமெல்லாம் திகுதிகுவென்று யெரிச்சலுண்டாகி அவனை பின்னுக்கு எட்டிக்கொண்டு போகவிடும். அதை கட்டிக்கொண்டு மறுபடியும் வருவானாகில் அஷ்டசித்து மையை விரலில் தொட்டுக்கொண்டு வேப்பிலையை யுருவி யவன்மேல்போட செந்தேள் கருந்தேளாகப்போய் அவன் தேகமெங்கும் கொட்டும். அதையுந்தடுத்து வருவானாகில் மேற்படி மையைத் தொட்டு புளியன் இலையை உருவிப் போட செங்குளவி, கருங்குளவி செய்யான் பூரான் இவைகள் பிடுங்கும். அதையும் கட்டிக்கொண்டு வருவானாகில் துடப்பக் கட்டைக்கு மேற்படி மையைத்தடவிவிட அதுகிளம்பி எதிரியைஜாடும் அதையுங்கட்டிக்கொண்டு வருவானாகில்மேற்படிமையை முறத்திற்றடவிவிட முறமெழுந்துபோய் ஜாடும் அதையுந்தாண்டிவருவானாகில் மேற்படிமையை பாதரட்சையிற்றடவிவிட அதுசரசரவென்றுசுழன்றுபோய் மாரிமாரி அடிக்கும். அதையுந்தடுத்துவருவானாகில் மேற்படி மையைத் தாம்புக்கயற்றில் தடவிவிட அந்தகயிர் எதிரியைகட்டி உருட்டிக் கொண்டுபோகும் அதையுந்தடுத்து வருவானாகில் மேற்படி மையை உலக்கையில் தடவிவிட உலக்கையானது கிருகிருவென்று சுழன்று எதிரியை மோதியடிக்கும் அதையும் கட்டிக்கொண்டு வருவானாகில் மேற்படிமையை கட்டாரியில் தடவிவிட எதிரிமேல் பாய்ந்துகுத்தும் அதையுங்கட்டிக்கொண்டு வருவானாகில் ஈட்டியின்மேல் மேற்படி மையை தடவிவிட அதுகிளம்பி எதிரியைப்பாய்ந்து குத்தும் அதையுங் கட்டிக்கொண்டு வருவானாகில் மேற்படி மையை பட்டாகத்தியிற்றடவிவிட அது எதிரியின்தேகத்தை சக்கையாக வெட்டிப்பிளக்கும் அதையும் கட்டிக்கொண்டு வருவானாகில் சேஷரிசியை அவன்மேல் எடுத்துப்போட பீஜமானது சித்தையைப்போல் பெருத்து தேகமெல்லாம் அக்கினி சுவாலையாகப்பத்தி எரியும் அதையுங் கட்டிக்கொண்டு வருவானாகில் மறுபடியும் சேஷரிசியை எடுத்துப்போட வாயிலும் மூக்கிலும் காதிலும் இரத்தங் கொப்பளித்து வருகமரணத்திற்குச் சரியான மூர்ச்சையடைவான் அதன்பின்பு சார்ந்தவர்கள் யாவரும் உன் காலில் வந்துவிழுந்து உயிர்பிச்சைத் தரவேணுமென்று கெஞ்சிஅழுவார்கள் அப்போது நீ அவர்கள் பூண்டுவந்த விருது முதலானதையும் கழட்டி வைக்கச்சொல்லி ஐங்கோலமையை யெடுத்து மூர்ச்சையாகக் கிடப்பவன்மேல் தெளிக்க உடனே அவன் யெழுந்துவந்து உன்னைவணங்கி இந்த மோடியை யெடுக்க எங்களாலும் இன்னம் எவர்களாலும் முடியாதென்று பயந்தோடுவான். வேடிக்கைபார்க்க வந்தோர்களெல்லாம் உன்னைக் கொண்டாடிப் புகழுவார்கள்.

365 எவ்வித மோடிவைக்கினும் எடுக்கும் வித்தை.

எவ்விதக் கருவை ஸ்தாபித்து மந்திர உச்சாடனங்கள் செய்திருக்கினும் கொஞ்சமும் அச்சமில்லாமல் தீரமாய் எடுப்பேனென்று அனைவருக்கும் சொல்லி அனுமந்த தியானஞ்செய்து மயானருத்திரி மந்திரத்தை ஆயிரத்தெட்டோதி மகாமாயமையையும் ஐங்கோலக் கருவையும் மோடிபந்தலின்மேல் தெளித்து மறப்புமையை திலர்த மிட்டுக்கொண்டு சரேலென்றுபோய் கண்மூடி கண்திறக்கு முன் எடுத்துக்கொண்டு தன்னுடைய யதாஸ்தானத்திற்கு வந்துவிடலாம். மோடிவைத்தவனும் வேடிக்கைப் பார்ப்பவர்களும் பிரமித்து ஆச்சரியப் படுவார்கள். ஆனால் மோடியெடுத்துக்கொண்டு யதாஸ்தானம் வந்தவுடனே திலர்தத்தை கலைத்துவிடவேண்டும்.

366 ஒரு மனிதன் பனமரத்தை வேரோடு பிடுங்கும் ஜாலம்.

ஒரு பனமருகில் போய்நின்று கூடவந்தவர்களைப்பார்த்து இந்தமரத்தை நானொருவனே வேரோடு பிடுங்கிப் போடுகிறேனென்று ஆஞ்சநேயரைத்தியானித்து அஷ்டமாசித்தி மையை விரலில்தொட்டு மரத்திற்றடவி பிறகு கண்கட்டுமையை கொஞ்சமெடுத்துக் கையிற் பூசிக்கொண்டு மரத்தைப் பிடுங்குவதுபோல் மரத்தருகில் நிற்க. பார்ப்போர்களுக்கு பனமரத்தை வேரோடு பிடுங்கி விட்டதுபோல் கண்ணுக்குத் தோற்றும். ஆச்சரியப்பட்டு ஆஞ்சநேயர் வசியமென்று நம்புவார்கள். மூணேமுக்கால் நாழிகை யானவுடன் மரம் எப்போதும்போல் நிற்கும். அதற்குள் நீ சபையோர்களைப்பார்த்து இந்த மரத்தை யெப்போல் நட்டு விடுகிறேனென்று மையை துடைத்து விடவேண்டும்.

367 பூமியில் புதைத்த முட்டை பூமிவெடித்து ஆகாய மார்க்கமாக கிளம்பும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் கருங்கோழி முட்டையொன்று கையிலெடுத்து அனைவருக்குங்காட்டி இந்தமுட்டையை பூமியில் புதைத்து விடுகிறேன் பூமியானது வெடித்து முட்டை ஆகாய மார்க்கமாகப்போகும் அற்புத வேடிக்கையைப் பாருங்களென்று வாலைமந்திரத்தை நூத்தியெட்டு தியானித்து ஜாலக்காலைப் பூசித்து இந்தமுட்டை பூமிவெடித்து ஆகாயமார்க்கம்போகவேணுமென்று மனதில் எண்ணி அஷ்டமாசித்தி மையை விரலில்தொட்டு தந்திரமாக முட்டையின்மேல் தடவி ஒருசாண் பள்ளந்தோண்டி முட்டையை அதற்குள் வைத்து குழியை மூடிவிட்டு குட்டிச்சாத்தான் பொம்மையை கையிலெடுத்து அடேகுட்டிச்சாத்தான் பூமியில் புதைத்தமுட்டை ஆகாயம் போம்படி செய்யடாவென்று நீசொல்லி வாய்மூடு முன்னமே குழியானது படாலென்று வெடித்து முட்டை ஆகாயம் ஜிவ்வென்று கிளம்பிப்போகும். பார்ப்போர்கள் ஆச்சரியப்பட்டு மகா மந்திரவாதி என்று பிரமிப்பார்கள்.

368 வீடுபத்தி எரியும் ஜாலம்.

கூரைவீடாகிலும் கல்லுவீடாகிலும் அதனை அங்குள்ளவர்களுக்குங் காட்டி இந்த வீட்டை பத்தியெரியும்படி செய்கிறேனென்று ஒரு சிறிய குழாங்கல்லை எடுத்து அதின்மேல் அஷ்டமாசித்தி மையைத்தடவி பைரவர்மந்திரத்தை நூத்தியெட்டு வோதி அந்த கல்லை அவ்வீட்டின்மேல் தாக்கும்படி விட்டெறிய போய்கல்தாக்கின உடனே குபீலென்றுப் பத்தியெரிவதுபோல் தோற்றப்படும் பார்ப்போர்கள் குய்யோமுறையோ வென்றுக் கூச்சலிட்டு திகைத்து நிற்பார்கள் உடனே அவர்களுக்கு முன்னே இன்னொருகல்லையெடுத்து எரியும் வீட்டின்மேல் விட்டெறிய வீடெப்போதும் போல்தோற்றும் இது கண்கட்டுவித்தை யென்பார்கள்.

369 வைக்கோல்போர் பத்தி எரியும் ஜாலம்.

வைக்கோல்போறை அனைவருக்குங்காட்டி இந்தப்போறைப் பத்தியெரியும்படி செய்கிறேன் பாரென்றுசொல்லி மேற்கூறியபடிசெய்து கல்லைவிட்டெறிய குபீலென்றுப்பத்தியெரியும் ஆச்சரியப்பட்டு அக்கினிதேவன் வசியமென்பார்கள்.

370 தண்ணீருள்ள தடாகத்தை தண்ணீரில்லாமல் செய்யும் ஜாலம்.

தடாகத்தின் அருகிற்சென்று அங்குள்ளவர்களைப் பார்த்து இந்த தடாகத்திலுள்ள நீரையெல்லாம் வத்திபோகும்படிச் செய்கிறேனென்று வாலைவைதியானித்து பைரவர்மந்திரத்தை ஆயிரத்தெட்டுஜெபித்து அஷ்டமாசித்திமையை விரலில்தொட்டு தடாக ஜலத்தில் தெரிக்கும்படியாக தெளித்து கண்கட்டுமையை கொஞ்சமெடுத்துக் கையிற்பூசிக்கொண்டு ஜலத்தைத்தொட உடனே பார்ப்போர்களெல்லாம் பிரமித்து கெங்காபவனிவசியஞ் செய்தானென்று கலங்கி உன்னைப்பார்த்து மறுபடியும் ஜலத்தை உண்டாகச் செய்வாயென்று வணங்கிக் கேட்பாருகில் உடனே நீ கண்கட்டுமையை துடைத்துவிட்டு ஐங்கோல மையைகொஞ்சம் தொட்டு ஜலத்தில் தெளிக்க தடாகத்தில் முன்போல் தண்ணீர்தோற்றும்.

371 தண்ணீரில்லாத தடாகத்தில் தண்ணீர் உண்டாக்கும் ஜாலம்.

தண்ணீரில்லாமல் உலர்ந்திருக்கும் ஒருதடாகத்தினருகிற் சென்று அங்குள்ளப்போர்களைப் பார்த்து இந்த நீரில்லாமல் உலர்ந்துக் கிடக்கும் தடாகத்தின் நிறையதண்ணீர் உண்டாகச் செய்கிறேனென்று வாலைமந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து கங்காபவனியை தியானித்து ஐங்கோலக்கருவை விரலில் தொட்டு அ ஒரு எலுமிச்சம்பழத்தின் மேற்றடவி தடாகத்தில் விட்டெறிந்து கண்கட்டுமையை கையிற்பூசிக்கொண்டு அந்த

குளத்தின்மேல் கையைவைத்துக்கொண்டிருக்க பார்ப்போர்களுக்கெல்லாம் தடாகம் நிறையதண்ணீரிருப்பதுபோல் தோற்றும் யாவரும் ஆச்சரியப்பட்டு கங்காபவானி வசியமென்பார்கள் சற்றுநேரம்பொருத்து கையில் பூசியகண்கட்டுமையைத் துடைத்துவிட தடாகம் எப்போதும்போல் நீரில்லாமற்றோற்றும்.

372 ஒரு ஜாதிமரத்தில் பலவிதபழம் பழுக்கும் ஜாலம்.

மாமரம் விளாமரம் கிச்சிலிமரம் எலுமிச்சமரம் கொய்யாமரம் மாதளமரம் இந்த மரங்களின் ஏதேனுமொன்றின் அருகிற்சென்று அங்குள்ளவர்களைப் பார்த்து எந்த மரமோ அந்த மரத்தைக்காட்டி அதின்பெயரைச்சொல்லி இந்தமரத்தில் பழுக்கும் பழம்போக இன்னம் மாம்பழம் கொய்யாப்பழம் விளாம்பழம் கிச்சிலிப்பழம் எலுமிச்சம்பழம் மாதளம்பழம் அத்திப்பழம் பலாப்பழம் இவை முதலானதும் இந்த ஒரு மரத்திலேயே காய்த்து பழுத்து தொங்கும்படி செய்கிறேன் பாருங்களென்று அஷ்டமாசித்திமையையும் ஐங்கோலக்கருவையும் விரலில்தொட்டுக்கொண்டு வாலைமந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து பைரவர் மந்திரத்தை நூத்தியெட்டு ஓதி இந்த மரத்தில் மேற்சொல்லியப்படி பலவிதக்கனிகள் பழுத்து தொங்கவேணுமென்று மனதில் நினைத்துமையை மரத்திற்றடவி பிறகு கண்கட்டுமையை கொஞ்சம் கையிற்பூசி மரத்தின்மேல் கையை வைத்துக்கொண்டிருக்க பார்ப்பவர்களுக்கு மேற்கூறிய கனிவர்க்கங்களெல்லாம் பழுத்து தொங்கும் ஆச்சரியப்பட்டு இது காளபைரவர் வசியமென்று கண்பூர்க்கபார்த்து திடமார்கள்.

373 காடுபத்தி எரியும் ஜாலம்.

இந்தவித்தை செய்து பார்க்கவிருப்ப முண்டாயின் தனக்கு இஷ்டமானபெயர்களையும் இன்னம் எவர்களையாயினும் அழைத்துக் கொண்டு இரவில் ஒரு அடவியிற்சென்று தன்னுடன் வந்தவர்களைப்பார்த்து இந்தக் காட்டை பத்தி எரியும்படி செய்கிறேனென்று அஷ்டமாசித்தி மையை விரலில்தொட்டு சிறியகல்லு ஒன்று எடுத்து அந்தமையை அதின்மேற்பூசி வாலை மந்திரத்தை ஆயிரத்தெட்டோதி பைரவர்மந்திரம் நூத்தியெட்டு ஜெபித்து ஜாலக்காளைப்பூசித்து அந்த கல்லை அனைவரும் பார்க்க அடவியில் விட்டெறிய உடனே காடானது குபீலென்று பத்தி எறிவதுபோல் தோற்றும் அனைவரும் ஆச்சரியப்பட்டு அக்கினி தேவன் வசியமென்பார்கள் உடனே அவித்துவிடுகிறேன் பாரென்று முன்போல் ஒருசிறியகல்லை எடுத்து ஐங்கோலக்கருவைத் தடவிவிட்டெறிய உடனே எறிவது விட்டமர்ந்து முன்போல் தோற்றும் அப்போதுதன்னை மகாமந்திரவாதி என்றும் மதிமயங்கி திகிலடைந்து பிரமித்துக் கொண்டாடுவார்கள்.

374 அரசன்படை எடுத்து வருவதுபோல் காட்டும் ஜாலம்.

வெட்டவெளியான மைதானத்தில் இஷ்டமானப் பெயர்களையும் இன்னுமற்றவர்களையும் இரவில் அழைத்துச்சென்று இதோபாருங்கள் இந்தமைதானத்தில் அரசன் தன்படைகளோடு வரும்படியாகசெய்கிறேன் பாரென்று அஷ்டமாசித்தி மையையும் மகாமாயமையையும் விரலில்தொட்டு ஒன்பது எலுமிச்சம் பழத்தை எடுத்து தந்திரமாக அதுகளின் மேல் தடவி எட்டுதிக்கிலும் எட்டுபழத்தை விட்டெறிந்து ஒருபழத்தை ஆகாயமார்க்கமாக விட்டெறிந்து அரசன்படை எடுத்து வருவதுபோல் தோற்றவேணுமென்று மனதில் நினைத்தவுடனே ரதகஜதுரகபதாதிகளுடனே திரளாகத்திரண்டு வருவதுடன் அரசன் யானைமீது ஏறிவருவதுபோல் தோற்றும் யாவரும்பார்த்து ஆனந்த சந்தோஷமடைந்து இது அருமையான வித்தையென்று ஆச்சரியப்படுவார்கள் உடனே நீ ஒரு எலுமிச்சம் பழத்தை எடுத்து ஐங்கோலக்கருவைத் தடவி அதை நாலுபத்தையாக அறுத்து நாலுமூலையிலும் போட அரசனும் சபடையும் மாயமாக மறைந்து போய்விடும்.

375 குடத்தினுள் மனிதன் புகரும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தி ஒருமண்குடம் கொண்டுவரும் படியாகச்சொல்லி சபையோர்களுக்குக்காட்டி இந்த குடத்தினுள் யான்புகருகிறேன் பாருங்களென்று அஷ்டமாசித்தி மையையும் மகாமாயமையையும் விரலில் தொட்டு குடத்தின்மேல் தடவி கண்கட்டு மையை கையிற்பூசிக்கொண்டு குடத்தின்மேல் கையைவைத்துக்கொண்டு தலையைகுடத்தின் வாய்க்கு நேராக்வைத்துக் கொண்டிருக்க பார்ப்போர்கள் அனைவருக்கும் குடத்திற்குள் நுழைந்துவிட்டாற்போல் தோற்றும் இது ஆஞ்சனேயர் வசியமென்று ஆச்சரியப்படுவார்கள்.

376 மாட்டின்வயற்றில் மனிதன் புகரும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் மாடொன்றைக் கொண்டுவந்து நிருத்தி சபையோர்களைப்பார்த்து இந்த மாட்டின் ஆசனவழியாகப்புகுந்து காதின்வழியாகவெளிவருகிறேன் பாருங்களென்று வாலைமந்திரத்தை ஆயிரத்தெட்டோதி பைரவர் மந்திரம் நூத்திஎட்டு ஜெபித்து ஜாலக்காளை பூசித்து அஷ்டமாசித்தி மையை விரலில்தொட்டு மாட்டின்மேல்தெளித்து கண்கட்டு மையை கையிற் பூசிக்கொண்டு மாட்டின் ஆசனத்தில் கையைவைத்து காது வரைக்கும் தடவிக்கொண்டேவர பார்ப்போர்களுக்கு ஆசனவழியாகப் புகுந்து காதுவழியாக வந்ததுபோ லிருக்கும்இது குட்டிசாத்தான் ஏவல்வேலையென்று ஆச்சரியப்படுவார்கள்.

377 பெட்டியில்போட்டு பூட்டின மனிதன்வெளிவரும் ஜாலம்.

ஜாலமாடும் சபையில் ஒரு பெட்டியை கொண்டுவரும்படியாகச் செய்து அங்குள்ள அனைவர்களையும் பார்த்து இந்த பெட்டியில் என்னைப் போட்டு பூட்டிவிடுங்கள் பூட்டினபடியே பொட்டிருக்க நான் வெளியே வருகிறேனென்று மயானருத்திரியை தியானித்து வாலைமந்திரத்தை ஆயிரத்தெட்டோதி அஷ்டமாசித்திமையை பெட்டியின்மேல் தெளித்து கண்கட்டுமையை கையிற்பூசிக்கொண்டு பெட்டியைதிறந்து மூடிவிட்டு தந்திரமாக மறப்புமையை கொஞ்சம்தொட்டு திலர்தமிட்டுக்கொள்ள பார்ப்போர்களுக்கு மனிதன் பெட்டிக்குள் யிருப்பதாகத் தோற்றும் அப்போது வெளியிலிருப்பவன் அடேபெட்டிக்குள்ளிருப்பவனேவெளியேவாடா வென்று மூன்றுதரம் அழைக்க அதற்குள் நீ ஜாக்கிரதையாய் மறப்பு மையை துடைத்துவிட பெட்டியிலிருந்து வெளிவந்தாற்போல் தோற்றும் ஆச்சரியப்படுவார்கள்.

378 பாராங்கல் தண்ணியின்மேல் மிதக்கும் ஜாலம்.

தடாகத்தின் அருகில் சென்று பெரிய பாராங்கல் ஒன்றை கொண்டுவரும்படியாகச்செய்து அங்குள்ளவர்களைப் பார்த்து இந்த கல்லை தண்ணீரின்மேல் மிதக்கும்படி செய்கிறேனென்று வாலைமந்திரத்தை ஆயிரத்தெட்டுஜெபித்து பைரவர்மந்திரம் நூத்தியெட்டு ஜெபித்து அஷ்டமாசித்திமையை விரலில்தொட்டு பாறையின்மேல் தெளித்து அடா குட்டிச்சாத்தான் இந்த பாறையை குளத்திற்போடுகிறேன் அது தண்ணியில் முழுகவொட்டாமல் நீ அந்தகல்லின் அடியிலிருந்து தாக்கிக்கொண்டு யிருடாவென்று கல்லை யுருட்டி குளத்திற்றள்விட பார்ப்போர்களுக்கு கல்மிதப்பதுபோல் தோற்றும் அனைவரும் ஆச்சரியப்பட்டு இது கங்காபவானி வசியமென்று நம்புவார்கள்.

379 சவரன் உண்டாகும் ஜாலம்.

ஜாலமாடு மிடத்தில் துமிட்டிக்காயொன்றை கையிலெடுத்து சபையோர்களைப்பார்த்து இந்த காயை மோதி பூமியின்மேல் அடிக்கின்றேன் அதிலிருந்து சவரன்கள் உண்டாகும் பாருங்களென்றுவாலைமந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து பைரவர்மந்திரம் நூத்தியெட்டோதி அஷ்டமாசித்திமையை விரலில்தொட்டு சவரன் உண்டாக வேணுமென்று மனதிலெண்ணி மையைக்காயின்மேல்தடவி பூமியின்மேல் மோதியடிக்க அந்த காயினுள்ளிருக்கும் விதை எத்தனையோ அத்தனைசவரன் உண்டாகும் ஆச்சரியப்படுவார்கள் உடனே அதை எடுத்து மறைத்துவிடவும்.

380. வெள்ளிரூபா வகையராக்கள் உண்டாகும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் வந்துநின்று தந்திரமாக அஷ்டமாசித்திமையை விரலில் தொட்டுக்கொண்டு பூமியில் வோர்பிடிமண்ணை கையில் அள்ளிச்

சபையோர்களைப்பார்த்து இந்தமண்ணை கீழே போடுகிறேன் முழுரூபா அரை ரூபா கால்ரூபா அரிக்கால்ரூபா இவைகளாகும்படி செய்கிறேனென்று வாலைமந்திரத்தை ஆயிரத்தெட்டோதி பைரவர் மந்திரம் நூத்தியெட்டு ஜெபித்து ஜாலக்காளை தியானித்து சல் மலையாளபகவதி ரூபா வகையாக்களாகவேணுமென்று மனதிலெண்ணி கையிலுள்ள மண்ணை கீழேபோட மேற்சொன்னபடி ரூபாவகையாக்கள் தோற்றும். பார்ப்போர்கள் ஆச்சரியப்பட்டு இது குட்டிச்சாத்தான் ஏவலென்று நம்புவார்கள் முன்போல் இதையும் உடனே மறைத்துவிடவும்.

381. செம்புதுட்டுவகையராக்கள் உண்டாரும் ஜலாம்.

ஜாலமாடுமிடத்தில் வந்துநின்று மேற்கூறிய வண்ணம் தவறாமல் செய்து அரையணா காலணா அரைகாசு இவைகளாக வேணுமென்று மனதிலெண்ணி மண்ணை கீழேபோட செம்புதுட்டு வகையராக்கள் தோற்றும். அதுகண்டு சபையோர்கள் யாவரும் பிரமித்து திகைத்து ஆச்சரியப்படுவார்கள் ஆனால் நீ முன்போல் உடனே மறைத்து விடவேண்டும் என் மறைத்து விடவேண்டுமென்றால் மூனேமுக்கால் நாழிக்குள் மாயமாக மறைந்துவிடும். அதற்குமுன் நாமே மறைத்துவிட்டால் சபையோர்களுக்கு இந்த சூதுதெரியாது நிஜமென்று நம்புவார்கள்.

382. மண்பாத்திரங்கள் பித்தளைபாத்திரமாகும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் தனக்கு இஷ்டமான மண் பாத்திரங்களைக் கொண்டுவந்து வைத்து சபையோர்களைப் பார்த்து இந்த மண்பாத்திரங்களையெல்லாம் பித்தளை பாத்திரமாக்குகிறேனென்று வாலை மந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து பைரவர்மந்திரத்தை நூத்தியெட்டுதரம்சொல்லி அஷ்டமாசித்தி மையையும் நுங்கோலக் கருவையும் விரலில்தொட்டு இந்த மண்பாத்திரமெல்லாம் பித்தளை பாத்திரமாக வேணுமென்று மனதிலெண்ணி ஜாலக்காளை தியானித்து மேற்படி மைகளை பாத்திரங்களின்மீதுதெளிக்க உடனே பித்தளை பாத்திரங்களாகத் தோற்றும் யாவருங்கண்டு அதிசயிப்பார்கள். பிறகு நீ அந்த பாத்திரங்களைப் பார்த்து சல் மலையாளபகவதி முன்போல் மண்பாத்திரமாகச் செய்வாயென்று துணியைப்போட்டு மறைத்து விடவேண்டும்.

383. பித்தளைபாத்திரம் வெள்ளிபாத்திரமாகும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் பித்தளை பாத்திரங்களைக் கொண்டுவந்து வைத்து மேற்கூறியபடி மந்திரம் முதலானதுமோதி பித்தளை பாத்திரம் வெள்ளிபாத்திரமாக வேணுமென்று மனதில் யெண்ணி மைகளைத் தெளித்தவுடன் வெள்ளி பாத்திரமாகத் தோற்றும் பார்ப்போர்கள் யாவரும் பிரமித்து ஆச்சரியப்படுவார்கள். ஆனால் மேற்சொல்லியவாறு சொல்லி மறைத்துவிடவேண்டும்.

384. வெள்ளிபாத்திரம் பொன்பாத்திரமாகும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் வெள்ளிபாத்திரங்களைக் கொண்டுவந்து வைத்து இதை பொன்பாத்திர மாக்குகிறேனென்று மேற்கூறியபடி மந்திரமுதலானதும் ஜெபித்து வெள்ளி பாத்திரத்தை பொன்பாத்திர மாக்கவேணுமென்று மனதில்யெண்ணி முன்போல் மைகளைத்தொட்டு பாத்திரத்தின் மேல்தெளிக்க பொன்பாத்திரமாகத் தோற்றும் பார்ப்போர்கள் கண்கள் பூர்த்து பலவிதமாக உன்னை கொண்டாடுவார்கள் ஆனால் நீ மேற்சொல்லியபடி சொல்லி மறைத்து விடவேண்டும்.

385. வஸ்திரங்கள் உண்டாகும் ஜாலம்.

ஜாலமாடு மிடத்திலேனும் இன்னம் எந்த இடங்களிலேனும் ஒரு மூங்கிற் பெட்டியைக் கொண்டுவந்து வைத்து அந்த பெட்டியைத்திறந்து யாவருக்குங்காட்டி இந்த பெட்டியில் கொஞ்சம்பஞ்சைப்போட்டுமூடிவிடுகிறேன் வஸ்திரங்களாகும் விநோதங்களை பாருங்களென்று அஷ்டமாசித்திமையையும், ஐங்கோலக்கருவையும் விரலில் தொட்டு வாலைமந்திரத்தை ஆயிரத்தெட்டோதி பைரவர் மந்திரம் நூத்தியெட்டு ஜெபித்து கொஞ்சம் பஞ்சை கையிலெடுத்து மையை யதிற்றடவி இந்தபஞ்சு வஸ்திரங்களாகவேணுமென்று மனதில் எண்ணி மூங்கிற் பெட்டியிற் போட்டுமூடி பிறகு குட்டிச்சாத்தான் பொம்மையை கையிலெடுத்து சபையோர்கள் நம்பும்படியாக அடே குட்டிச்சாத்தான் இந்த பெட்டிக்குள் இருக்கும் பஞ்சியை பட்டு வஸ்திரங்களாக செய்து கொண்டுவந்து சீக்கிரம் வையடா வென்று மாந்திரைக்கோலால் பெட்டியை மூன்றுதரம் தட்டி பெட்டியை திறந்துப்பார்க்க பட்டு வஸ்திரங்களாகத் தோற்றும் பார்ப்போர்களனைவரும் இது என்ன ஆச்சரியமென்று வண்ணுதும் எண்ணி உன்னை மகா மந்திரக்காரனென்று கொண்டாடுவார்கள் மேற்சொன்னபடி மறைத்துவிடவேண்டும்.

386. ஜெகஜால வித்தைகளாட கரு.

கத்தியால் வெட்டுண்டு இறந்தவர்களின் கொழுப்பை எடுத்துருக்கி அதை நெய்யுடன் சேர்த்து வைத்துக்கொண்டு அவனுடசிரசை கத்தியால் வெட்டி உரலிலிட்டு யிடித்து உலர்த்தி சருகுபோல் ஆனபிறகு செல்லாமணக்கு பலம்எட்டு அழிஞ்சில்விரை பலம்எட்டு இவை யிரண்டையும் இடித்து அதனுடன் சேர்த்து காதலித்து, பலம் இரண்டும் சிறியாணங்கை சமூலம் இரண்டுபலமும் எட்டிகொட்டை பலம்யெட்டும் இவைகளை யிடித்து அத்துடன்சேர்த்து மேற்படி நெய்யுங்கொழுப்பையும் கலந்து கோரோசனை கஸ்தூரி புனுகு இவைமூன்றும் கால்பலமாகச் சேர்த்து இரந்தவரை சமாதியில் வைத்தயெலும்பு பலமெட்டும் மஞ்சள் பலமாக இவையிரண்டையும் இடித்து அதிற்கலந்து ஒரு புதுபாண்டத்தில் மேற்கூறிய

வகைகள் யாவையும் ஒன்றாகக்கலந்து அதிலிட்டு மேல் ஒரு பாண்டத்தை மூடி எழுமண் சீலைசெய்து இரண்டுமுழம் குழி பூமியில்வெட்டி அந்த குழி மத்தியில் ஒரு சிறியகலசம் வைத்து பாண்டத்திற்கடியில் சிறிய துவாரம்செய்து அந்த பாண்டத்தை கலசத்தின்மேல் வைத்து சமாதியெருவை கொண்டுவந்துக் குழியைமூடி அதன்மேல் காலாக்கினியாகத் தீயைமூட்டி ஒரு ஜாமம்வரைக்கும் எரித்து விட்டுவிடவேண்டும் பிறகு ஒரு மண்டலம் பொறுத்து குழியை தோண்டி பாண்டத்தை யெடுத்து அப்புரம் வைத்துவிட்டு கலசத்தை எடுத்துப்பார்க்க தயிலமிரங்கி யிருக்கும் அதை சோவிவிட்டு வைத்துக்கொண்டு குருபரனை தியானித்து சக்கலாதேவி பூசைசெய்ய மை சித்தியாகும்.

பூசைமந்திரம் ஜெபிக்கும்விதம் எவ்விதமெனில் மையை பூசையில் வைத்து ஓம் றீம் கிரியும் அரியும் சவ்வுமென்று ஒருமண்டலம் தவாமல் நாள்தோறும் மூன்றுவேளையும் வேளையொன்றுக்கு முன்னூறு உருவு கொடுத்துவர சக்கலாதேவிப் பிரசன்னமாவாள் அப்படிப்பிரசன்னமானவுடனே மையை எடுத்துப் பத்திரப்படுத்தி வைத்துக்கொண்டு மனம்போல் ஜாலவித்தையாடலாம்.

387 கல்லுப்பிள்ளையாரை நகரவைக்கும் ஜாலம்.

விநாயகருடைய ஆலயத்திற்சென்று அங்குள்ளவர்களைப் பார்த்து இந்தப்பிள்ளையாரைப் பூசைசெய்து என்வசமாக்கி அவரிருக்கும் இடத்தைவிட்டு அப்பால் நகரும்படி செய்கிறேன பாரென்று ஜெபிக்க ஜாலக்கருவை விரலில்தொட்டு சக்கலாதேவியை தியானித்து தந்திரமாகக்கருவை பிள்ளையார் சிரசில் தடவிவிட்டு ஆலயத்திற்கு வெளியில்வந்து பாதையில் நின்று தியானம் செய்ய பிள்ளையார் தன்னிருப்பிடம் விட்டு அப்பால் நகருவதுபோல் தோற்றும் பார்ப்போர்கள் யாவரும் புதுமையா இருக்கிறதென்று அதிசயிப்பார்கள்.

388 நோக்கர் கெடகம்பம் பொடியாகும் ஜாலம்.

நோக்கர்கெடைகம்பம் நட்டு ஆடுமிடத்திற்குப் போகுமுன்னே ஜெகஜாலக்கருவில் அரைகுண்டுமணி இடை எடுத்து கோட்டான் ரத்தம் கொஞ்சம்விட்டு இரண்டையும் மத்தித்து வைத்துக்கொள்ளவும் நோக்கர் ஆடுமிடத்திற்குச் சென்று வேடிக்கைப் பார்ப்பவன்போல் நின்று சக்கலாதேவியுட மூலமந்திரத்தை ஜெபித்து மேற்படி தைலத்தை அவர்களாடும் கம்பத்திற்றடவி விட்டு நீ உன்னுடைய வீட்டிற்குவந்து விடுவையால் உடனே நோக்கர் சமர்த்தாக ஊரெங்கும் திரிந்து ஆடும்படியானக்கம்பமானது படபடவென்று முறிந்து பொடிபொடியாகப் போய்விடும் வெகுபேர்கள் மூர்ச்சையாக விழுவார்கள் கோக்கனும் வாடியோடிப் போவான் வேடிக்கைப் பார்ப்பவர்களெல்லாம் வெருண்டுயிரனுவார்கள்.

389. கருங்கல்பாறையை பொடிபொடியாக வேடிக்கச்செய்யும் ஜாலம்.

ஜாலமாடு மிடத்திலேனுங் கொண்டுவரும்படிச் செய்யவும் அல்லது பாறையிருக்குமிடத்திலேனும் சென்று இந்த பாறையை கண்மூடி கண்திறக்கு முன்னே பொடிபொடியாக ச்செய்கிறேனென்று சபதங்கள் கூறி பந்தயங்கட்டுவாராயினும் கட்டிக்கொண்டு முன்போல் மையை விரலில் தொட்டு சக்காதேவி மூலமந்திரத்தை ஜெபித்து பாறையின் மேல்படும்படி தெரிக்க உடனே பாறையானது படாலென்று வெடித்து சுக்கல் சுக்கலாகப்போகும் பார்ப்போரெல்லாம் பதைத்து பயந்து மிரண்டோடுவார்கள்.

390. ஆலமரம் அடியோடேசாயும் அற்புதஜாலம்.

இஷ்டமானப்பெயர்களை அழைத்துக் கொண்டு ஆலவிருட்சத்தருகிற்சென்று இந்த மரத்தை வேரோடு சாய்ந்துவிடும்படி செய்கிறேனென்று மேற்சொன்னபடி ஜெகஜாலக்கருவையும் கோட்டான் ரத்தத்தையும் மத்தித்து விரலில்தொட்டு சக்கலாதேவி மூலமந்திரத்தை உச்சரித்து மையை மரத்தில் தடவிவிட்டு அப்பால் வந்துவிட ஆலமரம் அடியோடே சாயும் பார்க்கும் பெயர்களெல்லாம் பயந்தோடுவார்கள் சிலர் அஜுபார்வரியமென்று நம்புவார்கள்.

391 எதிரிசெய்யும் பாணுதடியை பொடிபொடியாகச் செய்யும்ஜாலம்.

பாணுசெய்யுமிடத்தில் வேடிக்கைப் பார்ப்பவன்போல் நின்று மேற்படிக்கருவைவிரலில் தொட்டு சக்காதேவி மூலமந்திரத்தைஜெபித்துதக்திசமாக பாணுதடியில் படும்படியாகத் தெளித்துவிட்டு நீ உன்னிருப்பிடம் வந்துவிட அந்த தடியானது பொடிபொடியாக முரிந்தொடிந்துப் போய்விடும் அனைவரும் ஆச்சரியப்படுவார்கள்.

392 எதிரிசெய்யும் பட்டாகத்தியை இரண்டு துண்டாக்கும் ஜாலம்.

மேற்சொன்னபடி சக்கலாதேவிமூலமந்திரத்தைஜெபித்து ஜெகஜாலக்கருவை பட்டாகத்தியில் தடவிவிட்டு நீ வேடிக்கைப் பார்ப்பவன் போல் நின்று கொண்டிருக்கவும் அவன் அந்த பட்டாகத்தியை எடுத்து ஒரு சுழட்டு சுழட்டுமுன்னே ஒன்பது துண்டாக ஒடிந்துப்போகும் பார்ப்போர்கள் இது என்ன புதுமையென்று எண்ணி திகைப்பார்கள்.

393 தேங்காய்கள் ஒன்றோடொன்றுத் தாக்கி பொடிபொடியாக்கும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் நவகோண சக்கரமொன்று கீரி அந்த ஒன்பது மூலையிலும் ஒன்பது தேங்காயைவைத்து நடுமைத்தியில் ஒருதேங்காயை வைத்து அதற்கு மஞ்சள் நீர் தெளித்து குங்குமமிட்டு பிறகு சபையோர்களைப்பார்த்து இந்த பத்துதேங்காயும் ஒன்றோடொன்று எதிர்த்துப்போர் புரிவதுபோல்புரிந்து பொடிபொடியாகப் போகச்செய்கிறேன்பாருங்களென்று மேற்படிஜெகஜாலக்கருவை விரலில்தொட்டு சக்கலாதேவி மூலமந்திரத்தை ஜெபித்து பத்துதேங்காயிலும் மைபடும்படியாகத் தெளித்துவிட உடனே அந்த தேங்காய்கள் பூமியில் நிற்காமல் கிளம்பி வேடிக்கையாக ஒன்றோடொன்று சடால்படாலென்று தாக்கி பொடிபொடியாகப் பூமியில் உதிர்ந்துவிடும் அனைவரும் பார்த்து ஆச்சரியப்பட்டு மந்திரவாதி என்று உன்னைமதித்து கொண்டாடுவார்கள்.

394 உடைந்ததேங்காயை மறுபடியும் முழுத்தேங்காயாக்கும் ஜாலம்.

மேற்படி உடைந்ததேங்காய்ப் பொடியை யெல்லாம் ஒன்றாகச்சேர்த்து சபையோர்களைப்பார்த்து இந்த தேங்காய்பொடிகளை முழுதேங்காயாகச்செய்கிறேன் பாருங்களென்று முன் கீரியதுபோலவே நவகோண சக்கரமொன்று கீரி இந்த தேங்காய்பொடியை பத்து பங்காகச் செய்து ஒன்பது மூலையிலும் ஒன்பது பங்கைவைத்து ஒருபங்கை நடுவில்வைத்து ஐங்கோலக்கருவை விரலில்தொட்டு வாலை மூலமந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து இந்தத்தேங்காய்ப் பொடியை முழுதேங்காயாக தோற்றச்செய்வாயென்று கருவை அக்கூறுகளின்மேல் தெளித்து ஒரு கூடையைப் போட்டு மூடி சபையோர்கள் நம்பும்படியாக மாந்திரைக்கோலைக் கையிலெடுத்து அடேகுட்டிச்சாத்தான் இந்தக் கூடைக்குள்ளிருக்கும் தேங்காய் பொடியை எல்லாம் கொண்டுபோய் ஆத்திலெறிந்துவிட்டு தேங்காய் கடைக்குச்சென்று தேங்காய் காரனை ஏமாத்தி நல்ல தேரின தேங்காய் பத்துகொண்டுவந்து கூடைக்குள் சீக்கிரம் வையடாவென்று மாந்திரைக்கோலால் கூடைமேல் மூன்றுதரம் தட்டி கூடையைத் திறந்துக் காட்ட முன்வைத்தது போலவே முழுதேங்காய்களாகத் தோற்றும் ஆச்சரியப்படுவார்கள்.

395. ஆடுபேத்தி யெரியும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்திலாவது இன்னமெந்த இடத்திலாவது ஒரு ஆட்டை கொண்டுவந்து நிறுத்தச்சொல்லி அங்குள்ள பேர்கள் அனைவரையும் பார்த்து இந்த ஆட்டை பத்தியெரிந்துப் போகும்படி செய்கிறேன் பாருங்களென்று ஜெகஜாலக்கருவை அரைகுண்டுமணி யிடையை யெடுத்து

அதனில் கோட்டான் ரத்தம்விட்டு முன்பாகவே கலந்து வைத்திருந்து அந்த கருவை கையில்தொட்டு சக்கலாதேவி மூலமந்திரத்தை ஜெபித்து இந்த ஆட்டை எரிந்துப்போகச் செய்வாயென்று மனதில் எண்ணி அந்த கருவை ஆட்டின்மேல் தெளிக்க உடனே குபீலென்றுப் பத்தியெரிந்து சாம்பலாகப்போகும் பார்ப்போர்கள் அனைவரும் திடுக்கிட்டு இது அக்கினி தேவன் வசியமென்று ஆச்சரியப் படுவார்கள்.

396 எரிந்துபோன ஆட்டை மறுபடியும் உண்டாக்கும் ஜாலம்.

அந்த க்ஷணமே நீ சபையோர்களைப் பார்த்து இப்போது எரிந்துபோன ஆட்டை எப்போதும்போல் உண்டாக்குகிறேன் பாருங்களென்று எரிந்த ஆட்டின் சாம்பலையெல்லாம் ஒன்றாகச்சேர்த்து ஐங்கோலக் கருவையும் கண்கட்டு மையையும் விரல்ல்தொட்டு வாலைமந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து பைரவர் மந்திரத்தை நூத்தியெட்டு ஓதி எரிந்துபோன ஆட்டை எப்போதும்போல் உருவாகத் தோற்றச்செய்ய வேணுமென்று மனதில் எண்ணி மையை அந்த சாம்பலில் தெளித்து ஒருபெரிய துப்பட்டியை போட்டுமூடி சற்றுநேரம் பொறுத்து துப்பட்டியை வாங்க முன்போல் ஆடாகத்தோற்றும் அனைவரும் ஆச்சரியப்பட்டு உன்னை மகாமந்திரவாதியென்று மதித்து கொண்டாடுவார்கள் ஆனால் இவை யெல்லாம் மூனேமுக்கால் நாழிகை வரைக்குந்தான் மையின் மறைவுதோற்றமாகும் அதற்குள் வித்தையாட வேண்டும்.

397. எத்தமரம் முறியும் ஜாலம்.

எத்த மிறைக்கு மிடத்திற்சென்று வேடிக்கைப் பார்ப்பவன்போல் அங்குநின்று ஜெகஜாலக் கருவும் கோட்டான் ரத்தமுங்கலந்து விரலில் தொட்டுக்கொண்டு சக்கலாதேவி மூலமந்திரத்தை தியானித்து கருவை எத்தமரத்தில் தடவ உடனே எத்தமரத்தின் மேலிருப்பவர்களோடு எத்தமரம் அடியோடே சாய்ந்துவிடும் அப்போதங்குள்ளவர்கள் அலறி குய்யோமுறையோ வென்றுக் கூச்சலிடுவார்கள்.

393. எதிரிமைவெல்லும் ஜாலம்.

நான்தனியாக காட்டு வழியிலேனும் இன்னம் எந்த இடங்களிலேனும் போகும்போது கள்ளர்களாயினும் தனக்கெதிரிகளாயினும் வந்து வழிமறித்து தொந்திரவுசெய்ய வருவார்களாயின் அப்போது உடனே நீ ஜெகஜாலக்கருவை விரலில் தொட்டு சக்கரதேவியை தியானித்து எதிரிகள் கைகால் அசக்காமல் அப்படியே நிற்க வேணுமென்று மனதில் எண்ணிகருவை யவர்கள்மேல் தெளிக்க கருவுமேலே பட்டவுடனே வீரமோடு வந்தவர்கள் வீரங்குலைந்து நின்ற விடத்திலேயே நிற்பார்கள் பின்பு அவர்களுன்னைப்பார்த்து ஐயாயாங்கள் அரியாமற் செய்தப்பிழையைப் பொறுத்து எங்களை இவ்விடம் விட்டுபேரும்படி செய்யீரென்று மிகவும் வருந்துவார்கள் அப்போது நீ ஐங்கோலக்கருவை விரலில் தொட்டு வாலைமந்திரத்தையியானித்து அவர்கள் மேல்தெளிக்க உன்னைபார்த்துபயந்து வந்த வழித்தெரியாமல் வோடிப்போவார்கள் நீ போகுமிடத்திற்கு அச்சமில்லாமற் போகலாம்.

399. பச்சைமரம் பத்தியெரியும் ஜாலம்.

எந்த ஜாதிமரமாயினும் பச்சென்றுத் தழைத்திருப்பதைப் பார்த்து இந்தமரத்தை காலாக்கினிபோல் பத்தி எரியும்படி செய்கிறேன் பாருங்களென்று ஜெகஜாலக்கருவை முன்போல் கூட்டி விரலில் தொட்டுக்கொண்டு சக்கலாதேவி மூலமந்திரத்தைஜெபித்து பச்சைமரம் பத்தி எரியவேணுமென்று மனதில் தியானித்து கருவை அம்மரத்தின்மேல் தெளிக்க உடனே காலாக்கினிபோல் பத்தி எரியும் பார்ப்பவர்கள் ஆச்சரியப்பட்டு உன்னுடைய அருகில் வந்து ஐயாவென்று வணங்கி இப்போது எரிகின்ற தீயை அடைக்கி மரத்தை முன்போல் பச்சென்று தழைத்திருக்கும்படி செய்வாயாயென்பாராகில் அப்போது நீ அப்படியே செய்கிறேனென்று ஐங்கோலக்கருவை யாருக்கும் தெரியாமல் விரலில்தொட்டு வாலைமந்திரத்தை தியானித்து தந்திரமாக மரத்தின்மேல் தெளிக்க உடனே தீயானது அடங்கி முன்போல் பச்சென்றிருப்பதுபோல் தழைத்து தோற்றும் அனைவரும் ஆச்சரியப்பட்டு அடிபணிவார்கள்.

400. பனமரம் இரண்டாய் பிளந்துவிழும் ஜாலம்.

பனமரத்தின் அருகிற்சென்று தன்னுடன் வந்தவர்களைப் பார்த்து இந்த பனமரத்தை யாவரும்பார்த்து ஆச்சரியப்படும்படியாக இரண்டுபிளவாய் பிளந்து பூமியில் விழும்படியாக செய்கிறேன் பாருங்களென்று ஜெகஜாலக்கருவையும் கோட்டான் ரத்தமுங்கலந்து விரலில்தொட்டு சக்கராதேவிமூலமந்திரத்தை ஜெபித்து இந்த மரம் இரண்டு பிளவாக விழவேணுமென்று மனதில் நினைத்து கருவை மரத்தின்மேல் தெளிக்க உடனே மரமானது படாலென்றுப்பிளந்து இரண்டுபக்கமும் விழுகும் பார்ப்போர்கள் யாவரும் பிரமித்து இது மகாபுதுமையாய் இருக்குதென்று உன்னைப் புகழ்ந்து மருபடியும் மரத்தை ஒன்றாகச் செய்யையா என்பாருகில் அப்போது நீ யாவரும் மிரளும்படியாக இதோ க்ஷணநேரத்திற்குள் முன்போல் செய்கிறேன் பாரென்று ஐங்கோலக்கருவை விரலில் தொட்டு வாலையைதியானித்து மரத்தின்மேல் தெளிக்க எப்போதும்போல் தோற்றும் பார்ப்போர்களும் இதுகண்கட்டு வித்தையென்று புலவாராக பேசிக் கொள்வார்கள்.

401. மணிச்சிலம்புடையும் ஜாலம்.

பூசாலிகளின் மணிச்சிலம்பை உடைக்கும் விதமெவ்வித மெனில்
ஜெகஜாலக்கருவில் அரை குண்டுமணி இடை எடுத்து நழுகரியின்பித்
தை யதினுடன் கலந்து மத்தித்து ஒருபானை ஓட்டில் பூசி அந்த ஓட்டை
எட்டி இலையினால் மூடி வங் சிங் ஓம் விரிம் சவ்வும் ஒம் என்று நூத்தியெ
ட்டு உருஜெபித்து எதிரிகளின் பெயரைமாற்றி தியானம்செய்து பின்பு
அவர்கள் வாழும்படியான தெருவீதியிற் சென்று மேற்படி ஓட்டை பூமி
யில் வைத்து இடது காலை அதின்மேல்வைத்து மூன்று அரக்கு அரக்க
எதிரியுடைய மணிச்சிலம்பு பொடிபொடியாகப் போகும் அப்போது
பூசாலியும் மிருவான் சபையோர்களும் ஆச்சரியப்பட்டு யாரோ ஏவல்
செய்தாரென்று பலவாராகப்பேசிக்கொள்வார்கள்.

402. தம்புருடையும் ஜாலம்.

ஜெகஜாலமையில் அரைகுண்டுமணியிடை எடுத்து அரணையின் பித்
தமத்துடன் சேர்த்து மத்தித்து தலைப்பிள்ளையின் தலைமண்டையோடு
சம்பாதித்து மேற்படிக்கருவை அந்த ஓட்டிற்பூசி கருஊமத்தன் இலையை
அதின்மேல் பரப்பி வங் அங் உங் பூரி அரியும் என்று உரு நூத்தி எட்டு
ஜெபித்து வைத்துக்கொள்ளவும் அதன்பிறகு தம்புர் வாசிக்கு மிடத்திற்
சென்று ஒருவருக்குந் தெரியாமல் மேற்படி மண்டையோட்டை பூமியில்
விட்டு இடது காலினால் மூன்று அறக்கு அறக்க தம்புரிகம்பி பொடிபொ
டியாக அரந்துபோகும் அப்போது வாசிப்போனும் அங்குள்ளவர்களும்
பார்த்து இது என்ன புதுமை என்று ஏங்கி எவனோ ஏவல் செய்தானெ
ன்று பலவாராகப்பேசிக் கொள்வார்கள்.

403 கின்னரியுடையும் ஜாலம்.

கின்னரிவாசிக்கு மிடத்திற்சென்று ஒருவருக்கும் தெரியாமலிருக்
கும்படியாக மரப்புமையை திலர்தமிட்டுக்கொண்டு மேற்கூறியபடிசெய்து
மண்டையோட்டை முன்போல் பூமியில்போட்டு அறக்க கின்னரி சின்ன
பின்னமாக உடைந்துபோகும் வாசிப்பவன் மதிமயங்கி மிருவான்.

404 உடுக்கையுடையும் ஜாலம்.

ஜெகஜாலகருவில் அரைகுண்டுமணி இடை எடுத்து அத்துடன் நரி
யின் ரத்தம் சேர்த்து மத்தித்து நாயின் மண்டையோடு சம்பாதித்துஅந்த
ஓட்டிற்பூசி பேய்பிரட்டி இலையை அதின்மேல் பரப்பி ஓம் மங் வங் சிங்
கிலும் சவ்வுமென்று நூத்தியெட்டு உருஜெபித்து பூசாலிகள் உடுக்கை
யடித்து வன்னிக்குமிடத்திற்கு சென்று வேடிக்கைப் பார்ப்பவன்போல்
ஒருமூலையில் குந்திக்கொண்டு மேற்படி வோட்டைபூமியில்வைத்து இடது
உள்ளங்கையினால் மூன்று அறக்கு அறக்க உடனே அங்கு எத்தனை உடு

க்கை அடித்துக்கொண் டிருந்தார்களோ அத்தனை உடுக்கை கிழிந்துபோ
கும் வேறே உடுக்கையெடுத்து அடித்தாலும் அதுவுங் கிழிந்துபோகும்
பூசாலிமுதலானவர்களும் மிரண்டு எவனோ எதிரியேவல் செய்தானென்
பார்கள்.

405 பம்பையுடையும் ஜாலம்.

மேற்சொன்னபடியாவும் செய்து முடித்துக்கொண்டு மூலமந்திரம்
அம் உம் சம் நசி மசி சவ்வும் என்று நூத்தியெட்டு வோதி பம்பையடிக்கு
மிடத்திற்போய் நின்று மேற்படி ஓட்டை பூமியில் போட்டு இடதுகாலால்
மூன்று அறக்கு அறக்க உடனே பம்பையானது படாலென்று வெடித்து
ப்போகும் வேறே எத்தனை பம்பை எடுத்தடித்தாலும் அத்தனை பம்பை
உடைந்துபோகும் பம்பைக்காரன் முதலானவர்களும் பதரி மயங்கி நிற்
பார்கள்.

406 மேளம் உடையும் ஜாலம்.

ஜெகஜாலக்கருவில் கொஞ்சம் எடுத்து கரும்பூனை ரத்தம்விட்டு மத்
தித்து முன்போல் தலைப்பிள்ளை ம[illegible]டையோடு சம்பாதித்து அந்த வோ
ட்டில் மேற்படி கருவைப்பூசி ஊமத்தை இலையை அதின்மேல் பூசி வங்
அங் உங் யூரி அரியும்என்று நூத்தியெட்டு உருஜெபித்து மேளம்வாசிக்கு
மிடத்திற்சென்று மேற்படி ஓட்டை ஒருவருக்குந் தெரியாமல் பூமியில்
போட்டு இடது காலால் மூன்று அறக்கு அறக்க அங்கு அடித்துக்கொண்
டிருக்கும்படியான மேளங்கள் யாவும் படால் படால் என்று மேளமான
துகிழிந்து பொடிபொடியாகப் போகும் மேளம்வாசிப்பவர்களும் திகை
த்து வேறே மேளம் எடுத்து அடித்தாலும் அதுவும் கிழிந்துபோகும்
பிறகு எவனோ வசியம்செய்து விட்டானென்று ஏங்கிநிற்பார்கள்.

407 மத்தளம் உடையும் ஜாலம்.

ஜெகஜாலக்கருவில் ஒரு குண்டுமணி இடை எடுத்து கோட்டான்
ரத்தத்தைவிட்டுமத்தித்து கரும்பூனையின் மண்டையோடு சம்பாதித்து அந்
தவோட்டில் மேற்படிமையைத்தடவி கருஊமத்தன்இலையை அதின்மேல்
பரப்பி வங் சிங் ஓம் யவிரிம் சவ்வும் என்று நூத்தியெட்டு உருஜெபித்து
மத்தளம் வாசிக்கு மிடத்திச்சென்று வேடிக்கைப்பார்ப்பவன்போல்நின்று
க்கொண்டேனும் அல்லது குந்திக்கொண்டேனும் ஒருவருக்குந் தெரியா
மல் மேற்படியோட்டை கீழேபோட்டு இடது காலை அதின்மேல் வைத்து
மூன்று அறக்கு அறக்க உடனே மத்தளமானது இரண்டுபக்கமும் கிழிந்
துபோம் மத்தளக்கட்டையும் பொடிபொடியாகப் போய்விடும் மத்தளம்
வாசிப்பவனும் மிரண்டு முழிப்பான் மற்றுமுள்ளவர்களும் திகிலடைந்து
இது யாரோ எதிரிவசியம் செய்து மத்தளத்தை உடைத்து விட்டனெ
ன்று மதிமயங்கிதிகைப்பார்கள்.

408. பேரிகை உடையும் ஜாலம்.

ஜெகஜாலக் கருவில் அரைகுண்டுமணி இடையெடுத்து முன்போல் நழுநரியின் ரத்தத்தை விட்டு மத்தித்து தலசன் பிள்ளையின் மண்டையோடு சம்பாதித்து அந்த ஓட்டின்மேல் தடவி எட்டியிலையை யதின்மேல் மூடி வங் சிங் ஓம் யவிரீம் சவ்வும் என்று நூத்தியெட்டு உருகொடுத்து பேரிகை முழங்கு மிடத்திற்சென்று ஒருவருக்குந் தெரியாமல் மேற்படி ஓட்டை கீழேபோட்டு இடதுகாலே யதின்மேல் வைத்து மூன்று அறக்கு அறக்கவுடனே பேரிகையானது படாலென்று கிழிந்து பொடிபொடியாகப்போகும் பேரிகைவாசிப்பவனும் இன்னும் மற்றுமுள்ளவர்களும் பிரமிப்பார்கள்.

409. தாளம் உடையும் ஜாலம்.

ஜெகஜாலக் கருவில் ஒரு குண்டுமெணியிடை எடுத்து அத்துடன் கோட்டான் ரத்தம்விட்டு மத்தித்து குரங்கு மண்டையோடு சம்பாதித்து மேற்படிக் கருவை யதிற்பூசி அதின்மேல் கருஊமத்தன் யிலையைப்பரப்பி ஓம் மங் மங் சிங் சிங் வங் வங் சவ்வும் என்று நூத்தியெட்டு உருஜெபித்து பஜனைகூடம் நாடகம் ஆடுமிடம் கோயில் முதலான இடங்களில் தாளம் அல்லது பிரமதாளம் அல்லது ஜாலர் வாசிக்குமிடத்தில் நீ வேடிக்கை பார்ப்பவன்போல் நின்றுக்கொண்டு மேற்படி மண்டையோட்டை பூமியில் போட்டு காலால் மூன்று உதையுதைக்க மேற்சொன்ன தாளவகைகளெல்லாம் பொடிபொடியாக ஒடிந்துபோகும் ஆலயம் போவோரும் மற்றுமுள்ளவர்களும் மதிமயங்கி மனம்திடுக்கிட்டு நின்று விடுவார்கள்.

410. பிட்டீல் உடையும் ஜாலம்.

ஜெகஜாலக் கருவில் மிளகு பிரமாணமெடுத்து தேவாங்கு ரத்தம் விட்டு மத்தித்து மனிதர்தலை மண்டையோட்டிற் பூசி பேயத்தி யிலையை அதின்மேல் பரப்பி வங் மங் உங் நசிமசி என்று நூத்தியெட்டு உருஜெபித்து கச்சேரி காலக்ஷேபங்கள் செய்யுமிடத்திலேனும் இன்னமெந்த இடத்திலேனும் பிட்டீல் வாசிக்குமிடத்திற்சென்று ஒருவருக்குந் தெரியாமல் பூமியில் மேற்படி ஓட்டைப்போட்டு மேற்சொன்ன மூலமந்திரத்தை சொல்லிக்கொண்டே மூன்று அறக்கு இடதுகாலால் அறக்க பிடீலின்நரம்புகள் துண்டு துண்டாக அறுந்து பிட்டீலும் பொடிபொடியாய் உடைந்துபோய்விடும் பிட்டில் வாசித்திருந்தவனும் சபையோர்களும் இது என்ன புதுமையாயிருக்கிறதென்று எக்கம்பிடிப்பார்கள் சிலர் கண்திருஷ்டியோவென்றுக் கவலைப்படுவார்கள்.

411. நாகசுரம் இரண்டாய் பிளக்கும் ஜாலம்.

ஜெகஜாலக் கருவில் அரைகுண்டுமணி இடையெடுத்து அத்துடன் ஒழுநரி ரத்தம்விட்டு மத்தித்து தலசன்பிள்ளை மண்டையோடு சம்பா

தித்து அதிலந்தக்கருவை பூசி அதின்மேல் எட்டியிலையை மூடி வங் சிங் ஓம் யவிரீம் சவ்வும் என்று நூத்திஎட்டு உருசெபித்து அம்பட்டர்கள் நாகசுரம் வாசிக்குமிடத்திலாவது அவர்கள் வீட்டிற்கெதிரிலாவது மேற்படி ஓட்டை பூமியில்போட்டு இடதுகால்ரால் மூன்று அறக்குஅறக்கி மேற்படி மூலமந்திரத்தை நூத்தியெட்டு ஜெபிக்க வாயில்வைத்து ஊதிக்கொண்டிருக்கும் நாகசுரமானது படாலென்று இரண்டு பத்தலாகப்பிளந்து போகும் வெரே எத்தனை நாகசுரமெடுத்து ஊதினாலும் அத்தனையும் பிளந்தேபோகும்.

412. துத்தி கிழியும் ஜாலம்.

மேற்சொன்னபடி என்றும் தவறாமற் செய்து மூலமந்திரம் ஓம் சிங் வங் யவிரீம் சவ்வும் என்று நூத்தியெட்டு உருஜெபித்து துத்திபிடிப்பவன் எதிரில்நின்று முன்போல் பூமியில் போட்டு இடதுகாலால் மூன்று அறக்கு அறக்க துத்தி படாலென்று கிழிந்துப்போகும் அனைவரும் திடுக்கிட்டு மதிமயங்குவார்கள்.

413. சகல வாத்தியங்களையும் முழக்கமில்லாமல் செய்யும் ஜாலம்.

ஜெகஜாலக் கருவை குண்டுமணி யிடையெடுத்து அதில் கூளியின் ரத்தம்விட்டு மத்தித்து ஒருபானை ஓட்டில்தடவி பேயத்தியிலையை அதின்மேல் சுத்தி ஓம் ஸ்ரீம் ரீம் வங் சிங் மங் சவ்வும் என்று ஆயிரத்தெட்டு உருஜெபித்து சகலவாத்தியங்களும் கூட்டமாக முழங்குமிடத்திற் சென்று வேடிக்கைப் பார்ப்பவன்போல் ஒரு பக்கமாய் நின்றுக்கொண்டு மேற்படி ஓட்டை ஒருவருக்குந் தெரியாமல் பூமியில்போட்டு இடதுகாலால் மூன்று அறக்கு இடது பக்கமாகத்திரும்பி யறக்க உடனே அங்கு எத்தனை வாத்தியம் முழங்கிற்றோ அத்தனை வாத்தியமும் பொட்டென்று நின்றுபோகும். அவர்கள் எவ்விதமாக ப்ரையாசப்பட்டாலும் முழங்கமாட்டாது அப்போது யாவரும் மதிமயங்கி எவனோ எதிரி கட்டுகட்டிவிட்டானென்று திகைத்து நிற்பார்கள் அப்போது நீயாரோ ஒருவனைப்போல் வந்து அவர்களைப் பார்த்து எதிரி யெவனோ வாத்தியம் முழங்காமற்படிக்கு கட்டுகட்டி விட்டான். அதையான் திருப்பிவிடுகிறேன் என்று உனக்கு இஷ்டமான பொருள்கேட்டு வாங்கிக்கொண்டு மேற்படி ஓட்டைக்கண்டு அதின்மேல் வலதுகாலைவைத்து வலதுபக்கமாக மூன்று அறக்கி சும்மாவிபூதியை யெடுத்து அனைவருக்குங் கொடுத்து அணிந்துக் கொள்ளச்சொல்லி பிறகு வாத்தியங்களை வாசிக்கச்சொல்ல சகலவாத்தியமும் முன்போல் வேடிக்கையாக முழங்கும் வாத்தியக்காரரும் வேடிக்கைப் பார்ப்போர்களும் உன்னைப் புகழ்ந்து கொண்டாடுவார்கள்.

414. வில்லம்பு குண்டாயுதங்களோடுவரும் படையை சிதரச்செய்யும் ஜாலம்.

எதிரிகளானவர் படைகளோடுவந்து எதிர்த்து வில்லு அம்பு தடி குண்டு கத்தி வளைதடி சக்கரம் சில்லாக்கோல் கேரிசம் சமுதாளி பாணம் அஸ்திரம் அக்கினி மந்திரம் பில்லி எவல்குத்து வெட்டு அடியல் தடியல் இவை முதலானதையும் தடைசெய்யவேண்டுமெனில் ஜெகஜாலக் கருவில் அரைகுண்டுமணிப் பிரமாணமெடுத்து அத்துடன் சிறியாநங்கை சார் விட்டு புலியினுடைய பித்துங்கூட்ச் சேர்த்து மத்தித்து அந்த தயிலத்தை இலர்த மிட்டுக்கொண்டு இரண்டு புருவத்திலும் பூசிக்கொண்டு மந்திரம் ஓம் ஐம்ம் கிலியும் கிரூங்கிலியும் சவ்வும் என்று நூத்தியெட்டுதரம் ஜெபித்து எம்பேர்கொத்த யுத்தரங்காணகளத்தின் நடுவேபோய்நின்று மேற்கூறிய மூலமந்திரத்தை விடாமல் ஜெபித்துக் கொண்டேயிருக்க எதிரிகள்மேற் கூறிய ஆயுதங்களினல் யெவ்விதமாகஜாடினும் யாவும் சிதறிப்போகும். அவர்கள் அடிப்பதெல்லாம் புஷ்பமாரிப் பொழிவதுபோலிருக்கும் எதிரிகளும் கைசலித்து ஓய்ந்துவிடுவார்கள். உன்னைப் புகழ்ந்துக் கொண்டாடுவார்கள்.

415. இடிமழை மின்னல் காற்று இவைகள் சிதரும்படி செய்யும் வித்தை.

ஜெகஜாலக் கருவில் அரைகுண்டுமணிப் பிரமாணம்வாங்கி அத்துடன் செய்யான் ரத்தமும் பித்தும் உடும்பினுடைய பித்தும்ரத்தம் இவைகளைச்சேர்த்து மத்திக்க மெழுகுபோல் ஆகும் அதையெடுத்து வைத்துக் கொண்டு தாம்பரத்தகட்டில் குலிசம்செய்து அக்கி மேற்படி மெழுக்கை அடைத்து மந்திரம் கிரியும் ஐயும் அங் செயா வெய்யலே என்று நூத்தியெட்டு உருஜெபித்து குலிசத்தை வலதுகையில் கட்டிக்கொண்டு இடிமழை மின்னல் காற்று இவைகள் பிரசண்டமாகப் பொழியும்போது போனல் இடி காற்று மழை மின்னல் முதலானதும் சிதரிப்போகும் பயமில்லாமற் போகலாம்.

416. வசியமை ஜாலம்.

ஆள்காட்டிகுறிவியின் முட்டையும் அரணையினுடைய பித்தும் சேர்த்து அத்துடன் கருங்கோழி ரத்தமொருபலமும் பிண்டம் நெய் பலமிரண்டும் சேர்த்து கோரோசனை கஸ்தூரி புனுகு இவைகள் சரிடையாகக் கூடச்சேர்த்து கல்வத்திலிட்டு காவிந்து பலம் இரண்டும் சூரியகாந்தம் பலம் ஒன்று நென்னுயுரிவிச்சார் பலம் விட்டு இரண்டுஜாமம் வரையிலு மறைக்க பழம்புளிபோல் வரும் அதைவழித்து செம்புபாத்திரத்தில் வைத்து வாலையினுடைய பூசை ஒருமண்டலம் செய்துவர தேவதைகள்யாவும்

வசியமாகும் மேற்படி மையை இலர்தமிட்டுக்கொள்ள லோகமெல்லாம் வசியமாகும் ஸ்திரிபுருஷர்களும் பரிசையாவர்கள் மிருகங்களும் வசியமாகும் அரசர்களும் வசியமாவார்கள் பேய் பூதம் வேதாளம் இவை முதலானதும் வசியமாகும் குட்டிச்சாத்தானும் வசியமாகுவான்.

417. மோகனமை

கட்டுக்காடை முட்டையும் நரியினுடைய பித்தும் மூன்றுபலமாகத் துத்தி கழுகின்கொழுப்பும் வேரண்டத்தயிலம் புனுகு பலம் காதவிக்துபலம் ஜெகஜாலக்கரு அரைபலம் சேர்த்து கஸ்தூரிமஞ்சள் புனுகு கஸ்தூரி கோரோசனை இவைகள் வகைக்கு கால் கழஞ்சியாகச்சேர்த்து அரசு பலம் ஒன்றும் கூட்டி இவைகளையெல்லாங் கல்வத்திலிட்டு குப்பமேனிச்சார் பலம்விட்டு இரண்டுஜாமம் வரையிலும் மெழுகுபோல் அரைத்து வழித்து செம்பு சிமிளில் வைத்துக் கொள்ளவும் பிறகு அகார புவனையுட பூசை ஒருமண்டலம் செய்துவர சகலமும் சித்தியாகும் சராசரங்களும் அதிக மோகமாகும் இந்த மோகனமையை இலர்த மிட்டுக்கொண்டு அடிபணிவாயாகில் ஸ்திரிமுதல் புருஷர்களும் மோகம் அரசரெல்லாம் மோகம் காடெல்லாம் மோகம் யானைமுதல் மிருகங்களெல்லாம் மோகம் மந்திரிகள் மோகம் தேவதைகள் மோகம் தேவகணமோடு பூத வேதாளங்களும் மோகமாகும்.

418. உச்சாடனமை.

தேவாங்கின் முட்டையோடு மந்தியின் பிச்சும் கொழுப்பு பலமுங் கூடசேர்த்து மாட்டு உணியும் சேர்த்து கட்டுக்காடை ரத்தமும் மாதர்களுடைய நாதமும் விந்தும் வகைக்கு பலமாகசேர்த்து வாணியன் இறந்துபோனவுடன் அவனை கொளுத்தும்போது பார்த்திருந்து அதில் வடியும் நெய் ஒரு பலமும் தம்பலப்பூச்சி ஒரு பலமும்சேர்த்து கஸ்தூரிபலம் ஒன்றும் புனுகு கால் கழஞ்சியும் கோரோசனை கால் கழஞ்சியும் முலைப்பால் பலம் ஒன்று இவைகளையும் சேர்த்து சீந்தில் கொடிரசம் பலம் அரையும் கொடிவேலியின் ரசம் பலம் நாலும் விட்டு மேற்சொன்ன வைகளையெல்லாம் கல்வத்தில் போட்டு இரண்டு ஜாமம் விடாமல் அரைக்க புளிபோல் வரும் அப்போது ஜாதிலிங்கம் ஒருபலம் அதிற்போட்டு இரத்தம் மூன்றுபலம் விட்டு மறுபடியும் இரண்டுஜாமம் அரைத்து வழித்தெடுத்து செம்பு சிமிளில் வைத்து வைரவர் பூசை ஒரு மண்டலம் செய்துவர ஜெகசத்தி பிரசன்னமாகுவாள். ஆனவுடன் மையையெடுத்து இலர்தமிட்டுக் கொண்டு வெளியே வருவையாகில் நாட்டிலுள்ள ஸ்திரிபுருஷரும் உச்சாடனமாவார். உலகாளும் அரசர்களும் உச்சாடனமாவார் மிருகஜாதிகளெல்லாம் உச்சாடனமாகும் தேவதைகளும் உச்சாடன மாவார் தேவகணங்களும் பூதபேத வேதாளங்களும் காட்டிலுள்ள பல உயிர்களும் உச்சாடனமாகும் பிதுர்தேவதைகளும் குட்டிச்சாத்தானும் உச்சாடன

மாவார் நவக்கிரகங்களும் உச்சாடனமாகும் சிதம்பரசக்கரமாகிய நாற்பத்து மூக்கோணமும் சர்வமும் உச்சாடனமாகும்.

419 தம்பனமை.

கோட்டான் முட்டையுடன் முசலின் கொழுப்பும் பிச்சும் சேர்த்து கருநாரை ரத்தம் ஒருபலமும் ஆக்கனெங்குலிவிப் பிச்சும் நத்தையும் சேர்த்து நேர்வாளம் பலம் ஒன்றும் கேசரியின் நெய்பலம் ஒன்றும் நாதவிந்து இரண்டுபலமும் சேர்த்து கருநாயின் இரண்டுகண்ணும் சேர்த்து அழிஞ்சிவிரைத்தயிலம் பலம் ஒன்றும் சேர்த்து ஜெகஜாலக்கருவில் கார்பலம் சேர்த்து அவ்விடையே கஸ்தூரிமஞ்சளும் சேர்த்து புழுகு காற்கழிஞ்சியும் கோரோசனைகாற்கழிஞ்சி கஸ்தூரிகாற்கழஞ்சி குண்டுமணி பருப்பு காற்கழஞ்சி இவைகளையெல்லாம் கல்வத்திலிட்டு யெருக்கன் சார்பலம் ஒன்று செவ்வாமணக்கனிலை சாறுபலம் நாலு அவரி இலைச்சார் பலம் இரண்டு இவ்வகளை விட்டு இரண்டுஜாமம் அரைத்து மெழுகுபதமாக வரும்போது பார்த்து சித்தாமணக்கெண்ணெய் பலம் வார்த்து மறுபடியும் ஒருநாழி அரைத்து வழித்து செம்புசிமிளில் வைத்து நாப்பது நாளுந் தவராமல் வாகிப் பூசைசெய்து தம்பனக்கரு வைத்துப்பணிந்து சித்தியானப்பிறகு இந்த மையில் கடுகளவு எடுத்துவதனத்தில் திலர்தம் இட்டிக் கொண்டு நீ திசைகளை நோக்கிப்பார்ப்பாயாகில் திரிபுவனமும் அண்டசராசரமும் தம்பனமாகும் இன்னம் ஸ்திரி புருஷரும் லோகமுழுதும் தேவதைகளும் பூதபேத வேதாளங்களும் நவக்கிரகங்களும் கருவி கரணாதிகளும் மிருகங்களும் காளிகாதேவியும் வாசியும் இவைமுதலான வைகளும் தம்பனமாகும்.

420 பேதனமை.

உடும்பின் முட்டையுடன் கரும்பூனை பித்தும் செந்நாயின் கொழுப்பும் பித்தும் சேர்த்து அத்துடன் நட்டுவக்காலி முழுமையும் சேர்த்து ஆந்தையின் ரத்தம் பலம் ஒன்றும் சலம்சுழலி வண்டு ஒருபலமும் பிராமணபெண்ணெய்வும் சேர்த்து நஞ்சுக்கொடி ஒருபலமும் நாதவிந்து இரண்டு பலமும் கருப்பு குண்டுமணி பலம் ஒன்று ஜெகஜாலக்கருவில் காற்பலமும் வீரத்தில் ஒருபலமும் எருமையுணி அரைப்பலமும் முதலை நெய்யில் பலம் ஒன்றும் சேர்த்து கருப்புமந்தியின் கண்ணும்சேர்த்து பேய்பீர்கன் சார் பலம் ஒன்றும் ஆவாரின் பிசினிபலம் ஒன்றும் சேர்த்து விஷ்ணுகிரந்திச்சாறு பலம் மூன்றும் நத்தைச் சூரிசார்பலம் மூன்றும் மஞ்சள் கஸ்தூரி புனுகு கோரோசனை இவைகள் வகைக்கு காற்கழஞ்சும் ... சாராயம் ஆறுபலமும் விட்டு கல்வத்தில் மேற்சொன்ன வைகளையெல்லாம் போட்டு இரண்டு ஜாமம் அரைத்து பார்க்க மைபோலாகும் அதைவழித்து செம்புசிமிளிலடைத்து வைத்து திரிபுரி தேவியின் பூசை ஒருமண்ட

லம் தவராமற்செய்து சித்தியாகும்படி அம்மன் அடியைப்பணிந்து பேதனக்கருவை கடுகளவு எடுத்து திலர்தமிட்டுக்கொண்டு வருவையானால் பாசபந்தமும் பேதனமாகும் லோகமெல்லாம் பேதனமாகும் இன்னம் வாசி பூதப்பிரேதம் அஷ்டகணம் தேவர்களும் ஸ்திரிபுருஷர்களும் புலியாளும் மன்னரும் வேதாளமும் மிருகஜாதிகளும் குட்டிச்சாத்தானும் பேதமாவான்.

421 ஆக்குருஷணமை.

வக்கர்வின் முட்டையுடன் கழுதையின் கொழுப்பும் பிச்சும் சேர்த்து தலச்சன்பிள்ளைப்பிண்டகருவு பலம்ஒன்றும் நஞ்சுகொடி பலம் ஒன்றும்சேர்த்து இன்னம் நாதவிந்து பலம் இரண்டும் மண்ணெண்ணை இரண்டுபலம்விட்டு வாலாசம் பலம் ஒன்றும் வாத்தினுடைய ரத்தம் பலம் இரண்டும் சேர்த்து வரப்பெலியின் பிச்சும் கண்ணும் கூடசேர்த்து சமாதியினுடைய எலும்பின் தயிலமும் ஒருபலமும் சேர்த்து சிரியாநங்கையின் வடக்குபோகும் வேர் பலம் ஒன்றும் கஸ்தூரி மலைமஞ்சள் புனுகு கோரோசனை இவைகள் வகைக்கு காற்கழஞ்சும் சந்தனம் பலம் ஒன்று சேர்த்து ஆடாதொடை இலைசார்பலம் மூன்றும் கவிழ்தும்பைசார் பலம் மூன்றும் பேய்க்கரையின் தயிலம் பலம்நாலும் இவைகளை எல்லாம் ஒன்றாகச் சேர்த்து கவல்த்திலிட்டு நாளொன்றுக்கு நாலுஜாமம் அரைத்து மைபோலானபின்பு வழித்து செம்பு சிமிளில்வைத்து கருவை கைதொழுதுப்பணிந்து சாமளாதேவி பூசை ஒருமண்டலம் தவராமல் செய்து அம்மன் பிரசன்னமானவுடன் ஆக்கிருஷண மையைத்தொழுது அந்தமையை திலர்தமிட்டுக்கொண்டு நீ நாலுதிசையும் பார்ப்பாயாகில் நவசராசரங்களும் ஆக்குருஷணமாகும் இன்னம் வாசியும் தேவதைகளும் தேவகணங்களும் பூதபேதங்களும் குட்டிச்சாத்தானும் தாராமுதலானதும் ஆக்குருஷணமாகுமின்னம் ஸ்திரி புருஷர்களும் லோகமாதியந்தமும் மிருகஜாதிகளும் ஆனைபடை சேனைதளங்களும் மணிமந்திரமும் வாதம் வைதியம் இவைகள் முதலானதும் ஆக்குருஷணமாகும்.

422. வித்துவேஷணமை.

செம்பருத்தின் முட்டையைக்கொண்டுவந்து அத்துடன் விச்சுளியின் பிச்சும் கண்ணும் செவ்வாத்தின் கொழுப்பும் பிச்சும் தலசன்பிள்ளையின் கருப்பலம் ஒன்றும் தூரிஞ்சில் ரத்தம்பலம் மூன்று பல்லிமுட்டை குழியானைபலம் ஒன்று நாதவிந்து இரண்டுபலம் நஞ்சுகொடி இரண்டுபலம் இலைபாசிபலம் ஒன்று கெந்திபலம் ஒன்றும் கற்பூரவள்ளிச்சார் பலம் மூன்றும் புங்கன் கொட்டைதைலம் பலம் ஒன்றும் ஆனைநெருஞ்சியின் சார்பலம் மூன்றும் பன்றிநெய்பலம் வடக்குப்போகும் பூனைக்காலிவேர் சார்பலம் ஒன்றும் கோரோசனை புனுகு கஸ்தூரிபலம் ஒன்றும் கொஞ்சமஞ்சள்

பலம் அரையும் இவைகள்யாவையும் ஒன்றாகச் சேர்த்து கல்வத்திலிட்டு பனிநீர் ஜத்துபலம் விட்டு இரண்டு ஜாமம் விடாமல் அரைத்து வழித்து செம்பு சிமிளில் வைத்து கொள்ளவும். பின்பு சாமளாதேவிபூசை ஒருமண்டலந்தவறாமல் செய்து சித்தியான உடன் மையை திலர்த மிட்டுக்கொண்டு வெளிவருவாயாகில் ஸ்திரி புருஷர்கள் ராஜாக்களும் தேவதைகளும் ஜெகமுழுதும் பூதபேத வேதாளமும் யக்ஷிணிபுவனங்களும் நவக்கிரகங்களும் வாதமும் வைதியமும் வாசிமுதலான தம்பிருக்ஜாதிகளும் மூலிகைகளும் பிசாசுகளும் தேவகணங்களும் சக்கரங்களும் செய்தொழில் முதலானதும் அண்டசராசரமும் அஷ்டகஜங்களும் பேய்கள் முதலானதும் சவங்கள் மேற்கூறிய இவைகள்யாவும் வித்துவேஷணமாகும்.

423. மாரணமை.

அணிப்பிள்ளையின் முட்டையுடன் அண்டங்காக்கை ரத்தம் பலம் ஒன்றும் வெண்கூழி பீச்சம் பச்சோந்தியின் பிச்சம் அதின் ரத்தமும் பலம் ஒன்றும் பச்சத்தவளை பிச்சம் தேரையின்பிச்சம் கொழுப்பும் ஜெகஜாலக்கரு இருபலமும் சாபிபலம் ஒன்றும் பாம்பின்விஷம்பலம் ஒன்றும் எட்டிக்கொட்டை தைலம் பலம் ஒன்று சாதகத்தை பலம் இரண்டு சிந்திற்கொடியின்வட்டக்கு போகும்பிச்சம் கோரோசனை கஸ்தூரி புனுகு இவைகள் வகைக்கு கால்கழஞ்சு மேற்கூறிய இவைகள் யாவையும் ஒன்றாகச்சேர்த்து கல்வத்திலிட்டு அழுகண்ணியிலையின் சாறுமூன்றுபலமும் விட்டுக்கத்தாலம் இரண்டுபலம் விட்டு இல்லிப்பால் இரண்டுபலம்விட்டு வரமுள்ளி சார்மூன்றுபலம் விட்டு இரண்டு ஜாமம்விடாமல் அரைத்து மைபோலானபின்பு வழித்து எட்டிமரத்தின்வேர் சிமிளில்வைத்துக் கொள்ளவும் பிறகு சக்கரதேவியின் பூசை ஒருமண்டலம் தவறாமல் செய்துவர சித்தியாகும் அஷ்டசித்தியுமாட மாரணக்கருவையும் சக்கரதேவியையும் பணிந்து சகலசித்துமாடலாம் மாரணக்கருவின் தொழில்யாதெனில் தாளிப்பனை ஓலை ஒரு அங்குலம் துண்டில் சக்கரதேவியின் சக்கரத்தை எழுதி மாரணத்தின் கோஜமும் பீஜமும் அடைத்து உன்க்கு எதிரியின்பேரை அதில் அதைதலைகால்ய் மாறி மாரணமையைபூசி தணலில்விட்டு சக்கரதேவியைப்பூசித்து மாரண மூலமந்திரத்தை நூற்றியெட்டு ஜெபிக்க நீன் எதிரி ஒருவாரத்தில் தேகமெல்லாம் வெடித்து அந்தபுர மேகவழியிப் பீர்ப்பான் அல்லது குஷ்டரோகம் தொண்டிடும் அல்லது கண்டமாலை நாளுநாளில் காணும் இதை திருப்பயாவராலுமாகாது உன்னைதேடிவந்து உன்னடித் தொழுவாராகில் அப்போது நீ பசும்பாலில்விட்டு சக்கரத்தைக் கழுவிவிட பாதகர்களுக்கு கண்டபிணியாது தீர்ந்து சுகப்படுவார்கள் இத்தொழில்செய்வதும்பாபம் கருமிகளுக்கு செய்தால் தோஷமில்லை யென பெரியோர் கூறுகின்றனர்.

424. பந்திசெண்டு அழைப்பிக்கும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் ஒரு பூக்குடலை எடுத்து அனைவருக்குங்காட்டி இந்த பூக்குடலை நிரையப்பூ அழைப்பித்து அனைவருக்கும் கொடுக்கிறேனென்று அந்தக்கூடையை பூமியில் வைத்து அதின்மேல் ஒரு துணியைப் போட்டுமூடி வேதாளமந்திரத்தை தியானித்து ஜெகஜாலமையை கூடையின்மேல் தெளித்து உச்சாடனமையை விரலில்தொட்டு நெத்தியில் திலர்தமிட்டுக்கொண்டு குட்டிச்சாத்தானை தியானிக்க ஒருவர் கண்ணுக்கும் தோற்றாமல் உன்னெதிரே வந்து நிற்பான் அப்போது நீ அவனைப்பார்த்து இந்த பூக்குடலை நிறைய புஷ்பசெண்டு கொண்டுவாவென்று சொல்லுவாயாகில் உடனே அந்த குட்டிச்சாத்தான் பூதோட்டத்திற்சென்று பூபறித்து பந்திசெண்டுக்கட்டி பூக்குடலையில் கொண்டுவந்துவைப்பான் அதின் பிறகு நீ துணியைத்திறந்து காண்பிக்க பூக்குடலை நிறைய பூசெண்டு இருக்கும் சபையோர்களும் ஆச்சரியப்படுவார்கள் புஷ்பத்தை யெடுத்து அப்புறம் வைத்துக்கொள்ளவும் ஆனால் இது உண்மையானப் புஷ்பமாகையால் மறைந்துப் போகாது.

425. சந்தனம் அழைப்பிக்கும் ஜாலம்.

ஒரு சந்தனகிண்ணத்தை எடுத்து சபையோர்களுக்குக் காட்டி சந்தனம் அழைப்பிக்கின்றேன் பாருங்களென்று அந்த கிண்ணத்தை மேஜையின்மேல் வைத்து ஒரு வெள்ளை துணியைப்போட்டு மூடி முன்போல் மந்திரத்தை தியானித்து குட்டிச்சாத்தானை அழைக்க முன்போல் வருவான் சந்தனம் கொண்டு வரும்படியாகச் சொல்ல உடனே சந்தனங் கொண்டுவந்து கிண்ணத்தின் நிறையவைப்பான் பிறகு துணியை திறந்து பார்க்க சந்தனம் நிறையவிருக்கும் சபையோர்களுக்காட்டி அதையெடுத்து அப்புறம் வைத்துக்கொள்ளவும்.

426. பன்னீர் அழைப்பிக்கும் ஜாலம்.

ஒரு பன்னீர் புட்டியை யெடுத்து அனைவருக்கும் காட்டி பன்னீர் அழைப்பிக்கின்றேனென்று மேற்கூறிய வண்ணம்செய்து ஜெபிக்க முன்போல் குட்டிச்சாத்தான் வருவான் பன்னீர் கொண்டுவாவென்று சொல்ல அப்படியே அந்தக்ஷணமே கொண்டுவந்து வைப்பான் பிறகு துணியை நீக்கிப்பார்க்க புட்டிநிறையப் பன்னீரிருக்கும் பார்ப்போர்கள் ஆச்சரியப்படுவார்கள் அதையெடுத்து அப்புறம் வைத்துக்கொள்ளவும்.

427. வெத்திலை அழைப்பிக்கும் ஜாலம்.

ஒரு பிறப்பன்கூடையை எடுத்து அனைவருக்குங்காட்டி இந்தகூடை நிறைய வெத்திலை அழைப்பிக்கிறேன் என்று முன்போல் துணிபோட்டு மேற்கூறியவாறுசெய்து ஜெபிக்க குட்டிச்சாத்தான் வருவான் அவ

னுடன் வெத்திலைக் கொண்டுவரும்படிச்சொல்ல அந்த க்ஷணமே கூடைநிறையவெத்திலை கொண்டுவந்து வைப்பான் சற்றுநேரம் பொருத்து கூடையை திறந்துபார்க்க வெத்திலைநிறையவிருக்கும் பார்த்தவர்கள் பிரமிப்பார்கள் அதையும் அப்புறமெடுத்து வைத்துக்கொள்ளவும்.

428. பாக்கு அழைப்பிக்கும் ஜாலம்.

சபையோர்களைப்பார்த்து வெத்திலை அழைப்பித்தேன் இதோபாக்கு அழைப்பிக்கின்றேன் என்று மேற்கூறியவாறு செய்து ஜெபித்து ஒரு சிறிய கூடையை மேஜைமேல்வைத்து முன்போல் துணிபோட்டு மூடி குட்டியைதியானிக்க வருவான் பாக்கு கொண்டுவாவென்று சொல்ல அந்த க்ஷணமே நல்ல பீடன்பாக்காய் கூடைநிறைய கொண்டுவந்து வைப்பான் பிறகு சற்றுநேரம்பொருத்து துணியைத்திறந்து பார்க்க பாக்குகூடை நிறையவிருக்கும் ஆச்சரியப்படுவார்கள் அதையும் அப்புறமெடுத்து வைத்துக்கொள்ளவும்.

429. ஜாதிக்காய் அழைப்பிக்கும் ஜாலம்.

ஒரு தாம்பாளத்தை யெடுத்து சபையோர்களுக்குக் காட்டி மேஜையின்மேல்வைத்து நல்லிதமான சீலையைபோட்டுமூடி மேற்கூறியவாறு செய்து ஜெபிக்க குட்டிவருவான் ஜாதிக்காய் கொண்டுவாவென்றுச் சொல்வாயாகில் உடனே தட்டின்நிறைய கொண்டுவந்து வைப்பான் சற்றுநேரம்பொருத்து திறந்துப்பார்க்க ஜாதிக்காய் வந்திருக்கும் சந்தோஷப்படுவார்கள் அதையும் அப்புறமெடுத்து வைத்துக்கொள்ளவும்.

430. ஜாபத்திரி அழைப்பிக்கும் ஜாலம்.

மேற்கூறியப்படி தாம்பாளத்தை வைத்துமூடி ஜெபிக்க குட்டிவருவான் ஜாபத்திரிகொண்டுவாவென்று சொல்லுவாயாகில் உடனே கொண்டுவந்து வைப்பான் சற்றுநேரம்பொருத்து திறந்துபார்க்க ஜாபத்திரி வந்திருக்கும் அதையும் அப்புறமெடுத்து வைத்துக்கொள்ளவும்.

431. எலக்காய் அழைப்பிக்கும் ஜாலம்.

மேற்கூறியபடி தாம்பாளத்தைவைத்து மூடி முன்போல் கருவைதெளித்து ஜெபிக்க குட்டிச்சாதான் வருவான் எலக்காய் கொண்டுவாவென்றுசொல்ல உடனேகொண்டு வந்துவைப்பான் சற்றுநேரம்பொருத்து திறந்துபார்க்க எலக்காய் வந்திருக்கும் அதையும் சபையோர்களுக்குக் காட்டி அப்புறம் வைத்துக்கொள்ளவும்.

432. லவுங்கம் அழைப்பிக்கும் ஜாலம்.

மேற்கூறியபடி தாம்பாளத்தைவைத்து மூடி முன்போல் கருவைத்தெளித்து ஜெபிக்க குட்டிச்சாத்தான் வருவான் லவுங்கம் கொண்டுவரும்படியாச்சொல்ல அந்தக்ஷணமே லவுங்கம் கொண்டுவந்து வைப்பான் சற்றுநேரம்பொருத்து திறந்துபார்க்க லவுங்கம்வந்திருக்கும் அதையும் சபையோர்களுக்குக் காட்டி அப்புறம் வைத்துக்கொள்ளவும்.

433. வால்மிளகு அழைப்பிக்கும் ஜாலம்.

ஒருடப்பியையெடுத்து திறந்து சபையோர்களுக்குக்காட்டி மேற்கூறியபடி மூடிவைத்து கருவைத்தெளித்து ஜெபிக்க குட்டிவருவான் வால்மிளகு கொண்டுவாவென உடனே கொண்டுவந்து வைப்பான் சற்றுநேரம்பொருத்து டப்பியைத்திறந்து பார்க்க மிளகுவந்திருக்கும் அதையும் சபையோர்களுக்குக்காட்டி அப்புறம்வைக்கவும்.

434. கொப்பரைத்தேங்காய் அழைப்பிக்கும் ஜாலம்.

ஒருகூடையை மேஜைமேல்வைத்து அதின்மேல் துணியைப்போட்டுமூடி மேற்கூறியபடியாவும் செய்து கருவைதெளித்து ஜெபிக்க குட்டிச்சாத்தான் வருவான் கொப்பரைதேங்காய் கொண்டுவாவென்று சொல்வாயாகில் உடனே கொண்டுவந்து வைப்பான் சற்றுநேரம்பொருத்து மூடிய துணியைத்திறந்து பார்க்க தேங்காய்வந்திருக்கும் அதையும் சபையோர்களுக்காட்டி அப்புறம் வைத்துக்கொள்ளவும்.

435. மாம்பழம் அழைப்பிக்கும் ஜாலம்.

ஒரு கூடையை மேஜைமேல் வைத்து மேலே துணியைப்போட்டு மூடி முன்போல் கருமுதலானதும் தெளித்து உச்சாடணமையை திலர்தமிட்டுக்கொண்டு குட்டிச்சாத்தானை தியானிக்க குட்டிவருவான் மாம்பழம் கொண்டுவரும்படி சொல்ல அந்தக்ஷணமே கொண்டுவந்து கூடைநிறையவைப்பான் சற்றுநேரம் பொருத்து மூடியதுணியைத் திறந்துப்பார்க்க மாம்பழம் வந்திருக்கும் அதையும் சபையோர்களுக்குக் காட்டி அப்பால் எடுத்து வைத்துக்கொள்ளவும்.

436. வாழைப்பழம் அழைப்பிக்கும் ஜாலம்.

ஒரு மூங்கிற்பெட்டியை எடுத்து அனைவருக்குங்காட்டி பெட்டிக்குள் கருவு முதலானதும் தெளித்து மேல்மூடியை மூடி சக்கலாதேவி மூலமந்திரத்தை நூற்றியெட்டு வோதி மேற்படி திலர்தமிட்டுக்கொண்டு குட்டியைதியானிக்க குட்டிவருவான் வாழைப்பழம்கொண்டுவாடா என்றுசொல்ல அப்படியே கொண்டுவந்து மூங்கிற்பெட்டியில் வைப்பான் முன்போல் சற்றுநேரம் பொருத்து பெட்டியைத் திறந்துபார்க்க வாழைப்பழங்குலை வந்திருக்கும் அதையும் சபையோர்களுக்கு காண்பித்து அப்பாலெடுத்து வைத்துக் கொள்ளவும் ஆனால் நாம் எத்தனைகுலை கொண்டு வரும்படி சொல்லுகின்றமோ அத்தனை குலை வந்திருக்கும்.

437. கோய்யாப்பழம் அழைப்பிக்கும் ஜாலம்.

முன்போல் ஒரு கூடையை மேஜைமேல் வைத்து துணியைப்போட்டுமூடி மேற்கூறியபடி செய்து பைரவர் மூலமந்திரத்தை நூத்தியெட்டு ஓதி உச்சாடனமையை திலர்த மிட்டுக்கொண்டு குட்டிச்சாத்தான் தியானிக்க குட்டிச்சாத்தான் உன்கண்ணிற்குப் பிரச்னமாவான் கொய்யாப்பழம் கொண்டுவாடாவென்று சொல்ல அப்படியே கொண்டுவந்து வைப்பான் முன்போல் சற்றுநேரம் பொருத்து மூடியதுணியைத் திறந்துபார்க்க கூடைநிறைய கொய்யாப்பழ மிருக்கும் அதையும் சபையோர்களுக்குக் காட்டி அப்பால்வைத்து விடவேண்டும்.

438. பெலாப்பழம் அழைப்பிக்கும் ஜாலம்.

ஒரு பெரிய கூடையை எடுத்து அனைவருக்குங்காட்டி மூடிவைத்து மேற்கூறியபடி செய்து வேதாள மந்திரத்தை நூத்தியெட்டு ஜெபித்து மேற்படிமையை திலர்த மிட்டுக்கொண்டு குட்டிச்சாத்தானை தியானிக்க முன்போல் வருவான் பெலாப்பழம் கொண்டு வாடாவென்று சொல்ல அப்படியே அந்தக்ஷணம் கொண்டுவந்து வைப்பான் சற்றுநேரம் பொருத்து திறந்துபார்க்க பெலாப்பழம் வந்திருக்கும் அனைவருக்கும் காண்பித்து அப்பாலெடுத்து வைத்துக்கொள்ளவும்.

439. எலுமிச்சம்பழம் அழைப்பிக்கும் ஜாலம்.

எந்த கூடையாகிலும் ஒருகூடையை எடுத்து அனைவருக்குங் காட்டி மேற்கூறியபடிசெய்து துணிபோட்டுமூடி முன்போல் மந்திரத்தை தியானித்து குட்டியை வாவென்று அழைக்க குட்டிச்சாத்தான் ஓடிவருவான் அவனைப்பாரத்து எலுமிச்சம்பழம் கொண்டுவாடாவென்று சொல்ல அந்த க்ஷணமே எலுமிச்சம்பழங் கொண்டுவந்து வைப்பான் நீ சற்றுநேரம் பொருத்து மூடியதுணியைத் திறந்துபார்க்க எலுமிச்சம்பழம்வந்திருக்கும் அனைவருக்கும் காட்டி அப்பால் எடுத்து வைத்துக்கொள்ளவும் ஆனல் கருவைமாத்திரம் கூடையில் மறவாமல் தெளிக்கவேண்டும்.

440 மாதுளம்பழம் அழைப்பிக்கும் ஜாலம்.

முன்போலொரு சிறிய கூடையை எடுத்து அனைவருக்குங் காட்டி மேற்சொன்னபடிக் கருமுதலானதும் பூசி சக்கலாதேவியின் மூலமந்திரத்தை நூத்தி எட்டு ஓதி கூடைமெல் துணிபோட்டு மூடி குட்டிச்சாத்தானை தியானிக்கவருவான் அவனை மாதுளம்பழம் கொண்டுவரும்படியாகச் சொல்ல அந்த க்ஷணமே கொண்டுவந்து கூடை நிறையவைப்பான் நீமுன்போல் சற்றுநேரம் பொருத்து மூடியதுணியை திறந்துபார்க்க மாதுளம்பழம்வந்திருக்கும் அனைவருக்குங்காட்டி அப்பாலெடுத்து வைத்துக்கொள்ளவும்.

441 விளாம்பழம் அழைப்பிக்கும் ஜாலம்.

மேற்கூறியபடி ஒருகூடையை எடுத்து அனைவருக்குங்காட்டி முன்போல் யாவும் செய்து கூடைமேல் துணியைப்போட்டு மூடி வேதாளமந்திரத்தை நூத்தியெட்டு ஓதி மேற்படி திலர்தத்தை இட்டுக்கொண்டு குட்டிச்சாத்தானை தியானிக்க வருவான் அடேகுட்டிச்சாத்தான் விளாம்பழம்கொண்டுவாடா வென்றுசொல்ல அந்த க்ஷணமே விளாம்பழம் கூடைநிறையக்கொண்டுவந்து வைப்பான் நீ முன்போல் சற்றுநேரம்பொருத்து மூடியதுணியைத்திறந்து பார்க்க விளாம்பழம் வந்திருக்கும் அதையும் சபையோர்களுக்குக்காட்டி அப்பால் எடுத்து வைத்துக்கொள்ளவும்.

442 பம்புலிமாஸ்பழம் அழைப்பிக்கும் ஜாலம்.

ஒரு மூங்கிற் கூடையை எடுத்து அனைவருக்குங்காட்டி மேற்சொன்ன கருவை யதில்தெளித்து மேலே துணியைப்போட்டு மூடி வாராகிமந்திரத்தை நூத்தியெட்டுதரம் ஓதி குட்டிச்சாத்தானை தியானிக்க வருவான் அவனைப்பார்த்து பம்புளிமாஸ்பழம் கொண்டுவாடாவென்று சொல்லஉடனே கொண்டுவந்து மூங்கிற் கூடைநிறையவைப்பான் நீ முன்போல்சற்றுநேரம்பொருத்து மேலே மூடியதுணியைத்திறந்து பார்க்க பம்புளிமாஸ் பழம்வைத்திருக்கும் அதை எடுத்து சபையோர்களுக்குக்காட்டி அப்பால் வைத்துக்கொள்ளவும்.

443 அன்ஞசிபழம் அழைப்பிக்கும் ஜாலம்.

முன்போலொரு மூங்கிற்கூடையை எடுத்து அனைவருக்குங் காட்டி இந்த கூடை நிறைய அன்ஞசிப்பழம் அழைப்பிக்கின்றேனென்று ஜெகஜாலக்கருவும் ஐங்கோலக்கருவும் அந்த கூடையில் தெளித்துமேலே துணியைப்போட்டு மூடி சக்காதேவிமந்திரத்தை நூத்தியெட்டு ஓதி உச்சாடனக்கருவை முன்போல் திலர்தமிட்டுக்கொண்டு குட்டிச்சாத்தனை தியானிக்க வருவான் அவனைப்பார்த்து சீக்கிரம் அன்ஞசிபழம்கொண்டுவாடாவென்று சொல்ல அந்த க்ஷணமே கொண்டுவந்து கூடைநிறைய சேர்ப்பான் நீ முன்போல் சற்றுநேரம் பொருத்து மூடியதுணியைத்திறந்துபார்க்க அன்ஞசிபழம் வந்திருக்கும் அதை எடுத்து அனைவருக்குங்காட்டி அப்பாலெடுத்து வைத்துக்கொள்ளவும்.

444 ஆரஞ்பழம் அழைப்பிச்கும் ஜாலம்.

எந்த கூடையாகிலும் ஒருகூடையை எடுத்து அனைவருக்குங்காட்டி பூமியின்மேவைத்து மேற்கூறியபடி கருவகளைப்பூசி வாலைமந்திரத்தை நூத்திஎட்டு ஓதி கூடையின்மேல் துணியைப்போட்டு மூடி குட்டிச்சாத்தானை தியானிக்கவருவான் அவனைப்பார்த்து அடே குட்டிசாத்தான் சீக்கிரம் ஆரஞ்சிபழம் கொண்டுவாடா என்று சொல்ல அந்தக்ஷணமே

கொண்டுவந்து கூடை நிறையவைப்பான் நீ முன்போல் சற்றுநேரம்பொருந்து மூடியதுணியை திறந்துபார்க்க பழம்வந்திருக்கும் அதையெடுத்து அனைவருக்குங்காட்டி அப்பாலெடுத்து வைத்துக்கொள்ளவும்.

445. கிச்சிலிப்பழம் அழைப்பிக்கும் ஜாலம்,

முன்போல் எந்த கூடையாகிலும் ஒன்றையெடுத்து அனைவருக்குங்காட்டி இந்த கூடைநிறைய கிச்சிலிப்பழம் அழைப்பிக்கின்றேன் பாருங்களென்று மேற்கூறியபடி கருவுகளை பூசி வேதாளமந்திரத்தை நூற்றியெட்டு ஜெபித்து கூடையை பூமியில் வைத்து மேலே துணியைப்போட்டு மூடி மேற்படி மையை மறவாமல் திலர்தமிட்டுக்கொண்டு குட்டிச்சாத்தானை தியானிக்க வருவான் அவனைப்பார்த்து கிச்சிலிப்பழம் கொண்டுவாடா வென்றுசொல்ல அப்படியே அந்தக்ஷணம் கிச்சிலிப்பழங் கொண்டுவந்து கூடை நிறையவைப்பான் நீ முன்போல் சற்று நேரம்பொருந்து மூடிய துணியைத் திறந்துபார்க்க பழம் வந்திருக்கும் அதையெடுத்து சபையோர்களுக்குக்காட்டி அப்பாலெடுத்து வைத்துக்கொள்ளவும்.

446. பேரீச்சம்பழம் அழைப்பிக்கும் ஜாலம்.

ஒரு பெரிய தாம்பாளத்தை எடுத்து சபையோர் அனைவருக்குங்காட்டி இந்த தட்டுநிறைய பேரீச்சம்பழம் அழைப்பிக்கின்றேன் பாரென்று ஜெகஜாலக் கருவையும் ஐங்கோலக்கருவையும் தாம்பாளத்திற்பூசி பைரவர் மந்திரத்தை நூற்றியெட்டு உருகொடுத்து வுச்சாடனமையை திலர்தமிட்டுக்கொண்டு தாம்பாளத்தின் ஒரு கூடையைப்போட்டு மூடி குட்டிச்சாத்தானை தியானிக்க வருவான் அவனைப்பார்த்து பேரீச்சம்பழம் கொண்டுவாடாவென்று சொல்ல அந்தக்ஷணமே தாம்பாளத்தின் நிறைய பேரீச்சம்பழத்தை கொண்டுவந்து வைப்பான் நீ முன்போல் சற்றுநேரம் பொருந்து மூடிய துணியைத் திறந்துபார்க்க பழம் வந்திருக்கும் அதை எடுத்து அனைவருக்குங்காட்டி அப்பாலெடுத்து வைத்துக்கொள்ளவும்.

447. திராட்சிப்பழம் அழைப்பிக்கும் ஜாலம்.

மேல்மூடியோடிருக்கும் ஒரு மூங்கிற்கூடையை எடுத்து சபையோர்களுக்குக்காட்டி இதோ இந்தக்கூடை நிறைய திராட்சிப்பழம் அழைப்பிக்கின்றேன் பாரென்று ஜெகஜாலக் கருவையும் ஐங்கோலக் கருவையும் கூடையிற்பூசி மேல்மூடி அதின்மேல் துணியைப் போட்டுமூடி சக்கலாதேவி மந்திரத்தை நூற்றியெட்டு ஜெபித்து மேற்படி மையை திலர்தமிட்டுக்கொண்டு குட்டிச்சாத்தானை தியானித்த குட்டிவருவான் அவனைப்பார்த்து திராட்சிப்பழம் கொண்டுவாடா வென்றுசொல்லவும் முன்னே கொண்டுவந்து வைப்பான் நீ முன்போல் சற்றுநேரம்பொருந்து மூடிய துணியைத் திறந்துபார்க்க திராட்சிப்பழம் வந்திருக்கும் அதை

எடுத்து அனைவருக்குங்காட்டி அப்பாலெடுத்து வைத்துக் கொள்ளவும். ஆனால் பச்சை திராட்சிப்பழம் உலர்ந்ததிராட்சிப்பழம் எதுவேண்டுமென்றாலும் அழைப்பிக்கலாம்.

448. அத்திப்பழம் அழைப்பிக்கும் ஜாலம்.

எந்தகூடையை யாகிலும் ஒருகூடையை எடுத்து சபையோர்களுக்குக்காட்டி இந்த கூடை நிறைய அத்திப்பழம் அழைப்பிக்கின்றேனென்று முன்போல் கூடையில் கருவுகளைப்பூசி துணிபோட்டு மூடி பைரவர்மந்திரத்தை நூற்றியெட்டு ஜெபித்து உச்சாடன மையை திலர்தமிட்டுக் கொண்டு குட்டிச்சாத்தானை தியானிக்க குட்டிச்சாத்தான்வருவான் அவனைப்பார்த்து அடே அதிசீக்கிரமாக அத்திப்பழம் கொண்டுவாடா வென்று சொல்ல உடனே பழங்கொண்டுவந்துக் கூடைநிறையவைப்பான் நீ முன்போலவே சற்றுநேரம் பொருந்து மூடியதுணியைத்திறந்து பார்க்க பழம் வந்திருக்கும் அனைவருக்குங் காட்டி அப்பாலெடுத்து வைத்துக் கொள்ளவும்.

419. சக்கரை அழைப்பிக்கும் ஜாலம்.

புது தோண்டியொன்று எடுத்து சபையோர்களுக்குக் காட்டி இந்த தோண்டிநிறைய சக்கரை அழைப்பிக்கின்றேன் பாரென்று ஜெகஜாலக் கருவையும் விரலில்தொட்டு தோண்டியிற்பூசி சக்காதேவியைதியானித்து வேதாளமந்திரத்தை நூற்றியெட்டு ஓதி ஜாலக்காளைப் பூசித்து உச்சாடனமையை திலர்தமிட்டுக்கொண்டு தோண்டிமேல் ஒரு துணியைப் போட்டு மூடி குட்டிச்சாத்தானை தியானிக்க வருவான் அவனைப்பார்த்து அடே குட்டிச்சாத்தான் சீக்கிரமாக இந்ததோண்டி நிறைய சக்கரைகொண்டு வாடாயென்று சொல்ல அந்த க்ஷணமே கொண்டுவந்து வைப்பான் நீ சற்றுநேரம் பொருந்து மூடியதுணியைத்திறந்து பார் சக்கரை குடத்தின் நிறையவந்திருக்கும் அதை அனைவருக்குங்காட்டி அப்பால் எடுத்து வைத்துக்கொள்ளவும்.

450. கற்கண்டு அழைப்பிக்கும் ஜாலம்.

ஒரு பீங்கான் ஜாடியை எடுத்துச் சபையோர்களுக்குக்காட்டி இந்த ஜாடிநிறைய கற்கண்டு அழைப்பிக்கின்றேனென்று அஷ்டமாசித்தி மையை விரலில்தொட்டு ஜாடியின் மேல்தெளித்து துணியைப்போட்டு மூடிவிட்டு பைரவர்மந்திரத்தை நூற்றியெட்டோதி வேதாளமந்திரத்தையுமப்படியேயோதி ஜாலக்காளை பூசித்து உச்சாடனமையை திலர்தமிட்டு கொண்டு குட்டிச்சாத்தானை தியானிக்க பிரசன்னமாகவருவான் அவனைப்பார்த்து அடே இந்தஜாடிநிறைய கற்கண்டு கொண்டுவாடா வென்று சொல்ல அப்படியே அந்த க்ஷணம்கொண்டுவந்து வைப்பான் நீமுன்போ

லசற்றுநேரமிருந்து மூடிய துணியைத்திறந்து பார்க்க கற்கண்டு வந்திருக்கும் அதை அனைவருக்குங்காட்டி அப்பாலெடுத்து வைத்துக்கொள்ளவும்.

451 தேன் அழைப்பிக்கும் ஜாலம்.

புட்டியொன்றை எடுத்து அனைவருக்குங்காட்டி இந்த புட்டிநிறைய தேன் அழைப்பிக்கின்றேன் என்று மகாமாயமையை விரலில்தொட்டு புட்டியின்மேல் தெளித்து மேஜையின்மேல் வைத்து கூடையைப்போட்டு மூடிவிட்டு வாராகிமந்திரத்தை நூத்தியெட்டு ஒதி ஆஞ்சநேயரை தியானித்து ஜாலக்காளைப்பூசித்து உச்சாடனமையை திலர்தமிட்டுக் கொண்டு குட்டிச்சாத்தானை நினைக்க உடனேவருவான் அவனைப்பார்த்து அடே குட்டிச்சாத்தான் இந்தபுட்டிநிறைய தேன்கொண்டு வாடாவென்று சொல்ல அந்தக்ஷணமே கொண்டுவந்து வைப்பான் நீ முன்போல் சற்றுநேரம் பொருத்துமூடிய கூடையைதிறந்துப்பார்க்க தேன்வந்திருக்கும் அனைவருக்குங்காட்டி அப்பால் எடுத்துவைத்துக் கொள்ளவும்.

452 பசும்பால் அழைப்பிக்கும் ஜாலம்.

பெரியசொம்பு ஒன்றை யெடுத்து அங்குள்ள யாவருக்குங் காட்டி இந்த சொம்பு நிறைய பசும்பால் அழைப்பிக் கின்றேனென்று அஷ்டமாசித்திமையை விரலில்தொட்டு சொம்பின்மேல் தெளித்து முன்போல் துணியைப்போட்டு மூடிவிட்டு வாலை மந்திரத்தை நூத்தியெட்டு ஒதி பைரவரை தியானித்து ஜாலக்காளைப் பூசித்து உச்சாடனமையை திலர்தமிட்டுக்கொண்டு குட்டிச்சாத்தானை நினைக்க வருவான் அவனைப்பார்த்து அடே குட்டிச்சாத்தான் சீக்கிரமாக பசும்பால் கொண்டு வாடாவென்று சொல்ல உடனே சொம்புநிறைய கொண்டுவந்து வைப்பான், நீ சற்று நேரம்பொருத்து மூடிய துணியைத் திறந்துபார்க்க பசும்பால் வந்திருக்கும் அதை அனைவருக்குங்காட்டி அப்பால் யெடுத்து வைத்துக்கொள்ளவும்.

453. நெய் அழைப்பிக்கும் ஜாலம்.

காலியான நெய் சித்தையைக் கொண்டுவந்து சபையோர் களுக்குங் காட்டி இதோ இந்த நெய்சித்தை நிறைய நெய் அழைப்பிக்கிறேனென்று ஐங்கோலக்கருவை விரலில்தொட்டு சித்தையின்மேல் தெளித்து அதின்மேல் துப்பட்டியைப் போட்டு மூடி சக்கலாதேவி மூலமந்திரத்தை நூத்தியெட்டு ஜெபித்து வேதாள மந்திரத்தையும் அப்படியே ஜெபித்து ஜாலக்காளை தியானித்து உச்சாடன மையை திலர்த மிட்டுக்கொண்டு குட்டிச்சாத்தானை நினைக்கவருவான் அவனுடன் சீக்கிரமித்த சித்தைநிறைய நெய் கொண்டு வாடாவென்றுசொல்ல அப்படியே யந்தக்ஷணம் கொண்டுவந்து வைப்பான் நீ முன்போல் மூடியதுணியைத் திறந்துபார்க்க நெய் வந்திருக்கும் அதையும் அனைவருக்குங்காட்டி அப்பால் யெடுத்து வைத்துக்கொள்ளவும்.

454. சபையில் பாராங்கல் வந்துவிழும் ஜாலம்.

ஜாலமாடு மிடத்திலாவது இன்னமெந்தவிடங்களிலாவது அங்குள்ளவர்களைப்பார்த்து இப்போது இந்த சபையில் திடும்பிரவேசமாக ஒருபெரிய பாராங்கல் வந்துவிழும்படி செய்கிறேனென்று அஷ்டமாசித்திமையை விரலில் தொட்டுக்கொண்டு ஆஞ்சநேயர்மந்திரத்தை ஆயிரத்தெட்டோதி வேதாள மந்திரத்தை நூத்தியெட்டோதி கையிற்தொட்ட கருவை நாலுதிக்கிலும் தெளித்துவிட்டு உச்சாடன மையை திலர்தமிட்டுக்கொண்டு குட்டிச்சாத்தானை தியானிக்க உடனே வருவான் அவனைப்பார்த்து ஓ குட்டிச்சாத்தான் நீ யிந்தக்ஷணமே ஒரு பெரிய பாராங்கல்லை தூக்கிக்கொண்டு ஆருக்குந் தெரியாமல் அந்தர மார்க்கமாகவந்து இந்த சபையிலுள்ளவர்கள்மேல் படாமல் சபைக்கு நடுவில் பேரிடி முழக்கம்போல் திடுமென்று போடவேண்டுமென்றுசொல்ல அப்படியே குட்டிச்சாத்தான் கல்லை தூக்கிக் கொண்டுவந்து சபைநடுவில் தபாலென்று போடுவான் அப்போது அங்குள்ள சிறியோர் பெரியோர் விருத்தர் ஸ்திரீகள் முதலானவர்களும் திடுக்கிட்டு மெய்மறந்து மிரண்டு முழிப்பார்கள் சிலர் இது குட்டிச்சாத்தான் வேலையென்று கொண்டாடுவார்கள்.

455. நெருப்பு மழை பெய்யும் ஜாலம்.

சபையோர்களைப் பார்த்து இப்போது அகஸ்மாத்தாய் நெருப்புமழை பெய்யும்படி செய்கிறேன் ஜாக்கிரதையாக யிருந்து பாருங்களென்று சக்[illegible]வி மந்திரத்தை ஆயிரத்தெட்டோதி வேதாள மந்திரம் நூத்தியெட்டோதி ஜெகஜாலக்கருவை விரலில்தொட்டு ஒரு எலுமிச்சம்பழத்தை திற்றடவி கையில் வைத்துக்கொண்டு முன்போல் குட்டிச்சாத்தானை தியானிக்க வருவான் அவனைப்பார்த்து அடே குட்டிச்சாத்தான் சபையிலுள்ளவர்கள் மேல் படாமற்படிக்கு அக்கினி மழை பெய்யும்படிச் செய்வாயென்று சொல்ல கையிலுள்ள எலுமிச்சம் பழத்தை நாலு பத்தையாக அறுத்து நாலுதிக்கிலும் விட்டெறிய உடனே குட்டிச்சாத்தான் ஜெக்சக்காய்பிரமாணமாக சலசலவென்று சபையில் அக்கினிமழை பொழியும்படி செய்வான் அதுகண்டு சிலர் மிரண்டோடுவார்கள் சிலர் இதுயென்ன விபரீதமென்று யேக்கம்பிடிப்பார்கள் சிலர் மதிமயங்கிப் பிரமிப்பார்கள் சிலர் இது யென்ன நமதுமேலேவிழாமல் பக்கங்களில் விழுகும் புதுமையிது யென்னமோவென்று ஆச்சரியப்படுவார்கள் சிலர் இது அக்கினிதேவனுடைய வசியமென்பார்கள் அப்போது நீ இதோ மழையைநிறுத்திவிடுகிறேன் பாரென்று தந்திரமாக ஐங்கோலக்கருவை விரலில் தொட்டு அத்துடன் மண்ணைசேர்த்து வாரிமுன்போல் நாலுதிக்கிலும் விட்டெறிந்து குட்டியை தியானிக்க நெருப்பு மழைநின்றுவிடும் அனைவரும் உன்னைகொண்டாடுவார்கள்.

456. சபையில் நாகல்வந்து விழுந்ஜாலம்.

ஜாலமாடுமிடத்திலாவது இன்னுமெந்த விடங்களிலாவது இருக்கும் சபையோர்களைப்பார்த்து இந்த சபைநடுவில் நாகல்வந்து விழும்படிசெய்குறேன் பாருங்களென்று மயானருத்திரி மந்திரத்தை நூத்தியெட்டு ஜெபித்து சங்கிலிக்கருப்பனை தியானித்து தம்பனக்கருவில் கடுகுபிரமாணமெடுத்து நெற்றியில் திலர்தமிட்டுக்கொண்டு குட்டிச்சாத்தானை நினைக்க வருவான் அவனைப்பார்த்து அடேகுட்டி "இந்த சபையோர்களெல்லாம் பிரளும்படியாக நாகலை கொண்டுவந்து இங்குள்ள ஒருவர்மேலும் படாமற்படிக்கு நடுசபையில் கொண்டுவந்து வைபடா வென்று சொல்ல அந்த க்ஷணமே அப்படியேகொண்டுவந்து வைப்பான் அதை பார்த்தபேர்களெல்லாம் இதுவென்ன புதுமையென்று அந்நாற்றம் பொருக்காமல் ஓடுவோர்களை தடுத்து நீ இதோ யிந்தநாகலை மாய்மாகப் போகும்படிச்செய்குறேன் பாருங்களென்று முன்போல் குட்டிச்சாத்தானை அழைத்து நாகலை எடுத்துப்போகச்சொல்ல யெடுத்தேகுவான் சபையோர்களும் இதுவென்னமாயவித்தையாயிருக்குமென்று ஆச்சரியப்படுவார்கள்.

457. புஷ்பமாரிபொழியுஞ்ஜாலம்.

ஜாலமாடுமிடத்திலாவது இன்னமெவ்விடங்களிலாவது அங்குள்ளயாவர்களையும் பார்த்து இப்போதி யாவரும் சந்தோஷிக்கும்படியாய் புஷ்பமாரிப்பொழியும்படி செய்குறேன் பாருங்களென்று சங்காதேவி மூலமந்திரத்தை ஆயிரத்தெட்டோதி வேதாளமந்திரத்தை நூத்தியெட்டு ஜெபித்து உச்சாடனக்கருவை கடுகளவெடுத்து திலர்தமிட்டுக்கொண்டு குட்டிச்சாத்தானை நினைத்து தியானிக்க உடனேவருவான் அவனைப்பார்த்து அடேகுட்டி நீ இக்ஷணமே பூந்தோட்டத்திற்குச்சென்று பலவிதமான புஷ்பங்களையும் பரித்துக்கொண்டுவந்து இந்த சபையோர்கள் மகிழும்படியாக புஷ்பவருஷம் வருஷிப்பாயென்று சொல்ல அப்படியே அவன் வருஷிப்பான் அப்போது சபையோர்கள் யாவரும் பார்த்து அதிகசந்தோஷத்தை அடைந்து ஆனந்தப்பரவசமானார்கள் உன்னை மகா யாந்திரிக சித்தனென்றுப்புகழ்ந்து கொண்டாடுவார்கள்.

மேற்சொன்னபடி அழைப்பித்த பலவகைகளையும் சபையோர்முதலானபேர்களுக்குக்கொடுத்தும் புசிக்கும்படிச் செய்யலாம் தானும் தன்வர்க்கங்களும் உபயோகிக்கக்கூடாது என்னென்றால் அப்படி உபயோகிப்பாராகில் பின்புமெந்த வித்தையும் பலியாமற்போமென்று மேலோர் கூறியிருப்பதால் யோசித்து நடக்கவேண்டும் அன்றியும் பகலில் அழைப்பிப்பது இரவில் மாயமாகப்போகும் இரவிலழைப்பிப்பது பகலில் மாயமாகப்போகும் ஆகையால் அழைப்பித்தவுடனே அனுபவிக்கவேண்டுமென்று முன்னோர்வாக்கியம்.

458 காளிகாதேவி வசிய தியானம்.

காளியுடன் தியானம்செய்வது எவ்விதமெனில் அரிகாளி ஆகாசகாளிஓடிகாளி வீரகாளி சூலபாலகாளி மோடிதேவி பூமிகாளி ஓங்காளிபிடாரிகாளி மகாளி யோடிகாளி மந்திரகாளி என்று மாலைசொல்லி, பிறகு ஓம் ஆம் கோதண்டரூபி யாளிவாகனத்திலேறி அரசர்களோடும் சபையோர்களும் மெச்ச விருதுகைக்கொடியுடன் வேதாளஞ்சூழ ஆங்காரசத்தி கொண்டுவருவா என்று இருபத்தோரு வெள்ளிக்கிழமையும் பூசைசெய்து தினந்தோறும் தவறாமல் மேற்கூறிய மூலமந்திரத்தை லட்சம் உருஜெபித்து வர காளிகாதேவி பிரசன்னமாகி சித்தியாகியருள்வாள்.

459. மாடன் வசிய தியானம்.

நஞ்சுண்டு இறந்துபோனமனிதனை தகனம்செய்து மறுநாள் காடாற்றுமுன்னே நீ சென்று அந்தக்கரியை எடுத்துவந்து அதின்மேல் ஐங்கோலக்கருவைப்பூசி வான்போல்மண்ணுடகிறி முகம் தோற்றும்படியாக சுவாலையில் யெழுதி எதிரிபிறுடையப்பெயரை அதின் கீழ்யெழுதி ஆகர்சமாடன்மந்திரத்தை லட்சம் உருவோதிடவேண்டும் தெவ்விதமெனில் ஓம் நமோபகவதே மடுசுவாக வென்று மேற்சொன்ன கணக்கைப்போல் ஜெபித்து பெருந்தப்பூசைப்போட்டு பலிகொடுத்து மாடனைத் தியானஞ் செய்து மாடனைக்கட்டிக்கொண்டு ஓ ஆகாசமாடா கல் மாந்தாவென்று சொல்லிபின்பு கல்லைதகட்டின் மேல்வைக்க கல்லும் ஒரு கோடிபூதங்கள் சுற்றிலும்பார்த்துக் கொண்டிருக்க கல்லானது எறியும் அம்படி எறிவதுடன் மண்ணையும் சாலை கள்களையும் மாட்டெலும்பையும் செங்கல்லையும் விராட்டியையும் பாண்டங்களையும் அரிசி உமி தினை நிட்டுசீலை குப்பை இவைகளோடுக் கண்டதையெல்லாம் எதிரியின் [illegible] வெளியேவாரியெறியும் எதிரிபோருமிடமெல்லாம் கூட [illegible] போகும் அப்போது எதிரியானவன் மிரண்டுபயந்தே உன்னை [illegible] வந்தால் நீயும் மனமிரங்கி மாடனை அமர்த்தி [illegible] கல்லைத்தாவென்று வாங்கிக்கொண்டு பிறகு அந்த மாடனை சரணமிட்டு யெழுதியபின்பு சக்கரத்தைக் கழுவி ஜலத்தில் விட்டுவிட்டு மாடனைப்பூசை செய்ய சகலமும் நிவர்த்தியாகும்.

460 கலசமந்திரம்.

கலசமந்திரம் ஜெபிக்கும் விதம் எவ்விதமெனில் நீங்காரமாகிய வெள்ளிமுகட்டில் இம் உம் கம் ரம் ரங் சிங் யாயிடாகினி மாங்கினி வீஷ்ணு சகோதரி சர்வாணி உமாதேவி, பராசத்தி கௌரி என்று லட்சம் உருஜெபித்து சித்திபூசைசெய்து விபூதிப்பூசி வருவையாகில் ஜெகத்தில் ஏவல் முதலானதுடன் பிசாச பூதம் பேர்சொல்லினபோதையில் வோர்பிடுங்குதல்கருத்தடவி சக்கரங்கல்லாட்டல் வைப்பு பார்வை குற்றியேல் மற்றுமுள்ளவ

சூன்னியங்கள் கல்லெறிதல் இவை முதலானதும் இந்த மந்திரத்தை எழுதிக்கட்ட நிவர்த்தியாகும்.

461 சகலதோஷமும் நீங்க ஒண்டி மூலிகை.

ஒண்டிமூலிகையைக்கண்டு பிடித்து அமாவாசையும் திராணமும் கூடியதினத்தில் ஆதிவாரத்தில் மஞ்சள்நூல் காப்புகட்டி பொங்கலிட்டு பலிபூசைசெய்து அந்தவேரைப் பிடுங்கிவந்து குளிசமாடிக் கட்டிக்கொள்ள இப்பூமியின்கண் எவ்விதத்துன்பங்களும் அணுகாது பூதபேத பிசாசுகள் முதலான துஷ்ட வைப்பு சூனியங்களும் எருமலோடும்.

462. செப்பிடு வித்தை.

செப்பிடு வித்தையாடும் விதம் கேழ்ப்பாயாக செம்பஞ்சு பந்து ஐஞ்சும் கோல் ஒன்றும் எடுத்துக்கொண்டு சபையில்வந்து காளியுடைய தியானத்தை ஓதி பத்தியோடு ஜாலமையைக் கோலில்தேய்த்து பந்தையாட்டஆடும் அன்றியும் ஐந்துபந்து பார்வைக்கு லட்சம் பந்துபோலாடும் அனைவரும் ஆச்சரியப் படுவார்கள்.

163. கொள்ளி ஜாலம்.

கொள்ளியினுடைய வசியமந்திரம் ஓதுவது எவ்விதமெனில் சிவவசி என்று லட்சம் உருஜெபித்து பூசைமுதலானதும் செய்துவர சித்தியாகும் சித்தியானவுடன் அக்கினியைத் துணியில் வைத்துச்சுற்றி தகட்டில் அட்சதைக்கீறி அதின்மேல் ஐங்காயமும் ஐங்கோலமும் சுடலைக்கருவும் பூசி அதில் உனக்கு எதிரியுடைய் பெயரை நாட்டிப் பூசைசெய்து கொள்ளியைதியானித்து பந்தையெடுத்து தகட்டின்மேல் வைத்து இருதலைக்கொள்ளி என் மொழியைக் கேளாய் சத்துருவின் மனைகள்தோறும் வைத்துக்கொளுத்துவாயென்று தியானிக்கிறது அப்படியே எதிரிகள் திடுக்கிடும்படியாக பந்தானது திரிந்து கொளுத்தும்.

464. மலக்குட்டி வசியம்.

மலக்குட்டி தியானம் செய்வது எவ்விதமெனில் ஓம் ரீம் வாமலக்குட்டிச்சாத்தான் நான் வைத்துப் பூசையைக்கொண்டு நான் சொல்லும் வேலையைக்கேட்டு மலத்தைவாரி நான் நினைத்த வீட்டில் போடென்று சொல்லி பலிபூசை பலக்கச்செய்துவர மலக்குட்டி வசியமாவான்.

465. மலக்குட்டி ஜாலம்.

மேற்கூறியபடி சித்தியானவுடன் மந்திரத்தை தகட்டிற்கீறி அதின்மேல் ஐங்காயம் ஐங்கோலம் சுடலைக்கரு இம்மூன்றையுங்கூட்டி மத்தித்து தகட்டிற்பூசி அதில் எதிரியினுடையப் பெயரையும் நாட்டி மேற்கூறிய மந்திரத்தை லட்சம்ஓதி பலிபூசை பலக்கச்செய்து பிறகு மலத்தையெடுத்து தகட்டில்வைத்து சொல்லவேண்டியது மலமிந்தா மலக்குட்டி என்று மந்திரத்தை தியானம் செய்வாயாகில் குட்டிவலக்கையில் மலத்தைவாரிக் கொண்டுபோய் நீ நினைத்தவிட்டுத்திற் போடுவான் அப்போது நீ தகட்டைஜலம் விட்டுக்கழுவிப் போடுவாயாகில் கொண்டுபோய் போட்ட மலமெல்லாம் மாயமாகப் போய்விடும்.

466. வனமடக்க வித்தை,

வனமடக்கமாவது சொல்லக் கேட்பாயாக அலையடக்கம் அங்கமடக்கம் பங்கமடக்கம் வழியடக்கம் சுவாகாவென்று ஜெபித்து ஆதிவாரத்தில் தண்ணீர் விட்டான் கிழங்கின் செடிக்குக் காப்புகட்டி பொங்கவிட்டு பலிகொடுத்துப் பூசைபோட்டு மேற்கூறிய மந்திரத்தை ஆயிரம் ஓதி வேரைப்பிடுங்கிவந்து ஐங்காயம் ஐங்கோலம் சுடலைக்கரு இவைமூன்றையுஞ்சேர்த்து மத்தித்து வேரில்தடவி காலில்போட்டு மிதித்துக்கொண்டு வனத்தைப்பார்த்து மந்திரத்தை யோதிச்சொல்ல வனமடக்கமாகி வெட்டும் அந்திரத்திற் செல்லாது.

467. குறிசொல்லும் வித்தை.

ஆடையொட்டி சமூலமுடன் கின்றிட நீஞ்சலூக்கி கருஞ்சீலை இவை மூன்றையும் கருக்கி மைபோல் அரைத்து சுடலைத்தயிலம் சேர்த்து மருபடியும் மைபோல் அரைத்து வழித்து சிமிளில்வைத்து பிறகு அனுமானைதியானஞ்செய்து மையையெடுத்து நெற்றியில் திலர்த மிட்டுக்கொண்டு ஓம் அஞ்சனாதேவி புத்திரா வாயு மைந்தா புருஷ ரூபாவல்லவா அனுமந்தா ராமதூதாவந்து குறிசொல்லென்று வணங்கி சொன்வாயாகில் நினைத்ததையெல்லாம் வந்துச்சொல்வான் நாட்டி லுள்ளோர்களும் உன்னைப் புகழ்வார்கள்.

468. வஸ்துபாண்டமுறையும் வித்தை.

சாராயத்தில் கொரும்பட்டையைக் கொண்டுவந்து அதின்மேல் கருஞ்சீலைசுற்றி காளிகோயில் முன்னே கொண்டுபோய்வைக்க பானைகள்யாவும் ஆடி உடையும் விற்காதுக் கெட்டுப்போகும் அதையெடுத்து விட்டால் பானையும் உடையாது எப்போதும்போல் விற்கும்.

469. விளைவை விளையாமற்செய்யும் வித்தை.

எதிரியினுடைய விளைவைக்கெடுக்கவேண்டில் கொடிவேலிச்செடிக்கு மஞ்சள்நூல் காப்புகட்டி ஓம் என்று லட்சம் உருஜெபித்து வேரைப்பிடுங்கிவந்து சுடலைக்கருவைப்பூசி கலசத்தில் வைத்துமூடி விளைவுவிளையுமிடத்தில் கொண்டுபோய்வைக்க விளையாது வேரையெடுத்துவிட்டால் பிறகு விளைவு நன்றாய்விளையும்.

470. விளைவுநன்றாய் விளையும் வித்தை.

விளைவு நன்றாகவிளைய செய்யவேண்டில் நாயுரிவிச்செடிக்கு மஞ்சள் நூல் காப்புகட்டி ஸ்ரீம் என்று லட்சம் உருஜெபித்து வேரைப்பிடுங்கி வந்து ஐங்கோலக் கருவை அதின்மேல் பூசி கலசத்தில்வைத்து விளைவுவிளையுமிடத்தில் கொண்டுபோய் புதைக்க விசேஷமாக விளையும்.

471. வாழைமரம் குலைவிடாதிருக்கச்செய்யும் வித்தை.

மேற்கூறியபடி கொடிவேலிச்செடிக்கு ஆதிவாரத்தில் மஞ்சள் நூல் காப்புகட்டி பொங்கலிட்டு பலிகொடுத்து தூபதீபங்காட்டி வேரைப்பிடுங்கிவந்து சுடலைக்கருவை யதின்மேல்பூசி கலசத்தில் வைத்துமூடி வாழைத்தோப்பிற்கொண்டுபோய் ஈசான்யமூலையில் புதைத்துவிட வாழைமரமும் ஓங்கிவளராது எத்தனைகாலமிருந்தாலும் குலைவிடாது புதைத்த கலசத்தை யெடுத்துவிட்டால் வளரும் குலைவிடும்.

472. வாழைத்தோப்பை பெருக்கச்செய்யும் வித்தை.

வாழைத்தோப்பை பெருக்கச்செய்யவேண்டில் முன்போல் நாயுரிவிச்செடிக்கு மஞ்சள் நூல் காப்புகட்டி சிறியகுடுவையில்பொங்கலிட்டு பூசை போட்டு பலிகொடுத்து வேரைப்பிடுங்கிவந்து அஷ்டமாசித்திமையும் ஐங்கோலக்கருவையும் மத்தித்து வேரின்மேல் பூசி கலசத்தில்வைத்து மூடி வாழைதோப்பின் கிழக்குதிக்கில் புதைத்துவிட நன்றாய் வாழை விருத்தியோங்கி குலைகள்விசேஷமாக விடும்.

473. தென்னந்தோப்பு சடோராதபடிசெய்யும்வித்தை.

கொடிவேலிச்செடிக்கு கிராணத்தில் காப்புகட்டி பலி பூசைசெய்து வேரைப்பிடுங்கிக் கொண்டுவந்து சுடலைக்கருவும் ஜெகஜாலக் கருவையும் மத்தித்து வேரின்மேல் பூசி காளியைதியானித்து கலசத்தின் உள்ளே வைத்துமூடி தென்னந்தோப்பண்டை கொண்டுபோய் அக்கினிமூலை பக்கமாய் புதைத்துவிட தென்னந்தோப்பு நாளுக்குநாள்நசிந்துபோகும்பாளை விடாது தேங்காய்காய்த்தாலும் கருகிப்போகும் புதைத்தை எடுத்தால் எப்போதும் போல் விருத்தியடையும்.

474 தென்னந்தோப்பை விருத்தியாகச் செய்யும் வித்தை

நாயுருவிச்செடிக்கு ஞாயிற்றுக்கிழமையில் மஞ்சள் நூல் காப்புகட்டி பலி பூசை போட்டு வேரைப்பிடுங்கிவந்து ஐங்காயக்கருவும் ஐங்கோலக் கருவும் அஷ்டமாசித்திமையும் மூன்றையுங்கலந்து வேரின்மேல் பூசி கலசத்திலுள்ளவைத்து வாயைமூடி தென்னந்தோப்பிற் கொண்டுபோய் நிருத்திமூலையில் புதைக்க தோப்பு நாளுக்குநாள் நன்றாய்விர்த்தியாகும்.

475. காட்டை காந்துபோகச் செய்யும்வித்தை:

கள்ளிமடையான் செடிக்கு ஆதிவாரத்தில் மஞ்சள் நூல் காப்புகட்டி பொங்கலிட்டு பலிகொடுத்து தூபதீபங்காட்டி வேரைப் பிடுங்கிவந்து அதின்மேல் சுடலைக்கருவும் ஜெகஜால மையையும் பூசி கலசத்தில் அந்த வேரைப்போட்டு கொள்ளியை தியானித்து காட்டில் கொண்டுபோய் புதைத்துவிட காடுகாய்ந்து உலர்ந்துவிடும் புதைத்த கலசத்தை எடுத்தால் காடு துளுக்கும்.

476. காட்டை தழைக்கச் செய்யும் வித்தை.

புலித்தொடங்கி யென்னும் செடிக்கு நல்லமுகூர்த்தத்தில் மஞ்சள் நூல் காப்புகட்டி பலிபூசை முதலானதுங் கொடுத்து வேரைப் பிடுங்கிவந்து அதின்மேல் அஷ்டமாசித்திமையும் ஐங்கோலக் கருவையும் பூசி கலசத்திற்போட்டு பைரவர் மந்திரமோதி காட்டிற் கொண்டுபோய் புதைக்க காய்ந்துகிடக்கும் காடாயினும் துளுத்து செழித்தோங்கும்.

477. கரும்பு கொல்லையை கருகச்செய்யும் வித்தை.

பேய்முட்டிச்செடிக்கு மஞ்சள்நூல் காப்புகட்டி குளியை தியானித்து தூபதீபங்காட்டி வேரைப் பிடுங்கிவந்து அதின்மேல் சுடலைக்கருவைப்பூசி தம்பன மையையுந்தடவி கலசத்திற் போட்டுமூடி கரும்பு பயிராகுங் கொல்லையில் கொண்டுபோய் புதைத்துவிட கரும்பு பயிராகாது அப்படியாகினும் எல்லாம் சொத்தை விழுந்து உலர்ந்துப்போகும். புதைத்தகலசத்தை எடுத்துவிட்டால் எப்போதும்போல் பயிராகும்.

477. கரும்பு கொல்லையை விருத்திசெய்யும் வித்தை.

சிரியாணங்கை செடிக்கு மஞ்சள் நூல் காப்புகட்டி வாலைமந்திரத்தை நூற்றியெட்டு ஓதி அஷ்டமாசித்தி மையை அந்த செடிமேல் கொஞ்சம் தெளித்துவிட்டு வந்துவிடவும் மறுவாரம் அந்நாளில் காப்புகட்டினயோ அந்த கிழமையில் சென்று பொங்கலிட்டு பலிகொடுத்து பூசை முதலானதும்போட்டு வேரைப் பிடுங்கிவந்து உச்சாடனமையும் ஐங்கோலக் கருவையும் வேரின்மேல் பூசி கரும்பு கொல்லையில் கொண்டுபோய் புதைத்துவிட கரும்பு நன்றாய் கனத்து ஓங்கிவளர்ந்து தழைக்கும்.

479. வெத்திலைக்கொடி காய்ந்துபோகச் செய்யும் வித்தை.

வேளைச்செடிக்கு கிராணத்தில் மஞ்சள்நூல் காப்புகட்டிவிட்டு வந்துவிடவும், பிறகு விருச்சிக லக்கினத்திற்சென்று பலிபூசை முதலானதும் போட்டு அதின் வடக்குப்போகும் வேரைப் பிடுங்கிக் கொண்டுவந்து அதின்மேல் சுடலைக்கருவும் ஜெகஜாலக்கருவும் பூசி குறளியைதியானித்து கலசத்திற் போட்டுமூடி வெத்திலை தோட்டத்திற் கொண்டுபோய் புதைத்

துவிட்டு வந்துவிட அந்ததோட்டம்பாழாவதுடன் கொடிகளெல்லாம் கருகிப்போகும் வெத்திலை துளுர்க்காது புதைத்த கலசத்தை எடுத்துவிட எப்போதும்போல் துளுக்கும்.

480. வெத்திலை தோட்டத்தை விருத்திசெய்யும் வித்தை.

எத்தை சொன்னாலும் கேழ்க்கும் நத்தைச்சூரி யென்னும் செடிக்கு ஆதிவாரத்தில் மஞ்சள்நூல் காப்புகட்டி பொங்கலிட்டு பலிகொடுத்து பூசை முதலானதும்போட்டு அதின் வேரைப் பிடுங்கிவந்து அதின்மேல் ஐங்கோலக் கருவைப்பூசி கலசத்திற் போட்டுமூடி பைரவர் மந்திரத்தை நூத்தியெட்டு ஓதி வெத்திலை தோட்டத்திற் கொண்டுபோய் யீசான்னிய மூலையில் புதைத்து விட்டுவர தோட்டம் நாளுக்குநாள் விருத்தியாகி கொடிகள் தழைத்து கிளைத்தோடி வெத்திலை விசேஷமாக துளுக்கும்.

481. மாந்தோப்பை பாழாக்கும் வித்தை.

கள்ளிச்செடிக்கு செவ்வாய்கிழமையில் மஞ்சள் நூல் காப்புகட்டி பலி பூசை முதலானதுங் கொடுத்து அதின்வடக்குபோகும் வேரைப்பிடுங்கி வந்து சுடலைக்கருவும் பேதனமையையும் அதின் மேல் பூசி கொள்ளியை தியானித்து கலசத்திற்போட்டு மூடிதழைத்தோங்கிய மாந்தோப்பிற்கொண்டுபோய் புதைத்துவிட அந்ததோட்டம் பாழாவதுடன் அங்குள்ள மரத்தில் காய்கள் காய்க்காது அப்படிக் காய்க்கினும் பூ பிஞ்சி யாகயிருக்கும்போதே கருகிப்போகும் புதைத்த கலசத்தை எடுத்து விட்டால் எப்போதும் போலாகயிருக்கும்.

482 மாந்தோப்பை விருத்திசெய்யும் வித்தை

சிவப்புபசளை செடிக்கு ஆதிவாரமும் பிருவமுங் கூடியதினத்தில் மஞ்சள்நூல்காப்புகட்டி பொங்கலிட்டு பலிகொடுத்து பூசைமுதலானதும் போட்டு வேறை அறுமல் பிடுங்கிவந்து அதின்மேல் அஷ்டமாசித்திமையும் ஐங்கோலக்கருவும் உச்சாடனமை இம்மூன்றையும் பூசி வாலைமந்திரம் நூத்தியெட்டு ஓதி முன்போல் கலசத்திற்போட்டு மூடி மாந்தோப்பிற்கொண்டுபோய் நிருத்தி மூலையில் புதைத்துவிட மாந்தோப்பு நாளுக்குநாள் விருத்தியாகி விசேஷமாக காய்கள் காய்த்துப் பழம்பழுக்கும்.

483 பூந்தோட்டத்தை கருகிப்போகச் செய்யும் வித்தை.

தொட்டாசிணிங்கி செடிக்கு அமாவாசையில் மஞ்சள் நூல்காப்புகட்டி வராகிமந்திரத்தை நூத்தியெட்டு வோதி அதின் வேரைப்பிடுங்கி வந்து சுடலைக்கருவும் ஸ்தம்பனமையையும் அதின்மேல் பூசி பைரவரை தியானித்து கலசத்திற்போட்டு பூந்தோட்டத்திற் கொண்டுபோய் புதைக்க பூந்தோட்டம் கருகி தீய்ந்துப்போவதுடன் என்னபிறையாசை பட்டாலும் புஷ்பங்கள் பூர்க்காது அப்படி பூர்க்கினும் கருகி அழிகிப்போகும் மணமிராது புதைத்ததை எடுத்துவிட்டால் முன்போல் பூர்க்கும்.

484 பூந்தோட்டத்தை விருத்திசெய்யும் வித்தை.

மஞ்சள்செடிக்கு ஆதிவாரத்தில் மஞ்சல்நூல் காப்புகட்டி வாலைமந்திரத்தை நூத்தியெட்டு ஓதி பலி பூசை முதலானதுங் கொடுத்து வேரையும் கிழங்கோடு பிடுங்கிவந்து ஐங்கோலக்கருவையும் அதின் மேல்பூசி அனுமாரை தியானித்து கலசத்திற் போட்டுமூடி பூந்தோட்டத்திற் கொண்டுபோய் குபேரமூலையில் புதைக்கப் பூந்தோட்டம் நாளுக்குநாள் விருத்தியாவதுடன் விசேஷமாக புஷ்பிக்கும் பரிமளமும் அதிகமாக இருக்கும்.

485 தாமரையை அழுகச்செய்யும் வித்தை.

கருஊமத்தன்செடிக்கு செவ்வாய்க்கிழமை மஞ்சள்நூல் காப்புகட்டி கொள்ளியைதியானித்து பூசைமுதலானதும்போட்டு அதின்வேரைப்பிடுங்கிவந்து சுடலைக்கருவும் தம்பனமையையும் அதின்மேற்பூசி மாடன்மந்திரத்தை நூத்தியெட்டு ஜெபித்து கலசத்திற்போட்டு மூடி தாமரைதழைத்தோங்கி இருக்கும் தடாகம் மடுவுமுதலான யிடங்களில் இதைகொண்டுபோய்போட அந்த தடாகத்திலுள்ள தாமரைகளெல்லாம் அழிகிப்போகும் போட்டகலசத்தை எடுத்துவிட்டால் மருபடியும் மூன்போல் தழைக்கும் புஷ்பிக்கும்.

486 தாமரையை தழைக்கசெய்யும் வித்தை.

நீர்முள்ளிசெடிக்கு ஆதிவாரத்தில் மஞ்சள்நூல்காப்புகட்டி பொங்கலிட்டுப் பூசைபோட்டு பலிகொடுத்து வாலைமந்திரத்தை நூத்திஎட்டோதி வேரைப்பிடுங்கிவந்து ஐங்கோலக்கருவும் அஷ்டமாசித்திமையையும் அதின்மேல்பூசி பைரவனை தியானித்து கலசத்திற்போட்டு மூடி தாமரைதடாகத்திற் போட்டுவிட முன்னிருப்பதுடன் அதிகமாக படர்ந்துவிருத்தியாகி புஷ்பங்களும் புஷ்பித்துதழைக்கும்.

487 புளியமரத்தோப்பை உலரச்செய்யும் வித்தை.

சுணைக்கோரைச்செடிக்கு செவ்வாய்க்கிழமையும் அமாவாசையும் கூடிய தினத்தில் மஞ்சள்நூல்காப்புகட்டி மாடன்மந்திரத்தை நூத்தியெட்டு ஓதி பொங்கலிட்டு பூசைபோட்டு பலிகொடுத்து வேரைப்பிடுங்கி வந்து சுடலைக்கருவையும் மாரணமையையும் அதின்மேல் பூசி கலசத்திற்போட்டு மூடிகொள்ளியை தியானித்து புளியமரம் விசேஷமாக யிருக்குந்தோப்பிற்குள் மத்தியில் புதைத்துவிட அத்தோட்டம் பாழாவதுடன் மரங்களெல்லாம் உலர்ந்துபோகும் பூவெடுத்துக் காய்காய்க்காது அப்படிகாய்க்கினுங் கருகிப்போகும்.

488 புளியமரத்தோப்பை விருத்தியாகசெய்யும் வித்தை.

பூலைக்காவிச்செடிக்கு பூரணைபருவமும் ஆதிவாரமும் கூடியதினத்தில் மஞ்சள்நூல்காப்புகட்டி வைபாவர்மந்திரத்தை நூத்தியெட்டோதிபொங்கலிட்டுப் பலிகொடுத்து பூசைமுதலானதும் போட்டுவேரைப் பிடுங்கிவந்து அஷ்டமாசித்திமையையும் ஜங்கோலக்கருவும் உச்சாடனமை இவை மூன்றையும் வேரின்மேல்பூசி வாலையையுயாணித்து கலசத்திற்போட்டு புளியந்தோப்பில் முன்போல் வைத்துவிட அங்குள்ள புளிய மரங்கள் யாவும் விருத்தியாகி விசேஷமான காய்கள் காய்த்துப்பழும்பழுக்கும் அத்திப்புழுகு சொத்தை இவைகள் ஆகாது.

489 பாக்குமரந்தோப்பை பாழாகச்செய்யும் வித்தை.

கண்டங்கத்திரி செடிக்கு கிரானைத்தில் மஞ்சள்நூல் காப்புகட்டி மாடன்மந்திரத்தை நூத்தியெட்டு ஜெபித்து பலிபூசைமுதலானதும் செய்து அதின்வடக்குப்போகும் வேரைப்பிடுங்கிவந்து சுடலைக்கருவையும் மாரணமையையும் வேரின்மேல்பூசி வாராகியையுயாணித்து கலசத்திற்போட்டு பாக்குமரம் விசேஷமாக இருக்கும் தோப்புக்குள் இதைகொண்டுபோய் அக்கினி மூலையில் புதைத்துவிட பாக்குமரமெல்லாம் பட்டுபோவதுடன் பாளைவிடாது பாக்கு உண்டாகாது அப்படிப்பாளை விடினும் கருகிப்போய்விடும் புதைத்ததை எடுத்துவிட்டால் எப்போதும் போல் பாளைகள் விட்டுப்பாக்குகாய்க்கும் விசேஷப்படாது.

490. பாக்குமரந்தோப்பு விருத்தியாக்கும் வித்தை.

நின்றுவாடிச்செடிக்கு வளர்ப்பிறையில் ஆதிவாரத்தில் மஞ்சள்நூல் காப்புகட்டி பொங்கலிட்டுப் பலிகொடுத்து பூசைப்போட்டு மகாகாளி மந்திரத்தை நூத்தியெட்டு ஜெபித்து வேரையறாமல் பிடுங்கிவந்து ஜங்கோலக்கருவும் அஷ்டமாசித்திமையும் உச்சாடனமையும் வேரின்மேல் பூசி வாலையைதியாணித்து கலசத்திற்போட்டு மூடி பாக்குமரம் தோப்பிற்கொண்டுபோய் முன்போல் புதைத்துவிட அங்குள்ள பாக்குமரங்கள் நாளுக்குநாள் விருத்தியாகி விசேஷமகப் பாளைகள் விட்டுப்பாக்குக்காய்க்கும்.

491. பலவிதமான மரங்கள்நிறைந்த தோட்டத்தை பாழாக்கும் வித்தை.

சொல்லைக்குப்பல்லி யென்னும் செடிக்கு அம்மாவாசையும் ஆதிவாரமும் விருட்சிகலக்கினமுங் கூடிய தினத்தில் மஞ்சள்நூல் காப்புகட்டி வாராகி மந்திரத்தை நூத்தியெட்டு ஜெபித்து பொங்கலிட்டு பலிகொடுத்துப் பூசைப்போட்டு அந்தசெடியை சமூலத்தோடுப்பிடுங்கிவந்து சுடலைக்கருவும் தம்பனமையும் பூசி மாடன் மந்திரத்தை நூத்தியெட்டோதி கலசத்திற்போட்டுமூடி பலவிதமரங்களும் நிறைந்திருக்கும் தோப்புக்குள் இதை

கொண்டுபோய் ஈசான்னிய மூலையில் புதைத்துவிட அத்தோட்டம் பாழாகப்போவதுடன் அங்குள்ள ஒவ்வொருமரமும் காய்ந்துக்கரிகிப்போகும் அப்படிப்பூத்துக் காய்கினும் அழுகி உதிர்ந்துப்போகும் புதைத்ததை தோண்டியெடுத்துவிட்டால் தோட்டம் முன்போல் செழிக்கும் ஆனால் இப்படிசெய்து மகாதோஷமாகையால் வித்தையை பரிட்சித்து பார்த்து உடனே புதைத்ததைதோண்டி யெடுத்துவிடவேண்டும்.

492. பலவித மரங்கள்நிறைந்த தோட்டத்தை விருத்திசெய்யும் வித்தை.

தண்ணீர்விட்டான் கிழங்கின்செடிக்கு பூரணபருவமும் சுக்கிரவாரமும் கன்னியாலக்கினமுங்கூடிய தினத்தில் மஞ்சள்நூல் காப்புகட்டி பொங்கலிட்டுப்பலிகொடுத்து பூசைமுதலானதும் போட்டுவாலைமந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து வேரைப்பிடுங்கிவந்து ஜங்கோலக்கருவும் அஷ்டமாசித்திமையும் உச்சாடனமை இம்மூன்றையும் வேரின்மேல் பூசி கலசத்திற்பொட்டு மூடிபைரவனைத்தியானித்து இதை கொண்டுபோய் பலவிருட்சங்களும் நிறைந்துள்ள தோட்டத்தில் மத்தியில் புதைத்துவிட அத்தோட்டமானது நாளுக்குநாள் விர்த்தியாகும் பலவிதமானமரங்களும் காய்களை காய்க்கும்.

493. வேறுமுறை தண்ணீர்மேல் நடக்கும் வித்தை.

தன்னோடுகூட சிலரை அழைத்துக்கொண்டு தண்ணீர் நிறைந்துள்ள தடாகத்தின் அருகிற்சென்று தன்னுடன் வந்தவர்களைப்பார்த்து இந்த தடாகத்திலுள்ள தண்ணீரின்மேல் நடந்துபோகுறேன் பாருங்களென்று ஆஞ்சநேயரை தியானித்து ஒருவருக்குந் தெரியாமல் கண்கட்டுமையை விரலில்தொட்டு நெத்தியில் திலர்தமிட்டுக்கொண்டு அனைவரும்பார்க்க நீக்கறையின்பேறில் நடந்துபோனால் பார்ப்போர்களுக்கு தண்ணீரின்மேல் நடந்துபோவதுபோலிருக்கும் பார்ப்போர்பிர்மித்து ஆச்சரியப்பட்டு இது கங்காபவானிவசியமென்பார்கள்.

494. பூதப்பசாசுகளை ஆட்டும் விநோதவித்தை.

சொரி தவளையைப் பிடித்துவந்து சாம்பிராணியைப் போதுமான மட்டும் அதின்வாயின் வழியாகச்சேர்த்துவாயைத்தைத்து புகையூரும்படியாக தலைக்கீழாகக்கட்டி ஒரு மண்டலம் வரைக்கும் தொங்கினபின்பு அதையெடுத்து அதனுள்செலுத்தின சாம்பிராணியை எடுத்துக்கொண்டு அதினுடன் தலைமஞ்சக்கொடியைச் சேர்த்துவைத்துக் கொள்ளவும் பேயாட்டவேண்டில் மேற்படி சாம்பிராணியை நெருப்பில் போட்டு அதில் வரும்புகையை அவர்கள் நாசிக்கேரும்படியாக பிடிக்க புகையேறினமாத்திரத்தில் பிசாசு பூதம் தேவர் சடாமுனி வாழ்முனிசெம்முனி கருமுனி

கருப்பான்பிர்மராட்சதன் குட்டிச்சாத்தான் லாடமுனி சப்பாணி இவை
பிடித்தப்பேர்கள் தலையைவிரித்து ஆடி பேரும்ஊரும் சொல்லுவார்கள்.
உடனே செய்யவேண்டிய சடங்குகள் எல்லாம்செய்து முடித்துக் கொள்
ளவேண்டும்.

495. தேவதைகளை ஆட்டும் வித்தை.

மனிதருடைய அஸ்தி கழுதையினுடைய அஸ்தி கழுதையின் தன்
டுச்சீலை மனிதருடைய மலம் பன்னியின் அஸ்தி காக்கணம் வேர் சிந்தில்
வேர் குப்பமேனிவேர் முட்டை கொஞ்சமும் இவை முதலானதும் சேர்
த்து இடித்து வைத்துக்கொண்டு புகைபோட தேவதைகள் முதலானதும்
தேவர்களும் மருள்பிடித்தவர் போலாடுவார்கள். பார்ப்போர்கள் உன்னை
மகாமந்திரவாதியென்று மதித்துக் கொண்டாடுவார்கள்.

496. தேவர்கள் திருநடனமாடும் ஜாலம்.

உச்சாடன சக்கரத்தைக்கீறி பிராமண ஜாதியில் பிரம்மாச்சாரியா
யிருக்கப்பட்டவன் இறந்தபின் அவனை கொண்டுப்போய் தகனம் செய்து
மறுநாள் காடாற்று முன்னமே நீ போய் அஸ்தியில் ஒன்று எடுத்துவந்து
வைத்து பேர்வாங்கி வராகிமந்திரத்தை ஒரு லட்சம் ஓதி சக்கரத்தை
தேவாலயங்களுக்கு முன்னும் தேவர்கள் முன்னும் புதைத்துவைத்து அஸ்
தியை அவர்க்கு முன்புவைத்து பலிபூசை முதலானதும் செய்வாயாகில்
தேவர்கள் திருநடனமாடுவார் அப்போது நாம் கேட்டவாறும் கொடுப்
பார்கள். அதைப்பார்க்க ஜெனக்கூட்டமும் திரளும்.

497. ஒருவரை கோட்டினதேள் விஷத்தை இன்னொருவர்க் கேற்றியிறக்கும் வித்தை.

செம்பொத்தியினுடைய நாக்கும் உடும்பினுடைய நாக்கையுங்கூட்டி
அதனுடன் கீழ்காய்நெல்லி காமப்பால் விராகன் ஒன்றும் சேர்த்து இவை
களையெல்லாம் ஆண்கழுர்ச்சிக் காயினுள் செலுத்தி கிரானம் தீண்டும்
போது எடுத்து கொக்கின் மொழுக்கால் மூடிவைத்துக் கொள்ளவும்.
தேள்கடித்துவந்த பேர்களை கையை நீட்டச்சொல்லி மேற்படிக் கழற்சிக்
காயைக்கொடுத்து உடனே அதை இன்னொருவர் கையில்கொடுக்க அந்த
விஷமானது இவனைவிட்டு அவன்மேல் போகும் அப்போது அவன்தே
ளின்விஷமேறி நடுநடுங்கி அழுவான் கொட்டினபக்கம் தெரியானதுக்கட்
டும் அப்போது நீ காயைக் கீழே போடென்று சொல்ல போட்டவுடன்
விஷமானது இறங்கிவிடும் ஆனால் இப்படி எத்தனைபேர்கள் மீதிலேனும்
ஏற்றியிறக்கலாம்.

498. வேறுமுறை பேயாட்டல்.

பேயாட்டும் மூலமந்திரம் யெவ்விதமெனில் லங் சிங் வயநமவென்று
லட்சம் உருஜெபிக்க உடனே பிசாசு பூதம் இவைகள் முதலானதும்
அழுது அலறிஓடும்.

499. உடுக்கைகட்டும் வித்தை.

உடுக்கையை கட்டும்விதமெவ்விதமெனில் சிவன் ஆனை பகவதியானை
ஜ[illegible]லியும் சவ்வும் கட்டு மதவாரணகட்டு ஐயும் கிலியும் சுவாகாவென்
றுஜெபித்து ஆதியந்த மூலங்கட்டென்று ஜெபித்த உடன் உடுக்கையைக்
கட்டிவிடும் எவ்விதமாக அடித்தாலும் ஓசைகிளம்பாது.

500 வியாதிபோக்க வித்தை.

சகலவியாதிகளையும் போக்கவேண்டில் தியானம் அளி அளி உன்னி
ருக்கண்ணிற் பின்அளி என்று ஜெபித்து காச்சல் தலைவலி முதலானது
ம்பரக்தோடச் செய்வாய் சுவாமி குருவானை போவென்று விபூதி மந்திரி
த்துக் கழுப்புகள் பலபிணிகளும் அகன்று போகும் உன்னையும் புகழ்
வாகள்.

401. பார்வைமை.

பார்வைமை செய்யும் முறையெவ்விதமெனில் ஆமை ஒன்று தவளை
ஒன்று கோழிமுட்டை ஒன்று மனிதரை புதைத்த எலும்பு பலம் இரண்டு
ஈசல் பலம் இரண்டு நிலயாகை விதை பலம் இரண்டு மரக்கொடி விரா
கன் மூன்று இவைகளை எல்லாம் சேர்த்து தயிலம் வாங்கி ஆழமுள்ளக்
கல்வத்திற்போட்டு அத்துடன் ஆஞ்சனக்கல் விராகன் ஒன்று சேர்த்து
அள்காட்டி குரிவியின் முட்டைநெய் கொஞ்சம்விட்டு ஒருஜாமம் நன்றாய்
அறைத்து வழித்து சிமிளில்வைத்து அனுமாரையும் ஆஞ்சனை தேவியை
யும் பூசைசெய்து பின்பு மையை எடுத்து பார்ப்பாயாகில் களவுமுதலா
னதுடன் யேவல் தொழில்முறை தெய்வம் பூதம் பிசாசு ராட்[illegible]க்கணங்
கள் ஒருவன்செய்யும் மோடியும் இவை முதலானதும் கண்ணிற்கு நன்று
ச்த்தோற்றும் நேராகப்போய் கண்டுபிடிக்கலாம் ஒருவருக்கும் தீரமாகச்
சொல்லாம்.

502. வசிய அஞ்சனம்.

ஊசிகாந்தம் நீலம் ஆமை மஞ்சள் வேசியினுடைய் கைவெத்தி[illegible]
க்கழுணீர்வேர் தலைமஞ்சள்கொடி கோரோசனை குங்குமப்பூ இவைகள்
வகைக்கு விரா[illegible] ஒன்றும் நிறுத்து எடுத்து குழிஅம்மியிலிட்டு மாடப்
புறா ஒன்றை அருத்து அதின்ரத்தம் முழுமையும் விட்டு செகப்பு பசுவின்
வெண்ணை விராகன் பணிரண்டும் இவைகளை அதில் விட்டு தவராமல் மூன்
றுநாள் அறைத்து எடுத்து சிமிளில்வைத்து காளிகோயில் முன்பாகக்கொ
ண்டுபோய் புதைத்துவைத்து எட்டுநாள்பொருத்து எடுத்து அத்துடன்

புனுகும் சவ்வாதும் வகைக்கு விராகன் ஒன்றுசேர்த்து மத்தித்து வைத்துக்கொள்ளவும் இதற் ஜெபிக்கும் மூலமந்திரம் சர்வலோக வசி கரி ஓம் என்று ஆயிரத்தெட்டு ஜெபித்து நெற்றியில் திலர்தமிட்டுக் கொள்ள புருஷர்கள் பெண்கள், நீகேட்டதையெல்லாந் தருவார்கள் உனக்கு உண்டாகிஇருக்கும் பகையெல்லாம் நசிந்துப்போகும் உன்மேல் ஒரு குற்றமும் நேராது.

503. பாதாள அஞ்சனம்.

பாதாள அஞ்சனம் கூட்டும்முறை யெவ்விதமெனில் வேரில்பழுத்து வெடித்த பலாபழத்தின் கொட்டையைக் கருக்கிவிராகனிடை பத்து எடுத்து அத்துடன் அஞ்சனபாஷாணம் விராகன் ஒன்றும் சேர்த்து கல்வத்திலிட்டு விளக்கெண்ணை விட்டு அறைத்து ஒருஜாமமும் நன்றாய் அறைத்து வழித்து சிமிழில் வைத்து அஞ்சனதேவிக்கும் அனுமானுக்கும் பூசைசெய்தபின்பு மையை கையில்விட்டுப்பார்க்க ஜெகத்திலுள்ள நிதிகள் யாவும் தோற்றும் எடுத்துக்கொள்ளலாம் பாதாளத்திலுள்ளப் பொருளையும் கண்ணுக்கு நேராகக்கண்டு எடுக்கலாம்.

504. வேறுமுறை மாரணம்.

மாரணம்செய்வது கொடிய பாதகமாயினும் செய்யவேண்டில் மாரணசக்கரத்தைக்கீறி எதிரியின் சிருநீரும் மலமும் காலடிமண்ணும் கருவும் சேர்த்து அறைத்து சக்கரத்திற்பூசி அதிலவன்பேறை எழுதி அந்தசக்கரத்தை பாம்பின்வாயில்வைத்து அதை தலைகீழாகத்தூக்கிகட்டி பிரகு எலுமிச்சம்பழஞ்சாறும் நெய்யும் சேர்த்து ஓமம் வளர்த்தி அதில் அந்தப்பாம்பைவெட்டி போட்டு தென்முகமாக வைத்துக்கொண்டு ஜெபிக்கும் மந்திரமாவது மசி நசி என்று எட்டுநாளும் இருவேளையும் மரவாமல் உருஜெபித்துவையானல் உனக்கெதிரியாருனாலும் க்ஷிஷத்தில் மரணமாகுவார்.

505. வேறுமுறை போதனம்.

பேதனம்செய்யவேண்டில் இரட்டை ஊமத்தன்காயைக் கொண்டுவந்து எதிரியினுடைய இடதுகால் மண்ணும் எடுத்து அதிற்செலுத்து எதிரியினுடைய பெயரையெழுதி பேதனமந்திரத்தை ஓதி அவனிருக்கும் ஊரின் மயானத்திற் கொண்டுபோய் புதைக்கும்போது அட்டலைக்கருவை யதின்மேற்பூசிப் புதைக்கவும் புதைத்தவுடன் எதிரிக்கு பக்கத்திற்பிரமேகத்துடன் அனேக வியாதிகள் தோற்றி பாதைசெய்யும் தேகதேசமெங்கும் சுற்றிமான்வான் அனைவரும்பார்த்து பழித்துச் சிரிப்பார்கள். அவன் பதைபதைத் தழுகுவான் அப்படி அழுது உன்னை வணங்கி வருவானாகில் புதைத்ததை எடுத்து ஆற்றிவிட எதிரியினுடையப் பிணியானது நீங்கி சுகப்படுவான் உன்னையும் புகழ்ந்துக் கொண்டாடுவார்கள்.

506. வேறுமுறை வித்துவேஷணம்.

வித்துவேஷணம் செய்யவேண்டில் வேப்பன் மரத்தின்மேல் கட்டியிருக்கும் காக்கையின் கூடும், கழுதையுடைய சடையும் மங்கிலிய ஸ்திரீ அறுத்தக்கயறும் மஞ்சுகொட்டியில் அறுந்துப்போனநரம்பும் பன்றிரோமமும் பித்தநசம் பித்தக்கூடையும் மூறமும் இதை முச்சந்தி மண்ணிற்கொண்டு அடுப்பில்வைத்து நீ தெற்குமுகமாக நிர்வாணரூபமாக நின்று சுட்டு சாம்பலாக்கி அதில் அருகோண சக்கரத்தைக்கீறி அதனுள் நாமகியென்று எழுதிஓதும் மந்திரமாவது ஹும் ஹாம் ஹ்ரீ ஓம் நசி நசி என்று ஓதி எடுத்துவந்து எதிரியினுடைய பெயரை யெழுதி அவன் வசிக்கும்படியான வீட்டின் இரம்பில் கொண்டுபோய் வைக்க புருஷனும் பெண்ஜாதியும் தாம் வாழும் பதியைவிட்டு வெவ்வேறாகப் பிரிந்துப்போவார்கள்.

507. இதுவுமது வேறுமுறை வித்து வேஷணம்.

மேற்சொன்னபடி நரம்பும் எலும்பும் மயிரும் சுடுகாட்டியினுடையச்சாம்பலும் உடும்பினுடையத் தோலும் நாய் பல்லும் இவை முதலானதும் ஒன்றாய்சேர்த்து எட்டிப்பலகையில் மாடன் செய்து புதுகலசத்தில் வைத்து மேற்சொன்ன வகைகளையெல்லாம் தனிற்போட்டு மாடன் மந்திரத்தை ஓதக்கேட்பாயாக வண்ணார உதிரமாடன் அக்கினி சாமுண்டி விந்தையாகப்பார்க்க கருகருத்தாற்போலும் குறங்குபோலும் பூனைபோலும் புலிபோலும் கரடிபோலும் பன்றிபோலும் தோற்ற மாவதுடன் பேய்போலும் பூதம்போலும் பிடித்து இழுத்துக் கடிப்பதுபோற் செய்குவான் மாடன் அந்த மாடனை மரவாமல் பூசைசெய்து எதிரியின்முன் மேற்படிக் கலசத்தைக் கொண்டுபோய் உடைத்துவிட எதிரியின் குலம் நாசமாகும் வியாதியில் வாதைப்படுவார்கள் மாடுகன்றுகளும் சேதமாகும் திரவியமும் அழிந்துப்போய்விடும் ஆண்மையும் ஆங்காரமும் குன்றும் அன்றியும் எதிரியினுடையப் பெயரை காரியத்தகட்டில் எழுதி ஐயனார் அமர்ந்து அதின்மேற்பூசி கலசத்திற்போட்டுவிடவும் சத்துருக்களானபேர்கள் உன்னை வணங்கி வருவாராகில் மேற்படி தகட்டையெடுத்து பாலிற்போட்டு கழுவி ஓடுகின்ற ஜலத்தில் போடுவாயானல் எதிரிகளுக்கு மேற்சொன்ன வியாதிகள் யாவும்நீங்கிசுகப்படுவார்கள் உன்னையும் புகழ்ந்துக் கொண்டாடுவார்கள்.

508. பூமியைகையால் தட்டினவுடன் பூமிவெடித்துப் பூதங்கள் புறப்படும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்திலாவது இன்னமெந்த இடங்களிலாவது அங்குள்ள பெயர்களைப்பார்த்து இதோஉங்கள் அனைவருக்கும் முன்னே இங்கு பூமியைக்கையால் தட்டுகிறேன் பூமியானது வெடித்துப் பூதகூட்டங்களைப்

புறப்படச் செய்கின்றேன் பாருங்களென்று ஒருவருக்கும் தெரியாமல் ஜெகச்சாலக் கருவை விரலில்தொட்டு மயானருத்திரியின் மந்திரத்தை நூத்தியெட்டு ஓதி அம்மனீ மயானருத்திரியே இப்போது பூமியானது வெடித்து பூதகூட்டங்கள் புறப்பட்டு வருவதுபோல் தோற்றமாகச் செய்வாயென்று மனதில் நினைத்து ஜாலக்காளைத் தியானித்து சபையோர்கள் பிரமிக்கும்படியாக சல் மலையாளபகவதி என்று கருவைதொட்டு வைத்திருக்கும் வலதுகையால் பூமியை ஓங்கித்தட்ட உடனே பூமியானது ப[illegible]ன்று வெடித்தாற்போலும் அதினுள்ளிருந்து பூதக்கூட்டங்கள் பிரவேசமாவதுபோலும் தோற்றப்படும் அப்போது அங்கு வேடிக்கைப்பார்த்திருந்தபேர்கள் யாவரும் மிரண்டு ஒருவர்மேலொருவர் விழுந்து ஓடுவார்கள் அப்போது நீ அவர்களை ஓடவொட்டாமல் தடுத்து மறுபடியும் சபையோர்களைப்பார்த்து இப்போது இந்த பூதங்களையெல்லாம் வந்தவழியாக பூமிக்குள் போகும்படி செய்கிறேன் பயப்படாமல் நின்று பாருங்களென்று உடனே ஒருவருக்கும் தெரியாமல் ஐங்கோலக் கருவைக் கையிற் தொட்டுக்கொண்டு பைரவர் மந்திரத்தை நூத்தியெட்டு ஜெபித்து முன்போல் சல் மலையாளபகவதி பூதங்களை பூமிக்குள் போகச்செய்யடியென்று பூமியைத் தட்ட பூதங்களெல்லாம் பூமிக்குள் இறங்கி விட்டாற்போலும் வெடித்த பூமி மூடிக்கொண்டாற் போலும் பார்ப்போர்களுக்குத் தோற்றமாகும். அப்போது அனைவரும் ஆச்சரியப்பட்டு உன்னைப் புகழ்வார்கள்.

509. தடாகத்திலுள்ளத் தண்ணீரையெல்லாம் குடிக்கும் ஜாலம்.

தண்ணீர் நிறைந்துள்ள தடாகத்தின் அருகிற்சென்று தன்னுடன் வந்தவர்களைப் பார்த்து உங்கள் முன்பாகவே இந்த தடாகத்திலுள்ளத் தண்ணீர் யாவையும் குடித்து விடுகிறேன் பாருங்களென்று கண்கட்டு மையை விரலில்தொட்டு திலதமிட்டுக்கொண்டு வாலைமந்திரத்தை நூத்தியெட்டு ஓதி அஷ்டமாசித்தி மையை விரலில்தொட்டு சாமுண்டியை தியானித்து அந்த மையை தடாகத்தண்ணீரில் தெளித்து நீ குளத்தின் படிகட்டிலிறங்கி சல் மலையாளபகவதி இந்த தடாகத்திலுள்ளத் தண்ணீரையெல்லாம் என்வயற்றிற்குள் போகச் செய்யடியென்று மனதிலெண்ணி யெல்லாரும் கேட்கும்படியாக உரக்கச்சொல்லி நீ தண்ணீரில் வாயை வைத்துக்கொண்டு ஒரு நாழிகைப்பரியந்த மிருக்க பார்ப்போர்கள் யாவருக்கும் குளத்துத் தண்ணீரையும் குடித்து விட்டானென்று மதிமயங்கி ஆச்சரியப் படுவார்கள். அப்போது நீ அவர்களைப் பார்த்து இப்போது யான் குடித்த தண்ணீரையெல்லாம் குளத்தில் வரும்படிச் செய்கிறேன் பாருங்களென்று காளியை தியானித்து ஒருவருக்குந்தெரியாமல் ஐங்கோலக்கருவை விரலில்தொட்டு மேற்படி தடாகத்திற் றெளித்து ஆவென்றுக் கக்குவதுபோல் கக்கி தந்திரமாக நெற்றியிலிட்டுக் கொண்டிருக்கும்

திலதத்தை துடைத்துவிட எப்போதும்போல் தடாகத்தண்ணீர் தோற்றும் அனைவரும் ஆச்சரியப்படுவார்கள்.

510. கிணத்தில் போட்ட மோதிரத்தை அழைப்பிக்கும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் வேடிக்கைப் பார்க்கவந்திருப்பவர்கள் கையில் போட்டிருக்கும் மோதிரம் ஒன்றை நீவாங்கி அவர்களைப்பார்த்து இதோ இந்த மோதிரத்தை உங்கள் அனைவருக்கும் முன்பாகவே ஒரு துணியில் முடிந்து இந்த கிணத்திற்போட்டுவிடுகிறேன் மறுகிணத்தில் ஜலமொண்டு வருவீராகில் அதிலந்த மோதிரத்தை வரும்படி செய்கிறேன் பாருங்களென்று ஒருவருக்கும் தெரியாமல் தந்திரமாக கண்கட்டு மையை[illegible]ட்டு மேற்படி மோதிரத்தின் மேற்தடவி பூமியின்மேல் வைக்க அது ஒருவர்கண்ணிற்கும் தெரியாமலிருக்கும் நீ உடனே அம்மாதிரியான ஒரு மோதிரத்தை எடுத்து அனைவருக்குங்காட்டி ஒருதுண்டு[illegible]த்துணியில் முடிந்து ஒருவர்கையில் கொடுத்து அவர்களுக்கு இஷ்டமான கிணத்திற் போட்டு வரும்படியாகச் சொல்ல அப்படியே அவன் போட்டுவிட்டு வந்தவுடன் அவன் கையிலேயே ஒரு சிறியசொம்பைக் கொடுத்து அந்த கிணர் தவிர இன்னம் எந்த கிணத்திலாவது ஜலம்மொண்டு வரும்படியாகச் செய்து மொண்டுவந்தவுடன் மேற்படிமோதிரத்தை தந்திரமாக மையைத் துடைத்துவிட்டு அந்த சொம்பு ஜலத்திற்குள் போட்டு அவனையே கை போட்டு மோதிரம் இருக்குதா பாரென்றுசொல்ல அவன் கைபோட்டு மோதிர மிருக்குதென்று எடுத்துக்கொடுக்க அனைவரும் சந்தோஷமடைந்து இது கட்டிச்சாத்தான் வேலையென்றுப் புகழ்வார்கள்.

511. ஒருவனை மூர்ச்சையாக்கி மறுபடியும் எழுப்பும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் ஒருவனை சபையோர்களுக்கு முன் நிற்கவைத்து இவனை மூர்ச்சையாக விழும்படிச்செய்து மறுபடியும் மூர்ச்சை தெளிய வைக்கிறேன் பாருங்களென்று ஜெகஜாலக்கருவை கைவிரலில் தொட்டு சக்கலாதேவி மந்திரத்தை நூத்தியெட்டு ஜெபித்து அந்தக்கருவை அவன் மேல்தெளிக்க அவன் உடனே பூமியின்மேல் சுருண்டுவிழுந்து மூர்ச்சையாகுவான் சபையிலுள்ள யாவர்களும் பார்த்து மதிமயங்கி ஐயோ [illegible]வென்று அஞ்சுவார்கள் அப்போது நீ அவர்களைப்பார்த்து இவனை மூர்ச்சைதெளிந்து எழுந்திருக்கும்படிச் செய்கிறேன் பாருங்களென்று தந்திரமாக ஐங்கோலக்கருவை விரலில் தொட்டு பைரவர் மந்திரத்தை ஆயிரத்தெட்டோதி அந்தக்கருவை அவன்மேல் தெளித்து ஒரு துணியைப்போட்டுமூடி சற்று நேரம்பொருத்து துணியை வாங்கிவிட நித்திரைபோய் எழுந்திருப்பவன்போல் எழுந்திருப்பான் ஆச்சரியப் படுவார்கள்.

512. ஒருவனை ரத்தம்கக்கும்படிசெய்யும் விநோத ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் தங்களுக்குள் ஒருவனை சபையில் நிற்கவைத்து சபையோர்களைப்பார்த்து இதோ இவன் வாயில் ரத்தம்கக்கும் படிசெய்கிறேன் பாரென்று ஜெகஜாலக்கருவை விரலில்தொட்டு சக்காதேவி மந்திரத்தை ஆயிரத்தெட்டுருஜெபித்து அம்மணி இவன்வாயில் ரத்தங்கக்குவதுபோல் தோற்றச்செய்வாயென்று மனதில் தியானித்து அந்தக்கருவை அவன்மேல் படும்படித் தெளிக்க உடனே அவன் வாயிலிருந்து குபீல் குபீலென்று ரத்தங்கக்குவதுபோல்பார்ப்போர்யாவர்களுக்கும் தோற்றும் அப்போது அவர்களும ஐயையோ இது யென்ன கோரமை என்று தங்கள் கண்களைமூடிக் கொள்வார்கள் உடனே நீ அதை நிறுத்திவிடுகிறேன் பாரென்று ஐங்கோலக்கருவை விரலில்தொட்டு பைரவர்மந்திரத்தை நூற்றியெட்டுரு கருவையவன்மேல் தெளிக்க உடனே ரத்தங்கக்குவது நின்றுவிடும் அனைவரும்பார்த்து அதிசயிப்பார்கள்.

513. மல்லிகைமொக்கை வாயால் கக்கும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் வேடிக்கைப்பார்க்க வந்திருக்கும் சபையோர்களைப்பார்த்து இதோ என்வாயிலிருந்து மல்லிகை மொக்கை கக்குகிறேன் பாரென்று அஷ்டமாசித்திமையை விரலில்தொட்டுக்கொண்டு காளியினுடையமந்திரத்தை நூற்றியெட்டு ஜெபித்து கண்கட்டுமையை திலர்தமிட்டுக்கொண்டு ஜாலக்காளை தியானித்து ஒரு நால்விதமான துணியைக் கீழேபோட்டு அனைவருக்கும் எதிரில் ஆவென்று வாயைத்திறந்துக் கக்க குபுகுபென்று மல்லிகைமொக்கு சொரிவதுபோல் பார்ப்போர்கள் கண்களுக்குத்தோற்றும் ஆச்சரியப்படுவார்கள் ஆனால் உடனே நீக்கிய புஷ்பத்தைமறைத்து சல் வோடிப்போவென்று நீ சொல்லவேண்டும்.

514. சாமந்திப்பூ கக்கும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் அங்குள்ளப் பேர்களைப் பார்த்து இப்போதுமல்லிகை மொக்கைகக்கினதைப் பார்த்தீர்கள் இதோ சாமந்திப்பூவைக் கக்குகின்றேன் பாருங்களென்று கண்கட்டுமையைத் திலர்தமிட்டுக்கொண்டு ஜெகஜாலக்கருவை விரலில்தொட்டு சக்காதேவிமந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து ஜாலக்காளைப்பூசித்து அம்மணி சாமந்திபுஷ்பம் கக்குவதுபோல பார்ப்போர்களுக்கு கண்களுக்குத் தோற்றும்படி செய்குவாயென்று ஒரு துணியைக்கீழேபோட்டு கக்க கப கபவென்று இப்போதுதான் செடியில்கொய்த புஷ்பம்போல் தோற்றும் பார்ப்போர்கள் பிரமித்து நிற்பார்கள் நீ உடனே முன்போல் மறைத்துவிடவேண்டும்.

515. ரோஜாபுஷ்பம் கக்கும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் சபையோர்களைப்பார்த்து சாமந்திப்பூகக்கினதை யாவரும் பார்த்திர்கள் இதோ ரோஜா புஷ்பம் கக்குகின்றேன் பாருங்களென்று கண்கட்டு மையை திலர்தமிட்டுக்கொண்டு மகாமாயை மையை விரலில்தொட்டு மயானருத்திரி மந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து ஜாலக்காளைப்பூசித்து அம்மணி ரோஜாபுஷ்பம் கக்குவதுபோல் பார்ப்போர்களுக்குதோற்ற செய்வாயென்று மனதில் நினைத்து முன்போல் துணியை பூமியில் விரித்துப்போட்டு சல் மலையாள பகவதி யென்று ஆவென்று வாயைத்திறந்துக்கக்க ரோஜாபுஷ்பங்கள் சொரிவதுபோல் எதிரிகளுடையக் கண்களுக்குத்தோற்றும் இது அபூருபமானவித்தை என்று ஆச்சரியப்படுவார்கள் அதையும் முன்போல் மறைத்துவிடவேண்டும்.

516. மனோரஞ்சித புஷ்பங்கக்கும் ஜாலம்.

முன்போல் சபையோர்களைப் பார்த்து ரோஜாபுஷ்பம் கக்கினதைப் பார்த்தீர்கள் இதோ மனோரஞ்சித புஷ்பம் கக்குகின்றேன் பாருங்களென்று கண்கட்டுமையை திலர்தமிட்டுக்கொண்டு இந்திர ஜாலமையை விரலில்தொட்டு சாமுண்டிமந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்துஜாலக்காளை தியானித்து அம்மணி மனோரஞ்சிதபுஷ்பம் கக்குவதுபோல் தோற்றும்படி செய்குவாயென்று முன்போல் துணியை விரித்து பூமியின்மேல்போட்டு சல்மலையாளபகவதி ஓடிவாடி யென்று ஆவென்று வாயைத்திறந்து கக்க புஷ்பம்சொரிவதுபோல் தோற்றும் அனைவரும் ஆச்சரியப்படுவார்கள் முன்போல் மறைத்துவிடவும்.

517. பலவிதமான புஷ்பங்கள் கக்கும்ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் உள்ள சபையோர்களைப்பார்த்து இப்போது நாலுவிதப்புஷ்பங்களைக் கக்கின விநோதங்களைப்பார்த்தீர்கள் இதோ பாருங்கள் பலவிதமான புஷ்பங்களும் கக்குகிறேன் பாருங்களென்று சக்காதேவி மந்திரத்தை ஆயிரத்தெட்டு உருஜெபித்து அஷ்டமாசித்தி மையும் ஐங்கோலக்கருவும் மகாமாயமையையும் ஒன்றாய் மத்தித்து கையிற்பூசிக்கொண்டு கண்கட்டுமையை திலர்தமிட்டுக்கொண்டு அஞ்சனாதேவியையும் ஆஞ்சநேயனையும் மனதில் தியானித்து இரண்டுகையையும் இரண்டுதொடையின்மேல் வைத்து முன்போல் பலவித புஷ்பங்கள் கக்குவதுபோல் பார்ப்போர்கள் கண்களுக்குத் தோற்றவேணுமென்று மனதிலெண்ணி வாயை ஆவென்றுத்திறந்து கக்க பலவித புஷ்பங்கள் கக்குவதுபோல் தோற்றும் அனைவரும் இது மகாபுதுமையென்று பிரமித்து ஆச்சரியப்படுவார்கள் நீ முன்போல் மறைத்துவிடவேண்டும்.

518. சவரன்கள் கக்கும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் ஒருதாம்பாளத்தை மேஜையின்மேல்வைத்து இந்ததாம்பாளத்தின்நிறைய சவரன்களை வயிற்றிலிருந்து கக்குகின்றேன் பாருங்களென்று அஷ்டமாசித்திமையை விரலில்தொட்டு காளமேகவசிய மந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து அந்தமையை தட்டில்தடவி அம்மணி இந்த தட்டுநிறைய சவரன் இருப்பதுபோல் தோற்றச்செய்குவாயென்று மனதில் தியானித்து கண்கட்டுமையை எடுத்து நிலர்தடவிட்டுக்கொண்டு ஜாலக்காளைப்பூசித்து தட்டிற்குநேராய்த் தலையைக்குனிந்து ஆவென்று வாயைத் திறந்துகக்க பார்ப்போர்களுக்கு தட்டுநிறைய சவரன்கக்கினது போல் தோற்றப்படும் ஆச்சரியப்படுவார்கள் உடனே முன்போல் மறைத்துவிடவேண்டும்.

519. ரூபாய்கள் கக்கும் ஜாலம்.

முன்போலொரு தாம்பாளத்தை சபையோர்களுக்குக்காட்டிவைத்து சவரன்கக்கின விநோதங்களைப் பார்த்தீர்கள் இதோ ரூபாய்களைக் கக்குகின்றேன் பாருங்களென்றுசொல்லி அஷ்டமாசித்திமையையெடுத்து ஒருவருக்குந்தெரியாமல், விரலில்தொட்டுக்கொண்டு வாலைமந்திரத்தை ஆயிரத்தெட்டு உருஜெபித்து அந்தமையை தட்டில்தடவி ஜாலக்காளைப்பூசித்து இந்த தட்டின் நிறைய ரூபாய்கள் தோற்றம்படி செய்வாயென்று தியானித்து கண்கட்டுமையை நிலர்தடவிட்டுக்கொண்டு முன்போல் கக்க பார்ப்போர்களுக்கு ரூபாய்கக்கினதுபோல் தோற்றும் பிரமித்து ஆச்சரியப்படுவார்கள் அதையும் முன்போல் மறைத்துவிடவும்.

520. பவழங்கள் கக்கும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் வேடிக்கைப்பார்க்க வந்திருக்கும் சபையோரைப்பார்த்து மனமகிழ்ச்சியடைந்தீர்கள் இதோ பவழங்கள் கக்குகின்றேன் பாருங்களென்று ஜெகஜாலக்கருமை விரலில்தொட்டுக்கொண்டு மேருபைரவர்மந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து கண்கட்டுமையை நிலர்தடவிட்டுக்கொண்டு மேற்படிமையை முன்போல் தட்டில் பூசி ஜாலக்காளை தியானித்து அம்மணி பவழம்கக்குவதுபோல் தோற்றச்செய்வாயென்று மனதிலெண்ணி முன்போல் கக்க பவழங்களாகத்தோற்றும் இது மகா அபூர்வமான அதிசயமென்று உன்னைப்புகழ்வார்கள் அதையும் முன்போல் மறைத்துவிடவேண்டும்.

521. முத்துகள் கக்கும் ஜாலம்.

சபையோர்களைப் பார்த்து இப்போதுப் பவழம் கக்கினவிநோதங்களைப்பார்த்து மகிழ்ந்தீர்கள் இதோ முத்துகள் கக்குகின்றேன் பாருங்களென்று மகாமாயமையை விரலில்தொட்டு மயானருத்திரி மந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து அந்தமையை தந்திரமாகத்தாம்பாளத்திற்தடவி பின்பு கண்கட்டுமையை நிலர்தடவிட்டுக்கொண்டு பைரவரை தியானித்து முத்துக்கக்குவதுபோல் தோற்றச்செய்குவாயென்று மனதிலெண்ணி ஜாலக்காளை தியானித்து முன்போற்கக்க பார்ப்போர்கள் பிரமிக்கத்தக்கதாக முத்து கக்கினதுபோல் தோற்றும் அனைவரும் ஆச்சரியப்படுவார்கள் ஆனால் நீ முன்போல் மறைத்து சல்மலையாளபகவதி முத்தைக்கொண்டுபோ வென்று சொல்லவேண்டும்.

522. கெம்புகள் கக்கும் ஜாலம்.

முன்போலவே சபையோர்களைப்பார்த்து முத்துகக்கின விநோதங்களைப்பார்த்தீர்கள் இப்போது கெம்புகள் கக்குகின்றேன் பாருங்களென்று இந்திரஜாலமையை விரலில்தொட்டு ருத்திராதேவி மந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து தந்திரமாக மையை தட்டிற்பூசி கண்கட்டுமையைத் நிலர்த டிட்டுக்கொண்டு காளபைரவரை தியானித்து கெம்புகள்கக்குவதுபோல் தோன்றச்செய்யவேணுமென்று மனதிலெண்ணி முன்போல் பிரகாசமாக கெம்புகக்கியதுபோல் தோற்றும் கண்டவர்கள் கண்கள்பூத்து மதிமயங்கி நிற்பார்கள் நீ முன்போல் மறைத்துவிடவேண்டும்.

523. ஸ்படிகக்கற்கள் கக்கும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் யாவரையும்பார்த்து கெம்புகள் கக்கினதைப்பார்த்தீர்கள் இதோ ஸ்படிகக்கற்களைக் கக்குகின்றேன் பாருங்களென்று அஷ்டமாசித்திமையை விரலில்தொட்டு வாலைமந்திரத்தை ஆயிரத்தெட்டோதி பைரவர்மந்திரம் ஆயிரத்தெட்டு ஜெபித்து மையைதட்டில் பூசி ஜாலக்காளை தியானித்து அம்மணி ஸ்படிகம் கக்குவதுபோல் தோற்றச்செய்குவாயென்று மனதிலெண்ணி மயானருத்திரியைப் பூசித்து முன்போல் வாயை திறந்து கக்க ஸ்படிகம் கக்குவதுபோல் தோற்றும் ஆச்சரியப்படுவார்கள் முன்போல் மறைத்துவிடவும்.

524. புஷ்பராகம் கக்கும் ஜாலம்.

முன்போல் சபையோர்களைப் பார்த்து ஸ்படிகம் கக்கினதைப் பார்த்து மகிழ்ந்தீர்கள் இதோ புஷ்பராகம் கக்குகின்றேன் பாருங்களென்று மகாமாயமையும் இந்திர ஜாலமையும் ஏககோலமை இவை மூன்றையுங் கலந்து தாம்பாளத்தில்பூசி சாமுண்டி மந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து புஷ்பராகம் கக்குவதுபோல் தோற்றச் செய்குவாயென்று மனதிலெண்ணி ஜாலக்காளை தியானித்து முன்போல் வாயைத்திறந்து பார்க்க புஷ்பராகம் கக்குவதுபோல் தோற்றும் இது மகாஅற்புதமையென்று அனைவரும் ஆச்சரியப் படுவார்கள் நீ முன்போல் சல் மலையாளபகவதி யென்று மறைத்து விடவேண்டும்.

525. ரவைகள் கக்கும் ஜாலம்.

வேடிக்கைப்பார்க்க வந்திருக்கும் சபையோர்களைப்பார்த்து ஸ்வப்ப ராகம் கக்கினதை பார்த்தானந்த மடைந்தீர்கள் இதோ ரவைகளைக் கக்குகின்றேன் இந்த வினோதங்களைப் பாருங்களென்று ஜெகஜால மையை விரலில்தொட்டு சக்கலாதேவியை தியானித்து மந்திரம் ஆயிரத்தெட்டோதி மையை தாம்பாளத்திற்றடவி கண்கட்டு மையை திலர்தமிட்டுக்கொண்டு ஜாலக்காளை தியானித்து அம்மணிரவைகள் கக்குவதுபோற் பார்ப்போர்கள் கண்ணுக்குத் தோற்றும்படியாகச் செய்வாய் என்று மனதில் எண்ணி முன்போல் அனைவரும் பார்க்க வாயைத்திறந்து ஆவென்றுக் கக்க புகுபுகுவென்று ரவைகள் கக்குவதுபோல் தோற்றும் பார்ப்போர்கள் யாவரும் பிரமித்து இது கண்கட்டு வித்தையென்றும் காளியுடைய வசியமென்று வாலையினுடைய வசியமென்றும் வாராகியினுடைய வசியமென்று பைரவருடைய வசியமென்று மயானருத்திரி வசியமென்று சக்கலா தேவி வசியமென்று கருவினுடைய வேலையென்றும் கண்டபடிப் பேசிக் கொள்வார்கள் ஆனால் நீமுன்போல் சல் மலையாளதேவியென்று மறைத்து விடவேண்டும்.

526. பச்சைக்கல் கக்கும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் சபையோர்களைப்பார்த்து இப்போது ரவைகக்கினதைப்பார்த்தீர்கள் இதோ நற்பச்சைகல் கக்குகின்றேன் பாருங்களென்று ஜெகஜாலக்கருவை விரலில்தொட்டு சக்காதேவி மந்திரத்தை நூற்றியெட்டு ஜெபித்து அம்மணி பச்சைக்கல் கக்குவதுபோல் பார்ப்போர்களுக்கு தோற்றச்செய்குவாயென்ற மனதில்எண்ணி மையைதட்டிற்றடவி பின்பு கண்கட்டு மையை திலர்தமிட்டுக்கொண்டு ஜாலக்காளைப் பூசித்து முன்போல் வாயைத்திறந்து ஆவென்றுக்கக்க குபுகுபுவென்று பச்சைக் கல் வயற்றுக்குள்ளிருந்து வருவதுபோல் தோற்றும் அனைவரும் ஆச்சரியப்படுவார்கள் நீ உடனே முன்போல் சல் [illegible] கல்லை மறைத்து விடவேண்டும்.

527. எலுமிச்சம் பழத்தை அறுக்கச் சத்தகன்னிகள் தோற்றும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் சபையோர்களைப்பார்த்து ஒரு எலுமிச்சம் பழத்தை கையிலெடுத்து இந்த எலுமிச்சம் பழத்தினுளிருந்து சத்தகன்னிகளை அழைப்பிக்கின்றேன் பாருங்களென்று அஷ்டமாசித்தி மையை விரலில் தொட்டு வாலையைதியானித்து சப்தகன்னிகளை தோற்றும்படி செய்வாயென்று மேற்படி மையை பழத்திற்றடவி பழத்தை இடது கையிற்பிடித்து வலதுகையில் குரிகத்தியெடுத்து இரண்டாய் அறுத்து பூமியிற்போட சத்தகன்னிகளும் பார்ப்போர்கள் கண்களுக்கு தோற்றமாகும் இது புதுமையான வித்தையென்று உன்னைப்புகழ்வார்கள் உடனே நீ அறுத்துப் போட்ட பழத்தை எடுத்து மறைத்துவிட சத்தகன்னிகளும் மாயமாக மறைந்துவிடுவார்கள் ஆனால் கண்கட்டுமையை மறவாமல் திலர்தமிட்டுக் கொள்ளவேண்டும்.

528. வாழைப்பழத்தை அருக்க மயில்தோற்றும் ஜாலம்.

ஒருவாழைப்பழத்தை எடுத்து சபையோர்களுக்குக் காட்டி இந்தவாழைப்பழத்தை அருத்து மயில்தோன்றும்படி செய்கிறேன் பாருங்களென்று ஜெகஜாலமையை விரலில்தொட்டு பைரவர்மந்திரத்தை நூற்றியெட்டு ஜெபித்து மயிலைப்போல் பார்ப்போர்களுக்குத் தோற்றும்படி செய்வாயென்று மையை வாழைப்பழத்தின்மேல்தடவி முன்போல் அருத்துக் கீழே போட பார்ப்போர்களுக்கு மயில்போல் தோற்றமாகி திருநடன மாடும் அனைவருங்கண்டு பிரமித்து அதிசயப்படுவார்கள் உடனே முன்போல் பழத்தையெடுத்து மறைத்துவிடவேண்டும்.

529. கொய்யாபழத்தை அருக்க ரிஷிகள்தோற்றும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்திலாவது இன்னமெந்த இடத்திலாவது ஒருகொய்யாபழத்தை கையிலெடுத்து அங்குள்ள யாவருக்குங்காட்டி இந்தபழத்தை அருக்க ரிஷிகள்தோற்றும்படி செய்கிறேன்பாரென்று ஜெகஜாலமையை விரலில்தொட்டு சாமுண்டி மந்திரத்தை நூற்றியெட்டு ஜெபித்து ரிஷிகள்தோற்றும்படி செய்வாயென்று மனதில் எண்ணி மையை பழத்தின் மேல் தடவி இரண்டாக அருத்து பூமியின்மேல்போட ரிஷிகள் தபஞ்செய்துக்கொண்டு இருப்பதுபோல் பார்ப்போர்கள் அனைவருக்குந்தோற்றும் ஆச்சரியப்படுவார்கள் முன்போல் பழத்தையெடுத்து மறைத்து விடவேண்டும்.

530. கிச்சிலிபழத்தை அருக்கதேவர்கள் தோற்றும் ஜாலம்.

கிச்சிலிப்பழம் ஒன்றையெடுத்து சபையோர்களுக்குக் காட்டி இதை அறுத்து தேவர்கள் தோற்றும்படி செய்கிறேன் பாரென்று மகாமாயமையைவிரலில்தொட்டு மயானருத்திரி மந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து அம்மணி தேவர்கள் தோற்றும்படி செய்குவாயென்று மனதில் எண்ணி மையை பழத்தின்மேல்தடவி முன்போலருத்து பூமியிற்போட தேவர்கள்கூட்டமாகத் தோற்றும் பார்ப்போர்களும் பிரமித்து மெய்மறந்து நிற்பார்கள் நீ உடனே முன்போல் பழத்தை யெடுத்து மறைத்துவிடவும்.

531. கரு ஊமத்தன்காயை அருக்க ராட்சதர்கள் தோற்றும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் கரு ஊமத்தன்காய் ஒன்றையெடுத்து சபையோர் யாவர்களுக்குங்காட்டி இந்தகாயை அருக்கின்றேன் இராட்சதர்கள் தோற்றமாகும் வினோதங்களைப் பாருங்களென்று உச்சாடனக்கருவை விரலில்

தொட்டு மயானருத்திரியின் மந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து மையை காயின்மேல் தடவி ராட்சதாள் தோற்றமாக வேணுமென்று மனதில் தியானித்து காயை அருத்து முன்போல் கீழேபோட உடனே விகாரரூபங்களோடு அனேக தலைகளும் அனேக கைகளும் கோரப்பல்லுகளோடுத் தோற்றமாவார்கள் அதுகண்டு வேடிக்கைபார்க்க வந்திருப்பவர்கள் பயந்து மிரண்டோடுவார்கள் அவர்களை ஓடவொட்டாமல் தடுத்து இந்த ராட்சத கூட்டங்களை மாயமாகப் போகும்படிச் செய்கிறேன் பாருங்களென்று தந்திரமாக முன்போல் காயையெடுத்து மறைத்துவிட மறைந்துபோய்விடும் யாவரும் ஆச்சரியப்பட்டு உன்னைப் புகழ்வார்கள்.

532. தேங்காயை உடைக்க சந்திர சூரியர் தோற்றும் ஜாலம்.

முன்போல் சபையில் நின்று ஒரு தேங்காயை எடுத்து சபையோர்களுக்குக் காட்டி இந்த தேங்காயை உடைத்தவுடன் சந்திர சூரியாள் தோற்றும் விநோதங்களைப் பாருங்களென்று ஐங்கோலக்கருவை விரலில்தொட்டு வீரபத்ர மந்திரத்தை ஆயிரத்தெட்டு உருஜெபித்து சந்திர சூரியாள் தோற்றவேணுமென்று மனதில் தியானித்து சபையோர்களுக்கு முன்னே தேங்காயை உடைக்க உடனே பார்ப்போர்கள் கண்கள் கூசும்படியாய் சூரியசந்திராள் தோற்றும் அப்போதனைவரும் இது மகா அற்புதமான வித்தையென்று ஆச்சரியத்தோடு உன்னைப்புகழ்வார்கள் உடனே நீ தேங்காயை எடுத்து மறைத்துவிட மாயமாக மறைந்துபோகும்.

533. விளாம்பழத்தை உடைக்க நட்சத்திரங்கள் தோற்றும் ஜாலம்.

ஒருவிளாப்பழத்தை கையிலெடுத்து சபையோர்களுக்குக் காட்டி இந்த பழத்தை உடைக்கின்றேன் உடனே நட்சத்திரங்கள் தோற்றும்விநோதங்களை பாருங்களென்று முன்போல் ஐங்கோலக்கருவை விரலில்தொட்டு வைரவர்மந்திரத்தை ஆயிரத்தெட்டோதி மையை காயின்மேல் பூசி நட்சத்திரங்கள் தோற்றமாகவேணுமென்று மனதில் நினைத்து அனைவருக்கும்முன்பாக விளாப்பழத்தை உடைக்க நட்சத்திரங்கள் தோற்றமாகும் பார்ப்போர்களும் இது மகா அருமையான வித்தையென்று ஆச்சரியப்படுவார்கள் நீ முன்போல் காயை எடுத்து மறைத்துவிட மாயமாய்போகும்.

534. கத்திரிக்காயை அருக்க காந்திருவர் தோற்றும் ஜாலம்.

ஜாலமாடும் சபையில் நின்று ஒருகத்திரிக்காயை எடுத்து அனைவருக்குங்காட்டி இதை அருத்தவுடன் காந்திருவர்கள் தோற்றமாகும் அற்புதத்தைப் பாருங்களென்று ஐங்கோலக்கருவை விரலில்தொட்டு வராகிமந்

திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து காந்திருவர் தோற்றவேணுமென்று மனதில் எண்ணி மையை காயின்மேல் தந்திரமாகத்தடவி முன்போல் காயை அருத்து பூமியின்மேல்போட உடனே காந்திருவர் கூட்டம் தோற்றமாகும் பார்ப்போர்கள் பிரமித்து நிற்பார்கள் நீ முன்போல் காயை மறைத்துவிட மாயமாகப்போகும்.

535. பீர்க்கங்காயைப் பிளக்க பட்டாளங்கள் தோற்றும் ஜாலம்.

ஜாலமாடும் சபையில்வந்துநின்று ஒரு பீர்க்கன்காயை எடுத்து அனைவருக்குங்காட்டி இந்தக்காயை இரண்டாகப் பிளக்கின்றேன் பட்டாளங்கள் தோற்றும் விநோதங்களைப் பாருங்களென்று ஐங்கோலக்கருவை விரலில்தொட்டு மயானருத்திரி மந்திரத்தை ஆயிரத்தெட்டு உருஜெபித்து பட்டாளங்கள் தோற்றவேணுமென்று மனதில் எண்ணி கருவைக் காய்மேல்தடவி உச்சாடன மந்திரத்தை ஓதி காயை கையிலெடுத்து குருக்காய் இரண்டாய் பிளக்க உடனே பட்டாளம் நிஜாமெட்டு துருப்புகள் முதலானதும் கண்ணுக்கெதிரே நிஜரூபமாகத் தோற்றும் சபையோர்களும்பார்த்து பிரமித்து இது மகா விநோத ஜாலமென்று விழித்தகண் இமையிட்டாமல் பார்ப்பார்கள் நீ முன்போல் காயையெடுத்து மறைத்துவிட மாயமாகப் போய்விடும்.

536. புடலங்காயைப் பிளக்க பூமி வெடிக்கும் புதுமையான ஜாலம்.

முன்போலவே சபையில்நின்று ஒரு புடலன்காயை எடுத்து அனைவருக்குங்காட்டி இந்த காயை இரண்டாகப் பிளக்கின்றேன் உடனே பூமி படாலென்று வெடிக்கும் வேடிக்கையைப் பாருங்களென்று ஜெகஜாலக்கரு அஷ்டமாசித்திமை ஐங்கோலக்கரு இவை மூன்றையும் சேர்த்து மத்தித்து விரலில் தொட்டுக்கொண்டு சக்கராதேவி மந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து பூமிவெடித்தாற்போல் தோற்றச் செய்வாயென்று மனதில் எண்ணி மையை காயின்மேல் தடவி அதை நெடுக்கே இரண்டாகப் பிளந்து பூமியின்மேல் போட்டவுடன் பார்ப்போர்களுக்கு பூமி படதலாகப்பிளந்தாற்போல் தோற்றும் அனைவரும் ஆச்சரியப்பட்டு இது என்ன புதுமையான ஜாலமென்று ஒன்றும் தோற்றும் நிற்பார்கள் நீ உடனே முன்போல் காயை யெடுத்து மறைத்துவிட பூமி யெப்போதும்போல் தோற்றும்.

537. மணலை வாரியிறைக்க மழைபெய்யும் ஜாலம்.

ஒரு மைதானத்திற்சென்று ஒரு பிடிமண்ணை கையில் எடுத்து தன்னுடன் வந்திருப்போர்களுக்குக் காட்டி இந்த மண்ணை நாலுதிக்கிலும் இறைக்கிறேன் இறைத்தவுடனே மழைபெய்யும் வேடிக்கையைப் பாருங்கோ

வென்று மேற்படிகருவை கையிற் பூசிக்கொண்டு காளைபாலர் மந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து மழை பெய்வதுபோல் தோற்றச்செய்வாயென்று மனதிலெண்ணி மண்ணைவாரி ஊதிக்கிறைக்க உடனே மேகமான்று இருண்டு எழும்பியதுபோலும் படபடவென்று ஊரல் அருவதுபோலுமிருக்கும் பார்ப்போர்கள் மிரண்டு ஓடுவார்கள்.

538. அம்மியின் குழவியை முழுங்கும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் ஒரு அம்மியின் குழவியை கொண்டு வரும்படியாகச்செய்து இந்தக் குழவியை முழுங்கி விடுகிறேன் பாருங்களென்று மரப்புமையை ஒரு விரலிலும் ஐங்கோலக்கருவை ஒரு விரலிலும் தொட்டுக்கொண்டு வாலைமந்திரத்தை நூற்றியெட்டு ஜெபித்து ஐங்கோலக்கருவை கல்லின்மேல் பூசி மரப்புமையை திலர்தமிட்டுக்கொண்டு கல்லையெடுத்து வாயின் அருகிற் கொண்டுபோய் பின்புறமாகப்போட்டு கல்லை மறைத்துவிட பார்ப்போர்கள் கண்களுக்கு கல்லை முழுங்கி விட்டதுபோல் தோற்றும் உடனே நீ முழுங்கினக் கல்லை கக்கிவிடுகிறேன் பாருங்களென்று மறைத்துவைத்த கல்லை தந்திரமாக எடுத்து முன்னேபோட்டு ஆவென்று கக்குவதுபோல் திலர்தத்தை துடைத்துவிட முழுங்கினகல்லை கக்கிவிட்டதுபோல் தோற்றும் அனைவரும் ஆச்சரியப்படுவார்கள்.

539. ஒரு மனிதனைப் பார்த்தால் பத்து மனிதனைத் தோற்றும் ஜாலம்.

எத்தைச் சென்னாலுங் கேட்கும் நத்தைச்சூரி யென்னும் செடிக்கு ஆதிவாரத்தில் மஞ்சள் நூல் காப்புகட்டி பொங்கலிட்டு பலிகொடுத்து தூபதீபங்காட்டி வேரைப் பிடுங்கிவந்து அந்த வேரின்மேல் ஐங்கோலக் கருவைப்பூசி வாராகிமந்திரத்தை லட்சம் ஜெபித்து பிறகு அந்த வேரை எடுத்து குலிசமாக வைத்துக்கொள்ளவும் ஜாலமாடும் சபையில் வந்து நின்று தங்களில் ஒருவனை சபையில் நிருத்தி சபையோர்களைப் பார்த்து இதோ இந்த மனிதன் முகத்தைப் பாருங்களென்று கண்கட்டு மையை மேற்படி குலிசத்தில் தடவி அந்த குலிசத்தை தந்திரமாக ஒருவருக்குந்தெரியாமல் அவன் சிரசின்மேல் வைக்க உடனே பார்ப்போர்கள் கண்ணுக்கு பத்து முகமாகத்தெரியும் அனைவரும் ஆச்சரியப்பட்டு பத்துத்தலை ராவணனோவென்று பலவாறாகப்பேசி மகிழ்வார்கள். உடனே அந்த குலிசத்தை எடுத்துதுடைத்துவிட ஒருமுகமாகத் தெரியும்.

540. ஒரு ஆட்டை ஒருமந்தை ஆடாகக்காட்டும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்திலாவது இன்னமெந்த விடத்திலாவது ஒரு ஆட்டை பிடித்துவந்து நிருத்தி அங்குள்ள யாவர்களையும் பார்த்து இதோ இந்த ஒரு ஆட்டை ஒரு மந்தையாடாகக் காட்டுகிறேன் பாருங்களென்று

அஷ்டமாசித்தி மையையும் ஐங்கோலக் கருவையும் விரலில் தொட்டுக்கொண்டு மயானருத்திரி மந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து ஜாலக்காளை தியானித்து அம்மணி இந்த ஒரு ஆட்டை மந்தை ஆடாகப்பார்ப்போர் கண்களுக்கு தெரியச் செய்வாயென்று மேற்படி இரண்டு கருவையும் தந்திரமாக ஆட்டின்மேல் தெளிக்க உடனே ஒரு மந்தை யாடாகத் தோற்றும் ஆச்சரியப் படுவார்கள்.

541. ஒரு அஸ்வத்தை நூறு அஸ்வமாகக்காட்டும் ஜாலம்.

முன்போல் ஒரு அஸ்வத்தைக் கொண்டுவந்து நிருத்தி அங்குள்ளவர்களைப்பார்த்து இந்த ஒரு அஸ்வத்தை நூறு அஸ்வமாகத் தோற்றும்படிகாட்டும் விநோதத்தைப் பாருங்களென்று மேற்சொன்னபடி மையைத் தொட்டு வாராகிமந்திரத்தை லட்சம் ஓதி ஜாலக்காளை தியானித்து அம்மணி பார்ப்போர் கண்களுக்கு ஒரு அஸ்வம் நூறு அஸ்வமாகத் தெரியும்படி செய்வாயென்று தியானித்து தந்திரமாகக் கருவை அஸ்வத்தின்மேல் தெளிக்க உடனே பார்ப்போர் கண்களுக்கு நூறு அஸ்வமாகத் தோற்றும் இது மகா புதுமையான ஜாலமென்று ஆச்சரியப் படுவார்கள்.

542. ஒருபசுவை நூறுபசுவாகக் காட்டும் ஜாலம்.

மேற்கூறியபடியே ஒரு பசுவைக் கொண்டுவந்து நிருத்தி சபையோர்களைப்பார்த்து இந்த ஒருபசுவை நூறு பசுவாக தோற்றும்படிக் காட்டுகிறேன் பாருங்களென்று அஷ்டமாசித்திமையும் ஐங்கோலக் கருவையும் விரலில்தொட்டு சாமுண்டி மந்திரத்தை நூற்றியெட்டு ஜெபித்து அம்மணி இந்த ஒருபசுவை நூறுபசுவாகப் பார்ப்போர்களுக்குத் தெரியும்படி செய்வாயென்று மனதிலெண்ணி ஜாலக்காளை தியானித்து மேற்படிமையை தந்திரமாக பசுவின்மேல் தெளிக்க உடனே நூறுபசுவாகப் பார்ப்போர் கண்களுக்குத் தோற்றும் ஆச்சரியத்தோடு உள்ளம் மகிழ்வார்கள்.

543. ஒருபுறாவை நூறு புறாவாகக் காட்டும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் ஒரு புறாவை கையிலெடுத்து அனைவருக்குங் காட்டி இந்த ஒரு புறாவை நூறு புறாவாகத் தோற்றும்படி காட்டுகிறேன் பாருங்களென்று ஜெகஜாலக் கருவும் ஐங்கோலக் கருவையும் விரலில் தொட்டுக்கொண்டு காளைபாலர் மந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து இந்த ஒரு புறாவை நூறு புறாவாகத் தோற்றும்படி செய்வாயென்று மனதிலெண்ணி ஜாலக்காளை தியானித்து கருவை தந்திரமாக புறாவின்மேல் தடவி பூமியில்விட உடனே அது பார்ப்போர் கண்களுக்கு நூறு புறாவாகத் தோற்றும் அனைவரும் இது மகா புதுமையானவித்தையென்று புகழ்வார்கள்.

544. ஒருகிளியை நூறுகிளியாகக் காட்டும் ஜாலம்.

மேற்கூறியதுபோல் ஒரு கிளியைக் கையிலெடுத்து அங்குள்ள யாவருக்குங் காட்டி இந்த ஒரு கிளியை நூறுகிளியாகத் தோற்றும்படி காட்டுகிறேன் பாருங்களென்று இந்திரஜாலமையும் ஐங்கோலக்கருவையும் விரலில்தொட்டு மயானருத்திரி மந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து அம்மணி இந்த ஒரு கிளியை நூறுகிளியாகத் தோற்றும்படி செய்வாயென்று ஜாலக்காரனை நியானித்து கருவை தந்திரமாக கிளியின்மேல் தடவி பூமியில்விட உடனே பார்ப்போர்கள் யாவருக்கும் நூறுகிளியாகத் தெரியும் ஆச்சரியப்படுவார்கள்.

545. ஒருகோழியை நூறுகோழியாகக் காட்டும் ஜாலம்.

ஜாலமாமிடத்தில் ஒருகோழியை எடுத்து சபையோர்களுக்குக் காட்டி இந்த ஒருகோழியை நூறுகோழியாகத் தோற்றும்படி செய்கிறேன் பாருங்களென்று ஜெகஜாலக்கருவும் ஐங்கோலக்கருவும் விரலில்தொட்டு சக்காதேவிமந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து அம்மணி இந்த ஒருகோழியை நூறுகோழியாகத் தெரியும்படி செய்வாயென்று ஜாலக்காரனை நியானித்து தந்திரமாகக்கருவை கோழியின்மேல் தடவி பூமியில் விட உடனேபார்ப்பவர்கள் யாவருக்கும் நூறுகோழியாகத் தோற்றும் ஆச்சரியப்படுவார்கள்.

546. ஒருமயிலை நூறுமயிலாகக்காட்டும் ஜாலம்.

ஒருமயிஸ்தானத்திலாவது அல்லது ஜாலமாமிடத்திலாவது ஒருமயிலைக் கொண்டுவந்து நிறுத்தி சபையோர்களைப் பார்த்து இந்த ஒருமயிலை நூறுமயிலாகத் தோற்றும்படி செய்கிறேன் பாருங்களென்று ஜெகஜாலக்கருவையும் ஐங்கோலக்கருவையும் விரலில்தொட்டுக்கொண்டு சக்காதேவிமந்திரத்தை நூத்தியெட்டு ஜெபித்து பைரவர்மந்திரத்தை நூத்தியெட்டுஜெபித்து இந்த ஒருமயிலை நூறுமயிலாகத் தோற்றும்படி செய்யவேண்டுமென்று பூசித்து ஜாலக்காரனை நியானித்து கருவைதந்திரமாக மயிலின்பேரில் தெளிக்க உடனே பார்ப்போர்கள் யாவத்திரான் கண்ணுக்கும் நூறு மயிலாகத்தோற்றும் அப்போதவர்கள் இது மகா புதுமையான ஜாலமென்று புகழ்வார்கள்.

547. ஒருமயிற்றுறவை நூறுமயிறுவாகக் காட்டும் ஜாலம்.

ஜாலமாமிடத்தில் ஒருமயிறுவைப் பிடித்து அதை சபையோர்களுக்குக்காட்டி இந்த ஒருமயிறுவை நூறுமயிறுவாகக்காட்டுகிறேன்பாரென்று அஷ்டமாசித்தி மையையும் ஐங்கோலக்கருவையும் விரலில்தொட்டு வாலையை நியானித்து மந்திரம் நூத்தியெட்டு ஜெபித்து அம்மணி இந்த ஒருமயிறுவைப் பார்ப்போர்களுக்கு நூறுமயிறுவாகத் தோற்ற செய்வா

யென்று மனதில் எண்ணி ஜாலக்காரனை நியானித்து மையை மயிறுவின் மீது தந்திரமாகத்தடவி பூமியில்விட அது உடனே பார்ப்போர்கள் யாவத்திராருக்கும் நூறுமயிறுவாகத் தோற்றும் சந்தேகமில்லாமல் ஒவ்வொன்றாகவும் எண்ணியுங் காட்டலாம் ஜாலக்காரன் மையை கையில் பூசிக்கொண்டு எண்ணிக்காட்டவேண்டும் ஏனென்றால் ஒன்றையே பிடித்து பிடித்து போட்டாலும் அவர்கள் கண்களுக்கு வெவ்வேறாகத் தெரியும் ஆச்சரியப்படுவார்கள்.

548. ஒருவாத்தை நூறுவாத்தாகக்காட்டும் ஜாலம்.

ஜாலமாமிடத்தில் ஒருவாத்தைபிடித்து சபையோர் முதலானவர்களுக்குக்காட்டி இந்த ஒருவாத்தை நூறுவாத்தாகச் செய்கிறேன் பாருங்களென்று அஷ்டமாசித்திமையையும் ஐங்கோலக்கருவையும் விரலில்தொட்டுக்கொண்டு வாலையுடைய மந்திரத்தை நூத்தியெட்டு ஜெபித்து அம்மணி இந்த ஒருவாத்தை நூறுவாத்தாக பார்ப்போர் கண்களுக்கு தோற்றும்படி செய்வாயென்று மனதில்நினைத்து ஜாலக்காரனை நியானித்து மையை வாத்தின்மேல் தந்திரமாகத் தடவிவிட உடனே பார்ப்போர்கண்களுக்கு நூறுவாத்தாகத்தெரியும் ஆச்சரியப்படுவார்கள்.

549. ஒருகீரிப்பிள்ளையை நூறுகீரிப்பிள்ளையாககாட்டும் ஜாலம்.

முன்போல் சபையில்நின்று ஒரு கீரிப்பிள்ளையை எடுத்து அங்குள்ள யாவர்களுக்குங்காட்டி இந்த ஒரு கீரிப்பிள்ளையை நூறுகீரிப்பிள்ளையாகச்செய்குறேன் பாருங்களென்று முன்போல் கருவைவிரலில் தொட்டுக்கொண்டு காக்காதேவிமந்திரத்தை நூத்தியெட்டு ஜெபித்து அம்மணி இந்த ஒருக்கீரிப்பிள்ளையை நூறுக்கீரிப்பிள்ளையாகப் பார்ப்போர் கண்களுக்குதெரியும்படிச் செய்வாயென்று ஜாலக்காரனைநியானித்து மையை தந்திரமாக கீரிப்பிள்ளையின்மேல் தடவ உடனே பார்ப்போர் கண்களுக்கு நூறு கீரிப்பிள்ளையாகத்தோற்றும் சபையோர்கள் பிரமித்து ஆச்சரியப்படுவார்கள்.

550. ஒருபூனையை நூறுபூனையாகக்காட்டும் ஜாலம்.

பூனையொன்றைப்பிடித்து சபையோர்களுக்குக்காட்டி இந்த ஒரு பூனையை நூறுபூனையாகச்செய்குறேன் பாருங்களென்று மகாமாயமையையும் ஐங்கோலக்கருவையும் விரலில்தொட்டு மகாமாயீ மந்திரத்தை ஆயிரத்தெட்டுஜெபித்து அம்மணி இந்த ஒரு பூனையை பார்ப்போர்களுக்கு நூறுபூனையாக தோற்றும்படி செய்குவாயென்று ஜாலக்காரனைநியானித்து மையை பூனைன்மேல் தடவிவிட உடனே பார்ப்போர்கண்களுக்கு நூறு பூனையாகத்தோற்றும் பார்ப்போர்பிரமித்து நின்றுதிக்கம்பிடித்து இதென்ன புதுமையென்பார்கள்.

551. ஒருகாயை நூறுகாயாகக்காட்டும் ஜாலம்.

முன்போல் ஜாலமாடுமிடத்தில் ஒருகாயைக் கொண்டுவந்து கிருத்தி சபையோர்களைப்பார்த்து இந்த ஒருகாயை நூறுகாயாகக் காட்டுகிறேன் பாருங்களென்றுங்களென்று ஜெகஜாலக்கருவை விரலில்தொட்டு சக்கரதேவிமந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து அம்மணி இந்த ஒருகாயை பார்ப்போர்கண்களுக்கு நூறுகாயாகத்தோற்றும்படி செய்குவையென்று ஜாலக்காரனை தியானித்து கருவை காயின்மேல் தந்திரமாகப்பூசி … னைப்பார்ப்போர் கண்களுக்கு நூறு காயாகத்தோற்றமாகி வலைய வலைய நிலவதுபோல் தோற்றும் சகலரும் ஆச்சரியப்படுவார்கள்.

552. ஒரு அணிப்பிள்ளையை நூறு அணிப்பிள்ளையாகக் காட்டும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் ஒரு அணிப்பிள்ளையை எடுத்துசபையோர்களுக்குக்காட்டி இந்த ஒரு அணிப்பிள்ளையை நூறு அணிப்பிள்ளையாகக்காட்டுகிறேன் பாருங்களென்று ஜெகஜாலக்கருவை விரலில்தொட்டு சக்காதேவி மந்திரத்தை ஆயிரத்தெட்டுஜெபித்து அம்மணி இந்த ஒரு அணிப்பிள்ளையை பார்ப்போகண்களுக்கு நூறு அணிப்பிள்ளையாகத் தோன்றும்படி செய்குவையென்று மனதில் எண்ணி ஜாலக்காரனை தியானித்து கருவை அணிப்பிள்ளையின்மேல் தடவி பூமியில்விட நூறு அணிப்பிள்ளையாகத்தோற்றும் ஆச்சரியப்படுவார்கள்.

553 ஒரு எலுமிச்சம்பழத்தை கூடை எலுமிச்சம் பழமாகக் காட்டும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் ஒரு கூடையை வைத்து அந்த கூடையில் கண்கட்டுமையை முன்னதாய் தடவி சபையோர்கள் முன்புவைத்து ஒரு எலுமிச்சம் பழத்தை எடுத்து அதற்கு மஞ்சள்பூசி குங்குமமிட்டு மேற்படி கூடையில் வைத்து சபையோர்களைப் பார்த்து இந்த கூடையில் வைத்த எலுமிச்சம்பழத்தை கூடைநிறைய ஆகும்படி செய்கிறேன் பாருங்களென்று அஷ்டமாசித்திமையும் ஐங்கோலக்கருவையும் விரலில் தொட்டுக்கொண்டு வாலைமந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து அந்த அஷ்டமாசித்திமையை யாருக்கும் தெரியாமல் கூடையில் தடவி ஐங்கோலக் கருவை பழத்தில்தடவி … ஒரு துணியைப்போட்டு மூடி ஜாலக்காரனைப் பூசித்துக்கொஞ்சம் விபூதியை எடுத்து சபையோர்கள் விரும்பும்படியாக சல்லையாளவசமதி என்று மூன்றுதரம் விபூதியை கூடையின்மேல் போட்டு பிறகு அடிதட்டிச் சாத்தான் கூடை நிறைய பழங்கொண்டு வந்து … வென்று மூன்றுதரங்கேட்டு பின்பு கூடைமேல் மூடியதுணியை திறந்துப்பார்க்க பழம் கூடைநிறையத் தோற்றும் வேடிக்கைப் பார்ப்போர்க

ளும் வெகுவிநோதமென்று ஆச்சரியப்படுவார்கள் உடனே நீ முன்போல் துணியைமூடி சல் மாயமாய்ப்போமென்று சொல்லி சற்றுநேரம் பொறுத்து துணியை திறந்துகாட்ட மாயமாக மறைந்துகூடையும் ஒருபழமும் தோற்றும் ஆனால் நீ பழத்தை எடுத்து தண்ணீரால்கழுவி விடவேண்டும் சபையோர்கள் பிரமிப்பார்கள்.

55[4] ஒருதேங்காயை நூறுதேங்காயாக காட்டும் ஜாலம்.

ஒருதேங்காயை எடுத்து ஜாலமாடுமிடத்தில் சபையோர்களுக்குக் காட்டி இந்த ஒருதேங்காயை மந்திரம் செய்து நூறுதேங்காயாகச் செய்கிறேன் பாருங்களென்று ஜெகஜாலக்கருவை விரலில் தொட்டு சக்காதேவி மந்திரத்தை நூத்தியெட்டு ஜெபித்து அம்மணி இந்தத்தேங்காயை நூறுதேங்காயாகப் பார்ப்போர்கண்களுக்கு தோற்றும்படி செய்யென்று மனதில் தியானித்து ஜாலக்காரனைப் பூசித்து மையை தந்திரமாக தேங்காயில் தடவி பூமியின்மேல்போடப் பார்ப்போர்கண்களுக்கு நூறுதேங்காயாகத் தோற்றும் அதுகண்டு அனைவரும் இது மகாபுதுமையானஜாலமென்று புகழ்ந்துக்கொண்டாடுவார்கள் உடனே நீதேங்காயை எடுத்துமறைத்துவிட மாயமாக மறைந்துப்போகும் பார்ப்பவர்களுக்கும் ஆச்சரியமாகவிருக்கும்

555 ஒருமாம்பழத்தை கூடைமாம்பழமாக காட்டும் ஜாலம்.

சபையோர்கள் முன்னே ஒருமாம்பழத்தை எடுத்துக் காட்டி இந்த ஒருமாம்பழத்தை கூடைபழமாகும்படி மந்திரம் செய்கிறேன் பாருங்களென்று அஷ்டமாசித்திமையும் ஐங்கோலக்கருவையும் விரலில்தொட்டு ருத்திராதேவியை தியானித்து பைரவர்மந்திரத்தை நூத்தியெட்டு ஓதி இந்த ஒருமாம்பழத்தை கூடைநிறைய யிருப்பதுபோல் தோற்றும்படிசெய்குவையென்று மனதில் தியானித்து அந்த கருவையும் மையையும் தந்திரமா ஒருவருக்கும்தெரியாமல் பழத்தின்மேல்தடவி கூடையில்போட்டு மேலே ஒரு துணியை மூடி ஜாலக்காரனை தியானித்து சற்றுநேரம் மந்திரம் செபவன்போல் வாயைமூடி முணுமுணுவென்று மந்திரம் சொல்பவன்போல இருந்து பிறகு கூடைமேல் மூடினதுணியைத் திறந்து பார்க்க கூடைநிறைய பழங்கள் நிறைந்திருப்பதாகத் தெரியும் அனைவரும் பார்த்து அதிசயித்த உடன் முன்போல் நீ மறுபடியும் துணியைப்போட்டு மூடி மாம்பழங்களே ஒருபழந்தவிர மற்ற பழங்களெல்லாம் ஓடிப்போங்கோ வென்று பழத்தை தந்திரமாகக் கழுவிவிட்டு மறுபடியும் கூடையைத்திறந்துக் காட்டினால் இது யென்ன புதுமையென்று ஆச்சரியப்படுவார்கள்.

556 ஒரு கொய்யாபழத்தை கூடைப் பழமாக காட்டும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் ஒரு கூடையைவைத்து பிறகு ஒரு கொய்யாபழத்தை எடுத்து அனைவருக்குங்காட்டி இந்த ஒரு கொய்யாபழத்தை இந்த

கூடையில் போட்டு கூடைநிறைய பழமாகும்படி செய்கிறேன் பாருங்களென்று அஷ்டமாசித்திமையையும் ஐங்கோலக்கருவையும் விரலில்தொட்டு மயானருத்திரி மந்திரத்தை ஆயிரத்தெட்டுஜெபித்து அம்மணி இந்த ஒரு பழத்தை கூடைபழமாக பார்ப்போர்கண்களுக்கு தோற்றும்படி செய்வாயென்று மனதில் எண்ணி ஜாலக்காளை தியானித்து மையைப்பழத்தின்மேல் தந்திரமாகப்பூசி கூடையில்போட்டு முன்போல் துணியைப்போட்டுமூடி சற்றுநேரம் பொருத்து துணியைத் திறந்துபார்க்க கூடைநிறைய பழம் இருப்பதுபோல் தோற்றும் அனைவரும் ஆச்சரியப் படுவார்கள் நீ உடனே பழத்தை எடுத்து கழுவிமுன்போல் கூடையில்போட்டு மூடித் திறக்க மாயமாய்ப் போய்விடும் ஒருபழமாத்திர மிருக்கும் பிரமிப்பார்கள்.

557 ஒருவாழைக்குலையை நூறுவாழைக்குலையாக காட்டும் ஜாலம்.

எந்த யிடங்களிலேனும் அல்லது ஜாலமொன்றிடத்திலேனும் ஒருவாழைக்குலை கொண்டுவந்து சபையோர்கள் யாவருக்கும் காட்டி இந்த ஒரு வாழைக்குலையை நூறுகுலையாக்கும் அற்புதமான மந்திரத்தைப் பாருங்களென்று இந்திரஜாலக்கருவும் ஐங்கோலக்கருவும் விரலில் தொட்டுக்கொண்டு வாராகிமந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து அஞ்சனாதேவியையும் ஆஞ்சநேயனையும் தியானித்து ஜாலக்காளைப்பூசித்து இந்த ஒருவாழைக்குலைபார்ப்போர் யாவருடையகண்களும் நூறுகுலையாகத் தோற்றவேணுமென்று மனதில் எண்ணி விரலிலிருக்கும் கருவை தந்திரமாக வாழைக்குலையின்மேல் தெளித்து பெரிய துப்பட்டியைப்போட்டு மூடிவிடவும்சற்றுநேரம் பொருத்து துப்பட்டியை திறந்துபார்க்க நூறுகுலையாகத்தோன்றும் அதுகண்டு அனைவரும் மதிமயங்கி நிற்பார்கள் அப்போது நீமுன்போல் மறைத்து தெளித்தமையை தந்திரமாகத் துடைத்துவிட்டு மூடித்திறக்க ஒருகுலைமாத்திரமிருக்கும் அனைவரும் ஆச்சரியப்பட்டு அடடா இது கண்கட்டுவித்தை என்று பேசிக்கொள்வார்கள்.

558. ஒரு திராட்சிப்பழக்குலையை நூறு குலையாகக் காட்டும் ஜாலம்.

சபையில் வந்துநின்று ஒரு திராட்சிப்பழக் குலையை கையிலெடுத்து சபையோர்களுக்குக்காட்டி இந்த ஒருகுலையை நூறு குலையாகக் காட்டும் என்னுடைய மந்திர மகிமையைப் பாருங்களென்று மகாமாயமையும் ஐங்கோலக் கருவையும்விரலில்தொட்டு சாமுண்டீஸ்வரியின் மந்திரத்தை ஆயிரத்தெட்டுஜெபித்து காளபைரவர் மந்திரத்தை நூற்றியெட்டு ஜெபித்து இந்த ஒருதிராட்சிப்பழக் குலையை நூறுகுலையாக பார்ப்போர்கண்களுக்கு தோற்றும்படிச்செய்வாயென்று மனதில்தியானித்து ஜாலக்காளைப்பூசித்து மையை தந்திரமாக குலையின்மேல் தடவி முன்போல் மூடி திறந்துக்

காட்ட நூறுகுலையாகத் தோற்றும் பார்ப்போர்களும் இது என்ன புதுமையென்று திகைத்து நிற்பார்கள் அப்போது மையை தந்திரமாகத் துடைத்துவிட்டு மறுபடியும் மூடித்திறக்க ஒரு குலைதோற்றும் ஆச்சரியப் படுவார்கள்.

559. ஒரு விளாம்பழத்தை நூறு பழமாகக்காட்டும் ஜாலம்.

ஜாலமாடும் சபையில் வந்து நின்று ஒரு விளாம்பழத்தை எடுத்து அனைவருக்குங்காட்டி. இந்த ஒருபழத்தை மந்திரம்போட்டு நூறுபழமாகக் காட்டுகிறேன் பாருங்களென்று இந்திர ஜாலமையும் ஐங்கோலக் கருவையும். விரலில்தொட்டு துர்க்காதேவி மந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து அம்மணி இந்த ஒரு விளாம்பழத்தை நூறு விளாம்பழமாகப் பார்ப்போர் கண்களுக்குத் தோற்றும்படி செய்வாயென்று மனதில் எண்ணி ஜாலக்காளை தியானித்து மையை காயின்மேல் தடவி முன்போல் துணியைப் போட்டுமூடி சற்று நேரம்பொருத்து திறந்துபார்க்க நூறுபழமாக இருக்கும் அனைவரும்பார்த்து திகைத்து முழிப்பார்கள் அப்போது நீ காயின்மேல் பூசினமையை தந்திரமாகத் துடைத்துவிட்டு முன்போல் மூடித்திறந்துக்காட்ட ஒரு பழமாத்திர மிருக்கும் அடா இது அருமையான மந்திரமென்று ஆச்சரியப் படுவார்கள்.

560. ஒரு ஆரஞ்சிபழத்தை நூறு பழமாகக் காட்டும் ஜாலம்.

எவ்விடத்திலேனும் நின்று ஒரு ஆரஞ்சிபழத்தை கையிலெடுத்து அங்குள்ள அனைவர்களுக்குங்காட்டி இந்த ஒரு பழத்தை என் மந்திரத்தால் நூறுபழமாகக் காட்டுகிறேன் பாருங்களென்று மகாமாயமையும் ஐங்கோலக் கருவையும் விரலில் தொட்டுக்கொண்டு மயானருத்திரி மந்திரத்தை ஆயிரத்தெட்டு உருஜெபித்து அம்மணி இந்த ஒரு ஆரஞ்சிபழம் நூறுபழமாக பார்ப்போர் கண்களுக்குத் தோற்றும்படி செய்யவேண்டுமென்று மனதிலெண்ணி ஜாலக்காளை தியானித்து மையைபழத்தின்மேல் ஒருவருக்குந்தெரியாமல் தந்திரமாகத்தடவி மேஜையின்மேல் வைத்து துணியைப்போட்டுமூடி சற்றுநேரம்பொருத்து திறந்துபார்க்க நூறுபழமாக அனைவர் கண்களுக்குத் தோற்றும் ஆச்சரியப்படுவார்கள் நீ உடனே அந்த பழத்தின்மேல் பூசியமையை துடைத்தாலும் கழுவியாகிலும் மறுபடியும் மேஜையின்மேல் வைத்து முன்போல் மூடித்திறந்துக்காட்ட ஒரு பழமாத்திரம் இருக்கும் இதுமகா புதுமையான ஜாலமென்று புகழ்வார்கள்.

561. ஒரு மாதுளம்பழத்தை நூறுபழமாகக் காட்டும் ஜாலம்.

பெரியோர் சிறியோர் முதலானபேரும் நிறைந்திருக்கும் சபையில் வந்துநின்று ஒரு மாதுளம்பழத்தை எடுத்து அனைவருக்குங்காட்டி. இதோ ஒரு மந்திரம் போடுகிறேன் இந்த ஒரு மாதுளம்பழம் நூறு பழமாகுங்

விநோதத்தைப் பாருங்களென்று ஜெகஜாலக் கருவையும் ஐங்கோலக்கருவையும் விரலில் தொட்டு காளியுடைய மந்திரம் ஆயிரத்தெட்டு ஜெபித்து இந்த ஒரு மாதுளம்பழம் பார்ப்போர் கண்களுக்கு நூறுபழமாகத் தோற்றும்படிச் செய்வாயென்று மனதில் எண்ணி ஜாலக்காளை தியானித்து கருவை தந்திரமாக பழத்தின்மேல் தடவி மேஜையின்மேல் வைத்து முன்போல் ஒரு துணியைமூடி சற்று நேரம்பொருத்துத் திறந்துக்காட்ட அனைவர் கண்களுக்கும் நூறுபழமாகத் தோற்றும் ஆச்சரியப் படுவார்கள் நீ முன்போல் பழத்தின்மேலிருக்கும் மையைப்போக்கி முன்போல் மூடித்திறக்க அந்த ஒரு பழமாத்திரமிருக்கும் இது மகா மந்திரமென்று மகிழ்வார்கள்.

562. ஒருபடி நெல்லிக்காயை ஒரு கூடை காயாகக் காட்டும் ஜாலம்,

ஜாலமாமிடத்திலாவது இன்னம் எந்த விடங்களிலாவது இடத்தை மெழுகி பிள்ளையார்பிடித்து வைத்து அதின் சிரசில் அறுகம்புல் சூடி வெல்லம் பழம் வெத்திலைப்பாக்குடன் தேங்காயுடைத்து வைத்துக் கற்பூரங் கொளுத்தி பிறகு ஒருசெருப்பை எடுத்துக்கழுவி மஞ்சள் தண்ணீரை தெளித்து குங்குமமிட்டு அங்குள்ளவர்களைப் பார்த்து இதோ இந்த செருப்பை மந்திரித்து விடுகிறேன் இந்த வாசலெல்லாம் சுக்கரமென்று சுழலும் வினோதத்தைப் பாருங்களென்று ஜெகஜாலக்கருவையும் ஐங்கோலக்கருவையும் விரலில் தொட்டுக்கொண்டு சக்கரதேவி மந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து அம்மணி இந்த செருப்பை சுழலும்படி செய்வா என்றுமனதில் நினைத்து கருவைதந்திரமாக செருப்பின்மேல் தடவி பின்பு உச்சாடன கருவைத் தொட்டுக்கொண்டு உச்சாடன மந்திரத்தை ஜெபிக்க உடனே செருப்பானது கிளம்பி அந்தவாசல் முழுதும் சக்கரமென்று சுழன்றுக் கொண்டே இருக்கும் ஆச்சரியப் படுவார்கள் மந்திரத்தை நிறுத்திவிட்டால் சுழல்வது நின்றுவிடும்.

661. துடப்பத்தை மந்திரித்துவிடும் ஜாலம்.

ஜாலமாமிடத்தில் துடப்பக்கட்டையை ஒன்று கையிலெடுத்து இதைமந்திரித்து விடுகிறேன் இந்தவாசலில் கிறுகிறுவென்று சுத்துவதை வேடிக்கையாக பாருங்களென்று முன்போல் ஜெகஜாலக்கருவையும் ஐங்கோலக்கருவையும் விரலில்தொட்டு சக்கரதேவிமந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து கருவை துடப்பக்கட்டையின்மேல் தடவி பூமியில்போட்டு விட்டு மந்திரத்தை ஜெபித்துக் கொண்டேயிருக்க கிறுகிறுவென்று வாசலெல்லாம் சுழலும் பார்ப்போர்கள் இதுமகா புதுமையான வித்தை யென்று புகழ்வார்கள் ஆனால் மந்திரம்ஜெபிப்பதை நிறுத்திவிட சுழல்வது நின்று விடும்.

662. முறத்தை மந்திரித்துவிடும் ஜாலம்.

ஜாலமாமிடத்திலாவது இன்னம் எந்தயிடங்களிலாவது கொஞ்சம் பசுஞ்சாணத்தால் மெழுகி மஞ்சள்பிள்ளையார்பிடித்துவைத்து அதின் சிரசில் அறுகம்புல்சூடி பழம் வெல்லம் தாம்பூலம்வைத்துத் தேங்காயுடைத்து சூடங்கொளுத்தி முறத்திற்கு மஞ்சள்பூசி குங்குமமிட்டுபிள்ளையார் எதிரில்வைத்து பிறகு சபையோர்களைப்பார்த்து இந்த முறத்தை மந்திர உச்சாடனத்தினால் இந்த வாசலில் சுக்கரமென்று சக்கரம்போல் சுழலும்

படிசெய்கிறேன் பாருங்களென்று ஜெகஜாலக்கருவையும் ஐங்கோலமையையும் விரலில்தொட்டு சக்கரதேவிமந்திரத்தை விடாமல் ஜெபித்து அம்மணி இந்த முறத்தை சக்கரம்போல் சுழலும்படிசெய்வாயென்று மந்திரத்தை ஜெபித்துக்கொண்டேயிருக்க முறம் கிறுகிறுவென்று சக்கரம்போல் வாசலெல்லாம் சுத்திச் சுழலும் அனைவரும் பிரமித்து இது அற்புதமான மந்திரமென்று ஆச்சரியப்படுவார்கள் ஆனால் மந்திரம் ஜெபிப்பதை நிறுத்த சுழல்வதுநின்றுவிடும்.

663. கோழி முட்டையை மந்திரித்துவிடும் ஜாலம்.

முன்போல் எந்தயிடத்திலாவது தரையைமெழுகிப் பிள்ளையார்பிடித்துவைத்து வெல்லம் பழம் தாம்பூலம்வைத்து தேங்காயுடைத்து கற்பூரங் கொளுத்தி பின்பு கோழிமுட்டை ஒன்றை எடுத்து அங்குள்ள அனைவர்களுக்குங்காட்டி இந்த முட்டையை மந்திர உச்சாடனம் செய்து அந்தரமாகக்கிளம்பும்படிசெய்கிறேன் பாருங்களென்று முட்டைக்கு மஞ்சள் தடவி குங்குமமிட்டு பிள்ளையார்க்கு முன்வைத்து பின்பு ஐங்கோலக்கருவையும் அஷ்டமாசித்திமையையும் விரலில்தொட்டு வாலைமந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து கருவை முட்டையின்மேல்தடவி உச்சாடன மையையும் விரலில்தொட்டு உச்சாடன மந்திரத்தை ஜெபித்துக்கொண்டேயிருக்க முட்டை பூமியில் நில்லாமல் அந்தரமாகக் கிளம்பி சுக்கரமென்றுச் சுழலும் ஜெபிப்பதை நிறுத்திவிட சுழல்வது நின்றுவிடும் அப்போ அனைவரும் ஆச்சரியப்படுவார்கள்.

664. எலுமிச்சம்பழத்தை மந்திரித்துவிடும் ஜாலம்.

ஜாலமாமிடத்தில் ஒரு எலுமிச்சம் பழத்தை எடுத்து சபையோர்களுக்குக்காட்டி இந்த பழத்தை மந்திர உச்சாடனம்செய்து இந்த வாசலெல்லாம் புரளும்படிச்செய்கிறேன் பாருங்களென்று ஜெகஜாலக் கருவையும் ஐங்கோலக்கருவையும் விரலில்தொட்டு சக்கரதேவிமந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து அம்மணி இந்தப்பழத்தை வாசல்முழுதும் புரளும்படிச்செய்குவாயென்று கருவைப் பழத்தின்மேல்தடவி பூமியின்மேல்வைத்து மந்திரத்தை மறவால் ஜெபித்துக்கொண்டே இருக்க பழம்வாசல்முழுதும் கடகடவென்றுப்புரளும் ஆச்சரியப்படுவார்கள்.

665 சூரியபகவான் தியான பூஜை

மத்தியஸ்தானத்திலிருக்கும் சூரியபகவானுக்கு ஆபரணம் மாணிக்கம் சமித்து எருக்கு சுகு சேர்ந்த சாதமும் காரம்சேர்ந்து வட்டலும் கோதுமை சேர்ந்த பலகாரமும் படைத்து செந்தாமரைப் புஷ்பம்வைத்து ஞாயற்றுக்கிழமையில் தூபதீபங்கொடுத்து சூரியதரிசனம் செய்ய எத்தியாரும் மேற்சொன்னபடி படைத்தவைகளைச் சாப்பிட சூரியபகவான் தனது குரூரத்தைக்காட்டாமல் அடக்கி ரட்சிப்பார்.

665. சந்திரபகவான் தியானபூஜை

தென்கிழக்கு அக்கினி மூலையில் இருக்கும் சந்திரபகவானுக்கு ஆபரணம் முத்து புஷ்பம் வெள்ளல்லி சமித்து முருங்கை தித்திப்புச்சேர்ந்த பதார்த்தம் அரிசிமாவின் பலகாரம் வெள்ளாயிலையும் தயிருஞ்சேர்ந்தசாதம் இவைகளைப்படைத்து தூபதீபங்கொடுத்து சந்திரபகவானை மனதில்தியானித்து திங்கட்கிழமை தோறும் நடபிவர சித்தியாகி நன்மையை களை தருவார்.

676. செவ்வாய் தியானபூஜை

தெற்கு எமன்திசையிலிருக்கும் செவ்வாய் பகவானுக்கு ஆபரணம் பவளம் புஷ்பம் செண்பகம் சமித்து கருங்காலி பாகயிலை வெண்ணெய் சேர்ந்தசாதம் துவர்ப்புள்ள பதார்த்தம் துவரைசேர்ந்த பலகாரம் இவைகளை செவ்வாய்க்கிழமையில் படைத்து செவ்வாயைதியானித்து வாசித்தியாகி கொடுமை செய்யாமல் காத்துவருவான்.

663. புதபகவான் தியானபூஜை

வடகிழக்கு ஈசான்னியமூலையில் இருக்கும் புதபகவானுக்கு ஆபரணம்பச்சை புஷ்பம் வெண்காந்தம் சமித்து நாயுருவி வேப்பிலையும் சக்கரையும் சேர்ந்த சாதமும் உப்புமாவும் பச்சைபயறு பலகாரத்துடன் புதன்கிழமை தினம்படைத்து தூபதீபங்கொடுத்து புதபகவானை தியானித்து சாப்பிட சித்தியாகி நன்மையைத்தருவார்.

669. குருபகவான் தியானபூஜை

வடக்கு குபேரதிசையிலிருக்கும் குருபகவானுக்கு ஆபரணம் புஷ்பராகம் புஷ்பம் முல்லை சமித்து அரசு அரசிலை வெள்ளைசாதம் தித்திப்பு பதார்த்தம் கடலைசேர்ந்த பலகாரம் இவைகளை வியாழக்கிழமையில் படைத்து வியாழபகவானை தியானித்து தூபதீபங்கொடுத்து சாப்பிடசித்தியாகி நன்மையைத்தருவார்.

670. சுக்கிரபகவான் தியானபூஜை.

கிழக்கு இந்திரதிசையிலிருக்கும் சுக்கிரபகவானுக்கு ஆபரணம் வைரம் புஷ்பம் வெண்டாமரை சமித்து அத்தி குங்கிலை வெண்ணெய் சேர்ந்தசாதம் இனிப்பாகிய பதார்த்தம் மொச்சைகொட்டை சேர்ந்தபலகாரம் இவைமுதலானதும் வெள்ளிக்கிழமையில் படைத்து சுக்கிரபகவானை தியானித்து தூபதீபங்கொடுத்து சாப்பிட சித்தியாகி வேதனைத்தராமல் பாதுகாப்பார்.

671. சனிபகவான் தியானபூஜை

தெற்கு வருணதிசையிலிருக்கும் சனிபகவானுக்கு ஆபரணம் நீலம் புஷ்பம் கருங்குவளை சமித்து வன்னி ஆலம் இலை மாம்பழத்துடன்சாதம் கசப்புசேர்ந்த பதார்த்தம் எள்ளுசேர்ந்த பலகாரம் இவைகளை சனிக்கிழமையில் படைத்து சனிபகவானை தியானித்து சாப்பிட சித்தியாகி இம்சைதராமல் காப்பாற்றுவார்.

672. இராகுவின் தியானபூஜை.

தென்மேற்கு நிருத்தி மூலையில் இருக்கும் இராகுவிற்கு ஆபரணம் கோமேதகம் புஷ்பம் மந்தாரை சமித்து அருகு தாழம் இலை சுத்தமாகிய சாதம் புளிப்புசேர்ந்த பதார்த்தம் உளுந்து சேர்ந்தபலகாரம் இவைகளை எந்த வாரமானபோதிலும் ஏழரைநாழிகைக்கு மேல்படைத்து இராகுவை தியானித்து தூபதீபங்கொடுத்து சாப்பிட சித்தியாகி தொந்திரவுசெய்யாமல் ரட்சிப்பான்.

673. கேதுவின் தியான பூஜை.

வடமேற்குவாயு மூலையில் இருக்கும் கேதுவிற்கு ஆபரணம் வைடூரியம் புஷ்பம் செவ்வல்லி சமித்து தருப்பை தாழம் இலை சுத்த சாதம் புளிப்புசேர்ந்த பதார்த்தம் கொள்ளுசேர்ந்த பலகாரம் இவைகளை எந்த வாரமானபோதிலும் ஏழரைநாழிகைக்குமேல் படைத்து தூபதீபங்கொடுத்து கேதுவைதியானித்து சாப்பிட சித்தியாகி தன்னுடைய வேதனையைத்தடுத்து நன்மையைத் தருவான்.

674. சண்டை ஜாலம்.

இந்செடி என்னும் காக்கை மூலிகையும் கொரங்கு மூலிகை இவைகள் இரண்டும் மலைகள்தோறும் விசேஷமாகயிருக்கும் இவை சண்டையும் பிடுங்கிவந்து இந்செடி என்னும் காக்கை மூலிகையை ஒருகடையிலும் கொரங்கு மூலிகையை ஒருகடையிலும் சாக்குகள்மேல் வைக்கவும் அல்லது அந்தந்த கடையின் இடப்புகளில் சொருகிட இரண்டு கடைக்காரரும் சண்டைபோட்டு ஒருவருக்கொருவர் மண்டையுடைத்துக் கொள்வார்கள் எப்பேர்க் கொத்தவர்கள் போய்சமாதானம் சொல்லி சண்டையை விலக்கினாலுங் கேளார்கள் மேற்படி மூலிகையை எடுத்துவிட்டால் உடனே சண்டை ஒழிந்து சமாதானமாவார்கள்.

675. நீலகண்டர்வசிய மந்திரம்.

நீலகண்டர் மந்திரத்தை தியானிக்கும் விதம் எவ்விதமெனில் ஓம் நீலகண்டமித்திரா மம் சிவ் சர்வமோஹகண்டா பங்கவாகா என்று லட்சம் உரு ஜெபித்து பூசைமுதலானதும் போட்டு நூறுபேர் பிராமணருக்கு அன்னதானம் செய்து மேற்சொன்னபடி மந்திரத்தை மறவாமல் பத்துநாள்ஜெபித்து வர நீலகண்டர் சித்தியாவார்.

676. பொன்னிற தியானம்.

நீலகண்டரைப் பொன்னிறமாகவைத்து ஸ்தம்பனஞ்செய்து மனதில் தியானித்து எண்கோண சக்கரங்கீறி அதில் வெம்புவ்ராம் என்று நாட்டி உருமுப்பத்தாறு ஜெபிக்க சகலமும் தம்பிக்கும்.

677. தங்கநிற தியானம்.

நீலகண்டரை தங்கநிறமாகவைத்து மேற்சொன்னபடி எண்கோண மிட்டு மனதில் மறவாமல் தியானித்து முன்போல் உரு முப்பத்தாறு ஜெபித்து தாபநீயங்கொடுக்க மனதில் கொண்ட எண்ணம் நிறைவேறு எடுத்தவேலை முடியும்.

678. வெள்ளிநிற தியானம்.

நீலகண்ட சுவாமியை வெள்ளிநிறமாக வைத்து விபூதியில் வட்டம் கீறி யம்மாரோ என்று நாட்டி ஆயிரத்தெட்டு உருஜெபித்து விபூதியைக் கொடுக்க நினைத்தபடி யாவும் வசியமாகும்.

679. செந்நிற தியானம்.

நீலகண்டரை செந்நிறமாகவைத்து தியானித்து முக்கோணங்கீறி அதில் ஸ்ரீயும் ரோ என்று நாட்டி ஆயிரத்தெட்டு உருஜெபித்து பின்பு விபூதியை எடுத்து அணிந்துகொண்டு வெளியேபோக சகலமும் வசியமாகும் இன்னொருவருக்குக் கொடுக்கினும் அவர்களும் உனக்குவசியமாகி வணங்குவார்கள்.

680. ஸ்படிகநிற தியானம்.

நீலகண்டரை ஸ்படிகநிறமாகவைத்து தியானஞ்செய்து பிறைபோல் கீறி அதில் யம்மாரோ என்று நாட்டி ஆயிரத்தெட்டு உருஜெபித்து விபூதியை எடுத்து தடவிக்கொண்டு வெளியேபோக சகலமும் ஸ்நேகமாகும் சகலமும் வசியமாகும்.

681. மேகநிற தியானம்.

நீலகண்டரை மேகநிறமாக வைத்து தியானித்து நாற்கோணங்கீறி அதில் ஓம் ரம்ரோ என்று தென்னம் ஓலையில் நாட்டி இருவருடைய பெயரையும் கூட்டி ஆயிரத்தெட்டு உருஜெபித்து எதிரியினுடைய வீட்டின் இறப்பில் கொண்டுபோய்வைக்க அவர்கள் இருவரும் பிரிந்துபோவார்கள்.

682. புகைநிற தியானம்.

நீலகண்டரை புகைநிறமாகவைத்து தியானித்து ஐங்கோண சக்கரங்கீறி அதில் யம்ரோ என்று நாட்டி ஆயிரத்தெட்டு உருஜெபித்து விபூதியை வாரிப்போட சகலபிணிகளும் சகலதோஷங்களும் சகலப்பகைகளும் சகலபயங்களும் விரிட்டு அஷ்டி திடீர்போகும்.

683. பிரளயகால ருத்திர தியானம்.

நீலகண்டரைப் பிரளயகால ருத்திரர்போல் வைத்து தியானித்து முக்கோண சக்கரங்கீறி அதில் ஓம் ஸ்ரீம் என்று நாட்டி எதிரியின் பெயரையுங்கூட்டி ஆயிரத்தெட்டு உருஜெபித்து அழலில் காட்டச்சத்துரு மரணமாகப்போகும்.

684. கறுப்புநிற தியானம்.

நீலகண்டரை கறுப்புநிறமாகவைத்து தியானித்து முக்கோணச்சக்கரங்கீறி அதில் யம் என்றுநாட்டி ஆயிரத்தெட்டு உருஜெபித்து விபூதியை எடுத்து அணிந்துகொள்ள சகலமும் பேதனமாகும் நீலகண்டர் தியானயோகி சகலசித்தும் விளையாடலாம்.

685. சத்திபூஜை தியானம்.

சத்திபூஜை தியானம் செய்வது யெவ்விதமெனில் ஐயும் நமோ பகவதே ஓம் மகாரூபி மகாமாயி மாதவசத்தி சர்வதாரணி சுவாகா என்று லட்சம் உருஜெபித்து தம்பனத்தோடு பூசை முதலானதும் போட்டு தியானிக்க மகம்மாய சித்தியாவாள், அப்படி சித்தியான அதின்பெருமை என்னவெனில் சத்திபூஜைசெய்வதை கேலிசெய்து சோதனைப்பார்க்க வருவாராகில் அப்போது நீ மந்திரத்தை தியானஞ்செய்து வஸ்துசத்தி பால்பூவென்று தியானித்து திரைப்பையாயில் பால்பூவாக இருக்கும் சோதனைக்காட்ட சகலரும் பிரமித்து பணிவார்கள்.

686. தேங்காயை பனங்காயாக்கும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் ஒரு தேங்காயை யெடுத்து சபையோர்களுக்குக்காட்டி இந்த தேங்காயைப் பனங்காயாக்குகிறேன் பாருங்களென்று ஜெக ஜாலக்கருவையும் ஐங்கோலக் கருவையுங்கலந்து விரலில்தொட்டு சத்தியின் மந்திரத்தை ஆயிரத்தெட்டு உருஜெபித்து சத்தியை தியானித்து அம்மணி தேங்காயைப் பனங்காயாக பார்ப்போர் கண்களுக்குத் தோற்றும்படிச் செய்யவேண்டுமென்று நினைத்து தந்திரமாக கருவை தேங்காயின்மேல்தடவி மேஜையின்மேல் வைத்து கூடையைப்போட்டுமூடி சற்றுநேரம்பொறுத்து திறந்துகாட்ட பார்ப்போர் கண்களுக்கு தேங்காயுருமாறி பனங்காய்போல் தோற்றும் அனைவரும் ஆச்சரியப்படுவார்கள் உடனே நீமுன்போல் கூடையைப்போட்டுமூடி சத்தியை தியானித்து மறுபடியும் திறந்துகாட்ட தேங்காயாக இருக்கும் இது என்ன புதுமையோ என்பார்கள்.

687. பனங்காய் தேங்காயாகும் ஜாலம்.

முன்போல் சபையில் வந்துநின்று பனங்காயைஎடுத்து சபையோர்களுக்குக்காட்டி முன்தேங்காய் பனங்காயாச்சது இப்போபனங்காய் தேங்

காயாகும் விநோதத்தைப் பாருங்களென்று அஷ்டமாசித்தி மையையும் ஐங்கோலக் கருவையுங்கலந்து விரலில்தொட்டு சத்தியை தியானித்து மந்திரம் ஆயிரத்தெட்டோதி அம்மணி பனங்காயை தேங்காயாகத் தோற்றும்படிச் செய்வாயென்று மனதில் நினைத்து கருவை பனங்காயின்மேல் தடவி முன்போல் குடையைப் போட்டுமூடி சற்று நேரம்பொருத்து திறந்துக்காட்ட பனங்காய் தேங்காயாகத் தோற்றும் பார்ப்போர் ஆச்சரியப்படுவார்கள்.

688. ரோஜாபுஷ்பம் சாமந்தி புஷ்பமாகும் ஜாலம்.

ஜாலமாடும் சபையில் ஒரு ரோஜா புஷ்பத்தை எடுத்து அனைவருக்குக்காட்டி இந்த ரோஜாபுஷ்பத்தை சாமந்திபுஷ்பமாகும்படி செய்கிறேன் பாருங்களென்று ஐங்கோலக் கருவையும் அஷ்டமாசித்தி மையையும் கலந்து விரலில்தொட்டு நீலகண்டர்மந்திரத்தை ஆயிரத்தெட்டு உருஜெபித்து ரோஜாபுஷ்பம் சாமந்தி புஷ்பமாகத் தோற்றவேணுமென்று மனதில் தியானித்து கருவை புஷ்பத்தின்மேல் தடவி மேஜைமேல் வைத்து குடையை போட்டுமூடி சற்று நேரம்பொருத்து திறந்துக்காட்ட பார்ப்போர் கண்களுக்கு சாமந்தி புஷ்பமாகத்தெரியும் ஆச்சரியப்படுவார்கள்.

689. சாமந்திபுஷ்பம் ரோஜா புஷ்பமாகும் ஜாலம்,

ஜாலமாடும் சபையில் முன்போல் வந்துநின்று சாமந்தி புஷ்பத்தை ஒன்று கையிலெடுத்து அனைவர்களுக்குங்காட்டி முன் ரோஜாபுஷ்பம் சாமந்திப்புஷ்பமான விநோதங்களை பார்த்தீர்கள் இப்போ சாமந்திப்பூ ரோஜாப்புஷ்பமாகும் விந்தையைப் பாருங்களென்று ஐங்கோலக்கருவை விரலில்தொட்டு நீலகண்டர் மந்திரத்தை ஆயிரத்தெட்டு உருஜெபித்து சாமந்திபுஷ்பம் ரோஜாபுஷ்பமாக வேணுமென்று தியானித்து கருவை புஷ்பத்திற்றடவி மேஜையின்மேல் வைத்து குடையைப்போட்டுமூடி திறந்துகாட்ட சாமந்திப்பூ ரோஜாபூவாகத் தோற்றும் ஆச்சரியப்படுவார்கள்.

690. மல்லிகை முல்லையாகும் ஜாலம்.

ஜாலமாடும் சபையில் ஆழாக்கு மல்லிகை மொக்கையெடுத்து அனைவருக்குங்காட்டி இந்தமல்லிகையை முல்லை மொக்காகும்படி செய்கிறேன் பாருங்களென்று அதை ஒரு தாம்பாளத்தில் வைத்து ஜெகஜாலக்கருவையும் ஐங்கோலக் கருவையும் கலந்து விரலில்தொட்டு சத்திமந்திரத்தை ஆயிரத்தெட்டு உருஜெபித்து மல்லிமுல்லையாக வேணுமென்று தியானித்து புஷ்பத்தின்மேல் கருவைத்தெளித்து குடையைப்போட்டுமூடி சற்றுநேரம்பொருத்து திறக்துக்காட்ட மல்லிகை முல்லையாகத் தோற்றும் ஆச்சரியப்படுவார்கள் முன்போல் மறைத்துவிடவும்.

691. முல்லை மல்லியாகும் ஜாலம்.

முன்போல் ஆழாக்கு முல்லையை யெடுத்து அனைவருக்குங்காட்டி இந்த முல்லையை மல்லியாக்குகிறேன் பாருங்களென்று முன்போல் கருவைத்தொட்டு சத்தியை தியானித்து புஷ்பத்திற் பெயரைமாற்றி சத்திமந்திரத்தை ஆயிரத்தெட்டு உருஜெபித்து முல்லைமல்லியாக வேணுமென்று தியானித்து கருவை புஷ்பத்தின்மேல் தெளித்து முன்போல் மூடி சற்று நேரம்பொருத்து திறந்துகாட்ட முல்லை மல்லியாகத் தோற்றும் இது மகா புதுமையென்று ஆச்சரியப்படுவார்கள்.

692. வாழைப்பழம் பெலாப் பழமாகும் ஜாலம்.

ஜாலமாடும் சபையில் ஒரு வாழப்பழத்தை யெடுத்து அனைவருக்குங்காட்டி இந்த வாழப்பழத்தை [illegible]ப்பழமாகச் செய்கிறேன் பாருங்களென்று ஜெகஜாலக் கருவையும் ஐங்கோலக் கருவையும் கலந்து விரலில் தொட்டுக்கொண்டு நீலகண்டர் மந்திரத்தை ஆயிரத்தெட்டு உருஜெபித்து வாழைப்பழம் பெலாப்பழமாக வேணுமென்று தியானித்து கருவைப் பழத்தின்மேல்தடவி மேஜைமேல் வைத்து முன்போல் குடையைப்போட்டு மூடி திறந்துக்காட்ட வாழைப்பழம் பெலாப்பழமாகத் தோற்றும் ஆச்சரியப்பட்டு பிரமிப்பார்கள்.

693. பிலாப்பழம் வாழைப்பழமாகும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் ஒரு பிலாப்பழம் சொளையை எடுத்து அனைவருக்குங்காட்டி வாழைப்பழம் பிலாப்பழமான விநோதங்களைப் பார்த்தீர்கள் இப்போது பிலாப்பழம் வாழைப்பழமாகும் விநோதங்களை பாருங்களென்று இந்திர ஜாலக்கருவையும் ஐங்கோலக்கருவையும் கலந்து விரலில் தொட்டு சத்தியை தியானித்து நீலகண்டர் மந்திரத்தை ஆயிரத்தெட்டு உருஜெபித்து பிலாசுளையை வாழைப்பழமாகத் தோற்றும்படி செய்வாயென்று கருவை பழத்தின்மேல் தடவி முன்போல் மூடித்திறந்துக்காட்ட வாழைப்பழம் பிலாப்பழமாகத் தோற்றும் அனைவரும் இது மகா புதுமையான வித்தையென்பார்கள்.

694 மாம்பழம் கிச்சிலிப்பழமாகும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் மாம்பழமொன்றை எடுத்து அனைவருக்குங்காட்டி இந்தமாம்பழத்தை கிச்சிலிப்பழமாகச் செய்கிறேன் பாரென்று அஷ்டமாசித்திமையையும் ஐங்கோலக்கருவையும் கலந்து விரலில் தொட்டுக்கொண்டு நீலகண்டரை தியானித்து சத்திமந்திரத்தை ஆயிரத்தெட்டுஜெபித்து மாம்பழம் கிச்சிலிப்பழமாக வேணுமென்று தியானித்து கருவைப் பழத்தின்மேல் தடவி முன்போல் குடையைப்போட்டு மூடி சற்றுநேரம்பொருத்து திறந்துக்காட்ட மாம்பழம் கிச்சிலிப்பழமாகத் தோற்றும் ஆச்சரியப்படுவார்கள்.

695 கிச்சிலிப்பழம் மாம்பழமாகும் ஜாலம்.

முன்போலவே ஜாலமாடுமிடத்தில் ஒருகிச்சிலிப்பழத்தை எடுத்து அனைவருக்குங்காட்டி இந்தக்கிச்சிலிப் பழம் மாம்பழமாகும் விநோதங்களைப் பாருங்களென்று இந்திரஜாலக் கருவையும் ஐங்கோலக்கருவையுங் கலந்து விரலில்தொட்டுக் கொண்டு சத்திமந்திரத்தை ஆயிரத்தெட்டு செபித்து இக்கிச்சிலிப்பழம் மாம்பழமாகத் தோற்றவேணுமென்று மனதில் நினைத்து கருவைபழத்தின் மேல்தடவி முன்போல் கூடையைப் போட்டு மூடி சற்றுநேரம்பொறுத்து திறந்துகாட்ட கிச்சிலிப்பழம் மாம்பழமாகத் தோற்றும் இதுசண்கட்டு வித்தையென்றுச் சண்டபடிசொல்லிப் பிரமித்திருப்பார்கள்.

696 அன்னாசிப்பழம் ஆரஞ்சிபழமாகும் ஜாலம்

ஜாலமாடுமிடத்தில் அன்னாசிபழம் ஒன்றை எடுத்து அனைவருக்குங்காட்டி இந்த அன்னாசிப்பழத்தை ஆரஞ்சிப்பழமாக செய்கிறேன் பாருங்களென்று ஜெகஜாலக்கருவையும் ஐங்கோலக்கருவையுங்கலந்து விரலில்தொட்டுக்கொண்டு நீலகண்டரை தியானித்து சத்திமந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து அன்னாசிப்பழத்தை ஆரஞ்சிப்பழமாக தோற்றும்படிச் செய்யவேண்டு மனதில் நினைத்து கருவைப்பழத்தின்மேல் தடவி முன்போல் கூடையைமூடி சற்று நேரம்பொறுத்து திறந்துகாட்ட அன்னாசிப்பழம் ஆரஞ்சிப்பழமாகத் தோற்றும் பிரமித்து ஆச்சரியப்படுவார்கள்.

697 ஆரஞ்சிபழம் அன்னாசிபழமாகும் ஜாலம்.

முன்போல் சபையில் நின்று ஆரஞ்சிப்பழத்தை ஒன்றையெடுத்து அனைவருக்குங்காட்டி அன்னாசிபழம் ஆரஞ்சிபழமான விநோதங்களைப் பார்த்தீர்கள் இப்போது ஆரஞ்சிபழம் அன்னாசிப்பழமாகும் வேடிக்கையை பாருங்களென்று ஜெகஜாலக் கருவையும் ஐங்கோலக் கருவையும் கலந்து விரலில்தொட்டுக் கொண்டு நீலகண்டரை தியானித்து சத்தி மந்திரத்தை ஆயிரத்தெட்டுஜெபித்து ஆரஞ்சிபழம் அன்னாசிபழமாக தோற்றும்படிசெய்யவேண்டு மனதில் நினைத்து கருவை பழத்தின்மேல்தடவி முன்போல் மூடி திறந்துகாட்ட அன்னாசிப்பழமாகத் தோற்றும் இது மகாவிநோதமென்று ஆச்சரியப்படுவார்கள்.

698 கொய்யாபழம் முந்திரிபழமாகும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் ஒருகொய்யாபழத்தை எடுத்து அனைவருக்குங்காட்டி இந்தகொய்யாபழம் முந்திரிபழமாகும் விநோதங்களைப் பாருங்களென்று அஷ்டமாசித்தியையும் ஐங்கோலக்கருவையும் கலந்து விரலில் தொட்டுக்கொண்டு சத்தியை தியானித்து நீலகண்டர்மந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து கொய்யாப்பழம் முந்திரிப்பழமாகத் தோற்றும்படி செய்யவா என்று மனதில் நினைத்து கருவை பழத்தின்மேல் தடவி முன்போல் மூடித்திறந்துகாட்ட கொய்யாபழம் முந்திரிப்பழமாகத் தோற்றும் ஆச்சரியமானவித்தை என்று அனைவரும் மகிழ்வார்கள்.

699 முந்திரிப்பழம் கொய்யாபழமாகும் ஜாலம்.

முன்போல்சபையில் நின்று முந்திரிப்பழத்தை எடுத்து அனைவருக்குங்காட்டி கொய்யாபழம் முந்திரிபழமான வித்தையைப்பார்த்தீர்கள் இப்போது முந்திரிப்பழம் கொய்யாபழமாகும் விநோதத்தைப் பாருங்களென்று ஜெகஜாலக்கருவையும் ஐங்கோலக்கருவையும் கலந்து விரலில்தொட்டுக்கொண்டு சத்திமந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து நீலகண்டர்மந்திரத்தையும் கூட தியானித்து முந்திரிப்பழம் கொய்யாபழமாகத் தோற்றவேணுமென்று மனதில்நினைத்து கருவைப்பழத்தின் மேல்தடவி முன்போல் மூடித்திறந்துகாட்ட முந்திரிப்பழம் கொய்யாப்பழமாகத் தோற்றும் ஆச்சரியப்படுவார்கள்.

700 அத்திப்பழம் ஆலம்பழமாகும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் நாலு ஐந்து அத்திப்பழத்தை எடுத்து அனைவருக்குங்காட்டி இந்த அத்திப்பழத்தை ஆலம்பழமாக செய்யும் விநோதங்களைப்பாருங்களென்று ஐங்கோலக்கருவையும் அஷ்டமாசித்தியையும் கலந்து விரலில்தொட்டு சத்திமந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து அத்திப்பழம் ஆலம்பழமாக வேணுமென்று மனதில்தியானித்து கருவைப்பழத்தின்மேல் தெளித்து முன்போல் மூடித்திறந்துகாட்ட ஆலம்பழமாகத் தோற்று ஆச்சரியப்படுவார்கள்.

70[illegible] ஆலம்பழம் அத்திப்பழமாகும் ஜாலம்

முன்போல் சபைக்குவந்து ஆலம்பழம் நாலு ஐந்து எடுத்து அனைவருக்குங்காட்டி அத்திப்பழத்தை ஆலம்பழமாக்கின விநோதத்தைப் பார்த்தீர்கள் இதோ ஆலம்பழத்தை அத்திப்பழமாக்கும் அற்புதத்தைப் பாருங்களென்று அஷ்டமாசித்தியையும் ஐங்கோலக்கருவையும் கலந்து விரலில்தொட்டுக்கொண்டு நீலகண்டர்மந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து சத்தியை தியானித்து ஆலம்பழம் அத்திப்பழமாக வேணுமென்று மனதில் எண்ணி கருவைபழத்தின்மேல் தெளித்து முன்போல் மூடித்திறந்துக் காட்ட அத்திப்பழமாகத் தோற்றும் அனைவரும் அதிசயிப்பார்கள்.

702 சேகப்புகுண்டுமணியை வெள்ளைகுண்டு மணியாக்கும் ஜாலம்

ஜாலமாடும் சபையில் வந்துநின்று ஆறாக்கு செகப்பு குண்டுமணியை எடுத்து அனைவருக்குங்காட்டி இந்தகுண்டுமணியை வெள்ளைகுண்டுமணியாக்கும் விநோதத்தைப் பாருங்களென்று இந்திரஜாலக்கருவையும் ஐங்

கோலக்கருவையுங் கலந்து விரலில் தொட்டுக்கொண்டு சத்திமந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து தியானித்து செகப்பு குண்டுமணியை வெள்ளைகுண்டு மணியாக தோற்றச்செய்வாயென்று மனதில் நினைத்து கருவை குண்டு மணியின்மேல் தெளித்து மேஜையின்மேல் ஒரு தாம்பாளத்தில் போட்டு வைத்து மேலே தட்டையைப்போட்டு மூடி சற்றுநேரம்பொருத்து திறந்து காட்ட சிகப்பு குண்டுமணியாகத்தோற்றும் ஆச்சரியப்படுவார்கள்.

703. வெள்ளைகுண்டுமணி சிகப்பு குண்டுமணியாகும் ஜாலம்.

முன்போல் சபையில்வந்து நின்று முன்போலவே ஆமுக்கு வெள்ளை குண்டுமணியையெடுத்து அனைவருக்குங்காட்டி முன்சிகப்புகுண்டுமணிவெள்ளைகுண்டுமணியான விநோதங்களைப்பார்த்தீர்கள் இப்போது வெள்ளை குண்டுமணி சிகப்புகுண்டுமணியாகும் அற்புதங்களைப் பாருங்களென்று ஜெகஜாலக்கருவையும் ஐங்கோலக்கருவையும் கலந்து விரலில்தொட்டுக் கொண்டு சத்திமந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து நீலகண்டரை தியானித்து வெள்ளைகுண்டுமணி சிகப்புகுண்டுமணியாக வேணுமென்று மனதில்நினைத்து முன்போல் மூடித்திறந்துக்காட்ட அனைவரும் மதிமயங்கித் திகைத்து ஆச்சரியப்படுவார்கள்.

704. ஆடு மாடாகும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் ஒருஆட்டை கொண்டுவந்து நிறுத்தி சபையோர்களைப்பார்த்து இந்த ஆடுமாடாகும் விநோதத்தை பாருங்களென்று சுடலைக்கருவையும் ஸ்தம்பனக்கருவையும் ஐங்கோலக்கருவையும் கலந்து விரலில் தொட்டுக்கொண்டு மயானருத்திரி மந்திரத்தை ஆயிரத்தெட்டு உருஜெபித்து ஒருவருக்குந்தெரியாமல் தந்திரமாகக் கருவை ஆட்டின் கொம்பில் அல்லது வாயில்தடவி ஆட்டை சுற்றிலும் கருப்புதுணியால் மறைப்புகட்டி சற்று நேரம்பொருத்து திறந்துகாட்ட ஆடு மாடாகத் தோற்றும் அனைவரும் இது என்னப்புதுமையென்று ஆச்சரியப் படுவார்கள்.

705. மாடு ஆடாகும் ஜாலம்.

முன்போல் சபையில் வந்து ஒரு மாட்டைக் கொண்டுவந்து நிறுத்தி அங்குள்ள அனைவரையும் பார்த்து ஆடுமாடான விநோதத்தைப் பார்த்தீர்கள் இப்போது மாடு ஆடாகும் அற்புதத்தைப் பாருங்களென்று சுடலைக்கருவையும் ஐங்கோலக் கருவையும் கலந்து விரலில் தொட்டுக்கொண்டு சத்திமந்திரத்தை ஆயிரத்தெட்டு உருஜெபித்து அம்மனை பார்ப்போர் கண்களுக்கு மாடுரூபம்மாறி ஆடுரூபமாகத் தெரியும்படி செய்குவாயென்று மனதில் நினைத்து கருவை மாட்டின் கொம்பிலாவது அல்லது வாயிலாவது தடவிவிட்டு முன்போல் கருப்புதுணியால் சுற்றிலும் திரை கட்டி சற்றுநேரம் பொருத்து திரையைவாங்க ஆடாகத்தோற்றும் ஆச்சரியப்படுவார்கள்.

706. நாய் நரியாகும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் ஒரு நாயைப் பிடித்துவந்து நிறுத்தி சபையோர்களைப்பார்த்து இந்தநாய் நரியாகும் விநோதங்களைப் பாருங்களென்று ஜெகஜாலக்கருவையும் சுடலைக்கருவையும் ஐங்கோலக் கருவையும் ஒன்றாய்க்கலந்து விரலில் தொட்டுக்கொண்டு குறளியின் மந்திரத்தை ஆயிரத்தெட்டு உருஜெபித்து சத்தியை தியானித்து நாய் நரியாக வேணுமென்று மனதில் எண்ணி கருவை தந்திரமாக நாயின் நெற்றியில் தடவி முன்போல் கருப்புதுணியால் சுற்றிலும் மருப்புகட்டி சற்று நேரம்பொருத்து திரையை வாங்கிப்பார்க்க நரி உருவாகத்தோற்றும் பார்ப்பவர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

707. நரி நாயாகும் ஜாலம்.

முன்போல் ஜாலமாடுமிடத்தில் நரியைப்பிடித்துவந்து நிறுத்தி சபையோர்களைப்பார்த்து நாய்நரியான விநோதத்தை பார்த்தீர்கள் இப்போது நரி நாயாகும் அற்புதத்தைப் பாருங்களென்று ஐங்கோலக் கருவையும் சுடலை கருவையுங்கலந்து விரலில் தொட்டுக்கொண்டு முன்போல் குறளி மந்திரத்தை ஆயிரத்தெட்டு உருஜெபித்து சத்தியை தியானித்து நரி நாயுருவாகத் தோற்றவேணுமென்று முன்போல் கருவைத்தடவி திரைமூடி சற்று நேரம்பொருத்து திரையை வாங்கிப்பார்க்க நாயுருவாகத்தோற்றும் அனைவரும் ஆச்சரியப்பட்டு இது [illegible]ண்கட்டு வித்தை என்பார்கள்.

708. பூனைமுசலாகும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் ஒரு பூனையைப்பிடித்து வந்து நிறுத்தி அங்குள்ள அனைவர்களையும் பார்த்து இந்த பூனைமுசலாகும் புதுமையைப் பாருங்களென்று ஐங்கோலக்கருவுடன் சுடலைக்கருவையுங் கலந்து விரலில் தொட்டுக்கொண்டு மயானருத்திரி மந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து சத்தியை தியானித்து பூனை முசலாக வேணுமென்று மனதில் எண்ணி கருவை பூனையின் வாயில்தடவி திரைமறைப்புக்குள் சற்றுநேரம் வைத்திருந்து திரையை வாங்கிக்காட்ட [illegible] உருவாகத் தோற்றும் ஆச்சரியப்படுவார்கள்.

709. முசல் பூனையாகும் ஜாலம்.

முன்போல்சபையில்நின்று ஒருமுசலைக்கொண்டுவந்துநிறுத்தி அனைவரையும் பார்த்து பூனைமுசலான புதுமைகளைப் பார்த்தீர்கள் இப்போது முசல்பூனையாகும்விநோதத்தைப்பாருங்களென்று ஐங்கோலக்கருவையும் சுடலைக்கருவையுங் கலந்து விரலில் தொட்டுக்கொண்டு மயானருத்திரிமந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து சத்தியை தியானித்து முசல் பூனையாகதோற்றும்படி செய்வா என்று மனதில் எண்ணி கருவை முசலின்மேல்

தெளித்து முன்போல் திரைபிடித்துமறைத்து சற்றுநேரம்பொறுத்து திரைக்காட்ட பூனையுருவாகத்தோற்றும் கண்டோர்கள் இது மகாபுதுமையென்று மகிழ்வார்கள்.

710. எலிபெருச்சாளியாகும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் ஒரு எலியைப் பிடித்து அனைவருக்குங் காட்டி இந்த எலி பெருச்சாளியாகும் விநோதத்தைப் பாருங்களென்று அஷ்டமாசித்திமையையும் ஐங்கோலக்கருவையும் கலந்து விரலில் தொட்டுக்கொண்டு சக்கராதேவிமந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து சத்தியைதியானித்து எலி பெருச்சாளியுருவாகத் தோற்றவேணுமென்று மனதிலெண்ணி கருவை எலியின்மேல் தூவி பூமியில்வைத்து கூடையைப் போட்டு மூடி சற்றுநேரம்பொறுத்து திறந்துக்காட்ட பெருச்சாளி யுருவாகத்தோற்றும் ஆச்சரியப்படுவார்கள்.

711 பெருச்சாளி எலியாகும் ஜாலம்.

முன்போல் சபையில் நின்று ஒரு பெருச்சாளியை பிடித்துவந்து அனைவருக்குங்காட்டி எலி பெருச்சாளியான விநோதத்தை பார்த்து மகிழ்ந்தீர்கள் இப்போது பெருச்சாளி எலியாகும் விநோதத்தைப் பாருங்களென்று சுடலைக்கருவையும் ஐங்கோலக்கருவையும் கலந்து விரலில் தொட்டு மயானருத்திரியை தியானித்து பெருச்சாளி எலியாகத்தோற்றும்படிச்செய்குவா என்று மனதிலெண்ணி முன்போல் கூடையைப்போட்டு மூடி சற்றுநேரம்பொறுத்து திறந்துக்காட்ட எலியுருவாகத் தோற்றும் இது புதுமையான வித்தை என்றுப்புகழ்வார்கள்.

712. குதிரை கழுதையாகும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் ஒரு குதிரையை பிடித்து வந்து நிறுத்தி அனைவருக்குங்காட்டி இந்த குதிரை கழுதையாகும் விநோதத்தை பாருங்களென்று சுடலைக்கருவையும் ஜெகஜாலக்கருவையும் ஐங்கோலக் கருவையும் ஒன்றாய்க்கலந்து விரலில்தொட்டுக்கொண்டு வாலைமந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து சத்தியை தியானித்து குதிரையை பார்ப்போர் கண்களுக்கு கழுதையாகத்தோற்றும்படி செய்குவா என்று மனதில் நினைத்து கருவை குதிரை முதுகில்தெளித்து குதிரையை கருப்பு துணியால் சுற்றிலும் திரைகட்டி சற்றுநேரம்பொறுத்து திரையை வாங்கிவிட குதிரையானது கழுதையாகத் தோற்றும் ஆச்சரியப்பட்டு இது என்ன புதுமையென்று ஏங்கிநிற்பார்கள்.

713. கழுதை குதிரையாகும் ஜாலம்.

முன்போல் சபையில் நின்று ஒருகழுதையைப் பிடித்துவந்து அனைவருக்கு முன்பாக நிறுத்தி குதிரை கழுதையான விநோதத்தை கண்டீர்கள் இப்போது கழுதைகுதிரையாகும் அற்புதத்தைப் பாருங்களென்று

இந்திர ஜாலக்கருவையும் சுடலைக்கருவையும் ஐங்கோலக் கருவையும் கலந்து விரலில் தொட்டுக்கொண்டு மயானருத்திரி மந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து நீலகண்டரை தியானித்து கழுதை குதிரையாகத் தோற்றவேணுமென்று மனதில் நினைத்து முன்போல் திரைகட்டி மூடி கருவை கழுதையின்மேல் தெளித்து சற்றுநேரம் பொறுத்து திரையை வாங்கிக்காட்ட குதிரை உருவாகத்தோற்றும் அனைவரும் பிரமித்து ஆச்சரியப்படுவார்கள்.

714. கோழி வாத்தாகும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் ஒரு கோழியை கையிலெடுத்து சபையோர்களைப்பார்த்து இந்த கோழி வாத்தாகும் விநோதத்தைப் பாருங்களென்று சுடலைக்கருவையும் ஐங்கோலக் கருவையும் ஒன்றாய்க்கலந்து விரலில் தொட்டுக்கொண்டு சத்திமந்திரத்தை ஆயிரத்தெட்டு ஓதி நீலகண்டரை தியானித்து இந்த கோழி வாத்தாக வேணுமென்று மனதில் எண்ணி கருவை கோழியின்மேல் தந்திரமாகத் தெளித்து கோழிகூண்டை போட்டுமூடி அதின்மேல் கருப்பு துணியைமூடி சற்று நேரம்பொறுத்து திறந்துகாட்ட வாத்துருவாகத் தோற்றும் அனைவரும் ஆச்சரியப்படுவார்கள்.

715. வாத்து கோழியாகும் ஜாலம்.

முன்போல் சபையில் வந்துநின்று வாத்தையெடுத்து அனைவருக்குங் காட்டி கோழிவாத்தான விநோதங்களை பார்த்தீர்கள் இப்போது வாத்து கோழியாகும் வேடிக்கையைப் பாருங்களென்று ஐங்கோலக் கருவையும் அஷ்டமாசித்தி மையையும் ஒன்றாய்க்கலந்து விரலில் தொட்டுக்கொண்டு சத்தியின் மந்திரத்தை ஆயிரத்தெட்டு உருஜெபித்து நீலகண்டர் மந்திரத்தை நூத்தியெட்டு உருஜெபித்து வாத்து கோழியாக வேணுமென்று மனதிலெண்ணி கருவை வாத்தின்மேல் தெளித்து முன்போல் மூடித்திறக்க வாத்து கோழியாகத் தோற்றும் கண்டவர்கள் பிரமித்து ஆச்சரியப்படுவார்கள்.

716. காடி புலியாகும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்திலேனும் இன்னும் எந்த விடத்திலேனும் காடியை போனிலடைத்து சபையில் கொண்டுவந்து நிறுத்தி இந்தகாடி புலியாகும் விநோதத்தைப் பாருங்களென்று சுடலைக் கருவையும் ஐங்கோலக்கருவையும் ஜெகஜாலக்கருவையும் ஒன்றாய்க்கலந்து விரலில் தொட்டுக்கொண்டு சக்கராதேவி மந்திரத்தை ஆயிரத்தெட்டு உருஜெபித்து சத்தியை தியானித்து காடிபுலியாக வேணுமென்று மனதில் எண்ணி கருவைதந்திரமாக காடியின்மேல்தெளித்து போனைசுற்றிலும் கருப்புதுணியால் திரைகட்டி சற்று நேரம்பொறுத்து திரையை வாங்க காடி புலியாகத் தோற்றும் சபையோர்கள் பிரமித்து இது அற்புதமான வித்தையென்று ஆச்சரியப்படுவார்கள்.

717. புலி காடியாகும் ஜாலம்.

முன்போல் புலியை பிடித்துக்கொண்டுவந்து சபையில் நிருத்தி காடி புலியான விநோதத்தைப் பார்த்தீர்கள் இப்போது புலி காடியாகும் ஆச்சரியத்தைப் பாருங்களென்று ஜெகஜாலக்கருவையும் இந்திரஜாலக்கருவையும் ஐங்கோலக்கருவையும் ஒன்றாய்க்கலந்து விரலில் தொட்டுக்கொண்டு வாராகி மந்திரத்தை ஆயிரத்தெட்டு உருஜெபித்து சத்தியை தியானித்து புலி காடியாகவேணுமென்று மனதில் நினைத்து தந்திரமாகக் கருவை புலியின்மேல் தெளித்து முன்போல்திரைகட்டி திறந்துக்காட்டப் புலி காடி உருவாகத் தோற்றும் ஆச்சரியப்படுவார்கள்.

718. மான் கடம்பையாகும் ஜாலம்

மானைப் பிடித்துவந்து சபையில் நிறுத்தி இந்தமான் கடம்பையாகும் விநோதத்தைப் பாருங்களென்று ஜெகஜாலக் கருவையும் ஐங்கோலக்கருவையும் அஷ்டமாசித்திக் கருவையும் ஒன்றாய்க்கலந்து விரலில் தொட்டுக்கொண்டு சத்தியின் மந்திரத்தை ஆயிரத்தெட்டு உருஜெபித்து நீலகண்டரை தியானித்து மான்கடம்பையாகவேணுமென்று மனதில் நினைத்து கருவை தந்திரமாக மானின்மேல் தெளித்து மானைச்சுற்றிலும் திரைபோட்டுமூடி சற்று நேரம்பொருத்து திறந்துகாட்ட மான் கடம்பையாகத் தோற்றும் அனைவரும் ஆச்சரியப்படுவார்கள்.

719. கடம்பை மானாகும் ஜாலம்.

கடம்பையைக் கொண்டுவந்து சபையில்நிருத்தி மான் கடம்பையான விநோதத்தைப் பார்த்தீர்கள் கடம்பை மானாகும் வேடிக்கையைப்பாருங்களென்று இந்திரஜாலக் கருவையும் சட்டிலைக்கருவையும் ஐங்கோலக் கருவையும் ஒன்றாய்க்கலந்து விரலில் தொட்டுக்கொண்டு சக்காதேவிமந்திரத்தை ஆயிரத்தெட்டு உருஜெபித்து சத்தியை தியானித்து கடம்பை மானாகவேணுமென்று மனதில் எண்ணி கருவை கடம்பையின்மேல் தெளித்து முன்போல் திரைமூடி சற்றுநேரம் பொருத்துத் திரையை திறந்துகாட்ட கடம்பை மானாகத்தோற்றும் ஆச்சரியப்படுவார்கள்.

720. அணிப்பிள்ளை கீரிப்பிள்ளையாகும் ஜாலம்.

ஜாலமாடிடத்தில் அணிப்பிள்ளை ஒன்றை எடுத்து அனைவருக்குக் காட்டி இந்த அணிப்பிள்ளை கீரிப்பிள்ளையாகும் விநோதத்தைப் பாருங்களென்று ஐங்கோலக்கருவையும் அஷ்டமாசித்திமையையும் ஒன்றாய்க்கலந்து விரலில் தொட்டுக்கொண்டு சத்தியை தியானித்து மந்திரம் ஆயிரத்தெட்டு உருஜெபித்து வாலையைப்பூசித்து அணிப்பிள்ளை கீரிப்பிள்ளையாகத் தோற்றவேணுமென்று மனதில்எண்ணி கருவை அணிப்பிள்ளையின்மேல் தடவி புயியின்மேல் வைத்து கூடையைப் போட்டுமூடி சற்றுநேரம் பொருத்து திறந்துக்காட்ட கீரிப்பிள்ளையாகத் தோற்றும் ஆச்சரியப்படுவார்கள்.

721. கீரிப்பிள்ளை அணிப்பிள்ளையாகும் ஜாலம்.

முன்போல் சபையில் நின்று கீரிப்பிள்ளையை பிடித்துவந்து அனைவருக்குக்காட்டி அணிப்பிள்ளை கீரிப்பிள்ளையான வேடிக்கையைப் பார்த்தீர்கள் கீரிப்பிள்ளை அணிப்பிள்ளையாகும் விநோதங்களைப் பாருங்களென்று சட்டிலைக் கருவையும் ஐங்கோலக் கருவையும் கலந்து விரலில் தொட்டுக்கொண்டு சக்காதேவி மந்திரத்தை ஆயிரத்தெட்டு உருஜெபித்து சத்தியைதியானித்து கீரிப்பிள்ளை அணிப்பிள்ளையாக வேணுமென்று மனதில் தியானித்து கருவை கீரிப்பிள்ளையின்மேல் தடவிமுன்போல் கூடையைப்போட்டு மூடி சற்றுநேரம்பொருத்து திறந்துக்காட்ட கீரிப்பிள்ளை அணிப்பிள்ளையாகத் தோற்றும் ஆச்சரியப்படுவார்கள்.

722. மயில் வான்கோழியாகும் ஜாலம்.

மயிலை பிடித்துவந்து சபையில்நிருத்தி இந்தமயில் வான்கோழியாகும் விநோதத்தைப் பாருங்களென்று ஜெகஜாலக் கருவையும் ஐங்கோலக் கருவையும் கலந்து விரலில் தொட்டுக்கொண்டு சத்தியின் மந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து வாலையை தியானித்து மயில் வான்கோழியாக வேணுமென்று மனதில் எண்ணி கருவைதந்திரமாக மயிலின்மேல் தெளித்து சுற்றிலும் திரைகட்டிமூடி சற்று நேரம்பொருத்து திறந்துக்காட்ட மயில் வான்கோழியாகத் தோற்றும் ஆச்சரியப்படுவார்கள்.

723. வான்கோழி மயிலாகும் ஜாலம்.

முன்போல் வான்கோழியைப் பிடித்துவந்து சபையில் நிருத்தி சபையோர்களைப்பார்த்து மயில் வான்கோழியான விநோதத்தைப் பார்த்தீர்கள் இப்போது வான்கோழி மயிலாகும் அற்புதத்தைப் பாருங்களென்று இந்திரஜாலக்கருவையும் ஐங்கோலக்கருவையும் கலந்து விரலில் தொட்டுக்கொண்டு சக்காதேவி மந்திரத்தை ஆயிரத்தெட்டு உருஜெபித்து காளபைரவரை தியானித்து வான்கோழி மயிலாகத் தோற்ற வேணுமென்று மனதில்எண்ணி கருவை வான்கோழியின்மேல் தடவி முன்போல் திரைகட்டிமூடி சற்று நேரம்பொருத்து திறந்துக்காட்ட வான்கோழி மயிலாகத்தோற்றும் ஆச்சரியப் படுவார்கள்.

724. மயினா கிளியாகும் ஜாலம்.

மயினாவை கூண்டில் அடக்கஞ்செய்து சபையில் கொண்டுவந்து அனைவருக்குங்காட்டி இந்தமயினா கிளியாகும் விநோதத்தை பாருங்களென்று ஜெகஜாலக்கருவையும் ஐங்கோலக்கருவையும் கலந்து விரலில்தொட்டு சத்தியின்மந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து ஜாலக்காளை தியானித்து மயினா கிளியாகத்தோற்ற வேணுமென்று மனதிலெண்ணி கரு

ளை மயிலின்மேல் தடவி கூண்டின்மேல் துணியைப்போட்டு மூடி சற்றுநேரம் பொருத்து திறந்துக்காட்ட மயிலு கிளியாகத்தோற்றும் ஆச்சரியப்படுவார்கள்.

725 கிளி மயிலுவாகும் ஜாலம்.

முன்போல் கிளியை கூண்டிலடைத்து சபையோர்களுக்குங் காட்டி மயிலு கிளியான விநோதத்தை பார்த்து மகிழ்ந்தீர்கள் இப்போது கிளி மயிலுவாகும் வேடிக்கையைப் பாருங்களென்று கடலை கருவையும் ஐங்கோலக்கருவையுங் கலந்து விரலில் தொட்டு சக்கராதேவி மந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து சத்தியை தியானித்து கிளி மயிலுவாக வேணுமென்று மனதில் எண்ணி கருவை கிளியின்மேல் தடவி முன்போல் மூடித் திறந்துக்காட்ட கிளிமயிலுவாகத் தோற்றும் ஆச்சரியப்படுவார்கள்.

726. காடை கௌதாரியாகும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் காடையொன்றை கூண்டில் அடைத்து கொண்டுவந்து சபையோர்களைப் பார்த்து இந்த காடை கௌதாரியாகும் விநோதத்தை பாருங்கள் என்று ஐங்கோலக்கருவையும் அஷ்டமாசித்திக் கருவையும் கலந்து விரலில்தொட்டு சாமுண்டாதேவிமந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து ஜாலக்காளை பூசித்து காடை கௌதாரியாக தோற்றவேணுமென்று மனதில் எண்ணி கருவை காடையின்மேல் தடவி கூண்டின்மேல் துணியைப்போட்டு மூடி சற்றுநேரம்பொருத்து மூடிய துணியைத்திறந்துக்காட்ட கௌதாரியாகத் தோற்றும் ஆச்சரியப்படுவார்கள்.

727 கௌதாரி காடையாகும் ஜாலம்.

முன்போல் கௌதாரியை கூண்டிலடைத்து சபையில் கொண்டுவந்து அனைவருக்குங்காட்டி காடை கௌதாரியான விநோதங்களைப் பார்த்தீர்கள் இப்போது கௌதாரி காடையாகும் வேடிக்கையைப் பாருங்களென்று ஐங்கோலக்கருவையும் ஜெகஜாலக்கருவையுங் கலந்து விரலில்தொட்டுக்கொண்டு சத்திமந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து பைரவரை தியானித்து கௌதாரிகாடையாக வேணுமென்று மனதிலெண்ணி கருவை கௌதாரியின்மேல் தடவி முன்போல் மூடித்திறந்துக்காட்ட காடையுருவாகத்தோற்றும் ஆச்சரியப்படுவார்கள்.

728 புறாபஞ்சவர்ண கிளியாகும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் ஒரு புறாவை எடுத்து அனைவருக்குங்காட்டி இந்தப்புறாவை பஞ்சவர்ணகிளியாகச் செய்யும் விநோதத்தைப் பாருங்களென்று இந்திரஜாலக்கருவையும் ஐங்கோலக்கருவையும் கலந்து விரலில்தொட்டு சக்கராதேவி மந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து சத்தியை தியானித்து புறா பஞ்சவர்ணகிளியாகத் தோற்றும்படி செய்குவாயென்று மனதில் எண்ணி கருவை புறாவின்மேல் தெளித்து அதை கூடையைப் போட்டு மூடி சற்றுநேரம் பொருத்து திறந்துக்காட்ட பஞ்சவர்ணக்கிளியாகத் தோற்றும் பார்ப்போர்களும் பிரமித்து ஆச்சரியப்படுவார்கள்.

729 பஞ்சவர்ணக்கிளி புறாவாகும் ஜாலம்.

முன்போல் சபையில் நின்று பஞ்சவர்ணக் கிளியை பிடித்து அனைவருக்குங்காட்டி புறா பஞ்சவர்ணக்கிளியான விநோதங்களைப் பார்த்தீர்கள் இப்போது பஞ்சவர்ணக்கிளி புறாவாகும் அதிசயத்தைப் பாருங்களென்று ஜெகஜாலக் கருவையும் ஐங்கோலக்கருவையுங் கலந்து விரலில் தொட்டு சத்தியின் மந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து சக்கராதேவியை தியானித்து பஞ்சவர்ணகிளி புறாவாகத்தோற்றும்படி செய்வாயென்று மனதில் தியானித்து முன்போல் மூடி சற்றுநேரம் பொருத்துத் திறந்துக்காட்ட புறாவாகத்தோற்றும் ஆச்சரியப்படுவார்கள்.

730 நல்லபாம்பு சாரப்பாம்பாகும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் பழகி வைத்திருக்கும் நல்லப்பாம்பை கையிலெடுத்து அனைவருக்குங்காட்டி இந்த நல்லபாம்பு சாரப்பாம்பாகும் விநோதத்தைப்பாருங்களென்று இந்திர ஜாலக்கருவையும் ஜெகஜாலக் கருவையும் ஐங்கோலக்கருவையும் கலந்து விரலில் தொட்டு நீலகண்டர் மந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து சத்தியை தியானித்து ஜாலக்காளைப் பூசித்து நல்லபாம்பு சாரபாம்பாக தோற்றவேணுமென்று மனதிலெண்ணி கருவை நல்லப்பாம்பின்மேல் தடவி பாம்பைப் பெட்டியில் போட்டு மூடி சற்றுநேரம்பொருத்து திறந்துக்காட்ட சாரப்பாம்பாகத் தோற்றும் அனைவரும் ஆச்சரியப்படுவார்கள்.

731 சாரப்பாம்புநல்லப்பாம்பாகும் ஜாலம்.

முன்போல் சாரப்பாம்பை எடுத்து அனைவருக்குங் காட்டி நல்லபாம்பு சாரப்பாம்பான வேடிக்கையைப் பார்த்தீர்கள் இப்போது சாரப்பாம்பு நல்லப்பாம்பாகும் விநோதத்தைப் பாருங்களென்று இந்திரஜாலக்கருவையும் கலந்து விரலில்தொட்டுக்கொண்டு சத்தியின் மந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து சக்கராதேவியை தியானித்து சாரப்பாம்பு நல்லப்பாம்பாக வேணுமென்று தியானித்து கருவை சாரப்பாம்பின்மேல் தடவி முன்போல்மூடி சற்றுநேரம்பொருத்து திறந்துகாட்ட சாரப்பாம்பு நல்லப்பாம்பாகத்தோற்றும் பார்ப்போர் பிரமிப்பார்கள்.

மேற்கூறிய ஜாலங்கள் ஒவ்வொன்றையுங்காட்டி அனைவரும் பார்த்து மகிழ்ச்சியடைந்தவுடன் அப்போதுக்கப்போது மறைத்துவிடவேண்டும் ஏனென்றால் மூணைமுக்கால் நாழிகைவரைக்கும் தோற்றும் அதற்குள் தந்திரமாக வித்தைகளைகாட்டி யாடவேண்டும்.

732. பந்தாடும் ஜாலம்.

ஜாலமாடு மிடத்தில் வந்து நின்று ஒருபந்தை எடுத்து அனைவருக்குங்காட்டி இந்த பந்தை ஆகாயமார்க்கமாக எரிகிறேன் ஒருபந்து அனேகம் பந்துகளாக விளையாடும் விநோதங்களைப் பாருங்களென்று ஜெகஜாலக்கருவையும் சுடலைக்கருவையும் ஐங்கோலக்கருவையும் ஒன்றாய் கலந்து விரலில் தொட்டுக்கொண்டு சக்காதேவிமந்திரத்தை ஆயிரத்தெட்டு உரு ஜெபித்து ஜாலக்காளை தியானித்து இந்த பந்து பார்ப்போர் கண்களுக்கு ஆகாயவீதியில் அனேகம் பந்துகளாக தோற்றமாகி ஆடவேணுமென்று மனதிலெண்ணி கருவை அனைவருக்கும் முன்பாக ஆகாயமார்க்கமாக விட்டெறிய ஒரு பந்து அனேகம் பந்துகளாக கீழும்மேலுமாக கிருகிருவென்று சுவியாகும் அனைவரும் மூகா அற்புதமான வித்தையென்று ஆச்சரியப்படுவார்கள். அப்போது நீ மகாமாய மையைக்கையில் பூசிக்கொண்டு பந்தை கையில் பிடித்துக்கொள்ள ஒரு பந்தாகத் தோற்றும்.

733. எலுமிச்சம்பழம் ஜாலம்.

முன்போல் ஜாலமாடும் சபையில் ஒரு எலுமிச்சம்பழத்தை எடுத்து அனைவருக்குங்காட்டி பந்து எவ்விதம் விளையாடினதோ அவ்விதமாக இந்த எலுமிச்சம்பழம் விளையாடும் விநோதத்தைப் பாருங்களென்று முன்போல் கருவை விரலில்தொட்டு சக்காதேவி மந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து ஜாலக்காளை தியானித்து பந்தைப்போல் எலுமிச்சம்பழம் விளையாடவேணுமென்று மனதில் எண்ணி பழத்தின்மேல் கருவை பூசிவிட்டெறிய அனேகமாக ஆடும் நீ முன்போல் மையை பூசி பழத்தை பிடிக்க ஒரு பழமாகத்தோற்று அனைவரும் அற்புதமான வித்தையென்று ஆச்சரியப்படுவார்கள்.

734. கூடை ஜாலம்.

ஜாலமாடும் சபையில் ஒரு கூடையை எடுத்து அனைவருக்குங்காட்டி இந்த கூடையை உங்கள் அனைவருக்கு முன்பாக வைத்து துணியைப் போட்டுமூடி திறக்கிறேன் அந்த கூடை நிறைய பலவிதமான புஷ்பங்களும் நிறைந்திருக்கும் விநோதங்களை பாருங்களென்று ஐங்கோலக்கருவை கூடையில் தடவி மேலே வெள்ளை துணியைப் போட்டுமூடி உச்சாடனக் கருவை விரலில்தொட்டு மந்திரம் ஆயிரத்தெட்டு உருஜெபித்து குட்டிச்சாத்தானை மனதில்தியானித்து சற்று நேரம்பொருத்து கூடைமேல்மூடிய துணியைத் திறந்துக்காட்ட பார்ப்போர் கண்களுக்கு கூடைநிறைய பலவிதமான புஷ்பங்களும் தோற்றப்படும் அப்போது சபையோர்கள் யாவரும் பிரமித்து ஆச்சரியப் படுவார்கள்.

735. கொச்சக்காய் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் பத்து கொச்சக்காயை எடுத்து அனைவருக்குங் காட்டி இந்தப்பத்து காயையும் காதின்வழியாக உள்ளுக்குச் செலுத்தி வாயின்வழியாக வரும்படி செய்கிறேன் பாருங்களென்று கண்கட்டுமையை திலர்தமிட்டுக்கொண்டு மறைவுமையை காயின்மேல் தடவி ஜாலக்காளை தியானித்து ஒவ்வொரு காயாக வலது காதின் வழியாக செலுத்தினதுபோல் கொண்டுபோய் கீழேபோட்டுவிட பார்ப்போர் கண்களுக்கு காதினுள்ளே போனதுபோல் தெரியும் உடனே மறுபடியும் ஒவ்வொரு காயாக எடுத்து மையை துடைத்து வாயில் கையைவைத்து மூடி சல்வார் வென்று சொல்லி காயைக்கீழேபோட பார்ப்போர்களுக்கு வாயிலிருந்து [illegible]துபோல் தெரியும் ஆச்சரியப்படுவார்கள் ஆதலால் ஒவ்வொருகாயையும் மேற்கூறியதுபோல் செய்யவேண்டும்.

736. ரசகுண்டு ஜாலம்.

ஜாலமாடும் சபையில் ஒருரசகுண்டை எடுத்து அனைவர்களுக்குங்காட்டி இந்தரசகுண்டை காதின்வழியாகச் செலுத்தில் வாயின்வழியாக வரும்படிச் செய்கிறேன்பாருங்களென்று முன்போல் மைமுதலானதும் பூசி செய்துக்காட்ட ஆச்சரியப்படுவார்கள்.

737. இரும்பு குண்டுஜாலம்.

முன்போல் சபையில் இரும்புகுண்டை எடுத்து அனைவருக்குங்காட்டி இந்தகுண்டை காதின்வழியாக செலுத்தி வாயின் வழியாகவரும்படி செய்கிறேன், பாருங்களென்று மேற்கூறியபடி மைமுதலானதும் பூசி தியானித்துச் செய்துகாட்ட பிரமிப்பார்கள்,

738. பலகறை ஜாலம்.

ஜாலமாடும் சபையில் பத்து பதினைந்து பலகறையை கையில் எடுத்து அனைவருக்குங்காட்டி இந்தபலகறை யாவையும் காதின் வழியாகச்செலுத்தி வாயின் வழியாகவரும்படி செய்யும் விநோதத்தை பாருங்களென்று முன்போல் கருவையும் மையையும் பலகறைகளுக்குத் தடவி மேற்கூறியபடி செய்துக்காட்ட மதிமயங்கி நிற்பார்கள்.

739. குண்டுமணி ஜாலம்.

மேற்கூறிய வண்ணம் குண்டுமணியை எடுத்து அனைவர்களுக்குங் காட்டி இதை காதுவழியாக செலுத்தி வாயின்வழியாகவரும்படி செய்கிறேன் பாருங்களென்று முன்போல் கருவு மைமுதலானதும் குண்டுமணியின் மேல்பூசி மேற்சொன்னபடி செய்துக்காட்ட இது மகா விநோதமென்று மகிழ்வார்கள்.

740. குமரங்கல் ஜாலம்.

முன்போல் சபையில் நின்று குமரங்கல்லு ஒன்றை எடுத்து அனைவருக்குங்காட்டி இந்த குமரங்கல்லை முன்போல் காதுவழியாகச் செலுத்தி வாய்வழியாக வரும்படிச் செய்யும் அற்புதத்தை பாருங்களென்று மேற்கூறியபடி கருவு மைமுதலானதும் தடவி தவறாமல் செய்துகாட்ட ஆனந்திப்பார்கள்.

741. நீர்க்குட ஜாலம்.

ஜாலமாகும் சபையில் ஒருகுடத்தில் நீர் நிறையக்கொண்டுவந்து வைத்து அங்குள்ளவர்களைப்பார்த்து இந்த குடத்து நீரையுங் காதின்வழியாகச்செலுத்தி வாயின்வழியாக வரும்படி செய்கிறேன் பாருங்களென்று முன்போல் குடத்தின்மேல் மையைதடவி காதை குடத்தின் வாயில் சேர்த்து சற்றுநேரம் பொருத்து காதை குடத்தை விட்டெடுத்து குடத்தை வந்து பார்க்கச்சொல்ல நீரில்லாமையாக விருக்கும் மறைவுமையை துடைத்துவிட்டு வாயை மூடிக்கொண்டு குடத்துக்குநேர் வாயைசற்றுநேரம் வைத்திருந்து வாயை குடத்தைவிட்டு எடுத்துக்காட்ட நீர்வாய் வழியாய் வந்தாப்போலும் தோற்றமாகி குடத்துநிறைய நீர் இருக்கும் அதைப்பார்த்து யாவரும் பிரமித்து இது கண்கட்டு வித்தையோ குட்டிச்சாத்தான் ஏவலோ என்று பலவாராகப் பேசிக்கொள்வார்கள்.

742. தீபவிநோதவித்தை.

இரவில் ஒருமயிதானத்திற்சென்று ஒருபெரிய அகண்டமொன்றெடுத்து நிறைய முத்தெண்ணெயை ஊற்றி அகண்டம் சுற்றிலும் பத்து பதினைந்து வத்திகள்போட்டு கொளுத்தி பூமியில்வைத்து பிறகு தன்னுடன் வந்தவர்களைப்பார்த்து இந்த அகண்டவிளக்கை ஆகாயமார்க்கமாக கிளம்பும்படி செய்கிறேன் பாருங்களென்று ஒருவருக்குந் தெரியாமல் ஜெகஜாலக்கருவையும் ஐங்கோலக்கருவையும் அஷ்டமாசித்திமையும் இம்மூன்றையும் ஒன்றாய்க்கலந்து விரலில் தொட்டுக்கொண்டு சக்காதேவி மந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து வேதாளயந்திரத்தை உச்சரித்து கருவைதந்திரமாக அகண்டத்தின் கீழ்தடவி கையிலேந்தி மந்திரத்தை ஜெபித்துக்கொண்டிருக்க அகண்டதீபமானது ஆகாயமார்க்கமாகக் கிளம்பி கிருகிருவென்று சுழன்று விநோதமாகத்தோற்றும் அனைவரும் பிரமித்து ஆச்சரியப்படுவார்கள் அனல் மந்திரம்ஜெபிப்பதை நிறுத்தினால் அகண்டம் கீழ்க்கிறங்கிவரும் அப்போது உஷாராக பிடித்துக்கொள்ளவேண்டும்.

743. தடாகத்திலிறங்கி ஜெபம்செய்யும் வித்தை.

தண்ணீர் நிறைந்துள்ள தடாகத்தின் அருகிற்சென்று தன்னுடன்வந்தவர்களைப்பார்த்து இந்த் தடாகத்தினுள்மூழ்கி இரண்டுமணி நேரம்வரை

யிலும் உள்ளேயிருந்து ஜெபங்களை முடித்துக்கொண்டு வெளியேவருகிறேன் பாருங்களென்று கண்கட்டுமையை திலர்தமிட்டு நீலகண்டர் மந்திரத்தை ஜெபித்துக்கொண்டே தடாகஜலத்தில் சுழுத்தளவாக இறங்கி நிற்க பார்ப்போர்கண்களுக்கு குளத்தினுள் முழுகிவிட்டாற்போல் தோறும் மேற்சொன்னமணிவரையிலுமிருந்து குளத்தில்முழுகி மையைகழுவிவிட்டுவெளியேவர அனைவரும் பிரமித்து இது ஜலபந்தனம் செய்தானென்று புகழ்வார்கள்.

744. வேறுமுறை சர்வவசியஜாலம்.

வெள்ளி-ஞாயர்-திங்கள்-வியாழம் இந்த வாரங்களில் பசும்நெய்யிலும் செவ்வாய்-புதன்-சனி இந்த வாரங்களில் பசம்பாலிலும் புல்லுருவிமூலத்தை அரைத்து திலர்தமிட்டுக்கொண்டால் தேவர்முதல் மானிடர்களும் வசியமாவார்கள்.

745. வேறுமுறை ராஜவசியஜாலம்.

தேள்கொடுக்கி நிலப்பனைவேர் அருகு வெள்ளெருக்கு காஞ்சொரி குப்பமேனி இலவன்பிசின் ஆவாரை முசுட்டை பொன்னாங்கண்ணி பொற்றலையான் சிவனார்மூலி இவைகளை அரைத்து திலர்தமிட்டுக்கொண்டுபோக இராஜராஜாக்களும் வசியமாவார்கள்.

746. வேறுமுறை புருஷவசியஜாலம்.

சென்னையுருவி செம்முள்ளி கெஞ்சர் செங்குவளை பொன்னாங்காணி மதிமயக்கி வழிமறித்தான் புனுகு மஞ்சள் இவைகளை எல்லாம் சேர்த்து அரைத்து திலர்தமிட்டுக்கொள்ள புருஷர்வசியமாவார்கள்.

747. வேறுமுறை ஸ்திரீவசியஜாலம்.

அரிதாரம் மயில்துத்தம் செஞ்சாந்து சந்தனம் சவ்வாது கர்ப்பூரம் ஆரமாசிலை மதிமயக்கி இவைகள்யாவையும் அரைத்து திலர்தமிட்டுக்கொள்ள ஸ்திரீகள் வசியமாவார்கள் ஒவ்வொருமருந்தையும் தனித்தனியாகவுமிட்டுக்கொள்ளலாம்.

748. வேறுமுறை மிருகவசியஜாலம்.

விஷ்ணுகிராந்திவேர் விஷங்கொல்லிவேர் காகிகட்டிவேர் காஞ்சொரிவேர் நாயுருவிவேர் மின்னிவேர் சங்கம்விதை அழிஞ்சில்விதை இவைகளைகொண்டுவந்து அதில் தயிலமிறக்கி திலர்தமிட்டுக் கொள்ள சர்வமிருகங்களும் வசியமாகும்.

749 வேறுமுறை சர்ப்பவசிய ஜாலம்.

பொற்றலைக் கையாந்தகரைவேர் நில[illegible]ண்டிவேர் நீலிவேர் சிறுக்கீரைவேர் பொன்னாங்கண்ணி நாயுருவிவேர் தொட்டா சிணுங்கிவேர்

ஆடையொட்டி இம்மருந்துகள் யாவையுங்கொண்டுவந்து தயிலமிறக்கி திலர்தமிட்டுக்கொள்ள சர்வ சர்ப்பங்களும் வசியமாகும்.

750. வேறுமுறை சத்துருவசிய ஜாலம்.

பொற்றலைக் கையாந்தகரைவேர் வெள்ளெருக்கன்வேர் விஷ்ணுக்காந்திவேர் இவைகள் மூன்றையும் ஒன்றாய்ச்சேர்த்து ஆவின்நெய் விட்டுமைபோல் அரைத்து வழித்து வைத்துக்கொண்டு திலர்தமிட்டுக் கொண்டு போக சத்துருக்கள் வந்துவணங்குவார்கள்.

751. வேறுமுறை லோகவசிய ஜாலம்.

நின்றால் சிணுங்கி செவ்வகத்தி நீர்ச்சுழலும் வண்டும் ஆவாரைவேர் முல்லைவேர் கொழுஞ்சொட்டு குதம்பை இம்மருந்துகளை சமனிடையாக நிருத்தெடுத்து கல்வத்திலிட்டு பன்னீர்விட்டு மைபோல் அரைத்து திலர்தமிட்டுக்கொள்ள உலோகவசியமாகும் ஒன்றுக்கொன்று உறவுசெய்துவைக்கும்.

752. வசியமெட்டிற்கும் தியான மூலமந்திரம்.

வசியம் எட்டிற்கும் தியானம் செய்யும்மார்க்கம் எவ்விதமெனில் ஓம் ஆம் ஜெய ஜெய சிக்கிரம் வாவா அவ்வும் உவ்வும் வசிய வசிய கணபதி சித்திக்க சுவாகா என்று நாத்தி எட்டு உருதியானித்து திலர்தமிட அஷ்டவசியமும் சித்தியாகும்.

753. சர்வமோகன ஜாலம்.

அல்லி அதிமதுரம் கோஷ்டம் புல்லுருவி வெண்குன்றிவிதை இவைகளை ஓரிடையாக நிருத்தெடுத்து கல்வத்திலிட்டு முலைப்பால் விட்டுமைபோல் அரைத்து திலர்தமிட்டுக்கொள்ள சர்வமும் மோகனமாகும்.

754. இராஜமோகன ஜாலம்.

ஆவின்நெய் தேன் புல்லுருவிவேர் குங்குமப்பூ ஆலவிழுது சத்தினைபால் இவைகளை ஓரிடையாக எடுத்து கல்வத்திலிட்டு மைபோலரைத்துத் திலர்தமிட்டுக்கொள்ள இராஜமோகனமாகும்.

755. புருஷமோகன ஜாலம்.

செவ்வாமணக்கு செவ்வகத்தி செந்நாயுருவி செம்முள்ளி கஸ்தூரி ஸ்திரீகள் வீட்டுக்குத்தூரமான சீலை இவைகள் வகைக்கு விராகனிடையாக நிருத்தெடுத்து மைபோல் அரைத்து திலர்தமிட்டுக்கொள்ள புருஷமோகனமாகும்.

756. ஸ்திரீமோகன ஜாலம்.

குங்குமம் மரவிவேர் நீர்க்கொள்ளி மோகச்சாலை நீலிவேர் மஞ்சேகம் கோடகச்சாலை செங்குன்றி இவைகளை எல்லாம் ஓரிடையாக நிருத்தெடு

த்து கல்வத்திலிட்டு பசும்நெய்விட்டரைத்து மைபோலானபின்பு வழித்துவைத்துக்கொள்ளவும் திலர்தமிட்டுக்கொண்டு வெளியேவர ஸ்ரீமோகனமாகும்.

757. மிருகமோகனஜாலம்.

வெள்ளைகுண்டுமணி முத்தக்காசு கெச்சக்காய் நரியின்தலை மண்டையோடு இவைகள் ஓரிடையாக நிருத்தெடுத்து கல்வத்திலிட்டு முலைப்பால் விட்டு மைபோல் அரைத்துவைத்துக்கொள்ளவும் திலர்தமிட்டுகொண்டுவெளியேவர மிருகங்கள்யாவும் மோகனமாகும்.

758. சொர்னமோகனஜாலம்.

மருதன்வேர் வெள்ளூமத்தன் வேரும் நன்னாறிவேர் மருளூமத்தன்வேர் இவைகளைசரியிடையாக எடுத்து கல்வத்திலிட்டு வெண்ணூமத்தன் சார்விட்டு மைபோல் அரைத்து உருட்டிவைத்துக்கொள்ள சொர்னமோகனமாகும்.

759. சத்துருமோகனஜாலம்.

செந்நாயுருவிவேர் வெள்ளைகுண்டுமணி பொன்னாங்கண்ணி செங்கழுனிநீர் சிறுபுன்னை இந்த ஐந்தினையும் ஓரிடையாக நிருத்தெடுத்து கல்வத்திலிட்டு கோரைசியிலை சார்விட்டு மைபோல் அரைத்து உருட்டி வைத்துகொள்ளவும் திலர்தமிட்டுக்கொள்ள, சத்துருக்கள் யாவரும் மோகனமாவார்கள்.

760. உலோகமோகனஜாலம்.

முல்லைவேர் வெண்கொழிஞ்சி காயம் நொச்சி கையான் கலா ... வேர் சோம்பு நன்னாறி இவைகளை ஓரிடையாக நிருத்தெடுத்து கல்வத்திலிட்டு மைபோல் அரைத்து வழித்துவைத்துக்கொண்டு திலர்தமிட்டுக்கொள்ள உலோகமோகனமாகும் உலகத்தோரெல்லாம் வணங்குவார்கள் வசியமாவார்கள்.

761. மோகனமேட்டுக்கும் மூலமந்திரம்.

மோகனமெட்டுக்கும் மூலமந்திரம் ஜெபிக்கும்விதம் எவ்விதமெனில் ஆரே ஆரே அரி ஹரி மோகாய் மோகாய் பரமமோகினி இருசெப்பிரி மாங் ஊங் ல ல ல என்று நாத்தியெட்டு செபித்து திலர்தமிட மோகனம் எட்டும் சித்தியாகும் ஒவ்வொன்றுக்கும் மேற்கூறியமந்திரத்தையே செபிக்கவேண்டும்.

762. வேறுமுறைதம்பன ஜாலம்.

கருப்புகுண்டுமணி சதாரக்கள்ளி ஆவிரை கருத்தகெஞ்சா புரங்கொல்லி நாவடக்கி வழிமறித்தான் ஆடையொட்டி இவைகளை ஓரிடையாக நிருத்தெடுத்து கல்வத்திலிட்டு ஆவின்நெய் விட்டு மைபோல் அரைத்து வழித்துவைக்கொண்டு திலர்தமிட்டுக்கொள்ள தம்பனமாவார்கள்.

763. சுக்கிலதம்பனஜாலம்

விஷ்ணுகிரந்திவேர் விளாம்பிசினி செப்புநெருஞ்சா மருளூமத்தன் விதை இவைகளை ஓரிடையாக எடுத்து கல்வத்திலிட்டு மத்தன்கஞ்சாவும் அவ்விடையே சேர்த்து மைபோல் அரைத்து திலர்தமிட்டுக்கொள்ள சுக்கலதம்பனமாகும் ஜெகமெங்கும் சொல்லும்படியாகவும்.

764. ஆயுத தம்பன ஜாலம்.

சூரிவேர் ஸ்ரீகள் அாமானசிலை பொன்சுட்டைவேர் ஆவிரை பச்சை வாழமரத்தின்வேர் பேயன்தண்டு பச்சைப்பாம்பு ருத்திரமூலி என்றுவழங்குமிரண்டும் இவைகளையெல்லாம் ஓரிடையாகநிறுத்தெடுத்து மைபோல்அரைத்து திலர்தமிட்டுக்கொள்ள உலகவாயு தங்கள்யாவும் தம்பனஞ்செய்யலாகும்.

765. மிருகத்தம்பன ஜாலம்.

பச்சை ஓணன் அழிஞ்சில்விதை இருள்வலி மூலி நன்னாரி பேய்மீர்க்கன்வேர் வெப்பாலைவேர் இவைகளை எல்லாம் ஓரிடையாக நிறுத்தெடுத்து பசும் நெய்யுந் தேனும் விட்டு அரைத்து மைபோலானபின்பு வழித்து வைத்துக்கொண்டு திலர்தமிட மிருகங்கள் யாவும் தம்பனமாகும்.

766. ஜலதம்பன ஜாலம்.

கல்லுருவிவேர் வன்னி கட்டுக்கொடி நிண்ணால் கிணிங்கி நிலம்புரண்டி சுடலையில் கொளித்தின வெலும்பும் முட்கத்தர்ன் இவைகளை எல்லாம் இரு இடையாக நிறுத்தெடுத்து மைபோல் அரைத்து வழித்துவைத்துக்கொண்டு திலர்தமிட ஜலஸ்தம்பனமாகும்.

767. அக்கினிதம்பன ஜாலம்.

சங்கன்வேர் குமரிவேர் தாமரைக்கிழங்கு குப்பைமேனிவேர் வெள்ளைகாக்கணம் வேர் செவ்வகத்திவேர் சண்டைவேர் செருங்கொன்றை வட்டத்துத்தி ஒரிலைத்தாமரை வேலிப்பருத்தி சதுரக்கள்ளி மர்தர் மாதவிடாயானசீலை இவைகளை ஓரிடையாக நிறுத்தெடுத்து நெய் தேன்விட்டு மைபோல் அரைத்து வழித்து வைத்துக்கொண்டு திலர்தமிட அக்கினி தம்பனமாகும்.

768. தேவதம்பன ஜாலம்.

கொத்தான்வேர் கொழிஞ்சிவேர் நிலவாகைவேர் ஆவின்வேர் இவைகளை ஓரிடையாக நிறுத்தெடுத்து கல்வத்திலிட்டு மைபோல் அரைத்து வழித்தெடுத்து வைத்துக்கொண்டு திலர்தமிட தேவதம்பனமாகும்.

769. சர்ப்பதம்பன ஜாலம்.

சிறியாநங்கை ஆவினா முசுமுசுக்கை இரண்டும் நாகவல்லி ருத்திவேர் செவ்வாமணக்கு செவ்வொட்டி கருங்குன்றிமணி இவைகளை ஓரிடையாக

நிருத்தெடுத்து பசும்பால் விட்டு மைபோல் அரைத்து வழித்தெடுத்து வைத்துக்கொண்டு திலர்தமிட சர்ப்பதம்பனமாகும்.

770. தம்பனம் எட்டிற்கும் மூலமந்திரம்.

தம்பனமெட்டிற்கும் மூலமந்திரம் ஜெபிக்கும் விதமெவ்விதமென்னில் ஸ்ரீங் வங் சிங் லங் மங் என்றும் மறுபடியும் மங் லங் வங் லங் யங் என்றும் லங் தம்பாயா தம்பாவா அரே அரேசிர்சிய சிர்சிய நீலகண்டரூபி சரம் ரூபி ஆதியானந்தி தம்பன சர்வஜனிரும் கிலியும் சுவாகா என்றுலட்சம் உரு ஜெபிக்க சித்தியாகும்.

771. சர்வ உச்சாடனஜாலம்.

தடையத்தான் பாம்புக்கன்னி சாத்திரபேதி கோட்டம் சதுரக்கள்ளி இருவளை நட்டிவைத்தான் புளியிலிருக்கும் நவ்வி நாய்மயிர் கழுதைப்புட்டை இவைகளை சேர்த்து அரைத்து மைபோலானபின்பு வழித்தெடுத்துவைத்துக்கொண்டு திலர்தமிட சர்வமும் உச்சாடனமாகும்.

772. மிருக உச்சாடனஜாலம்.

நரிமிரட்டிவேர் இருவளைமிரட்டிவேர் கழுதையின் புட்டை புலச்சியைச்சுட்ட சாம்பல் பொன்னாங்கண்ணி செங்கழுநீர் இவைகளை ஓரிடையாக நிருத்தெடுத்து கல்வத்திலிட்டு மைபோல் அரைத்து வழித்து திலர்தமிட்டுக்கொள்ள சர்வமிருகங்களும் உச்சாடனமாகி ஓடும்.

773. சத்துரு உச்சாடனஜாலம்.

செவியின்வேர் கள்ளியின்வேர் மதியக்கிவேர் பிரம்முத்தான் காக்கையின்கூண்டு வேம்பின்வேர் சுடலைகருவு ஆரமான ஸ்திரீயின்சீலை இவைகளை ஓரிடையாக கட்டி மைபோலரைத்து திலர்தமிட்டுக்கொள்ள சத்துரு உச்சாடனமாகி ஓட்டிவிடும்.

774. தேவ உச்சாடனஜாலம்.

குமரன்விட்ட கழுதையின்மலம் ஸ்திரீ ஆரமான சீலை தூசு இவைகளைசேர்த்து சாம்பலாக்கி விபூதியில் கலந்து நெற்றியில் இட்டுக்கொள்ள தேவ உச்சாடனமாகி பதியைக்குலைந்து ஓட்டிவைக்கு கணங்கள் பூதங்கள் தேவதைகள் உச்சாடனமாகும்.

775. விஷ உச்சாடனஜாலம்.

கீலிவேர் அன்லிவேர் மாவிலிங்கம்வேர் ஒன்பதுசிரமுள்ளபாம்புகளின்னூனும் கோர்வாளம் இவைகளைக்கூட்டி மைபோல் அரைத்து வழித்தெடுத்து சிமிழில்வைத்து பூஜைசெய்யும் மந்திரமாவது லங் மங் என்று நூத்திவெட்டு ஜெபித்து மையை உபயோகப்படுத்த விஷ உச்சாடனமாகும்.

776. ஸ்திரி உச்சாடனஜாலம்.

குப்பமேனிவேர் கௌதும்பைவேர் மந்திரியின் மூதுகு எலும்பு தாயைக்கொன்றான் தேன்கொடுக்குச் செடியின்வேர் மாதர்கள் வீட்டுத்தூரமுணங்கிய மதிமயக்கி இவைகளை ஓரிடையாக கிருத்தெடுத்து கல்வத்திலிட்டு மைபோல் அரைத்து திலர்தயிட ஒட்டியமாதர்களை கலக்கும் உச்சாடனமாகும்.

777. சர்வவியாதி உச்சாடனஜாலம்.

நார்கரந்தை திரிகடுகு சித்திரமூலம் மதிமூலி மிளகு குன்றிவித்தம் மிளகாய் இவைகள் எட்டுவியாதிகளை உச்சாடனம் செய்யும் கருமைசெய்து உபயோகப்படுத்தவும்.

778. உச்சாடனமெட்டுக்கும் மூலமந்திரம்.

உச்சாடன மெட்டுக்கும் மூலமந்திரம் செபிக்கும் விதமெவ்விதமெனில் ஆம் ஓம் ஹ்ரோங் குச்சாடு அரங் அரங் ரா ரா சீக்கிரம் உச்சாடாய ஆதிவயிரவி முருகி அளி அளி தூக்கு தூக்கு அருணி அருணி ஆங்காராட்சி அகோரரூபி சுவாகா என்று ஆயிரத்தெட்டு உருஜெபித்துவர உச்சாடனம் எட்டும் சித்தியாகும்.

779. பில்லிவஞ்சனை சூனியங்கள் முதலானதுக்கும் மந்திரம்.

கொன்றை செங்கழுநீர் கோஷ்டம் வெண்குண்டுமணி மாடப்புறாவின் எச்சம் வித்தும் பொன்னாங்கண்ணி இவைகளை எலுமிச்சம்பழம் சார்விட்டு மைபோலரைத்து வைத்துக்கொண்டு செபிக்கும்மந்திரமாவது: ஓம் பரிசிலை சாபனை தேகு தேகு சிங் ரங் சித்திரரூபி சிஷ்டபரிபாலனி வங் ரங் வாங்கு வாங்கு உரு உரு உருரு சோரதகனி சித்திரதகனி கிட்டா ஓடுவோடு உங் உங் எங் எங்கும் ஐயும் சுவாகா என்று ஆயிரத்தெட்டு உரு ஜெபிக்க சித்தியாகும்.

780. சர்வபூத ஆக்குருஷண ஜாலம்.

பாதரிவேர் முல்லைவேர் காக்கணம்வேர் கோழிப்பிச்சு காக்கணங்குருவி சிகப்பு செம்பைவித்து உப்பு சண்டவேர் நிலநாகம் இவைகளைஒன்ருய் சேர்த்து அரைத்து மைபோலான்பின்பு உபயோகப்படுத்த சர்வ ஆக்குருஷணமும் சித்தியாகும்.

781. இராஜ ஆக்குருஷண ஜாலம்.

தலைச்சுருள் நீர்முள்ளி சத்திச்சாரணைவேர் ஆந்தைகண் கல்லுருவி செம்புலா இவைகளை ஒரிடையாகசேர்த்து அரைத்து மைசெய்து வைத்துக்கொண்டு உபயோகப்படுத்த இராஜ ராஜாக்களும் ஆக்குருஷணமாவார்கள்.

782. புருஷ ஆக்குருஷண ஜாலம்.

சிறு புன்னை விஷ்ணுகாந்தி சிறுவேர் கொத்தான் குருந்தொட்டி வசம்பு குளவித்தும் காக்கைநீர் பல்லுருவி இவைகளை யெல்லாம் ஒன்ருகசேர்த்து மைசெய்து உபயோகப்படுத்த புருஷ ஆக்குருஷணமாகும்.

783. ஸ்திரி ஆக்குருஷண ஜாலம்.

ஆடையொட்டி புன்னை கொன்றை உப்பு அருணவினுடைய வால் புருவின் எச்சம் நாகப்பாம்பின் சட்டை இவைகளை ஒன்ருய் கூட்டி மைசெய்து உபயோகப்படுத்த மாதர்கள் துள்ளி வருவார்கள் ஸ்திரீகள் ஆக்குருஷணமாகும்.

784. மிருக ஆக்குருஷண ஜாலம்.

நன்னாரிவேர் துடரி குப்பமேனி சிறுக்கீரைவேர் கொன்றை பொன்னாவாரை அண்டம் கஸ்தூரிமஞ்சள் புருவின் எச்சம் இவைகளை ஒன்ருய் சேர்த்து மைசெய்து உபயோகப்படுத்த மிருகஜாதிகளெல்லாம் தொடரும் ஆக்குருஷணமாகும்.

785. தெய்வ ஆக்குருஷண ஜாலம்.

குப்பைமேனிவேர் சிறுபுன்னைவேர் முலைப்பால் கொன்றை சிவனார்வேம்பு நாயுருவிவேர் மருளுமத்தன் இவைகளை சேர்த்து மைசெய்து உபயோகப்படுத்த தெய்வ ஆக்குருஷணமாகும்.

786. லோக ஆக்குருஷண ஜாலம்.

தொட்டால்வாடி வெள்ளெருக்கு கலப்பை கிழங்கு பால்குரண்டி சிறுபுன்னை ஐங்கோலக்கருவும் புருவின் எருகு இவைகளை சேர்த்து மைசெய்து உபயோகப்படுத்த உலோக ஆக்குருஷணமாகும்.

787. ஆக்ருஷண மெட்டிற்கும் மூலமந்திரம்.

ஆக்ருஷண மெட்டிக்கும் மூலமந்திரம் ஜெபிக்கும்வித மெவ்விதமெனில் மாகாளி வைரவி முக்கண்ணி ஆக்ருஷணதாளி ஆனந்தவல்லி நீலி பகவதி ஜெயஜெயா மாட்டடா ஜெய வெசயா ஆக்ருஷணயா ரங் ருங் கிலுங் கிலுங் கிங் கிமடி கிருடி யீம் யீம் லா லா லங் நங் பார பார ரா ரா சசி சுசி சுவாகா என்று ஆயிரத்தெட்டு ஜெபிக்க ஆக்ருஷண எட்டும் சித்தியாகும்.

788. சர்வபேதன ஜாலம்.

கோட்டான் முட்டை பழிபண்ணி கூடும் இருவர்களுடைய மயிர் குரீவி செம்பருத்தி வெள்ளைக்கொழிஞ்சி செவ்வலரி தட்டான் கன்னி கெடு ஆலன் தலையிலாடி இவைகளைசேர்த்து மைசெய்து உபயோகப்படுத்த சர்வமும் பேதனமாகும்.

789. இராஜ பேதன ஜாலம்.

சோழியாவரை காக்கைவீடு தேன்முதுகின் முள்ளெலும்பு சீந்தில் தும்பை வலியன் முட்டை காஞ்சுரை மச்சோந்தி இவைகளை மைசெய்து உபயோகப்படுத்த இராஜ இராஜாக்களும் பேதனமாவார்.

790. புருஷபேதன ஜாலம்.

கோதும்பைச் செடியை இராவில் கண்டுப்பிடிக்கவேந்து பச்சைமுலைத்தான் கருவழித்தாளிவையும் பங்கவர்கள் உண்ணும் வாய்பருக்கையும் நச்சுபல்லு பெருந்தும்பை இவைகளை கருசெய்து உபயோகப்படுத்த புருஷர்கள் பேதனமாவார்கள்.

791. ஸ்ரீபேதன ஜாலம்.

பொன்னுக்கன்னி செங்கழுனீர் தாளைக்கொன்றன் மூலி மடையன் குடியனைத்தான் காந்தல் பெருதும்பை கலையுலைத்தான் காக்கைகூடு கருந்தண்டு இவைகளை சேர்த்து மைசெய்து உபயோகப்படுத்த மாதர்கள் மனத்தை முரித்துவோட்டும் பேதனமாகும்.

792. மிருகபேதன ஜாலம்.

ஜீவன் கருங்குன்றி எட்டி மூசட்டை கழுகொம்பு கூகை கருங்காக்கை மண்டை ஓடு மூசுருமுட்டை விஷங்கள் வளத்தி பதி அலைத்தான் சாற்றிறைவிட்டு மைபோல் அறைந்து வைத்துக்கொண்டு உபயோகப்படுத்த மிருகங்களையெல்லாங் கலங்கியோடும் படியாகச் செய்யும் மிருகபேதனமாகும்.

793. தேவபேதன ஜாலம்.

கழுதையின்குளம்பும் அதின் கூடையும் கழுதைவீட்டையும் பாதரிவேர் மாவிலிங்கம்வேர் பூநந்தலை அடைத்தான் கச்சாக்குரிஞ்சி சிவனிவித்து இவைகளைச்சேர்த்து மைசெய்து உபயோகப்படுத்த தெய்வ பேதனமாகும்.

794. அக்கினிபேதன ஜாலம்.

மத்தாளி செவ்வகத்தி ஆலன் கொழுந்து சுண்டைவேர் மரைக்கிழங்கு துத்திவேர் பச்சைவோணன் கொத்தான்வித்து குப்பமேனிவேர் சங்குவளை ஓரிலைத்தாமரை இவைகள் ஒவ்வொன்றும் அக்கினிபேதனமாகும் சேர்த்து மைசெய்து உபயோகப் படுத்தலாம்.

795. உலோகபேதன ஜாலம்.

நாச்செவி நச்சுப்பல்லி வேப்பன் மரத்தில் கட்டிய கர்க்கையின் கூடு பச்சை ஓணன் இந்திரகோபம் சுண்டைவேர் தும்பைவேர் வரைபூச்சி

மாதர்கள் மாதவிடாயான தீட்டுசீலை இவைகளை கொண்டுவந்து ஒன்றாய் சேர்த்து மைசெய்து உபயோகப்படுத்த லோகபேதனமாகும்.

796. பேதனம் எட்டுக்கும் மூலமந்திரம்.

பேதனம் எட்டுக்கும் மூலமந்திரம் ஜெபிக்கும்விதம் எவ்விதமெனில் அரகர சிவயநமா திருப்புரதகனிதேவி நாரவி செந்தாமரையே யாத்தாள் பேதனமாம் எரிட்டபார்வையாளே பேதினி நீலி முக்கண்ணி பாங் டாங் டுங் டுங் சாரூபி சாரூபி ஆயி பிரத்தியங்கிரோ ஜெய ஜெய பேதையா பேதையா சிங் சிங் யங் யங் லங் மங் மங் யா யா சுவாஹா என்று ஆயிரத்தெட்டு உருஜெபித்து மையை உபயோகப்படுத்த பேதனம் எட்டும் சித்தியாகும்.

797. சர்வமாரண ஜாலம்.

செந்தும்பை சிவந்தபூச்சி எழுமுன்று [illegible] காக்கைமுட்டை ஊமத்தான் மத்தான்வேர் இவைகளை உபயோகப்படுத்த சர்வமாரணமும் ஆகும்.

798. அரசர்மாரண ஜாலம்.

அரளிவேர் புரசன்வேர் அருணி இவைகள் வகைக்குக்கழஞ்சு ஒன்றும் கொங்கன்முளை காத்தியன் குலமந்து மரமஞ்சம் ஓரிதழ்தாமரையும் மாண்டமனிதனுடைய பல்லும் மண்டையும் இவைகளைச்சேர்த்து கருவிரக்கி உபயோகப்படுத்த அரசர் மாரணமாகும்.

799. சத்துரு மாரண ஜாலம்.

நஞ்சு புங்கு ஜங்காயம் காசுத்தின் தலைவஞ்சகருடைய குலமும் வேறும் அரிந்து அதிககாபியாக யிருப்போர்களுக்கும் செரிஞ்சி விஷம் செங்கன்முளை இவைகளைசேர்த்து மைசெய்து உபயோகப்படுத்த வஞ்சகரை அருக்கும் சத்துருக்கள் மாரணமாவார்.

800. சர்வபூதபசாசு மாரண ஜாலம்.

நச்சுப்பல்லு கழுதைக்குளம்பு கழுதைக்கண் கடுகு முருங்கைவித்து கழுதை சடை பன்றியின் விட்டை கருநாபி எள்ளி ஜங்காயம் இவைகளை கொண்டுவந்து ஒன்றாய்ச்சேர்த்து மைசெய்து உபயோகப்படுத்த சர்வபூதமும் சர்வபசாசுகளும் மாரணமாகும்.

801. சர்வ ஜீவஜெந்துக்களின் மாரண ஜாலம்.

ஊமட்டிவேர் குழந்தையின்பித்து சந்தனம் கல்லொட்டி மதிமயக்கி கருநாபி சொல்மயக்கி பிணமயக்கி இவைகளை கொண்டுவந்து ஒன்றாகச் சேர்த்து மைசெய்து உபயோகப்படுத்த சர்வ ஜீவஜெந்துக்களும் மாரணமாகும்.

802. சர்வவிஷமாரண ஜாலம்.

குப்பமேனிவேர் நீலிவேர் கள்ளிவேர் வாளம் புலால்நாரி மாவிலிங்கு வேர் அழிஞ்சி காஞ்சொரி கருநொச்சி கார்த்திகைவேர் சித்திரமூலம் இவைகளை கொண்டுவந்து ஒன்றாய்சேர்த்து மைசெய்து உபயோகப்படுத்த சர்வவிஷமாரணமாகும் சர்வவிஷமும் நீங்கும்.

803. சர்வதேவ மாரண ஜாலம்.

எள்ளெண்ணெய் மனிதன் தலைமண்டை ஓடு காக்கையின் எச்சம் புறாவின் எச்சம் மயிரில்லா மாணிக்கம் சடைமிரட்டி தேவாங்கு பச்சை வோணான் அரிதாரம் இவைகளை எல்லாம் ஓரிடையாக கிருத்து மைசெய்து உபயோகப்படுத்த சர்வதேவமாரணமாகும்.

804. சர்வரிஷி மாரண ஜாலம்.

கொத்தமல்லிவித்து ஐங்கோலக்கரு புறாவின் பித்தும் எச்சமும் எட்டிவித்து கருங்குருவி வெள்ளிமருட்டி மகிழ்மருட்டி காக்கைரத்தம் இவைகளை கொண்டுவந்து ஒன்றாகச்சேர்த்து மைபோலரைத்து வழித்து திலர்தமிட்டுக்கொள்ள சர்வரிஷிகளும் மாரணமாவார்.

805. மாரணம் எட்டிக்கும் மூலமந்திரம்.

மாரணமெட்டுக்கும் மூலமந்திரம் ஜெபிக்கும் விதம் எவ்விதமெனில் மாரி பகவதி அம்பாள் திருசூலி டாகினி டாகினியே சாடு சாடு அய்யா அய்யா அரசர் மாரணி ஆயி சிபேர தேவி என்று ஆயிரத்தெட்டு ஜெபிக்க மாரணமெட்டும் சித்தியாகும்.

806. பாதாளம் தோற்றும் ஜாலம்.

மஞ்சள் ஜாதிக்காய் வளவித்து தண்ணீர் விட்டான் கிழங்கு தும்பை கையான்தகரை பசுவின்கண் இவைகளை கொண்டுவந்து ஓரிடையாக கிருத்தெடுத்து கல்வத்திலிட்டு சித்தாமணக்கு எண்ணெய்விட்டு மைபோல் அரைத்து இந்த மையை பத்திரப்படுத்தி வைத்துக்கொண்டு அஞ்சனம்போட்டுபார்க்க பாதாளம் முழுமையுந்தோற்றும்.

807. பூதகணங்கள் தோற்றும் ஜாலம்.

தண்ணீர்தேத்தி கொளும்பை குப்பைக்கீரைவிரை பச்சைசுராவித்தம் காக்கைகண் இவைகளைக் கொண்டுவந்து ஓரிடையாகக்கிருத்து ஒன்றாகச்சேர்த்துகல்வத்திலிட்டு வெள்ளீர்விட்டு மைபோல் அரைத்து வழித்து சிமிளில் வைத்துக்கொண்டு அஞ்சனம் போட்டுப்பார்க்க கண்ணில் பூதகணங்கள் தோற்றும்.

808. துளதூரத்திலுள்ள தேசங்கள் தோற்றும் ஜாலம்.

ஈசலின் இறகு சிறுகீரைவேர் ஆடுதின்னாப்பாளை காக்காயின் கஞ்சம்பித்தும் குரங்கின் மண்டை இவைகளைக்கொண்டுவந்து ஆவின்நெய் விட்டு அரைத்து மைபோல் செய்துவைத்துக்கொண்டு அஞ்சனம் போட்டுப்பார்க்க துலதூரமுள்ள தேசங்களெல்லாந் தோற்றும்.

809. ஜலத்திலுள்ள வைகளெல்லாம் தோற்றும் ஜாலம்.

கோசம் பச்சையோந்தியின் பித்தும் கண்ணும் கீழ்காய் நெல்லி நரியொட்டி கையான்தகரை இவைகளை கல்வத்திலிட்டு தேன்விட்டு மைபோல் அரைத்து வைத்துக்கொண்டு அஞ்சனம்போட்டும்பார்க்க ஜலத்திலுள்ள வைகளெல்லாந் தோற்றும்.

810. உலகிலுள்ள குறிமிகள்யாவும் தோற்றும் ஜாலம்.

கூகையினுடைய கண்ணும் பித்து இரவியும் தக்காளி பின்னை வாழை இவைகளின்வேர் கையான் தகரை வேர் காட்டின்நாகளை அழைக்கும்வேர் தும்பைவேரும் இவைகளைக் கொண்டுவந்து மைபோல் அரைத்து அஞ்சனம் போட்டுப்பார்க்க உலகிலுள்ள குறிமைகள்யாவும் தெளிவாகத்தோற்றும்

811. நினைத்தவை தோற்றும் ஜாலம்.

பூனைவணங்கிவேர் இலு இலுப்பைவேர் ஓரிலைத்தாமரை கீழ்காய் நெல்லிவேர் ஆடுதின்னாப்பாளைவேர் நீலிவேர் தும்பைவேர் செங்கழுநீர் கொளுஞ்சி இவைகளை ஓரிடையாக கிருத்து கல்வத்திலிட்டு மைபோல் அரைத்து வழித்து வைத்துக்கொண்டு அஞ்சனம் போட்டுப்பார்க்க ஏதேது நினைக்கின்றமோ அவைகளெல்லாந் தோற்றும்.

812. பரவை அஞ்சன ஜாலம்.

நன்றாய்ப்பழுத்த பலாப்பழத்தின் கொட்டை பூமியுதிர்தும் புத்து தேனும் சேர்த்து மைபோல் அரைத்து வைத்துக்கொண்டு கண்ணில் மையிட்டுக்கொள்ள பரவைகள் யாவுந்தோற்றும்.

813. வடனைஜாலம்.

கொற்றான் கொழிஞ்சி வண்ணை புன்னை வெள்ளாமணக்கு எத்தார் மூலி கருங்கண்ணி செம்பூத்தின் எச்சம் புறாவின்விறகு நற்றாமரை தால் ஜாதிலிங்கம் இவைகளை ஓரிடையாக சேர்த்து மைசெய்து உபயோகப்படுத்த மாதரும் அரசரும் வடனையாம்.

814. இராஜ வடனை ஜாலம்

குருஞ்சா கருங்குன்றி புனத்தின் கபுபுலிங்கம் அரிதாரம் கோஷ்டம் இவைகளை மாயானத்தில் கொண்டுபோய் ஜெபஞ்செய்து மையை உப

போகப்படுத்த இராஜ எட்டினையாகும் ஆகுல் மையை முன்னதாகசெய்து கொள்ளவேண்டும்.

815. புருஷ எட்டின ஜாலம்.

திருகுக்கள்ளி வெள்ளைகாக்கணன் செம்முள்ளி செங்கொழிஞ்சி தக ரை ஆறை கோஷ்டம் சக்குலம் இவைகளை ஓரிடையாக நிருத்தெடுத்து மைபோல் அரைத்து வழித்து வைத்துக்கொண்டு உபயோகித்தவர் புருஷ எட்டினையாகும்.

816. ஸ்திரி எட்டின ஜாலம்.

சிகப்பு சித்திரமூலம் ஆமணக்கு கோஷ்டம் சிறுகீர் காயினைக்கொன்றுன் மண்ணைத்தின்னும் பாம்பு இவைகளை ஓரிடையாக ஒக்கச்சேர்த்து மைசெய்து உபயோகப்படுத்த தவஞ்செய்யும் மாதரானாலும் எட்டினையாகும்.

817. மிருக எட்டின ஜாலம்.

பூனைக்காலிவேர் செங்கத்தாரி அருகின்வேர் முத்தக்காசு சல்லிஇருவேலி ஒட்டிவேர் தொட்டி நாயின் மலம் இவைகளை ஒன்றாய்ச்சேர்த்து மைசெய்து உபயோகப்படுத்த மிருக எட்டினையாகும் என முன்னோர் கூறினார்.

818. தேவ எட்டின ஜாலம்.

கருங்காக்கையின்கண் திருகுகள்ளி செங்கத்தாரி வெண்காக்கணம்வேர் குப்பமேனிவேர் வழிமரித்தான் தொட்டாசிணிங்கி பன்றிரத்தம் நாரை ரத்தம் இவைகளை ஓரிடையாக நிருத்தெடுத்து மைசெய்து உபயோகப்படுத்த பிசாசுமுதல் தேவர்களும் எட்டினையாகும்.

819. உலோக எட்டின ஜாலம்.

சிவமடக்கும்வேர் கள்ளிசேர்த்தான் துன்பை கோவின் கிறைவுபை பன்றிநெய் இவைகளை மைபோல் அறைத்து வழித்துக்கொண்டு உபயோகப்படுத்த உலோக எட்டினையாகுமென மேலோர் கூறுகின்றனர்.

820. சர்வபூத எட்டின ஜாலம்.

காட்டெலுமிச்சைவேர் ஆடுதின்னாப்பாளைவேர் கீழ்காய்நெல்லிவேர் சிறுகீரைவேர் சயிந்தகரைவேர் வேட்டையாடி மாண்டவனுடைய மண்டையோடும் பல்லும் ஒன்றாய் கூட்டி மைசெய்து உபயோகப்படுத்த சர்வபூத எட்டினையாகும்.

821. சர்வபூத எட்டின மூலமந்திரம்.

சர்வபூத எட்டின மூலமந்திரம் ஜெபிக்கும்விதம் எவ்விதமெனில் ஓம் சாட்டிதேவி சாமுண்டி ஆத்தாள் ஐமாதேவி ஹும் அங் நாரி நாரி எத்துஎத்து

எகையா எகையா அவட்டே அவட்டே அசர்ரா அம்மை சிங் சிங் சிங் வங் வங் சர்வ எட்டின சுவாகா என்று ஒரு லட்சம் உருஜெபிக்க சர்வபூத எட்டினையும் ஒருநொடியில் சித்தியாகும்.

822. அஷ்டகர்மம் எட்டிற்கும் சக்கரத்தின் உயிரெழுத்து.

உலோகவசிய சக்கரத்திற்கு உயிரெழுத்து அகாரமாகும் உச்சாடன சக்கரத்திற்கு உயிரெழுத்து தகாரமாகும் தம்பன சக்கரத்திற்கு உயிரெழுத்து பகாரமாகும் எட்டின சக்கரத்திற்கு உயிரெழுத்து உகாரமாகும் இவ்விதமாக அஷ்டகர்மங்களையும் அறிந்து வகாரத்தில் அறிந்துப் பார்க்கில் சக்கரத்தில் அடைத்தது மூலமாகத் தோற்றும்.

823. வசியங்களாகும் வாரங்கள்.

ஞாயிர் வசியம் திங்கள் மோகனம் செவ்வாய் எட்டின பேதனம் புதன் தம்பனம் வியாழம் உச்சாடனம் சனிக்கு மாரணம் வெள்ளிக்கு ஆக்ருஷணம் இவ்விதமாக அஷ்டகர்மங்களுக்கும் அறிந்துகொள்ளவும்.

824. வசியமாகும் திசைகள்.

கிழக்கிற்குமோகனம் தெற்கிற்கு மாரணம் மேற்கிற்கு உச்சாடனமாகும் வடக்கிற்கு பேதனமாகும் எட்டினைக்கு கன்னியாராசிக்கு தென்கிழக்கிற்கு தம்பனம் வாய்வுமூலைக்கு ஆக்ருஷணமாகும் ஈசானியத்திற்கு சகலமர்மமுமாம் இவ்வாறறிந்து செய்யசித்தியாகும்.

825. கல்லெறி குட்டி ஜாலம்.

நஞ்சுண்டிறந்துபோனவனை சுடலையில் தகனம் செய்வதை பார்த்துக்கொண்டிருந்து அந்த கருவை கொண்டுவந்து அதைவிரலில்தொட்டுக்கொண்டு மந்திரங்களொன்றையும் மறவாமல் ஆயிரத்தெட்டு ஜெபித்து எதிரியினுடைய வாசல் நனையாதவிடத்தில் கருவைதடவி விட்டுவர மனிதர்கள் கையினால் வாரி எறிவதுபோல் கல்லுகள் அநேகங்கோடிவந்து விழும் அப்போது அந்தமனையில்வாசம் செய்வோரெல்லாம் பிரமித்து நாவரண்டு இது யாரோ ஏவல் செய்தார்களென்று ஏங்குவார்கள் அந்தகருவைப்போய் கழுவி விட்டால் கல்லுவந்துவிழுவது நின்றுவிடும் அதில் வாசஞ்செய்பவர்களும் பயந்தெளிந்து வாழ்வார்கள்.

826. கெருடன் வசிய ஜாலம்.

கெருடன் வசியமாக சொல்லும் மந்திரம் என்னவெனில் ஏவோ நவ்வேஎன்றுசொல்ல கெருடப் பட்சியானது எதிர்நோக்கிவரும் சிவோஇவீயும் என்றுசொல்ல கருடனானது அரவத்தை தூக்கிக்கொண்டு ஆகாயமார்க்கமாகச்செல்லும் ஆவோ நாவோ என்றுசொல்ல அரவம் அவ்விடத்திற்குப்போகும் வாவோ நவ்வி என்றுசொல்ல கருடப்பட்சியானது மயங்கி நிற்கும்.

827. மிருகவசிய ஜாலம்.

மிருகங்கள் வசியமாகச் சொல்லும் மந்திரமென்னவெனில் சி-ஓ-என்று சொல்ல நேரிட்ட மிருகங்கள்யாவும் நினைத்திடும் அங் ஐ. என்று சொல்ல மிருகங்கள் ஒதுங்கி விலகிப்போகும் அய்யா என்று சொல்ல மிருகங்கள் யாவும் ஆடும்.

828. அரவத்தின் உச்சாடன ஜாலம்.

உம்-எ-ஓ என்று ஓத அரவமானது சிற்கும் அம்-எ-ஓ என்று ஓதிட அரவங்கள் ஆடும் நம்-சிவியும் என்று ஓதிட அரவங்களின் வாயைக்கட்டிடும் வம் யா-யா-என்றோதிட வந்து எதிரில் நின்ற அரவங்களெல்லாம் ஓடிப்போகும் சியாம்-ஊ என்று ஓதிட அரவங்கள் சீறிசிற்கும் நவ்-வை என்று ஓதிட அரவங்கள்பயந்து ஒதுங்கிப்போகும் சிவியும் என்று ஓதிட அரவங்கள் வாயில் ரத்தங்கக்கும் நாடி-வா என்றுஓத அரவங்களெல்லாம் நகர்ந்திடும்.

829. சர்வவிஷங்கள் நீங்க ஜாலம்.

சர்வவிஷங்களும் விட்டுநீங்க நவ்-சிவ் என்று ஜெபிக்கவேண்டும். சேர்வாளபருப்பில் விஷத்தைக்கலந்து அங்-ஊங் என்று ஜெபிக்க விஷ மேறி மாண்டவன் பிழைத்துக் கொள்வான் பட்டவன் பிழைக்கவேண்டு மாகில் சிவியும் என்று செபிக்கவேண்டும்.

830. கார்த்திகை வீரியார்ச்சுன மந்திரம்.

கார்த்திகை வீரியார்ச்சுன மந்திரம் ஜெபிக்கும் விதம் எவ்விதமெனில் ஓம்-ஆம் ஸ்ரீயும் சிவியும் கார்த்திகை வீரியார்ச்சுன சுவாகா என்று லட்சம் உருஜெபித்து பூசைசெய்து பத்து பிராமணருக்கு அன்னம் படைக்க சித்தியாகும் நினைத்த படிக்கெல்லாம் செய்யும்.

831. நரசிங்க மந்திரம்.

நரசிங்கமந்திரம் செபிக்கும்விதம் எவ்விதமெனில் ஓம் சிங்கமுகவா ஓம்-ஓம் பிடித்துகடித்து தொலைத்து சுற்றி கண்டுபிடித்து அறைவாளைப் போல் பசாசுபேய்கள் பொடிபட்டோட நரசிங்கராஜா வரணே ஸ்ரீம்சிவிம் சுவாகாஎன்று லட்சம் உருஜெபித்து தீர்ப்பணஞ்செய்து வோமம்வளர்த்தி அன்னம் படைத்து பூசைசெய்ய சித்தியாகும்.

832. யானையை வசியமாக்கும் ஜாலம்.

மேற்கூறிய நரசிங்க மந்திரத்தை செப்புத் தகட்டிலெழுதி பூசையில் வைத்து லட்சமுருஜெபித்து தகட்டையெடுத்து குளிசமாடி கட்டிக்கொண்டு யானை முன்செல்ல யானை வணங்கி வருவதுடன் இஷ்டம்போல் நடக்கும்.

833. மிருகங்களை வசியமாக்கும் ஜாலம்.

மேற்சொல்லிய நரசிங்கமந்திரத்தை காரீயத்தகட்டிலெழுதி பூசையில் வைத்து லட்சம் உருஜெபித்து தகட்டை குளிசமாடிக்கட்டி கொள்ள மிருகங்கள் கண்டவுடன் வீரிட்டோடும் அழைத்தால் அருகில்வரும் சொன்னப்படிக்கெல்லாம் செய்யும்.

834. பாழடைந்தமனை விருத்தியாகும் ஜாலம்.

மேற்கூறியப்படி நரசிம்மமந்திரத்தை எட்டிப்பலகையில் எழுதி பூசையில் வைத்து லட்சம் உரு ஜெபித்து அந்த பலகையை பாழடைந்த வீட்டில் தெருவாசக்காலின் உள் புரமாக செவித்தில் பதியவைக்கவேண்டும் அப்படி செய்துவைக்க நாளுக்குநாள் அவ்வீட்டிலுள்ள துஷ்டகிரகங்களும் போய் பிசாசுபூதம் முதலான வைகளுந் துலைந்து வீடு செழிப்படையும்.

835. நெந்நெல் விருத்தியாகும் ஜாலம்.

மேற்கூறியப்படி நரசிம்ம மந்திரத்தை பொன்தகட்டில் எழுதி அதின் மேல் ஐங்கோலகருவை பூசி பூசையில் வைத்து லட்சம் உரு ஜெபித்து நெந்நெல்விளையும் பூமியில்கொண்டுபோய் ஈசான்னிய மூலையில் புதைக்க ஒவ்வொருகதிர் முழம் நிகளமாகவும் ஓங்கிவளர்ந்து வரும் எழையானகுடும்பம் குபேரசம்பத்தாக வோங்கிவளரும்.

836. பேயோட்டும் ஜாலம்.

ஒருதாம்பாளத்தில் விபூதியைப்போட்டு அதைப்பரப்பி அதின்மேல் மேற்கூறிய நரசிம்மமந்திரத்தை எழுதி சூடங்கொளுத்தி வைத்து லட்சம் உரு ஜெபித்து அந்த விபூதியை பேய்முதலானது பிடித்திருப்பவர்களின் வாயில் கொஞ்சம்போட்டு சிரசில் கொஞ்சம்போட்டு மந்திரத்தை ஜெபித்துக்கொண்டேயிருக்க ஆடாதபேய்களெல்லாம் ஆடும் ஓடாத பேய்களெல்லாம் ஓடும்.

837. பயம் நீங்கும் ஜாலம்.

மேற்கூறிய நரசிம்ம மந்திரத்தை காரீயத்தகட்டில் எழுதி தன்னுடையப் பெயரையும் அதில் எழுதி பூசையில் வைத்து லட்சம் உரு ஜெபித்து குளிசமாடிக் கட்டிக்கொண்டு எந்தவிராத்திரிகளிலேனும் நாடுநகரங்களிலும் அச்சமில்லாமல் போகலாம் ஒருதுன்பமும் அணுகாது நன்மையுண்டாம்.

838. விபூதி பிடிக்கும் வித்தை.

ஒரு அறையை பசுஞ்சாணமிட்டு மெழுகி தீபங்கொளுத்தி வைத்து ஊதுவத்தியை கொளுத்தி இடது உள்ளங்கையில் விபூதியை போட்டுக் கொண்டு வலதுகைவிரலால் அந்த விபூதியைப்பிசைந்துக்கொண்டே நா

சிம்மமந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து பிறகு அந்த விபூதியை இரவில் பயந்தவர் அந்திசந்தி வேளையில் பயந்தவர் உச்சிவேளையில் பயந்தவர் கினவுகண்டுபயந்தவர் இன்னும் பலவிதத்திலும் பயந்தப்போர்களுக்கு இந்தவிபூதியைகொடுக்க உடனே பயந்தெளிந்து உடம்புதெளிவு கொடுக்கும் ஆனால் எந்தெந்த காரியத்தை குறித்து மந்திரம் எழுதும்போது அதில் அந்தபெயரையும் எழிதி வைக்கவேண்டும்.

839. பூதமோட்டும் ஜாலம்.

பூதமோட்டும் மந்திரம் ஜெபிக்கும் விதம் எவ்விதமெனில் ஓம் பவாத்துருகாதா ஓம் படுசுவாகா என்று லட்சம் உருஜெபித்து தர்ப்பணஞ்செய்து வோமம்வளர்த்தி அன்னம் படைத்து பூசைபோட்டு ஒரு ஜாமம் நின்று தியானிக்க சித்தியாகும் நினைத்தபடி எல்லாம் செய்யும் பசாசமுதல் பூதங்களெல்லாம் பறந்தோடும்.

840. மண்ணை அள்ளி கடலையாக்கும் ஜாலம்.

ஜாலமாடும் சபையில் வந்துநின்று தந்திரமாக மகாமாயமையும் ஐங்கோலக்கருவையும் ஒன்றாய்கலந்து கையிற் பூசிக்கொண்டு குட்டிச்சாத்தான் உச்சாடனமந்திரத்தை ஜெபித்துக்கொண்டே அங்குள்ளமண்ணை ஒருபிடி அள்ளி பொரிஞ்சகளையாக வேணுமென்று சபையோர்கள் முன்போட அப்போது வெருத்தகடலைபோல் உண்டாகும். அது குட்டிச்சாத்தானுடைய வேலையாகும். அந்த கடலையையும் தின்னலாம், சபையோர் ஆச்சரியப்படுவார்கள். இவ்வாறாகவே எவ்வகை தானியங்களையும் சபையோர்கள் பிரமிக்கும்படியாகச் செய்துக்காட்டலாம்.

841. கெண்ட பேரண்ட மந்திரம்.

கெண்டபேரண்ட மந்திரம் ஜெபிக்கும்விதம் எவ்விதமெனில் ஓம் ஓம் அகோரபிரபல கண்டபேரண்ட சிங்காவா வியாக்கிரக வாகா சாகா மிருகா காற்றூடு பல்லா வஷ்டவச்சரா சங்குசக்கரா காதுப்பிராணு மாலிதாகமா கெஜபட்சே எந்தராயிம்மா கற்பாந்தா அக்னிலீலா ஊதாப்புயத்திரத்திற்சில வச்சிரமான குண்டா தாஷ்டிக உக்கிரமூர்த்தி பட்சமாருதமச்சாந்த உத்தண்டனே உத்தண்டவ வஸ்திரசர்ப்பா கெண்டபேரண்டா சித்தியாவா என்று இந்தமாலை ஓதி பின்பு மூலமந்திரம் ஓம் இரீம் ஸ்ரீயும் கிலியும் ஐயும் சுவாகா கெண்டபேரண்ட நரசிங்கா மகா சர்ப்பானந்தகாயா சர்வசத்துரு நாச என்று அந்திஅந்தி வேளையில் தவறாமல் லட்சம் உருஜெபித்து பூசை முதலானதும்போட்டு நூறுபேர் பிராமணருக்கு அன்னம் படைத்து பூசை நாற்பதுநாளும் தவறாமல் செய்து முடிக்க கெண்டபேரண்ட சித்தியாகி கும்பின்பு சகல சித்தும் ஆடலாம்.

842. பிர்மதேரிசனை ஜாலம்.

ஜாலமாடும்பீடத்தில் வந்துநின்று சபையோர்களைப் பார்த்து இதோ அந்திரத்தில் பிர்மதெரிசனை காட்டுகிறேன் பாருங்களென்று மகாமாயமையை விரலில் தொட்டுக்கொண்டு கெண்டபேரண்ட மந்திரத்தை லட்சம் உருஜெபித்து அடே கெண்டபேரண்டா பிரமலோகம்போய் பிரமதேவரை அழைத்து வாடாவென்று மூன்றுதரம்சொல்ல ஆகாயமார்க்கத்தில் பிரமதேவன் அன்ன வாகனருடராய் பிரகாசமுடன் தோற்றுவார் பார்ப்போர்கள் யாவரும் அகமகிழ்ந்து ஆச்சரியப்படுவார்கள்.

843. மகாவிஷ்ணு தேரிசன ஜாலம்.

முன்போலவே சபையோர்களைப் பார்த்து பிரமதெரிசனம் கண்டுகளித்தீர்கள். இப்போது மகாவிஷ்ணுவின் தரிசனம் காட்டும் விநோதத்தைப் பாருங்களென்று ஐங்கோலக் கருவை விரலில் தொட்டுக்கொண்டு கெண்டபேரண்ட மந்திரத்தை ஆயிரத்தெட்டு உருஜெபித்து அடே கெண்டபேரண்டா வைகுந்தத்திற்குச் சென்று மகா விஷ்ணுவை அழைத்தோடி வாடாவென்று மூன்றுதரம் சொல்ல ஆகாயவீதியில் கெருடவாகனருடராய் லட்சுமி சமேதராய் தோற்றப்படும் பார்ப்போர்களும் மதிமயங்கி திகைத்து சுவாமியைப் பூசித்து வந்திப்பார்கள்.

844. ருத்திரதேரிசனஜாலம்.

முன்போலவே சபையோர்களைப்பார்த்து பிரமதேவன் மகாவிஷ்ணு இருவர் தரிசனமுங் கண்டுகளித்தீர் இதோ ருத்திரமூர்த்தி தரிசனம் பாருங்களென்று ஐங்கோலக் கருவை விரலில் தொட்டுக்கொண்டு கெண்டபேரண்ட மந்திரத்தை லட்சம் உருஜெபித்து அடே கெண்டபேரண்டா கொடுமுடி கயிலாயத்திற்குப்போய் ருத்திரமூர்த்தியை அழைத்தோடி வாடாவென்று மூன்றுதரம் சொல்ல ஆகாயவீதியில் பரமசிவன் பார்வதாதேவியுடன் இடபவாகனருடராய் தோற்றப்படுவார்கள். பார்ப்போர்கள் பிர்மித்து பரமனடியை தோத்தரித்து நிற்பார்கள்.

845. தேவர்கள்தேரிசனஜாலம்.

முன்போலவே சபையோர்களைப் பார்த்து மும்மூர்த்திகளின் தரிசனம் கண்டுகளித்தீர் இப்போது இந்திராதி தேவர்களின் தெரிசனம் காண்பிக்கின்றேன் பாருங்களென்று இந்திரஜாலக் கருவை விரலில் தொட்டுக்கொண்டு கெண்டபேரண்ட மந்திரத்தை லட்சம் உருஜெபித்து அடே கெண்டபேரண்டா இந்திரலோகஞ்சென்று இந்திராதிதேவர்களை அழைத்தோடி வாடாவென்று மூன்றுதரம் சொல்ல ஆகாயவீதியில் தேவர்கள் தோற்றப்படுவார்கள் கண்டசபையோர்கள் கண்குளிர்ந்துக் களிப்படைவார்கள் ஆனால்இந்த ஜாலங்களை இரவில்செய்து காட்டவேண்டும்.

846. சித்தர்தெரிசனஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் சபையோர்களைப் பார்த்து இப்போது சித்தர்களின் தரிசனம் காட்டும் விநோதத்தைப் பாருங்களென்று ஐங்கோலக் கருவை விரலில் தொட்டுக்கொண்டு கெண்டபேரண்ட மந்திரத்தை லட்சம் உருஜெபித்து அடே கெண்டபேரண்டா கானகத்தில் தபசுபுரியும் சித்தர் கூட்டங்களை அழைத்தோடி வாடாவென்று மூன்றுதரம் சொல்ல சபைநிறைய சித்தராகத் தோற்றுவார் பார்ப்போர்கள் பிரமிப்பார்கள்.

847. பூதபேதங்களை அடக்குஞ்ஜாலம்,

ஐங்கோலக்கருவை கையில் தொட்டுக்கொண்டு கெண்டபேரண்ட மந்திரத்தை ஆயிரத்தெட்டு உருஜெபித்து அடே கண்டபேரண்டா பூதபேதங்களைப் பிடித்துக் கட்டிக்கொண்டு வாடாவென்று மூன்றுதரம்சொல்ல அப்படியே கட்டிக்கொண்டு வருவான்.

848. பிரமராட்சதனை அடக்குஞ்ஜாலம்

ஜெகஜாலக்கருவும் அஷ்டமாசித்திமையும் ஐங்கோலக் கருவையும் ஒன்றாய்க்கலந்து விரலில் தொட்டுக்கொண்டு கெண்டபேரண்ட மந்திரத்தை ஆயிரத்தெட்டு உருஜெபித்து அடே கெண்டபேரண்டா பிரமராட்சதனை பிடித்துக் கட்டிக்கொண்டு வாடாவென்று மூன்றுதரம் சொல்ல கட்டிக்கொண்டு வருவான்.

849. சூனியம்வைப்புகளை நிவர்த்திசெய்யும் ஜாலம்.

சூனியம்வைப்பில் மெலிந்து துன்பப்படுவோர்களை முன்வைத்து ஐங்கோலக்கருவை விரலில் தொட்டுக்கொண்டு ஒருதாம்பாளத்தில் விபூதியைப்போட்டு சாம்பிராணிவத்தியை கொளுத்திவைத்து கெண்டபேரண்டமந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து அந்தவிபூதியை நோயாளர் தேகமாதிரண்டமும் பூசி உச்சியிலும்வாயிலும் போட பிணிநீங்கி சுகப்படுவார்கள்.

850. சத்துருக்களாலேநேர்ந்ததுன்பம் நிவர்த்திசெய்யும் ஜாலம்.

சத்துருக்களால் நேர்ந்ததுன்பங்களை விலக்கவேண்டில் ஐங்கோலக்கருவை விரலில்தொட்டுக்கொண்டு கெண்டபேரண்ட மந்திரத்தை லட்சம் உருஜெபித்து அடேகெண்டபேரண்டா என்மேல் எதிர்த்த சத்துருக்களை நாசப்படுத்துவாடா என்று மூன்றுதரம்சொல்லி ஜெபிக்க சத்துருக்களைநாசப்படுத்தி தனக்கு சுகமுண்டாகச்செய்யும்.

851. மிருகங்களை கட்டிவரும்படிசெய்யும் ஜாலம்.

ஜெகஜாலக்கருவை விரலில்தொட்டுக்கொண்டு கெண்டபேரண்ட மந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து கருவை பானை ஓட்டில்தடவி ஈசா

ன்னியமூலை பக்கம் விட்டெறிந்து அடே கெண்டபேரண்டா கானகத்திற்சென்று மிருககூட்டங்களை பிடித்துக்கட்டிக்கொண்டுவாடா என்று மூன்றுதரம் சொல்லி ஜெபிக்க அப்படியே கட்டிக்கொண்டு வருவான்.

852. விஷஜெந்துக்களெல்லாம் விலகியோடும் ஜாலம்.

சர்வவிஷ ஜெந்துக்களும் விலகியோடவேண்டில் கெண்டபேரண்ட மந்திரத்தை ஜெபித்துக்கொண்டு இரவிலேனும் பகலிலேனும் வனங்கள் வனாந்திரங்களிலேனும் மலைகுகைகளிலேனும் இன்னும் எந்தவிடங்களிலேனும் மேற்சொன்ன மந்திரத்தை ஜெபித்துக்கொண்டேபோக கண்ட சர்வவிஷஜெந்துக்களும் எதிர்நில்லாமல் மிரண்டு பயந்தோடி ஒளிக்கும்.

853. நினைத்தவையெல்லாம் சித்தியாகுஞ்ஜாலம்.

கெண்டபேரண்ட மந்திரத்தை ஜெபித்து சித்தியானவுடன் மேற்கூறிய ஜாலங்களும் பலிதமாகும் இந்த மந்திரத்தை ஜெபித்து எதைகொண்டுவரும்படி நினைக்கின்றையோ அதைகொண்டு வந்து எதிரில் வைக்கும் ஜாலமாடும்சபையிலும் வெகுவிநோதமாக செய்துகாட்டலாம் சபையோர்முதலானவரும் உன்னைப்புகழ்ந்துக் கொண்டாடுவார்கள்.

854. யானைசபையில்தோன்றி உடனேமாய மாய்மறையுஞ் ஜாலம்.

ஜாலமாடும் சபையில் வந்து நின்று சபையோர்களைப்பார்த்து இதோ ஒருமதயானை தோற்றமாகி உடனே மறைந்துபோகும்படி செய்யும் விநோதத்தை பாருங்களென்று ஐங்கோலக்கருவை விரலில்தொட்டு பலகையில் தடவி கெண்டபேரண்டமந்திரத்தை லட்சம் உருஜெபித்து அந்தப்பலகையை குபேரமூலைபக்கம் விட்டெறிந்து அடே கண்டபேரண்டா யானையை பிடித்துக்கொண்டு வந்து சபையில் நின்றுபார்ப்போர்களுக்குக் காட்டி மறைத்து விடவேண்டும் என்று மூன்றுதரம்சொல்லி மந்திரத்தை ஜெபிக்க அப்படியே சபையோர்கள் பிரமிக்கும்படியாக கொண்டுவந்துக் காட்டிமறைத்துவிடும் அப்போது உன்னை மகாமந்திரவாதி என்று மதித்துப்புகழ்வார்கள்.

855. சபையில் நின்றோர்கள் மிரண்டு ஓ புலியைகாட்டி மறைக்கும் ஜாலம்.

முன்போலவே சபையில் வந்து நின்று அங்குள்ளவர்களைப்பார்த்து முன்யானைவந்து மறைந்துப்போனது இப்போது புலிவரும் புதுமையைப்பாருங்களென்று ஐங்கோலக்கருவை விரலில்தொட்டு கெச்சக்காய் மீதில் தடவி கெண்டபேரண்டமந்திரத்தை லட்சம் உருஜெபித்து காயை வாய்வுமூலைபக்கம் விட்டெறிந்து அடே கெண்ட பேரண்டா முன்யானையைக்காட்டி மறைத்ததுபோல் இப்போது புலியைகொண்டுவந்து காட்டி

மறைத்து விட்டாயென்று மூன்றுதரம்சொல்லி மந்திரத்தை ஜெபித்துக் கொண்டேயிருக்க புலியானது சபையில் சீறிட்டு ஓடிவந்தவுடனே மறையும் அப்போது சபையோர்கள் மிரண்டு மூலைக்கு மூலை ஓடுவார்கள் சிலர் இது என்ன வசியமோ வென்பார்கள்.

856. காடியைகாட்டி மறைக்கும் ஜாலம்.

ஜாலமாடும் சபையில் வந்து நின்று சபையோர்களைப் பார்த்து காடிவரும் விநோதங்களைப் பாருங்களென்று ஜெகஜாலக்கருவை விரலில்தொட்டு கெண்டபேரண்டமந்திரத்தை லட்சம் உருஜெபித்து அடேகெண்டபேரண்டா காட்டில்வாழும் காடியை பிடித்துவந்து இந்த சபையோர்களுக்குக்காட்டி உடனே காட்டில் கொண்டுபோய் விட்டு விட்டா என்று மூன்றுதரம்சொல்லி மந்திரத்தை ஜெபித்துகொண்டேயிருக்க குபீலென்றுகாடியானது சபையில் வந்து தோன்றி மறைந்து விடும் ஆச்சரியப்படுவார்கள்.

857. சிட்டுக்குறிவி விநோத ஜாலம்.

ஜாலமாடும் சபையில்வந்துநின்று ஒருகூடையையெடுத்து அனைவருக்குங்காட்டி மேஜையின்மேல் வைத்து சபையோரைப்பார்த்து இதோ இந்தகூடையை இந்தமேஜையின்மேல் கவிழ்த்து திரக்கின்றேன் சிட்டுக்குறிவிகள் கூடைக்குள்ளிருந்துப் பறக்தோடும் விநோதங்களை பாருங்களென்று அஷ்டமாசித்திமையையும் ஐங்கோலக்கருவையும் கலந்து விரலில்தொட்டுக்கொண்டு கெண்டபேரண்ட மந்திரத்தை லட்சம் உரு ஜெபித்து கருவை கூடையில்தெளித்து கூடைமேல் துணியைப்போட்டு மூடி அடேகெண்டபேரண்டா இந்த கூடை நிறைய சிட்டுக்குறிவிகளை கொண்டுவந்து ரொப்பி மருபடியும் கொண்டுபோடாவென்று மூன்றுதரம் சொல்லி கூடையின்மேல் மூடிய துணியைத்திரக்க குபீலென்று சிட்டுக்குறிவிகள் பரந்து ஆகாயமார்க்கமாகப் போகும் அனைவரும் பிரமித்திருப்பார்கள்.

859. ஒட்டை விநோதஜாலம்.

ஜாலமாடும் சபையில் அங்குள்ளவர்களைப்பார்த்து ஒட்டையை இந்த சபைமுன்வரும்படிசெய்யும் விநோதத்தை பாருங்களென்று ஐங்கோலக் கருவையும் அஷ்டமாசித்திமையையும் கலந்து விரலில்தொட்டுக்கொண்டு கெண்டபேரண்ட மந்திரத்தை லட்சம்ஜெபித்து கருவை ஒரு சிறியக்கல்லில்தடவி அடே கெண்டபேரண்டா ஒட்டையை கொண்டுவந்து சபையில் அனைவரும் பார்க்கும்படியாகக்காட்டி முன்போல் மறைத்துவிட்டாவென்று மூன்றுதரம் சொல்லி கல்லைமேற்குதிக்காக விட்டெறிய உடனே ஒட்டையானது அனைவரும் பிரமிக்கும்படியாக சபையில் தோன்றி மறைந்துவிடும்.

859. பனமரத்தை அழைப்பிக்கும் ஜாலம்.

கெண்டபேரண்டமந்திரத்தை லட்சம் உருஜெபித்து பனமரத்தை பிடுங்கிக்கொண்டு வரவேணுமென்று மனதில்தியானிக்க உடனே பிடுங்கிக்கொண்டுவருவான் அனைவரும் ஆச்சரியப்படுவார்கள்.

860. சுரக்காய் வெடிக்கும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் ஒரு சுரக்காயை எடுத்து அனைவருக்குங்காட்டி இந்த சுரக்காய் தானேவெடிக்கும் விநோதத்தைப் பாருங்களென்று ஜெகஜாலக்கருவை விரலில்தொட்டு குறளி மந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து சுரக்காய்மேல் கருவை தந்திரமாகத்தெளிக்க உடனேபடாலென்று வெடிக்கும் ஆச்சரியப்படுவார்கள்.

861. பூசினிக்காய் வெடிக்கும்ஜாலம்.

முன்போலவே சபையோர்களுக்குமுன் ஒரு பூசினிக்காயை எடுத்து அனைவருக்குங்காட்டி சுரக்காய்வெடித்த விநோதத்தைப் பார்த்தீர்கள் பூசினிக்காய் வெடிக்கும் வேடிக்கையைப் பாருங்களென்று முன்போல் கருவை விரலில்தொட்டுக்கொண்டு குறளிமந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து கருவைகாயின்மேல் தெளிக்க உடனே படாலென்றுவெடிக்கும் பார்ப்போர்கள் திகைத்து பிரமிதது மிரண்டுநிற்பார்கள்.

862. பாராங்கல் சபையில்வந்துவிழுந்து மாயமாய் மறையும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் சபையோர்களைப்பார்த்து இப்போது இந்த சபையில் மலையிலுள்ளப்பாரைக்கல் வந்துவிழுந்து உடனே மாயமாக மறைந்துபோகும் விநோதத்தை செய்துகாண்பிக்கின்றேன் பாருங்களென்று கெண்டபேரண்டனை தியானித்து மந்திரம் லட்சம் உருஜெபித்து அடேகெண்டபேரண்டா மலையிலுள்ள ஒருபெரிய பாறையை தூக்கிக்கொண்டுவந்து இந்தசபையில் போட்டு உடனே மாயமாக மறைந்துவிடுவாயென்று மூன்றுதரம் சொல்லி மந்திரத்தை ஜெபித்துக்கொண்டேயிருக்க உடனே கல்லானது தபாலென்றுவந்து சபையில்விழுந்து உடனே மறைந்துபோகும் பார்ப்போர்களும் திகைத்துநிற்பார்கள்.

863. முள்ளின்மேல் படுக்கும் ஜாலம்.

எந்த இடத்திலாவது வைக்கோலைப்பரப்பி அதின்மேல் ஐங்கோலக் கருவைத்தெளித்து கண்கட்டுமையைத் திலர்த மிட்டுக்கொண்டு சக்கலாதேவி மந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து ஜாலக்காளை தியானித்து இந்த வைக்கோலின்மேல் படுத்துக் கொள்ளுகிறேன் பார்ப்போர்கள் யாவர்களுக்கும் முள்ளின்மேல் படுத்திருப்பதுபோல் தோற்றச்செய்யவ

யென்று மந்திரத்தை ஜெபித்துக்கொண்டே வைக்கோலின்மேல் படுத்துக்கொள்ளவும் பார்ப்போர்களெல்லாம் முள்ளின்மேல்படுத்துக்கொண்டிருக்கின்றனென்று பலவாறாகப் பேசிப்புகழ்வார்கள்.

864. கிரியை நகரச்செய்யும் ஜாலம்.

கிரியருகிற்சென்று தன்னுடன் வந்தவர்களைப் பார்த்து இந்தகிரியை நகர்ந்து வரும்படிச் செய்கிறேன் பாருங்களென்று ஜெகஜாலக் கருவையும் அஷ்டமாசித்தி மையையும் ஐங்கோலக் கருவையும் கலந்து ஒரு சிறிய கல்லில்தடவி கையில் பிடித்துக்கொண்டு கெண்டபேரண்ட மந்திரத்தை லட்சம் உருஜெபித்து கல்லை மலையின்மேல் விட்டெறிந்து அடே கெண்டபேரண்டா இந்தமலை பார்ப்போர் கண்களுக்கு நகர்ந்து வருவதுபோல் தோற்றமாகி உடனே எதாஸ்தானத்தில் இருப்பதுபோல் காட்டவேணுமென்று மூன்றுதரம் சொல்லி மந்திரத்தைஜெபித்துக் கொண்டேயிருக்க கிரிநகர்ந்து வருவதுபோல் பார்ப்போர் கண்களுக்குத் தோற்றும் அப்போதவர்கள் இது என்னபுதுமை என்று பார்த்துக் கொண்டிருக்கும்போதே எதாஸ்தானத்தில் இருப்பதுபோல் தோற்றும் இது என்ன பிரமவித்தையோவென்று மிரளுவார்கள்.

865. மாயா விநோத ஜாலம்.

ஜாலமாடும் சபையில் ஒரு கோழிமுட்டையை எடுத்து அனைவருக்குங்காட்டி இந்த முட்டையை மேஜையின்மேல் வைத்து மூடிப்போடுகிறேன் அது மாயமாக மறைந்து மறுபடியும் வரும் விநோதத்தைப் பாருங்களென்று உடனேமறைவுமையை தந்திரமாக முட்டையின்மேல் தடவி மூடிவிடவேண்டும். சற்று நேரம்பொருத்து மூடிய கூடையைத் திறந்துகாட்ட முட்டை மாயமாகப்போய் விட்டதுபோல் தோற்றும் அனைவரும் ஆச்சரியப் படுவார்கள் அப்போது நீ சபையோர்களைப்பார்த்து இப்போது மாயமாக மறைந்துபோன முட்டையை வரும்படியாகச் செய்யும் வேடிக்கையைப் பாருங்களென்று ஒருவருக்குந் தெரியாமல் மேற்படி முட்டையின்மேலிருக்கும் மறைவுமையை நன்றாய் துடைத்துவிட்டு முன்போல் மூடி சற்று நேரம்பொருத்து திறந்துகாட்ட முட்டையானது இருக்கும் சந்தோஷப்பட்டுப் புகழ்வார்கள்.

866. எதிரியை வணங்கச்செய்யும் ஜாலம்.

தனக்கு எதிரியினுடையப் பெயரை செம்புத்தகட்டில் மாறி எழுதி உச்சாடனமையை அதின்மேல்பூசி கெண்டபேரண்ட மந்திரத்தை ஆயிரத்தெட்டு உருஜெபித்து எதிரியின் வீட்டின் இறப்பில் சொருகிவிட்டுவர உடனே எதிரியானவன் பயந்து நடுநடுங்கி உன்காலில்வந்துவிழுவான்.

867. ஒறனைப்பிடிப்பி நல்லபாம்பை அழைப்பிக்கும் ஜாலம்.

ஒருதாளிபனை ஓலை நறுக்கில் ஓம் ஸ்ரீம் இரீம் சவ்வும் என்று எழுதி பின்பு ஓ நல்லபாம்பே இந்த சீட்டைகண்டவுடன் ஓடிவருவாயென்று கீழே எழுதி ஜெகஜாலக்கருவையும் சுடலைக்கருவையும் ஐங்கோலக்கருவையும் கலந்து சீட்டின்மேல்தடவி சக்காதேவி மந்திரத்தை ஆயிரத்தெட்டுஜெபித்து அம்மணி இந்த சீட்டைகீழே போடுகிறேன் ஒறன் வந்து அதை எடுத்துகொண்டுபோய் நல்லபாம்பிற்குக் காட்டி நல்லபாம்புஇந்த சபைக்குவரும்படியாக செய்யவேண்டும் என்று மனதில் நினைத்து மந்திரத்தை ஓதிக்கொண்டே சீட்டைகீழேபோட உடனே ஒறனொன்றுவந்து அந்த சீட்டை வாயில்கவ்வி யெடுத்துக்கொண்டு நல்பாம்புவசிக்கும் புத்திடமாகச்சென்று இந்த சீட்டை புத்தின்மேல் வைத்தவுடன் புத்திலிருக்கும்நல்லபாம்பானது சீறிவெளியேவந்து சீட்டைபார்த்தவுடன் பாம்பானதுப்பயந்து சரேலென்று சபைக்குவரும் சொன்னபடிக்கெல்லாம் செய்யும் அனைவரும் பிரமித்து ஆச்சரியப்படுவார்கள் பின்பு பாம்பைத்தன்னிருப்பிடம் போவென்று சொல்ல உடனே சரேலென்றுப்போய்விடும் உன்னைமந்திரவாதி என்றுப்புகழ்வார்கள்.

868. வர்த்தகம் விர்த்தியாகச் செய்யும்வித்தை.

சிரிடாங்கனை என்னும் செடியைக்கண்டுபிடித்து ஆதிவாரமும் பருவமும் கூடியதினத்தில் மஞ்சள் நூல் காப்புக்கட்டி பொங்கலிட்டு பலிகொடுத்து பூசைபோட்டு வேரைப்பிடுங்கிவந்து அந்த வேரின்மேல் அஷ்டமாசித்திமையை தடவி பூசையில் வைத்து காளபைரவர்மந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து வேரை எடுத்து குளிசமாடிக்கட்டிக்கொள்ள எந்தவர்த்தகம் செய்தாலும் விருத்தியடையும் லாபம் பெருகும்.

869. உத்தியோகம் விர்த்தியாகச் செய்யும் வித்தை.

குப்பமேனிச்செடிக்கு திங்கள்கிழமைதினம் கன்னியா லக்கினத்தில் மஞ்சள்நூல் காப்புகட்டி பொங்கலிட்டு பலிகொடுத்து பூசைபோட்டு மறுவாரம் சென்றுவேரைப்பிடுங்கி வந்து அந்தவேரின்மேல் ஐங்கோலக்கருவைப்பூசி பூசையில்வைத்து நீலகண்டர் மந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்துவேரை எடுத்து குளிசமாடிக் கட்டிக்கொண்டு எந்த இடத்திற்குப் போனாலும் நன்மையான வார்த்தைதபேசுவார்கள் உத்தியோகமும் நாளுக்குநாள் விருத்தியாகும்.

870. ரசமணிவித்தை.

பாதரசத்தை சுத்திசெய்து நாகப்பாம்பின் வாயில் வளர்த்து அதனெருப்பூவும் மஞ்சியும் போட்டு பாம்பின் வாயைக்கட்டி மேலேகூக்

கிக்கட்டி அதின்கீழ் பானையைவைத்தால் பாம்பானது அழுகிவிழும் சுகமானது கட்டிமணியாகவிழும் அதை எடுத்து உபயோகப்படுத்த சகல வேதை முதலானதும் வசியமாகும் நினைத்ததுவை எல்லாங் கூடும்.

871. வேதாள வித்தை.

ஜாலமாடும் சபையில்நின்று சபையோர்களைப்பார்த்து இதோ இரண்டு மாயா ஸ்திரிகளை அழைப்பிக்கின்றேன் பாருங்களென்று ஐங்கோலக்கருவை விரலில்தொட்டுக்கொண்டு வேதாளமந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து கருவை ஒரு சிறியக்கல்லில் தடவி குபேரமூலையக்கம் விட்டெறிந்து மந்திரத்தை தியானித்துக்கொண்டேயிருக்க உடனே ஆடையாபரண அலங்கிருதமுடன் எவ்வர்ணமுடைய இரண்டு ஸ்திரிகள் தோற்றுவார்கள் அதைகண்ட சபையோர் முதலினவர்களும் பிரமித்துப் பார்த்துகொண்டேயிருக்கும்போதே மாயமாய் மறைந்துவிடுவார்கள் பார்ப்போர்கள் மெய்மறந்து இது மகாபுதுமை என்று மகிழ்வார்கள்.

872. கானகவித்தை.

வனகத்தினிடமாகச்சென்று தன்னுடன் வந்தவர்களைப் பார்த்து இந்த வனத்திலுள்ள மிருகஜாதிகளை அழைப்பிக்கின்றேன் பாருங்களென்று ஜெகஜாலக்கருவையும் உச்சாடனக்கருவையும் ஐங்கோலக் கருவையும் ஒன்றாய்கலந்து மாத்திரைக்கோலில் பூசி கெண்டபேரண்ட மந்திரத்தை மூன்றுஆயிரத்தெட்டு ஜெபித்து அடே கெண்ட பேரண்டா இந்த வனத்திலுள்ள மிருக கூட்டங்களை அழைத்துவாடா என்று மந்திரத்தை ஜெபித்துக்கொண்டே மாத்திரைக்கோலைக் காட்டி அழைக்க ஒவ்வொருமிருகக் கூட்டங்களும் அணி யணியாக கூடிக்கொண்டு வீதிட்டோடிவரும் சொன்னபடிக்கெல்லாம் செய்யும் போவென்றால் தங்கள் தங்களிருப்பிடம் போய்ச்சேர்ந்துவிடும் அதைகண்ட அனைவரும் அலண்டு மிரண்டு மதிமயங்கி தியங்கி உன்னை கண்டால் நடுங்கி உன் அடியில் விழுவார்கள்.

873. எலுமிச்சம்பழம் வித்தை.

ஜாலமாடுமிடத்தில் ஒரு எலுமிச்சம்பழத்தை எடுத்து சபையோர்களுக்குக்காட்டி இந்த பழத்தை நாலுதுண்டாக அறுத்து பூமியில் போடுகிறேன் நாலுபட்சிகளாகப் பறந்துபோகும் விநோதங்களைப் பாருங்களென்று அஷ்டமாசித்தி கருவையும் ஜெகஜாலக்கருவையும் ஐங்கோலக்கருவையும் ஒன்றாய்கலந்து காயின்மேல் பூசி சக்கரதேவிமந்திரத்தை ஆயிரத்தெட்டுஜெபித்து ஜாலக்காரனை தியானித்து அம்மணி யிந்தபழத்தைநாலுபத்தையாக அறுத்து பூமியின்மேல் போடுகிறேன் நாலுபட்சியாகப் பறந்துபோவதுபோல் தோற்றச்செய்வா என்று மந்திரத்தை ஜெபித்துக்கொண்டே பழத்தை நாலுபத்தையாக அறுத்துக்கீழேபோட உடனே நாலுவகைபட்சிகளாக தோற்றமாகி மாயமாய்பறந்துபோகும் பார்ப்போர்கள் பிரமித்து

மூழிப்பார்கள் ஆனால் நீ கீழே அறுத்துப்போட்ட எலுமிச்சம் பழத்தின் பத்தையை ஒருவருக்குந்தெரியாமல் மறைத்து விடவேண்டும்.

874. பேய்த்துமட்டிக்காய் வித்தை.

ஜாலமாடுமிடத்தில் ஒருபேய்த்துமட்டிக்காயை எடுத்து சபையோர்களுக்காட்டி இந்த துமட்டிக்காயை நாலுபத்தையாக அறுத்து பூமியில் போடுகின்றேன் அந்த நாலுபத்தையும் நாலுவிஷஜெந்துக்களாக தோற்றமாகி மறையும் அற்புதத்தை பாருங்களென்று இந்திர ஜாலக்கருவும் சுடலைக்கருவும் ஐங்கோலக்கருவும் கூட்டி விரலில் தொட்டுக்கொண்டு முன்போல் சக்கரதேவி மந்திரத்தை ஆயிரத்தெட்டு உருஜெபித்து கருவை காயின்மேல்பூசி ஜாலக்காரனை தியானித்து அம்மணி இந்தபேய் துமட்டிக்காயை நாலுபத்தையாக அறுத்து பூமியில் போடுகிறேன்நாலுபத்தையும் நாலுவிஷ ஜெந்துக்களாகத் தோற்றமாகி மறைந்துபோம்படி செய்வாயென்று மந்திரத்தை ஜெபித்துக்கொண்டே காயை அறுத்துக் கீழே போட்டவுடன் நாலுவிஷ ஜெந்துகளாகத் தோற்றமாகி உடனே மாயமாய் மறைந்துவிடும் கண்டோர்கள் மலங்கலங்கி திகைத்து இதுஎன்ன புதுமையென்று மூழிப்பார்கள் நீ முன்போல் காயைதந்திரமாக மறைத்துவிடவேண்டும்.

875. நாலுமூலையிலும் நாலுபேய்கள் ஆடி மறையும் ஜாலம்.

ஜாலமாடு மிடத்தில் நாலுகருஊமத்தங்காயை எடுத்து சபையோர்களுக்குக்காட்டி இந்த காயை நாலுமூலையிலும் மூலைக்கொன்றாக வைத்துவிடுகிறேன் இந்தநாலுகாயும் நாலுபேய் ரூபமெடுத்து ஆடிமறையும் விநோதங்களைப் பாருங்களென்று சுடலைக்கருவையும் உச்சாடனக் கருவையும் ஐங்கோலக் கருவையும்கலந்து நாலுகாய்களுக்கும் தந்திரமாகப்பூசி நாலுமூலையில் வைத்துவிட்டு குறளிமந்திரத்தை ஆயிரத்தெட்டு உருஜெபிக்க நாலுமூலையிலும் நாலுபேயாகத் தோற்றமாகி ஆடிமறையும் அனைவரும் இது என்ன உச்சாடன மந்திரமோவென்று ஏக்கம்பிடித்து தங்கள் மனதிற்கு ஒன்றுந்தோற்றாமல் திகைத்து நிற்பார்கள்.

876. கதவின்றாள் திறக்கும் வித்தை.

ஒரு அறைக்குள் புகுந்துகொண்டு அறைக்கு வெளியிலிருப்போரைப்பார்த்து இந்த அறையின்றாளைப் போட்டுக் கொள்ளுங்கள் நானுள்ளே இருந்தபடியே அந்தத்தாளை திறந்துக்கொண்டு வெளியேவருகிறேன் பாருங்களென்று அறைக்குள் இருந்தபடியே சிறீம்-சிங்கு-அவ்வும்-அறீம் ஸ்ரீயும் என்று நூத்தியெட்டு உருஜெபித்து ஐங்கோலக்கருவை கதவின்மேல் தெளிக்க உடனே கதவினுடைத் தாப்பாள் படாலென்றுத் திறக்கும் திறந்தவுடன் நீ வெளியேவர அனைவரும்பார்த்து ஆச்சரியப் படுவார்கள்.

877. காய்க்க பூர்க்க பூவும் பிஞ்சும் உதிரும் வித்தை.

காய்க்கபூர்க்க பூவும்பிஞ்சும் உதிரும்படி செய்யும் வித்தை எவ்விதமெனில் கிலியும் ஓம்என்றுசொல்ல மரமானது விசேஷமாசக் காய்க்கும் ஐ-எ-என்றுசொல்ல மரத்தில் பூவானது பூர்க்கும் க-கசி என்றுசொல்ல பச்சென்ற மரத்திலுள்ள காய்களெல்லாம் உதிரும் உ-ஆ என்று சொல்ல மரத்திலுள்ள தளிரும் பூவும் உதிரும்.

878. வைரவர் தியான மந்திரம்.

வைரவர் தியானஞ்செய்ய ஓதும் மூலமந்திரம் எவ்விதமெனில் ஓம் சவ்வும் கிலியும் அரி ஸ்ரீயும் சிங் அங்கு சாயா அருளுவாய் என்று காலை மாலையுந்தவராமல் நூத்தியெட்டு உருஜெபித்து இந்தப்படிக்கு நாற்பது நாளும் செய்து நாற்பத்தோராநாள் பூசை முதலான தும்போட வயிரவர் சித்தியாகுவார். பின்பு எவ்வித சித்துமாடலாம்.

879. காளபைரவர் மூலமந்திரம்.

காளபைரவர் மூலமந்திரம் ஜெபிக்கும் விதம் எவ்விதமெனில் சிறிம் சிங்கு அவ்வும் அறிம் ஸ்ரீயும் என்று ஆயிரத்தெட்டு உருஜெபித்து சித்தியாகும் ஆனால் மேற்கூறியபடி செய்யவேண்டும்.

880. திரிபுரை தியான மூலமந்திரம்.

திரிபுரையின் மூலமந்திரம் ஜெபிக்கும் விதம் எவ்விதமெனில் ஓம் ஸ்ரீம் சிரியும் சிங் ஐய்யும் சிராழ் சிரியும் கிலியும் சவ்வும் ஊம்- ஆப் திரிபுரையே ரா-வந்தருளுவாய் என்று ஆயிரத்தெட்டு ஓதிக்கொண்டே சித்தியாகும்.

881. வாராகி தியான மூலமந்திரம்.

வாராகி மூலமந்திரம் ஜெபிக்கும்விதம் எவ்விதமெனில் ஓம் ஸ்ரீம் கிறியும் உவ்வும் அவ்வும் தேவி ராரா வாராகி ஙஙா வறிம் சவ்வும் ஐயும் என்று ஆயிரத்தெட்டு உருஜெபிக்க சித்தியாவாள்.

882. நாராயணி மூலமந்திரம்.

நாராயணி மூலமந்திரம் ஜெபிக்கும்விதம் எவ்விதமெனில் ஓம் ஐயும் சவ்வும் மவ்வும் ரா-அறிம் ஸ்ரீம் வவ்வும் சிங் கிலியும் ஆயி நாராயணி மனோன்மணி ராரா என்று ஆயிரத்தெட்டு உருஜெபிக்க சித்தியாவாள்.

883. வாலை தியான மூலமந்திரம்.

வாலையினுடைய மூலமந்திரம் ஜெபிக்கும்விதம் எவ்விதமெனில் ஓம் சவ்வும் கிலியும் ஐயம் ராரா ஓகோகோ கிறியும் ஸ்ரீயும் அறிம் வாலை ரா ரா யவசிமன அம் அங்குசாயா அருளுவாய் அம்மணிதாயி ராரா என்று ஆயிரத்தெட்டு உருஜெபித்துவர சித்தியாவாள்.

884. சாமளாதேவி மூலமந்திரம்.

சாமளாதேவி மூலமந்திரம் உருஜெபிக்கும் விதம் எவ்விதமெனில் ஓம் அறீம் ஸ்ரீம் கிலியும் சவ்வும் சாமளாதேவி சலாடம்பரி சர்வதயாநிதி அருள்புரிவாய்என்று ஆயிரத்தெட்டு உருஜெபித்துவர சித்தியாகும் பின்பு சகல வித்தையும் ஆடலாம்.

885. சாமுண்டீசுவரி மூலமந்திரம்.

சாமுண்டீசுவரி மூலமந்திரம் ஜெபிக்கும் விதம் எவ்விதமெனில் ஆதிபகவதி அம்பாள் ருத்திரி திரிபுர தகனி பாமன்மகிழ் கல்யாணி என்பங்கில் வாவா என்றுசொல்லி ஓம் ஸ்ரீம் கிறீம் சவ்வும் கிலியும் ஐயும் சுவாகா என்று ஆயிரத்தெட்டு உருஜெபித்துவர சித்தியாகும் பின்பு சகல வித்தைகளும் விளையாடலாம்.

886. சக்காதேவி மூலமந்திரம்.

சக்காதேவி மூலமந்திரம் ஜெபிக்கும்விதம் ஓம் அறீம் ஸ்ரீம் கிறீம் கிலியும் சவ்வும் மவ்வும் அவ்வும் ஐயும் சுவாகா சக்காதேவி தாயே சகல சித்தியாகும் அருள ராரா என்று ஆயிரத்தெட்டு உருஜெபித்துவர சித்தியாவாள் பின்பு சகலவித்தையும் ஆடலாம்.

887. காளி மூலமந்திரம்.

காளியின் மூலமந்திரமாவது ஜெபிக்கும்விதம் எவ்விதமெனில் றீம் ஸ்ரீம் கிறிம் கிலியும் சவ்வும் ஐயும் அருளுவாய் என்று ஆயிரத்தெட்டு உருஜெபித்துவர சித்தியாகும் பின்பு சகலத்திற்கும் இந்த மந்திரத்தை உபயோகப் படுத்தலாம்.

888. துர்க்கை மூலமந்திரம்.

துர்க்கையின்மூலமந்திரம் ஜெபிக்கும்விதம் ஓம் ஆம் ஊம் ஸ்ரீம் றீம் சுவாகா துர்க்காதேவி துணைபுரிவாய் என்று ஆயிரத்தெட்டு உருஜெபிக்க சித்தியாவாள்.

889. ஜாலக்காள் மூலமந்திரம்.

ஜாலக்காள் மூலமந்திரம் ஜெபிக்கும்விதம் எவ்விதமெனில் சாகினி டாகினி சாலக்காள் தேவீ ஞுஞு என்று லட்சம் உருஜெபித்து சத்தி பூசை முதலானதும்போட சித்தியாவாள் பின்பு நினைத்தபடி ஜாலங்களாட பலிதமாகும்.

890. மலையாள பகவதி மூலமந்திரம்.

மலையாள பகவதி மூலமந்திரம் ஜெபிக்கும்விதம் எவ்விதமெனில் ஓம் மலையாளபகவதி உக்கிரமலையாள பகவதி சகல சித்திற்கும் முதற்காரணி

அடியேனுக் கருள்புரிந்து அம்மணி என்று முந்தியாளித்து பின்பு ஓம் ஸ்ரீம் ரீம் கிலியும் சவ்வும்மவ்வும் சுவாகாவென்று ஆயிரத்தெட்டு உருஜெபித்துவர சித்தியாவாள்.

891 வேதாள மூலமந்திரம்.

வேதாளமூலமந்திரம் ஜெபிக்கும் விதம் எவ்விதமெனில் ஓம் ஸிரிம் வங் யம் கிலியும் வேதாளா என்பங்கில் வாவா என்று ஆயிரத்தெட்டு உரு ஜெபித்துவர வேதாளம் சித்தியாகும் நினைத்தவித்தை யாடலாம்.

892 பேதன வித்தை.

மூலப்பாவிரோடு காயத்தைக்கூட்டி ஊமத்தன்சார்விட்டு பேய்பீர்க்கன்தயிலமும் கூடவிட்டு மத்தியானவேளையில் பேதனமந்திரத்தை நூத்தியெட்டு ஜெபித்து இதைமைபோல் அறைத்து வைத்துக்கொண்டு பின்பு இந்த மையினால் கைகண்ட வித்தைகளெல்லாம் ஆடலாம்.

893 லோகவசிய வித்தை.

கிலேப்பனங்கிழங்கு தாளகம் இவை இரண்டையுங் கல்வத்திலிட்டு கரு ஊமத்தன் சார்விட்டு மைபோல் அறைத்து வழித்து சிமிளில்வைத்து லோகவசியமந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து மையை திலர்தமிட்டுக் கொண்டுபோக உலகமெல்லாம் உன்வசமாகும்.

894 மோகன வித்தை.

அரிதாரம் துடரிமூலம் நிறும் மூலி நாரத்தம் எலுமிச்சம் பழம் இவை மூன்றுவஸ்துவையும் ஓரிடமாக திருத்து கல்வத்திலிட்டு மேற்படி ரத்தமும் பழஞ்சாறும் விட்டுமைபோல் அறைத்து வழித்து சிமிளில் வைத்துக்கொண்டு மோகனமந்திரத்தை ஆயிரத்தெட்டுஜெபிக்க சித்தியாகும்.

895 ஸ்ரீவசிய வித்தை.

வசியமையை விரலில்தொட்டு வசியமந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து கைகால் தொட்டு கூட ஐங்கோலக் கருவையும் சேர்த்து பாதர்களின் நெற்றியில் திலர்தமிட வசியமாகியுன்பின் வருவார்கள்.

896 மாரண வித்தை.

எட்டிக்கொம்பைக் கொண்டுவந்து முனைபோல்சீவி அதின்மேல் கருவைப்பூசி மாரணமந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபிக்க சித்தியாகி ஜெகத்தில் நினைப்பதெல்லாம் தடையில்லாமல் நடக்கும்.

897 பிணியுண்டாக்கும் வித்தை.

மேற்கூறியகருவை தவளையினுடைய வாயில்செலுத்தி மாரணமந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து அந்த தவளையைபூமியில் புதைத்து வைக்க

பலவிதமான வியாதியும் தோன்றி பாதிக்கும் ஆனால் எதிரியின் பெயரை மாறிவைக்கவும்.

898 வித்துவேஷண வித்தை.

ஐங்காயம் வெள்ளைபாம்பின் ஊன் சுடலைக்கருவு இவை மூன்றையுங்கலந்துக்கொண்டு வித்துவேஷண மந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து மாலையிலும் காலையிலும் எரியினிடத்தில் இந்தக்கருவை எதிரியுடையபெயரெழுதி யிருக்கும் சீட்டில் பூசி கொண்டுபோய் வைக்க எதிரியினுடையதேகமெல்லாம் சொரிகிளம்பி அதிகமாக வியாதிஉண்டாகும் அதை எடுத்து ஆத்தில்கழுவி சீட்டை ஆத்திலேயே விட்டுவிட தேகம் சுவஸ்தமாகும்.

899 வியாதி நீங்கவித்தை.

சுணங்கன்பில் வெண்ணிறமான பாம்பின் ஊன் ஐங்கோலக் கருவு இவை மூன்றையும் ஒன்றாய்சேர்த்து வைத்துக்கொண்டு வியாதியஸ்தனுடைய பெயரை பனம்வோலையில் எழுதி கருவை யதின்மேல் தடவி மற்றயிரண்டு வஸ்துவையுங் கூடசேர்த்து மந்திரம் ஆயிரத்தெட்டு ஜெபித்து நீர்க்கரையில் கொண்டுபோய்வைக்க வியாதிகளெல்லாம் சூரியனைகண்ட பனிபோல் நீங்கிவிடும்.

900 உரு மாறும் வித்தை.

கரும்பூனையின் ரத்தம் கதலியின்சார் அத்திவிரை வாழையின்பிசின் இவைகளை அறைத்து குளிகைசெய்துக் கொள்ளவும் பின்பு சத்திமந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து சத்திக்கு பூஜை முதலானதும் போட்டு பிறகு குளிகையை எடுத்து சித்தாடவேண்டும்.

901 பூனை உருவாகும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் வந்து நின்று சபையோர்களைப் பார்த்து இதோ மனிதனாயிருக்கின்றவன் பூனையாக்குறேன்பாருங்களென்று ஒருவருக்குந்தெரியாமல் உருமாறுங்குளிகையை வாயில் போட்டுக்கொள்ள பார்ப்போர்களுக்கெல்லாம் திடுக்கிடும்படியாக மனிதரூபம்மாறி எத்திக்கும் பூனை உருவாகத்தோற்றும் குளிகையை கக்கிவிட எப்போதும்போல் மனிதரூபமாகத்தோற்றப்படுவான் சபையோர்கள் யாவரும் இது என்ன கண்கட்டு வித்தையோ அல்லது காளியின்வசியமோ என்று மனம்போனபடி பேசிக்கொள்வார்கள்.

902 நாயுருவாகும் ஜாலம்.

முன்போல் சபையோர்களைப்பார்த்து முந்தி பூனையான விநோதங்களைப்பார்த்து மகிழ்ந்தீர்கள் இப்போது நாயுருவாகும் அற்புதத்தைப் பாருங்களென்று மேற்படி உருமாற்றுங் குளிகையில் ஒன்றை எடுத்து சத்தி

யின் மந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து நாயுருவாக வேணுமென்று தியானித்து ஒருவருக்குந் தெரியாமல் வாயில்போட்டுக்கொள்ள எத்திக்கும் நாயுருவாகத்தோற்றும் சபையோர்கள் பிரமித்து ஆச்சரியப் படுவார்கள் குளிகையைகக்கிவிட மனிதருபமாகத் தோற்றும் நாயுரு மறைந்துபோம்.

903 விலங்குதரிக்கும் வித்தை.

கருடன்முட்டையிட்டு குஞ்சுபொருத்திருக்கும் கூண்டைப்பார்த்து கருடனில்லாசமயத்தில் மரத்தின்மேலேறி அந்த குஞ்சுகளின் காலில் இரும்பு விலங்கைதரித்துவிட்டு வந்துவிடவேண்டும் அந்த கருடன்வந்து பார்த்து பரிதாபப்பட்டு உடனே அந்த விலங்கு தெரிக்கும்படியான மூலிகைகொண்டுவந்து விலங்கைதெரிக்க செய்யும் அந்த கூண்டைவிட்டு அப்பால் குஞ்சுகளோடுப் பறந்துப்போகும் அதை நீபார்த்து கொண்டேயிருந்து அம்மரத்திலேறி கூண்டை கொண்டுவந்து அம்மூலிகையை கண்டு எடுத்து வைத்துக்கொள்ளவும் மூலிகையெடுக்கும்விதம் அந்த கூண்டை தீயில்போட்டு எறிக்கிறபோது மூலிகை பச்சென்றிருக்கும் அதைபார்த்து எடுத்துக்கொள்ள வேண்டியது.

904. பூட்டுத்தெரிக்க வித்தை.

கிரிப்பிள்ளையின் கூண்டைகொண்டுவந்து ஓடுகின்ற நீரில்விட எல்லாம் தண்ணீர் ஓடும் வாட்டமாகச் செல்லும் அதிலுள்ள மூலியானது எதிர்நோக்கிவரும் அதைப்பார்த்திருந்து அந்தமூலிகையை எடுத்துவந்து பத்திரப்படுத்திவைத்துக் கொள்ளவும் இந்தமூலிகையை பூட்டியிருக்கும் பூட்டின்மேல் வைத்தால் பூட்டுடக்கென்று தெரிந்துப்போகும்.

905. சத்துருவை ஜெயம்பண்ணும் வித்தை.

கோழிமுட்டையின்மேல் சடலைமையால் உருவெழுதி எதிரியின்பெயரையும் மாறி கருவைப்பூசி மந்திரம் ஆயிரத்தெட்டு ஜெபித்து முட்டையைகொண்டுபோய் புதைத்துவிட சத்துருக்கள் உன்னைவணங்கி வருவார்கள் நீ நினைத்தகருமங்களெல்லாம் ஏகமுடியும்.

906. வியாதியுண்டாக்கும் வித்தை.

புறாவின்முட்டை இந்திரகோபப்பூச்சி வல்லூறு குருவியின் பித்து சுடலைக்கருவும் இந்த நாலுதினுசையுஞ் சேர்த்து அறைத்து மைசெய்து வைத்து காளியின் மந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து பிறகு எதிரியினுடையப்பெயரை தாளிப்பனம் ஓலையில் மாறி எழுதி இந்தமையைப் பூசி அவன்வாழும்படியான மனையின் யிறப்பில் கொண்டுபோய் வைக்க பிணிபடுவான் இதை எடுத்து நீரில் அலம்பி ஓடுகின்ற கெங்கையில் விட பிணி உடனே நீங்கிவிடும்

907. சத்துருபேதன வித்தை.

அறுமந்த மந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து பின்பு எதிரியினுடைய காலடி மண்ணை எடுத்து கருவைக்கலந்து வேலைசெய்துவைக்க வீரணம் பாதியாகக்காணும் அவன்வீடெங்கும் குறங்குகளாகத் தோற்றும் தரணியோர் அதிசயப்படுவார்கள்.

908. வேறுமுறை வசிய வித்தை.

தொட்டால்வாடி செடியின்வேர் அறுணையின்வால் காலின்கீழ் மண்ணும் இவைகளை ஒன்றாய்சேர்த்து மோகினிமந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபிக்க மாதர்கள் உன்னைத்தேடி வருவார்கள் கேட்டதெல்லாம் தருவார்கள் இஷ்டம்போலும் நடப்பார்கள்.

909. காந்தகிண்ணம் செய்யும் வித்தை.

காந்தத்தை ஒருசேர் நிறுத்தெடுத்து அத்துடன் வீரநாகபாஷாணம் அவ்விடையே பனிநீரும் சேர்த்து இவ்விரண்டையும் பீங்கானில் விட்டு அதில்காந்தத்தையும் அதில்வைத்து சூரியபுடம் ஒருநாழிவைக்க காந்தத்தினுடைய சத்தானதுப்போகும் அந்த சத்து மஞ்சள் நிறமாக விருக்கும் அதை எடுத்துகொண்டுவந்து காலாக்கினி தயிலத்திற்போட்டு மறைவாக அறைநாழிவைக்க பச்சனிறமுள்ள மெழுகுபோலாகும் அதனுடன் அதை எடுத்து சட்டிக்குள்வைத்து அஷ்டமாதைலம் ஒருபலம் அதில்விட்டு மூப்பூவும் பணவிடைசேர்த்து முன்னவனை தியானித்து அடுப்பின்மேல் எத்திசுடுகாட்டுக்கொம்பினால் எடுத்துவர இருநாழிகையில் சாதுபோல் உருகும் அந்த உருகும்பதம் பார்த்து யிறக்கிவிடவேண்டும் இதற்கு முன்னதாக மெழுகினால் அச்சுசெய்து வைத்திருந்து அந்த அச்சில் மேற்படி காந்தத்தைசாக்க அது அந்த அச்சில் பாய்ந்து கிண்ணம்போலாகும் அதை அறைநாழி சென்று எடுத்து பார்க்க காந்தக்கிண்ணமானது விநோதமாக தோற்றும்.

910. மிட்டாயிவர்க்கங்கள் அழைப்பிக்கும் ஜாலம்.

ஜாலமாடும்சபையில் வந்து நின்று ஒருபெரியதாம்பாளத்தைகொண்டு வரும்படிச்சொல்லி அதைமேஜையின்மேல் வைத்து அனைவரையும் பார்த்து இந்த தாம்பாளத்தின் நிறைய பலவிதமான மிட்டாயவர்க்கங்கள் வந்து நிறைந்திருக்கும்படி செய்குறேன்பாருங்களென்று உச்சாடனக்கருவை மந்திரக்கோலில் தடவிக்கொண்டு ஐங்கோலக்கருவை விரலில்தொட்டு குட்டிசாத்தான் மந்திரத்தை ஆயிரத்தெட்டுஜெபிக்க குட்டி கண்ணுக்கு தோற்றமாவான் அப்போது நீ அடே குட்டிச்சாத்தான் நீ இந்த கொடிக்குள் மிட்டாய்கடைக்குச்சென்று அங்குள்ள தினுசுகளில் ஒன்றுகூடவிடாமல் வகைக்கு இரண்டாபலமாக கொண்டுவந்து இந்தமேஜைமேல்

இருக்கும்தட்டில் வையடாவென்று மந்திரத்தை ஜெபித்துக்கொண்டே கருவை தாம்பாளத்திற்றட்டின் மேலே ஒருபெரியகூடையைப்போட்டு மூடி சபையோர்கள் மிரளும்படியாக மாந்திரக்கோலால் மூன்றுதரம் தட்டி கூடையைத் திறந்துக்காட்ட பிட்டாயிவைகையெல்லாம் தட்டுகிறாய வந்திருக்கும் சபையோர்கள் பிரமைகொண்டவர்போல் பார்த்து வேர்த்து முழிப்பார்கள் நீ உடனே துணியைமூடி தாம்பாளத்தை அப்புறம் கொண்டு போய்விடவேண்டும்.

911. பயந்தெளியவித்தை.

எத்தைசொன்னாலுங் கேட்கும் சத்தைச்சூரிசெடிக்கு ஆதிவாரமும் இராணமுங்கூடிய தினத்தில் மஞ்சள்நூல் காப்புகட்டி பொங்கலிட்டு பலி கொடுத்து பூசைபோட்டு வேரைப்பிடுங்கிவந்து பூசையில்வைத்து நாற்பது நாளும்தவறாமல் பைரவர்மந்திரத்தை நாளொன்றுக்கு இருவேளையும் ஆயிரத்தெட்டு உருஜெபித்துவந்து நாற்பத்தோராம்நாள் பெரியபூஜைபோட்டு பின்புவேரை எடுத்து குளிசமாடிக் கட்டிக்கொண்டு சத்துருக்கள் முன்போக சத்துருவணங்கிவருவார்கள் மிருகங்கள் முன்போக மிருகங்களெல்லாம் வீரிட்டோடிங்கியோடும் கள்ளர்கள் முன்போக கலந்து உறவாகப்பேசுவார்கள் குலஞ்சர்கள் முன்போக கருவிகளை மறைத்து நல்ல வார்த்தையாடுவார்கள் அரசர்கள் முன்போக அன்பாகப்பேசுவார்கள் பந்துஜெனங்களின் முன்போக பட்சமாக அழைத்து வார்த்தையாடுவார்கள் வர்த்தகம் உத்தியோகம் கைத்தொழில் முதலானதும் விருத்தியாகும் எடுத்தவேலைகள் இடையூறில்லாமல் முடியும் ஆனால் ஒவ்வொருதொழிலுக்குப் போகும்போதெல்லாம் பைரவர்மந்திரத்தை ஜெபித்துக்கொண்டே போகவேண்டும்.

912. அற்புதஜால வித்தைகளாகும் மாயா சத்திக்கரு.

விஷந்தீண்டி இரந்த மனிதனைக் கொண்டுபோய் புதைத்து விட்டு வந்த இடத்தை அடையாளமாகப் பார்த்துக் கொண்டிருந்து ஒரு மண்டலம் சென்றபின்பு அதை தோண்டி அஸ்திகளைக் கொண்டுவந்து வைத்துக்கொள்ளவும் அத்துடன் கூளியின் பித்தும் பித்தும் கரும்பூனையின் பித்தும் கள்ளிகாக்கையின் பித்தும் நரியின் பித்தும்பித்தும் கோட்டான்ரத்தமும் பித்தும் மாடப்புறாவின் பித்தும் பச்சைப்பாம்பு பச்சோந்தி பச்சத்தவளை கருங்கோழிமுட்டை இவைகளை எல்லாம் ஒரு பாண்டத்திலிட்டு அத்துடன் நாய்ப்பாலைவேர் முசுமுசுக்கைவேர் முடக்கொத்தான்வேர் நரிமிரட்டிவேர் அதுவளைவேர் கிழ்காய் நெல்லிவேர் கவிழ்தும்பைவேர் வெள்ளெருக்கைவேர் நெரிஞ்சி கருத்துளசிவேர் பத்திராட்சிவேர் வெள்ளருகு புளியாரை ஆடுதின்னாப்பாளைவேர் குப்பமேனிவேர் பேய்ச்சுரைவேர் கையான் தகரைவேர் பொடுதலை செருப்படை அழுமீவேர் மிசமியம் செந்நாயுருவி

வேர் சிவகரந்தைவேர் செவ்வல்லி இவைகள் வகைக்கு இரண்டு பலமாக கிருத்தெடுத்து மேற்படி பாண்டத்தில் சேர்த்து அத்துடன் கிலேப்பனைவேர் அமுக்குறாங்கிழங்கு சிவனார்கிழங்கு மெருகங்கிழங்கு மினகரணைவெட்பாலைவேர் ஆகாசகெருடன் கிழங்கு பூதவிருட்ச மதின்பட்டை சித்திரமூலம் பட்டை செம்பருத்திவேர் துத்திவேர் பூவரசன்பட்டை அத்திவேர்பட்டை ஆலம்பட்டை அசோக விருட்சத்தின் வேர்பட்டை மாதளம்வேர் விலாமிச்சம்வேர் வில்வவேர் சரக்கொன்றைவேர் இவைகள் வகைக்கு ஒருபலமாக கிருத்தெடுத்து முன் மருந்தோடு ஒக்கசேர்த்து அதில் அரைபடி முத்தெண்ணை வார்த்து பாண்டத்தின் வாயைமூடி சீலைமண் செய்து மூன்றுநாள் சூரியபுடமாக வைத்து மூன்றாம்நாள் பூமியில் ஒண்ணரையடி பள்ளந்தோண்டி அதில் சுடுகாட்டுசாம்பலை கொஞ்சம்போட்டு அந்த குழிமத்தியில் ஒருசிறிய கலசம்வைத்து கலசத்தின்மேல் ஒருசாணகியின் மத்தியில் சிறியதுவாரஞ் செய்துவைத்து பாண்டத்தின்கீழ் அதுபோலவே சிறிய துவாரஞ்செய்து ஜானகியின்மேல் வைத்து சுடலைசாம்பலால் குழியைமூடி விடவேண்டும். பின்பு ஒரு மண்டலம் சென்றபிறகு அந்த குழியின்மேல் ஒருஜாதி விரகால் இரண்டுஜாமம் எரித்து தீ ஆறினபின் குழியைத்தோண்டி பாண்டத்தை எடுத்து அப்புறம் வைத்துவிட்டு சிறிய கலசத்தை எடுத்துப்பார்க்க தயிலம் இறங்கியிருக்கும் அதையெடுத்து அத்துடன் புனுகு கஸ்தூரி கோரோசனை இவைகள் வகைக்கு கால்கழஞ்சு கூட சேர்த்து பூசையில்வைத்து மாயாசத்தி மந்திரம் ஓம் அரீம் ஸ்ரீம் றீம் கிலியும் சவ்வும் ஐயும் மாயாசத்திராரா கிரியாசத்தி ராரா சிறிம் சுவாகாவென்று இருபத்தொருநாளும் காலைமாலை தவறாமல் ஆயிரத்தெட்டு உருஜெபித்து கொண்டுவந்து சித்தியானவுடன் பூசைபோட்டு பலிகொடுத்து மையையெடுத்து சிமிழில் பத்திரப்படுத்தி வைத்துக்கொண்டு இஷ்டமான ஜாலங்கள் ஆடலாம்.

913 எலுமிச்சம்பழம் அந்திரமாகபோகும் ஜாலம்.

ஜாலமாடும் சபையில் வந்துநின்று ஒரு எலுமிச்சம்பழத்தை எடுத்து அனைவருக்கும் காட்டி இந்தபழம் ஆகாயமார்க்கமாகப் பறந்துபோகும் விநோதத்தை பாருங்களென்றுங்களென்று மாயாசத்தி கருவைவிரலில்தொட்டு மாயா சத்திமந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து கருவைபழத்தின்மேல் தடவி வாசலில்வைத்து ஆகாயமார்க்கமாக போவென்று சொன்ன உடனே பழமானது ஜிவ்வென்று கிளம்பிபோகும் பார்ப்போர்களும் பிரமித்து அந்திரதேவதை வசியமென்று ஆனந்தப்படுவார்கள்.

914 எலுமிச்சம்பழம் சொன்னபடி விளையாடும்ஜாலம்.

ஒரு எலுமிச்சம்பழத்தை முன்போல் கையிலெடுத்து சபையோர்களுக்குக்காட்டி இந்தப்பழம் விளையாடும் விநோதங்களை பாருங்களென்று மா

யாசத்திக் கருவை விரலில்தொட்டு ஜெபித்து கருவைகாயிற்றட்டி அம்ம ணி இந்த பழத்தை சபையோர் மடியின்மேல் குதித்துவிளையாடி வரும்படிச் செய்வரென்று தியானித்து பழத்தைபூமியின்மேல் வைக்க அந்த பழமா னது இவ்வென்று கிளம்பி சபையோர்கள் மடியின்மீதில் போய்பிரண்டு விளையாடிவரும் அனைவரும் ஆச்சரியப்பட்டு இது மகாஅற்புதமையாக விருக் குதென்றுபிரமிப்பார்கள்பழம் அவர்கள்கையிலகப்படாது உன்னிடம்வந்த வுடன்லபையை தூடைத்துவிட பழத்தின் விளையாட்டு நின்றுவிடும்.

915 எலுமிச்சம்பழம் மோகினியாகும் ஜாலம்

ஜாலமாடுமிடத்தில் ஒருதிரைகட்டி சுற்றிலும் பந்தோபஸ்து செய்து பிறகு ஒரு எலுமிச்சம்பழத்தை கையிலெடுத்து சபையோர்களுக்குக் காட் டிஇந்த பழத்தை இந்த திரைக்குள் போடுகிறேன் மோகினி ஸ்திரியாக தோற்றும் விநோதங்களை பாருங்களென்று அனைவரையும் திரைக்குள் போய் பார்த்துவரும்படியாகச் செய்து மாயாசத்தி கருவை விரலில்தொ ட்டுதொட்டு மாயாசத்திமந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து கருவைபழத் தின்மேல்தடவி மாயாமோகினியாக தோற்றவேணுமென்று தியானித்து பழத்தைதிரைக்குள் போட்டு மந்திரத்தை ஜெபிக்க மோகினி ஸ்திரியாக தோற்றும் அனைவரையும் திரைக்குள்போய் பார்க்கும்படி செய்து உட னேதிரையை எடுத்துவிட மாயமாய்மறைந்துபோகும் பார்த்தபேரெல்லாம் பரிதாபத்துடன் இன்னொருதரம் அந்தஸ்திரியை எப்போகாண்போமெ ன்று ஏக்கப்பிடித்து நிற்பார்கள்.

916 எலுமிச்சம்பழம் ரிஷியாகும் ஜாலம்

இரவில் ஒருவிதி அறையை சுத்தப்படுத்தி தீபமேற்றிவைத்து கத வை தாள்போட்டுக்கொண்டு ஒரு எலுமிச்சம்பழத்தை எடுத்து சபையோர் களுக்குக்காட்டி இந்தப்பழத்தை இந்த அறைக்குள் போட்டு கதவை மூடி கிறேன் அந்த அறைக்குள் ரிஷி ஜெபம் செய்துக் கொண்டிருக்கும் விநோதங்களைப் பாருங்களென்று அனைவரையும் அறைக்குள் அனுப்பி சோதனைபார்க்கும்படி செய்து இறக்கும் நீ மாயாசத்திக்கருவை விர லில்தொட்டு மாயாசத்திமந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து ரிஷி உரு வாகதோற்றவேணுமென்று தியானித்து அனைவரையும் வெளியேவரும் படிச்செய்து பழத்தை அறைக்குள் போட்டு மூடி கதவை தாளிட்டுமந்திர த்தை ஜெபித்துக்கொண்டே வரவேண்டும் சற்றுநேரம் பொறுத்து கதவை த்திறக்க உட்டே ரிஷி ஜெபம் செய்துக்கொண்டு குந்தியிருப்பது போல் தோற்றும் அனைவரும் பார்த்து ஆச்சரியப்பட்ட உடனே கதவை முன் போல் மூடித்திறக்க மாயமாகப்போய்விடும் மறுபடி நின்று மனம்போ னபேருக்கெல்லாம் பேசுவார்கள்.

917. தேளாகும் ஜாலம்.

ஜாலமாடும் சபையில் வேப்பிலைகொத்து ஒன்றையெடுத்து மாயா சத்திக்கருவை விரலில்தொட்டு மாயாசத்தி மந்திரத்தை ஜெபித்துக்கொ ண்டே வேப்பிலையை உருவி கீழேபோட கருந்தேளும் செந்தேளுமாக ஓடும் பார்ப்போர்கள் ஆச்சரியப் படுவார்கள். ஆனால் உடனே மறைந்து விடும்.

918. குளவியாகும் ஜாலம்.

ஜாலமாடும் சபையில் அடுப்புக்கரியைக் கொண்டு வரும்படிச்செய்து சபையோர்களைப்பார்த்து இந்த அடுப்புக்கரியை கருங்குளவி செங்குளவி களாகும் விநோதத்தைப் பாருங்களென்று மாயாசத்தி கருவை விரலில் தொட்டுமாயாசத்தி மந்திரத்தை ஜெபித்துக் கொண்டே கரியை அள்ளி குளவியாக வேணுமென்று கீழேபோட கருங்குளவியும் செங்குளவியுமா கத்தோன்றி பறக்கும் அனைவரும் ஆச்சரியப்படுவார்கள்.

919. செய்யான் பூரானாகும் ஜாலம்.

ஜாலமாடும் சபைக்கு வருமுன்னமே மாயாசத்திக் கருவை வலது கையில் தடவிக்கொண்டு சபையில்வந்து இதோ மண்ணை அள்ளிப்போடு கிறேன் செய்யான் பூரான் ஆகும் விநோதங்களை பாருங்களென்று மண் ணைகையில் அள்ளி மந்திரத்தை ஜெபித்துக்கொண்டே செய்யான் பூரான் ஆகவேணுமென்று கீழேபோட செய்யானும் பூரானுமாக ஓடும் அனை வரும் ஆச்சரியப் படுவார்கள்.

920. பொன்வண்டாகும் ஜாலம்.

ஜாலமாடும் சபைக்குவருமுன்னே மாயாசத்திக்கருவை வலதுகை யில் பூசிக்கொண்டு வந்து சபையில்நின்று சிகப்பு குண்டுமணியை கையின் அள்ளிக்கொண்டு மாயாசத்தி மந்திரத்தை ஜெபித்துக்கொண்டே பொன் வண்டுகளாகவேணுமென்று கீழேபோட சபையெங்கும் பொன்வண்டுமய மாகத்தோற்றும் பார்ப்போர்களெல்லாம் பிரமித்து பார்த்தகண் பூத்து போம்படி நிற்பார்கள்.

921. மஞ்சாக்குருவியாகும் ஜாலம்.

ஜாலமாடும் சபையில் வந்து நின்று பத்திருபது கெச்சக்காயை எடு த்து அனைவருக்குங்காட்டி இந்தகாய்கள் மஞ்சாகுருவியாகும் விநோதத் தைப்பாருங்களென்று மாயாசத்தி கருவை வலதுகையில் பூசிக்கொண்டு மந்திரத்தை ஜெபித்துக் கொண்டே மஞ்சாகுருவியாக வேணுமென்று கெச்சக்காயைவாரி பூமியிற்போட மஞ்சா குருவிகளாக சபை முழுதும்

தோற்றம் சபையோர்களும் இது என்ன புதுமையென்று என்றுதும் எண்ணி உன்னைப் புகழ்வார்கள்.

922 பாம்பு உண்டாகும் ஜாலம்.

ஜாலமாடும் சபையில் வந்துநின்று தென்னம் ஓலை ஒன்று எடுத்து அதின் முதுகிலுள்ள நரம்பை யெடுத்துவிட்டு அந்த ஓலையை சுருளாயாக சுத்தி மேஜையின்மேல் வைத்து இந்த ஓலை பச்சைப்பாம்பாகும் வேடிக்கையைப் பாருங்களென்று மாயாசத்திக் கருவை விரலில் தொட்டு மந்திரத்தை ஜெபித்துக் கொண்டே அந்த ஓலைசுருளில் தடவி பச்சைப்பாம்பாகவேணுமென்று கீழேபோட பச்சைப்பாம்பாகத்தோற்றும் அனைவரும் ஆச்சரியப்படுவார்கள் ஆனல் மாயமாய் உடனே மறைந்துவிடும்.

923. நல்ல பாம்பாகும் ஜாலம்.

முன்போலவே சபையில் வந்துநின்று பனம்வோலையை முன்போல் சுருளாகச்செய்து மேஜையின்மேல் வைத்து இந்த பனம்ஓலை நல்லப்பாம்பாகும் விநோதத்தை பாருங்களென்று மாயாசத்திக்கருவை விரலில் தொட்டு மந்திரத்தை ஜெபித்துக் கொண்டே கருவை ஓலையில் தடவி பாம்பாகவேணுமென்று கீழேபோட நல்லப்பாம்பாகத் தோன்றி விளையாடும் ஆச்சரியப் படுவார்கள்.

924 மலைப்பாம்பாகும் ஜாலம்.

ஜாலமாடும் சபையில் வந்துநின்று அங்குள்ள வர்களைப்பார்த்து இரண்டுமார் நீளமும் கைபெருமனுமாக வைக்கோல்பிரியை கொண்டுவரும்படிச்செய்து இந்த வைக்கோற்பிரி மலைப்பாம்பாகும் விநோதத்தை பாருங்களென்று மாயாசத்திக்கருவை விரலில் தொட்டுக்கொண்டு மந்திரத்தை ஜெபித்து கருவை வைக்கோற் பிரியின்மேல் தடவி கீழேபோட மலைப்பாம்பாகிசபையில் புறளும் ஆச்சரியப்படுவார்கள் நீ முன்போல் மறைத்துவிடவேண்டும்.

925 பச்சைத் தவளையாகும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்திலே வந்துநின்று கருவமத்தன் இலையை பத்துபதினைந்து கொண்டு வரும்படிச்செய்து இந்த கருவமத்தன் இலை பச்சைத் தவளையாகும் விநோதத்தைப் பாருங்களென்று மாயாசத்தி மையை விரலில்தொட்டு மந்திரத்தை ஜெபித்துக்கொண்டே கருவை இலையில்தடவி கீழேபோட சபையெங்கும் பச்சைத்தவளையாகத் தோற்றும் அனைவரும் ஆச்சரியப்படுவார்கள் நீ முன்போல் உடனே மறைத்து விடவேண்டும்.

926. பச்சோந்தியாகும் ஜாலம்.

முன்போல் சபையில் வந்துநின்று சுரக்கொடியை கொண்டுவரும்படி செய்து அதை ஜான் நீளத்திற்கு பத்து பதினைந்து துண்டுகளாகவெட்டி மேஜையின்மேல் வைத்து இந்தசுரக்கொடி பச்சோந்தியாகும் விநோதத்தை பாருங்களென்று மாயாசத்திக்கருவை விரலில்தொட்டு மந்திரத்தை ஜெபித்துக்கொண்டே கருவை கொடிகளின்மேல் தந்திரமாகத்தடவி பச்சோந்தியாக வேணுமென்று கீழேபோட சபையெங்கும் பச்சை ஓணான்களாகத்தோற்றும் கண்டோர்கள் கண்ணிரண்டு நெஞ்சம் பதைத்து துடித்து பலபலவாறாகப் பேசிக்கொள்வார்கள்.

927. கருநாகன் பாம்பாகும் ஜாலம்.

சபையில் வந்து நின்று ஒரு வாருகோற்கட்டைக்கோற்காறை யெடுத்து அனைவருக்குங்காட்டி இந்தவாருகோல் கருநாகம் பாம்பாகும் காட்சியைப் பாருங்களென்று மாயாசத்திக்கருவை விரலில் தொட்டுக்கொண்டு மந்திரத்தை ஜெபித்துக்கொண்டே கருவை வைக்கோற்காருமீது தடவி கருநாகம் பாம்பாகவேணுமென்றுக் கீழேபோட கருநாகன் பாம்பாகத் தோற்றம் கண்டோர்கள் கலங்கி பிரமித்து நிற்பார்கள் ஆனல் அது உடனே மாயமாய் மறைந்து விடும்.

928. கெடகம்ப வித்தை.

முப்பது நாற்பது அடி உயரமுள்ள ஒருகெடை கம்பத்தை நட்டு அதை சாயவொட்டால் நாலுபக்கத்திலும் மூளை அடித்து நூல் கயிற்றினால் பந்தோபஸ்தாககட்டி பின்புமாயாசத்திமையை கம்பத்தில் தடவி மாயாசத்திமந்திரத்தை ஜெபித்துகொண்டே கெடைமீது பயமில்லாமல் ஏறி இஷ்டப்படி விளையாடலாம் அனைவரும் ஆச்சரியப்படுவார்கள்.

929. கல்லுருளும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்திலாவது யின்னும் எந்தவிடங்களிலாவது ஒரு பெரிய பாறாங்கல்லை பிரட்டிக்கொண்டு வரும்படிச்செய்து சபையோர்களைப் பார்த்து இந்த பாறாங்கல்லை இந்தவாசலில் கடகடவென்று உருளும்படி செய்கிறேன் பாருங்களென்று மாயாசத்தி கருவை விரலில்தொட்டு மந்திரத்தை ஜெபித்துக்கொண்டே பாறையின்மேல் கருவைத்தீத்து இந்தவாசலில் புரளுவாயென்று மந்திரத்தை சொல்லிக்கொண்டேயிருக்க கடகடவென்றுதாகப் புரளும் கண்டோர்கள் பிரமித்து நிற்பார்கள் மந்திரத்தை நிறுத்திமையை துடைத்துவிட பிறளுவது நின்றுவிடும்.

930. முட்டைபறக்கும் ஜாலம்.

ஜாலமாடும் சபையில் வந்துநின்று ஒருகோழி முட்டையை எடுத்து அனைவருக்குங்காட்டி மேஜையின்மேல் வைத்து இந்தமுட்டை ஆகாயமார்க்கமாகப்போகும் அற்புதத்தை பாருங்களென்று மாயாசத்திக் கருவை விரலில்தொட்டு மந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து தந்திரமாக கருவை முட்டையின்மேல் தடவி ஆகாயமார்க்கம் போவென்று ஜெபிக்கட

னே முட்டையானது ஜிவ்வென்று கிளம்பி ஆகாயமார்க்கமாகப் போகும் அனைவரும் இது அக்கிரதேவதை வசியமென்று ஆச்சரியப்படுவார்கள்.

931 பந்தாடும் ஜாலம்.

ஐந்து பந்தை கையிலெடுத்து அனைவருக்குங் காட்டி மேஜையின் மேல் வைத்து இந்த ஐந்துபந்தும் அன்பது பந்துகளாக விளையாடும் அதிசயத்தை பாருங்களென்று மாயாசத்திகருவை தொட்டு இரண்டு கைகளிலும் பூசிக்கொண்டு மந்திரத்தை ஜெபித்துக்கொண்டே பந்தையெடுத்து விளையாட பார்ப்போர்கள் கண்களுக்கு ஆயிரம் பந்துகளாகத்தோற்றும் அனைவரும் ஆச்சரியப்படுவார்கள் நீ உடனே கையில் பூசியகருவை கழுவி விட்டு பந்தை எடுக்க ஐந்துபந்தாக முன்போல் தோற்றும் அனைவரும் இது மகாபுதுமையான வித்தை என்று புகழ்வார்கள்.

932. கெச்சக்காய் வித்தை.

ஜாலமாடுமிடத்தில் வந்து நின்று ஒருபடி கெச்சைக்காயை எடுத்து அனைவருக்குங்காட்டி மேஜையின்மேல் வைத்து இந்த கெச்சக்காய்கள் ஒன்றோடொன்று தாக்கி புறளும் விநோதத்தைப்பாருங்களென்று மாயாசத்திகருவை விரலில்தொட்டு இரண்டுகையிலும் பூசிக்கொண்டு மந்திரத்தை ஜெபித்து இரண்டுகையிலும் காயைவாரிக் கீழேபோட அதுகள் ஒன்றோடொன்று தாக்கிக்கொண்டு வாசலெல்லாம் புறளும் ஆச்சரியப்படுவார்கள் முன்போல்கருவைக் கழுவிவிட நின்றுவிடும்.

933 வேறுமுறை மாஞ்செடி முளைப்பும் ஜாலம்.

ஜாலமாடும் சபையில் ஒருமாங்கொட்டையை எடுத்து அனைவருக்குங்காட்டி இந்தகொட்டை பூமியில் புதைக்கின்றேன் உடனே மாஞ்செடியாகி பூபூர்த்து காய்த்து பழுக்கும் விநோதத்தை பாருங்களென்று மாயாசத்திகருவை மாங்கொட்டையில் தடவி மந்திரத்தை ஜெபித்து மாஞ்செடியாகி பூப்பூம் முதலானதும் காய்திருக்கும்படி தோற்றவேணுமென்று பூமியில் கொஞ்சம் பள்ளந்தோன்றி மந்திரத்தை ஜெபித்துக்கொண்டே மாங்கொட்டையை புதைத்து ஜலம் கொஞ்சம்விட்டு கூடையைப் போட்டு மூடி சற்றுநேரம்பொருத்து திறந்துகாட்ட மாஞ்செடியாகி காய் பழம் பூமுதலானதும் தோற்றும் பார்ப்போரெல்லாம் பிரமித்து ஆச்சரியப்படுவார்கள் உடனே நீ முன்போல் கூடையை மூடித்திறந்து காட்ட மாயமாக மறைந்துபோகும்.

934 பலகரை வித்தை.

அன்பதுப் பலகரையை எடுத்து அனைவருக்குங்காட்டி இந்த அன்பதுபலகரையும் ஒன்றோடொன்று தாக்கிக்கொண்டு விளையாடும் வேடிக்கையை பாருங்களென்று மாயாசத்திக்கருவை விரலில்தொட்டு இரண்டு

கையிலும் பூசிக்கொண்டு மந்திரத்தை ஜெபித்து பலகரையை கையில்வாரிக்கீழேபோட அதுகள் ஒன்றோடொன்று தாக்கிக்கொண்டும் குதித்து குதித்து விளையாடும் பார்ப்போரெல்லாம் இது என்ன புதுமையான வித்தையென்று புகழ்வார்கள் ஆனால் நீ முன்போல் மறைத்துவிடவேண்டும்

935 குண்டுமணி வித்தை.

ஜாலமாடும் சபையில் ஒரு பிடி குண்டுமணியை எடுத்து அனைவருக்குங்காட்டி இந்த குண்டுமணிகள் ஒன்றோடொன்று தாக்கி விளையாடும் வேடிக்கையைப் பாருங்களென்று மாயாசத்தி கருவை விரலில்தொட்டு கையிற்பூசிக்கொண்டு மந்திரத்தைஜெபித்து குண்டுமணியை அள்ளிகீழே போட அதுகள் ஒன்றோடொன்று தாக்கிக்கொண்டு வேடிக்கையாகவிளையாடும் ஆச்சரியப்படுவார்கள்.

936 கத்திரிக்கோல் வித்தை.

ஜாலமாடும் சபையில் வந்துநின்று இரண்டு கத்திரிக்கோலையெடுத்து அனைவருக்குங்காட்டி மேஜையின்மேல் வைத்து இந்த கத்திரிகோல் இரண்டும் ஒன்றோடொன்று தாக்கி உத்தம்புரியும் உன்னதத்தைப் பாருங்களென்று மாயாசத்தி கருவை விரலில்தொட்டு மந்திரத்தை ஆயிரத்தெட்டு உருஜெபித்து தந்திரமாகக்கருவை கத்திரிக்கோல்களில் தடவி உத்தம் செய்யென்று ஜெபிக்க அதுகள் உடனே கிளம்பி ஒன்றோடொன்று தாக்கி உத்தம்புரியும் கண்டோர்களெல்லாம் கண்பூர்த்து பார்த்து நிற்பார்கள் தந்திரமாக கருவை துடைத்துவிட நின்றுவிடும்.

937 ரசகுண்டு வித்தை.

பத்துப்பதினைந்து ரசகுண்டுகளை எடுத்து சபையோர்களுக்குக்காட்டி இந்தகுண்டுகள் விளையாடும் விநோதத்தைப் பாருங்களென்று மாயாசத்தி கருவை விரலில்தொட்டு வலதுகையில் பூசிக்கொண்டு மந்திரத்தை ஜெபித்துக்கொண்டே ஒவ்வொரு குண்டாக வலதுகையி[illegible]து பந்தாடுவதுபோல்ஆட பார்ப்போர் கண்களுக்கு ஆயிரம் ரசகுண்டுகள் ஆகாயத்தில் ஆடுவதுபோல் தோற்றும் ஆச்சரியப்படுவார்கள் நீ உடனே கையிற்பூசிய கருவைக் கழுவிவிட முன்னிருந்த பதினைந்து குண்டாகத் தோற்றுதல் இதுமகா புதுமையென்று புகழ்வார்கள்.

938 தேங்காய் வித்தை.

ஒருதேங்காயை எடுத்து அதற்கு மஞ்சள் தடவி குங்குமமிட்டு சபையோர்களுக்குக்காட்டி தேங்காயை வாசலில் வைத்து இந்த தேங்காய் இந்த வாசலெல்லாம்புரளும் வேடிக்கையைப்பாருங்களென்று மாயாசத்தி கருவை விரலில்தொட்டு காயின்மேல்தடவி மந்திரத்தை ஜெபித்துக்கொண்டேயிருக்க தேங்காய் கடகடவென்று வாசலில் புறளும் பார்ப்போ

செல்லாம் மிரண்டு இது பத்திரகாளி வசியமென்பார்கள் ஆனால் நீ உடனே தேங்காயை யெடுத்து கழுவிவிட புறளுவது நின்றுவிடும்.

939 கிளியாகும் ஜாலம்.

ஜாலமாடும் சபையில் வந்துநின்று ஒரு பெரிய வெத்திலையைக் கையிலெடுத்து அனைவருக்குங்காட்டி மேஜையின்மேல்வைத்து இந்த வெத்திலை பச்சைக்கிளியாகும் வேடிக்கையைப் பாருங்களென்று மாயாசத்திமையை விரலில்தொட்டு மந்திரத்தை ஆயிரத்தெட்டு உருஜெபித்து தந்திரமாக கருவை வெத்திலையில் தடவி ஒருகூடையைப் போட்டுமூடி சற்றுநேரம்பொருத்து திரந்துக்காட்ட பச்சை கிளியாகத்தோற்றும் அனைவருக்குங்காட்டி உடனே வெத்திலையைக் கழுவிவிட்டு முன்போல் மூடிதிறக்க வெத்திலையாக இருக்கும் முழிப்பார்கள்.

940 புறாவாகும் ஜாலம்.

ஒரு எலுமிச்சம்பழத்தை எடுத்து அனைவருக்குங்காட்டி மேஜையின்மேல்வைத்து இந்தபழம்புறாவாகும் வேடிக்கையைபாருங்களென்று மாயாசத்திக்கருவை விரலில்தொட்டு மந்திரத்தை ஆயிரத்தெட்டோதி பழம் புறாவாகத் தோற்றவேணுமென்று தந்திரமாகக்கருவை பழத்தின்மேல் தடவி கூடைப்போட்டுமூடி சற்றுநேரம் பொருத்து திரந்துக்காட்ட புறாவாகத்தோற்றும் சபையோர்களும் ஆச்சரியப்பட்டு உன்னைப்புகழ்வார்கள் ஆனால் நீ முன்போல் பழத்தைக் கழுவிவைத்து மூடித்திரந்துகாட்ட பழமாகவிருக்கும் மாயவித்தையென்று மகிழ்வார்கள்.

941 ஆத்துதுமட்டிக்காய் வித்தை.

சபையில்வந்துநின்று ஐந்து துமிட்டிக்காயை யெடுத்து அனைவருக்குங்காட்டி மேஜையின்மேல் வைத்து இந்த ஐந்துகாயும் ஐந்துமையிலாகும் அற்புதங்களைப் பாருங்களென்று மாயாசத்திக்கருவை விரலில்தொட்டு மந்திரம் ஆயிரத்தெட்டுஜெபித்து மையிலாக தோற்றவேணுமென்று சீருவைதந்திரமாக ஐந்துகாயிலுந்தடவி முன்போல் கூடையைபோட்டு மூடி சற்றுநேரம்பொருத்து திரந்துகாட்ட மயிலுவாகத்தோற்றும் அனைவரும்பார்த்து ஆச்சரியப்படுவார்கள் உடனே நீமுன்போல் மறைத்துவிடவேண்டும்.

942. கருஊமத்தன்காய் வித்தை.

ஒரு கருஊமத்தன் காயையெடுத்து அனைவருக்குங்காட்டி மேஜையின்மேல் வைத்து இந்த கருஊமத்தன் காய் காகமாகும் காட்சியைப்பாருங்களென்று மாயாசத்திக்கருவை விரலில்தொட்டு மந்திரம் ஆயிரத்தெட்டு ஜெபித்து காகமாகவேணுமென்று கருவைதந்திரமாக காயின்மேல் தடவி கூடையைப்போட்டு மூடி சற்றுநேரம்பொருத்து திரந்துக்காட்ட காய் காக

மாகத்தோற்றும் பார்த்து ஆச்சரியப்படுவார்கள் உடனே நீ முன்போல் செய்து மறைத்துவிடவேண்டும்.

943. பச்சைநெல் வித்தை.

ஜாலமாடும் சபைக்கு வருமுன்னமே மாயாசத்திக்கருவை வலதுகையில் பூசிக்கொண்டுவந்து ஒருபிடிநெல்லை மேஜையின்மேல் கொண்டுவந்து வைக்கும்படிச்செய்து இந்த நெல்லை அள்ளிக்கீழேபோடுகிறேன் பொன் நெல்லாகத்தோன்றும் விநோதத்தைப் பாருங்களென்று மாயாசத்தி மந்திரத்தைஜெபித்துக்கொண்டேநெல்லை அள்ளிக்கீழேபோடபொன்நெல்லாகத்தோற்றும் அனைவரும் எடுத்துப்பார்த்து ஆச்சரியப்படுவார்கள்.

944. எதிரிவணங்கிவரும் வித்தை.

ஒருபனம் ஓலைத்துண்டில் எதிரியினுடையப் பெயரை எழுதி மாயாசத்திகருவை விரலில்தொட்டு ஓலை துண்டின்மேல் தடவி மந்திரத்தை ஆயிரத்தெட்டுஜெபித்து அதைகொண்டுபோய் பிடாரிகோயிலுக்கு பின்புறத்தில் புதைத்துவிட யெதிரியானவன் உன்னை தேடிவந்து வணங்கி உன்னிஷ்டம்போல் நடப்பான்.

945 புளியங்காய் வித்தை.

ஜாலமாடும் சபையில் வந்துநின்று நாலுஐந்து புளியங்காயைக் கையிலெடுத்து அனைவருக்குங்காட்டி மேஜையின்மேல் வைத்து இந்தபுளியங்காய்கள் தேவாங்காகும் வேடிக்கையைப் பாருங்களென்று மாயாசத்திக்கருவை காயின்மேல் தந்திரமாகத்தடவி மேலே கூடையைப் போட்டு மூடி மந்திரத்தை ஜெபித்துக்கொண்டே சற்றுநேரம் பொருத்து கூடையைத்திரந்துகாட்ட தேவாங்குகளாகத் தோற்றும் அனைவருக்கும் காண்பித்து நீ முன்போல் மறைத்து விடவேண்டும்.

946 மாதளஞ் செடியாகும் ஜாலம்.

ஜாலமாடும் சபையில் வந்துநின்று மாதுளம்விதை ஒன்றை எடுத்து அனைவருக்குங்காட்டி இந்த விதையை பூமியில் புதைத்துவிடுகிறேன் அது உடனே செடியாகி புஷ்பித்து காய்காய்த்து பழம்பழுக்கும் விநோதத்தை பாருங்களென்று மாயாசத்திக்கருவை விரலில்தொட்டு மந்திரம் ஆயிரத்தெட்டு உருஜெபித்து கருவை விதையில்தடவி அனைவருக்கும் முன்பாக பூமியில் புதைத்து ஜலம்விட்டு பெரிய உயரமுள்ள கூடையை போட்டு மூடி மாதுளஞ் செடியாகி பூ-காய் பழமோடு தோற்றவேணுமென்று மந்திரத்தை தியானித்துக் கொண்டே சற்று நேரம்பொருத்து கூடையைத் திறந்துவிட பார்ப்போர்கள் பிரமிக்கும்படி மாதுளஞ்செடியாகி பூ. காய்

பழங்களாகத் தோற்றும் அனைவரும் ஆச்சரியப்பட்டு உன்னைப்புகழ்வார்கள் ஆனால் நீ முன்போல் செய்துமூடி திறந்துகாட்ட மாயமாகப்போகும்.

947 கத்திரிசெடி முளையும் ஜாலம்.

சபையில் வந்துநின்று ஒரு கத்திரிநாத்தை எடுத்து அனைவருக்குங் காட்டி இந்த நாத்தைநட்டு ஜலம் வார்க்கின்றேன் உடனே பூபூத்து காய்த்து காய்க்கும் விநோதத்தை பாருங்களென்று மாயாசத்திக் கருவை விரலில்தொட்டு மந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து கருவை கத்திரிநாத்தின்மேல் தடவி பூமியில்நட்டு ஜலம்விட்டு உடனே பூபூத்து காய்காய்க்க வேணுமென்று மந்திரத்தை தியானித்துக் கொண்டே செடியின்மேல் கூடையைப்போட்டுமூடி சற்று நேரம்பொருத்து திறந்துக்காட்ட கத்திரிசெடி தழைத்து இலைகள்விட்டு பூபூத்து காய்கள் காய்த்து தொங்குவது போல் பார்ப்போர்களுக்குத் தோற்றும் ஆச்சரியப் படுவார்கள் நீ முன்போல் செய்துமூடி மறைத்து விடவேண்டும்.

948 மிளகாய்செடி முளையும் ஜாலம்.

முன்போல் சபையில் வந்து ஒரு மிளகாய்செடி நாற்றையெடுத்து அனைவருக்குங்காட்டி இந்தமிளகாய்செடி நாற்றை பூமியில் நட்டு உடனே பூபூத்து காய்காய்க்கும்படி செய்கிறேன் பாருங்களென்று மாயாசத்திக் கருவை விரலில்தொட்டு மந்திரம் ஆயிரத்தெட்டு உருஜெபித்து கருவை மிளகாய்செடி நாற்றின்மேல் தடவி உடனே பூபூத்து காய்காய்க்கவேணுமென்று பூமியில்நட்டு ஜலம்விட்டு கூடையைப் போட்டுமூடி மந்திரத்தை ஜெபித்துக்கொண்டே சற்றுநேரம்பொருத்து திறந்துக்காட்ட மிளகாய்ச்செடி தழைத்து பூபூத்து காய்காய்த்து பழம்பழுத்து விநோதமாகத் தோற்றும் பார்ப்போரெல்லாம் பிரமித்து ஆச்சரியப்படுவார்கள் நீ முன்போல் செய்து மறைத்து விடவேண்டும்.

949 வேறுமுறை தாமரைத்தடாகம் உண்டாகும் ஜாலம்.

இரவில் மைதானத்திற்சென்று அங்கே சவுக்கமாக கோடுகிழி நாலுமூக்கும் நாலுமுளை அடித்து பின்பு தன்னுடன்வந்தவர்களைப் பார்த்து இதோ இங்கு தாமரைத்தடாகம் உண்டாகும் விநோதங்களைப் பாருங்களென்றுமாயாசத்திக்கருவை விரலில்தொட்டுக்கொண்டு மந்திரத்தை ஜெபித்துக்கொண்டே நாலுமூலையிலுங் கருவைத்தடவி பிறகு தடாகமுண்டாக வேணுமென்று தியானித்து தன்னுடன்வந்திருப்போர்கள் அனைவரையும் கண்ணைமூடி திறந்து பார்க்கச்சொல்ல தாமரைத்தடாகம் விநோதமாகத் தோற்றும் அனைவரும் ஆச்சரியப்படுவார்கள் அப்போது நீ அவர்களைப் பார்த்து இந்த தடாகத்தை மாயமாக மறைந்துபோம்படி செய்கிறேன் பாருங்களென்று தந்திரமாக குளத்தைச்சுற்றி வருவதுபோல் நாலுமூலையிலுள்ள முளையைப் பிடுங்கிவிட தடாகம் மாயமாய் மறைந்துப்போகும்.

950 மேஜைமேல் வைத்த தேங்காய் மாயமாய்ப் போகும் ஜாலம்.

ஜாலமாடும் சபையில் வந்துநின்று ஒரு தேங்காயை எடுத்து அனைவருக்குங்காட்டி அதற்கு மஞ்சள் தடவி குங்குமமிட்டு மேஜையின்மேல்வைத்து இந்ததேங்காய் மாயமாய்ப்போகும் விநோதத்தை பாருங்களென்று மாயாசத்திக்கருவை விரலில்தொட்டு மந்திரத்தை ஆயிரத்தெட்டு உரு ஜெபித்து மாயமாய்ப்போகவேணுமென்று கருவை தந்திரமாக காயின் மேல்தடவி தேங்காயை அனைவரையும் பார்க்கச்சொல்லி கூடையைப் போட்டுமூடி சற்று நேரம்பொருத்து திறந்துக்காட்ட தேங்காய் மாயமாய் மறைந்து விட்டதென்று அனைவரும் ஆச்சரியப்படுவார்கள் அப்போது நீ அவர்களைப்பார்த்து மாயமாய்ப்போன தேங்காயை வரவழைக்கிறேன் பாருங்களென்று தேங்காய்மீது தடவின கருவை துடைத்துவிட்டு முன்போல் மூடி திறந்துகாட்ட தேங்காயிருக்கும் விநோதத்தைக்கண்டு புகழ்வார்கள்.

951 மணல் துவரையாகும் ஜாலம்.

ஜாலமாடும் சபையில் வந்துநின்று ஒருபிடி ஆத்துமணலை கையிலெடுத்து அனைவருக்குங்காட்டி இந்தமணல் துவரையாகும் விநோதங்களைப் பாருங்களென்று மாயாசத்திக்கருவை வலதுகையில் பூசிக்கொண்டு மந்திரத்தை ஆயிரத்தெட்டு உருஜெபித்து மணலை கையால்வாரி ஒரு உழக்கில் போட்டு மேலே ஒருதுணியை மூடி துவரையாக வேணுமென்று மந்திரத்தை ஜெபித்துக்கொண்டே சற்றுநேரம் பொருத்து திறந்து கொட்டிக்காட்ட துவரையாகயிருக்கும் பார்ப்போர்கள் பிரமித்து ஆச்சரியப்படுவார்கள் ஆனால் நீ அந்த துவரையை முன்போல் உழக்கில்போட்டு மூடி திறந்துகொட்ட மணலாகிவிடும் பார்த்து திகைப்பார்கள்.

952. மணல் கடலையாகும் ஜாலம்.

முன்போலவே மணலை அள்ளி கடலையாகும் அதிசயத்தைப்பாருங்களென்று மாயாசத்திக்கருவை வலதுகையில் பூசிக்கொண்டு மந்திரத்தை ஜெபித்துக்கொண்டே கடலையாக வேணுமென்று மணலை வாரி உழக்கில் போட்டுமூடி சற்றுநேரம்பொருத்து திறந்து கொட்டிக்காட்ட கடலையாகவிருக்கும் அனைவரும்பார்த்த பின்பு முன்போல் நீ கடலையை உழக்கில் போட்டு மூடி திறந்துகாட்ட எப்போதும்போல் மணலாகிவிடும் பார்ப்போர்கள் புதுமையான வித்தையென்றுப் புகழ்ந்துகொண்டாடுவார்கள்.

953 மணல் மொச்சைகொட்டையாகும் ஜாலம்.

முன்போல் மணலை அள்ளி அனைவருக்குங் காட்டி வைத்து இந்த மணல் மொச்சைகொட்டையாகும் விநோதத்தைப் பாருங்களென்று மா

யாசத்திக்கருவை வலதுகையில் பூசிக்கொண்டு மந்திரத்தை ஜெபித்துக்கொண்டே மணல் மொச்சைகொட்டையாக வேணுமென்று மணலை அள்ளி உழக்கில் போட்டு மூடி திறந்து கொட்டிக்காட்ட மணல் மொச்சையாகத் தோற்றும் அனைவருக்குங்காட்டி முன்போல் மொச்சைகொட்டையை உழக்கில்போட்டு மூடிதிறந்துக்காட்ட முன்போல் மணலாகிவிடும் அனைவரும் ஆச்சரியப்பட்டு இது கண்கட்டு வித்தையென்பார்கள்.

954 மணல் பச்சைபயறாகும் ஜாலம்.

முன்போலவே ஆத்துமணலை அள்ளி அனைவருக்குங்காட்டி வைத்து இந்தமணல் பச்சைப்பயிறாகும் வேடிக்கையைப் பாருங்களென்று மாயாசத்திக்கருவை வலதுகையில் பூசிக்கொண்டு மந்திரத்தை ஜெபித்துக்கொண்டே மணல் பச்சப்பயறாகவேணுமென்று மணலை அள்ளி உழக்கில்போட்டு மூடித்திறந்துக் கொட்டிக்காட்ட பச்சைபயறாகத்தோற்றும் அனைவருக்குங்காட்டி முன்போல் பச்சைப்பயறை உழக்கில்போட்டு மூடித்திறந்து கொட்ட மணலாகிவிடும் ஆச்சரியப்படுவார்கள்.

955 மணல் உளுந்தாகும் ஜாலம்.

முன்போலவே ஆத்துமணலை அள்ளி அனைவருக்குங்காட்டி வைத்துவிட்டு இந்தமணல் உளுந்தாகும் விநோதத்தைப் பாருங்களென்று மாயாசத்திக்கருவை வலதுகையில் பூசிகொண்டு உளுந்தாக வேணுமென்று மணலைவாரி உழக்கில் போட்டுமூடி திறந்துகொட்டிக்காட்ட மணல் உளுந்தாகத்தோற்றும் அனைவருக்குங்காட்டி முன்போல் உளுந்தை உழக்கில்போட்டுமூடி திறந்துக்கொட்ட ஆத்துமணலாகிவிடும் அனைவரும் இது என்ன மந்திர தந்திரமோ வென்பார்கள்.

956 மணல் மலைத்துவரையாகும் ஜாலம்.

முன்போல் ஆத்துமணலை அள்ளி அனைவருக்குங்காட்டிவைத்துவிட்டு இந்தமணல் மலைத்துவரையாகும் அற்புதத்தை பாருங்களென்று மாயாசத்திகருவை வலதுகையில் பூசிக்கொண்டு மந்திரத்தை ஜெபித்துகொண்டே மணல் மலைத்துவரையாகவேணுமென்று மணலைவாரி உழக்கில்போட்டு மூடித்திறந்துக் கொட்டிக்காட்ட மணல் மலைத்துவரை யாகத்தோற்றும் அனைவருக்குங்காட்டி முன்போல் துவரையை உழக்கில்போட்டு மூடி திறந்துக்கொட்ட முன்போல் மணலாகிவிடும் ஆச்சரியப்படுவார்கள்.

957. மணல் பட்டாணி யாகும் ஜாலம்.

முன்போலவே ஆத்துமணலையள்ளி அனைவருக்குங் காட்டிவைத்து இந்த மணல் பட்டாணியாகும் விநோதத்தைப் பாருங்களென்று மாயாசத்திகருவை வலதுகையில் பூசிக்கொண்டு மந்திரத்தை செபித்துகொண்டே மணல் பட்டாணியாக தோற்றவேணுமென்று மணலைவாரி உழக்கில்

போட்டுமூடி திறந்து கொட்டிக்காட்ட மணல் பட்டாணியாகத்தோற்றும் அதையெடுத்து அனைவருக்குங்காட்டி முன்போல் பட்டாணியை உழக்கில்போட்டு மூடிதிறந்துகொட்ட ஆத்துமணலாகவிருக்கும் ஆச்சரியப்படுவார்கள்.

958. மணல் காராமணியாகும் ஜாலம்.

முன்போலவே ஆத்துமணலையள்ளி அனைவருக்குங் காட்டிவைத்து இந்த மணல் காராமணியாகும் வேடிக்கையைப் பாருங்களென்று மாயாசத்திகருவை வலதுகையில் பூசிக்கொண்டு மந்திரத்தை ஜெபித்துக்கொண்டே மணல் காராமணியாக தோற்றவேணுமென்று மணலையள்ளி உழக்கில்போட்டு மூடி திறந்துகொட்டிகாட்ட மணல் காராமணியாகத் தோற்றும் பிரமிப்பார்கள், முன்போல் காராமணியை உழக்கில்போட்டு மூடி கொட்டிக்காட்ட ஆத்துமணலாகவிருக்கும் ஆச்சரியப்படுவார்கள்.

959 மணல் கோதுமையாகும் ஜாலம்.

முன்போல் மணலையள்ளி அனைவருக்குங்காட்டிவைத்து இந்த மணல் கோதுமையாகும் விநோதத்தை பாருங்களென்று மாயாசத்தி கருவை வலதுகையில் பூசிக்கொண்டு மந்திரத்தை ஜெபித்துக்கொண்டே மணல் கோதுமையாக தோற்றவேணுமென்று மணலையள்ளி உழக்கில்போட்டு மூடிதிறந்துகொட்டிக்காட்ட கோதுமையாகத் தோற்றும் நீ முன்போல் கோதுமையை உழக்கில்போட்டுமூடி திறந்துகொட்டிக்காட்ட ஆத்துமணலாகயிருக்கும் இது அற்புதமானவித்தையென்று உன்னைப் புகழ்ந்துகொண்டாடுவார்கள்.

960 மணல் பச்சநெல்லாகும் ஜாலம்.

முன்போலவே ஆத்துமணலையள்ளி அனைவருக்குங் காட்டிவைத்து இந்த மணல் பச்சநெல்லாகும் வேடிக்கையைப் பாருங்களென்று மாயாசத்திக்கருவை வலதுகையில் பூசிக்கொண்டு மந்திரத்தை ஜெபித்துக்கொண்டே மணல் பச்சைநெல்லாகவேணுமென்று மணலையள்ளி உழக்கில்போட்டு மூடி திறந்துகொட்டிக்காட்ட நெல்லாகத்தோன்றும் அனைவருக்குங்காட்டி முன்போல் பச்சைநெல்லை உழக்கில் போட்டுமூடி திறந்துக்கொட்டிக்காட்ட ஆத்துமணலாகவிருக்கும் அனைவரும் திகைத்து நிற்பார்கள்.

961 மணல் சோளமாகும் ஜாலம்.

முன்போலவே ஆத்துமணலை அள்ளி அனைவருக்குங் காட்டிவைத்து இந்தமணல் சோளமாகும் விநோதத்தை பாருங்களென்று மாயாசத்திகருவைவலது கையில்பூசிக்கொண்டு மந்திரத்தை ஜெபித்துகொண்டே மணல்சோளமாகவேணுமென்று மணலை அள்ளி உழக்கில்போட்டு மூடித்திறந்துக்கொட்டிகாட்ட சோளமாகத்தோற்றும் அனைவருக்குங் காட்டி முன்

போல் சோளத்தை உழக்கில் போட்டுமூடி திறந்துகொட்டிகாட்ட ஆத்துமணலாக விருக்கும் அனைவரும் ஆச்சரியப்பட்டு இது கண்கட்டு வித்தையென்பார்கள்.

962 மணல் கம்பாகும் ஜாலம்.

முன்போலவே ஆத்துமணலை அள்ளி அனைவருக்குங்காட்டி வைத்து இந்த மணல்கம்பாகும் காட்சியை பாருங்களென்று மாயாசத்தி கருவை வலதுகையில் பூசிக்கொண்டு மந்திரத்தை ஜெபித்துக்கொண்டே மணல் கம்பாகவேணுமென்று மணலை அள்ளி உழக்கில் போட்டுமூடி திறந்துக் கொட்டிகாட்ட கம்பாகதோற்றும் அனைவருக்குங்காட்டி முன்போல் கம்பை உழக்கில் போட்டுமூடி திறந்து கொட்ட, ஆத்துமணலாக விருக்கும் இது குட்டிசாத்தான் ஏவலென்பார்கள்.

963. மணல் வரகாகும் ஜாலம்.

முன்போலவே ஆத்துமணலை அள்ளி அனைவருக்குங் காட்டிவைத்துவிட்டு இந்த மணல் வரகாகும் விநோதத்தை பாருங்களென்று மாயாசத்தி கருவை வலதுகையில் பூசிகொண்டு மந்திரத்தை ஜெபித்துக் கொண்டே மணல் வரகாகவேணுமென்று மணலை அள்ளி உழக்கில்போட்டு மூடிதிறந்துகொட்டிக்காட்ட வரகாகதோற்றும் அனைவருக்குங் காட்டி முன்போல்வரகை உழக்கில் போட்டுமூடி திறந்து கொட்டிகாட்ட ஆத்துமணலாகவிருக்கும் இது என்ன புதுமையோ என்பார்கள்.

964. மணல் கேழ்வரகு ஆகும் ஜாலம்.

முன்போலவே ஆத்துமணலை அள்ளி அனைவருக்குங்காட்டி வைத்துவிட்டு இந்த மணல் கேழ்வரகு ஆகும் அற்புதத்தை பாருங்களென்று மாயாசத்திகருவை வலது கையில் பூசிக்கொண்டு மந்திரத்தை ஜெபித்துகொண்டே மணல் கேழ்வரகாக தோற்றவேணுமென்று மணலைவாரி உழக்கில்போட்டு மூடித்திறந்துக் கொட்டிகாட்ட கேழ்வரகாகத் தோற்றும் அதை அனைவருக்குங்காட்டி முன்போல் கேழ்வரகை உழக்கில்போட்டு மூடிதிறந்துக்கொட்டிகாட்ட ஆத்துமணலாக யிருக்கும் இது என்ன ஆச்சரியமென்பார்கள்.

965. மணல் தினையாகும் ஜாலம்.

முன்போலவே ஆத்துமணலை அள்ளி அனைவருக்குங்காட்டி வைத்து இந்தமணல் தினையாகும் விநோதத்தை பாருங்களென்று மாயாசத்தி கருவை வலதுகையில் பூசிக்கொண்டு மந்திரத்தை ஜெபித்துகொண்டேமணல்தினையாக தோற்றவேணுமென்று மணலை அள்ளி உழக்கில்போட்டுமூடி திறந்துகொட்டிகாட்ட தினை அரிசியாகதோற்றும் அனைவருக்குங் காட்டி முன்போல் தினையை உழக்கில்போட்டு மூடிதிறந்துகொட்ட ஆத்துமணலாகவிருக்கும் இது காளிவசியமென்பார்கள்.

966 மணல் கொள்ளாகும் ஜாலம்.

முன்போலவே ஆத்துமணலை அள்ளி அனைவருக்குங்காட்டி வைத்து இந்த மணல் கொள்ளாகும் வித்தையைப் பாருங்களென்று மாயாசத்திக் கருவை வலதுகையில் பூசிக்கொண்டு மந்திரத்தை ஜெபித்துக்கொண்டே மணல் கொள்ளாகத் தோற்றவேணுமென்று மணலைவாரி உழக்கில்போட்டுமூடி திறந்து கொட்டிக்காட்ட கொள்ளாகத் தோற்றும் அனைவருக்குங்காட்டி முன்போல் கொள்ளை உழக்கில்போட்டு மூடிதிறந்துகொட்ட ஆத்துமணலாகும் ஆச்சரியப்படுவார்கள்.

967 மணல் எள்ளாகும் ஜாலம்

முன்போலவே ஆத்துமணலை அள்ளி அனைவருக்குங் காட்டிவைத்து இந்தமணல் எள்ளாகும் விநோதத்தை பாருங்களென்று மாயாசத்திகருவை வலதுகையில் தடவிக்கொண்டு மந்திரத்தை ஜெபித்துக்கொண்டே மணல் எள்ளாக வேணுமென்று மணலை அள்ளி உழக்கில் போட்டுமூடி திறந்துகாட்ட எள்ளாகத்தோற்றும் அனைவருக்குங்காட்டி முன்போல் எள்ளை உழக்கில் போட்டுமூடி திறந்துகொட்ட ஆத்துமணலாகும் அனைவரும் ஆச்சரியப் படுவார்கள்.

968 மணல் குண்டுமணியாகும் ஜாலம்.

முன்போலவே ஆத்துமணலைஅள்ளி அனைவருக்குங் காட்டிவைத்து இந்த மணல் குண்டுமணிகளாகும் விநோதத்தைப் பாருங்களென்று மாயாசத்திக்கருவை வலதுகையில் தடவிக்கொண்டு மந்திரத்தை ஜெபித்துகொண்டே மணல் குண்டுமணியாக வேணுமென்று மணலைஅள்ளி உழக்கில் போட்டுமூடி திறந்து கொட்டிக்காட்ட குண்டுமணியாகத் தோற்றும் அனைவருக்குங்காட்டி முன்போல் குண்டுமணியை உழக்கில்போட்டு மூடித்திறந்துக் கொட்டிக்காட்ட ஆத்துமணலாக விருக்கும் இது கீர்த்தியானவித்தையென்று புகழ்வார்கள்.

969 மணல் கீரைவிரையாகும் ஜாலம்.

முன்போலவே ஆத்துமணலை அள்ளி அனைவருக்குங்காட்டிவைத்து இந்தமணல் கீரைவிரையாகும் விநோதத்தைப் பாருங்களென்று மாயாசத்திக்கருவை வலதுகையில் தடவிக்கொண்டு மந்திரத்தை ஜெபித்துகொண்டே மணல் கீரைவிரையாகத் தோற்ற வேணுமென்று மணலை அள்ளி உழக்கில்போட்டு மூடி திறந்துக்காட்ட கீரைவிரையாகத் தோற்றும் அதை அனைவருக்குங்காட்டி முன்போல் கீரைவிரையை உழக்கில் போட்டுமூடி திறந்துகொட்ட ஆத்துமணலாகவிருக்கும் ஆச்சரியப்படுவார்கள்.

கீழுமேலுமாக சுழன்று விளையாடும் பார்ப்போர்களுக்கும் ஆச்சரியமாக விருக்கும் ஆனால் மந்திரத்தை நிறுத்திமையை துடைத்துவிட கொட்டைகள் பெய்ப்போதும்போல் விழுந்து கிடக்கும்.

978 புறாமாயமாக போகும் ஜாலம்.

சபையில் வந்து ஒரு புறாவை பிடித்து இந்த புறாவை கூடைமேல் கூடைபோட்டு மூடி பக்கோரப்பெறாக வைக்கின் அனைவர் முன்பாக வைக்கிறேன் அது மாயமாக பறந்துபோய் ஆகாயத்திலிருந்து வரும்விநோதங்களை பாருங்களென்று மாயாசத்திகருவை விரலில்தொட்டு மாயாசத்திமந்திரத்தை ஜெபித்துக்கொண்டே கூடையில் மூடிய புறா ஆகாயமார்க்கமாக விருந்து வந்திறங்குவதுபோல் தோற்றச் செய்வாயென்று சத்தியை தியானித்து கருவை புறாவின்மேல் தடவி கூடையைப் போட்டுமூடி சற்றுநேரம்பொறுத்து திறந்துகாட்ட சபையோர்களுக்கு புறாமாயமாய்போய் விட்டதுபோல் தோற்றும் அப்போது அப்புறாவை தந்திரமாக ஆகாயமார்க்கமாக பறக்கவிட்டு பின்பு சபையோர்களைப்பார்த்து இதோ கூடையில் மூடிய புறா ஆகாயத்திலிருக்கின்ற விநோதத்தைகாட்ட அனைவரும் ஆச்சரியப் படுவார்கள்.

979 முத்துசரம் கோர்க்கும் ஜாலம்.

ஜாலமாடும் சபைக்கு வருமுன்னமே செம்பினாலிரிய தாம்பாளமிரண்டு ஒரே மாதிரியாகச்செய்து வைத்துக்கொள்ளவும் ஒரு முழம் நூலும் அது பிடிக்கும்படியான முத்து ஒரு தாம்பாளத்தில் வைத்து ஒருமுழம் முத்துசரம் கோர்த்து அதை ஒரு தட்டில்வைத்து ஜாலமாடும் சபையில் கோர்க்காத முத்தையும் நூலையும் அனைவருக்குங்காட்டி இந்த நூலே முத்துகளை கோர்த்துக் கொள்ளும் விநோதங்களைப் பாருங்களென்று மறைவுமையை விரலில்தொட்டு தட்டின்மேல் தெளித்துவிட அந்ததட்டு சபையோர் கண்களுக்கு தெரியாது அதனை மாற்றிவிட்டு மேற்படி சரம் கோர்த்து வைத்திருக்கும் தட்டைவைத்து மூடித்திறந்து சரத்தை எடுத்துக்காட்ட ஆச்சரியப்படுவார்கள் இது குட்டிச்சாத்தான் வேலையென்பார்கள்.

980 பவழசரங் கோர்க்கும் ஜாலம்

முன்போல் இரண்டு தாம்பாளம் ஒரே மாதிரியாகச்செய்து ஒருதட்டில் உதிரிப்பவழமும் அந்த பவழத்தை கோர்க்க போதுமான நூல்சரமும் வைத்து மற்றொருதட்டில் மேற்படி நூல்சரத்திற்கு அளவாக சரங்கோர்த்துவைத்து பிறகு ஜாலமாடும் சபையில் உதிரிபவழத்தையும் நூலையும் எடுத்து அனைவருக்குங்காட்டி இதோ இந்த பவழத்தையும் நூல்சரத்தையும்வைத்து மூடிவிடுகிறேன் அது சரமாகக் கோர்த்திருக்கும் விநோதத்தைப்பாருங்களென்று மேஜையின்மேல் வைத்து மறைவுமையை விரலில் தொட்டு ஜாலக்காளைப்பூசித்து உதிரிபவழமிருக்கும் தட்டின்மேல் தெளிக்க சபையோர் கண்களுக்கு தெரியாது அப்போது நீ தந்திரமாக அந்த தட்டைமாற்றிவிட்டு பவழசரங்கோர்த்து வைத்திருக்கும் தட்டைமேஜையின்மேல்வைத்து மூடி சற்றுநேரம்பொறுத்து திறந்து பவழசரத்தை எடுத்துக்காட்ட அனைவரும் பிரமித்து ஆச்சரியப் படுவார்கள்.

981 பாலமணிசரம் கோர்க்கும் ஜாலம்.

முன்போலவே இரண்டு தாம்பாளம் ஒரே மாதிரியாகச்செய்து ஒரு தட்டில் உதிரிபாலமணியும் நூல்சரமும் வைத்து மற்றொரு தட்டில் பாலமணிகோர்த்த சரத்தைவைத்து பிறகு ஜாலமாடும் சபையில் உதிரிபாலமணியும் நூல்சரட்டையும் எடுத்து அனைவருக்குங்காட்டி இந்த உதிரி மணியையும் நூல்சரத்தையும் வைத்து மூடிவிடுகிறேன் அது சரமாக் கோர்த்திருக்கும் விநோதத்தை பாருங்களென்று தட்டை மேஜையின் மேல்வைத்து மறைவுமையை விரலில்தொட்டு ஜாலக்காளி தியானித்து மேஜையின்மேல் வைத்திருக்கும் தாம்பாளத்தின்மேல் தெளிக்க அது சபையோர் கண்களுக்குத் தெரியாது அப்போது நீ அந்த தட்டைமறைத்துவிட்டு சரம்கோர்த்து வைத்திருக்கும் தாம்பாளத்தை மேஜையின் மேல் வைத்துமூடி சற்றுநேரம்பொறுத்து திறந்து சரத்தை எடுத்துக்காட்ட அனைவரும் மதிமயங்கி ஆச்சரியப்படுவார்கள்.

982 கீரமணி கோர்க்கும் ஜாலம்.

ஜாலமாடும் சபைக்கு வருமுன்னமே ஒருமுழம் அளவுத்தில் பத்து கிரமணிசரம் கோர்த்து வைத்துக் கொள்ளவும் ஒரு தாம்பாளத்தில் கிரமணியைபோட்டு மேற்படி சரத்தளவு நூற்சரம்பத்தும் மணியுடன்வைத்து அனைவருக்குங்காட்டி இதோ இந்த உதிரிமணியையும் நூல்சரட்டையும் மேஜைமேல்வைத்து மூடிவிடுகிறேன் அதுதானே சரங்கோர்த்துக்கொள்ளும் வேடிக்கையைப் பாருங்களென்று மேஜையின்மேல் வைத்து மறைவு மையை விரலில்தொட்டு தாம்பாளத்தின்மேல் தெளிக்க தாம்பாளமும் மணியும் எதிரிகண்களுக்குத் தெரியாது அப்போது நீ தாம்பாளத்திலிருக்கும் உதிரிமணியையும் நூல்சரட்டையும் மறைத்துவிட்டு மேற்படி கோர்த்து வைத்திருக்கும் பத்துசரத்தையும் தாம்பாளத்தில் தந்திரமாகவைத்துமூடி சற்று நேரம்பொறுத்து திறந்து பத்துசரங்களையும் எடுத்து சபையோர்களுக்குக்காட்ட இதுமகா புதுமையான வித்தையென்று உன்னைப் புகழ்வார்கள்.

983 பலவித வர்ணமணிகள் கோர்க்கும் ஜாலம்.

ஜாலமாடும் சபைக்கு வருமுன்னமே பலவித வர்ணமுள்ள மணிகளை எடுத்து நூல்சரட்டில் கலந்தாற்போல் மாற்றிமாற்றி கோர்த்து பத்து சரம் வைத்துக்கொள்ளவும் பலவிதமான வர்ணமுள்ள மணிகளையும் மேற்

படி சரத்திருக்கிட்டமான நூல்சரட்டையும் தாம்பாளத்தில் வைத்து சபையோர்களுக்குக்காட்டி இந்த பலவித வர்ணமுள்ள மணிகள் ஒன்று மாற்றி ஒன்று கலந்தாற்போல் சரம்கோர்த்து வைக்கும் புதுமையைப் பாருங்களென்று தாம்பாளத்தை மேஜையின்மேல் வைத்து மறைவுமையை விரலில்தொட்டு ஜாலக்காளை புசித்து மையை தாம்பாளத்தின்மேல் தெளிக்க தாம்பாளம் ஒருவர் கண்ணுக்குந்தோற்றாது அப்போது நீ அந்த உதிரிமணியையும் நூல்சரட்டையும் மறைத்துவிட்டு மேற்படி கோர்த்து வைத்திருக்கும் சரத்தை தாம்பாளத்தில் வைத்துமூடி சற்றுநேரம் பொருத்து திறந்து பலவிதமணிகள் கலந்து கோர்த்திருக்கும் விநோதமாகிய மணிசரத்தை எடுத்து சபையோர்களுக்குக்காட்டி பிரமித்து இதுஎன்ன புதுமையான மந்திரமோவென்று புகழ்ந்து கொண்டாடுவார்கள்.

934. கூடைபோட்டு மூடிவைத்தபூனை மாயமாய்மறைந்து மருபடியும் வரும்ஜாலம்.

ஜாலமாடும் சபையில் ஒரு பூனைக்குட்டியைபிடித்து வரும்படிசெய்து அதை அனைவருக்குங்காட்டி இதோ இந்த பூனையை கூடைபோட்டு மூடிவிடுகுறேன் அது மாயமாகமறைந்துபோய் மருபடியும் வரும்விநோதத்தைப்பாருங்களென்று மறைவுமையை விரலில்தொட்டு ஜாலக்காளை தியானித்து மையை பூனையின்மேல் அடையாளமாகத்தடவி கூடைபோட்டு மூடி சற்றுநேரம்பொருத்து திறந்துகாட்ட பூனை அங்கையே யிருந்தபோதிலும் சபையோர்கண்களுக்கு தெரியாது அனைவரும் பூனையைகாணோமென்று பிரமித்தாபோல் பார்த்து நிற்பார்கள் அப்போது நீ சபையோர்களைப்பார்த்து மாயமாய்போன பூனை மருபடியும் கூடைக்குள் வரும்படி செய்யும் விநோதத்தைப் பாருங்களென்று ஒருவருக்குந்தெரியாமல் தந்திரமாக பூனைமேல் தடவியமையை போக்கிவிட்டு முன்போல் மூடிதிறந்து காட்ட பூனையிருக்கும் அனைவரும் பார்த்து ஆச்சரியப்பட்டு இது குறிவேலையென்று கலங்குவார்கள்.

935. கூண்டிலடைத்தகிளி மாயமாய் மறைந்து மருபடியும் வரும்ஜாலம்.

ஜாலமாடும் சபையில்வந்துநின்று ஒரு கிளியைப்பிடித்து கூண்டில் அடைத்து அனைவரையும்பார்த்து இதோ இந்த கிளியை மூடிவிடுகிறேன் அது மாயமாக மறைந்து மறுபடியும் கூண்டில்வரும் விநோதத்தை பாருங்களென்று மறைவுமையை விரலில்தொட்டு ஜாலக்காளை தியானித்து தந்திரமாக மையை கிளியின்மேல்தெளித்து மூடித்திறந்து காட்ட கூண்டில் கிளியில்லாமைபோல் தோற்றும் பார்ப்போர்கள் கிளிமாயமாய் போய்விட்டதென்றே நம்புவார்கள் அப்போது நீ அவர்களைப்பார்த்து மாயமாய் போன்கிளியை கூண்டில்வரும்படிசெய்குறேன் பாருங்களென்று கிளியி

ன்மேல் தெளித்த மையை போக்கி முன்போல் மூடி திறந்துக்காட்ட கிளியிருக்கக்கண்டு ஆச்சரியப்படுவார்கள்.

936. கூண்டிலடைத்தமயிலு மாயமாய் மறைந்து மறுபடியும் வரும் ஜாலம்.

முன்போல் சபையில்வந்து நின்று ஒருமயிலைப் பிடித்து கூண்டிலடைத்து அனைவருக்குங்காட்டி இதோ இந்த மயிலை மூடிவைக்குறேன் அதுமாயமாகபோய் மருபடியும் வரும் விநோதத்தைப் பாருங்களென்று மறைவுமையை விரலில்தொட்டு ஜாலக்காளை தியானித்து மையை மயிலின்மேல் தடவி மூடி திறந்துகாட்ட மயிலிருப்பது ஒருவருக்குந்தெரியாது மாயமாய் போய்விட்டதென்றே நம்புவார்கள் அப்போதவர்களை பார்த்து மாயமாய் மறைந்த மயிலை மருபடியும் கூண்டில் வரும்படி செய்கிறேன் பாருங்களென்று தந்திரமாக மயிலின்மேல் தடவிய மையைபோக்கி முன்போல் மூடிதிறந்துகாட்ட மயிலிருக்கக் கண்டு மகிழ்ந்து புகழ்வார்கள்.

937. போனிலடைத்தபுனுகுபூனை மாயமாய் மறைந்து மருபடியும் வரும் ஜாலம்.

ஜாலமாடும் சபையில் ஒருபுனுகுபூனை பிடித்து போனில் அடைத்து அனைவருக்குங்காட்டி இதோ இந்த புனுகுபூனையை மூடிவிடுகிறேன் அது மாயமாக மறைந்துபோய் மருபடியும்வரும் விநோதத்தைபாருங்களென்று மறைவுமையை விரலில்தொட்டு ஜாலக்காளை தியானித்து மையைபோனில்ஒருபுறந்தடவிவிட்டு முன்போல் மூடி சற்றுநேரம்பொருத்து திறந்து போனைபார்க்க பூனையில்லாதுபோல்தோற்றும் சபையோர்களும் புனுகுபூனை மாயமாய் மறைந்துவிட்டதென்று நம்புவார்கள் அப்போது நீ அவர்களைபார்த்து மாயமாய் போனபுனுகுபூனையை மருபடியும் கூண்டில் வரும்படி செய்கிறேன் பாருங்களென்று தந்திரமாகபோனில் தடவியமையைப்போக்கி முன்போல் மூடிதிறந்துக்காட்ட புனுகுபூனை போனிலிருக்கக் கண்டு மதிமயங்கி இதுமாயாசக்தி வசியமென்பார்கள் சிலர் இதுகண்கட்டு வித்தையென்பார்கள்.

938. பாம்பைபெட்டியில்போட்டு மூடிவைக்க மாயமாய் மறைந்து மறுபடியும் வரும் ஜாலம்.

ஜாலமாடும் சபையில் பாம்புபெட்டியை அனைவருக்குங்காட்டி அதில் பாம்பைபோட்டு அடைத்து மேல்மூடிவைத்து, இந்தப்பாம்பு பெட்டியைவிட்டு மாயமாகப்போய் மருபடியும் பெட்டியில் வரும் அற்புதத்தைப் பாருங்களென்று மறைவுமையை விரலில்தொட்டு ஜாலக்காளை தியானித்து தந்திரமாக பாம்புபெட்டியைத் திறந்து அதிலொருபுறமாக மையை

தடவிமூடி மேலே ஒரு துணியையும் போட்டு மூடிச்சற்றுநேரம் பொறுத்து துணியை நீக்கி பெட்டியின் மேல்மூடியைத்திறந்து அனைவரையும் பார்க்கச் சொல்லி அவர்கள் கண்களுக்கு வெறும்பெட்டியாகத்தோற்றும் அவர்களும் பாம்பு மாயமாய் போய்விட்டதென்று நம்புவார்கள் அப்போது நீ அவர்களைப்பார்த்து மாயமாய்போன பாம்பைமறுபடியும் பெட்டியில் வரும்படி செய்கிறேன் பாருங்களென்று தந்திரமாக பெட்டியில் தடவியமையை போக்கிவிட்டு முன்போல் மூடிதிறந்துகாட்டபெட்டியில் பாம்பிருக்கக் கண்டு புகழ்ந்துக் கொண்டாடுவார்கள்.

989. கூடைபோட்டு மூடிய கீரிப்பிள்ளை மாயமாய் மறைந்து மறுபடியும் வரும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் ஒரு கீரிப்பிள்ளையைப் பிடித்து அனைவருக்குங் காட்டி இந்த கீரிப்பிள்ளையை கூடைக்குள் போட்டுமூடி விடுகிறேன் அது மாயமாக மறைந்துபோய் மறுபடியுங்கூடைக்குள் வரும் விநோதத்தைப் பாருங்களென்று மறைவுமையை விரலில்தொட்டு ஜாலக்காரனை தியானித்து தந்திரமாக மையை கீரிப்பிள்ளையின்மேல் தடவி பூமியில்வைத்து கூடையைப் போட்டுமூடி அதின்மேல் துணியையும்மூடி சற்று நேரம் பொறுத்து திறந்துகாட்ட கீரிப்பிள்ளை மாயமாய் போய்விட்டதுபோலிருக்கும் அனைவரும் பிரமித்துநிற்பார்கள். அப்போது நீ அவர்களைப்பார்த்து மாயமாகப்போன கீரிப்பிள்ளை மறுபடியும் கூடைக்குள் வரும்படி செய்கிறேன் பாருங்களென்று தந்திரமாக கீரிப்பிள்ளைமேல் தடவிய மறைவுமையை துடைத்துவிட்டு முன்போல் மூடித்திறந்துகாட்ட கீரிப்பிள்ளை கூடைக்குள் வந்திருக்கும் அப்போது அனைவரும் இது மயான்ருத்திரி வேலையென்று மதிமயங்குவார்கள்.

990 கூடைபோட்டு மூடிய புறாமாயமாய் மறைந்து மறுபடியும் வரும் ஜாலம்.

முன்போலவே ஜாலமாடும் சபையில் வந்துநின்று ஒரு புறாவை எடுத்து அனைவருக்குங்காட்டி இதோ இந்தபுறாவை கூடைபோட்டு மூடிவிடுகிறேன் அது மாயமாய் மறைந்து மறுபடியும் வரும் வேடிக்கையைப்பாருங்களென்று மறைவுமையை விரலில்தொட்டு ஜாலக்காளியை தியானித்து தந்திரமாக மையை புறாவின்மேல்தடவி பூமியில்வைத்து கூடையைபோட்டுமூடி அதின்மேல் துணியைமூடி சற்றுநேரம்பொறுத்து துணியையெடுத்து வாங்கி கூடையைதிறந்துகாட்ட புறாவிருப்பது யெதிரிகள் கண்களுக்கு தோற்றப்படாது அப்போதவர்கள் புறாமாயமாய் போய்விட்டதென்றே நம்புவார்கள், அப்போது நீ அவர்களைபார்த்து மாயமாய்ப்போன புறாவை மறுபடியும் கூடைக்குள்வரும்படிசெய்கிறேன் பாருங்களென்று தந்திரமாக புறாவின்மேல் தடவிய மையைத்துடைத்து விட்டு முன்போல் மூடிதிறந்துக் காட்ட புறாகூடைக்குள் யிருப்பதைகண்டு கண்பூர்த்து இது காளிவசியமென்பார்கள்.

991 போனிலடைத்த நரி மாயமாய் மறைந்து மருபடியும் வரும் ஜாலம்.

ஒருபோன்செய்து அதில் ஒருநரியைப்பிடித்து அடைத்து ஜாலமாடும் சபையில்கொண்டுவந்து நிறுத்தி அங்குள்ள அனைவரையும் பார்த்து இந்தபோனுக்குள்ளிருக்கும் நரியை மூடி வைக்கிறேன் அது மாயமாக மறைந்துபோய் மருபடியும் போனுக்குள்வரும் விநோதத்தைப் பாருங்களென்று மறைவுமையை விரலில்தொட்டு ஜாலக்காளியை தியானித்து மையைதந்திரமாய் போனின் முன்னே தடவிமேலே ஒருதுணியைப்போட்டு மூடி சற்றுநேரம்பொறுத்து துணியை திறந்துபார்க்க நரி மறைந்துவிட்டதுபோல் தோற்றும் அனைவரும் விழி யிமையாமல் பார்த்து பிரமிப்பார்கள் அப்போது நீ அவர்களை பார்த்து மாயமாய்மறைந்துபோன நரியை மறுபடியும் போனில்வரும்படி செய்கிறேன் பாருங்களென்று உபாயமாக போனில் பூசியமையை துடைத்துவிட்டு முன்போல் மூடிதிறந்து காட்ட போனில் நரியிருக்கக்கண்டு ஆச்சரியப்பட்டு உன்னை புகழ்வார்கள்.

992 நாலுமூலையில்வைத்த எலுமிச்சம்பழம் ஒரு மூலையில்வந்துசேரும் ஜாலம்.

ஜாலமாடும் சபையில் நாலு எலுமிச்சம்பழத்தை எடுத்து அனைவருக்குங்காட்டி மேஜையின்மேல் நாலு மூலையிலும் நாலுபழத்தை வைத்து அங்குள்ளவர்களை பார்த்து இந்த நாலுபழத்தையும் தனித்தனியாக சிறிய கூடையைப்போட்டு மூடிவிடுகிறேன் அந்த நாலுபழமும் ஒருகூடைக்குள் வந்திருக்கும் வேடிக்கையைப் பாருங்களென்று மறைவுமையை தொட்டு தந்திரமாக மூன்றுபழத்திற்கு தடவி மற்ற ஒருபழத்தினோடு ஒருவருக்குந் தெரியாமல் மூன்றுபழம் கூடசேர்த்து சிறியகூடையில் தனித்தனியே மூடி சற்றுநேரம்பொருத்து மையைதடவி வைத்திருக்கும் பழத்தின்கூடையை ஒவ்வொன்றாக திறந்துகாட்ட பழம் இல்லாததுபோல் தோற்றும் நாலாவது கூடையை திறந்துகாட்ட நாலுபழமும் தோற்றும் பார்ப்போர்கள் பிரமித்து இது குட்டிசாத்தான்வேலை என்று ஆச்சரியப்படுவார்கள்.

993 நாலுமூலையில் நாலுகோழி முட்டையை வைத்து ஒரு மூலையில் வந்துசேரும் ஜாலம்.

முந்தி எலுமிச்சம்பழத்தை வைத்ததுபோல் மேஜையின் நாலுமூலையிலும் நாலு முட்டைவைத்து சபையோர்களைப் பார்த்து இந்த நாலுமுட்டையையும் தனித்தனியே சிறிய கூடையைப்போட்டுமூடி வைக்குறேன் நாலும் ஒரு கூடைக்குள் வந்திருக்கும் விநோதத்தைப் பாருங்களென்று

மறைவுமையை விரலில்தொட்டுக்கொண்டு ஜாலக்காரன் இயானித்துமையை தந்திரமாக மூன்று முட்டையின்மேல் தடவிமூடி நாலாவது முட்டையுடன் ஒருவருக்குந் தெரியாமல் மூன்று முட்டையை கூடசேர்த்து மைகொட்டு முன்னமேமூடி சற்று நேரம்பொருத்து மைதடவி வைத்திருக்கும் முட்டையின் கூடையை ஒவ்வொன்றாக திறந்துகாட்ட சபையோர்களுக்கு முட்டையிருப்பது தெரியாது நாலாவதுகூடையை திறந்துகாட்ட நாலுமுட்டையும் அதிலிருக்கக்கண்டு ஆச்சரியப்படுவார்கள் அப்போது நீ அவர்களைப்பார்த்து முன்போலவேநாலுகூடையிலும் நாலுமுட்டை போம்படிச் செய்கிறேன் பாருங்களென்று முட்டையின்மேல் பூசியமையை தந்திரமாக துடைத்துமூடி கூடசேர்த்த மூன்றுமுட்டையும் [illegible]த்துவிட்டு மூடிதிறந்துகாட்ட நாலு கூடையிலும் நாலு முட்டையிருக்கும் அனைவரும் ஆச்சரியப்படுவார்கள்.

994 நாலுமூலையில் நாலுகேசக்காயை வைத்துமூடிட நாலும் ஒரு மூலையில் வரும் ஜாலம்.

ஜாலமாடும் சபையில் நாலுகேசக்காயை எடுத்து அனைவருக்குங் காட்டி மேஜையின் நாலுமூலையிலும் நாலுகாயை வைத்து அங்குள்ளவர்களைப்பார்த்து இந்த நாலுகாயையும் தனித்தனியாக சிறியகூடைபோட்டு மூடிவிடுகிறேன் அந்தநாலும் ஒருகூடையில் வந்துசேரும் விநோதத்தைப் பாருங்களென்று மறைவுமையை விரலில்தொட்டு ஜாலக்காரன் இயானித்துமையை மூன்று காயின்மேல் தடவிமூடி நாலாவது காயுடன் தந்திரமாக மூன்றுகாயை சேர்த்துமூடி சற்றுநேரம்பொருத்து முன்போல்மூன்றுகூடையுந்திறந்துகாட்டிட காய்கள் இல்லாததுபோலிருக்கும் நாலாவதுகூடையை திறந்துகாட்ட நாலுகாயும் அதில் தோற்றும் அனைவரும்பார்த்து ஆச்சரியப்படுவார்கள் அப்போது நீ அவர்களைப்பார்த்து முன்போல் நாலுகூடையிலும் நாலுகாயைப் போகும்படி செய்கிறேன் பாருங்களென்று தந்திரமாக மையை துடைத்துமூடி அதிகமாகச்சேர்த்த காய்மூன்றையும்மறைத்து திறந்துகாட்ட நாலுகூடையிலும் நாலுகாயிருக்கும் இதுமகா புதுமையென்று புகழ்வார்கள்.

995 மணல் சக்கரையாகும் ஜாலம்.

ஜாலமாடும் சபையில் வந்துநின்று ஆற்றுமணலை அள்ளி அனைவருக்குங்காட்டிவைத்து இந்தமணலை சக்கரையாக்கின்றேன் பாருங்களென்று மாயாசத்திமையை வலதுகையில் தடவிக்கொண்டு மாயாசத்திமந்திரத்தை ஜெபித்துக்கொண்டே மணல் சக்கரையாகத் தோற்ற வேணுமென்று மணலைஅள்ளி உழக்கில் போட்டுமூடி சற்று நேரம்பொருத்து திறந்து கொட்டிக்காட்ட நல்லிதமான வெள்ளை சக்கரைப்போல் தோற்றும்.

அதை அனைவருக்குங்காட்டி உடனே முன்போல் சக்கரையை உழக்கில் போட்டுமூடி கொட்டிக்காட்ட ஆற்றுமணலாகிவிடும் அனைவரும் பிரமித்து ஆச்சரியப் படுவார்கள்.

996 வேறுமுறை வழக்குவெல்லும் ஜாலம்.

சிரியாநங்கை செடிக்கு ஞாயிற்றுக் கிழமையில் மஞ்சள் நூல் காப்பு கட்டி தூபதீபங்கொடுத்து வேரைப்பிடுங்கிவந்து அந்த வேரின்மேல் மாயாசத்திமையை தடவி பூசையில் வைத்து மாயாசத்தி மந்திரத்தை ஆயிரத்தெட்டு உருஜெபித்து பூசைமுதலானதும் போட்டு வேரையெடுத்து குளிசமாடி வைத்துக்கொள்ளவும் தனக்கு வழக்கு நேரிடுங்காலத்தில் குளிசத்தை [illegible]க்கொண்டு போக வழக்கைவென்று எதிரியை ஜெயம் செய்யலாம்.

997 வேறுமுறை சத்துருவை ஜெயிக்கும் ஜாலம்.

சோனைப் புல்லென்னும் செடிக்கு திங்கட்கிழமையில் மஞ்சள் நூல் காப்புகட்டி தூபதீபங்காட்டி வேரைப்பிடுங்கிவந்து அதின்மேல் மாயாசத்திக்கருவைத்தடவி பூஜையில்வைத்து மாயாசத்தி மந்திரத்தை ஆயிரத்தெட்டு உருஜெபித்து பூஜைபோட்டு வேரையெடுத்து வெள்ளித்தகட்டில் குளிசமாடிக்கொள்ள சத்துருக்கள் உன்னைக்கண்டால் சாந்தமாகப் பேசுவார்கள் உன்னிஷ்டம்போல் நடப்பார்கள் நீ ஜெயம்பண்ணலாம்.

998 வேறுமுறை துலதூரம் நடக்கும் ஜாலம்.

காதாளம் என்னும் செடிக்கு மங்களவாரம் விருச்சிக லக்கினத்தில் மஞ்சள்நூல் காப்புகட்டி தூபதீபங்கொடுத்து அதின் வடக்குபோகும் வேரைப்பிடுங்கிவந்து அதின்மேல் மாயாசத்திக் கருவைத்தடவி பூசையில் வைத்து மாயாசத்தி மந்திரத்தை ஆயிரத்தெட்டு உருஜெபித்து பூசைமுதலானதும்போட்டு வேரையெடுத்து குளிசமாடி வைத்துக் கொள்ளவும். எங்கையேனும் பிரயாணம் போகநேரிடுமாகில் அப்போது இந்த குளிசத்தையெடுத்து வலதுகாலில் கட்டிக்கொண்டு எவ்வளவுதூரம் நடந்துபோனாலும் இளைப்பு ஆயாசம் இராது கால்நோகாது.

999 வேறுமுறை ஸ்திரிவசிய ஜாலம்.

முல்லைச்செடிக்கு ஆதிவாரம் கன்னியா லக்கினத்தில் மஞ்சள் நூல் காப்புகட்டி மறுவாரம் துலாலக்கினத்தில் வேரைப் பிடுங்கிவந்து அதின்மேல் மாயாசத்திக் கருவைப்பூசி பூசையில்வைத்து மாயாசத்தி மந்திரத்தை ஆயிரத்தெட்டு உருஜெபித்து பூசைமுதலானதும் போட்டு வேரையெடுத்து குளிசமாடி கட்டிக்கொண்டுபோக விநோதமான ஸ்திரிகளெல்லாம் உறவாடி வருவார்கள் கேட்டதையெல்லாந்தருவார்கள் உன்னுடைய இஷ்டம்போலும் நடப்பார்கள் உன்பின்னையுந் தொடருவார்கள்.

1000. வேறுமுறை புருஷவசியஜாலம்.

சிற்றத்தைசெடிக்கு வெள்ளிக்கிழமையில் தனுசுலக்கினத்தில் மஞ்சள் நூல் காப்புகட்டி தூபதீபங்கொடுத்து மறுவாரத்தில் சிம்பலக்கினத்தில் வேரைப்பிடுங்கிக்கொண்டு வந்து அந்தவேரின்மேல் மாயாசத்தி கருவை பூசி பூஜையில்வைத்து மாயாசத்தி மந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து பூஜைமுதலானதும் போட்டு வேரையெடுத்து பொன்தகட்டில் குளிசமாடிக்கட்டிகொள்ள புருஷர்களெல்லாம் வசியமாவார்கள் உன்னுடைய இஷ்டம்போல் நடப்பார்கள் நீ இட்டவேலையும் செய்வார்கள்.

1001. வேறுமுறை புலிவசியஜாலம்.

புலிதுடக்கி என்னும்செடிக்கு கிரகணத்தில் மஞ்சள் நூல் காப்புகட்டி தூபதீபங்கொடுத்து வேரைப்பிடுங்கிவந்து அந்தவேரின்மேல்மாயாசத்தி கருவைப்பூசி பூஜையில் வைத்துமாயாசத்தி மந்திரத்தை ஆயிரத்தெட்டுஜெபித்து பூஜைமுதலானதும் போட்டு வேரை எடுத்து வெள்ளிதகட்டில் குளிசமாடிக்கட்டிக்கொள்ள புலிவசியமாகும் புலியைப்பசுவைப்போல் பழக்கலாம்.

1002. வேறுமுறை யானைவசியஜாலம்.

குப்பமேனிச்செடிக்கு ஆதிவாரத்தில் சிம்பலக்கினத்தில் மஞ்சள் நூல் காப்புகட்டி வேரைப்பிடுங்கிவந்து அந்தவேரின்மேல் மாயாசத்தி கருவை பூசி பூஜையில்வைத்து மாயாசத்தி மந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து பூஜைமுதலானதும்போட்டு வேரை எடுத்து குளிசமாடிக்கட்டிக்கொண்டு போக யானைவசியமாகும் யானையை இஷ்டம்போல் நடக்கும்படிப் பழக்கலாம்.

1003. வேறுமுறை கள்ளர்வசிய ஜாலம்.

தேள்கொடுக்குச்செடிக்கு செவ்வாய்கிழமையில் மஞ்சள் நூல்காப்புகட்டிபொங்கலிட்டு பலிகொடுத்து தூபதீபங்காட்டி வேரைப்பிடுங்கி வந்து அந்த வேரின்மேல் மாயாசத்தி கருவை பூசி பூஜையில்வைத்து மாயாசத்தி மந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து பூஜை முதலானதும் போட்டு வேரை எடுத்து குளிசமாடிக் கட்டிக்கொண்டு இரவிலேனும் பகலிலேனும் கள்ளர்கள்முன்போக கள்ளர்கள் உன்னைக்கண்டவுடன் வணங்கி அவர்களுடைய மருமசருமங்களை எல்லாம் சொல்லி உன்னிஷ்டம் போலும் நடப்பார்கள்.

1004. வேறுமுறை காடிவசிய ஜாலம்.

இரசனி என்னும் செடிக்கு வியாழக்கிழமை அம்மாவாசை கூடியதினத்தில் மஞ்சள் நூல்காப்புகட்டி பொங்கலிட்டு பலிகொடுத்து தூபதீபங்காட்டி வேரைப்பிடுங்கி வந்து அந்தவேரின்மேல் மாயாசத்தி கருவைத் தடவி பூசையில்வைத்து மாயாசத்திமந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து

பூசைமுதலானதும்போட்டு வேரை குளிசமாடிக் கட்டிக்கொள்ள காடிவசியமாகும் காடியை ஆட்டுக்கிடாய்போல் பழக்கலாம் தமது இஷ்டம்போல் ஆடும்படியும் செய்யலாம் அதுவும் உன்னைகண்டால் நடுநடுங்கி பயந்து கிடக்கும்.

1005. வேறுமுறை சண்டை ஜாலம்.

பூனைகாலி என்னும் செடிக்கு கிரகணத்தில் மஞ்சள் நூல் காப்புகட்டி தூபதீபங்காட்டி வேரைப்பிடுங்கிவந்து அந்த வேரின்மேல் மாயாசத்தி கருவைத் தடவி பூசையில்வைத்து மாயாசத்தி மந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து பூசைமுதலானதும்போட்டு வேரை எதிரியினுடைய மனையில் கொண்டுபோய் வைக்க அவன் வருவோர் போவோர்களிடத்தில் வலிய சண்டைபோடுவான் அதினால் துன்பமடைகுவான் வேரை எடுத்து விட்டால் சண்டையும் நின்று அதினால் வரும்துன்பமும் விலகும்.

1006. வேறுமுறை சகலவசிய ஜாலம்.

எத்தை சொன்னாலுங் கேட்கும் நத்தை சூரிசெடிக்கு ஆதிவாரத்தில் மஞ்சள் நூல் காப்புகட்டி பொங்கலிட்டு பலிகொடுத்து தூபதீபங்காட்டி வேரைப்பிடுங்கிகொண்டுவந்து அந்தவேரின்மேல் மாயாசத்தி கருவைத் தடவி பூசையில்வைத்து மாயாசத்தி மந்திரத்தை ஆயிரத்தெட்டுஜெபித்து வேரையெடுத்து குளிசமாடிக் கட்டிக்கொள்ள சகலமும்வசியமாகும் எந்த விடத்திற்குப்போனாலும் ஜெயமாகும் பகைவராக இருந்தாலும் உறவாகுவார்கள்.

1007. வேறுமுறை தொழில்விருத்தியாகும் ஜாலம்.

சீதேவி என்னும்செடிக்கு திங்கட்கிழமை வளர்பிறையில் கன்னியாலக்கினத்தில் மஞ்சள் நூல்காப்புகட்டி தூபதீபங்கொடுத்து மறுவாரம் துலாலக்கினத்தில் சென்று தூபதீபங்காட்டி வேரைப்பிடுங்கிவந்து அந்த வேரின்மேல் மாயாசத்திகருவை தடவி பூசையில்வைத்து மாயாசத்தி மந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து பூசைமுதலானதும் போட்டு வேரை குளிசமாடிக்கட்டிக்கொள்ள எந்த தொழில் செய்தாலும் விருத்தியாகும் லாபம் விசேஷமாகக் கிடைக்கும்.

1008. வேறுமுறை பயிர்விருத்தியாகும் ஜாலம்.

கொடிவேலிச்செடிக்கு ஆதிவாரம் பருவமும் கூடியதினத்தில் மஞ்சள் நூல்காப்புகட்டி பொங்கலிட்டு பலிகொடுத்து தூபதீபங்காட்டி வேரைப்பிடுங்கிவந்து அந்தவேரின்மேல் மாயாசத்திகருவைத் தடவி பூசையில்வைத்து மாயாசத்திமந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து பூசை முதலானதும்போட்டு வேரை எடுத்து அந்தவேரின்மேல் பொன்கம்பி வெள்ளிகம்பி செம்புகம்பி இந்த மூன்று கம்பியையும் சுத்திவைத்து கொள்ள

லும் விதைவிதைக்கும்போது அந்த விதையில் இந்த வேறைப் போட்டு வி தைவிதைக்க பயிர்விருத்தியாகி நகிர் கன்றுய்விட்டு தானியம் உபிரியா கும் ஆனால் வேரைபத்திரபடுத்தி வைத்திருக்கவேண்டும்.

1009. பாம்பாட்டும் ஜாலம்.

பாம்புகொல்லி என்னும் செடிக்கு அம்மாவாசையில் மஞ்சள் நூல் காப்புகட்டி பொங்கலிட்டு பலிகொடுத்து பூசைபோட்டு வேரைப்பிடுங்கி வந்து அந்த வேரின்மேல் மாயாசத்திகருவை தடவி பூசையில் வைத்து மாயாசத்தி மந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து பூசை முதலானதும் போட்டு வேரையெடுத்து செம்புகடையம் செய்து அதில்போட்டு அடக்கம் செய்து கடையத்தை வலதுகையில் மாட்டிக்கொண்டு பாம்பை எதிரில்விட்டு மனம்போல் ஆடும்படி செய்யலாம் ஆனால் பாம்பை ஆட்டும் போது கடையத்தை மணிகட்டின்கை இரக்கிக்கொள்ளவேண்டும்.

1010 பசுவையால் அதிகமாகபால் கரக்கும்படி செய்யும் ஜாலம்.

பூனைக்காலி செடிக்கு வியாழக்கிழமையில் மஞ்சள் நூல் காப்புகட்டி பொங்கலிட்டு பலிகொடுத்து தூபதீபங்காட்டி வேரைப் பிடுங்கிவந்து அந்தவேரின்மேல் மாயாசத்திகருவும் ஐங்கோலக் கருவும்தடவி பூசையில் வைத்து மாயாசத்தி மந்திரத்தை ஆயிரத்தெட்டு உருஜெபித்து பூசைமுதலானதும்போட்டு வேரையெடுத்து குளிசமாடி வைத்துக் கொள்ளவும் பால்கரக்கும்போது இந்த குளிசத்தை பசுவின் பின்காலில் கட்டிகரக்க அதிகமாகக்கரக்கும் பால் கரக்கும்போது குளிசத்தை கட்டி மற்றவேளையில் அவிழ்த்து வைத்துக் கொள்ளவேண்டும்.

1011 குதிரை வேகமாக ஓடும் ஜாலம்.

வள்ளைக்கொடி செடிக்கு மங்கவாரம் தனுசலக்கினத்தில் மஞ்சள் நூல் காப்புகட்டி பொங்கலிட்டு பலிகொடுத்து தூபதீபங்காட்டி மறுவாரம்சென்று சிம்மலக்கினத்தில் வேரைப்பிடுங்கிவந்து அந்த வேரின்மேல் மாயாசத்திமையும் ஐங்கோலக் கருவையும்தடவி பூசையில்வைத்து மாயாசத்தி மந்திரத்தை ஆயிரத்தெட்டு உருஜெபித்து பூசை முதலானதும்போட்டு வேரையெடுத்து குளிசமாடி வைத்துக்கொள்ளவும் குதிரையைசவாரி செய்யும்போது இந்த குளிசத்தை பட்டுக்கயத்தில் கோர்த்து குதிரையின் கழுத்தில்கட்டி சவாரிசெய்ய அதிகவேகமாக ஓடும் குதிரைக்கு இளைப்பு ஆயாசம் இவைகள் இராது.

1012 வேறுமுறை விஷமேறாதிருக்கும் ஜாலம்.

கருமத்தன் செடிக்கு கிராணத்தில் மஞ்சள் நூல் காப்புகட்டி பொங்கலிட்டு பலிகொடுத்து தூபதீபங்காட்டி வேரைப் பிடுங்கிவந்து அந்த வேரின்மேல் மாயாசத்திகருவும் ஐங்கோலக் கருவையும் தடவி பூசையில்

வைத்து மாயாசத்தி மந்திரத்தை ஆயிரத்தெட்டு உருஜெபித்து பூசைமுதலானதும்போட்டு செம்பினால் அல்லது வெள்ளியினால் கடையம் செய்து அந்த கடையத்தில் வேறை அடக்கம்செய்து வைத்துக்கொள்ளவும் கடையத்தை வலதுகையில் மாட்டிக்கொண்டு இரவுபகலில் எங்கேபோனாலும் அவ்விடங்களிலிருந்து என்ன விஷந்தீண்டினாலும் ஏறாது விஷந்தீண்டி வந்தவர்களுக்கு இந்தகடையத்தால் உச்சியிலிருந்து உள்ளங்கால் வரைக்கும் ஒன்பது தடவை வைத்து யிரக்க விஷமிரங்கும்.

1013 வேறுமுறை பேயாட்டும் ஜாலம்.

எருமுட்டை பீனாரிசெடிக்கு ஆதிவாரம் திருட்சிகலக்கினத்தில் மஞ்சள்நூல் காப்புகட்டி தூபதீபங்கொடுத்து வேரைப்பிடுங்கிவந்து அந்தவேரின்மேல் மாயாசத்திகருவும் ஐங்கோலக் கருவையும் தடவி பூசையில் வைத்து சத்தி மந்திரத்தை ஆயிரத்தெட்டுஜெபித்து பூசைமுதலானதும் போட்டுவேரையெடுத்து வைத்துக்கொள்ளவும்பேயோட்டும்போது இந்த வேரை வேப்பெண்ணையில் குழைத்து அத்துடன் உச்சாடன கருவையும் கலந்து விரலில்தொட்டு பேயாடுவோர் சிரசில் தெளித்து குறள்மந்திரத்தை நூத்தியெட்டு உருஜெபிக்க ஆடாத பேய்களெல்லாம் ஆடும் ஓடாத முனிகளெல்லாம் ஓடும் அரும்பெரும் சொல்லும் உடனே முடியுறுத்து செய்யும் சடங்குகள் செய்யவும்.

1014 வேறுமுறை தேவதைகள் வசியமாகும் ஜாலம்.

செங்கழுநீர் செடிக்கு வெள்ளிக்கிழமையில் மஞ்சள்நூல் காப்புகட்டி பொங்கலிட்டு பலிகொடுத்து தூபதீபங்காட்டி வேரைப் பிடுங்கிவந்து அந்தவேரின்மேல் மாயாசத்தி கருவும் ஐங்கோலக்கருவும் அஷ்டமாசித்தி மையுங்கலந்து தடவி பூசையில்வைத்து மாயாசத்தி மந்திரத்தை ஆயிரத்தெட்டு உருஜெபித்து வேரையெடுத்து குளிசமாடிக்கட்டிக்கொள்ள எந்த தேவதைகளை குறித்து தியானிக்கின்றையோ அந்த தேவதைகள் வசியமாவார் நீ நினைத்த எண்ணம்போலும் முடித்து வைப்பார்கள்.

1015 ஒருவர்பின் ஒருவர் தொடரும் ஜாலம்.

தொட்டால் வாடியசெடிக்கு கிராணத்தில் மஞ்சள் நூல் காப்புகட்டி தூபதீபங்காட்டி வேருடன் செடியைப் பிடுங்கிவந்து உரலிலிட்டு இடித்து சாரைபிழிந்து அத்துடன் கஸ்தூரி காற்கழஞ்சும் சேர்த்து சூரியபுடமாகவைத்து எடுத்து கல்வத்திலிட்டு மைபோல் அரைத்து வழித்து அத்துடன் மாயாசத்திகருவும் ஐங்கோலக்கருவும் அஷ்டமாசித்தி மையையுங் கலந்து சிமிளில்அடைத்து பூசையில்வைத்து மாயாசத்தி மந்திரத்தை ஆயிரத்தெட்டு உருஜெபித்து வைத்துக் கொள்ளவும் அந்தமையை திலர்தமிட்டுக்கொண்டுபோக உன்னைக் கண்டோரெல்லாம் உன்பின் தொடருவார்கள் உன்சொற்படி கேட்பார்கள் நீயிட்டவேலையும் செய்வார்கள்.

1016 வேறுமுறை சகல மிருகங்களும் வசியஜாலம்.

நின்றேல்வாடி செடிக்கு ஆதிவாரமும் அம்மாவாசையுங் கூடியதினத்தில் மஞ்சள்நூல் காப்புகட்டி பொங்கலிட்டு பலிகொடுத்து தூபதீபங்காட்டி வேரைப்பிடுங்கிவந்து அச்சவேரின்மேல் மாயாசக்தி கருவையும் ஐங்கோலக் கருவையும் நடுவி பூசையில்வைத்து மாயாசக்தி மந்திரத்தை ஆயிரத்தெட்டு உருஜெபித்து பெருத்த பூசைபோட்டு வேரைபெடுத்து பொன்தகட்டில் குளிசம்செய்து அதில்வேரை அடைத்து பட்டுக்கயத்தில் கோர்த்து வலதுகையில் கட்டிக்கொண்டுபோக புலி, கரடி, யானை, செந்நாய், கருநாய், முள்ளம்பன்றி, நரி, குழநரி இன்னம் பலவிதமான மிருகங்களும் உன்னைக்கண்டால் நடுநடுங்கி பயந்துஒடுங்கிவதுடன் உன் வசியமாகும் நீ அழைத்தால் வரும் இஷ்டபடி நடக்கும் இவ்விதம் செய்ய உன்னை அனைவரும் சித்தனென்று புகழ்வார்கள்.

1017 பக்ஷம் இரண்டுக்குந் பக்ஷிவலுவறியும் வித்தை.

ஜாலமாட சபைக்கு வரும்போது பட்சிகளின் வலுவைபார்க்கவேண்டுவது எவ்விதமெனில் ஊண்பட்சி வலுவுமுக்கால் நடைபட்சி ஊணிற்பாதி அரசபட்சியின்வலுவோ அதிகமாகும் நித்திரைசெய்யும் பட்சியின் வலுவோ நடைவலுவிற்பாதியாகும் மரணபட்சியின் வலுவோ நித்திரை பட்சின் வலுவிற்பாதியாகும் அரசபட்சிக்கு நிகர்வேறில்லை ஆயினும் ஊண்பட்சி சயம்பாங்கியாகும் நடைபட்சி ஓட்டக்காரன் மற்றபட்சிவலுவில்லாததையாகும் அரசபட்சிக்கோபகை ஒருபட்சியுமில்லை யாவும் மித்துரு பட்சியாகும் ஆகினும் ஊண்பட்சி ஆந்தையாகும் நடைபட்சிவல்லூராகும் அரசபட்சி காகமாகும் நித்திரைபட்சி கோழியாகும் மரணபட்சி மயிலாகும் பூர்வபட்சத்திற்கும் அமரபட்சத்திற்கும் இதைகண்டு வித்தையாடுவோரை ஒருவரும் வெல்லமாட்டார்கள் ஆகினும் நாளும் வேளையும் நட்சத்திரமும் பார்க்கில் தன்னுடைய ராசியும் திதியுமாகில் எல்லாம் சித்தியாகும் நினைத்தவித்தை யாடலாம்.

1018 அட்சரபட்சி அறியும் வித்தை.

அகரம் வல்லூராகும் இகரம் ஆந்தையாகும் உகரம் காகமாகும் எகரம் கோழியாகும் ஒகரம் மயிலாகும் இவ்விதம் பூர்வபட்சத்திற்கு கண்டு வித்தையாடவேண்டும்.

1019 பகல் முதற்ஜாமத்தின் ஊண்பட்சி அறியும்வித்தை.

ஞாயறு செவ்வாய் வல்லூருபட்சியாகும் புதன் திங்கள் ஆந்தையாகும் வியாழம் காகமாகும் வெள்ளிகோழியாகும் சனி மயிலாகும் இவ்விதமாக பூர்வபட்சத்தின் பகலில் முதற்ஜாமத்தில் உண்ணுமென் றறிந்து கொள்ளவும் அன்றிரவில் செவ்வாய் ஞாயறு காகம் புதன் திங்கட்கு கோ

ழி வியாழமும் மயில் வெள்ளி வல்லூறு சனி ஆந்தை இவ்விதமாக உண்ணும் ஆகினும் இரவுபகல் பட்சியின் வலுவும் மித்துருசத்துருவும் நேரத்தின்வலுவு இவைகளைப்பார்த்து வித்தைகள் ஆடவேணும் சத்துருவாளாக இருக்குமாகில் தள்ளிவிடவேண்டும்.

1020 நட்சத்திரபட்சி அறியும் வித்தை.

அசுவனி பரணி கிருத்திகை ரோகணி மிருகசீரிடம் இவை ஐந்து நட்சத்திரமும் வல்லூராகும் திருவாதிரை புனர்பூசம் ஆயிலியம் மகம் பூரம் இவை ஐந்து நட்சத்திரமும் ஆந்தையாகும் உத்திரம் அஸ்தம் சித்திரை சுவாதி விசாகம் இவை ஐந்தும் காகமாகும் அனுஷம் கேட்டை மூலம் பூராடம் உத்திராடம் இவை ஐந்தும் கோழியாகும் திருவோணம் அவிட்டம் சதையம்பூரட்டாதி உத்திரட்டாதிரேவதி இவைஆறும் மயிலாகும் பூர்வபட்சத்தின் நாள்பட்சிஎன அறிந்து வித்தைகள் ஆடவேண்டும்.

1021 திதிபட்சி அறியும் வித்தை.

பிரதமை சஷ்டி ஏகாதசி, வல்லூருபட்சியாகும், துதியை, சப்தமி, துவாதசி ஆந்தை பட்சியாகும் திரிதிகை அஷ்டமி திரையோதசி காகமாகும் சதுர்த்தி நவமி சதுர்த்தசி கோழியாகும் பஞ்சமி தசமி பௌரணை மயிலாகும் பூர்வபட்சத்தின் நாள் திதிஎன அறிந்து வித்தைகள் ஆடவேண்டும்.

1022. இராசிபட்சி அறியும் வித்தை.

மேஷம் விருட்சிகம் சிங்கம் வல்லூராகும் கடகம் மிதுனம் கன்னி ஆந்தையாகும் தனுசு மீனம் காகமாகும் துலாம் ரிஷபம் கோழியாகும் மகரம் கும்பம் மயிலாகும் இவ்விதம் பார்த்து வித்தைகள் ஆடவேண்டும்.

1023. வல்லூரின் சத்துருமித்துரு அறியும் வித்தை.

பூர்வபட்சத்தில் பட்சிகளின் பகைகட்பாவது எதேதெனில் வல்லூருக்கு காகமும் கோழியும் பகையாகும் மயிலும் ஆந்தையும் மித்துருவாகும் இவைகளைகண்டு வித்தைகள் ஆடவேண்டும் எதிரியை வெல்லவேண்டும்.

1024. ஆந்தையின் சத்துருமித்துரு அறியும் வித்தை.

ஆந்தையின் சத்துரு எதுவெனில் மயில் கோழியாகும் மித்துருபட்சி எதுவெனில் வல்லூரும் காகமாகும் ஆகினும் மித்துருவைசேர்த்து வித்தையாடில் மேன்மையாகும் சத்துருவைச்சேர்த்து வித்தையாடவிடை யூறுநேரும் இதையறிந்து செய்யவேண்டும்.

1025. காகத்தின் சத்துருமித்துரு அறியும் வித்தை.

காகத்தின்சத்துருபட்சி எதுவெனில் வல்லூரும் மயிலுமாகும் மித்துருபட்சியாவது எதுவெனில் ஆந்தையும் கோழியுமாகும் சத்துருவை சேர்

த்து வித்தையாட சண்டையும் சச்சரவும் வரும் மித்துருவை சேர்த்து வித்தையாட இடையூறில்லாமல் நடக்கும்.

1026. கோழியின் சத்துருமித்துரு அறியும் வித்தை.

கோழியின் சத்துருபட்சி எதுவெனில் வல்லூறும் ஆந்தையுமாகும் மித்துருபட்சி எதுவெனில் காகமும் மயிலுமாகும் மித்துருவைசேர்த்து வித்தைகள் ஆட யாவும் நன்றாய் ஓங்கும் சத்துருவை சேர்த்து வித்தைகள் ஆட ஒன்றும் பலிதமிராமற்போகும் ஆனதால் சத்துருமித்துரு பட்சியறிந்து வித்தைகள் ஆடவேண்டும்.

1027. மயிலின் சத்துருமித்துரு அறியும் வித்தை.

மயிலின் சத்துருபட்சியாவது எதுவெனில் ஆந்தையும், காகமும் மித்துருபட்சியாவது எதுவெனில் வல்லூறும் கோழியுமாகும் மித்துருவைச் சேர்த்துக்கொண்டு தொழில்செய்ய விருத்தியாகும் சத்துருவை சேர்த்துக்கொண்டு தொழில் செய்வாயாகில் பகையும் பொல்லாப்பும் வந்தணுகும் ஆதலால் சத்துருமித்துரு பட்சிகளை அறிந்து வித்தைகள் ஆடவேண்டும்.

1028. மித்துருபட்சியின் பலன் அறிந்து ஆடும் வித்தை.

யாதொரு வித்தையாட உத்தேசித்தபோதிலும் அப்போது மித்துருபட்சியை சேர்த்துக்கொண்டு விளையாட காரியங்களெல்லாம் சித்தியாகும் பகைவரும் உறவாகவந்து கூடுவார்கள் புத்தியும் அதிக [illegible]யாகும் மனம்போல் நடக்கும் பொருள்கூடும் உன்னை எதிர்த்தபேர்கள் மின்னிடைந்துபோவார்கள் நீ மங்களமாக சுகத்தை அடைந்து வாழ்குவாய் அன்றியும் அந்த மித்துருபட்சி அரசுபட்சியாகில் மனதாழ்வு வாராது பிரபுக்கள் உதவியாவார்கள் எடுத்துசெய்யும்வித்தைகளெல்லாம் இடையூறின்லாமல் நடக்கும் ஜெயமாகும் அவ்வேளையில் என்ன செய்தபோதிலும் அனுகூலமாகும் எதிரிகளை மயக்கும்.

1029 சத்துருவின் பலனரியும் வித்தை.

சத்துருவின் பட்சியின் பலனை அறிந்து வித்தையாடில் இக்கங்கேரும் துயரமுண்டாகும் தொல்லை விளையும் துன்பம் செய்யும் எடுத்துச் செய்யும் வித்தைகள் எல்லாம் இடையூறாகும் நல்லோர்களும் பகையாவார் தொடுத்த தொழிலும் முடியாது அன்றியும் சத்துருபட்சி ஊண் அரசாக விருக்குமாகில் யாதொருதொழிலையும் கூடிவரச்செய்யமாட்டாது கொஞ்சமேனும் மனதிற்கு சந்தோஷமிராது ஆதலால் சத்துருபட்சியைச் சேர்த்து எத்தொழிலும் எந்தவித்தையும் ஆடப்போகாது.

1020 வாரங்கள் ஏழுக்கும் மரணபட்சி அறியும் வித்தை.

சனி வியாழம் கோழிமரணமாகும் புதன் வெள்ளிக்கு மயில் மரணமாகும் ஞாயறுக்கு காகம் சாகும் திங்களுக்கு ஆந்தைசாகும் செவ்வாயிற்கு வல்லூருசாகும் இந்த வாரங்களில் எந்த ஜாலவித்தையும் இன்னமெந்ததொழிலும் செய்யப்போகாது அப்படி செய்யில் இடையூருநேரும் நீக்கிவிடவும்.

1031 படுபட்சியின் பலனறிந்து ஆடும் வித்தை.

படுபட்சிகள் ஊண் மித்துருவாக இருந்தாலும் ஒரு பலனுந்தரமாட்டாது சத்துருவாகவேயிருந்து கெடுக்கும் எடுத்துச்செய்யும் வேலையில் நஷ்டம்வரும் புத்திகுறையும் ஓரிடத்திலும் போகமனம்தோணாது இதை அறிந்து வித்தையாட ஆரம்பம் செய்யவேண்டும்.

படுபட்சியானது நடையாகில் வலுவு கொஞ்சமேனுமிராது ஆதலால் ஓர்தொழிலும் செய்யப்போகாது ஊர்விட்டு பரதேசம் செல்லலாகாது இதுசண்டாள வேளையானதால் எந்த வித்தையைச் செய்தாலும் எதிரிகளுக்கு திருப்தியிராது ஆதலால் அந்நாளை நீக்கவேண்டும்.

படுபட்சி அரசாக விருந்தபோதினும் அதற்கு வலுவில்லை யாதலால் விஷந்தீண்டும் கெடுதி உடனே காட்டும் துயரம் விளைவிக்கும் ஆதலால் அந்தவேளையில் எந்தவித்தையும் எந்தத்தொழிலும் செய்யலாகாது.

படுபட்சி அக்கமாகில் மரணஞ்செய்யும் கொடுமைவிளையும் நிலையற்றுப்போகும் நினைவுபிசகும் மனம் வேறுகும் மதியைகுலைக்கும் எடுத்த வேலையெல்லாம் இடையூறாகும் ஆதலால் இந்நாளில் வித்தை ஆரம்பம் செய்ய பலிதமிராது தனக்கே சொல்லமுடியாத ஆபத்துவரும்.

1032. கடாநிலை பட்சியறிந்து ஆடும் வித்தை.

பூர்வபட்சத்தில் மரணமான பட்சி உண்ணும் அன்று இரவில் நித்திரைபட்சி உண்ணும் அமரபட்சத்தில் நடைபட்சி உண்ணும் அன்று இரவில் அரசுபட்சி உண்ணும் அன்றியும் அட்சரங்களை பிரித்துப்பார்த்தோர்கள் இதின்வகையை அறிவார்கள் மற்றோர்கள் அறிவது கஷ்டமாகும் இதை அறிந்து யாதொருவித்தையும் ஆடவும் ஆரம்பம் செய்யவும் யோசித்து செய்யவேண்டும்.

1033. பட்சிகளின் தொழில்முறைகலறிந்து ஆடும் வித்தை.

பூர்வபட்சத்தில் பட்சிகளின் தொழிலின் நாழியாவது பகலில் ஊண் ஒண்ணரை நாழியாகும் நடை ஒன்னேகால் நாழியாகும் அரசு இரண்டு நாழியாகும் நித்திரை முக்கால் நாழியாகும் மரணம் அரை நாழியாகும்

அன்றிரவில் ஊண் ஒன்னேகால் நாழியாகும் அரசு ஒரு நாழியாகும் மரணம் ஒன்னரைநாழியாகும் நடை ஒன்னேகால் நாழியாகும் நித்திரைக்கு ஒருநாழியாகும் இதை யறிந்து வித்தையாரம்பமும் வித்தையாடவும் ஜெயமாகும்.

1034. அமரபட்சம் பட்சிகளின் தொழில் முறைக்காலறிந்து ஆடும் வித்தை.

அமரபட்சத்தில் பட்சிகளின் தொழிலின் நாழியாவது ஊண் 2-நாழிகையாகும் மரணம் ஒன்னேகால் நாழிகையாகும் நித்திரை அரை நாழியாகும் அரசு முக்கால் நாழிகையாகும் நடை ஒன்னரை நாழியாகும் அன்று இரவில் ஊண் ஒன்னேமுக்கால் நாழியாகும் நித்திரை முக்கால் நாழியாகும் நடை ஒன்னேமுக்கால் நாழியாகும் இதை அறிந்து வித்தையாரம்பமும் வித்தையாடவும் ஜெயமாகும்.

1035. நட்சத்திரபட்சியறிந்தாடும் வித்தை.

அசுவனி பரணி கிருத்திகை ரோகணி மிருகசீரிடம் இவை ஐந்தும் மயிலாகும் திருவாதிரை புனர்பூசம் பூசம் ஆயிலியம் மகம் பூரம் இவை ஆறும் கோழியாகும் உத்திரம் அஸ்தம் சித்திரை சுவாதி விசாகம் இவை ஐந்தும் காகமாகும் அனுஷம் கேட்டை மூலம் பூராடம் உத்திராடம் திருவோணம் இவை ஆறும் வல்லூராகும் அவிட்டம் சதையம் பூரட்டாதி உத்திரட்டாதி ரேவதி இவை ஐந்தும் ஆந்தையாகும் அமரபட்சத்தின் நாள்பட்சி என அறிந்து வித்தைகள் ஆட ஜெயமாகும்.

1036. திதிபட்சி யறிந்தாடும் வித்தை.

பிரதமை சஷ்டி ஏகாதசி மயிலாகும் துதியை சப்தமி துவாதசி கோழியாகும் திருதிகை அஷ்டமி திரையோதசி காகமாகும் சதுர்த்தி நவமி சதுர்த்தசி ஆந்தையாகும் பஞ்சமி தசமி அம்மாவாசை வல்லூராகும் அமரபட்சத்தின் நாள்பட்சி என அறிந்து வித்தைகள் ஆட ஜெயமாகும்.

1037. இராசிபட்சி யறிந்தாடும் வித்தை.

கடகம் மயிலாகும் மேஷம் விருச்சிகம் கோழிக்காகும் கன்னி சிங்கம் மகரம் காகத்திற்காகும் தனுசு கும்பம் மிதுனம் ஆந்தைக்காகும் துலாம் மீனம் ரிஷபம் வல்லூருக்காகும் இவைகள் அமரபட்சத்தின் ராசிபட்சிகளென்று அறிந்து வித்தைகள் விளையாடவும் வித்தைகள் ஆரம்பம் செய்யவும் வேண்டுமென அறிஞோர் கூறுகின்றனர்.

1038. மயிலின்சத்துருமித்துரு அறிந்து ஆடும்வித்தை.

அமரபட்சத்தில் மயிலின் சத்துருபட்சியாவது எதுவெனில் ஆந்தையும் காகமுமாகும் மித்துருபட்சியாவது எதுவெனில் வல்லூரும் கோழியு

மாகும் மித்துருபட்சியைச் சேர்த்துக்கொண்டு யாதொருதொழிலும் யாதொருவித்தையும் ஆடவும் ஆரம்பம்செய்யவும் விருத்தியாகும் பகைவரும் உறவாவார்கள் சத்துருபட்சியைசேர்த்து யாதொருதொழிலும் செய்யப்போகாது அப்படிசெய்யில் இடஞ்சல்வரும்.

1039. கோழியின் சத்துருமித்துரு அறிந்து ஆடும்வித்தை.

அமரபட்சத்தில் கோழியின் சத்துருபட்சியாவது எதுவெனில் காகமும் வல்லூருமாகும் மித்துருபட்சியாவது எதுவெனில் மயிலும் ஆந்தையுமாகும் மித்துருபட்சியை சேர்த்துக்கொண்டு யாதொருதொழிலும் யாதொருவித்தையும் ஆடவும் ஆரம்பம்செய்யவும் விருத்தியாகும் சத்துருபட்சியைச்சேர்த்து யாதொருதொழிலும் வித்தையும் செய்யப்போகாது அப்படி மீறிசெய்வாராகில் கொடுமையானது வந்துகூடும் செய்யும் வித்தையும் அபலமாகப்போகும் அவர்சொல்லும் எடுபடாது சபையும் ரெம்பிக்காது.

1040. ஆந்தையின் சத்துருமித்துரு அறிந்து ஆடும்வித்தை.

அமரபட்சத்தில் ஆந்தையின் சத்துருபட்சியாவது எதுவெனில் வல்லூரும் மயிலுமாகும் மித்துருபட்சியாவது எதுவெனில் கோழியும் காகமுமாகும் மித்துருபட்சியைசேர்த்துகொண்டு ஜாலவித்தைகள் ஆடசபை சம்பிரமாகவிருக்கும் புத்தி அதிகரிக்கும் சபையோர்களை மயக்கச்செய்யும் பகையொன்றும் வாராது சத்துருபட்சியை சேர்த்துகொண்டு யாதொரு வித்தையும் ஆடப்போகாது அப்படி மீறிசேர்த்து ஆடுவாராகில் கஷ்டமும் பகையும் பழியும் வந்தணுகும்.

1041. காகத்தின் சத்துருமித்துருவறிந்து ஆடும்வித்தை.

அமரபட்சத்தில் காகத்தின் சத்துருபட்சியாவது எதுவெனில் மயிலும் கோழியுமாகும் மித்துருபட்சியாவது எதுவெனில் ஆந்தையும் வல்லூருமாகும் மித்துருவை சேர்த்துக்கொண்டு எத்தொழிலும் எந்தவித்தையும் எந்த ஆடல்பாடலும் செய்ய விருத்தியாகும் சத்துருபட்சியை சேர்த்து யாதொரு தொழிலும் செய்யப்போகாது.

1042. வல்லூரின் சத்துருமித்துருவறிந்து ஆடும்வித்தை.

அமரபட்சத்தில் வல்லூரின் சத்துருபட்சியாவது எதுவெனில் கோழியும் ஆந்தையுமாகும் மித்துருபட்சியாவது எதுவெனில் மயிலும் காகமுமாகும் மித்துருவைசேர்த்துக்கொண்டு வித்தையாட கீர்த்தியும் புகழும் உண்டாகும் சத்துருபட்சியைசேர்த்து யாதொருதொழிலும் செய்யப்போகாது.

1043 மித்துருவின் பலனறிந்தாடும் வித்தை.

யாதொரு வித்தையாட ஆரம்பித்தபோதிலும் அப்போது மித்துருபட்சியை சேர்த்துக்கொள்ள அது தரும்பலன் யாதெனில் வாழ்வுண்டாகும் எடுத்தவேலை முடியும் அடுத்தயிடத்தில் நன்மையாகும் தொடுத்தவழக்கும்வெல்லும் இனச்சேர்க்கை யுண்டாகும் தான்செய்யும் வித்தைகள் பார்ப்போர்களுக்கு விநோதமாக விருக்கும்.

1044 சத்துருவின் பலனறிந்தாடும் வித்தை.

யாதொரு வித்தையாட ஆரம்பித்தபோதிலும் சத்துருபட்சியை சேர்க்கலாகாது அப்படிசேர்த்து மேல்லோரில் துக்கத்தை யுண்டாக்கும் எடுத்தகாரியம் முடிவுபெறாது நீ எவ்விதமானவித்தைகள் ஆடினும் ஒருவருக்கும் நம்பிக்கமாட்டாது.

1045 ஆதிவாரத்தில் திதி நட்சத்திரம் இராசி பலனறிந்தாடும் மோகன வித்தை.

ஞாயறில் அசுவனி சஷ்டி மிதுனவிராசியும் மோகனமாகும் பரணியும் ஏசாதசியும் கடகவிராசியும் ஸ்தம்பனமாகும் கிருத்திகை துதிகை சிங்கவிராசியும் வித்துவேஷணமாகும் உரோகணி சத்தமி கன்னியாவிராசியும் பேதனமாகும் மிருகசீரிடம் துவாதசி துலாவிராசியும் உச்சாடனமாகும் திருவாதிரை திருதியைவிருட்சிகராசியும் மரணமாகும் புனர்பூசம் அஷ்டமி தனுசுவிராசியும் வசியமாகும் பூசம் திரையோதசி மகரவிராசியும் ஆக்குருஷணமாகும் ஆயிலியம்திரிதியை கும்பவிராசியும் மோகனமாகும் மகம் நவமி மீனவிராசியும் ஸ்தம்பனமாகும், பூரம் அம்மாவாசை மேஷவிராசியும், வித்வேஷணமாகும் உத்திரம் பஞ்சமி, ரிஷபவிராசியும் மோகனமாகும் அஸ்தம், தசமி,மிதுனவிராசியும் உச்சாடனமாகும், சித்திரை அம்மாவாசை கடகவிராசியும் மாரணமாகும், சுவாதி சஷ்டி சிங்கவிராசி வசியமாகும், விசாகம் பிரதமை, கடகவிராசியும் மாரணமாகும் அனுஷம் சஷ்டி, சிங்கவிராசியும் வசியமாகும், கேட்டை ஏகாதசி கன்னியாவிராசியும் ஆக்கிருஷ்ணமாகும் மூலம், துதிகை, துலாவிராசியும் மோகனமாகும் பூராடம், சத்தமி விருட்சிகவிராயயும் ஸ்தம்பனமாகும் உத்திராடம் துவாதசி தனுசுவிராசியும் வித்துவேஷணமாகும் திருவோணம் திருதியை, மகரவிராசியும் பேதனமாகும், அவிட்டம், அஷ்டமி, கும்பவிராசியும் உச்சாடனமாகும் உத்திரட்டாதி, திரையோதசி, மீனவிராசியும் மாரணமாகும், சதையம், சதுர்த்தி, மேஷவிராசியும் வசியமாகும், பூரட்டாதி, நவமி கடகவிராசியும் ஆக்குருஷ்ணமாகும் ரேவதி சதுர்த்தி மிதுனவிராசியும் மோகனமாகும், இவைகளையறிந்து வித்தைகள் ஆட சித்தியாகும்.

1046 சோமவாரத்தில் திதி நட்சத்திரம் இராசி பலனறிந்தாடும் ஸ்தம்பன வித்தை.

திங்கட்கிழமையில் அசுவனி, பஞ்சமி, கடகவிராசியும் ஸ்தம்பனமாகும், பரணி, நவமி, சிங்கவிராசியும், வித்துவேஷணமாகும் கிருத்திகை, அம்மாவாசை கன்னியாவிராசியும் பேதனமாகும், உரோகணி, பிரதமை, துலாவிராசியும் உச்சாடனமாகும், மிருகசீரிடம் சஷ்டி, விருட்சிகவிராசியும் மாரணமாகும் திருவாதிரை ஏகாதசி, தனுசுவிராசியும் வசியமாகும் புனர்பூசம், துதியை, மகரவிராசியும் ஆக்குருஷணமாகும் பூசம் சத்தமி கும்பவிராசியும் மோகனமாகும் ஆயிலியம் துவாதசி மீனவிராசியும் ஸ்தம்பனமாகும் புனர்பூசம் திரிதியை மேஷவிராசியும் வித்துவேஷணமாகும், பூரம் அஷ்டமி, ரிஷபவிராசியும், பேதனமாகும் உத்திரமும், திரையோதசி, மிதுனவிராசியும் உச்சாடனமாகும் அஸ்தம் சதுர்த்தசி கடகவிராசியும் மரணமாகும் சுவாதி, நவமி சிங்கவிராசியும் வசியமாகும் சித்திரை சதுர்த்தசி, கன்னியாவிராசியும், ஆக்குருஷணமாகும், விசாகம், பஞ்சமி துலாவிராசியும் மோகனமாகும் அனுஷம் தசமி, மீனவிராசியும் விருட்சிகமும் ஸ்தம்பனமாகும் கேட்டை அம்மாவாசை தனுசுவிராசியும் வித்துவேஷணமாகும் மூலம்பிரதமை மகரவிராசியும் பேதனமாகும் பூராடம் சஷ்டி கும்பவிராசியும் உச்சாடனமாகும், திருவோணம், ஏகாதசி, மீனவிராசியும் மாரணமாகும் திருவோணம், துதியை மேஷவிராசியும், வசியமாகும், அவிட்டம், சத்தமி ரிஷபவிராசியும், ஆக்குருஷணமாகும்; உத்திரட்டாதி, துவாதசி, ரேவதி மீனவிராசியும், மோகனமாகும் இரேவதி திரிதியை, கடகவிராசியும் தம்பனமாகும் பூரட்டாதி, அஷ்டமி, சிங்கவிராசியும் வித்துவேஷணமாகும், இரேவதி திரையோதசி கன்னியாவிராசியும் பேதனமாகும், இவ்விதமறிந்து யாதொருவித்தையும் ஆடவேண்டும்.

1047. மங்களவாரத்தில் திதி நட்சத்திரம் இராசி பலன் அறிந்து ஆடும் உச்சாடனவித்தை.

செவ்வாய்க்கிழமையில் அசுவனி சதுர்த்தி துலாவிராசியும் உச்சாடனமாகும், பரணி நவமி விருட்சிகவிராசியும் மாரணமாகும், கிருத்திகை சதுர்த்தசி தனுசுவிராசியும் வசியமாகும், ரோகணி பஞ்சமி மகரவிராசியும் ஆக்குருஷணமாகும், மிருகசீரிடம் தசமி கும்பவிராசியும் மோகனமாகும், திருவாதிரை அம்மாவாசை மீனவிராசியும் தம்பனமாகும், புனர்பூசம் பிரதமை மேஷவிராசியும் தம்பனமாகும், பூசம் சஷ்டி ரிஷபவிராசியும் பேதனமாகும், ஆயிலியம் ஏகாதசி மிதுனவிராசியும் உச்சாடனமாகும், மகம் துதிகை கடகவிராசியும் மாரணமாகும், பூசம் சத்தமி சிங்கவிராசியும் வசியமாகும், உத்திரம் துவாதசி கன்னியாவிராசியும் ஆக்குரு

ஷணமாகும், அஸ்தம் திரிதியை துலாவிராசியும் மோகனமாகும், சோதி அஷ்டமி விருட்சிகராசியும் ஸ்தம்பனமாகும், சித்திரை திரையோதசி தனுசுவிராசியும் வித்துவேஷணமாகும், விசாகம் சதுர்த்தி தனுசு விராசியும் மாரணமாகும், அனுஷம் நவமி கும்பவிராசியும் உச்சாடனமாகும், கேட்டை சதுர்த்தி மீனவிராசியும் மாரணமாகும், மூலம் பஞ்சமி ரிஷபம் மேஷமும் வசியமாகும், பூராடம் தசமி ரிஷபவிராசியும் ஆக்குருஷணமாகும், உத்திராடம் அம்மாவாசை மிதுனவிராசியும் மோகனமாகும் திருவோணம் பிரதமை கடகவிராசியும் ஸ்தம்பனமாகும், அவிட்டம் சஷ்டி சிங்கவிராசியும் வித்துவேஷணமாகும் உத்திரட்டாதி ஏகாதசி கன்னியாவிராசியும் பேதனமாகும் சதையம் [illegible]மாகும் துலாம் மிதுனம் உச்சாடனமாகும் பூரட்டாதி சத்தமி விருட்சிகவிராசியும் மாரணமாகும் இரேவதியும் துவாதசி கடகவிராசியும் வசியமாகும் இவ்விதமறிந்து யாதொருவித்தையும் ஆட ஜெயமுண்டாம்.

1048. புதவாரத்தில் திதி நட்சத்திரம் இராசி பலன் அறிந்து ஆடும் ஆக்குருஷண வித்தை.

புதன்கிழமையில் அசுவனி திரிதியை மகரவிராசியும் ஆக்குருஷணமாகும் பரணி அஷ்டமி நவமி கும்பவிராசியும் மோகனமாகும் கிருத்திகை திரையோதசி மீனவிராசியும் ஸ்தம்பனமாகும் உரோகணி சதுர்த்தி மேஷவிராசியும் வித்துவேஷணமாகும், மிருகசீரிடம் நவமி ரிஷபவிராசியும் பேதனமாகும் திருவாதிரை சதுர்த்தசி மிதுனவிராசியும் உச்சாடனமாகும் புனர்பூசம் பஞ்சமி கடகவிராசியும் மாரணமாகும். பூசம் தசமி சிங்கவிராசியும் வசியமாகும், ஆயிலியம் அம்மாவாசை கன்னியாவி ராசியும் ஆக்குருஷணமாகும் மகம் பிரதமை துலாவிராசியும் மோகனமாகும், பூரம் சஷ்டி விருட்சிகவிராசியும் ஸ்தம்பனமாகும், உத்திரம் ஏகாதசி தனுசுவிராசியும் வித்துவேஷணமாகும், அஸ்தம் துதிகை மகரவிராசியும் பேதனமாகும், சுவாதி சத்தமி கும்பவிராசியும் உச்சாடனமாகும் சித்திரை துவாதசி மீனவிராசியும் மாரணமாகும், விசாகம் திரிதிகை மேஷவிராசியும் வசியமாகும், அனுஷம் அஷ்டமி ரிஷபவிராசியும் ஆக்குருஷணமாகும் கேட்டை திரையோதசி மிதுனவிராசியும் மோகனமாகும் மூலம்சதுர்த்தி கடகவிராசியும் ஸ்தம்பனமாகும் பூராடம் நவமி சிங்கவிராசியும்வித்துவேஷணமாகும் உத்திராடம் சதுர்த்தசி கன்னியாவிராசியும் பேதனமாகும் திருவோணம் பஞ்சமி துலாவிராசியும் உச்சாடனமாகும் அவிட்டம் தசமி விருட்சிகவிராசியும் மாரணமாகும், உத்திரட்டாதி அம்மாவாசை தனுசுவிராசியும் ஆக்குருஷணமாகும், பூரட்டாதி சஷ்டி கும்பவிராசியும் மோகனமாகும், ரேவதி ஏகாதசி மீனவிராசியும் ஸ்தம்பனமாகும்.

1049. குருவாரத்தில் திதி நட்சத்திரம் இராசி பலனறிந்தாடும் வித்துவேஷணவித்தை.

வியாழக்கிழமையில் அசுவனி துதிகை மேஷவிராசியும் வித்துவேஷணமாகும், பரணி சப்தமி ரிஷபவிராசியும் பேதனமாகும், கிருத்திகை துவாதசி மிதுனவிராசியும் உச்சாடனமாகும் உத்திரம் அம்மாவாசை மீனவிராசியும் மாரணமாகும், அஸ்தம் பிரதமை மேஷவிராசியும் வசியமாகும் சுவாதி சஷ்டி ரிஷபவிராசியும் ஆக்குருஷணமாகும் சித்திரை ஏகாதசி மிதுனராசியும் மோகனமாகும், விசாகம் துதிகை கடகவிராசியும் தம்பனமாகும்; அனுஷம் சத்தமி சிங்கவிராசியும் வித்துவேஷணமாகும், கேட்டை துவாதசி கன்னியாவிராசியும் பேதனமாகும், மூலம் திரிதியை துலாவிராசியும் உச்சாடனமாகும், பூராடம் அஷ்டமி விருட்சிகவிராசியும் மாரணமாகும் உத்திராடம் திரையோதசி தனுசுவிராசியும் வசியமாகும் திருவோணம் சதுர்த்தி மகரவிராசியும் ஆக்குருஷணமாகும் அவிட்டம் நவமி கும்பவிராசியும் மோகனமாகும், உத்திரட்டாதி சதுர்த்தசி மீனவிராசியும் ஸ்தம்பனமாகும் சதையம் பஞ்சமி மேஷவிராசியும் வித்துவேஷணமாகும் பூரட்டாதி தசமி ரிஷபவிராசியும் பேதனமாகும் இரேவதி அம்மாவாசை மிதுனவிராசியும் உச்சாடனமாகும் இவ்விதமறிந்து எந்தவித்தையுமாட ஜெயமாகும்.

1050. சுக்கிரவாரத்திம் திதி நட்சத்திரம் இராசி பலனறிந்தாடும் மாரணவித்தை.

வெள்ளிக்கிழமையில் அசுவனி பிரதமை கடகவிராசியும் மாரணமாகும், பரணி சஷ்டி சிங்கவிராசியும் வசியமாகும், கிருத்திகை ஏகாதசி கன்னியாவிராசியும் ஆக்குருஷணமாகும், ரேவதி துதிகை துலாவிராசியும் மோனமாகும், மிருகசீரிடமும் சத்தமியும் விருட்சிகவிராசியும் ஸ்தம்பனமாகும், திருவாதிரை துவாதசி தனுசுவிராசியும் வித்துவேஷணமாகும், புனர்பூசம் திரிதிகை மகரவிராசியும் பேதனமாகும் பூசம் அஷ்டமி கும்பவிராசியும் உச்சாடனமாகும் ஆயிலியம் ஏகாதசிமீனவிராசியும் மாரணமாகும், மகம் சதுர்த்தி மேஷவிராசியும் வசியமாகும் பூசம் நவமி ரிஷபவிராசியும் ஆக்குருஷணமாகும் உத்திரம் சதுர்த்தசி மிதுனவிராசியும் மோகனமாகும் அஸ்தம் பஞ்சமி கடகவிராசியும் தம்பனமாகும் சுவாதி தசமி சிங்கவிராசியும் வித்துவேஷணமாகும் சித்திரை அம்மாவாசியை கன்னியாவிராசியும் பேதனமாகும் விசாகம் பிரதமை துலாவிராசியும் உச்சாடனமாகும் அனுஷம் சஷ்டி விருட்சிகவிராசியும் மாரணமாகும் கேட்டை ஏகாதசி தனுசுவிராசியும் ஆக்குருஷணமாகும் பூராடம் சத்தமி கும்பவிராசி மீனவிராசியும் தம்பனமாகும் திருவோணம் திரிதியை மேஷவிராசியும் வித்துவேஷணமாகும் சதையம் திரையோதசி

மிதுனவிராசியும் உச்சாடனமாகும் பூரட்டாதி சதுர்த்தி கடகவிராசியும் மாரணமாகும் உத்திரட்டாதி நவமி சிங்கவிராசியும் வசியமாகும் ரேவதி சதுர்த்தசி கன்னியாவிராசியும் ஆக்குருஷணமாகும் இவ்விதம்கண்டு வித்தைகள் ஆடவேண்டும்.

1051. சனிவாரம் திதி நட்சத்திரம் இராசி பலன் அறிந்தாடும் மோகனவித்தை.

சனிக்கிழமையில் அசுவனி பஞ்சமி துலாவிராசியும் மோகனமாகும், பரணி தசமி விருட்சிகவிராசியும் ஸ்தம்பனமாகும், கிருத்திகை அம்மாவா[illegible]சை தனுசுவிராசியும் வித்துவேஷணமாகும், உரோகணி [illegible] விராசியும் பேதனமாகும், மிருகசீரிடம் சத்தமி கும்பவிராசியும் [illegible] மாகும் திருவாதிரை ஏகாதசி மீனவிராசியும் மாரணமாகும், புன[illegible] துதிகை மேஷவிராசியும் வசியமாகும், பூசம் சத்தமி ரிஷபவிராசியும் ஆக்குருஷமாகும் ஆயிலியம் துவாதசி மிதுனவிராசியும் மோகனமாகும், மகம் திரிதியை கடகவிராசியும் தம்பனமாகும், பூசம் அஷ்டமி சிங்கவிராசியும் மேஷணமாகும், உத்திரம் திரையோதசி கன்னியாவிராசியும் பேதனமாகும், அஸ்தம் சதுர்த்தி துலாவிராசியும் உச்சாடனமாகும், சுவாதி நவமி விருட்சிகவிராசியும் மாரணமாகும் சித்திரை சதுர்த்தசி தனுசுராசியும் வசியமாகும், விசாகம் பஞ்சமி தனுசுராசியும் ஆக்குருஷணமாகும், அனுஷம் தசமி கும்பவிராசியும் மோகனமாகும், கேட்டை அம்மாவாசியை மீனவிராசியும் ஸ்தம்பனமாகும், மூலம் பிரதமை மேஷவிராசியும் வித்துவேஷணமாகும், பூராடம் சஷ்டி ரிஷபவிராசியும் பேதனமாகும், உத்திராடம் ஏகாதசி மிதுனவிராசியும் உச்சாடனமாகும், திருவோணம் துதிகை கடவிராசியும் மாரணமாகும், அவிட்டம் சத்தமி சிக்கவிராசியும் வசியமாகும். உத்திரட்டாதி துவாதசி கன்னியாவிராசி ஆக்குருஷணமாகும், சதையம் திரிதியை துலாவிராசியும் மோகனமாகும், பூரட்டாதி அஷ்டமி விருட்சிகவிராசியும் ஸ்தம்பனமாகும், இரேவதி திரையோதசி தனுசுவிராசியும் வித்துவேஷணமாகும் இந்த நாளில் திதி நட்சத்திரம் இராசியுங் கண்டு எந்தவித்தைகளை ஆரம்பம்செய்யினும் சித்தியும் ஜெயமுமாகுமென மேலோர் கூறுகின்றனர். அன்றியும் பட்சியையறிந்து வித்தையை ஆடுவோருக்கு ஒருபோதும் பழுதுவாராது அப்படிப்பாராமல் செய்தால் பழுதுநேரிடும் பட்சியறிந்து செய்யும் வித்தைகள் தடையில்லாமல் பலிதமாகும் ஆதலால் தன்னுடைய பட்சியின்வலுவறிந்து கருமுதலானதுங் கூட்டசித்தியாகும்.

1052 ஊண்பட்சியில் பிணிபட்டால் விலக்கும் வித்தை

தனதுபட்சி ஊணாகை விருக்கையில் வியாதிகண்டு அது தீராவிடில் தரையை மெழுகி பிள்ளையார் பிடித்துவைத்து வெள்ளைபுஷ்பம் சாற்றி

பலகாரம் முதலானதும் படைத்து விநாயகரைப்போற்றும், மந்திரமாவது சொல்லக்கேட்பீராக ஓம் ஸ்ரீயும் அங் உங் ஐயும் கிலியும் கணபதி நசி-மசி என்று ஆயிரத்தெட்டு உருஜெபித்து பின்பு கும்பம்வைத்து ஒருபடி பச்சைநெல்லைப்பரப்பி, அதில் அருகோணமிட்டு பஞ்சாட்சரத்தை வைத்து சக்கரத்தில் சூலம்போட்டு அதின் நடுவில், ஒய்அங் சிவசிவா எட்டுநாடி கலசத்தைவைத்து, அதின்மேல் மாவிலையை சொருகி அதின்மேல் தேங்காயைவைத்து நூல்சுத்தி ஆடைசுற்றி அதின்முன்னே அமுதும் சத்தியும்வைத்து பிறகு ஓம் ஐயும், கிலியும், சவ்வும் அங், உங் பீடையாவும், நசி மசி என்று ஆயிரத்தெட்டு உருஜெபித்து ஓமகுண்டம் இரண்டுபோட்டு வன்னிமுன்னை, அரசு நாயுருவி தெர்ப்பை நெற்பொரி இவைகளைப்போட்டுக்கொளுத்தி பசுநெய்யால் ஆகுதிகள்செய்து ஓமகுண்டத்திற்கு செய்யவேண்டியதுகளைச்செய்து சொல்லும் மந்திரமாவது ஓம் ஸ்ரீயும் அங் உங் சர்வபீடை, நசி நசி என்று ஆயிரம் உருஜெபித்து பொங்கலிட்டு பலிகொடுத்து கைவேத்தியஞ்செய்து ஓமகுண்ட சாம்பலையெல்லாம் கும்பகலசத்திற்போட்டு குடத்தின் நீரை பிணியாளியின்மேல் விடும்போது ஆதிசிவனை நினைத்து ஓம் சிவசிவா என்று அபிஷேகம் முதலானதும் செய்துவைத்து பொன்தகடுசெய்து அதில்உச்சாடன அட்சரத்தைஅடைத்து வாலைப்பூசைசெய்து பூசைமுன் தகட்டைவைத்து உச்சாடன மந்திரத்தை ஆயிரத்தெட்டு உருஜெபித்து தகட்டை குளிசமாடிகட்ட சகலதோஷமும் சகலபிணிகளும் பதினொருநாளில் பரந்தோடும் ஆனால் வாலைபூசைதவராமல் செய்து வரவேண்டும்.

1053 நடைபட்சியால் பிணிபட்டால் விலக்கும் வித்தை.

தனதுபட்சி நடையாக விருக்கையில் பீடையானது வந்து அது தீராவிடில் விநாயகரை வைத்து வெள்ளைபுஷ்பம் சாத்தி கும்பகலசம் முன்போல்வைத்து ஓமகுண்டம் இரண்டு வெட்டி அரசு, வன்னி, நாயுருவி, தர்ப்பை, விளாமரத்தின் விறகு கருங்காலி, நெற்பொரி கடலை மொச்சை இவைகளைப்போட்டு ஓமம்வளர்த்தி ஆவின்நெய்யும் இலுப்பநெய்யும் ஒன்றாய்க்கலந்து எக்கியத்தில்விட்டு ஆகுதிகள்செய்து சொல்லும் மந்திரமாவது ஓம், ரீயும், அவ்வும், கிலியும், அங் உங், பீடை நசி,நசி என்று பதினாயிரம் உருஜெபித்து பொங்கலிட்டு பலிகொடுத்து சோடச உபசாரஞ்செய்து பிறகு கும்பத்தின் சாம்பல்களை யெல்லாம் கொஞ்சமும் விடாமல் கலசத்திற்போட்டு ஆதிசிவ பெருமானைப்போற்றி சிவசிவாவென்று தடவி வாலையினுடைய தியானஞ்செய்ய பீடைகள்யாவும் பரந்தோடும் ஆனால் இவ்வண்ணமாக தவாமல் பதினொருநாளும் செய்துவரவேண்டும்.

1054. அரசுபட்சியில் பிணிகண்டால் விலக்கும் வித்தை.

தனதுபட்சி அரசாக விருக்கையில் பீடையானது கண்டு அது தீராவிடில் கணபதியைவைத்து போற்றி முன்போல் கும்பகலசம் திருத்திவை

லையினுடைய பூசைசெய்து ஓமகுண்டம் இரண்டுவைத்து அரசு சந்தனம் பச்சைநெல் இவைகளைக்கொண்டு ஓமம்வளர்த்தி உரு பதினாயிரம் ஜெபித்து பொங்கலிட்டு பலிகொடுத்து தூபதீபங்காட்டி ஓமசாம்பலை யெல்லாம் கும்பகலசத்திற்போட்டு குடத்தை கையி லெடுக்கும்போதெல்லாம் சிவனை தியானித்தால் வினையாவும் தீரும் பிறகு தங்கதகடுசெய்து அதில் முன்சொன்ன எழுத்தை அடைத்து பூசையில்வைத்து நாள் ஏழும் தவறாமல் செய்து தகட்டை எடுத்து குளிகையாகக் கட்டிக்கொள்ள சகலபீடையும் விலகிப்போகும் சிவனைமறவாமல் தியானித்து வரவேண்டும்.

1055. சித்திரைபட்சியின் பிணிகண்டால் விலக்கும் வித்தை.

தனதுபட்சி சித்திரையிலிருக்கும்போது பீடையானது கண்டு தீராவிடில் அதற்கு முன்போல்கணபதியை வைத்து கும்பகலசம் நிறுத்தி ஓமகுண்டம் நாலுபோட்டு ஆல் அரசு அத்தி இத்தி வன்னி முண்ணை நாயுருவி என்று நவதானியம் நெற்பொரி இவைகளைப்போட்டு ஓமம் வளர்த்தி ஆவின்நெய்யும் இலுப்பநெய்யும் தேங்காய்நெய்யும் கலந்து ஓமத்தில் தர்ப்பையினால் சொரிந்துகொண்டே உருஜெபிக்க வேண்டும் ஓம் ரீயும் கிலியும் ஐயும் சவ்வும் ஸ்ரீம் ரீயும் நசி மசி என்று தர்ப்பத்தியை விலக்கி ஒரு தினமாக நின்று பதினாயிரம் உருஜெபித்து நாலும் ஒன்றில் ஸ்தம்பனத்தை போட்டு பேதனமும் கூடப்போட்டு வித்துவேஷணமும் மோகனமும் போட்டு பலிகொடுத்து தூபதீபங்காட்டி ஓமசாம்பலைவாரி கும்பகலசத்திற்போட்டு சிவபெருமானுக்கு அபிஷேகஞ்செய்து பிறகு உச்சாடம் செய்து சாம்பலைபிணியாளியின் மேலேபோட சகலபிணியும் சகலதோஷமும் சூரியனைக்கண்ட பனிபோல் பரந்தோடிவிடும் ஆதலால் நாளும் சிவனை பூசித்துவரவேண்டும்.

1056. மரணபட்சியில் பிணிகண்டால் விலக்கும் வித்தை.

தனதுபட்சி மரணமாகவிருக்கில் பீடையானது கண்டு அது தீராவிடில் முன்போல் கணபதியைவைத்து வாலையுடைய கும்பகலசம் நிறுத்தி ஓமகுண்டம் எட்டுபோட்டு அரசு வன்னி நாயுருவி அத்தி கருங்காலி ஆலங்கொம்பு மாசப்பி அருகு நவதானியம் நெற்பொரி இவைகளைபோட்டு ஓமம்வளர்த்தி ஆவின்நெய் இலுப்பநெய் தேங்காய்நெய் புங்கம் எண்ணை புன்னை எண்ணை வேப்பெண்ணெய் பன்றிநெய் மீசைச்சுரியின் நெய் இவைகளை ஒன்றாய் கூட்டி ஓமக்கியசதில்விட்டு ஓமகுண்டம் எட்டிலும் அஷ்டகர்மம் எட்டையும் உருபதினாயிரம் ஜெபித்து பொங்கலிட்டு பலிகொடுத்து தூபதீபங்காட்டி பிறகு ஓமகுண்டத்தின் சாம்பலை குடத்திற்போட்டு சிவனை தியானித்து பிணியாளன் சிரசில் சாம்பலை போட்டு நீர் விடுத்து சிவனுக்கு அபிஷேகம் செய்து வைக்கவேண்டும் ஆதலால் இவ்வனையாக

ஒருமண்டலம் செய்துவர பீடையாவும் பரந்தோடும் இந்தவண்ணம் செய்து பீடையை விலக்கிக் கொள்ளாதவர்களுக்கு பிரமனுடைய லபியிருக்குமளவும் பீடையில்பட்டு மெலிவாறென மேலோர் கூறுகின்றனர்.

1057 அட்சரம் மாறல் அறியும் வித்தை.

பூர்வபட்சம் பகலிற்கு ஆக்குருஷணமும் வசியம் இவைரண்டுமாம் பூர்வபட்சம் இரவிற்கு மோகனமும், தம்பனமுமாம், அமரபட்சத்தின் பகலிற்கு உச்சாடனமும் வித்துவேஷணமுமாம் அமரபட்சம் இரவிற்கு ற்கு மாரணமும் பேதனமுமாம் ஆயினும் பூர்வபட்சத்திற்கு கடைதலையைப் பிடித்து மாரவேண்டும் பூர்வபட்சத்தின் இரவிற்கு நாலெழுத்தை மாறி ஓதவேண்டும் அமரபட்சத்தின் பகலிற்கு இரண்டெழுத்தை மாறவேண்டும். அமரபட்சத்தின் இரவிற்கு நடுத்தலையை மாறவேண்டும்.

1058 திக்குகளின் அஷ்டகன்மம் அறியும் வித்தை.

தெற்கிற்கு, பேதனம், மாரணம் இரண்டையும் மாரல்வேண்டும். வடக்கிற்கு வித்துவேஷணம், மோகனத்தையும் மாறல்வேண்டும். மேற்கிற்கு தம்பனமும் மோகனத்தையும் மாறல்வேண்டும் கிழக்கிற்கு வசியத்தையும் ஆக்குருஷணத்தையும் மாறல்வேண்டும். இவ்விதம்கண்டு மாறல் செய்ய தொழில்யாவும்சித்தியாகும், உலகத்தோரெல்லாம் வணங்குவார்கள் அஷ்டகன்மமும் கருத்தொழிலும் சவியம் ஒட்டியம்மந்திரம் இவையெல்லாம் பட்சிக்கீடாகாதென்று, சித்தர் முத்தர் முனிவர் மூதோர் முதலானோரும் மெச்சினர்களென மேலோர் கூறுகின்றனர்.

1059 பிரமன் பிருதுவின் வீட்டின் அக்ஷரம் அறியும் வித்தை.

உருவை நன்றாய் வகுத்துக்கொண்டு, பிரிதியில் நாற்கோணங்கீறி நான்முகனுடைய பீஜம்வைத்து அதில் அங்நங் என்று இரண்டெழுத்தும் போஜபீஜமாகவைத்து அந்த இரண்டெழுத்தையே கருவை தொட்டுக்கொண்டு ஓத சகலமும் தடையன்றிப் பலிதமாகும்.

1060 மாலின் அப்புவீட்டின் அட்சரம் அறியும் வித்தை.

அப்புவின் வீடாவது பிறைபோலே கீறவேண்டும் அதில் மாலினுடைய பீஜம்வைத்து இங், அங் என்று கோஜபீஜமாகவைத்து நாட்டி கருவைத்தொட்டு, நேரத்தையும் பார்த்து ஓர் மனதாகக்கொண்டு ஓத சித்தியாகும்.

1061 ருத்திரன் தேயுவினுடைய வீட்டின் அக்ஷரம் அறியும் வித்தை.

தேயுவென்னும் வீடு முக்கோணம் அது [illegible] அதில் சிவனுடைய பீஜம்வைத்து இய், சிய், என்றுநாட்டி அந்த கோஜபீஜமாக

வைத்துகலந்து கருவைத் தொட்டுக்கொண்டு ஜெபம்செய்ய சித்தியாகும் ஆயினும் முக்கோணம் பொல்லாதென்று அறியவேண்டும்.

1062. சதாசிவன் ஆகாசவீட்டின் அக்ஷரம் அறியும் வித்தை.

ஆகாசவீட்டில் மந்திரியும் பூண்டிருப்பார்கள் அது சிவனுடைய வீட்டமாகும் அதில் சிவனுடைய பீஜம்வைத்து ஒங் எங் என்று இந்த இரண்டெழுத்தையும் கோஜ பீஜமாகவைத்து அதைசுற்றிலும் வரைபடித்து கருவைத்தொட்டு நேரம்பார்த்து ஜெபிக்க ஏகவெளியாகத்தோற்றும் சித்தியாகும்.

1063. பஞ்சபூதபோர்த்தின் பலனறியும்வித்தை.

ஆகாயமும் வாயுவும் சேர்ந்தால் ஒருவரையும் மதிக்கப்போகாது பிரசண்டவாயும்சேர்ந்து நினைக்கவொட்டாது தொழிலையும் மாற்றிவிடும் மனமுருகிபாக எண்ணி அஷ்டகன்மவித்தையை அறிவுள்ளோர்கள் அறிவார்கள் அன்றியும் ஆகாசவெளியென்னும் சத்தும் அக்கினியும்சேர்ந்துக்கொண்டால் எரிந்துபோகும் கண்ணுக்குத்தோற்றாது அக்கினியும்வாயுவும்சேர்ந்தால் பிரிந்துபோகும் யேகவெளியும் ஒன்றாய் கூடிக்கொண்டால் பேச ஒன்றும் இல்லை பெண்ணுசையுந்நிலையும் வாயுவும் அக்கினியும் கைவல்லியமாகும் அப்படி அறிந்தோனை வெல்ல ஒருவரும் இல்லை அக்கினியும் தண்ணீரும் சேர்ந்தால் தண்ணீர் அக்கினியை வெல்லும் வாயுவு கூடுமாகில் எடுத்ததொழில் நாள்செல்லும் சுருக்கில் முடியாது அப்புவைசேர்க்கொணாது அப்படியல்லது மண்ணும் தண்ணீரும் சேர்ந்தால் தண்ணீரை மண்வெல்லுமென மேலோர்கூறுகின்றனர்.

1064. சத்தி சிவக்கூறறியும் வித்தை

கூறிய ஐந்து எழுத்தில் இரண்டு பழுதில்லை அதாவது மண்ணுந்தண்ணீருமாம் அந்த மண்ணுந்தண்ணீருங்கூடி மனுவென்னும் ஜீவஜெந்துக்களை வளர்த்து ஊர்வாடியும் இந்த உலகவாழ்க்கையெல்லாம் இவை இரண்டினால் உண்டானதால் கண்ணு உயிரைவளர்ப்பதுபோல் மண்ணுந் தண்ணீரும் அறிவது பெறிதாகும் அதில் மண்ணு சத்தியாகும் சிவன் தண்ணீராகும் ஆதலால் இந்த சத்தி சித்தியை கண்டபேர்கள் நீடூழி காலமும் வாழ்வார்கள் உலகத்திலிடத்து சிறமையானது பெற்று திரிவார்கள் அவை ஒருவரும் அறியமாட்டார் சித்தெல்லார்வோறென மேலோர் கூறுகின்றனர்.

1065 அப்புவின் வீட்டின் அட்சரம் அறியும் வித்தை.

அப்புவிற்கு பிறைபோல் வீடாகும் அதைகீரி அதில் இங்,மங், ஸ்ரீரங் என்று கோஜபீஜம்வைத்து எதிரியினுடைய பெயரை சுற்றிவரைந்து கருவைத் தொட்டுக்கொண்டு சொல்லவேண்டியது இங், மங் என்றும் விதைங் கநேக்க கங் ஸ்ரீரி என்று சுத்திவைக்க உன் இஷ்டம்போல் முடியும் அஷ்டகன்மமும் ஆகும்.

1066 தேயுவின் வீட்டின் அட்சரம் அறியும்வித்தை.

தேயுவின் வீடாவது முக்கோணமாகும் அது சிவனுடையவீடு ஆதலால் அதில் உங், சிங், டங், என்று கோஜபீஜமாகவைத்து ஓதுவது உங், சிங் டங், ரங், லங் நசிநசி என்று எதிரியினுடையப் பெயரைச்சுற்றி எழுதி கருவைத் தொட்டுவைத்து சத்தியுடன் வஸ்துவும் வைத்து மூன்னமந்திரத்தை ஒதிவர அஷ்டகன்மம் அறுபத்திறலும் பலிதமாகும் உண்டும் வெடிமருந்து இதற்கொவ்வாதென்று பட்சிவித்தையில் பலனுண்டென மேலோர் கூறுகின்றனர்.

1067. வாயுவின் வீட்டின் அட்சரம் அறியும்வித்தை.

வாயுவின் வீடாவது சொல்வேன் கேட்பாயாக அது குரு குருவின் சக்கரம் அருகோணமாகும் அதில் எங் மங் விங் என்று கோஜபீஜம்வைத்து சிவத்தின் எழுத்தாவது எங் வங் கங் ரங் இன்னும் நசி நசி என்றுகருவைதொட்டு ஜெபிக்க பிரசண்ட வாயுவானது கிளம்பி எதிரியை இயிக்குமென மேலோர் கூறுகின்றனர்.

1068. ஆகாயத்தின் வீட்டின் அட்சரம் அறியும் வித்தை.

ஆகாயவீடானது வட்டம் அதில் சதாசிவன் வாழ்வார் ஆதலால் அவ்வீட்டில் ஒங் யங் டங் ரீங் என்று கோஜ பீஜம் வைத்து தேயுவை வருந்தி ஓதுவதாவது ஐங் டிரிங் கங் சங் இன்னும் நசி நசி என்று ஜெபிக்க எதிரியை வெல்லும. ஜெயமுண்டாகும்.

1069. பிரிதிவிக்கு கடத்தலையாக பிடித்து மாறல் அறியும் வித்தை.

கடத்தலையைப் பிடித்துமாறுவாயாகில் உன்னைப்பகைத்த பேர்களெல்லாம் உன்பாதத்தில்வந்து விழுவார்கள் ஆதலால் நசியைவிட்டு வசி என்றுஓதவேண்டும் எப்போதும் நசியை நினைக்கப்போகாது அன்றியும் மற்ற ஐந்துதொழில்களுக்கும் நசியை விட்டால் பலிதமாகாது ஆதலால் தொழிலைஅறிந்து ஓதுவாராகில் பலிதமுண்டாகும் நினைத்ததுபோல் முடியும் பகைகள்யாவும் விலகி உறவுண்டாகும்.

1070. சுபகாரியங்களுக்கு ஜெபம் செய்யும் ஸ்தலமறிதல்.

சுபகாரியங்களுக்கேற்ற எந்ததொழில்செய்யுந்தேசித்தபோதிலும் மித்துருவானப்பட்சியை சேர்த்துக்கொண்டு ஒருவனதாக விருந்து வில்வமரத்தடியினும் சிவாலயங்களிலும் கெங்கைகரையோரத்திலும் நந்தவனங்களிலும் இருந்துகொண்டு ஜெபம்செய்ய நன்மையான காரியங்கள் யாவும் பலிக்கும் மூன்றுவகைதொழிலும் சித்தியாகும்.

1071. அசுபகாரியத்திற்கு ஜெபம்செய்யும் ஸ்தலமறிதல்.

அசுபகாரியங்களுக்கேற்ற எந்தெதாழில் செய்ய உத்தேசித்தபோதி லும் ஸ்தலம் எதுவெனில் பாழ்வீடுமெத்தை முச்சந்திபாதை காளிகோ யில் அம்பலமானவிடம் மாட்டுத்தொழுவம் சுடுகாடு இடுகாடு இந்த விடங்களிலிருந்து ஜெபம்செய்ய அசுபகாரியத்திற்குரிய ஐந்துவகை தொழி லும் சித்தியாகும்.

1072. பூர்வபட்சத்திற் பட்சிகளின் பச்சிலை அறியும் வித்தை.

பட்சிகளுக்குரிய மூலிகையை தெரியவேண்டும் சத்துரு வும் மித்துருவும் இன்ற தன்மைகளை காணவேண்டும் வைபாகம் செய்பா கம் ஆசானால் அறியவேண்டும் அப்படி அறிந்துசெய்வோர்களுக்கு எல் லாவித்தையும் சித்தியாகும் அன்றியும் வல்லூறுக்கு ஈலை நொச்சிக்கு சிறு கீரை காகத்திற்கு சாரணைவேர் கோழிக்கு தக்கோலவேர் மயிலுக்குசங்கிலி வேர் இவ்வகை அறிந்து வித்தைகள் ஆட கீர்த்திப்பெருகி ஜெயங்களுண் டாகும்.

1073 மூலிகை சாபநிவர்த்தி அறியும் வித்தை.

எந்த மூலிகையா இருந்தபோதிலும் அதின்முன் இருந்துகொண்டு ஓம் மூலி சர்வமூலி சாபமும் நசி நசி என்று பதினாயிரம் உருஜெபித்து அதற்கு கன்னிநூல் காப்புகட்டி சுத்தியும் வெல்லமும்வைத்து தூபதீபம் காட்டி வேரைப் பிடுங்குவதற்கு முன்னமே அட்சரத்தை ஓதி சரியான வேளையில் கருவைத்தொட்டு வேரைப் பிடுங்கிக்கொண்டுவர சகலசித்தும் ஆடும்.

1074 மூலிகை பிடுங்கும் வித்தை.

மூலிகை பிடுங்குகிறபோது நிர்வாணமாக நின்று ருத்திரனை மன தில் தியானித்து வாசியை உள்ளேவாங்கி, நீ மனதில் நினைத்ததுபோல் எண்ணிக்கொண்டு எதிரியினுடைய பெயரையும் நினைத்து, பட்சியின் ஊண், அரசு, நடை, உறக்கம், மரணம்பார்த்துகுறித்தயிடத்தில் நாலுஎழுத் தை ஓதி வேரைப்பிடுங்க எதிரி நசித்துப்போவான் உன் மனம்போல் மூலிகையாகும்.

1075 பீடை யுண்டாக்கும் வித்தை.

எதிரியினுடைய அடிமண்ணும் மூலிகையினுடைய வேர்மண் இர ண்டையும் ஒன்றாய்க்கலந்து அதில் அவ்வெழுத்தை பிடித்து மாறிவிட ஐம்புலனும் மாறிவிடும் பிடுங்கியவேரை எடுத்துக்கொண்டு மயானத்தில் ஒரு வேரைச்சுட்டு விடியவிடியாமல் எதிரிவைரொம்பவும் பாதைபடுத்தும் கொட்டிய தேள்போல் விஷமேறும் செய்வதுபாவம்.

1076 பீடையை நிவர்த்திசெய்யும் வித்தை.

பீடையை நிவர்த்தி செய்யவேண்டில் முன் பிடுங்கியவேரை வித்தும் விறையும் விட்டு காலைமாலையும்கண்டு அரசு நடை உறக்கம் மரணம் இந்த வேலைகளில் வேறைப் பிடுங்கப்போகாது ஊண் அரசில் வேரைப்பிடுங்கி விட்டு முன்போல் மாறி ஜெபிக்க பீடையானது நிவர்த்தியாகும் உன்னை யும் வெல்வதற்கு அரிதாகும்.

1077 தன்னை வெல்லக் கூடாதென்னும் வித்தை.

தன்னை ஒருவரும் வெல்லா திருக்கும்படி செய்துகொள்ள வேண் டில் ஆக்குருஷணத்தையும் வசியத்தையும் தனதுபட்சி அரசாக யிருக்கும் போது எடுத்து ஓதவேண்டும். மோகனம் தம்பனமிவை ரண்டையும் தனதுபட்சி ஊணாக விருக்கும்போது எடுத்து ஓதவேண்டும். வித்துவே ஷணம் உச்சாடனம் இவை ரண்டையும் தனதுபட்சி நடையாக யிருக்கும் போது ஓதவேண்டும். பேதனத்தை சகரத்தில் மாறி மாரணத்தைகாலெ ழுத்தால் மாறி, நால்தொழிலும் வகையாய்செய்து வேர்வகையின் தன்மை யைக்கண்டு அடைக்கும் அட்சரத்தை ஓதிவர உன்னை வெல்வோர்கள் உலகில் ஒருவருமில்லை. சீ மன்முருதியானது கொண்டு அஷ்டகன்மமும் செய்து சித்தியானது பெருகும் ஆகலால் பிறர் உயிரைவாங்க மனதில் எண்ணாதே, தன்னுயிர்போல் மன்னுயிரை எண்ணிபார்க்க சகலவித்தை யும் பலிதமாகி கீர்த்திப்பெருகுவாய் யாவருமுன்னைப் புகழ்வார்கள்.

1078 அமரபட்சம் பட்சிகளின் பச்சிலை அறியும் வித்தை.

அமரபட்சத்தின் பட்சிகளின் பச்சிலை அறியவேண்டில் மயிலுக்கு தவளையாகும், கோழிக்கு குப்பமேனி, வல்லூறுக்கு நாய்கடுகு, ஆந்தை க்கு அறைக்கீரை, காகத்திற்கு அவுரி, இவ்விதம் அறிந்து வித்தையாட வேண்டும்.

1079 வேர்பிடுங்குவதில் உண்டாகும் பலன் அறியும்வித்தை.

நடைபட்சியில் வேர்பிடுங்கிடில் வெற்றியாகிய தம்பனமும் மோகன மும்செய்யும். அரசுபட்சியில்வேர் பிடுங்கிடில் ஜெகத்தில் மெச்சும்படியான ஆக்குருஷணமும் வசியமும் செய்யும் ஊண்பட்சியில் வேர்பிடுங்கிடில் உச்சாடனமும் பேதனமும் செய்யும் மரணபட்சியில் வேர்பிடுங்கிடில் எதிரியினுடைய உடலானது சிதறிப்போகச்செய்யும் ஆதலால் நீ எவ்வகை யை நினைக்கும்போதும் அவ்வெழுத்தைப் பிடித்து மாறிக்கொள்ளவேண் டும், முன்சொன்னது தப்பாது ஆதலால் அமரபட்சத்தில் தொழில்செய்வது பாவமென்று மேலோர் கூறுகின்றனர்.

1080 தன்னைத்தான் அறியும் வித்தை.

தன்னுடைய ஆத்துமாவை பகர்ந்தறிவதற்கு சொன்னேன் சூட்சம் ஆதலால் நீ எந்தெந்த வேளையில் கண்டு அட்சரத்தை பிரித்து மாறிவைப் ஆனால் உலகத்திற்கு பழிதேடப்படாது அப்படிதேடில் பழியும் பாவமும் வந்தணுகுமென மேலோர் கூறுகின்றனர்.

1081 பட்சிநிலை அறியும் வித்தை.

பட்சிநிலை அறியவேண்டில் மனோன்மணியாளின் கிருபையானது வேண்டும். கோபமென்பதை அகற்றவேண்டும். குறித்தவனுடைய பட்சியுங்கருவும் வேண்டும் கண்ணினால் என்பதை காணவேண்டும். பழியாகிய நேரத்தைப்பார்த்து பதியவேண்டும். இவ்விதம் தப்பாமல் செய்வோர்களுக்கு விவேகத்தினாலும் மனமெனும் அறிவினாலும் கைபாகங்களினாலும் சகலமும் பலிதமாகுமென மேலோர் கூறுகின்றனர்.

1082 ஊண்வேளையில் வேர்பிடுங்கும் வித்தை.

பட்சியானது ஊணாகவிருக்கும்போது வேர்பிடுங்கிடில் நினைத்தகாரியங்களாகும் சத்துருவாயிருந்த பேர்களெல்லாம் மித்துருவாவார்கள் சோபனகாரியங்கள் செய்ய நன்மை உண்டாகும் பீடையாது விலகும், பொருள் வருத்தாகும். நினைத்த வித்தைகள் ஆட கீர்த்தியுண்டாகும் ஆனால் பிடுங்கியவேரை குளிசமாடிக் கட்டிக்கொள்ள வேண்டும்.

1083 நடைவேளையில் வேர்பிடுங்கும் வித்தை.

பட்சியானது நடையில் இருக்கும்போது வேர்பிடுங்கிடில் நினைத்த காரியங்கள் முடியாது முடமாக்கும் வருத்தப்படுத்தும் எண்ணுதஎண்ண மெல்லாம் எண்ணிமனம் புண்ணாகும். பிரமனுடைய லபிமட்டும் சுகமென்பது இராது ஆதலால் அந்தவேளையை நீக்கவேண்டும்.

1084. அரசுவேளையில் வேர்பிடுங்கும் வித்தை.

பட்சியானது அரசில் இருக்கும்போது வேர்பிடுங்கிடில் அதின்பலன் யாதெனில் பிடுங்கிய வேரைகுளிசமாடிக் கட்டிக்கொள்ளினும் பொன்னால்கடையஞ்செய்து வேரை அதில் பதித்து கொண்டாலும் வலதுகையில் மாட்டிக்கொள்ள சகலமும் சித்தியாகும் வசியமுமாகும் உன்னைவெல்ல ஒருவராலும் முடியாது உனக்கு சத்துருவான பேர்கள் ஒருவருமில்லை நினைத்தவித்தைகளும் ஆடு கீர்த்தியும் புகழுமுண்டாகும்.

1085. நித்திரைவேளையில் வேர்பிடுங்கும் வித்தை.

பட்சி நித்திரையாக விருக்கில் வேர்பிடுங்கிடில் பகைகொண்டிருக்கும் எதிரிவெல்லமாட்டான் எதிர்த்தோர்களை ஜெயம்செய்யலாகும் நேசித்த காரியங்கள் யாவும் நிமிஷத்தில் வெல்லும் ஆதலால் இந்த வேளையில்

ஒருவர்மீது கொடுமைநினைக்கப்போகாது அப்படி நினைக்கில் பழியும் பாவமும் வந்தணுகுமென மேலோர் கூறுகின்றனர்.

1086. மரணவேளையில் வேர்பிடுங்கும் வித்தை

பட்சி மரணமாகவிருக்கில் வேர்பிடுங்கிடில் அதின்பலன் யாதெனில் தன்னை எதிரியானவன் வெல்லமாட்டான் சத்துருவானவரும் ஒருவருமில்லை கண்டாள வேளையானதால் ஜெயிக்காது பொருள்போகும் உயிர்சேதம் வரும்கொடுமையானது செய்யும் ஆதலால் அந்தவேளையில் வேர்பிடுங்கிடில் தோஷம் அணுகுமென மேலோர் கூறுகின்றனர்.

1087. பட்சிகளின் வலியறியும் வித்தை.

பஞ்சபட்சிகளின் வலுவை பகர்வதற்கு என்னால் முடியாது ஆயினும் சொல்வேன் கேட்பாயாக சத்துருபட்சியின் நாளில் வலுவானது இல்லை அந்தகொடுமையாகிய நாட்கள் பட்சி பகையாகில் சத்துருபட்சியை அழித்துவிடும் பட்சிகள்யாவும் ஒன்றாய்கூடிக்கொண்டு மித்துருவாயிருந்தாலும் பட்சியின்வலுவு இல்லையாமென மேலோர் கூறுகின்றனர்.

1088. படுபட்சியின் வலிவறியும் வித்தை.

படுபட்சியின் நாளில் தன்னுடைய வலுவானது அன்றுவிடும் மித்துருவானவருமில்லை எந்த தொழிலைசெய்தாலும் தவர்க்கலாகும் ஜெயிக்க மாட்டாது பாம்பின்வாய் சிக்கியதவளைபோல் மனம்படரும் புண்ணாகும் ஆனவைகளெல்லாம் அடங்கி எதுவுமில்லாமல் ஒடுங்கிருவார்கள் ஆதலால் இந்த கொடுமையாகிய சத்துருநாளில் யாதொருதொழிலும் வித்தையும் செய்யலாகாது.

1089. எதிரியை அடக்கும் வித்தை.

எதிரியை அடக்கும்விதம் எவ்விதமெனில் ஒருவருக்கும் கன்னிது வென்பதைசொல்லாதே கருவை வெளிவிடாதே சக்கரத்தை காட்டாதே அட்சரங்களை நினைவில் நினையாதே மூலிகையின் வகைகளைக்காட்டாதே சத்துருமித்துருவைச் சொல்லாதே பழியாகிய நேரத்தை காட்டப்படாது அப்படி காட்டுவாயாகில் எதிரி மேற்பட்டுவிடுவான் ஆதலால் மூலிகையின் சாபத்தை நீக்கி கன்னிநூல்காப்புகட்டிச்சக்கரத்தை அறிந்துவைத்து அட்சரத்தை மாறி கருவைத்தொட்டு அட்சரத்தின்மேல் தடவி வைக்க எதிரியினுடைய ஆண்மையை அடக்கிவைக்குமென மேலோர் கூறுகின்றனர்.

1090. தேவிபூசைசெய்யும் வித்தை.

சத்துருபட்சியின் நாளை அறிந்து தேவியினுடைய பூசைசெய்து கூட்டிலை சிட்டுமிதகளியத்தையும் பூசிக்கொண்டு நிர்வாணரூபமாக நின்று கருவை நிலத்தில் வைத்து எவனை குறித்தையோ அவன் உடலில் அட்சரத்

வைரைந்து கோடிவஸ்திரம் அணிந்துக்கொண்டு ஆவ்மனைத் திடபத்தி பூசைசெய்ய தெளிவுண்டாகும் தேவியும் அருள்புரிந்துசித்தியாவாள்

1091. எதிரியைவாங்க மூலிபிடுங்கும் வித்தை.

எதிரியை வாங்கவேண்டில் மூலிகையின் முன்னின்று எதிரியினுடைய பெயரைச்சொல்லி வஸ்துவுடன் சத்தியும் வர்க்கவகைகளும் வைத்து தூபதீபங்காட்டி நீ நிர்மலனாக விருந்துக்கொண்டு ருத்திரனை தியானித்து வேரைப்பிடுங்கிடில் எதிரியுடையப் பேருனதுப்போகும் எதிரிமேல் ருத்திரகோபம் செலுத்துவார் ஆதலால் இப்படிசெய்வது பாவமென்றும் அறிந்தபெரியோர் கூறுகின்றனர்.

1092. மரணமூல கன்னிநூலறியும் வித்தை.

மூலிகைமுன் போய்நின்று சாபத்தை நிவர்த்திசெய்து தலைசனுடைய நூல்வாங்கி மித்துருவின் முகத்தைநோக்கி சத்துருபட்சியின் உறவைக் கொள்ளலாம் காப்புகட்டிவஸ்து சத்திவைத்து தூபதீபங்காட்டி உருவெழுதிய சக்கரத்தை அதின்முன்புவைத்து அவ்வெழுத்தை ஜெபித்து குறித்தயிடத்தையும் பார்த்துக்கொண்டு பட்சி அழிந்து கருவைத்தொட்டு வாலையினுடைய பூசைசெய்து சூட்டி குறித்தயிடத்தில் முன்கொண்டுக்குத்திவிட எதிரிகட்கு வாதனைமெத்தவுண்டாகும் ஆதலால் இவைசெய்யப்போகாதென மேலோர் கூறுகின்றனர்.

1093. வேறு மரணமூலக்கன்னி நூலறியும் வித்தை.

முன்போல் மூலிகையின் முன்னிருந்துக்கொண்டு தூபதீபங்காட்டி கன்னிநூல்காப்புகட்டி பட்சியினுடைய சக்கரத்தைவைத்து அந்த அட்சரத்தையே மேல்நோக்கி ஜெபித்து கருவைத்தொட்டு நேரத்தையும் பார்த்து மித்துருபட்சியை சேர்த்துக்கொண்டு நிர்வாணரூபமாகநின்றுகொண்டுவேரைப்பிடுங்கிடவேண்டும் எதிரியானவன் நடந்தால் நன்று அல்லாவிட்டால் அவனுடைய வலதுகாலடி மண்ணையும் வேரின்மண்ணையும் சேர்த்து மயானத்தில் கொண்டுபோய் வைத்துக்கொண்டு தேவிக்கு பூசைசெய்து பச்சையிலையை சுடுவாயாகில் ஒருஜாமத்திற்கெல்லாம் எதிரியினுடைய உடலானது எரிந்துபோகும் ஆதலால் இவை செய்யப்போகாதென மேலோர் கூறுகின்றனர்.

1094. பிருதிவியின் தொழிலறியும் வித்தை.

பிருதிவியின் தொழில்செய்வது எவ்விதமெனில் அப்புவை மண்ணது உண்ணும் மற்ற எழுத்துகளை சேர்க்கப்போகாது ஆகாச எழுத்தை கூட்டி மாறும்படியானவகையைச் சொல்லவேண்டாம் சிவன்மேல் ஆணை என்று மேலோர் கூறுகின்றனர்.

1095. அப்புவின் தொழிலறியும் வித்தை.

அப்புவியின் தொழில்செய்யவேண்டில் வாயுவின் எழுத்தை பிடித்து மாறல்வேண்டும் அத்துடன் அக்கினியைச் சேர்த்துகொள் தண்ணீர் நிலைத்தில் அற்றுபோகும் ஆதலால்மற்ற எழுத்துகளை சேர்க்கவொண்ணாது அப்படி சேர்க்கில் கூடானது அழிந்துபோகும் என மேலோர் கூறுகின்றனர்.

1096. தேயுவின் தொழிலறியும் வித்தை.

தேயுவின்தொழிலைச் செய்யவேண்டில் அப்பெழுத்தை ஓதி அத்துடன் ஆகாச எழுத்தையும் சேர்த்து இரண்டையும் ஒன்றாய்ச்சேர்த்து மாறுவாயாகில் அக்கினியானது அமர்ந்துப்போகும் அப்புவும் உண்டுபோகும் ஆதலால் தேவியின்மேல் ஆணையாக இத்தொழில் செய்யப்போகதெனமேலோர் கூறுகின்றனர்.

1097. வாயுவின் தொழிலறியும் வித்தை.

வாயுவின் தொழில்செய்யவேண்டில் பிருதிவின் எழுத்தைப்பிடித்து மாறல்வேண்டும் அத்துடன் அப்பெழுத்தையும் சேர்த்து அநுசரிப்பாயாகில் வாயுவானது அடங்கிப்போகும் இத்துடன் மற்றஎழுத்துகளை சேர்க்கப்போகாது இந்தவித்தையை ஒருவருக்கும் சொல்லப்படாது என்று மேலோர் கூறுகின்றனர்.

1098. ஆகாசத்தின் தொழிலறியும் வித்தை.

ஆகாசத்தின் தொழில் செய்யவேண்டில் அப்பெழுத்தையும் பிருதிவெழுத்தையுங்கூட்டி அக்கினி வாயு இவைரண்டையுஞ் சேர்த்து நாலு எழுத்தையும் ஜெபித்து ஆகாசவெளியில் தாக்க நினைத்ததொழில் நிலையாகிற்கும் ஆதலால் சிவன் உமைமேல் ஆணையாக இத்தொழில் செய்யப் போகாதென்றனர்.

1099 வசிய வித்தை.

வசியவித்தை செய்யவேண்டில் ஆகாச எழுத்தையும் வாயுவின் எழுத்தையும் அக்கினியின் எழுத்தையும் சேர்த்துக்கொண்டு நீ நினைத்து செய்யும் தொழிலை ஓதிட சகலமும் வசியமாகும் மன்னர் சேயமாவர்கள் தேவதைகள் சித்தியாக அருள்புரிவார். ஆதலால் இத்தொழிலை என்னமாய் கேட்டபோதிலும் வெளியிடப்போகாது. அன்றியும் அவ்வெழுத்தை வசியம்பண்ண அக்கினியை கூடசேர்க்கவும் அக்கினியை வசியம்பண்ண வாயு எழுத்தைகூடச்சேர்க்கவும் அப்பெழுத்தை வசியம்பண்ண பிருதிவின் எழுத்தை பிடித்து மாறல்வேண்டும். பிருதிவை வசியம்பண்ண அக்கினி எழுத்தை பிடித்து மாறல்வேண்டும். அப்படிமாறுவது பெரிதல்ல. மனம் ஒன்றாக வேண்டும். உண்மையானது கொண்டு ஐம்புலனை நிறுத்தவேண்

டும் திருத்திடில் செய்யுந் தொழிலெல்லாம் உண்மையாக விளங்கும் சித்தர்கள் புகழும்படியான இடமுள்ள பட்சிவித்தையின் வழியிதாகும் அன்றியும் உலகிலுள்ள மாந்தர்களுக்கு குணம், குறி, சத்துரு, மித்துரு, காணவிடில் ஒருவராலேயும் அடக்கவொண்ணாது என மேலோர் கூறுகின்றனர்.

1100 சத்துருவை வெல்லும் வித்தை.

எதிரிகளை வெல்லவேண்டில் அந்த எதிரி பட்சியுடன் சத்துருபட்சியைக்கூட்டி எதிரிமேல் செய்கின்றவன் மித்துரு பட்சியைச்சேர்த்து சத்துருவின் முகத்தைநோக்கி செய்யும்படியானத் தொழிலை முன்னேவைத்து நிர்வாணரூபமாக நின்று மந்திரத்தை ஓத எதிரியை துன்பப்படுத்திவிடுமென மேலோர் கூறுகின்றனர்.

1101 பேதவியல் பரியும் வித்தை.

பேதாபேதங்கள் காணவேண்டில் ஊண்பட்சியாகில் குள்ளன் அரசுபட்சியாகில் கொடியோன் நடைபட்சியாகில் சமானமானவன் நித்திரைபட்சியாகில் ரொம்பவுங்குள்ளன் மரணபட்சியாகில் கூனன் இவ்விதமாக அறிவிலுல் பட்சிகளின் தொழிலைக்கண்டு எந்த சமயத்திலும் பேர்களை எளிதாக காணும்பொருட்டு மேலோர் கூறிவைத்தனர்.

1102 வியாதி யறியும் வித்தை.

பட்சிகளைக்கொண்டு வியாதி அறியும்விதம் எவ்விதமெனில் ஊண்பட்சியாகில் சிரசுநோய் நித்திரை பட்சியாகில் தலைநோய் கழுத்துநோய் அரசுபட்சியாகில் நெஞ்சில்நோய் மரணபட்சியாகில் அரையில்நோய் இவ்விதமாக கண்டறியவேண்டும்.

1103 மச்சமரியும் வித்தை.

பட்சிகளைக் கொண்டு மச்சமறியவேண்டில் வல்லூருக்கு முதுகில் ஆந்தைக்கு உச்சி அல்லது கையின்கீழ் காகத்திற்கு புயம், மார்பு, இவைகளில் கோழிக்கு முகம், கண்டம், மயிலுக்கு தொடைமுழங்கால் இவ்விதமாக மச்சங்களைக்கண்டு அறியவேண்டும்.

1104 பூர்வபட்சத்தில் அட்சரபட்சி அறியும் வித்தை.

அம்மென்ற எழுத்துமுதல் நான்கும் வல்லூரு பட்சியாகும். அதில் முதலிரண்டும் ஆந்தைபட்சியாகும். உம்மென்ற எழுத்துமுதல் இரண்டும் காகமென்ற பட்சியாகும். எம்மென்ற எழுத்துமுதல் இரண்டும் கோழியாகும். ஒம்மென்ற எழுத்துமுதல் இரண்டும் மயிலாகும் இதில் குறில் ஆண் நெடில் பெண்ணென்றும் இவ்விதங் கண்டறியவேண்டும்.

1105. அமரபட்சத்தின் அட்சரபட்சி அறியும் வித்தை.

இம் என்றஎழுத்து இரண்டும் வல்லூருமுதல் இரண்டும் ஆந்தை ஒம்என்றஎழுத்து இரண்டும் காகம் அம்என்றஎழுத்து இரண்டும் கோழி

எம்என்றஎழுத்து இரண்டும் மயிலாகும் இவ்விதமாக, அமரபட்சத்தின் பட்சிகளின் அட்சரமறிந்து எத்தொழிலும் செய்யவேண்டுமென மேலோர் கூறுகின்றனர்.

1106 பூர்வபட்சம் பகல்வாரம் 7-ற்கும் ஊண்பட்சி அறியும் வித்தை.

செவ்வாய் ஞாயிறு வாரங்களில் வல்லூருபட்சி உண்ணும் திங்கள் புதன் வாரங்களில் ஆந்தை உண்ணும் வியாழக்கிழமையில் காகம் உண்ணும் வெள்ளிக்கிழமையில் கோழியானது உண்ணும் சனிவாரம் மயில் உண்ணும் ஆதலால் பூர்வபட்சம் பகலிற்கு இவ்வார் அறிந்து யாதொரு தொழிலும் செய்ய விருத்தியும் ஜெயமுமுண்டாம்.

1107 அமரபட்சம் பகல்வாரம் 7-ற்கும் ஊண்பட்சி அறியும் வித்தை.

திங்கள் சனிவாரங்களில் மயில்உண்ணும் செவ்வாய் ஞாயிறு வாரங்களில் கோழி உண்ணும் புதன்கிழமை காகம் உண்ணும் வியாழக்கிழமையில் ஆந்தை உண்ணும் வெள்ளிக்கிழமையில் வல்லூருஉண்ணும் ஆதலால் அமரபட்சம் பகலிற்கு இவ்வார் அறிந்து யாதொரு தொழிலும் செய்ய விருத்தியும் ஜெயமுமுண்டாகும்.

1108 பூர்வபட்சம் இரவுவாரம் 7-ற்கும் படுபட்சி அறியும் வித்தை.

ஞாயிறு செவ்வாய் வாரத்திற்கு படுபட்சி காகம், புதன், திங்கள் வாரத்திற்கு படுபட்சி கோழியாகும் வியாழக்கிழமைக்கு படுபட்சி மயிலாகும் சனிவாரத்திற்கு படுபட்சி ஆந்தையாகும் இவ்வார் பூர்வபட்சம் இரவிற்கு படுபட்சி அறிந்து தொழில்நடத்தவேண்டும்.

1109 அமரபட்சம் இரவுவாரம் 7-ற்கும் ஊண்பட்சி அறியும் வித்தை.

சனி திங்கள் வாரங்களில் கோழி உண்ணும் வெள்ளிக்கிழமையில் மயில் உண்ணும் புதன்கிழமையில் ஆந்தை உண்ணும் வியாழக்கிழமையில் காகம் உண்ணும் செவ்வாய்க்கிழமையில் வல்லூரு உண்ணும் இவ்வார் அமரபட்சம் இரவின்வாரம் 7-ற்கும் கண்டுயாதொரு தொழிலும் செய்ய ஜெயமாகும்.

1110. பூர்வபட்சம் வாரம் 7-ற்கும் படுபட்சி அறியும் வித்தை.

ஞாயிறு வெள்ளியில் ஆந்தைமரணமாகும் வியாழம் சனிவாரங்களில் வல்லூருமரணமாகும் திங்கட்கிழமையில் காகம் மரணமாகும்செவ்வாய்க்

கிழமையில் மயில் மரணமாகும் இவ்வார் பூர்வபட்சம் வாரம் 7-ற்கும் படுபட்சிகளறிந்து யாதொருதொழிலும் நடத்தவேண்டும்.

1111. அமரபட்சம் வாரம் 7-ற்கும் படுபட்சி அறியும் வித்தை.

திங்கட்கிழமையில் ஆந்தை மரணமாகும் செவ்வாய்க்கிழமையில் வல்லூரு மரணமாகும் ஞாயிறில் காகம்மரணமாகும் புதன்கிழமையில் மயில் மரணமாகும் சனி வியாழக்கிழமைகளில் கோழிமரணமாகும் அமரபட்சம் வாரம் 7-ற்கும் இவ்வார் படுபட்சிகள் அறிந்து யாதொருதொழிலும் நடத்தவேண்டும்.

1112 பூர்வபட்சம் பகல் இரவு இரண்டிற்கும் பட்சிகள் ஒவ்வொன்றின் தொழில்முறை அறியும் வித்தை.

பூர்வபட்சம் பகலில்பட்சிகள் உண்டு நடந்து அரசாகி நித்திரைபோய் முற்பகலில் மரணமாகும் அன்று இரவில் அரசனாகிமரணமடைந்து நடையாகி உண்டு நித்திரைப்போய்விடும் இதை அறிந்து யாதொரு தொழிலும் செய்யவேண்டும்.

1113. அமரபட்சம் பகல் இரவு இரண்டிற்கும் பட்சிகள் ஒவ்வொன்றின் தொழில் அறியும் வித்தை.

அமரபட்சம் பகலில் உண்டு மரணமாகி நித்திரைபோய் அரசாகி நடைநடக்கும் அன்று இரவில் உண்டு நித்திரைபோய் நடைமாகி மரணமடைந்து அரசாகும் இதை அறிந்து யாதொரு தொழிலும் செய்யவேண்டும்.

1114. பட்சம் இரண்டுக்கும் கடைசியில பட்சிகள் அறியும் வித்தை.

பூர்வபட்சத்தில் மரணமாகியபட்சி உண்ணும் அன்று இரவில் நித்திரையாகிய பட்சி உண்ணும் அமரபட்சத்தில் நடையாகிய பட்சியுண்ணும் அன்று இரவில் அரசியபட்சியுண்ணும் இவ்விதங்கண்டு யாதொருதொழிலும் நடத்தவேண்டுமென மேலோர் கூறுகின்றனர்.

1115. பூர்வபட்சம் பகல்ஜாமம் 5-ற்கும் பட்சிகள் ஐந்தின் தொழில்முறை அறியும் வித்தை.

பூர்வபட்சம் பகலில் முதல்ஜாமம் வல்லூரு உண்ணும் ஆந்தை நடக்கும் காகம் அரசாளும் கோழி நித்திரைபோகும் மயில் மரணமாகும் இவ்வார்பட்சிகளின் தொழில் அறிந்து யாதொரு தொழிலும் செய்யவேண்டும்.

பூர்வபட்சம் பகல் இரண்டாம் ஜாமத்தில் மயில் உண்ணும் வல்லூரு நடையாகும் காகம் அரசாகும் ஆந்தைமரணமாகும் கோழி நித்திரையாகும் இவ்வார் அறிந்து யாதொருதொழிலும் செய்யவேண்டும்.

பூர்வபட்சம் மூன்றாம் ஜாமத்தில் கோழி உண்ணும் மயில் நடக்கும் வல்லூரு அரசாகும் ஆந்தை நித்திரைபோம் காகம் மரணமாகும் இவ்வார் அறிந்து யாதொரு தொழிலும் செய்யவேண்டும்.

பூர்வபட்சம் நான்காம் ஜாமத்தில் காகம் உண்ணும் கோழிநடக்கும் மயில் அரசாகும் வல்லூரு நித்திரைபோம் ஆந்தைமரணமாகும் இவ்வார் அறிந்து யாதொருதொழிலும் செய்யவேண்டும்.

பூர்வபட்சம் பகல் ஐந்தாம் ஜாமத்தில் ஆந்தை உண்ணும் காகம்நடக்கும் கோழி அரசாகும் மயில் நித்திரைபோகும் வல்லூரு மரணமாகும் இவ்வார் அறிந்து யாதொருதொழிலும் செய்யவேண்டும்.

1116 பூர்வபட்சம் இரவு ஜாமம் 5-ற்கும் பட்சிகள் ஐந்தின் தொழில்முறைஅறியும் வித்தை.

பூர்வபட்சம் இரவில்முதல் ஜாமம் காகம் உண்ணும் ஆந்தைவழிநடக்கும் வல்லூரு அரசாகும் மயில் நித்திரைபோம் கோழிமரணமாகும் இவ்வார் அறிந்து யாதொரு காரியமும் செய்யவேண்டும்.

பூர்வபட்சம் இரண்டாம் ஜாமத்தில் மயில்உண்ணும் கோழி, நடக்கும் காகம் அரசாகும் ஆந்தை நித்திரைபோகும் வல்லூரு மரணமாகும். இவ்வார் அறிந்து யாதொரு தொழிலும் செய்யவேண்டும்.

பூர்வபட்சம் இரவில் [illegible]ஜாமத்தில் ஆந்தை உண்ணும். வல்லூருநடக்கும் மயில் அரசாகும், கோழி நித்திரைபோம், காகம் மரணமாகும் இவ்வார் அறிந்து யாதொரு தொழிலும் செய்யவேண்டும்.

பூர்வபட்சம் இரவு ஜாமம் நான்கில் கோழி உண்ணும் காகம் நடக்கும் ஆந்தை அரசாகும் வல்லூரு நித்திரைபோகும், மயில் மரணமாகும் இவ்வார் அறிந்து யாதொரு தொழிலும் செய்யவேண்டும்,

பூர்வபட்சம் இரவு ஐந்தாம் ஜாமத்தில் வல்லூரு உண்ணும் மயில் நடக்கும் கோழி அரசாகும் காகம் நித்திரைபோகும் ஆந்தை மரணமாகும் இவ்வார் அறிந்து யாதொருதொழிலும் செய்யவேண்டும்.

1117 அமரபட்சம் பகல்ஜாமம் 5-ற்கும் பட்சிகள் ஐந்தின் தொழில்முறை அறியும் வித்தை.

அமரபட்சம் பகல் முதல்ஜாமத்தில் மயில்உண்ணும் கோழி அரசாகும் காகம் நடையாகும் ஆந்தை நித்திரையாகும் வல்லூரு மரணமாகும், இவ்வார் அறிந்து யாதொரு காரியமும் செய்யவேண்டும்.

அமரபட்சம் பகல் இரண்டாம் ஜாமத்தில் ஆந்தை உண்ணும் வல்லூரு அரசாகும், மயில் மரணமாகும் கோழி நடையாகும் காகம்நித்திரையாகும் இவ்வார் அறிந்து யாதொரு காரியமும் செய்யவேண்டுமென மேலோர் கூறுகின்றனர்.

அமரபட்சம் பகல்மூன்றும் ஜாமத்தில் கோழிஉண்ணும் காகம் அரசாகும் ஆந்தை மரணமாகும் வல்லூருநடக்கும் மயில் நித்திரையாகும் இவ்வார் அறிந்து யாதொரு காரியமும் செய்யவேண்டும்.

அமரபட்சம் நான்காம் ஜாமத்தில் வல்லூரு உண்ணும் மயில் மரணமாகும் கோழிஅரசாகும் காகம் நடையாகும் ஆந்தை நித்திரையாகும் இவ்வார் அறிந்து யாதொரு காரியமும் செய்யவேண்டும்.

அமரபட்சம் பகல் ஐந்தாம் ஜாமத்தில் காகம் உண்ணும் ஆந்தை அரசாகும் வல்லூரு மரணமாகும் மயில் நடையாகும் கோழி நித்திரையாகும் இவ்வார் அறிந்து யாதொரு காரியமும் செய்யவேண்டும்.

1118 அமரபட்சம் இரவுஜாமம் 5-ற்கும் பட்சிகள் ஐந்தின் தொழில்முறை அறியும் வித்தை.

அமரபட்சம் இரவு முதல்ஜாமத்தில் மயில் உண்ணும் வல்லூரு அரசாகும் ஆந்தை மரணமாகும் காகம் நடையாகும் கோழி நித்திரையாகும் இவ்வார் அறிந்து யாதொரு காரியமும் செய்யவேண்டும்.

அமரபட்சம் இரவு இரண்டாம் ஜாமத்தில் வல்லூரு உண்ணும் ஆந்தை அரசாகும் காகம் நடக்கும் மயில் நித்திரைபோகும் இவ்வார் அறிந்து யாதொரு காரியமும் செய்ய[illegible] அறிவோர் கூறுகின்றனர்.

அமரபட்சம் மூன்றும் ஜாமத்தில் ஆந்தை உண்ணும் காகம் அரசாகும் கோழி மரணமாகும் மயில் நடக்கும் வல்லூரு நித்திரைபோகும் இவ்வார் அறிந்து யாதொருகாரியமும் செய்யவேண்டும்.

அமரபட்சம் இரவு நான்காம் ஜாமத்தில் காகம் உண்ணும் கோழி அரசாகும் மயில் மரணமாகும் வல்லூரு நடக்கும் ஆந்தை நித்திரைபோம் இவ்வார் அறிந்து யாதொருகாரியமும் செய்யவேண்டுமென மேலோர் கூறுகின்றனர்.

அமரபட்சம் இரவு ஐந்தாம் ஜாமத்தில் கோழி உண்ணும் மயில் அரசாகும் வல்லூரு மரணமாகும் ஆந்தை நடக்கும் காகம் நித்திரைபோகும் இவ்வார் அறிந்து யாதொருகாரியமும் செய்யவேண்டும்.

1119 பூர்வபட்சம் பகல் தொழில்முறை 5-க்கும் நாழிகை அறியும்வித்தை.

பூர்வபட்சம் பகலிற்கு ஊண்பட்சிக்கு நாழிகை ஒண்ணரை, நடைபட்சிக்கு ஒண்ணேகால், அரசபட்சிக்கு இரண்டு, நித்திரைபட்சிக்கு முக்கால், மரணபட்சிக்கு ஒண்ணரை, இவ்விதமாக பட்சிகளின் தொழில்முறைநாழிகள் அறிந்துயாதொரு காரியமும்செய்யவேண்டும்.

1120 பூர்வபட்சம் இரவு தொழில்முறை 5-க்கும் நாழிகை அறியும்வித்தை.

பூர்வபட்சம் இரவிற்கு ஊண்பட்சிக்கு நாழிகை ஒண்ணேகால் நடைபட்சிக்கு ஒண்ணேகால், அரசபட்சிக்கு ஒண்ணு நித்திரை பட்சிக்கு ஒண்ணரை, மரணபட்சிக்கு ஒண்ணு, இவ்விதமாக பட்சிகளின் தொழில்முறைநாழிகள் அறிந்துயாதொருகாரியமும் செய்யவேண்டும்.

1121 அமரபட்சம் பகல் தொழில்முறை 5-க்கும் நாழிகை அறியும் வித்தை.

அமரபட்சம் பகலிற்கு ஊண்பட்சிக்கு நாழிகை இரண்டு, நடைக்கு ஒண்ணரை, அரசுக்கு முக்கால், நித்திரை அரை, மரணத்திற்கு ஒண்ணேகால் இவ்வார் பட்சிகளின் தொழில்முறை நாழிகள் அறிந்து யாதொரு காரியமும் செய்யவேண்டும்.

1122 அமரபட்சம் இரவு தொழில்முறை 5-க்கும் நாழிகை அறியும் வித்தை.

அமரபட்சம் இரவிற்கு ஊண்பட்சிக்கு நாழிகை ஒண்ணேமுக்கால் நடைக்கு ஒண்ணேகால், அரசுக்கு முக்கால், நித்திரைக்கு முக்கால், மரணத்திற்கு ஒண்ணு, இவ்வார் பட்சிகளின் தொழில்முறை நாழிகள் அறிந்துயாதொருகாரியமும் செய்யவேண்டும்.

1123 பூர்வபட்சத்தின் பட்சிநிறமறியும் வித்தை.

பூர்வபட்சத்திற்கு வல்லூரு பொன்னிறமாகும், ஆந்தை வெள்ளிநிறமாகும் காகம் சிகப்புநிறமாம் கோழி பச்சைநிறமாகும் மயில் கருப்புநிறமாகும் இவ்விதம் பட்சிகள் நிறங்காணவேண்டும்.

1124. அமரபட்சத்தின் பட்சிநிறம் அறியும் வித்தை.

அமரபட்சத்திற்கு ஆந்தை சிகப்புநிறமாகும் காகம் பொன்னிறமாகும் மயில் பச்சைநிறமாகும் கோழி வெள்ளைநிறமாகும் வல்லூரு கருப்புநிறமாகும் இவ்விதம் பட்சிகள் நிறங்காணவேண்டும்.

1125. பூர்வபட்சத்தின் பட்சிகுணமறியும் வித்தை.

பூர்வபட்சத்[illegible] வல்லூரு பிராமணனாகும் ஆந்தை வணிகனாகும் காகம் [illegible] கோழிவேளாளன் மயில் சண்டாளன் இவ்விதம் பட்சிகளின் குணமறியவேண்டும்.

1126. அமரபட்சத்தின் பட்சிகுணமறியும் வித்தை.

அமரபட்சத்திற்கு மயில் பிராமணன் வல்லூரு வேளாளன் ஆந்தை அரசன் காகம் வணிகன் கோழி இழுகுலத்தான் இவ்வார் பட்சிகளின் குணமறியவேண்டும்.

1127 பட்சம் இரண்டிற்கும் பட்சிமுக்காலம் அறியும் வித்தை.

பூர்வபட்சம் அமரபட்சம் இவைரண்டிற்கும் ஆந்தையும்மயிலும் முக்காலமாகும் கோழி நிகழ்காலமாகும் வல்லூரும் காகமும் வருங்காலம் இவ்விதம் பட்சிகளின்காலமறிந்து யாதொருதொழிலும் செய்யவேண்டும்.

1128 பட்சம் இரண்டிற்கும் பட்சிதாதுமூலஜீவன் அறியும் வித்தை.

பூர்வபட்சம் அமரபட்சம் இவைரண்டிற்கும் வல்லூரு மூலம் ஆந்தை ஜீவன் காகம் தாது கோழி மூலத்தாது மயில் ஜீவதாது இவ்வார் பட்சிகளின் தாதுமூலஜீவன் அறிந்து யாதொருதொழிலும் செய்யவேண்டும்.

1129 பட்சம் இரண்டிற்கும் பட்சிகள்வடிவமறியும் வித்தை.

பூர்வபட்சம் அமரபட்சம் இவை ரண்டிற்கும் வல்லூரு நீண்டவட்டம் ஆந்தைக்கு ஐங்கோணம் காகம் அறுகோணம் கோழி நாற்கோணம் மயில் முக்கோணம் இவ்விதமாக பட்சிகளின் வடிவங்கள் அறியவேண்டும்.

1130 பட்சம் இரண்டிற்கும் பட்சிகாலறியும்வித்தை.

பூர்வ பட்சம் அமரபட்சம் இவைரண்டிற்கும் வல்லூரு கால் ஆகும். காகம் நீர்க்கால் ஆகும் ஆந்தை நாற்காலாகும் கோழி கொம்பால் மயில் பெருங்காலாகும் இவ்விதம் பட்சிகாலறியவேண்டும்.

1131 பட்சம் இரண்டிற்கும் பட்சிகள் நிலமறியும் வித்தை

பூர்வபட்சம் அமரபட்சம் இவைரண்டிற்கும் நிலமாவது வல்லூருக்கு பாலைநிலம் ஆந்தைக்கு குறிஞ்சிநிலம் காகத்திற்கு மருதநிலம் கோழிக்கு முல்லைநிலம், மயிலுக்கு நெய்தல் நிலம், இவ்விதம் பட்சிகளின் நிலமறியவேண்டும்.

1132 பட்சம் இரண்டிற்கும் பட்சிலோகமறியும்வித்தை.

பூர்வபட்சம் அமரபட்சம் இவைரண்டிற்கும் [illegible] ரு பொன்னாகும் ஆந்தை வெள்ளியாகும், காகம் செம்பாகும்; கோழிக்கு [illegible] மயில் இரும்பாகும் இவ்விதம் பட்சிகளின் லோகமறியவேண்டு[illegible]

1133 பட்சம் இரண்டிற்கும் பட்சி ஆண்பெண் அறியும் வித்தை.

பூர்வபட்சம், அமரபட்சம் இவை ரண்டிற்கும் வல்லூரு, காகம்,மயில் இவை மூன்றுபட்சியும் ஆணாகும் ஆந்தையும், கோழியும் பெண்ணாகும், இவ்விதம் பட்சிகள் ஆண்பெண் என்று அறிந்து கொள்ளவேண்டும்.

1134 பட்சம் இரண்டிற்கும் பட்சிகளின் சுவை அறியும் வித்தை.

பூர்வபட்சம் அமரபட்சம் இவை இரண்டிற்கும் சுவையாவது ஆந்தைக்கு தித்திப்பாகும் கோழிக்கு சிறுபுளிப்பு, காகத்திற்கு துவர்ப்பாகும் வல்லூருக்கு காரல் மயிலுக்கு கப்பாம் இவ்விதம் பட்சிகளின் சுவை அறியவேண்டும்.

1135 பட்சம் இரண்டிற்கும் பட்சிகளால் ஆள்வருத் தெரியும் வித்தை.

பூர்வபட்சம் அமரபட்சம் இவை ரண்டிற்கும் பட்சிகளைக்கொண்டு ஆள் வருத்தறிவது எவ்விதமெனில் வல்லூரு பட்சியாகில் நிற்கின்றான் என்றும் ஆந்தையாகில் மீண்டான் என்றும் காகமாகில் வருகின்றானென்றும் கோழியாகில் ஊருக்குள் வந்தானென்றும் மயிலுக்கு ஆறுநாழிகையில் வருவானென்றும் இவ்விதங்கண்டு சொல்லவேண்டும்.

1136 பட்சம் இரண்டிற்கும் பட்சிகள் வரவுகால அளவறியும் வித்தை.

பூர்வபட்சம் அமரபட்சம் இவைரண்டிற்கும் பட்சிகால அளவு அறிவது எவ்விதமெனில் கோழிக்குநாள் நான்கு வல்லூருக்கு ஐந்துநாள் காகத்திற்கு மூன்றுநாள் ஆந்தைக்கு இரண்டுநாள் மயிலுக்கு நாளொன்று இவ்விதம் அறியவேண்டும்.

1137 பட்சம் 2-ற்கும் பட்சிகளின் பருவம் அறியும் வித்தை.

பூர்வபட்சம் அமரபட்சம் இவைரண்டிற்கும் பருவபட்சியாவது ஊணிற்கு பலாபல முடையவன் நடைக்கு குமரன் அரசுக்கு பார்வேந்தன் நித்திரைக்கு கிழவன் மரணத்திற்கு மோனமூங்தோறாகும் இவ்விதம் பட்சிகளின் பருவ மறியவேண்டும்.

1138 ஒரு மனிதன் தலையை வெட்டும் வித்தை.

ஆ[illegible]பையில் வந்தாகின்று தங்களில் ஒருமனிதனை பிடித்து அங்குள்ள ஓர் மேஜையின்மேல் குப்புறப் படுக்கவைத்து அவன் தலையை

ஓர் துணியினால் மூடி கையிற் கத்தியைப்பிடித்துக்கொண்டு அங்கு நிறைந்துள்ள சபையோர்களை நோக்கி இதோ மேஜையின்மேல் குப்புறப்படுத்துக்கொண்டிருக்கும் மனிதனுடைய தலையை வெட்டுகிறேன் பாருங்களென்று தன்கையில் தாங்கியகத்தியினால் அறுத்து அதைக்கையில் தூக்கிக்கொண்டவுடனே தலையறுந்த முண்டத்தின் கையுங்காலும் உதைத்துக்கொள்ளும் சற்று நேரம்வரையில் அத்தலையை தன் கையிலேயே வைத்துக்கொண்டு பரிதாபமான சில வார்த்தைகளைப் பேசியபின்பு அதனை அந்த முண்டத்தின் பக்கத்திலேயே வைத்து துவாலையைப்போட்டு மூடிவிடவேண்டும் உடனே தலையை மூடியிருக்கும் துவாலையை எடுத்துவிட்டு வெறுமனே வைக்கின்றான். அதன்பின் இரண்டு நிமிஷங்கள் கழித்து அந்த தலையின்வாயில் ஒரு சுருட்டைவைத்து பற்றவைக்கச்செய்து அவ்வாறு சற்று நேரம்வரையில் வைத்துக்கொண்டிருந்த பிறகு அத்தலை சுருட்டின் புகையை குடிக்கத்துடங்கிறது அப்போது மூக்கிலிருந்து புகையும் வருகிறதன்றி அன்றியும் முன்சிமிட்டாத கண்களையும் சிமிட்டி முழிகளையும் புரட்டும் அப்போது வெட்டுண்டவன் நான் மந்திரத்தினாலே இத்தலையை இப்போது உயிர்ப்பித்தேன் என்று சொல்வான் மறுபடியும் அத்தத்தலையின்மேல் துவாலையைப் போட்டுமூடி தலைக்குமட்டும் உயிர்கொடுத்தது பெரிய காரியமல்ல அதின் உடலுக்கும் உயிர் கொடுக்கிறேனென்று அந்தத்தலையை முன்போலக் கையினாற்றூக்கி ஜனங்களுக்குக்காட்டி முண்டத்துடன் சேர்த்து துவாலையால் மூடி ஜெபம்செய்து தண்ணீர் தெளிக்க உடனே வெட்டுபட்ட மனிதன் எழுந்து யாவருக்கும் வந்தனம் செய்து மறைந்துவிட யாவரும் ஆச்சரியப் படுவார்கள்.

1139 மேற்கூறிய ஜாலமாடும் சூட்சமறியும் வகை.

இதனுடைய இரகசியமாவது மேஜை பெட்டிக்குள்ளே ஓர் மனிதன் இருக்கிறதாக செய்யவேண்டும். மேஜைக் குள்ளிருக்கும் மனிதனையும் வெட்டுபடுவோனையும் தூரத்திலிருந்து பார்த்தால் இருவர் முகங்களும் ஒரேமாதிரியாய் தோற்றும்படியாய் இருவருக்கும் வேஷந்தரித்திருக்க வேண்டியது. அதுவுமன்றி இவர்களுடையத் தலையைப்போலவே மண்ணினாலும் ஒருதலைசெய்து அந்ததலையின் கழுத்தடியில் சிவப்பு மஞ்சிண்டாப் பவுடரைக் கரைத்து நிரப்பிய தோற்பையைப் பொருத்தி வைத்திருக்க வேண்டியது வெட்டுண்டவன் மேஜையிற்படுத்த வுடனே வெட்டப்போகிறவன் துவாலையால் தலையை மூடவேண்டும் வெட்டுண்பவன் அப்போது அந்த மேஜையின் மேற்பக்கத்திலுள்ள ஓர் துவாரத்தின்வழியாய் தன்தலையை உள்ளே நுழைத்துவிடவேண்டும் அந்தக்ஷணமே மேஜைக்குள்ளே இருக்கின்ற மனிதன் மண்ணினாற்செய்த தலையை [illegible]ரத்தின் வழியாகவே மேஜையின்மேலே வெட்டப்போகிறவன் கையில்கொடுக்க

வேண்டும் பிறகு மேஜையின்மேல் படுத்திருப்பவன் தலையை அறு[illegible]போல் அம் மண்தலையிற் பொருத்தியிருக்கும் தோற்பையை அறுக்க அப்பையிலுள்ள பவுடர்தண்ணீர் இரத்தத்தைப்போல் பிரவாகித்தோடும் பிறகு அந்த மண்தலையைத்தூக்கி எல்லாருக்குங் காட்டி முண்டத்தின் பக்கத்தில் வைத்து துவாலையால் மூட அந்தயிடத்தில் ஒரு துவாரம் இருக்கிறது அந்த துவாரத்தின் வழியாய் மண்தலையை உள்ளே எடுத்துக்கொண்டு உள்ளேயிருக்கின்றமனிதன் தன்தலையை வெளியே காட்டவேண்டும் இந்த வேலை இவ்விடத்தில் நடந்துகொண்டிருக்கும்போது தலையைவெட்டினவன் பலவகை பகடிவார்த்தைகளால் ஜனங்களின் கவனத்தை தன்வசத்திற் இறகிக்கின்றான் சுருட்டுப் பிடித்துக்கொண்டிருக்கும் தலையை துவாலையால் மூடும்போது முன்புதலை நீட்டியமனிதன் தன்தலையை உள்ளே இழுத்துக்கொண்டு மண்தலையை மேஜையின்மேல்வைத்துவிடவேண்டும் பிறகு தலையை வெட்டினவன் முண்டத்தோடுத் தலையைப்பொருத்தவைத்துத் துவாலைமூடினவுடனே உள்ளேயிருப்பவன் மண்தலையை உள்ளே எடுத்துக்கொண்டு வெட்டுண்டவன்முன்பு உள்ளே சொருகியிருக்கும் தன்தலையைவெளியேயிழுத்துக்கொண்டு எழும்பவேண்டும் இக்காட்சி ஜனங்களுக்கு மிகவும் ஆச்சரியமாகவே யிருக்கும்.

வெட்டப்போகின்றவன் கையில் இருக்கும் துவாலை குட்டையின் பிரயோசனம் இப்போது இன்னதென்று நன்கு விளங்கும் மேஜையின்மேல் மனிதன் குப்புறப்படுத்துக்கொண்டு தன்தலையை மேஜைக்குள் நுழைத்த உடனே உள்ளிருந்துவரும் மண்தலையை ஜனங்கள் கண்டு கொள்ளாதபடிக்கும் வெட்டுண்ட தலையை எடுத்து மேஜையின் ஓர்பக்கத்தில் வைக்குந்தருணத்தில் இத்தலையை உள்ளுக்குவாங்கிக்கொண்டு மேஜைக்குள்ளிருப்போன் தன்தலையைக்கொண்டு வருவதையும் பின்பு சுருட்டு பிடித்துக்கொண்டிருக்கும் தலையைத் திடீரென் எடுத்து முண்டத்தோடுவைக்க எத்தனிக்கும்போது உள்ளிருக்கும் மனிதன் தன்தலையை உள்ளுக்கிழுத்துக்கொண்டு உடனே பதிலுக்கு மண்தலையைக்கொடுப்பதையும் கடைசியாக வெட்டுண்டதலையை முண்டத்தோடு சேர்க்கிறபோது அந்த க்ஷணமே மேஜைக்குள்ளிருக்கும் மனிதன் இந்த மண்தலையை உள்ளுக்குவாங்கிக்கொள்வதையும் அதேநேரத்தில் வெட்டுண்ட மனிதன் தன்தலையை மேஜைக்கு வெளிபுறத்தில் கொண்டுவருவதையும் வேடிக்கைப்பார்ப்பவர்கள் அறிந்து கொள்ளாமல் மறைக்கும்பொருட்டேயாம் ஆகிலும் மேற்கூறிய [illegible] சூத்திரமாகமேஜைகள் செய்து மு[illegible]க அறை[illegible]ப்ப[illegible]களிலும் பயின்றிப் ப[illegible] ஆனால் மேஜையின்மேல் வல்பற்றுலையில் வெண்மையான குட்டை [illegible]மைத்திருக்க[illegible]

1140 பிரளய கப்பல் காட்டும் ஜாலம்.

ஒரு அறைக்குள் சுவற்றை சுத்தப்படுத்தி பின்பு இல்லைப்பாலையும் திமிரி பாஷாணத்தையுங் கலந்து முச்சிலேலைக்காரை கொண்டாவது அல்லது தாளுவது எழுத பிரதிமையுண்டாகில் ஒருவிசித்திரமான கப்பலொன்று எழுதி முன்னதாக வைத்திருக்கவேண்டும். இராத்திரிகால மானவுடன் ஜாலவித்தை யாடுவோன் ஜனங்களை நோக்கி சகோதரர்களே இதோ இந்த அறைக்குள்ளிருக்கும் கப்பலைப்பாருங்கள் இது பூர்வம் பிரளயகாலத்தில் எய்யப்பட்ட கப்பல் இதன் விநோதத்தை சற்று கவனியுங்களென்று அறையைத்திறந்து அனைவரையும் உள்ளே அழைத்துக்கொண்டுபோய் பாருங்களென்று காட்ட ஜனங்கள் யாவரும் கப்பலிருக்கும் காட்சியைப்பார்த்து கண்பூர்த்து பிரமைகொண்டு விழித்தவிழி மூடாமல் பார்த்துக் கொண்டிருப்பார்கள் அப்போது நீ அவர்களைப் பார்த்து இந்தகப்பலை பாதாளலோகத்திற்கு அனுப்ப வேண்டுமென்று கொஞ்சம் கற்பூரத்தை கொளுத்திவைக்க கப்பலானது மறைந்துபோகும் கற்பூரம் அமைவதற்கு முன்னமே அனைவரையும் வெளியே அனுப்பிவிட்டு அறையைச்சாற்றி தாள் போடவேண்டும்.

1141 பத்துத்தலை ராவணனை காட்டும் ஜாலம்.

முன்போல் ஒரு அறைக்குள் சுவற்றை சுத்தப்படுத்தி இல்லைப்பாலும் திமிரி பாஷாணத்தையும் கலந்து பத்துத்தலை ராவணனைப்போல் சுவற்றில் யெழுதி முன்னதாக வைத்திருந்து இரவில் ஜாலவித்தை யாடுவோன் ஜனங்களை நோக்கி சகோதரர்களே இதோ மூடியிருக்கும் இந்த அறைக்குள்ளே இலங்கையிலிருந்து பத்துத்தலை இராவணன் வந்திருக்கும் விநோதத்தைப் பாருங்களென்று உடனே அறையைத் திறந்துகாட்ட தகத்தகாயமாய் அக்கமயம்போல் பத்துத்தலையும் இருபதுகண்ணும் இருபது கையுமாக தெரியும் அனைவரும்பார்த்து இது மகா புதுமையானவித்தையென்று புகழ்ந்து பேசுவார்கள் அப்போது நீ அவர்களைப் பார்த்து இந்த இராவணன் வந்து வெகுநாழியாச்சு இதோ லங்கைக்கு அனுப்பிவிடுகிறேன் பாருங்களென்று முன்போல் கொஞ்சம் கற்பூரத்தைக்கொளுத்தி வைக்க உடனே இராவணன் மறைந்துவிடுவான். நீ கற்பூரம் அவிகின்றதற்கு முன்னமே அனைவரையும் அறையைவிட்டு வெளியே துரத்திவிட்டு கதவைச்சாற்றி தாள்போட வேண்டும்.

1142 இலங்காபுரி பட்டணம் காட்டும் ஜாலம்.

[illegible] ஒரு வெட்டவெளியான பெரிய மயிதானத்திற்கு ஜாலவித்தைக்காரன் அனைவரையும் அழைத்துக்கொண்டுபோய் [illegible] நோக்கி இதோ இந்த மயிதானத்தில் இலங்காபட்டணம் வந்[illegible]ம் படிசெய்யும் அற்புதத்தை பாருங்களென்று நாலு எலுமிச்[illegible]

எடுத்து அதின்மேல் மாயாசக்திக் கருவைப்பூசி மாயாசக்தி மந்திரத்தை ஆயிரத்தெட்டு உருஜெபித்து இந்த மைதானத்தில் இலங்கை பட்டணத்தைப்போல் தோற்றும்படி செய்யவேணுமென்று பழத்தை நாலுதிக்கும் விட்டெறிந்து வேதாளமந்திரத்தை உச்சாடனம் செய்துகொண்டேயிருக்க ஜனங்கள் பார்த்துக் கொண்டிருக்கும்போதே அந்த மயிதானத்தில் ஆச்சரியமாக இலங்காபட்டணம் துலங்கும் அதில் ராட்சதர் கூட்டங் கூடகோபுரம் மாடமாளிகைகளும் கடைவீதிகளும் சாலைகளும் சோலைகளும் வெகு ஆடம்பரமாகத் தோற்று அனைவரும் ஆச்சரியப்படுவார்கள். அப்போது நீ இந்தப் பட்டணத்தை மறைந்து போம்படிச் செய்கிறேன் பாருங்களென்று வேதாள உச்சாடன மந்திரத்தை சொல்லி நாலுகல்லை எடுத்து நாலுதிக்கிலும்போட்டு மறைந்து போவென்று மூன்றுதரம்சொல்ல மறைந்துவிடும் அனைவரும் பிரமிப்பார்கள்,

1143 காட்டேரியை காட்டும் ஜாலம்.

ஜாலவித்தைக்காரன் இரவில் ஜனங்களை ஒரு மயிதானத்திற்கு அழைத்துக்கொண்டுபோய் இதோ காட்டேறியை காட்டுகின்றேன் பாருங்களென்று இந்திரஜாலக் கருவைத்தொட்டு குறளியை. தியானித்து உச்சாடனம்செய்ய உடனே பார்க்கும்படியான ஜனங்களின் கண்களுக்கு அந்த மயிதானமெல்லாம் காட்டேறி கூட்டமாகத்தோற்று அப்போதனைவரும் மந்திரவாதியென்று மகிழ்வார்கள்.

1144 தலைகள் உருளும் விநோத ஜாலம்.

முன்போலவே இரவில் ஜனங்களைக் கூட்டிக்கொண்டு ஒரு மயிதானத்திற்சென்று மயிதானமெல்லாம் மனிதர்தலை உருளும் விநோதத்தைப் பாருங்களென்று ஐங்கோலக்கருவை விரலில்தொட்டு சக்காதேவி மந்திரத்தைஜெபித்துக்கொண்டே இந்த மயிதானமெல்லாம் மனிதர்தலைபோல் தோற்றவேணுமென்று உச்சாடனம்செய்ய பார்ப்போர் கண்களுக்கு மயிதானமெல்லாம் மனிதர்தலைபோல் தோற்றும் அனைவரும் பிரமைகொள்வார்கள் உன்னைப் புகழ்வார்கள்.

1145 வனமிருகங்களை காட்டும் வித்தை.

ஜாலக்காரன் முன்போலவே இரவில் ஜனங்களை கூட்டிக்கொண்டு ஒரு மயிதானத்திற்குச் சென்று ஜனங்களைப் பார்த்து இதோ காட்டில் வாழும்படியான பலவித மிருகங்களையும் அழைப்பிக்கும் அற்புதத்தைப் பாருங்களென்று மாயாசக்திக்கருவை விரலில்தொட்டு மாயா[சக்தி மந்தி]ரத்தை ஆயிரத்தெட்டு உருஜெபித்து இந்த மயிதானம் முழுதும் மிருக கூட்டங்களாகத் தோற்றவேணுமென்று உச்சாடனமந்திரத்தை ஜெபிக்க உடனே பலவகையான மிருககூட்டங்கள் எங்கும் நிரைநிரையாக நிற்கும்

துதைக்கண்டயாவரும் அடடா இதுவென்ன ஆச்சரியமாக யிருக்குதென்று அனைவரும் உன்னைப் புகழ்வார்கள்.

1146 மூன்றுதலையுள்ள ஸ்திரிபுருஷாளிருவரை காட்டும் ஜாலம்.

ஒரு அறையை சுத்தப்படுத்தி அந்த சுவற்றில் மூன்றுசிரசுள்ள ஸ்திரி ஒன்றும் புருஷன் ஒன்றும் தில்லைப்பாலையும் திரிபாஷாணத்தையுங்கலந்து எழுதிவைத்து அந்த அறையை மூடிதாள்போட்டு வைத்திருக்கவேண்டும் இரவானவுடன் ஜனங்களை அழைத்துக்கொண்டு அந்த அறையிடமாகச்சென்று அவர்களைநோக்கி இதோ இந்த அறைக்குள் மூன்றுசிரசுள்ள ஆண் பெண் இரண்டுபேர்களை காண்பிக்கின்றேன் அந்தவிநோத வேடிக்கையைத்திறந்து அனைவரையும் பார்க்கச்சொல்ல கோடிசூரியப்பிரகாசம்போல் மூன்று தலையுள்ள ஸ்திரி புருஷாள் தோன்றுவார்கள் அப்போது அனைவருங்கண்டு ஆனந்தித்து இது அற்புதமான மந்திரமென்று புகழ்வார்கள் அப்போது நீ அவர்களைப்பார்த்து இதோ இந்த ஸ்திரி புருஷாளை மாயமாகப்போய்விட செய்குறேனென்று கொஞ்சம் கற்பூரத்தைகொளுத்திவைக்க மறைந்துபோகும் உடனே அனைவரையும் அறையைவிட்டு வெளியே துரத்தி கதவைசாற்றி தாள்போடவேண்டும்.

1147 எழுசமுத்திரத்தை காட்டும்ஜாலம்.

ஜாலக்காரன் முன்போலவே இரவில் ஜனங்களை ஒரு மயிதானத்திற்கழைத்துக்கொண்டுபோய் அவர்களைபார்த்து இதோ இந்த மயிதானத்தில் ஏழுசமுத்திரமும் தோற்றும்படி செய்குறேன் பாருங்களென்று மாயாசத்திக்கருவை விரலில் தொட்டு ஏழுகல்லின்மேல் தடவி மாயாசத்தி மந்திரத்தை ஆயிரத்தெட்டுஜெபித்து இந்த மயிதானத்தை பார்ப்போர்கள்களுக்கு சப்த சமுத்திரம்போல் தோற்றச்செய்வாயென்று உச்சாடனம் செய்து ஏழுகல்லையும் எழுதரமாய் விட்டெறிய உடனே பார்ப்போர் கண்களுக்கு ஏழுசமுத்திரமாகத்தோற்றும் ஆச்சரியப்படுவார்கள்.

1148 சப்தகன்னிகைகளை காட்டும்ஜாலம்.

ஜாலக்காரன் முன்போலவே இரவில் ஜனங்களை ஒரு மயிதானத்திற்கு அழைத்துக்கொண்டுபோய் அவர்களைப்பார்த்து இதோ அந்திரமார்க்கமாகவிருந்து ஏழு கன்னிகள் வரும்விநோதத்தை பாருங்களென்று ஜெகஜாலக்கருவையும் ஐங்கோலக்கருவையும் கலந்து விரலில்தொட்டு மாயாசத்திமந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து கருவை ஏழு எலுமிச்சம்பழமெடுத்து அதின்மேல் தடவி ஏழு மூலையிலும்போட உடனே சந்திரபிரகாசம்போல் எழுகன்னிகள் அந்திரமார்க்கத்தில் தோற்றமாவார்கள் அப்போது பார்க்கும் ஜனங்களெல்லாம் பேசிக்கொள்வார்கள் என்னவெனில்

இப்பேர்க்கொத்த ஸ்திரியை நாம் எந்த பிறப்பிலுங்காண்பதரிது இப்போது ஜாலக்காரனால் பார்த்து மகிழ்ந்தோமென்று புகழ்வார்கள்.

1149 நூறு சிரசுள்ள மனிதனைக் காட்டும்ஜாலம்.

ஒரு பெரிய அறைவீட்டை சுவர்முதலானதும் சுத்தப்படுத்தி தில்லைப்பாலும் திரிபாஷாணத்தையுங் கலந்து சுவற்றில் சித்திரக்காரனைக்கொண்டு விநோதமாக நூறு தலையும் இருநூறு கண்ணும் இருநூறு கையும் இரண்டு காலுமாக எழுதி முன்னதாகவேவைத்து அந்த அறைக்குள் ஒருவரும் போகாமற்படிக்கு சாத்தி தாள்போட்டுவைக்கவேண்டும் இரவான உடன் ஜாலக்காரன் ஜனங்களை அழைத்துக்கொண்டு அறைவீட்டைத்திறக்கின்றேன் அதில் நூறு சிரசும் இருநூறு கண்ணும் இருநூறு கையும் இரண்டுகாலுமாக சூரியப்பிரகாசம்போல் தோற்றும் விநோதத்தை பாருங்களென்று உடனே அறைவீட்டின் கதவைத்திறந்துகாட்ட மேற்கூறியதுபோல் தோற்றும் கண்டோர்களெல்லாம் கண்பூர்த்து இது அற்புதமான வித்தையென்று ஆச்சரியப்படுவார்கள் அப்போது நீ இதோ மாயமாகப்போகச்செய்கிறேன் பாருங்களென்று கொஞ்சம் கற்பூரத்தை கொளுத்திவைக்க உடனே மறைந்துவிடும் அப்போது அனைவரையும் அறையைவிட்டு வெளியே போகச்செய்து கதவைசாற்றித் தாள்போட்டுக் கொள்ளவேண்டும்.

1150 அந்திரத்தில் ஆட்டுத்தலை நிற்கும்ஜாலம்.

ஒரு கொம்புள்ள ஆட்டுத்தலையைக்கொண்டு வந்து ஜலம்விட்டுக் கழுவி சுத்தப்படுத்தி அந்தத்தலைக்கு மஞ்சள்பூசி குங்குமமிட்டு அதின்வாயில் ஒரு எலுமிச்சம்பழத்தைவைத்து பின்பு ஜனங்களைப்பார்த்து இதோயிந்த ஆட்டுத்தலையை மேஜைமேல்வைத்து மூடிவிடுகுறேன் இது அந்திரமார்க்கமாகப்போய் நிற்கும்விநோதத்தைப் பாருங்களென்று உடனே ஜெகஜாலக்கருவும் இந்திரஜாலமையும் ஐங்கோலக்கருவையும் ஒன்றாய்கலந்து விரலில்தொட்டு ஜெபித்து இந்த ஆட்டுத்தலை அந்திரமாகநிற்பது போல் தோற்றச்செய்வாயென்று கருவை ஆட்டுத்தலையிற்றடவி மேஜைமேல் வைத்து ஒருகூடையைப்போட்டு மூடிவிடவேண்டும் சற்றுநேரம்பொறுத்து பார்க்க கூடைக்குள்ளிருந்தலை அந்திரமாகப்போய் நிற்கும் அனைவரும் அதிசயப்படுவார்கள் ஆனால் நீ வேதாளத்தை [illegible] செய்துக்கொண்டேயிருக்கவேண்டும்.

1151 சிம்பத்தின்மேலேறி காளியிருப்பதாக காட்டும்ஜாலம்

முன்போலவே ஒரு அறையை சுத்தப்படுத்தி அந்தவிடுதி அறையின் சுவற்றில் சித்திரமெழுது வோரைக்கொண்டு சிம்மவாகனமும் அந்தவாகனத்தின்மீது பத்திரகாளி குந்தியிருப்பதுபோல் எழுதி அந்தவிடுதி அறை

யை கதவைசாத்தி மூடி தாள்போட்டு வைத்திருக்கவேண்டும் இரவான உடனே ஜனங்களை அழைத்துக்கொண்டு அந்த அறையினிடமாகச் சென்று அவர்களைப்பார்த்து இதோ இந்த அறைக்குள் சிம்மவாகனத்தின்மேல் பத்திரகாளி அம்மன் குந்திக்கொண்டிருக்கும் விநோதத்தைப் பாருங்களென்று உடனே அந்த வீட்டின்கதவை திறந்து காட்ட அறையினுள் பார்ப்போர்கண்களுக்கு சூரியபிரகாசம்போல் சிம்மவாகனத்தின் மீது பத்திரகாளியம்மன் தோன்றுவாள் அதைகண்டயாவரும் ஆச்சரியப்பட்டு இது ஜாலவித்தையல்ல இது மகாமந்திரவித்தைபோ லிருக்குதென்று அந்தக் காளிகாதேவியைத் தொழுவார்கள் ஜாலக்காரன் அப்போது அவர்களைப் பார்த்து இதோ அம்மனுக்கு கற்பூரங்கொளுத்திவைக்குறேன் அம்மன் மாயமாகப்போய்விடும் மகிமையைப் பாருங்களென்று உடனே கற்பூரத்தைக்கொளுத்திவைக்க சிம்மவாகனமும் காளியும் மறைந்துபோய்விடும் அப்போது நீ கற்பூரம் அவிவதற்குமுன்னமே அனைவரையும் அறையை விட்டு வெளியேபோகும்படிச்செய்து அறையின் கதவைசாத்தி தாள்போட்டுக்கொள்ளவேண்டும்.

1152 நெருப்புமிதிக்கும் ஜாலம்.

ஒரு சிரியமைதானத்தில் சென்று இரண்டு அக்கினிகுண்டம்வெட்டி அந்தகுண்டம் ஒன்றில் கட்டைகளைப்போட்டுக் கொளுத்தி தீயானது தணிந்தபின்பு அந்தநெருப்பை பரப்பி அங்குள்ள அனைவரையும் பார்த்து இதோ இந்த நெருப்பின்மேல் நடக்கும் விநோதத்தைப் பாருங்களென்று மாயாசந்திமந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து, மறைவுமையை திலர்த மிட்டுக்கொண்டு நெருப்பை பரப்பிவைத்திருக்கும் குண்டத்திற்கு பக்கத்திலிருக்கும் குண்டத்திலிறங்கி [illegible]த்திக்கொண்டிருக்க பார்ப்போர்கண்களுக்கு நெருப்பின்மேல் உலாத்துவதுபோலிருக்கும் அனைவரும் பிரமித்து ஆச்சரியப்பட்டு அக்கினிதேவன் வசியம் செய்துக்கொண்டானென்றும் அல்லது காளிவசியமோ அல்லது மயானருத்திரிவசியமோ அல்லது வாலைவசியமோ வென்று பற்பலரும் பலவிதமாகப்பேசி உன்னைப்புகழ்ந்து கொண்டாடு வார்கள்.

1153 கோணிப்பையில்போட்டு கட்டியமனிதன் மாயமாய்போகும் ஜாலம்.

ஜாலமாடும்சபையில் வேடிக்கைப்பார்ப்பதற்காக கூடியிருக்கும் திரளான ஜனங்களுக்கும் முன்பாக வேடிக்கைக்காட்டுவோன் சிகப்புத்துணியினால் தைக்கப்பட்ட ஒரு பையை யாவருக்கும் செம்மையாய் திறந்து காட்டியபிறகு அதற்குள்ள ஒரு மனுஷனைப்போட்டு அந்தப்பையின்வாய் ஓரங்களைச்சேர்த்துப் பிடித்துப்பல மாகக்கட்டி முத்திரைபோட்டுவைக்கவும் இவ்வாறு முத்திரைபோட்டபின் பையின்வாய் சரியாகக்கட்டப்பட்டு

கட்டின்மேல் சரியாய் முத்திரை விழுந்திருக்கிறதாவென்று பரிட்சைப் பார்த்துக்கொள்ளலாம் பிறகு திரைவிடப்படுகிறது இரண்டு நிமிஷத்திற்குப்பிறகு திரை உயர்த்தப்படுகிறது அப்போது மனிதன் எழுந்துநிற்கின்றான் கட்டுண்டமுத்திரையுடன் பையானது பக்கத்தில் வைக்கப்பட்டிருக்கும் அந்தபையின் கட்டை அவிழ்க்காமலும் முத்திரையை உடைக்காமலும் மனிதன் எவ்விதமாய்த் தப்பித்து வெளியே வந்தானென்று ஜனங்கள் ஆச்சரியப்பட்டு நிற்பார்கள்.

1154 மேற்கூறியவித்தையாட சூட்சுமம்.

ஜாலவித்தை செய்பவர்கள் சபையத்திற்கு தக்கபடி பலவிதமான பகடிவார்த்தைகள்கூறி ஜனங்களுடைய கவனத்தை தம்வசப்படுத்திக்கொள்ளவேண்டியது மிகவும்முக்கியம் எனெனில் அப்போதுதான் தங்களுடைய ரகசியமான சூட்சுமத்தை ஜனங்கள் கவனிக்காதபடி எளிதில் நிறைவேற்றிக்கொள்ளலாம்.

இந்த ஜாலத்தில் வேடிக்கைக்காட்டுவோன் ஒரு மனிதனைக்கொண்டு வந்து சபையோர்களுக்கு முன்னிருத்தி இவன் மகாபெரியதிருடன் பலதடவைகளில் பிடித்து கட்டிவைத்திருந்தும் ஓடிப்போய்விட்டான் இப்போது இவனை அதிகஜாக்கிரதையாய் பையிற்போட்டு கட்டிமுத்திரைவைத்துவிடுகுறேன் இனியவன் தப்பித்துக்கொள்வதற்கு எதுகாரமிராதுவென்று கூறி சிவப்புச்சைத்துணியினால் தைக்கப்பட்ட ஒருபையையாவருக்கும் காண்பித்து அவர்கள்செம்மையாய் புரட்டிப்புரட்டிப் பார்த்தபிறகு அதைவாங்கி அதற்குள் அந்தமனிதனைப்போட்டு பையின்வாயைசேர்த்து பிடிக்கிறான் அந்த மனிதன் பைக்குள்ளே நுழைவதற்கு இஷ்டமில்லாதவன்போல் பலவிதபாசாங்குகள் செய்து மருதளித்தும் கடைசியாய் பலவந்தத்தின்பேரில் அவனைப்பிடித்து உள்ளே போடுகிறான் அந்தமனிதனே தான் அடைப்பட்டிருக்கின்றப் பையைப்போலவே வேறொருபை தன் இடுப்பில் ஒருவருக்கும் தெரியாமல் மறைத்துவைத்து இருக்கின்றான் உள்ளே போனவுடனே தான்தப்பிதத்துக்கொண்டு ஓடிப்போவேனென்று திமிரி பலவிதபாசாங்குசெய்து பைக்கு அசைவுதல் கொடுக்கும்போது மெதுவாய் தன் இடுப்பிலிருக்கிறப்பையை எடுத்து அதன்வாயை ஒன்றாகசேர்த்து வேடிக்கைகாட்டுபவன்கையில் நுழைத்துவிடுகிறான் அவன் அதை உபாயமாய் தன்கையில் வாங்கிக்கொண்டு [illegible]யின்வாயை வெளியிலெடுத்துக்கொண்டு மேல்பையின் வாயை தன் கைக்குள் அடக்கிக்கொண்டு கெட்டியாய் பிடித்துக்கொள்ளுகிறான் இந்த சூட்சுமம் நடக்கும்போது இவன்வாய் சும்மாயிருக்கவில்லை ஜனங்களுடைய கவனத்தைத் தன்னுடைய தந்திரமான வார்த்தைகளால் கிரகிக்கும்படி பலவிதபகடிவார்த்தைகள் கூறுகிறான் கையை விட்டுவிட்டால் திருடன் ஓடிப்போய்விடுவானென்றுசொல்லி இரண்டுபையின் வாயையும் வெகுஜாக்கிரதையாய் பிடி

த்துகொண்டிருக்கிறான் மேலே கூறியவாறு வெளிப்பையின்வாய் அவன் கைக்குள் மறைந்தும் உள்பையின்வாய் கைக்குவெளியில் யாவருக்கும் தெரியும்படியாகவு மிருக்கிறது இப்போது ஜனங்கள் பார்க்கிறதுக்குத் தோற்றப்படும்பையின்வாய் தான்திருடன் அடைப்பட்டிருக்கின்ற பையின்வாய் என்று யாவரும் நினைத்திருக்கிறார்கள் பிறகு வித்தைக்காரன் ஜனக்கூட்டத்தில் ஒருவனை அழைத்து ஒருவருடைய மோதிரத்தை வாங்கி அதற்குள் போட்டு பலமானகயிற்றினால் கட்டும்படி செய்கின்றான் அவ்விதமாகவே கட்டி முத்திரைப்போடப்படுகின்றது கட்டும் முத்திரையும் உட்பையின் வாயில் விழுந்திருக்கிறதேயன்றி மனுஷன் அடைபட்டிருக்கும் வெளிப்பையின்வாய் கட்டு முத்திரையில்லாமல் ஜாலவித்தைக்காரன் கைக்குள் மூடப்பட்டிருக்கிறது பிறகு திரைவிடப்படுகிறது அப்போது மேற்படி திருடன் உடனே எழுந்து வெளிப்பையை எடுத்து ஓரிடத்தில் ஒளித்து வைத்துவிட்டு கட்டுடனும் முத்திரையுடனு மிருக்கிற உட்பையை எடுத்து மேஜையின்மேல் வைத்துவிட்டு பக்கத்தில் நின்றுகொண்டிருக்கிறான் இந்தவேலை வெகுசீக்கிரத்தி லாகவேண்டும். மீண்டும் திரைதிறக்கப்படவே முத்திரைபோட்ட பையை ஜனங்கள்பரிசோதனை செய்துபார்க்கிறார்கள் கட்டு கட்டினபடியும் முத்திரைபோட்டபடியு மிருக்கக் கட்டையவிழ்க்காமலும் முத்திரையை உடைக்காமலும் எவ்விதமாய் மனிதன்வெளியே வந்தானென்று ஜனங்கள் பிரமித்து நிற்பார்கள்.

1155 பைவித்தை.

கருப்பு துணியினால் ஆள் புகும்படியானதாகப் பை இரண்டு செய்து அதில் ஒருபையை மறைத்துக்கொண்டு மற்றொருபையை யாவருக்கும் செம்மையாகத்திறந்து காட்டிய பிறகு தங்களில் ஒருமனிதனை அழைத்து சபையோர்களுக்குக்காட்டி இந்தமனிதனை இந்த பையில்போட்டு கட்டி பந்தோபஸ்துசெய்து வைக்குறேன் இவன் அந்த பந்தோபஸ்துகள் அப்படியேயிருக்க இவன் பையிலிருந்து வெளியே ஓடிப்போகும் வேடிக்கையைப் பாருங்களென்று மேற்படி மனிதனை அந்தப் பயில்போட்டு வாயை பிடித்து நன்றாய் கட்டி முடிபோட்டு முத்திரைபோட்டு சபைநடுவில் வைத்துவிடவேண்டு மற்றொருபையையும் வெறும்பையாக வாயைப்பிடித்து கட்டி முடிபோட்டு முத்திரையும் போட்டு வைத்திருக்கவும் அந்த ஆளை கட்டிவைத்த பை[illegible]திரைபோட்டு தந்திரமாக மறைவுமையை பையின்மேல்விரித்து சற்றுநேரம் பொருத்து திரையைவாங்கிவிட்டு மூட்டை கட்டிவைத்தபை ஒருவர்கண்ணுக்கும் தோற்றாது கைக்குள்கட்டிய மனிதனை அவிழ்த்து வெளியே விட்டுவிட்டு அந்தபையையும்மறைத்து வேறே கட்டிவைத்திருக்கும் பையை அங்கேவைத்திருக்க யாவரும்பார்த்து இந்தபையிலிருந்தவன் பையையும் அவிழ்க்காமல் முத்திரையுங் கலையாமல் எப்படி மாயமாய் போய்விட்டான் என்று பிரமைகொள்வார்கள்

1156 ஒருவனை ஒருவர்பார்க்க தலையில்லாமுண்டமாக தோற்றும் ஜாலம்.

ஜாலமா[illegible]யில் வேடிக்கைப்பார்க்கவந்திருக்கும் ஜனங்களைநோக்கி இதோபாருங்கள் ஒருவர்முகத்தை ஒருவர் பார்க்க முண்டமாக தோற்றும் விநோதத்தைப் பாருங்களென்று தலைமண்டையோட்டில் ஏரழிஞ்சி ஏரங்கழிஞ்சியின் தயிலமும் பசுநெய் குத்தெண்ணெய் எள்ளெண்ணெய் இலுப்பெண்ணெய் வேப்பெண்ணெய் புங்கெண்ணெய் புன்னையெண்ணெய் பன்றிநெய் கழுதைநெய் இவை ஆகலானதும் ஒன்றாய்கலந்து அதை தலைமண்டை ஓட்டில் விட்டு அத்துடன் ஐங்கோலக் கருவையும் விட்டு மெல்லியதுணியை வைத்தியாகத் திரித்துப்போட்டு தீபமேற்றி மாயாசந்திமந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபிக்க அந்த தீபத்தைபார்த்து மனிதனை பார்த்தால் தலையில்லா முண்டம்போல்தோற்றும் அப்போது சபையிலுள்ளவர்கள் அவரவர்தலைகளை தடவிப்பார்த்துக்கொள்வார்கள் சிலர் பிரளுவார்கள் தீபத்தை நிறுத்திவிட எப்போதும்போல் சிறகயிருப்பதாகத்தோற்றும் ஆனால் இந்தவித்தை இரவிலாடவேண்டும்.

1157 கண்ணோய்மருந்து வித்தை.

ரசம் விராகனிடை ஒன்று காரியம் விராகனிடை இரண்டு துத்தநாகம் விராகனிடை நாலு சங்கு விராகனிடை எட்டு தாம்பிரம் அரப்பொடி விராகனிடை பதினாறு எலுமிச்சம்பழ சாற்றில் இந்த தினுசுகளை சேர்த்து கல்லவத்திலிட்டு மூனு நாள் அரைத்து மாத்திரைசெய்து சகல நேத்திரரோகங்களுக்கும் உபயோகிக்கலாம்.

1158. பிரதி எடுக்கும் இங்கிவித்தை.

அவுன்சு சாராயச்செக்கை கிஷாயத்தில் கொஞ்சம் படிகாரத்தை கலந்து கூடசிறிது சர்க்கரையும் சோத்துப்பையும் சேர்த்துக்கொள்ள பிரிதி எடுக்கும் இங்கியாகும்.

1159. பல்வலிதீர்க்கும் வித்தை.

இரண்டுகிராம் கற்பூரத்தை ஒரு அவுன்சு தேவதாரி தைலத்தில் போட்டு கரைத்து பல்வீக்கில் உபயோகிக்கவும் பல்வலி உடனே தீரும் ஆனால் அந்தமருந்தை உள்ளுக்கு விழுங்கக்கூடாது.

1160 மூக்கில் உதிரம்விழுதலை நிறுத்தும்வித்தை.

வாயில் கொஞ்சம் காகிதத்தையாகிலும் மிட்டாயையாகிலும் போட்டுக்கொண்டு செவ்வையாய்த் தாடைகள் அசையும்படி மெல்ல உதிரம் விழுதல் நின்றுவிடும்.

1161. கிருத்திரிமப்பொன் செய்யும் வித்தை.

கிருத்திரிமப்பொன் செய்யவேண்டில் பின்வரும் வஸ்துக்கள் தேவை அதாவது சுத்திசெய்த தாம்பிரம் 50 - விராகனிடைக்கு துத்திநாகம் ஏழரை விராகனிடை மக்நீஷியா விராகனிடை நவாசாரம் ஒன்னே முக்கால் விராகனிடை முக்காலே அரிக்கால்வீசை காய்ந்தாரின சுண்ணம்பு டார்ட்டர் என்னும் சாராயப் பிப்பாவில் ஒட்டிக்கொண்டிருக்கும் வெண்பிசின் நாலரைவீசை முதலில் தாம்பிரம்மூசியில் உருக்கப்படுகிறது துத்திநாகந்தவிர மற்றயதினுசுகள் சேர்க்கப்படவேண்டியது பிறகுதுத்திநாகம் பொடிசெய்யப்பட்டு கலக்கப்படவேண்டியது இவைஎல்லாம் அரைமணிநேரம் உருகும்பட்சத்தில் தண்ணீராகிவிடும் பிறகு எடுத்து ஊற்றி கட்டியாக்கிக்,கொள்ளலாம் இப்பொன் வேலைக்கு மிக உபையோகமாய் இருக்கிறது அனேக பொன்னகைகள் இவ்விதமாய் செயய்படுகின்றன.

1162. ஜேல்காத்துகிறியா மெழுகுவத்தி செய்யும் வித்தை.

ஓர் சணல் துணியில் பொடித்த உப்பை பறப்பி மெழுகுவர்த்திக்கு சுற்றிவிட்டு தீபம் எற்ற மேல்காற்றுக்கும் அவியாதிருக்கும்.

1163. பொன்னிங்கிசெய்யும் வித்தை.

இது அச்சாபீஸ்காரருக்கு மிகஉபையோகம் இதை செய்து மிகலாபமடையலாம் வெள்ளிகோந்தை மைபோல் பொடிசெய்து ஓர் பீங்கான் உரலில் வைத்துக்கொள்க அத்துடன் காரமான பிராந்தியைக் கலந்து மிக நீராய் இருக்கும்படி வைத்துக்கொள்க கொஞ்சம்தங்க சன்னத்தை இந்தப்பிசின் ஜலத்திற்போட்டு விரலால் செவ்வையாய்க் கரைக்கவும் தங்கம் செவ்வையாய் கரையும்படி இராமுழுதும் வைக்கவும் கலப்புகுழம்பாய் விடும்பட்சத்தில் மஞ்சள் கலந்த கோந்து ஜலத்தை கொஞ்சம்சேர்க்கவும் வெருஜலமாய் எழுதும் பிறகு இந்ததண்ணியால் எழுதி எழுத்துகள் உலர்ந்தபின்னர் மலர்ந்த பேனாநுனியால் மெருகு கொடுக்கவும் விநோதமாகவிருக்கும்.

1164. எஃகுமேல்கிலிட்டு கொடுக்கும் வித்தை.

எஃகுசாமானை செவ்வையாய் துடைத்து மெருகுகொடுக்கவும் நைட்ரோ முரியடிக் திராவகத்தில் பொன்னைப்போட்டு தண்ணியாக்கிக் கொள்ளவும் எஃகுசாமானை இந்த கலப்பில்தோய்த்து உடனே பச்சஜலத்தில் தோய்க்க பொன்மயமாகிவிடும் பிறகு அதற்கு மெருகுகொடுத்தல் ஆவசியகம்.

1165. மெழுகுவர்த்திசெய்யும் வித்தை.

ஆமோடுகளின் கொழுப்பை ஒருபாத்திரத்தில் போட்டு அடுப்பின்மேல் ஏற்றி காச்சி நீராகவைத்துக்கொண்டு மெல்லியதாய் பின்னப்பட்ட

நூல்வைத்திரிபத்தோய்த்து உலரவைத்து உலர்ந்தபின்னர் மறுபடியும் தோய்த்து வேண்டிய பரிமாணமாக்கிக்கொள்ள வேண்டியது ஜாஸ்தியாய்செய்யவேண்டுமாயின் சிறியகுழாய்களில் இந்தக் கொழுப்பை பூர்த்தி வர்த்திசெய்துக்கொள்ளவது வழக்கம்.

1166. கில்டுகொடுக்கும் வித்தை.

பொத்தான்முதலிய சிறியவஸ்துக்களுக்கு கிலிட்டுபோட வேணுமாயின் பொன்னை பாதரசத்துடன் கலக்கவேண்டும் கிலிட்டு கொடுக்கவேண்டியதை அக்கினிதிராவகத்தால் சுத்திசெய்து ஒருபிரஷ்ஷினால் பொன்பாதரசகலப்பைப் பூசவேண்டியது பிறகு அதை சிறியதணலில் காட்டபாதரசம் பறந்தோடிபோய் பொன்மட்டிற்கும் நிற்கும் பிறகு அதற்குமெருகு கொடுக்கவேண்டியது.

1167. கண்ணாடி செய்யும்வித்தை.

கடல் மணலை செவ்வையாய் சுத்திசெய்து உலர்த்திக்கொள்ள வேண்டியது கார்பொனேட் ஆப்சோடா மணல் இவ்விரண்டையும் இரும்புச்சட்டிகளில் போட்டு எறித்து செவ்வையாய் காய்கிறசமையத்தில் நாகரேணுவை (ஆக்சைட் ஆப்லெட்) கூடப்போட்டால் சீக்கிரம் உருகும் கண்ணாடி துல்லியமாயிருக்க மாங்கனீஸ் என்பதையும் பாஷாணத்தையும் சேர்க்கவேண்டியது இனுசுகள் பொன்னிறமாய் உருகியப்பின்னர் வேலையாட்கள் ஊதுகோல் நுனியில் சிறிது சிறிது கண்ணாடிக்குழம்பை எடுத்து இஷ்டமானபாத்திரங்களை செய்கிறார்கள்.

1168. சப்புசெய்யும் வித்தை.

அரை அவுன்சு தேங்காய் எண்ணெயை ஒரு பீங்கான் கிண்ணத்தில் விட்டு கொஞ்சம் சாஸ்டிக்சோடா என்னும் உப்பையும் உஷ்ணஜலமும் விட்டு கொதிக்கவும் இப்படிச்செய்ய எண்ணெய் மறைந்துபோய்விடும் கொஞ்சநேரம் காச்சியபின்னர் கொஞ்சம் உப்பைப்போட சோப்பு வெளிப்படும் பிறகு அச்சுகளில்வார்த்துக் கொள்ளவேண்டியது அச்சுகளுக்குவாசனைதலத்தைதடவி இஷ்டமான வாசனையை யாச்செய்யலாம்.

1169. அதிசாரபேதியை நிருத்தும்வித்தை.

ஒரு பலம் சுக்கை சன்னமாய் பொடிசெய்து எழுதரம்வஸ்திரகாயஞ்செய்து அரை பலம் வெள்ளைச் சக்கரையுடன் கலந்து சாப்பிட அதிசாரபேதி நிற்கும்.

1170 வேறுமுறை பல்வலி தீர்க்கும் வித்தை.

கருவேலன் காயையும் நாயுருவிசமூலமும் சுட்டு கரியாக்கி எருக்கன்பாலில் உப்புடன்கலந்து புடம்போட்டு பஸ்மம் செய்துக்கொண்டு பல்லீறில்தேய்க்க வலி, கிருமி முதலியவை நிவாரணமாய்விடும்.

1171 வாந்தி பேதி நிவாரணமாத்திரை செய்யும்வித்தை.

மிளகு பெருங்காயம் அபின் இவை வகை ஒன்றுக்கு காலேவீசம்பலம் எடுத்து செவ்வையாய் கல்வத்தில் அரைத்து 12-மாத்திரை செய்து வைத்திருந்து அந்த சமயத்தில் அரைமணிக் கொருதரம் கொடுக்க நிற்கும் ஏழுமுதல் பதினாலு வயதுள்ளவர்க்கு அரைமாத்திரை கொடுக்கவும் வேண்டும்.

1172 நன்னாறி சர்பத்து செய்யும்வித்தை.

பனிரண்டரை பலம் நன்னாறிவேரை யிடித்து ஒன்னரைபடி வெந்நீரில் 6-மணிநேரம் ஊரவைத்து வடிக்கட்டி முக்கால்படியாய் வற்றவைத்து அதில் ஒன்றரை பலம் சீனிசக்கரைக்கலந்து பிசின் பக்குவத்தில் பாகுசெய்துக்கொண்டு 2-ரூபாயிடை சர்பத்தில் நாலு ரூபாயிடை தண்ணீரைக்கலந்து சாப்பிட சகல மேககாரகங்களும் உஷ்ணமும் நிவாரணமாகும்.

1173 ஓமத்திராவகம் செய்யும்வித்தை.

முருங்கைப்பூ பலம் பத்து பசம்பால் படி அரை இரண்டும் கலந்து அடுப்பிலேற்றி எரித்து முருங்கைப்பூ குழையவெந்த பிறகு பிசைந்து பிழிந்துச் சக்கையைநீக்கி ஜாதிக்காய் ஜாபத்திரி லவங்கம் லவங்கப்பட்டை குரோசாணி ஓமம் இதுகளுக்குப் பலம் ஒன்றாக இவைகளை சூரணித்து வடிக்கட்டிச் சீனாகற்கண்டு பலம் 15 மேற்படி பாலில்சேர்த்துப் பாகுபதத்தில் சூரணத்தைக்கொட்டிப் பசுநெய் பலம் 5 விட்டு லேகிய பதமாய்கிளறி ஆரவிட்டு தேன் பலம் ஒன்னேகால் விட்டு பிசைந்து அந்தி சந்தி இரண்டுவேளையும் கொட்டைப்பாக்களவு சாப்பிடவும் இச்சாபத்தியம்.

1174. ஸ்ரீகள் தேகபுஷ்டிக்கு புட்டுசெய்யும் வித்தை.

உளுந்துமாவுபடி கால் வெள்ளைவெங்காயம் பலம் பத்து பசுநெய் பலம் ஏழரை பனவெட்டு பலம் ரெண்டரை சீரகம்பலம் 1-பாங்கிசக்கை பலம் 1-ஜாதிக்காய் பலம் கால் இவைகளில் வெங்காயத்தைப் பொடியாய்த்திருத்தி உளுந்து மாவுடன்சேர்த்து ஏகேட்டி பாலுந்தண்ணீரும் கலந்து அடியானையில் வைத்து புட்டவித்து உதிர்த்து கடைசரக்குகளை வறுத்து வடிகட்டி பாலில்சுத்தித்து பிழிந்துலர்த்தி ஆவி நெய்விட்டு பனவெட்டுசேர்த்து பிசைந்து இரண்டுவேளையும் எலுமிச்சங்காயளவு பிரஸவிடையானப்பெண்களுக்கு புட்டுக்குப்பதிலாய் 3 7-நாள்கொடுத்துவந்தால் உதிரக்கட்டம் நீங்கி இடுப்புக்குப்பலம் உண்டாய் தேகவலிவேறும் ஸ்ரீகளுக்குள்ள ரத்தவோட்டம் யாவும் நிவர்த்தியாகும் சுரோணிதம் சுத்தியாகும் யோகாப்பியாசிகள் இதை உபயோகித்தால் வாசிசரியாகநிற்கும் இச்சாபத்தியமாக யிருக்கவேண்டும்.

1175. மூலக்கிராணி நிவாரணவித்தை.

பசும்பால்படி கால் கால்பாகம் ஜலம் விட்டுக்காச்சும்போது அசுவகெந்தி பறங்கிச்சக்கை அழிஞ்சிவித்து நீர்முள்ளிவித்து [illegible] வகைக்கு பலம் கால் இவைகளைப் பால்விட்டு அரைத்து மேற்படிபாலில் குழப்பி கண்டக்காச்சி சர்க்கரைபலம் இரண்டரைப்போட்டு இறக்கி ஆறவைத்துக்கொண்டு ஒரு நாளைக்காயிந்த மருந்தை காலை சாயந்திரம் ஆறுவேளை சாப்பிட மூலக்கிராணி அஸ்திசுரம் தேககாந்தல் அக்ஷாரம் பித்தம் சயம்தீரும் இச்சாபத்தியம்.

1176. சுகபேதிகுழம்பு செய்யும் வித்தை.

பேரீச்சம்பழம் பலம் அரை கொடிமுந்திரிபழம் பலம் அரை இந்துப்புபலம் அரை சுத்திசெய்தவாளம் பலம் அரை பூரம் விராகனிடை கால் லிங்கம் விராகனிடை கால் தேன்விட்டரைத்து மாட்டுச்சிமிழில் வைத்துக்கொள்ளவும் குன்றுமணி பிரமாணம் சிசுமுதல் விருத்தர்களுக்கு ஆள் பலமறிந்து கொடுக்கவும் இச்சாபத்தியம்.

1177. விநோதகண் தயிலம்செய்யும்வித்தை.

செந்தாழைப்பூ பலம்-1 ரெட்டை நந்தியாவட்டைப்பூ பலம்-4 புளிப்புமாதளம்பூ பலம்-4 செந்தாமரைப்பூ பலம்-9 இவைகளை இடித்து ரசம்பிழிந்துக்கொண்டு அந்தரசத்துடன் சுட்டல் வெள்ளெண்ணெய் பலம் இரண்டரை விட்டு இளம்பதமாய் காச்சி வடித் தயிலத்தில் பூந்தேன் பலம் லவங்கப்பூ நீக்கியது விராகனிடை-1 வெள்ளமிளகு விராகனிடை அரை சீனாகற்கண்டு விராகனிடை-1 இவைகளை மேற்படி தயிலத்தால் மைபோல் அரைத்து சேர்த்து ஒரு குப்பியிலடைக்கவும் ருத்திரகாயத்திரி ஆயிரத்தெட்டு உருஜெபித்து தங்களாலியன்ற அன்னதானஞ்செய்து சாபங்கள் நீக்கிக் கண்ணில் காலைமாலை இட்ட கண்ரோகங்கள் தொண்ணூற்றாறும் போம்.

1178. ஸ்தானத்திற்கு தயிலம்செய்யும் வித்தை.

நல்லெண்ணெய்படி-2 பசும்பால்படி-2 இவை இரண்டும் ஒருபாத்திரத்தில் விட்டு மிளகுபடி-1 நன்றாகப் பாலிலரைத்து மேற்படி பாலில்கலக்கி மஞ்சள்பலம்-1 அதிமதுரம் பலம் அரை தேவதாரம் பலம் அரை செஞ்சந்தனம்பலம் அரை கோஷ்டம் பலம் அரை சீரகம் பலம் அரை கருஞ்சீரகம் பலம் அரை கிராம்பு பலம் கால் அரிசிதிப்பிலி பலம் கால் இலவங்கப்பட்டைபலம் அரை இவைகளை பசும்பாலால் நெகிழவரைத்து மேற்படி எண்ணெயில் கலக்கி அடுப்பேற்றிச் சிறுதீயாகக்காச்சி பக்குவமணம் உண்டாகும்போது வடித்து அதில் புனுகுசட்டம் பலம்-1 தயிலம் இறைக்கியதையும் சேர்த்து வைத்துக்கொண்டு ஸ்நானஞ்செய்ய கண்டத்திற்கு

மேற்பட்டசகல வியாதிகளும் தீரும் தலைநோய் கண்ணெரிப்பு முதலியவை கள் தேய்க்கமாறும் இச்சாபத்தியம்.

1179. சூரியமகல காரச்செய்யும் வித்தை.

உத்தாமணியிலை குப்பைமேனி சங்கிலை ஆடாதோடை ஆற்று முள்ளியிலை செம்முள்ளியிலை தாளி இலை வகைக்கு ஒருபிடி இடித்துப் பிட்டவைத் துப்பிழிந்துக்கொண்டு காசிடை தேன்விட்டு முத்துபவழபற்பம் சேர்த்து க்கொடுக்கவும் இச்சாபத்தியம்.

1180. அரையாப்புகட்டியை போக்கும்வித்தை.

சவுக்காரம் சித்தண்டவேர்களை நீர்விட்டு அரைத்துப் பூசக்கரைய் கரையாவிட்டால் அதன்மேல் புளியம் சோறு செங்கட்டையும் சேர்த்து அடைதட்டி வைத்துக்கட்டி மூன்றுநாள் கட்டஅடக்கவும் இதுபோல் புளியும் காய்பலம் வெள்ளைபாஷாணமும் சேர்த்தபின் கட்டவும் கட்டி உடையும் பாதை தீரும்.

1181 தோந்தகாக் கியாழவித்தை.

சிறுதேக்கு பற்பாடகம் முத்தக்காசு சிந்திற்கொடி நன்னாரி சிறுகாஞ்சொறி தேவதாரம் கோஷ்டம் பேய்ப்புடல் சுக்கு இவைகள் சரியிடை இடித்து தண்ணீரில் எட்டொன்றாய்க் காய்ச்சி இரண்டு மூன்று பொழுதினம் கட்டமொத்தரையில் சாப்பிடத்தீரும் வியாதி வாதபித்தம் அஸ்திசுரம் இவைகள்தீரும் பத்தியம் புளிப்பு தவிர்க்கவும்.

1182. திராவகம் செய்யும் வித்தை.

பொட்டிலுப்பும் படிகாரமும் சரியிடைசேர்த்து ஒரு குடுவையில்விட்டு மேலே பாலைவைத்துத் திராவகமிறக்கி அந்த திராவகத்தில் தலைநோய் கழுத்துகரம்பு இரிவு முதலியவைகளுக்கு ஒரு துளிதடவ குணமாம் பாலைரசத்தை இத்திராவகம்விட்டு இரண்டுஜாமம் அரைத்து சிலைமண்செய்து மணற்குள்வைத்து நாலுஜாமம் எரிக்கச் செந்தூரமாம்.

1183. வெள்ளியை பஸ்பம்செய்யும் வித்தை.

சரிகைவெள்ளி பலம் 1. உருக்கி ஆர்விட்டு பாலரசம் விராகனிடை 5 விட்டுக் கலக்கியபின் எடுத்து துருசு விராகனிடை 2-க்கு சிறுநீர்விட்டரைத்து மேற்படிகளங்குக்கு கவசமிட்டு காய்ந்தபிறகு மகிழம்பூ மூலை சாறால் அரைத்து கவசஞ்செய்ததற்கு வெள்ளருகு அரைத்து கவசஞ்செய்து காயவைத்து மூன்று சிலைமண்செய்து 15-எருவில் புடமிடப்பஸ்பமாகும். பணவிடை நெய்யில் வேளைக்கொண்டில் அனுபானம் மேகம் வெட்டைகள் நீங்கும் தாதுபுஷ்டியாகி தேகம் அழகுபெற்று மேனிகொடுக்கும் இச்சாபத்தியம்.

1184 வேறுமுறை வெள்ளி பஸ்பமாகும் வித்தை.

காலுரூபாய் ஒன்றையெடுத்து ஈஞ்சை வாழமரத்தடியில் மூன்றுநாள் சொருகிவைத்து எடுத்துக் கொள்ளவேண்டும் ஜாலமரடும் சபையில் வேறொரு காலுரூபாயை எடுத்து அனைவருக்குங்காட்டி இந்த காலுரூபாயை கல்வத்திற்போட்டு அரைத்து பஸ்பமாக்கிக்காட்டும் விநோதத்தைப் பாருங்களென்று அந்த காலுரூபாயை கைபிரட்டினால் தந்திரமாக மறைத்து மேற்படி ரூபாயைப்போட்டு அரைக்க பஸ்பமாகிவிடும் அனைவரும் ஆச்சரியப்படுவார்கள்.

1185 ஆக்கிராண தூள்செய்யும் வித்தை.

சன்னராஷ்டகமூலிகை குகடற்பாலை சுக்கு,வசம்பு, அதிமதுரம் இவைகளை இடித்து வஸ்திர காயஞ்செய்து அந்தத்தூளை ஆக்கிராணிக்கப் பதினெட்டு ஜன்னிரோகங்கள் நீங்கும்.

1186. பால்கடுகு செய்யும் வித்தை.

பால்படி-8 அரை ஆறைநிட்டம் சுண்டக்காச்சி அதில் முருங்கைப்பூ பலம் 4. நன்னாரிவேர் பலம் 2. அதுஷாம்பழம் பலம் 4. மஞ்சாநெரிஞ்சி வேர் பலம் 4. நிலப்பனங்கிழங்கு பலம் 4. தண்ணீர் விட்டான் கிழங்கு பலம் 4. ஏலரிசி பலம் 2 அதிமதுரம் பலம் 4. இவைகளை பாலால் அரைத்து மேற்படி பாலில் கலக்கி முக்கால்பாகம் சுண்டின பக்குவத்தில் சர்க்கரை வீசை ஒன்று கொட்டி பாகுவரும் சமையத்தில் அமிர்த சக்கரை பலம் 20. கொட்டி நன்றாக ஈரம் வற்றினவுடன் நெய்பலம் 30-விட்டுக் கிண்டி ஆறினவுடன் தேனுஞ்சேர்த்து கடுகு பதத்திலிறக்கவும் இதைப் புன்னைக்காயளவு காலைமாலை இருவேளையும் சாப்பிட்டுவர மேகரோகங்கள் நீரிழிவு முதலிய மூத்திரரோகங்கள் நீங்கி வீரியவிருத்தி யதிகமாகும் இச்சாபத்தியம்.

1187 பீப்பாய் வெடிக்கும் ஜாலம்.

ஒரு பீப்பாயில் நிறைய தண்ணீர்விட்டு நன்றாக அடைத்து சற்று நீளமான சிறியகுழலை அதில் முடிக்கொபின் அந்தக்குழலில் ஒருபடிஜலம் விட்டால் உடனே அந்தப்பீப்பாய் வெடித்துப்போகும் அனைவரும் வியப்பார்கள்.

1188 மனிதனை தூக்கும் ஜாலம்.

சுமார் 4-அடி குறுக்களவுள்ள இரண்டு வட்டமான மரப்பலகைகளை எடுத்து ஒன்றுக்கொன்று சுமார் இரண்டடி தூரமாய் இருக்கத்தக்கதாக தோலால் சுற்றிக் கச்சைபோல் மாட்டி துருத்திபோல் தண்ணீரைச் சிந்தாமல் காக்கும்படி பக்குவம்பண்ணி பக்கத்திலே ஒரு குழாய் புகத்தக்கதாகவும் வகைபண்ணி துருத்தியின்மேற் பலகையில் ஒருவனை நிற்கவைத்து

ய்து குழலை கிரைவைத்து அதற்குள்ளாகத் தண்ணீரை விட்டால் தண்ணீர் நிரம்பநிரம்ப மனிதனையும் மேற்பலகையோடு தூக்கும் பார்ப்போர்களுக்கும் ஆச்சரியமாயிருக்கும்.

1189 புட்டியின் விநோத ஜாலம்.

ஒரு வெறும்புட்டியை எடுத்து கார்க்கினால் அடைத்து வாயில் கயறு கட்டி கிணற்றிலாவது குளத்திலாவது ஆழத்தில் போகும்படிவிட்டு சற்று கோத்திற்குப்பின்பு எடுத்துப்பார்த்தால் கார்க்குபுட்டிக்குள் தள்ளப்பட்டு புட்டியில் தண்ணீர் நிறையவிருக்கும் ஆச்சரியப் படுவார்கள்.

1190 ஈயத்தகடு ஜலத்தில் மிதக்கும் ஜாலம்.

ஒரு துண்டு ஈயத்தைத் தப்பையாகவும் வட்டமாகவும் தட்டி ஒரு குழையின் வாய்புறத்தில் ஜலமுள்ளே நுழைய எதுவுமில்லாதபடி பிடித்துத் தண்ணீருக்குள் கொஞ்சம் ஆழத்திற்சேர்த்த உடனே ஈயத்தைபிடித்திருந்த கையை நீக்கினால் ஈயத்தகடு கீழேவிழுந்து போகாமல் குழலோடு ஒட்டினதுபோலிருக்கும் ஆனால் வெறும் ஈயத்தகட்டை மாத்திரம் ஜலத்தில் விட்டால் உடனே அமிழ்ந்துபோகும்.

1191 ப. எழுத்தின் விநோத ஜாலம்.

ப. என்னும் எழுத்துப்போல் ஒரு குழையைவளைத்து நிமிர்த்துப்பிடித்து ஒருபக்கம்வாயில் ஜலம்விட்டால் இருபக்கத்திலும் ஜலம் ஒரேமட்டமாய் நிற்கும். ஆனால் ஒருபக்கத்தில் ஜலமும் மற்றொருபக்கத்தில் எண்ணெயும் விட்டால் எண்ணெய் உயரமாயும் தண்ணீர் அதனிலும் தாழுவாயுமிருக்கும் ஆச்சரியப் படுவார்கள்.

1192 ஐங்கூட்டு தயிலம் செய்யும் வித்தை.

வேப்பெண்ணெய் புங்கெண்ணெய் எள்ளெண்ணெய் முத்தெண்ணெய் புன்னையெண்ணெய் இவைகளை சமமாய்கூட்டி காச்சி ஸ்நானம் செய்துவர வாதம் தனுர்வாதம் மகாவாதம் சன்னிசுரம் தோஷம் நிவர்த்தியாம்.

1193 வீரியவிர்த்தி செய்துக்கொள்ளும் வித்தை.

சந்தனத்தூள் பலம் 2. சுக்கு பலம் 2. காசினிவிரை பலம் 1. சீரகம் பலம் 1. இவைகளை தூள்செய்துவிட்டு அரைத்து பில்லை பில்லையாகச்செய்து வர்த்தி வேளைக்கு ஒரு அவுன்ஸ்தம் கொடுத்து உடனே பன்னீராகிலும் நல்ல ஜலமாகிலும் ஒரு ரூபாயிடை சாப்பிடவேண்டும்.

1194 இந்திரியத்தை கட்டிக்கொள்ளும் வித்தை.

நருவிலியின் பிஞ்சு கருவேலன் பிஞ்சு காட்டுப் பிரண்டையிலை இவைகளை தனித்தனியாய் நிழலுலர்த்தி இடித்துச் சூரணமாகச்செய்து

அதற்குச் சரியிடையாய் சக்கரைக்கூட்டி இராவில்போஜனம் செய்தபிறகு திருகடிகை பிரமாணம் புசித்து ஆழாக்கு பசும்பால் சாப்பிடவும் இப்படி பதினைந்துநாள் பொசிக்க நீத்திருந்த இந்திரியங்காட்டும் தேகம் காந்தியாகும்.

1195 பொன்னாங் கண்ணியின் விநோதம்.

காலையில் எழுந்து பொன்னாங்கண்ணி இலைகளைப்பிடுங்கி வாய் கொண்டமட்டும் மென்று தின்னவும் இப்படி நாற்பது நாளைக்குத்தின்னுவர வீரிய விருத்தியை யுண்டாக்கும்.

1196 விந்து கலிதமாகாதிருக்கச்செய்யும் வித்தை.

தாழம்பூவின் உள்ளிருக்கும் விழுதை எடுத்து கோழிமுட்டை வெள்ளைக்கருவாலே அரைத்து தன்குறிக்கு பூசிப்புணர விந்து சீக்கிரத்தில் கலிதமாகாது.

1197 பீஜம் கெட்டிபட செய்யும் வித்தை.

எட்டிக்கொட்டை, அமுக்கராங்கிழங்கு, சம்பு சமனிடையாக எடுத்து பசும்பால் விட்டரைத்து லிங்கரம்புசித்து ஒருவாரம் தேய்த்துவர கெட்டிப்படும் மிருதுவிலிவு உண்டாகும்.

1198 வேறுமுறை வீரியவிர்த்தி செய்துக்கொள்ளும் வித்தை.

ஜாதிக்காய், அபினி, காசுக்கட்டி வங்கம் இவைகள் வகைக்கு 1½-விராகனிடையாக எடுத்து அரைத்து ஒரு ஊர்க்குருவியின் வயற்றைக்கீறி குடல் முதலான அசுத்தங்களை நீக்கி அதினுள்வைத்து நூலினால்தைத்து அதற்குப் போதுமான நெய்யினால் போட்டுப் பொரித்தெடுத்து எலும்பு போக்கி மெழுகுபோல் அரைத்து வைத்துக்கொண்டு கெச்சக்காய் பிரமாணம் சாப்பிட்டு உடனே ஆழாக்குப் பசும்பால் சாப்பிடவும் இப்படி நாற்பதுநாள் சாப்பிட வீரியவிருத்தியும் தேகவலிவும் உண்டாகும்.

1199 வீரியவிர்த்திக்கு லேக்கியம் செய்யும் வித்தை.

ஜாதிக்காய், சாரப்பருப்பு, பாதிரிபருப்பு காமப்பூ, மாவுசக்கு, தேத்தான்கொட்டை, முருங்கைப்பிசின், முருங்கைப்பூ, வகைக்குஇரண்டரை விராகனிடையாக எடுத்து ஒரு கோழிமுட்டை வெள்ளைக் கருவினால் மெழுகுபோல் அரைத்து ஒருபலம் நெய்யில்போட்டு அரைபலம் சக்கரைக்கூட்டி அடுப்பேற்றி லேகியம்போல் கிளறி வைத்துக்கொண்டு கெச்சக்காய் பிரமாணம் சாப்பிட வீரியவிருத்தியாகும்.

1200. இருதயவலிவுண்டாகும் வித்தை.

சிறுலவங்கப்பட்டை கெப்புநிறமான காவிசந்தனத்தூள் வகைக்கு விராகனிடை-1 தூள்செய்து வெள்ளைசர்க்கரை நாலுவிராகனிடையில் கூட்டி சாப்பிட இருதயவலிவுதரும்.

1201. வேறுமுறை இருதயவலிவுண்டாக்கும் வித்தை.

இலவங் கோந்து சுக்கு ஏலரிசி சோம்பு அதிமதூரம் சந்தனம் வில்வசதை ரோஜாப்பு வகைக்கு தொலாம்-1 தனியாபலம்-3 சீனைற்கண்டு பலம்-2 இவைகளை சூரணஞ்செய்து முன்பாகசற்கண்டை அடுப்பிலேற்றி ஜலம்கொஞ்சம்விட்டு பாகுசெய்து அதிற் சூரணங்களை கெட்டிபாகமாய்க் கிளறி வேளைக்கு தோலாவீதம் சாப்பிடவும் இருதயவலிவுதரும்.

1202. சரீரம் நன்றாகச்செய்யும் வித்தை.

சுக்கு கடுக்கா திப்பிலி வாலுளுவையரிசி சமனாகச்சேர்த்து தேனில் அரைத்து அதளங்காய்ப்பிரமாணம் சாப்பிட்டு உடனே பால் ஆழாக்குச் சாப்பிடவும் சரீரம் நன்றாகும்.

1203. மதனசஞ்சீவிநெய் செய்யும்வித்தை.

திருகடுகு இலாம்பு வால்மிளகு தக்கோலம் கோக்ஷர மூலி சிறுநாகப்புபத்திரி சீரகம் அபினி இவைகளை வகைக்கு களஞ்சி இருத்தெடுத்து கல்வத்திலிட்டு ஆவின்பால் விட்டு அரைத்து முக்காற்படி பசுநெய்யில் வேகவைத்து நெய்யைவடிகட்டிக்கொண்டு ஒருகாண்டி நெய்சாப்பிட்டு பாலும் சாதமும் பொசித்து சுகித்தால் இன்பத்தைக் கொடுக்கும் சந்தோஷத்தை உண்டாக்கும் ஆனால் புளிப்புதள்ளி விடவேண்டும்.

1204. திரைமுகக்குளிகைசெய்யும்வித்தை.

பச்சைகற்பூரம் லவங்கப்பட்டை ஜாதிக்காய்வகைக்கு விராகனிடை 2 இதற்குச்சரியிடை வாளம்சேர்த்து குமரிச்சார்விட்டரைத்து உளுந்துப்பிரமாணம் மாத்திரைசெய்து நிழலுலர்த்தி சீசாவில்வைத்துக் கொள்ளவும் அநுபானம் சக்கரையில் ஒருமாத்திரைகொடுக்க பேதியாகும் சுரம் நிற்கும் இச்சாபத்தியம்.

1205. பத்திரகாளிவித்தை.

ஜாலமாடுமிடத்தில் கீழேகூறியபடி மேஜையில் ஒருமாத்தலைசெய்து வைத்து அதற்குச்சமீபமாய் படத்தில் மெத்தைப்படியைப் போன்று உயரமாய்வைத்து மேஜையின் அறையில் சுவரைப்போல் காட்டியிருக்கவேண்டும் மேலேயிருந்துகொண்டிருக்கப்பட்ட தகரக்குழையானது அந்தத்தலைக்குள் நுழைந்து அத்தலையின் உட்புறத்திலிருந்து இரண்டு பிரிவாய் பிறந்து ஒருபிரிவுகாதின்வழியாகவும் மறுபிரிவு வாயின்வழியாகவும் செல்லும்படி அமைக்கவேண்டும் இவ்வகையான சூட்சமங்கள் அமைத்து வைத்தபின் அந்ததலையின் காதில் பேசுகிறசப்தம் மேலேநோக்கிச்செல்லும் குழலின்மறுமுனையில் காதைவைத்து உற்றுக் கேட்பவர்களுக்கு செம்மையாய் கேட்கும் அப்போது மேலேயிருக்கப்பட்ட மனுஷன் அந்த சங்கதியைக் கிரகித்துக்கொண்டு அக்குழலிலேயே அதற்குப்பதில் சொல்லவேண்டும் அது அந்தபொம்மை பேசுகிறதுபோல் கேட்கும் அதாவது அந்தத்தலைவாயினால் பதிலளிப்பதுபோல் தோற்றும் தலைக்குள்ளாகக் குழாய் இரண்டு பிரிவாய் போகின்றதல்லவா அதில் காதின்பக்கமாய் செல்லுங்குழலின் துவாரம் நெருக்கமாகவும் வாய்ப்பக்கமாக செல்லுங்குழலின் துவாரம் பெரிதாகவும் இருக்கவேண்டும் புராதனகாலங்களில் இம்மாதிரியான தலையினால் நடந்த வைபவங்களைப்பற்றி ஆச்சரியப்படுவார்கள்.

1206. வேறுமுறை தேள்வித்தை.

இந்திரஜாலக்கருவை விரலில் தொட்டுசக்காதேவி மந்திரத்தை ஆயிரத்தெட்டு உருஜெபித்து வேப்பிலையை உருவிக் கீழேபோட தேள் உண்டாகும்.

1207. வேறுமுறை குளவியாகும் வித்தை.

இந்திரஜாலக்கருவை விரலில்தொட்டு வாலைமந்திரத்தை ஆயிரத்தெட்டுஜெபித்து புளியன்இலையை உருவிப்போட குளவி உண்டாகும்.

1208. வேறுமுறை நண்டுதேரக்காயாகும் ஜாலம்.

இந்திரஜாலக்கருவை விரலில்தொட்டு குமரி மந்திரத்தை ஆயிரத்தெட்டுஜெபித்து கருநொச்சியிலையை உருவிப்போட நண்டுதேரக்காயாகும்

1209. வேறுமுறை பூரானாகும் ஜாலம்.

இந்திரஜாலக்கருவை விரலில்தொட்டு சக்காதேவிமந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து கருவேலன் யிலையை உருவிப்போட பூரானாகும்.

1219. வேறுமுறை செய்யானாகும் ஜாலம்.

இந்திரஜாலக்கருவைத் தொட்டு கௌளிமந்திரத்தைஜெபித்து அகத்தியிலையை உருவிப்போட செய்யானாகும்.

1211. கட்டெறும்பாகும் ஜாலம்.

இந்திரஜாலக்கருவை விரலில் தொட்டு சிப்பாவாமந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து மணலை அள்ளிப்போட கட்டெறும்பாகும்.

1212. சித்தெரும்பாகும்ஜாலம்.

இந்திரஜாலக்கருவை விரலில்தொட்டு வாராகிமந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து மண்ணை அள்ளிப்போட சித்தெரும்பாகும்.

1213. வண்டாகும் ஜாலம்.

இந்திரஜாலக்கருவை விரலில்தொட்டு மாடன்மந்திரத்தை ஆயிரத்தெட்டுஜெபித்து முருங்கையிலையை உருவிப்போட வண்டாகும்.

1214. கிளியாகும் ஜாலம்.

இந்திரஜாலக்கருவை விரலில் தொட்டுக்கொண்டு உருத்திராதேவி மந்திரத்தை ஜெபித்து கோவையிலையை உருவிப்போட கிளிகளாகும்.

1215. மைனாவாகும் ஜாலம்.

இந்திரஜாலக்கருவை விரலில்தொட்டு சாமளாதேவிமந்திரத்தைஜெபித்து வெற்றிலையை உருவிப்போட மைனாவாகும்.

1216. புறாவாகும் ஜாலம்.

இந்திரஜாலக்கருவை விரலில்தொட்டு பத்திரகாளி மந்திரத்தை ஜெபித்து நுணாயிலையை உருவிப்போட புறாவாகும்.

1217. சிட்டுக்குருவியாகும் ஜாலம்.

இந்திரஜாலக்கருவை விரலில்தொட்டு ஜாலக்காளை தியானித்து சீமை அகத்தியிலையை உருவிப்போட சிட்டுக்குருவியாகும்.

1218. காடையாகும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் பத்து இருபது கீரிப்பிள்ளை கூட்டங்களை கொண்டுவைத்து நிருத்தி அனைவருக்குங்காட்டி இந்த கீரிப்பிள்ளைகளை மூர்ச்சை அடையும்படி செய்குறேன் பாருங்களென்று ஜெகஜாலப்பொடியை எடுத்து காத்துவாட்டமாக நின்று கீரிப்பிள்ளைகள்மேல் தூவிவிட யாவும் மூர்ச்சையாய்விடும் நீ முன்போல் செய்து எழுப்பிவிடவேண்டும்.

1357. அணிப்பிள்ளை கூட்டங்களை மயக்கும் ஜாலம்.

முன்போல் சபையில் அணிப்பிள்ளை கூட்டங்களை நிருத்தி ஜெகஜாலப்பொடியைத்தெளிக்க மூர்ச்சையாகிவிடும் முன்போல் எழுப்பிவிடவேண்டும்.

1358. மந்தி கூட்டங்களை மயக்கும் ஜாலம்.

குறங்குகூட்டங்க ளிருக்குமிடத்தில் சென்று பொடியை எடுத்து காத்துவாட்டமாகநின்றுத் தூவிவிட குறங்குகூட்டமெல்லாம் மூர்ச்சையாகிவிடும் நீமுன்போல் எழுப்பிவிடவேண்டும்.

1359 அஸ்வ கூட்டங்களை மயக்கும் ஜாலம்.

ஜாலக்காரன் அஸ்வ கூட்டங்களி னிடமாகச்சென்று ஜெகஜாலப்பொடியை கொஞ்சம் எடுத்து ஜாலக்காரனை நியானித்து காத்துவாட்டமாக நின்று பொடியைத்தூவிவிட அஸ்வங்களெல்லாம் மூர்ச்சையாக விழுந்துவிடும் அதை நீ முன்போல் எழுப்பி விடவேண்டும்.

1460 மாட்டு மந்தைகளை மயக்கும் ஜாலம்.

பசுமாடு எருது எருமை எருமைக்கிடா முதலாகிய மாடுகளைமடக்கி வைத்திருக்கும் இடத்திற்சென்று ஜெகஜாலப்பொடியைக் கொஞ்சம் எடுத்து காத்துவாட்டமாக நின்று தூவிவிட மாடுகள்யாவும் மூர்ச்சையாகி விழுந்துவிடும் முன்போல் எழுப்பிவிடவும்.

1361 ஆட்டு மந்தைகளை மயக்கும் ஜாலம்,

ஜாலக்காரன் ஆட்டுமந்தைகள் மடக்கியிருக்கும் இடத்திற்சென்று ஜெகஜாலப்பொடியைகொஞ்சம் எடுத்து காத்துவாட்டமாக நின்று தூவி

விட ஆடுகளெல்லாம் மூர்ச்சையாக விழுந்துவிடும் நீ பரிட்சை பார்த்தவுடன் முன்போல் எழுப்பி விடவேண்டும்.

1362 கழுதைகளை மயக்கும் ஜாலம்.

கழுதை கூட்டத்தி னிடமாகச்சென்று ஜெகஜாலப்பொடியை கொஞ்சமெடுத்து காத்துவாட்டமாக நின்றுத்தூவிவிட கழுதைகூட்டம் யாவும் மூர்ச்சையாகிவிடும் நீ முன்போல் செய்து யெழுப்பிவிடவேண்டும்.

1363 நாய் கூட்டங்களை மயக்கும் ஜாலம்.

நாய் கூட்டத்தைக் கண்டவுடன் ஜெகஜாலப் பொடியைக் கொஞ்சமெடுத்து காத்துவாட்டமாக நின்றுத்தூவிவிட நாய் கூட்டமெல்லாம் மயக்கங்கொண்டு மூர்ச்சையாகும் அப்படியான உடனே நீ முன்போல்செய்து யெழுப்பி விடவேண்டும்.

1364 நரிகளை மயக்கும் ஜாலம்.

நரிகள் வாழுமிடத்தில் பயமில்லாமற்சென்று ஜெகஜாலப்பொடியைக் கொஞ்சமெடுத்து காத்துவாட்டமாக நின்று தூவிவிட நரி கூட்டங்களெல்லாம் மூர்ச்சையாகி விழுந்துவிடும்.

1365 மான் கூட்டங்களை மயக்கும் ஜாலம்

மான்கூட்டங்கள் வாழுமிடத்தில் அச்சமில்லாமற்சென்று ஜெகஜாலப்பொடியை கொஞ்சமெடுத்து சாத்துவாட்டமாக நின்று தூவிவிட அங்குள்ள மான் கூட்டங்களெல்லாம் மயங்கி சுருண்டு மூர்ச்சையாகிவிடும் நீ முன்போல் செய்து உடனே எழுப்பிட நன்றாம்.

1366 காட்டு பூனையை மயக்கும் ஜாலம்.

காட்டுபூனை கூட்டமாக யிருக்குமிடத்திற்குச் சென்று ஜெகஜாலப் பொடியைகொஞ்சம் எடுத்து காத்துவாட்டத்தில் நின்றுத்தூவிவிட காட்டுபூனை கூட்டம் மூர்ச்சையாகிவிடும்.

1367 கரும்பூனையை மயக்கும் ஜாலம்.

கரும்பூனை வாழுமிடத்திற்சென்று ஜெகஜாலப்பொடியை எடுத்து காத்துவாட்டமாக நின்று பொடியைத் தூவிவிட கரும்பூனைக் கூட்டங்களெல்லாங்கலங்கி மூர்ச்சையாகும்

1368 புனுகு பூனையை மயக்கும் ஜாலம்.

புனுகுபூனை வாழுமிடத்திற்சென்று அதின் கண்ணுக்குப் புலப்படாமல் பதுங்கி ஜெகஜாலப் பொடியை கொஞ்சம் எடுத்து காத்துவாட்டத்தில் நின்றுத்தூவிட அந்த வாசனைபட்ட பூனையெல்லாம் மூர்ச்சையடைந்து விழுந்துவிடும்.

1369. கோழி கூட்டங்களை மயக்கும் ஜாலம்.

கோழி கூட்டங்களை அடைத்து வைத்திருக்கும் கூண்டினிடத்திற் சென்று ஜெகஜாலப் பொடியை எடுத்து கூண்டினுள் போட்டுவிட்டுவந்து விட கோழிகளெல்லாம் சுருண்டு மூர்ச்சையாய் விழுந்துவிடும் அதை நீ முன்போல் எழுப்பிக்கொள்ளவேண்டும்.

1370. வான்கோழி கூட்டங்களை மயக்கும் ஜாலம்.

வான்கோழிகள் கூட்டமாக மேய்ந்துக் கொண்டிருக்கும் இடத்திற் சென்று ஜெகஜாலப் பொடியைக் கொஞ்சம் எடுத்து காத்துவாட்டமாக நின்று கோழியின்மேல் தூவிவிட அந்த வாடைப் பட்டவுடன் கோழிகளெல்லாம் மயங்கி சுருண்டு மூர்ச்சையாய் விழுந்துவிடும் நீ முன்போல் எழுப்பி விடவேண்டும்.

1371. வாத்துகளை மயக்கும் ஜாலம்.

வாத்துகள் கூட்டமாக மேயும்படியான குளம் குட்டை மற்றுமுதலான இடங்களில் சென்று ஜெகஜாலப்பொடியை யெடுத்து தண்ணீரில் தூவிவிட வாத்துகளெல்லாம் மூர்ச்சையாய் விழுந்துவிடும் அப்போது வாத்துக்காரன் அழுதுக்கொண்டு உன்னிடம் ஓடிவருவானாகில் உடனே நீ முன்போல் செய்து எழுப்பி விடவேண்டும் நன்று.

1372. புறா கூட்டங்களை மயக்கும் ஜாலம்.

புறாக்களை அடைத்து வைத்திருக்கும் கூண்டினிடமாகச் சென்று ஜெகஜாலப்பொடியை எடுத்து கூண்டிற்குள் கொஞ்சம்தூவிவிட அந்த கூண்டிற் குள்ளிருக்கும் புறாக்கள்யாவும் மயங்கித் தியங்கி மரணமூர்ச்சையடைந்து விழுந்துவிடும் அப்போது அந்த புறாக்காரன் உன்னை தேடி வருவானாகில் முன்போல் செய்து எழுப்பி விடவேண்டும்.

1373. புருஷ கூட்டங்களை மயக்கும் ஜாலம்.

புருஷர்கள் கூட்டமாக குந்திக்கொண்டேனும் அல்லது நின்றுக்கொண்டேனும் இருக்குமிடத்தில் யாரோ ஒருவனைப்போல் சென்று ஜெகஜாலப்பொடியை கொஞ்சம் எடுத்து காத்துவாட்டமாக நின்று தூவிவிட குந்திக்கொண் டிருந்தவரும் நின்றுக்கொண் டிருந்தவரும் திகைத்து மதி மயங்கி ஒருவருடன் ஒருவர்பேச சத்தியுமில்லாமல் மூர்ச்சையாவார்கள் அப்படியானவரின் வேடிக்கையை சற்றுநேரம் பார்த்துக் கொண்டிருந்து உடனே நீ முன்போல் செய்துக் எழுப்ப நித்திரை போனவர்போல் எழுந்திருந்து இது என்னவிபரீதமென்று எண்ணுதும் எண்ணி பலவாராக யோசித்து நிற்பார்கள்.

1374. ஸ்திரிகூட்டங்களை மயக்கும் ஜாலம்.

ஸ்திரிகள் கூட்டமாகக்கூடி வீண்வார்த்தைகள் பேசிக்கொண்டு இருக்கும் இடத்தில் நீசென்று ஜெகஜாலப்பொடியில் கொஞ்சம் எடுத்து காத்துவாட்டமாக நின்று தூவிவிட்டு தான் மறைந்திருக்கவேண்டும் அந்த வாடைப் பட்டவுடன் குந்திக்கொண்டு இருந்த ஸ்திரிகள் ஒருவருடன் ஒருவர் பேசாமற்படிக்கு சுருண்டு பூமியில்விழுந்து மூர்ச்சை யடைவார்கள் உடனே முன்போல்செய்து எழுப்பிவிடவேண்டும்.

1375. மயில் கூட்டங்களை மயக்கும் ஜாலம்.

மயில்கள் கூட்டமாக மேய்ந்துக் கொண்டிருக்கு மிடத்திற்சென்று ஜெகஜாலப்பொடியை கொஞ்சம் எடுத்து காத்துவாட்டமாகநின்று மயின்மேல்தூவிவிட அங்கு எத்தனை மயில்கள் மேய்ந்துக் கொண்டிருந்ததோ அத்தனை மயிலும் இருந்தயிடத்தில் தானே கிருகிருவென்று சுழன்று மூர்ச்சையாகி விழுந்துவிடும் நீ அதனை உடனே முன்போல்செய்து எழுப்பிவிடவேண்டும்.

1376. பன்றியை மயக்கும் ஜாலம்.

பன்றிகள் கூட்டமாக மேய்ந்துக்கொண்டிருக்குமிடத்தில் இந்த பொடியைகொண்டுபோய் தூவிவிட பன்றிகூட்டங்களெல்லாம் பதறிமூர்ச்சையடைந்து விழுந்துவிடும் முன்போல் செய்து யெழுப்பிக்கொடுக்க மிகவும் நன்றாம்.

1377. முள்ளம் பன்றியை மயக்கும் ஜாலம்.

முள்ளம்பன்றி வாழும்படியானக் காட்டுக்குச்சென்று அந்த கூட்டங்கள் எழும்பிவரும்போது மறைவாகவிருந்து ஜெகஜாலப்பொடியை கொஞ்சம் எடுத்து காத்துவாட்டமாக நின்று பன்றிகூட்டத்தின்மேல் தூவிவிட மூர்ச்சையாய் விழுந்துவிடும்.

1378. காட்டில்வாழும் காலியமாடுகளை மயக்கும்

காலியமாடுகள்வாழும் காட்டிற்கு பயமில்லாமற்சென்று அந்த மாடு கூட்டங்கள் வரும்போது பக்குவமாக மறைந்திருந்து அதுகள் மேச்சல் மேய்ந்துக்கொண்டிருக்கும் சமையத்தில் ஜெகஜாலப்பொடியை கொஞ்சம் எடுத்து காத்துவாட்டமாக நின்று தூவிவிட உடனே மூர்ச்சையாய் விழுந்துவிடும்.

1379. காடை கூட்டங்களை மயக்கும் ஜாலம்.

குறிவிக்காரர்கள் காடைகளை கூண்டில் அடைத்து கொண்டுவந்து கடைவீதிகளில் இறக்கிவைத்திருக்கும் சமையத்தில் ஜெகஜாலப்பொடியை கொஞ்சமெடுத்து அவனுக்குத்தெரியாமல் கூண்டில்தூவிவிட உட

னே அந்தக்கூண்டிலிருந்த காடைகள்யாவும் செத்ததுபோல் மூர்ச்சையாகி விடும் அப்போது குறிவிக்காரன் அங்கம்பதரி அழுது உன்னைத் தேடிவந்து காலில்வழுந்து வணங்குவானாகில் நீயும் மனமிரங்கி உடனே முன்போல்செய்தெழுப்பிவிடவேண்டும்.

1380. கௌதாரி கூட்டங்களை மயக்கும் ஜாலம்.

முன்போல் ஜெகஜாலப்பொயில் கொஞ்சம் எடுத்து கௌதாரி கூண்டிற்போட அதிலுள்ள கௌதாரிகளெல்லாம் மூர்ச்சை[illegible]விழுந்து விடும் அதையும் பரிட்சித்து முன்போல் எழுப்பிவிட நன்மையாகும்.

1381. கள்ளரை மயக்கும் ஜாலம்.

கள்ளர்கள் களவுசெய்ய வரும்போதாகிலும் அல்லது களவுசெய்துக் கொண்டு போகும்போதாகிலும் உன்கண்ணுக்கு தென்படுவாராகில் உடனே நீ அவர்களுக்கு மறைவாகவிருந்து ஜெகஜாலப்பொடியை கொஞ்சம் யெடுத்து காத்துவாட்டமாக நின்று தூவிவிட அந்தவாடைப் பட்டவுடன் கள்ளர்கள்யாவரும் தன்னை மறந்துதன்சுயனோ தனக்கில்லாமல் மூர்ச்சையாய் விழுந்து கிடப்பார்கள் அப்போது நீ அச்சமில்லாமல் அவர்களிடம் சென்று அவர்களை சோதனைப்போட்டு களவுசெய்துக்கொண்டுவந்த நகை ரூபாமுதலானதுகளையும் நீ எடுத்துக்கொண்டு முன்போல் நீ மறைப்பாயிருந்து எழுப்பிவிட அப்போதவர்கள் திகைப்பூண்டை மிதித்தவர்போல் திகைத்து எழுந்து ஒருவருடனும் சொல்லாமல் ஓடிப்போவார்கள்.

1382. படையை வெல்லும் ஜாலம்.

படை எடுத்து யுத்தத்திற்கு வரும்பட்சத்தில் அப்போது நீ அந்தப் படைக்கு ஓர் மூலையில் இருந்துக்கொண்டு ஜெகஜாலப்பொடியை கொஞ்சம் எடுத்து காத்துவாட்டமாக நின்று தூவிவிட உடனே அந்தப்படைகள் ஒட்டிற்கும் சுருண்டு பூமியில் விழுந்து மூர்ச்சையாகிவிடும் பின்வரும் படைகளும் இந்தசங்கதிகளைக்கேட்டு வந்த வழியே ஓட்டம் பிடிப்பார்கள் பின்பு இவர்களையும் எழுப்பிவிட இவர்களும் அவர்கள் பின்னாலேயே ஓட்டம் பிடிப்பார்கள்.

1383. சத்துருவை ஜெயிக்கும் ஜாலம்.

தனக்கு சத்துருவாக யிருப்பவனை ஜெயிக்கும் விதம் எவ்விதமெனில் அவன் தனித்து வரும்போது பார்த்துக்கொண்டிருந்து அவன்பின்னே தொடர்ந்து இந்தஜெகஜாலப்பொடியைத் தூவிவிட அவன் உடனே மூர்ச்சையாய்விழுந்து விடுவான் அப்போது அவனைச்சார்ந்த பந்து மித்தர்கள் வந்து உன்னைவணங்கி எழுப்பும்படிக் கேட்பாராகில் நீயும் மனதிரங்கி பூரணமாய் உடனே முன்போல் செய்து எழுப்பிவிட சத்துருவானவன் எழுந்து உன்பாதத்தில் வந்து விழுவான்.

1384. எதிரியை மடக்கும் ஜாலம்.

தனக்கு எதிரிகளை மடக்கவேண்டில் அவருடைய அரண்மனைவாயலில்சென்று ஒருவருக்குந்தெரியாமல் ஜெகஜாலப்பொடியைக் கொஞ்சம் எடுத்து அங்குதெளித்துவிட்டு வந்துவிட அது காத்திற்கு எழும்பி அந்த வாடைவீச அந்தமனையில் உள்ளயாவரும் மூர்ச்சையாவார்கள் அவரை நீயே போய் எழுப்பவேண்டு மல்லது வேறொருவராலாகாது ஆதலால் அவசியம்போய் எழுப்பிவிடில் பாபத்திற்காளாவாயென மேலோர் கூறுகின்றனர்.

1385. உலர்ந்தகருவாடு ஜலத்தில்மேயும் ஜாலம்.

சிறியகருவாடாயினும் பெறியகருவாடாயினும் அதில் எத்தனைவேண்டுமோ அத்தனை எடுத்து அனைவருக்குங் காட்டி இதோ இந்த கருவாடுகளை தண்ணீரில்போடுகிறேன் அது உயிருண்டாகி மேயும் விநோதத்தைப் பாருங்களென்று ஒருவருக்குந் தெரியாமல் எரண்டசுன்னத்தை கொஞ்சம் தண்ணீரில்போட்டுக் கருவாடுகளை அந்த தண்ணீரில்விட உயிருள்ள மீன்போல் உலாவிமேயும் அனைவரும் ஆச்சரியப்படுவார்கள்.

1386. உலர்ந்தயிராவிற்கு உயிருண்டாகும் ஜாலம்.

தேவையான காய்ந்தயிராவை எடுத்து முன்போல் அனைவருக்குங்காட்டி இந்த உலர்ந்தயிராக்கள் தண்ணீரில் உயிருடன் உலாவும் உன்னிதத்தைப் பாருங்களென்று முன்போல் சுண்ணத்தை தண்ணீரில் போட்டு இறாவைப்போட உடனே உயிருள்ளதுபோல் விளையாடும் பார்த்தபேர்களெல்லாம் பிரமித்து ஆச்சரியப்படுவார்கள்.

1387. உலர்ந்தசென்னாகுன்னி தண்ணீரில் மேயும் ஜாலம்.

ஒரு மரத்தொட்டியிலாவது இன்னம் எந்தஎனங்களிலாவது ஜலம்விட்டு அந்தஜலத்தில் எரண்டசுன்னம் கொஞ்சம்போட்டு உடனே சென்னாகுன்னியைப்போட உயிருண்டாகி மேயும் அனைவரும்பார்த்து ஆச்சரியப்படுவார்கள்.

1388. நோட்டு அடிக்கும் ஜாலம்.

வெற்றுக்கடுதாசியை நோட்டின் அளவாகக்கத்தரித்து யந்திரத்திலுள்ள இரண்டு உருளைகளின் நடுவிற்கொடுத்து மேற்படி யந்திரத்தின் கைப்பிடியை சுழற்றினால் 100-ரூபா 1000-ரூபா நோட்டுகள் யந்திரத்தின் மறுபக்கத்தில் வெளிப்படும் வெற்றுக்கடுதாசியைச் சபையோர்களுக்கு காட்டியபிறகு யந்திரத்தினின்று நாணயநோட்டுகளை அவர்களுக்குக் கொடுத்துக்காட்டுகையில் யாவரும் ஆச்சரியப்படுவார்கள்.

1389. சூட்சுமம்.

இதன் ரகசியத்தை அடியில் விவரிக்கின்றோம் இந்த யந்திரத்தில் அமைத்திருக்கிறபடிமேலே ஒரு உருளை கீழே ஒரு உருளை இணைத்திக்கின்றது இதிலுள்ள கைப்பிடியால் இதை சுழற்றி முன்பக்கத்தில் ஒருகடுதாசியை கொடுத்தால் அதை ப்ரஸ்பண்ணி மறுபக்கத்தில் தள்ளிவிடும் பஞ்சு அறைக்கின்ற மெஷினை நம்நேயர்களிற்சிலர் பார்த்திருக்கக் கூடும் அதைப்போலவே இந்த எந்திரத்தையும் பாவித்துக்கொள்ளலாம் இந்த உருளைகளின் நீளத்தில் அகலமாயுள்ள ஒரு கருப்புத்துணியை அதிக நீளமா எடுத்து மேல் உருளையில் அதிகமாகவும் கீழ் உருளையில் கொஞ்சமாகவும் அடியிற்கூறியபடி சுற்றிவிடவேண்டும் மேல் உருளையிற்கருப்புதுணி சுற்றும்போது 100-ரூபா 1000-ரூபா நோட்டுக்களாகத் தேவையுள்ளவரையில் ஒவ்வொன்றாய் அதிற்கொடுத்து யந்திரத்திற்காட்டியபடி மேலுருளையை சுற்று பின்பக்கம் போகும்படியாகவும் கீழ் உருளை சுற்று முன்பக்கம் வரும்படியாகவும் சுற்றிவிடவேண்டும் அதன்பின் கைபிடியை சுழற்றும்போது மேலேயிருக்கிற உருளையிலுள்ள கருப்புதுணி பின்பக்கமாய்ப் பிரிந்துகொண்டேபோகும் பிரிந்ததுணி கீழேயிருக்கிற உருளையில் முன்புறமாய்ச் சுற்றிக்கொண்டே வரும் அப்போது நாம் முன்பக்கத்திற் கொடுக்கிற காகிதம் கீழுருளையிலுள்ள துணியிற் சுற்றிக்கொண்டே உள்ளேபோய்விடும் மேலுருளையிலுள்ள துணிபின்பக்கமாகப் பிரிந்துகொண்டேவருகின்றபடி யந்திரத்தில் ஒளித்துவைத்திருக்கிற நோட்டுத்தாள்கள் பின்பக்கத்தில்போய் விழுந்துவிடும் மேலுருளையில் எத்தனை நோட்டுகள் ஒளித்துவைத்திருக்கிறமோ அத்தனை தாள்தான் யந்திரத்தின் முன்பக்கத்தில் கொடுக்கவேண்டும்.

1390. சீட்டுசுழலும் ஜாலம்.

தாள்பனம்வோலையில் ஏதேனுமொன்றை எழுதி யாவருக்குங்காட்டி ஜலத்திற்போட்டு அந்த ஜலத்தில் வரண்டசுன்னத்தை கொஞ்சம்போடடிட்டால் அது கிருகிருகிருவென்று சக்கரம்போல், சுழலும் ஆச்சரியப்படுவார்கள்.

1391. மாயாமறைவு-வித்தை.

ஜாலக்காரன் ஜாலமாடும் சபையில் வந்து நின்று சற்றுநேரம் பொறுத்து சபையில் நின்றபடியே மறைவுமையை திலர்தயிட்டுகொள்ள மாயமாய் மறைந்துவிடுவான் சபையோர்களும் இங்கு இப்போதிருந்தவன் எப்படியொமாயமாகி விட்டானென்று பேசிக்கொள்வார்கள் உடனே ஜாலக்காரன் நெற்றியிலுள்ள மையைதுடைத்துவிட முன்னிருந்த விடத்திலேயே நின்றிருப்பான் ஆச்சரியப்படுவார்கள்.

1392. வீரக்கட்டு செய்யும் வித்தை.

வேண்டியமட்டும் வீரத்தைக்கொண்டுவந்து சாம்பிராணி விராகனிடை-1 நெல்லிக்காய் கெந்தகம் விராகனிடை-1 இரண்டையும் அள்செய்து காண்டியிலிட்டு அனலில்பிடிக்க உருகிவரும் சமையத்தில் வீரத்தைப்போட்டுப் புரட்டி எடுத்துக்கொள்ளவும் இதை ஜன்னி வாய்வுகளுக்கு உபயோகப்படுத்தலாம்.

1393. மாயமோகினி காட்டும் வித்தை.

இரவில் ஜாலமாடுங்காலத்தில் ஜாலக்காரன் சபையோர்களைபார்த்து இதோ மாயமோகினியைக் காட்டும் விநோதத்தைப் பாருங்களென்று பச்சைமஞ்சள் கிழங்கின்மேல் ஐங்கோலக்கருவைத்தடவி பத்திரகாளிமந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து மஞ்சள்கிழங்கை பூமியின்மேல்போட மாயமோகினி உருவந்தோற்றும் ஆச்சரியப்படுவார்கள்.

1394. லிங்கக்கட்டு கட்டும் வித்தை.

ஜாதிலிங்கம் 5-விராகனிடைக் கொண்டுவந்து முலைப்பாலில் ஒருஜாமம் சுருக்குக்கொடுத்து எலுமிச்சப்பழம் ரசத்தில் ஒருஜாமம் சுருக்குக்கொடுத்து மணத்தக்காளிசாற்றில் ஒருஜாமம் சுருக்குக்கொடுத்து எறித்துப்பார்க்கக்கட்டும் அதை எடுத்து வைத்துக்கொண்டு ஜன்னி சுரம்தலைவலி இவைகளுக்கு முலைப்பாலில் உரைத்துக்கொடுக்கத்தீரும் சீதள ஜலுப்பு இவைகளுக்கு தேனில் உரைத்துக் கொடுக்கவேண்டும் அரை புளிப்பு சேர்க்கவும் இச்சாபத்தியம்.

1395. பாதிமனுஷியை காட்டும் ஜாலம்.

ஒரு அறையைச் சுத்தப்படுத்தி அந்த அறையின் சுவற்றில் தில்லைப்பாலும் திமிரிபாஷாணத்தையுங் கலந்து பாதிமனுஷியாகத்தோற்றும்படி எழுதி அந்த அறையைதான்போட்டு வைத்திருக்க வேண்டும் இராத்திரி காலமானவுடன் ஜாலக்காரன் வேடிக்கைபார்க்க வந்தோரை அழைத்துக்கொண்டு அந்த அறையினில் சென்று கதவை திறந்துகாட்ட பாதிமனுஷிபிரகாசமாகத் தோன்றுவாள் பார்த்து ஆச்சரியப்படுவார்கள் அப்போது நீ மலையாளபகவதியைநினைத்து துதிப்பவன்போல் கொஞ்சம்கற்பூரத்தை கொளுத்திவைக்க பாதிமனுஷி மறைந்துப்போகும் கற்பூரம் அவியாமுன்னே அறையைவிட்டு அனைவரையும் வெளியேதள்ளி கதவை சாத்தி விடவேண்டும்.

1396. பூபதிமாத்திரை செய்யும் வித்தை.

நாபி சுக்கு சூதம் திப்பிலி [illegible] யிளகு கெந்தி காயம் இவைகளைச்சமனிடையாகச் சேர்த்து இந்திரபூலக் கிடாரத்தில் 7-நாள் அரைத்து மிளகுப்பிரமாணம் மாத்திரைசெய்து தேன் அல்லது இஞ்சி சுரசத்தில் சாப்பிட சன்னி சுரதோஷம் வாதம்வாய்வு [illegible] நாவரட்சி சயகாசமேகம் இவைகள் தீரும் இச்சாபத்தியம்.

1397. ஜீவசஞ்சீவிக் குளிகைசெய்யும் வித்தை.

அக்குத்திப்பிலி, கடுக்காய், தான்றிக்காய், மிளம்பு, சித்திரைமூலம் வேர்பட்டை, சீந்திற்கிழங்கு சேராங்கொட்டை வாய்விளங்கம், நாபி இவைகளை சமனிடையாக இருத்து கல்வத்திலிட்டு கோசலம்விட்டு அறைத்து குண்டுமணி பிரமாணம் மாத்திரைசெய்து நிழலில் உலர்த்தி புட்டியில்போட்டு வைத்துக்கொள்ளவும் இதற்கு அனுபானம் அஜீரணத்திற்கு 1-மாத்திரை வாத்திபேதிக்கு 2-மாத்திரை பாம்பின் விஷத்திற்கு 3-மாத்திரை சன்னிபாதத்திற்கு நான்கு மாத்திரையாக தேகதிடமறிந்து இஞ்சி சாற்றில் கொடுக்கவேண்டும்.

1398 மகாபோகக்குளிகை செய்யும் வித்தை.

தங்கரேக்கு விராகனிடை-1. கஸ்தூரி விராகனிடை-1. கோ[illegible]ரா சனை விராகனிடை-7½ பச்சைகற்பூரம் விராகனிடை-5. குங்குமப்பூ விராகனிடை-5. மயில்ரோசனம் விராகனிடை 1½ படிகாரசுன்னம் விராகனிடை-½. இவைகளை ஈசுரமூலிரசத்தால் அறைத்து மிளகுபிரமாணம் மாத்திரைசெய்து நிழலுலர்த்தி வைத்துக்கொள்ளவும் இரவில் புளிப்புநீக்கி போஜனம் செய்தபிறகு 1-மாத்திரை சாப்பிட்டு 5-பலம் பசும்பால் சாப்பிடவும் போகத்திற்கு முயலுங்கால் அதிக உல்லாசமும் மனக்களிப்பும் தருவதோடு சகல சீதளசுர ஜன்னிகளும் நீங்கும்.

1399 சகல சுரத்திற்கும் குளிகைசெய்யும் வித்தை.

[illegible] இண்ணும் பாலைவேர் நிழலுலர்த்தி கருவாய்ப்பட்டை சமன் கூட்டி இடித்து வஸ்திரகாயஞ்செய்து எலுமிச்சம்பழம் ரசத்தாலாட்டி பரித்திக்கொட்டைப் பிரமாணம் மாத்திரைசெய்து இஞ்சிசுரம் தேன் இவை[illegible]ல் கொடுக்க சகலசுரமும் நீங்கி தேகம்திடமுண்டாகி தெளிவு தரும் இச்சாபத்தியம்.

1400 கோழி முட்டையை முழுங்கும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் ஜாலக்காரன் நூறுகோழி முட்டையை கொண்டுவந்து வேடிக்கை பார்க்கவந்த வெகு ஜனங்களுக்குக்காட்டி இதோ இந்த நூறுமுட்டையும் முழுங்கிவிடுகிறேன் பாருங்களென்று கண்கட்டு மையை எடுத்து திலர்தமிட்டுக்கொண்டு மறைவுமையை இரண்டுகையிலும் பூசிக்கொண்டு அனைவரும் முன்பாக ஒவ்வொரு முட்டையாக யெடுத்து முழுங்குவதுபோல் பின்பக்கமாகவிட்டு மறைத்து விடவேண்டும் பார்ப்போர் கண்களுக்கு முழுங்குவதுபோல் தோற்றும் ஆச்சரியப்படுவார்கள்.

1401 பேய்களை சண்டைவிடும் ஜாலம்.

பேய்பிடித்தவராயினும் அல்லது சாதாரணமாக யிருப்போராயினும் நாலைந்து ஸ்திரிகளையாவது புருஷர்களையாவது கொண்டுவந்து [illegible]க்கு முன்பாக தந்திரமாக ஜெகஜாலப் பொடியும் எரண்டகன்னத்தையும் கலந்து அவர்கள் மீதுபோட ஒருவருக்கொருவர் பிடித்து இழுத்து கடித்துக்கொண்டு பேய்போல் ஆடுவார்கள் ஆனால் சுத்தஜலத்தை அவர்கள் மீது தெளிக்க ஆட்டம் நின்றுவிடும்.

1402 கண்கட்டு வித்தை.

சிறியதேங்காய் பிரமாணமுள்ள ஒரு இரும்புகுண்டை ஜாலக்காரன் கையில எடுத்து அனைவருக்குங்காட்டி இதோ இந்தகுண்டை முழுங்குகிறேன் பாருங்களென்று கண்கட்டுமையை திலர்தமிட்டுக்கொண்டு மறைவுமையை இடதுகையில் பூசிக்கொண்டு அனைவருக்கு முன்பாக வலதுகையில் குண்டையெடுத்து வாயிடமாகக் கொண்டுபோக பார்ப்போருக்கு முழுங்குவது போலிருக்கும் உடனே இடதுகையில் வாங்கிப்பின்னால் போட்டு மறைத்து விடவேண்டும் ஒருவருக்குந் தெரியாது.

1403. அக்குளிச்சூரணம் செய்யும் வித்தை.

கொடிவேலிவேர் திரிகடுகு ஓமம் சிறுதேக்கு ஆனைத்திப்பிலி கோஷ்டம் இந்துப்பு வகைக்குப்பலம்-1 ஒன்றாய் காயம் வசம்பு கட்டைகரி வகைக்கு பலம் கால் கடுகுபலம் அரை ஓர் நிறையாய் சூரணித்து அதற்கு நிகர் சீனிகலந்து திரிகடிகைப்பிரமாணம் வெந்நீரில் கொள்ள அஜீரணம் மந்தம் பொருமல் கிராணி இவைகள் நீங்கும்.

1404. சதையடைப்பிற்கு மருந்துசெய்யும் வித்தை.

முற்றின கோழியின் கூட்டிலிருக்கும் சிறுகல்லும் வெள்[illegible]யும் பூரகமும் வெல்லமும்வகைக்கு ஒருகொட்டைப்பாக்களவு எடுத்து அறைத்து ஆவின்பாலில் கலக்கி கொடுக்கத்தீரும் ஆனால் இப்படி ஆறுநாள் கொடுக்கவேண்டும்.

1405. பாஷசெந்தூரம் செய்யும் வித்தை.

சிறியகுடுவையில் கால்பலம் நெல்லிக்காய் கெந்தியை ஒருபலம் பாஷாணத்திற்கு கீழ்மேலுமிட்டு ஓடுமூடி சீலைசெய்து மூன்று எருவில் புடமிட்டு எடுக்கவும் அரிசியிடை தேனில் இழைத்துக்கொடுக்க வாய்வு அகலும் சுரந்தீரும்.

1406. ஒற்றை[illegible]த்திற்கு மெழுது செய்யு[illegible]லான வித்தை.

லிங்கம் விராகனிடை [illegible]கால் மிளகு[illegible] ஒன்று பூரம்கஞ்சி ஒன்று இவை மூ[illegible]றையும் தேன்விட்டு ஒரு ஜாமம் அறைத்து மெ

மூருபதத்தில் வழித்து வைத்துக்கொள்ளவும் அநதனங்காய் பிரமாணம் இருவேளை சாப்பிடவும் தீரும் ஆனால் வாய்வு பதார்த்தமாகாது இச்சாபத்தியமாக இருக்கவேண்டும்.

1407. இருமல் நிவாரண லேகிய வித்தை.

மிளகுபலம்-1 பசும்வெண்ணெய் பலம்-1 சீனாகற்கண்டு பலம்-1 இவைகளில் மிளகை சூரணித்து ஒருசட்டியை அடுப்பில் வைத்து அதில் வெண்ணெயை ஊற்றி உருகினவுடன் மிளகு சூரணம்போட்டு கற்கண்டும்போட்டு சிவந்து வருமளவுங்கிளறி லேகியமாக்கி வைத்துக்கொண்டு கழற்சிக்காய் வீதம் சாப்பிட இருமல் நீங்கும்.

1408. கீழாநெல்லிதயிலம் செய்யும் வித்தை.

சமூலமும் கீழாநெல்லிக்கொண்டுவந்து இடித்து அரைபடி சாறுபிழிந்து அரைபடி நல்லெண்ணெய்விட்டு சித்திரமுட்டி அதிமதுரம் சந்தனம் வகைக்கு இரண்டுபலம் அரைத்துப்போட்டு பதமாய்க்காய்ச்சி தலைமுழுகிவர பித்தம் கைகால் எரிவு வெள்ளைக்காளம் வாயூறல்நீர்சுருக்கு இவை முதலானதும் பரந்தோடும் இச்சாபத்தியம்.

1409. கழுத்துவலி நிவாரண தைலவித்தை.

பேய்தமட்டிக்கா யொன்றை சிறுசில்லைகளாக அறுத்து நல்லெண்ணெய் 5-பலத்திற்போட்டு இச்சிலிக்கிழங்கு கஸ்தூரிமஞ்சள் இவைரண்டும் துட்டிடை கஸ்தூரி ஒருவிராகனிடை இவைமூன்றும் பொடித்து எண்ணெயிற் போட்டுக்காச்சி தலைமுழுகிவரவும் கழுத் திசப்பு கலங்கியோடிடும்.

1410. வயற்றுவலிக்குக்கியாழமிடும் வித்தை.

வெப்பாலரிசி பலம்-4 சீரகம் பலம்-4 செப்புநெரிஞ்சிவேர் பலம் அரை இம்மூன்று மருந்தும் ஒன்றாய்ச்சேர்த்து இடித்து மூன்று நாளைக்கு இரண்டுவேளையும் கியாழம்வைத்துச் சாப்பிட பித்தவாய்வினால் உண்டான வயற்றுநோய் தீரும் வயற்றிலுள்ள கிரிமிகள் முதலான பூச்சிகளும் மடிந்து வயர் சுத்தமாகும்.

1411. பந்துவசிய வித்தை.

செங்கழுனீர்செடிக்குக் ஆதிவாரத்தில் காப்புகட்டி தூபதீபங்காட்டி வேரைப் பிடுங்கிவந்து தங்கத்தகட்டில் குலிசம்செய்து அதில்வேரைப் போட்டு பூஜையில்வைத்து [illegible] ஆயிரத்தெட்டு ஜெபித்து [illegible] கையிலாவது [illegible] கட்டிக்கொண்டு பந்துக்கள் வீட்டிற்குப்போக விரோதமாயிருந்தபோதிலும் உன்னை வணங்கி உனக்குவசியமாவார்கள்.

1412. சமுத்திரகன்னிகையை அழைக்கும் ஜாலம்.

இரவில் தனக்கு இஷ்டமான வெகுஜனங்களையும் அழைத்துச்சென்று இதோ சமுத்திரகன்னிகையை அழைப்பிக்கிறேன் பாருங்களென்று [illegible]யாடும் சிட்காலையும் ஐங்கோலக்கருவையும் கலந்து ஒரு எலுமிச்சம்பழத்தின்மேல் தடவி மாயாசத்திமந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து பழத்தை கடலில்விட்டெறிந்து சமுத்திரகன்னிகை தோற்றமாக வேணுமென்று ஜாலக்காலை [illegible] உடனே தோற்றமாவாள் அனைவரும்பார்த்து ஆச்சரியமடைவார்கள்.

1413. வசீகர வித்தை.

அஷ்டமாசித்திமையும் ஜெகஜாலக்கருவும் இந்திரஜாலமையும் சிட்காமையும் ஐங்காயக்கருவும் இவைகளைகலந்து வைத்துக்கொண்டு வெளியேபுறப்படும்போது திலர்தமிட்டுக்கொண்டுபோக சகலமும் வசீகரமாகும் நினைத்தவையுல்லாம் முடியும்

1414 கையிலிருக்கும் எலுமிச்சம்பழம் மாயமாகும் ஜாலம்.

இந்திரஜாலக்கருவை விரலில்தொட்டு எலுமிச்சம்பழத்தின்மேல் தடவி குறளியை தியானித்து மறைவுமையை கையில் பூசிக்கொள்ள பழம் கையிலிருந்தபோதிலும் எதிரிகண்களுக்குத் தோற்றாது மாயமாய் போய் விட்டதென்று மதிப்பார்கள்.

1415 கையிலிருக்கும்முட்டை மாயமாகும் ஜாலம்.

முன்போலவே முட்டையை சபையோர்களுக்குக் காட்டி இதுமாயமாய்போகும் விநோதத்தைப் பாருங்களென்று முன்கூறியபடிசெய்ய முட்டையும் மாயமாய்போய்விட்டதென்று மயங்குவார்கள்.

1416 கையிலிருக்குமோதிரம் மாயமாய்போகும் ஜாலம்.

மோதிரத்தை அனைவருக்குங்காட்டி கருவையும்பூசி குறளியை தியானித்து மறைவுமையை கையிற்பூசிக்கொள்ள மோதிரமிருப்பதுதெரியாது மாயமாய் போய்விட்டதென்று மதிமயங்கி நிற்பார்கள்.

1417 கையில்வைத்த சவரம்மாயமாய் போகும் ஜாலம்.

சவரம் ஒன்றையெடுத்து அனைவருக்குங்காட்டி இது மாயமாயபோகும் மகிமையைப் பாருங்களென்று முன்போல் கருமுதலானதும் பூசிகுறளியை தியானிக்க பார்ப்போர்க்கு மாயமாய்விட்டதுபோலிருக்கும் பிரமிப்பார்கள்.

1418 கையில்வைத்திருக்கும் ரூபாய்மாயமாய்போகும் ஜாலம்

ஒரு ரூபாயையெடுத்து அனைவருக்குங்காட்டி இந்தரூபாய் கையிலிருந்து மாயமாய்ப்போகும் மகிமையைப் பாருங்களென்று முன்போலவே

கருவைப்பூசிக் கையைக்காட்ட ஆச்சரியப்படுவார்கள் ஆக்குறளி மந்திரத்தை தியானித்துக்கொண்டேயிருக்கவேண்டும்.

1419. கையிலிருக்கும் கைகுட்டை மாயமாய்ப்போகும் ஜாலம்.

சிறிய கைகுட்டையை ஜாலக்காரன் கையிலெடுத்து அனைவருக்குங் காட்டி இதோ இந்த குட்டை மாயமாய்ப்போகும் விநோதத்தைப் பாருங்களென்று மறைவுமைக்கருவைத்தடவி குறளிமந்திரத்தை ஜெபிக்க மாயமாகும் ஆச்சரியம் படுவார்கள்.

1420 கையில் வைத்திருக்கும் கைகெடியாரம் மாயமாய்ப்போகும் ஜாலம்.

ஜாலக்காரன் ஜாலமாடும் சபையில் ஒரு கைகெடியாரத்தை எடுத்து அனைவருக்கும்காட்டி இதோ இந்தகெடியாரம் மாயமாய்ப்போகும் விநோதத்தைப் பாருங்களென்று முன்போல் கருவைப் பூசிக்கொண்டு குறளிமந்திரத்தை ஜெபிக்க எதிரிகளுக்குத் தோற்றாது மாயமாகி விட்டதென்று மகிழ்வார்கள்.

1421 கையிலிருக்கும் ஆடும்கடிதாசி மாயமாய்ப்போகும் ஜாலம்.

முன்போலவே ஜாலக்காரன் ஆடும் கடிதாசிப்பாக்கி ஒன்றை கையிலெடுத்து அனைவருக்கும் காட்டி இதோ இந்த கடிதாசி மாயமாகப் போகும் வேடிக்கையைப் பாருங்களென்று முன்போல் கருவைத்தடவி குறளிமந்திரத்தை ஜெபிக்க மாயமாகும்.

1422. கையில் வைத்திருக்கும் மரக்கிளி மாயமாகும் ஜாலம்.

ஜாலக்காரன் மரத்தினால் செய்த ஒரு கிளியை எடுத்து யாவருக்குங் காட்டி இதோ இந்தமரக்கிளி மாயமாய்ப்போகும் மகிமையைப் பாருங்களென்று முன்போல் கருவைத்தடவி குறளி மந்திரத்தை தியானிக்க மாயமாகும் மதிமயங்குவார்கள்.

1423. கையிலிருக்கும் மரப்புறா மாயமாகும் ஜாலம்.

ஜாலக்காரன் முன்போலவே சபையில்நின்று மரத்தினால் செய்த புறாவொன்றை எடுத்து யாவருக்குங்காட்டி இதோ இந்தபுறா மாயமாகும் விநோதத்தைப் பாருங்களென்று முன்போல் கருவைத்தடவி குறளிமந்திரத்தை ஜெபிக்க மாயமாகும்.

1424 கையிலிருக்கும் கண்ணாடி மாயமாகும் ஜாலம்.

ஒரு கண்ணாடியை எடுத்து வேடிக்கைபார்க்க வந்திருக்கும் வெகுஜனங்களுக்குக்காட்டி இதோ இந்தகண்ணாடி மாயமாகப்போகும் மகத்துவத்தை பாருங்களென்று முன்போல் கருவைப்பூசி குறளிமந்திரத்தை ஜெபிக்க மாயமாகும்.

1425. கையில் வைத்திருக்கும் தாம்பூலம் மாயமாகும் ஜாலம்.

கையிலிருக்கும் தாம்பூலத்தை ஜாலக்காரன் வேடிக்கை பார்க்கவந்திருக்கு வெகு ஜனங்களுக்குங்காட்டி இதோஇந்த வெற்றிலைபாக்கு மாயமாய்ப்போகும் மகத்துவத்தை பாருங்களென்று முன்போல் கருவைப்பூசி குறளிமந்திரத்தை தியானிக்க மாயமாகும் மதிமயங்குவார்கள்.

1426. கையில் வைத்திருக்கும் [illegible] மாயமாய்ப் போகும் ஜாலம்.

ஜாலக்காரன் பொடிடப்பியை எடுத்து யாவருக்குங்காட்டி இதோ இந்த பொடிடப்பியை கையில்வைத்து கெட்டியாய் பிடித்து கொள்ளுகிறேன் அது மாயமாக மறைந்துபோகு மகிமையைப் பாருங்களென்று முன்போல் கருவைத்தடவி குறளிமந்திரத்தை ஜெபிக்க மாயமாய் மறைந்துவிடும்.

1427. கையிலிருக்கும் மரபொம்மை மாயமாகும் ஜாலம்.

ஜாலக்காரன் சபையில் வந்துநின்று மரத்தினால் செய்தபொம்மை ஒன்றை எடுத்து வேடிக்கைபார்க்கவந்திருக்கும் வெகுஜனங்களுக்குங்காட்டி இதோ இந்த மரப்பொம்மை மாயமாய் போகும் விநோதத்தை பாருங்களென்று முன்போல் கருவைப்பூசி குறளிமந்திரத்தை ஜெபிக்க மாயமாகும்.

1428. கையிலிருக்கும் அத்தர்புட்டி மாயமாகும் ஜாலம்.

முன்போல் ஜாலக்காரன் சபையில் நின்று ஒரு அத்தர்புட்டியை எடுத்து யாவருக்குங்காட்டி இதோ இந்த அத்தர்புட்டியை கையில்கெட்டியாகப்பிடித்து கொள்ளுகிறேன் அது மாயமாகப்போகும் [illegible]யைப்பாருங்களென்று முன்போல் கருவைப்பூசி குறளிமந்திரத்தை ஜெபிக்க மாயமாகும்.

1429. கையில் வைத்திருக்கும் பன்னீர்புட்டி மாயமாகும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் வந்துநின்று ஜாலக்காரன் பன்னீர்புட்டி ஒன்றை எடுத்து வேடிக்கைபார்க்க வந்திருக்கும் வெகுஜனங்களுக்குங்காட்டி இதோ இந்த பன்னீர்புட்டியை கையில் கெட்டியாய் பிடித்துக்கொண்டிருக்கிறேன் அது மாயமாய் மறைந்துபோகும் விநோதத்தை பாருங்களென்று முன்போல் கருவைப்பூசி குறளிமந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்துக்கொண்டேயிருக்க மாயமாய் மறைந்து போனதுபோல் தோற்றும் மதிமயங்கி நிற்பார்கள்.

1430. கையிலிருக்கும் தட்டேன்னீர்சொம்பு சந்தனகிண்ணம் யாவும் மாயமாக போகும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் ஜாலக்காரன் தட்டேன்னீர் சொம்பு சந்தனக் கிண்ணம் இவைகளை எடுத்து வேடிக்கைபார்க்க வந்திருக்கும் வெகுஜனங்களுக்குக்காட்டி இதோ இந்ததட்டுசொம்பு கிண்ணம் மாயமாகப்போகும்விநோதத்தைபாருங்களென்று [illegible] முன்போல் கருவைபூசி குறளிமந்திரத்தைஜெபித்துக்கொண்டே [illegible] மாயமாய் மறைந்து விட்டதுபோல் தோற்றும் பிரமிப்பார்கள்.

1431. கையில் பிடித்திருக்கும் வெள்ளித்தடி மாயமாகும் ஜாலம்.

ஜாலக்காரன் ஜாலமாடுமிடத்தில் வந்துநின்று கையில் பிடித்திருக்கும் வெள்ளித்தடியை வேடிக்கைபார்க்க வந்திருக்கும் வெகுஜனங்களுக்குக்காட்டி இதோ இந்த வெள்ளித்தடி கையில்பிடித்தபடியே மாயமாகப்போகும் மந்திரவலுவைப் பாருங்களென்று முன்போல் கருவைப்பூசி குறளிமந்திரத்தை தியானிக்க மாயமாய் மறைந்ததுபோல் தோற்றும் திகைத்து நிற்பார்கள்.

1432. கையில் பிடித்திருக்கும் மாவிநாயகர் மாயமாய் மறையும் ஜாலம்.

ஒருமரத்தினாற்செய்த விநாயகரை ஜாலமாடுமிடத்தில் ஜாலக்காரன் அதைக்கையிலெடுத்து அங்குள்ள யாவர்க்கிராட்டும் காண்பித்து இதோ இந்த மரவிநாயகர் மாயமாய் மறைந்துபோகும் விநோதத்தைப் பாருங்களென்று முன்போல் கருவைப்பூசி குறளிமந்திரத்தை ஜெபித்துகொண்டேயிருக்க மாயமாய் மறைந்ததுபோல் தோற்றும் பார்ப்போரெல்லாம் பிரமை கொள்வார்கள்.

1433. வீரசுத்தி வித்தை.

வீரத்தை ஒரு யிளநீரில் 1½-வீராகனிடை கற்பூரம்போட்டு கல்கி சட்டியில்வைத்து அடுப்பிலேத்தி வீரத்தை தொலாந்திரமாகக் கட்டி எரித்து எடுத்துக்கொள்ள சுத்தியாம்.

1434. இரும்புசுத்தி வித்தை.

இரும்புப்பொடியை ஒருநாள் பழசாதத்தில் ஊறவைத்தெடுத்து மறுநாள் எலுமிச்சம்பழச்சாற்றில் ஊறவைத்தெடுத்து இரும்புச்சட்டியில் ஊரவைத் திடுத்து அயச்செட்டியில்போட்டு வறுத்து காடியில் கழுவி வெயில் பட்டை கியாழத்தில் கொதிப்பிட்டு மறுபடியும் காடியில்கழுவி எடுத்துக் கொள்ள சுத்தியாம்.

1435. இராஜ அமுர்தாதிச்சூரணம் செய்யும் வித்தை.

[illegible] ஏலம், [illegible], அதிமதுரம், சந்தனம், மகாப்பு, குரோசாணி, ஓமம் வால்மிளகு, திப்பிலி, வாய்விளங்கம், குங்குமப்பூ, சடாமாஞ்சி, கடுரோகணி, திப்பிலிமூலம் விலாமை இவைகளை ஓர் நிறையாய் நிறுத் தெடுத்து சூரணஞ்செய்து அதற்கு சர்க்கரை சேர்த்து திருகடிகைப்பிரமாணம் சாப்பிடவோ, கைகால் எரிச்சல், [illegible], எதும்புருக்கி, பிரமியம் சுரப்பன், மூலம்வாதம், பித்தம், [illegible] முதலான சகல வியாதிகளுந்தீர்ந்து நிரமுண்டாகும் தேகம் குளிரும்.

1436. தகன ஜால விநோதம்.

ஜாலமாடுமிடத்தில் ஜாலக்காரன் தங்களிலொரு மனுஷனை அழைத்து சபையில் நிறுத்தி பிறகு வரட்டிகட்டை முதலானதுகொண்டு வரும்படிச்செய்து சபத்தை [illegible] செய்ய அடுக்குவதுபோல் அடுக்கி அனைவரும்பார்க்கநேரில் மேற்படி மனுஷனை அதின்மேல் படுக்கவைத்து மூடசபம்போல் அடுக்கிவிட்டு வேடிக்கைபார்க்க வந்திருக்கும் வெகுஜனங்களையும்பார்த்து இதோயிவனை தகனம் செய்து விடுகிறேன் இவன்மறுபடியும் எழுந்துவரும் விநோதத்தை பாருங்களென்று மறைவுமையை அதின்மேல் தெளித்து சித்துவிளையாடும் சிட்காணமையை விரலில்தொட்டுக் கொண்டு கெண்டபேரண்ட மந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து இச்சபம் பத்தி எரிவதுபோல் பார்ப்போர்கண்களுக்குத் தோற்றும்படி செய்வாயென்று அக்கினிபகவானை தியானித்து கெண்டபேரண்ட மந்திரத்தை ஜெபித்துக்கொண்டேயிருக்க சபம் குபிலென்று பத்தி எரிவதுபோல் தோற்றும் யாவரும் பதருவார்கள் அப்போது அவர்களைப்பார்த்து இச்சதியை அடக்கி இப்போது பத்தி எரிந்துபோனவனையும் எழுப்பும் என்னுடைய மந்திரத்தைப்பாருங்களென்று ஜக்கோசுகருவை தெளிக்க தியானத்து அமர்ந்து அவனும் எழுந்து வெளியேவருவதைக்கண்டு ஆச்சரியப்படுவார்கள்.

1437. அந்திரத்தில் [illegible] ஜாலம்.

மாத்திரைலாவது மண்ணினாலாவது மனுஷர்தலைபோல் செய்து அதற்குதக்கபடி வர்ணங்கள்கொடுத்து வைத்திருந்து ஜாலக்காரன ஜாலமாடுமிடத்திற்கொண்டுவந்து வேடிக்கைப்பார்க்க வந்திருக்கும் வெகுஜனங்களுக்குக்காட்டி மேஜையின்மேல்வைத்து இதோ இந்ததலை அந்திரமாக எழும்பிநிற்கும் அற்புதத்தைப் பாருங்களென்று அஷ்டமாசித்தி மையை எடுத்து அந்ததலையின்மேல் தெளித்து பிறகு மறைவுமையை தெளித்து வேதாளமந்திரத்தை உச்சாடனஞ்செய்ய தலையானதுமேலுக் கெழும்பி அந்திரமாக நிற்பதுபோல் பார்ப்போர்களுக்குத் தோற்றும் ஆச்சரியப்படுவார்கள் அதல் [illegible] மந்திரத்தை நிறுத்திவிட மேஜைமேல் இருப்பதுபோல் தோற்றும் கண்கட்டுவித்தை என்பார்கள்.

1438 பொன்னிமிளை சுத்தி வித்தை.

பொன்னிமிளையை மூனுநாள் காடியில் ஊறியபின் எடுத்து அபிரேக்கு ஆவாரம்பட்டை எடுத்து ஏழுபடி கோமியத்தில் வெந்ததை எடுத்து உலர்த்தி செல்லுசேர்த்து கிளிகட்டி காடியில்தோய்த்து இரக்குன்றி ஓரளவை நீக்கி உலர்த்திக்கொள்ள சுத்தியாம்.

1439 கெவுரி சுத்தி வித்தை.

வெள்ளை கெவுரியை கொண்டுவந்து பசும்பால் அல்லது சாணிப்பால் சுண்ணாம்புநீர் மிளகு நீயாழும் இன்றொன்றில் எதிலாவது தொலாந்திரமாகக்கட்டி எரித்தெடுத்தும் கொள்ளவும் பிறகு பசுப்பாலில் கிளிக்கட்டி அவித்து எடுத்துக்கொள்ள சுத்தியாம்.

1440 கண்ணொளி கலிக்கச்செய்யும் வித்தை.

பெருங்காயம், திப்பிலி, மிளகு, வெள்ளுள்ளி, கிராம்பு, இவைகளை சமனிடையாய் திருத்தெடுத்து கல்வத்திலிட்டு வெத்திலைச்சார் குப்பமேனிச்சார் வெள்ளைசாரணை சார்விட்டு, ஒருஜாமம் அரைத்து வழித்து மாத்திரைகள் செய்து நிழலுலர்த்தாய் உலர்த்தி வைத்துக்கொண்டு முலைப்பாலில் உரைத்துக் கண்ணுக்குப்போடவும் ஜன்னிமுதலானதும் நீங்கும்.

1441 கையிலிருக்கும் மாம்பழம் மாயமாய்ப் போகும் ஜாலம்.

ஜாலக்காரன் ஜாலமாடுமிடத்தில் மாம்பழமொன்றை எடுத்து வேடிக்கைபார்க்க வந்திருக்கும் வெகு ஜனங்களுக்குக்காட்டி இதோ மித்தமாம்பழம் கையிலிருந்தபடியே மாயமாகப்போகும் விநோதத்தை பாருங்களென்று மறைவுமையிய கையில் தடவிக்கொண்டு குறளி மந்திரத்தை ஜெபிக்க பழம்மாயமாய் மறைந்ததுபோல் பார்ப்போர்களுக்குத்தோற்றும் ஆச்சரியப்படுவார்கள்.

1442 கையிலிருக்கும் மாதளம்பழம் மாயமாய்ப்போகும் ஜாலம்.

முன்போலவே ஜாலக்காரன் சபையில் நின்று மாதளம்பழமொன்றை எடுத்து அனைவருக்குக்காட்டி இந்தபழம் கையிலிருந்தபடியே மாயமாகப் போகும் மகிமையைப் பாருங்களென்று முன்போல் மையைப்பூசி குறளி மந்திரத்தை ஜெபிக்க மாயமாய் விட்டதுபோல் தோற்றும் ஆச்சரியப்படுவார்கள்.

1243 65-பாஷாணத்திற்கும் ஏகசுத்திவித்தை.

குப்பமேனிரசம் தக்காளிரசம் ஊமத்தன்ரசம் பழரசம் சிறுநீர் காடி இவைகளைக்கலந்து ஆதில் உப்பு சுண்ணம் வெடியுப்பு நவாச்சாரம் சீனம் வகைக்கு பலம்-1 தூள்செய்து கலந்து சக்குகளில் கிளியாய்க்கட்டி மண்டலமிட்டு எடுத்து உலர்த்திக்கொள்ள சுத்தியாம்.

1444 கையிலிருக்கும் இச்சிலிப்பழம் மாயமாய்ப் போகும் ஜாலம்.

ஜாலக்காரன் முன்போல் சபையில் இச்சிலிப்பழமொன்றை எடுத்து அனைவருக்குங்காட்டி இந்த இச்சிலிப்பழம் மாயமாகப்போகும் விநோதத்தைப் பாருங்களென்று முன்போல் மையைப்பூசி குறளிமந்திரத்தை ஜெபிக்க மாயமாய் விட்டதுபோல் தோற்றும் அனைவரும்மதிமயங்கி பிரம்மைகொண்டு நிற்பார்கள்.

1445 கையிலிருக்கும் பாதுளம்பழம் மாயமாய்ப்போகும் ஜாலம்.

ஜாலக்காரன் முன்போல் நின்று பாதும்பழத்தை எடுத்து அனைவர்களுக்குங்காட்டி இந்த பாதும்பழம் கையிலிருந்தபடியே மாயமாகப் போகும் விநோதத்தைப் பாருங்களென்று முன்போல்மையைப்பூசி குறளி மந்திரத்தை ஜெபிக்க பழம்மாயமாய்ப் போய்விட்டதுபோல் தோற்றும் ஆச்சரியப்படுவார்கள்.

1446 கையிலிருக்கும் பச்சைத் திராட்சிப்பழம் மாயமாய்ப் போகும் ஜாலம்

ஜாலமாடுமிடத்தில் ஜாலக்காரன் பச்சைத்திராட்சி பழக்குலையை ஒன்று எடுத்து வேடிக்கைப் பார்க்கவந்திருக்கும் வெகுஜனங்களுக்குக் காட்டி இந்த திராட்சிக்குலை கையில் இருந்தபடியே மாயமாகப்போகும் விநோதத்தைப் பாருங்களென்று முன்போல் மையைப்பூசி குறளிமந்திரத்தை ஜெபிக்க பழம் மாயமாய் மறைந்து விட்டதுபோல் தோற்றும் பார்த்து பிரமிப்பார்கள்.

1447 கையிலிருக்கும் பலாப்பழம் மாயமாய்ப்போகும் ஜாலம்.

முன்போல் ஜாலக்காரன், சபையில் நின்று பலாப்பழம் ஒன்றையெடுத்து அனைவர்களுக்குங்காட்டி இதோ இந்தப்பழம் கையிலிருந்தபடியே மாயமாய் மறைந்துப்போகும் விநோதத்தைப்பாருங்களென்று முன்போல் மையைப்பூசி குறளிமந்திரத்தை ஜெபிக்க பழம் மாயமாய் மறைந்தது போல் தோற்றும் ஆச்சரியப்படுவார்கள்.

1448 மடல்துத்த சுத்தி வித்தை.

மடல்துத்தத்தை வெண்ணெயில் அல்லது தயிர் கற்றாழைச்சாற்றில் ஊறவைத்தெடுக்க சுத்தியாம்.

1449 அஞ்சனக்கல் சுத்திவித்தை.

அஞ்சனக்கல்லை புளியாரை ரசத்தில் ஊறவைத்து எடுத்துக் கொள்ள சுத்தியாகும்.

1450 பாஷாணசுத்திசெய்யும் வித்தைகள்.

அநேகவிதமான பாஷாணங்களை சுத்திசெய்யவேண்டுமானால் மேனிசாரம் சுற்றும்பார் இருந்தபழரசம் செம்பருத்தி வெற்றிலைசாறு வகைக்கு படி ஒன்று இவைகளைப்பாண்டத்திலிட்டு அதில் பாஷாண உப்பு வெடியுப்பு படிகாரம் சவர்க்காரம் வகைக்குபலம் (கால்) தூள்செய்து சுண்ணம் சிலீக்கட்டி இட்டு கிழக்காற்றில்லா வீட்டில் பதினைந்துநாள் வைத்தெடுத்து காடியில் ஊறவைத்து எடுத்துக்கொள்ள சுத்தியாம்.

1451 கையிலிருக்கும் கொய்யாபழம் மாயமாய் போகும் ஜாலம்.

ஜனசமூகத்தில் ஜாலக்காரன் கொய்யாப்பழம் ஒன்றை எடுத்து வேடிக்கைபார்க்க வந்திருக்கும் பெருமனிதருக்குக் காட்டி இந்தகொய்யாப்பழம் கையிலிருந்தபடி மாயமாய் போகும் மகிமையைப் பாருங்களென்று முன்போல் மைபூசி குறளிமந்திரத்தை ஜெபித்துக்கொண்டேயிருக்க மாயமாய் மறைந்து விட்டதுபோல் தோற்றும் கண்கட்டு வித்தையென்று கலங்கி நிற்பார்கள்.

1452 கையிலிருக்கும் வாழைப்பழம் மாயமாய்போகும் ஜாலம்.

ஜாலக்காரன் வாழைப்பழமொன்றை எடுத்து வேடிக்கைபார்க்க வந்தவர்களுக்குக்காட்டி இந்தவாழைப்பழம் கையிலிருந்தபடியே மாயமாய் போகும் வேடிக்கையைப்பாருங்களென்று முன்போல் மையைப்பூசி குறளிமந்திரத்தை ஜெபிக்க பழம்மாயமாய் மறைந்துவிட்டதுபோல் தோற்றும் பார்த்தவர்கள் திகைத்து நிற்பார்கள்.

1453 கையிலிருக்கும் அன்னாசிப்பழம் மாயமாய் போகும் ஜாலம்.

முன்சொன்ன ஜாலக்காரன் சபையில்வந்துநின்று அன்னாசிபழம் ஒன்றை எடுத்து அனைவர்களுக்கும் நன்றாய்க்காட்டி இந்த அன்னாசிபழம் கையிலிருந்தபடி மாயமாகப்போகும் விசித்திரத்தைப் பாருங்களென்று முன்போல் மையைப்பூசி குறளிமந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபிக்கபழம் மாயமாய் மறைந்து விட்டதுபோல் தோற்றும் அதனைகண்ட யாவரும் திகைத்து நிற்பார்கள்.

1454 கையிலிருக்கும் ஆரஞ்சிபழம் மாயமாய்போகும் ஜாலம்.

ஜனசமூகத்தில் ஜாலக்காரன் ஆரஞ்சிபழத்தை எடுத்து வேடிக்கைபார்க்க வந்திருக்கும் பெரியோர்களுக்குக்காட்டி இந்த ஆரஞ்சிபழம் கையிலிருந்தபடியே மாயமாகப்போகும் அற்புதத்தைப் பாருங்களென்று முன்போல் மையைப்பூசி குறளிமந்திரத்தை ஜெபிக்கபழம் மாயமாய் மறைந்துவிட்டதுபோல் தோற்றும் ஆச்சரியப்படுவார்கள்.

1455 காந்தசுத்தி வித்தை.

காந்தத்தை புளிரசத்திலும் காடியிலும் மோரிலும் கொதிக்கவைத்தெடுத்து பிறகு சாணிநீரில் ஏழுதிரம் காய்ச்சி காய்ச்சி துடைக்க சுத்தியாம்.

1456 அயத்தொட்டி சுத்திவித்தை.

அயத்தொட்டியை பசும்பாலில் நாலுஜாமமும் செய் தேன் இவைகளில் எட்டு நாளும் ஊறவைத்தெடுத்துக் கொள்ள சுத்தியாம்.

1457 தொட்டிபாஷாண சுத்திவித்தை.

தொட்டி பாஷாணத்தை துண்டுதுண்டாய் நறுக்கி கிளிக்கட்டி நெல்லில் அவித்து எடுத்துக்கொள்ள சுத்தியாம்.

1458 சகஸ்திரபேதி சுத்திவித்தை.

சகஸ்திரபேதியை நாரத்தங்காய்ரசத்தில் ஊறவைத்து எடுத்துக்கொள்ள சுத்தியாம்.

1459 செங்கொட்டை சுத்திசெய்யும் வித்தை.

செங்கொட்டையை ஜலத்தில் ஊறவைத்து மருநாள் மூக்கைவெட்டி நீக்கி எடுத்துக்கொள்ள சுத்தியாம்.

1460 சிவதை சுத்திவித்தை.

சிவதையை பசும்பாலில் அவித்தெடுத்து உலர்த்திவைக்க சுத்தியாம்.

1461 அமுக்குராங்கிழங்கு சுத்திவித்தை.

அமுக்கிரான் கிழங்கை ஆவின்பாலில் அவித்து எடுத்துக் கொள்ள சுத்தியாம்.

1462 சுக்கை சுத்திசெய்யும் வித்தை.

சுக்கைமேல்தோல் சீவி சுண்ணாம்புபூசி உலர்த்தி எடுத்துக்கொள்ள சுத்தியாம்.

1463 திப்பிலியை சுத்திசெய்யும் வித்தை.

திப்பிலியை எலுமிச்சம்பழம் ரசத்தில் ஊறவைத்து எடுத்துக்கொள்ள சுத்தியாம்.

1464 ஓமத்தை சுத்திசெய்யும் வித்தை.

ஓமத்தை சுண்ணாம்பு தெளிவுநீரில் ஒரு ஜாமம் ஊறவைத்து உலர்த்தியெடுத்துக்கொள்ள சுத்தியாம்.

1465 சீருசீரக சுத்தி வித்தை.

சீரகம் கருஞ்சீரகம் இவைகளை சுண்ணாம்பு நீரில் சிறுஜாமம் ஊறவைத்து உலர்த்தி எடுத்துக்கொள்ள சுத்தியாம்.

1466 ஊமத்தன் விரையை சுத்திசெய்யும் வித்தை.

ஊமத்தன்விரையை ஒருஜாமம் ஜலத்தில் ஊறவைத்து எடுத்துக் கொள்ள சுத்தியாம்.

1467 ரசசுத்தி செய்யும் வித்தை.

ரசத்தை எருக்கன்பாலில் ஒருநாள் ஊறவைத்து செங்கற்றாள் கொட்டை சற்கரை இதுகளில் அரைத்தெடுக்க சுத்தியாம்.

1468 பூரசுத்தி செய்யும் வித்தை.

பூரத்தை வெற்றிலை மிளகு இயாழுமிட்டு அரைத்து இளிகட்டி 3-நாள் ஊறவைத்து எடுக்க சுத்தியாம்.

1469 கல்நார் சுத்தி வித்தை.

கல்நாரையை கழுதை மூத்திரத்தில் மூன்று நாழிகை ஊறினபின் கழுவியெடுக்க சுத்தியாம்.

1470 படிகார சுத்தி வித்தை.

படிகாரத்தை எருமைசாணத்தில் வெளிகட்டிவைத்து எடுத்துக்கொள்ள சுத்தியாம் அல்லது சிறுநீரில் மூன்றுநாள் ஊறவைத்து எடுத்துக் கொண்டாலும் சுத்தியாம்.

1471 லிங்கசுத்தி வித்தை.

லிங்கம் ஒரு கட்டியாக வாங்கி தேன் முலைப்பால் இஞ்சிசாறில் தனித்தனி ஒருநாள் ஊறியபின் மறுநாள் எடுத்து எலுமிச்சம்பழம் ரசம் குப்பமேனிரசம் முலைப்பாலும் சமமாய்க் கலந்துகொண்டு அடுப்பின் மேல் சட்டிவைத்து அதில் மேற்படி லிங்கத்தைவைத்து புகையாமல் சுருக்குக்கொடுக்கவும் சுத்தியாம் இதற்கு லிங்கக்கட்டென்று பெயர்.

1472 வீரசுத்தி வித்தை.

வீரத்தை ஒரு வினாத்தில் 1¼-விராகனிடை கற்பூரம்போட்டு கலந்து சட்டியில் வைத்து அடுப்பிலேத்தி மேற்படி வீரத்தை தொலாந்திரமாக கட்டி எரித்து எடுத்துக்கொள்ள சுத்தியாம்.

1473 முதார்சிங்கு சுத்தி வித்தை.

முதார்சிங்கியை வெள்ளாட்டுக்கோமியத்தில் ஒருநாழிகை கொதிக்க வைத்து எடுத்துக்கொள்ள சுத்தியாம்.

1474 மனோசிலை சுத்தி வித்தை.

மனோசிலையை காடியில் இளிக்கட்டி எடுத்துக்கொள்ளவும் வெள்ளாட்டு மூத்திரத்தில் தொலாந்திரம் கட்டி எரித்தெடுத்துக் கொள்ள சுத்தியாம்.

1475 கையிலிருக்கும் கோவைப்பழம் மாயமாய்போகும் ஜாலம்.

முன்போல் ஜாலக்காரன் சபையில்நின்று கோவைப்பழத்தைஎடுத்து வேடிக்கைபார்க்க வந்திருக்கும் வெகுஜனங்களுக்குங்காட்டி இதோ இந்த கோவைப்பழம் கையிலிருந்தபடியே மாயமாகப்போகும் அற்புதத்தைப்பாருங்களென்று முன்போல் மையைப்பூசி குறளிமந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபிக்க பழம் மாயமாய் மறைவுள்ளதுபோல் பார்ப்போர்கண்களுக்குத்தோற்றும் அப்போது வேடிக்கைப் பார்ப்போர்கள் இது என்ன மந்திரமோ என்ன தேவதை வசியமோ என்று ஏக்கம் பிடித்தவர் போல் பார்த்து நிற்பார்கள்.

1476 கையிலிருக்கும் எட்டிப்பழம் மாயமாய்ப் போகும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் ஜாலக்காரன் எட்டிப்பழம் ஒன்றை எடுத்து யாவர்களுக்குங்காட்டி இதோ இந்த எட்டிப்பழம் என்கையிலிருந்த படியே மாயமாகப்போகும் விநோதத்தைப் பாருங்களென்று முன்போல் மையைப்பூசி குறளிமந்திரத்தை ஜெபிக்க பழம் மாயமாய்ப்போய் விட்டதுபோல் பார்ப்போர்கண்களுக்குத் தோற்றும் இது என்னப்புதுமை என்று எண்ணுமெண்ணி ஏக்கம் பிடித்தவர்போல் பார்த்து நிற்பார்கள்.

1477 கையிலிருக்கும் பம்புளிமாசுபழம் மாயமாய் போகும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் ஜாலக்காரன் பம்புளிமாசுபழத்தை எடுத்து அங்குள்ள அனைவர்களுக்குங்காட்டி இந்த பம்புளிமாசுபழம் கையிலிருந்தபடியே மாயமாகப்போகும் விநோதங்களைப்பாருங்களென்று முன்போலவே மையைப்பூசி குறளிமந்திரத்தை ஜெபிக்க பழம் மாயமாய்மறைந்து விட்டதுபோல் தோற்றும் பார்த்து பிரமிப்பார்கள்.

1478 எட்டிகொட்டையை சுத்திசெய்யும் வித்தை.

எட்டிக்கொட்டையை எல்லில் அவித்து சிறுகீரை ரசத்தில் ஒருஜாமம் ஊறியபின் தேத்தாங்கொட்டைரசத்தில் வெழித்து எடுத்துக்கொள்ள சுத்தியாம்.

1479 கையிலிருக்கும் அத்திப்பழம் மாயமாய்போகும் ஜாலம்.

முன்போல் ஜாலக்காரன் சபையில்நின்று அத்திப்பழத்தை எடுத்து யாவர்களுக்கும் நன்றாய்க்காட்டி இந்த அத்திப்பழங்கள் கையிலிருந்தபடி மாயமாகும் விநோதத்தைப் பாருங்களென்று முன்போல் மையைப்பூசி குறளிமந்திரத்தை ஜெபிக்க பழம்மாயமாய் மறைந்துவிட்டதுபோல் தோற்றும் அப்போது வேடிக்கைப் பார்ப்போர்கள் மிகு ஆச்சரியப்படுவார்கள்.

இதோ இந்த மணிபாக்ஸ் என்கையிலிருந்தபடியே மாயமாகப் போகும் மகிமையான வித்தையைப்பாருங்களென்று முன்போல் மையைப்பூசி குறளிமந்திரத்தை ஜெபிக்க மணிபாக்ஸ் பார்ப்போர்கண்களுக்கு மாயமாய்ப் போய்விட்டதுபோல் தோற்றும். அப்போதவர்கள் என்னமாய் தோற்றுமல் பிரமைகொண்டவர்போல் நிற்பார்கள்.

1494. முடிதார சுத்தி வித்தை.

முடிதாரத்தை பனங்கள்ளு படி காலில் சீலைகட்டி எறித்து எடுக்க சுத்தியாகும்.

1495. பால்துத்த சுத்தி வித்தை.

பால்துத்தத்தை சீலைகட்டி சிறுவர்களது மூத்திரத்தில் எழுநாள் ஊற வைத்தபின்பு பசும்பாலில் இரண்டு ஜாமம் ஊறவைத்து எடுக்க சுத்தியாம்.

1496. துரிசி சுத்தி வித்தை.

துரிசியை தயிரினால் அரைத்து அடைதட்டி ஓடு காயவைத்து அதில் போட்டு பிரட்டி எடுத்துக்கொள்ளவும் அல்லது தயிரில் ஒருஜாமம் ஊறவைத்தெடுக்க சுத்தியாம்.

1497. பச்சைதுரிசி சுத்திவித்தை.

பச்சை துரிசியை பசுங்கோமியத்தில் எறித்துக் கழுவி உலர்த்தி எடுக்கச் சுத்தியாம்.

1498. பவழப்பத்து சுத்திவித்தை.

பவழப்பத்தை பசும்மோரில் சீலைக்கட்டிவிட்டு நாலு நாழி எறித்து எடுத்துக்கொள்ள சுத்தியாம்.

1499. கல்மதச்சுத்தி வித்தை.

கல்மதத்தை சிறுநீரில் கழுவி எடுத்துக்கொள்ள சுத்தியாம்.

1500. நாபிசுத்தி வித்தை.

நாபியை பரிதியிலே ரசத்தில் ஊறவைத்து எடுத்து முத்திக்குள் வைத்துசுத்தக்கும்பியில் சொருகி ஒருநாழி பொருத்தெடுத்து சீந்தில்கியாழத்தில் துலாந்திரியகட்டி எறித்துபிறகு எருக்கன் பாலில் சற்றுநேரம் ஊறவைத்து கோமியத்தில் கழுவி எடுத்துக்கொள்ள சுத்தியாம்.

பிரபஞ்ச மிரட்டென்றும்
பீதாம்பர ஐயர் ஜாலத்திரட்டு.
முற்றிற்று.

1475 கையிலிருக்கும் கோவைப்பழம் மாயமாய்போகும் ஜாலம்.

முன்போல் ஜாலக்காரன் சபையில்நின்று கோவைப்பழத்தை எடுத்து வேடிக்கைபார்க்க வந்திருக்கும் வெகுஜனங்களுக்குக்காட்டி இதோ இந்தக்கோவைப்பழம் என்கையிலிருந்தபடியே மாயமாகப்போகும் அற்புதத்தைப்பாருங்களென்று முன்போல் மையைப்பூசி குறளிமந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபிக்க பழம் மாயமாய் மறைந்துவிட்டதுபோல் பார்ப்போர்கண்களுக்குத்தோற்றும் அப்போது வேடிக்கைப் பார்ப்போர்கள் இது என்ன மந்திரமகிமையோ என்னதேவதை வசியமோ என்று எக்கம் பிடித்தவர்போல் பார்த்து நிற்பார்கள்.

1476 கையிலிருக்கும் எட்டிப்பழம் மாயமாய்ப் போகும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் ஜாலக்காரன் எட்டிப்பழம் ஒன்றை எடுத்து யாவர்களுக்குங்காட்டி இதோ இந்த எட்டிப்பழம் என்கையிலிருந்த படியே மாயமாகப்போகும் விநோதத்தைப் பாருங்களென்று முன்போல் மையைப்பூசி குறளிமந்திரத்தை ஜெபிக்க பழம் மாயமாய்ப்போய் விட்டதுபோல் பார்ப்போர்கண்களுக்குத் தோற்றும் இது என்னபுதுமை என்று எண்ணுதுமெண்ணி எக்கம் பிடித்தவர்போல் பார்த்து நிற்பார்கள்.

1477 கையிலிருக்கும் பம்புளிமாசுபழம் மாயமாய் போகும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் ஜாலக்காரன் பம்புளிமாசுபழத்தை எடுத்து அங்குள்ள அனைவர்களுக்குங்காட்டி இந்த பம்புளிமாசுபழம் கையிலிருந்தபடியே மாயமாகப்போகும் விநோதங்களைப்பாருங்களென்று முன்போலவே மையைப்பூசி குறளிமந்திரத்தை ஜெபிக்க பழம் மாயமாய்மறைந்து விட்டதுபோல் தோற்றும் [illegible] பார்ப்பார்கள்.

1478 எட்டிகோட்டையைச் சுத்திசெய்யும் வித்தை.

எட்டிக்கொட்டையை எல்லில் அவித்து சிறுகீரை ரசத்தில் ஒருஜாமம் ஊறியபின் தேத்தாங்கொட்டை ரசத்தில் வெழித்து எடுத்துக்கொள்ள சுத்தியாம்.

1479 கையிலிருக்கும் அத்திப்பழம் மாயமாய்போகும் ஜாலம்.

முன்போல் ஜாலக்காரன் சபையில்நின்று அத்திப்பழத்தை எடுத்து யாவர்களுக்கும் நன்றாய்க்காட்டி இந்த அத்திப்பழங்கள் [illegible] மாயமாகும் விநோதத்தைப் பாருங்களென்று முன்போல் மையைப்பூசி குறளிமந்திரத்தை ஜெபிக்க பழம்மாயமாய் [illegible] விட்டதுபோல் தோற்றும் அப்போது வேடிக்கைப் பார்ப்போர்கள் மிகவும் ஆச்சரியப் படுவார்கள்.

இதோ இந்த மணிபாக்ஸ் என்கையிலிருந்தபடியே மாயமாகப் போகு மகிமையான வித்தையைப்பாருங்களென்று முன்சொல் மையைப்பூசி மந்திரத்தை ஜெபிக்க மணிபாக்ஸ் பார்ப்போர்கண்களுக்கு மாயமாய் போய்விட்டதுபோல் தோற்றும் அப்போதது நிறுமல் [illegible] பிரமைகொண்டவர்போல் நிற்பார்கள்.

1494. முடிதார சுத்தி வித்தை.

முடிதாரத்தை பணங்கள்ளு படி நாலில் கிழிகட்டி எறித்து எடுக்க சுத்தியாகும்.

1495. பால்துத்த சுத்தி வித்தை.

பால்துத்தத்தை கிழிகட்டி சிறுவர்கள் மூத்திரத்தில் ஏழுநாள் ஊறினபின்பு பசும்பாலில் இரண்டு ஜாமம் ஊறவைத்து எடுக்க சுத்தியாம்.

1496. துரிசி சுத்தி வித்தை.

துரிசியை தயிரிலும் அரைத்து அடைதட்டி உலையவைத்து அதில் போட்டுபிரட்டி எடுத்துக்கொள்ளவும் அல்லது தயிரில் ஒருஜாமம் ஊறவைத்தெடுக்க சுத்தியாம்.

1497. பச்சைதுரிசி சுத்திவித்தை.

பச்சை துரிசியை பசுங்கோமியத்தில் எறித்துக் கழுவி உலர்த்தி எடுக்கச் சுத்தியாம்.

1498. பவழப்புத்து சுத்திவித்தை.

பவழப்புத்தை சுரம்மேரியில் கிழிக்கட்டிவிட்டு நாலு நாழி எறித்து எடுத்துக்கொள்ள சுத்தியாம்.

1499. கல்மதச்சுத்தி வித்தை.

கல்மதத்தை சிறுநீரில் கழுவி எடுத்துக்கொள்ள சுத்தியாம்.

1500. நாபிசுத்தி வித்தை.

நாபியை பசித்திரியிலை ரசத்தில் ஊறவைத்து எடுத்து மூத்திக்குள் வைத்துசுத்தி கும்பியில் சொருகி ஒருநாழி பொருத்தெடுத்து சிறுநில்லியா [illegible] றுநில் குலாக்கிரங்கட்டி எறித்து பிறகு எருக்கன் பாலில் சற்றுநேரம் ஊறவைத்து கோமியத்தில் கழுவி எடுத்துக்கொள்ள சுத்தியாம்.

பிரபஞ்ச மித்திரனென்னும்

பீதாம்பர ஐயர் ஜாலத்திரட்டு.

முற்றிற்று.